ஒப்பிலக்கிய மரபும் திறனும்

இரா.காஞ்சனா

பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
பல்கலை நகர், மதுரை - 21

7

VG 5727

ஒப்பிலக்கிய மரபும் திறனும்

இரா. காஞ்சனா

இணைப்பேராசிரியர், தமிழியற்பள்ளி,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 625 021.

பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
பல்கலை நகர், மதுரை-21.

பதிப்புரிமை :
பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை – 625 021.

Copyright :
Publications Division
Madurai Kamaraj University
Madurai - 625 021.

பதிப்பு எண் : 169

விலை : ரூ.100

பதிப்பு விபரங்கள்

1. ஆசிரியர்		முனைவர் இரா. காஞ்சனா இணைப்பேராசிரியர், தமிழியற்பள்ளி, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை – 625 021.
2. தலைப்பு	:	ஒப்பிலக்கிய மரபும் திறனும்
3. பதிப்பித்தோர்	:	பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை – 625 021.
4. ஆண்டு	:	2001
5. பக்கங்கள்	:	392 + 18
6. பொருள்	:	ஒப்பிலக்கியம்
7. பொதுப் பதிப்பாசிரியர்	:	முனைவர் இரா. காசிராசன் பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை – 625 021.
8. அச்சிட்டோர்	:	மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கூட்டுறவு அச்சகம், மதுரை – 625 021.

க. அன்பழகன், எம்.ஏ.,
கல்வி அமைச்சர்
தலைமைச் செயலகம்
சென்னை-600 009.

நாள் : 25.2.2001

அணிந்துரை

உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும் - என்னும் சிறப்புடையதாய்ப் பிறக்கும் கவிதை சார்ந்து எம்மொழியிலும் பலவகை இலக்கியமும் பிறக்கிறது. இலக்கியம் தோன்றும் காலத்து அவ்வந்நாட்டு மக்களிடம் வளர்ந்திருந்த மொழித் திறனும், நாகரிக நிலையும், மரபு வழிப்பட்ட பண்பாடும், இலக்கியப் படைப்பாற்றல் பெற்றிருந்த வழிமுறையுமே அந்த இலக்கியத்தின் சிறப்புக்களாக எதிரொலிக்கின்றன.

இலக்கியம் எதுவாயினும் ஒரு நோக்கத்துடனேயே இயற்றப்படுவதாயினும், அதன் ஆசிரியர் மனம் வெளிநாட்டவர் இலக்கியங்களில் பதிந்ததாயின, அதற்கேற்ப அந்நிய இலக்கியத் தாக்குரவுக்கு ஆட்பட்டதாவது தவிர்க்க முடியாதது. அந்நிலையில், அந்தந்த ஆசிரியரின் சிந்தனைத் திறனும், மதிநுட்பமும், கற்பனை வளனும், கவிதையாகவோ, உரைநடையாகவோ வடிவம். பெறுமிடத்துப் பலப்பல வண்ணம் கொள்வதுடன் அவற்றைப் படித்திடும் சுவைஞரை ஈர்க்கும் திறனிலும் வேறுபடும்.

ஒரேவகைப் பின்னணி வரலாறும், வாழ்வும் கொண்ட வெவ்வேறு மொழி, நாடு சார்ந்த புலவர்களிடையிலுங்கூடக் கருத்தில் ஒற்றுமையும், வேறுபட்ட குறிக்கோள் கொண்ட ஒரே நாட்டுப்

புலவர்களிடையிலும் கருத்தில் வேற்றுமையையும் காணப்படுதலே இலக்கியத்தின் இயல்பும் பெருமையுமாகும். இயற்கையின் எழில் கோலம் காட்டும் வகையானதொரு மலர்வனத்தில் விண்மீனெனப் பூத்த பலவண்ண மலர்களைப் போன்று, புலவர் தம் நெஞ்சில் சுரக்கும் கருத்தை உணர்த்தும் செஞ்சொல் கொண்டு தொடுத்த மாலையாவதே இலக்கியம், எந்த இலக்கியமும் தனித்தன்மைத் கொண்டதாவதே இயல்பாயினும், அவற்றில் வடிக்கப்பட்டுள்ள சிந்தனைகளுக்கிடையில் ஒற்றுமையும், வேற்றுமையும், காணப்படுதல் இயல்பேயாம்.

மானிடத்தின் கருத்துக்கு வடிவம் கொடுக்கும் கலைத்திறன் வாய்ந்த புலவர்கள் தீட்டுகின்ற ஓவியம் எதுவும் வேறு வேறாகத்தான் அமையும் எனினும் அவற்றிடையில் அடிப்படையில் ஒருவகையான சிந்தனை ரேகை படர்ந்திருப்பதையும் காணலாகும். அவ்வகை ஒற்றுமை, அவர்தம் குறிக்கோளால், கொள்கையால், மானிட நேயத்தால், ஒழுக்கத்தை வலியுறுத்துவதால், அன்பும், பண்பும் நயத்தலால், உரிமை நாட்டத்தால், புரட்சி ஆர்வத்தால் பிறந்ததாகிப் பலவகையில் உருக்கொண்டிருக்கலாம். மானிடத்தின் சிந்தை கொள்ளும் எழில் வடிவே இலக்கியம் ஆவதால், மொழி, இனம், நாடு, காலம் முதலான எல்லைகளினால் தடுக்கப்பட்டதாவதில்லை. மானிடம் பொதுக் குறியீடு ஆவது போல் இலக்கியமும் உலகப் பொதுமை சுட்டும் குறியீடேயாகும். எனவேதான் இலக்கிய ஈடுபாடு கொண்டு சுவைப்பவர்கள் பன்னாட்டு, பலமொழி இலக்கியங்களையும் பயில்வதில் ஆர்வம் கொள்கின்றனர். அந்த ஆர்வம் ஒப்பீட்டுச் சிந்தனையைத் தூண்டுகிறது.

குறிப்பாக மேல்நாடடில் லத்தின், ஆங்கிலம், பிரஞ்சு முதலான மொழிகளில் தோன்றிய காவியங்கள் முதலில் இலக்கியத் திறனாய்வுக்கு (Literary Criticism) ஆட்பட்டன. பின்னர் வளர்ந்த உரைநடைப் புதினங்களும் மதிப்பீட்டுக்கு ஆளான வகையால் இலக்கியத் திறனாய்வு பெருகிற்று.

பின்னர் ஓர் இலக்கியத்தை மற்றொன்றினோடு ஒப்பீடு செய்து காணும் முறை வளரலாயிற்று. அவ்வகையில் பலமொழியும் அறிந்தவர்கள் வெவ்வேறு இன, மொழி, நாகரிக, மக்களிடையே மலர்ந்த இலக்கியங்களை ஒப்பீடு செய்த ஆய்வுத் திறத்தால் அவ்வம்மொழி, இலக்கிய வளர்ச்சியில் புதுமையும், மறுமலர்ச்சியும் கால்கொள்ளலாயின. ஒருவகையில் யாதும் ஊரே யாவரும் கேளிர்! என்னும் முழக்கம், புலவர்கள் நெஞ்சங்களில் எதிரொலிக்கலாயிற்று எனலாம்.

தமிழிலும், இந்திய மொழிகளிலும் இலக்கியத் திறனாய்வு இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் முதலே வடிவங்கொண்டதாயினும், இலக்கிய ஒப்பீட்டு ஆய்வு அண்மைக் காலமாகவே மேற்கொள்ளப்படுகிறது. இலக்கிய ஒப்பீடு செய்யும் முறையில், வகை பல வளர்ந்ததை ஒட்டிக் கொள்கைகள் பல உருக்கொண்டன. அந்தக் கொள்கைகள் இலக்கிய ஒப்பீட்டு இயலில் ஈடுபடுவோர் தம் ஆய்வு நோக்கு சிறத்தற்குரிய இலக்கணமெனலாம்.

'Comparative Grammar of Dravidian Linguistics' என்னும் டாக்டர் கார்டுவெல்லின் நூலினை ''திராவிட மொழியியல் ஒப்பிலக்கணம்'' என்று பெயர்த்த வழியினைப் பின்பற்றி, இலக்கிய ஒப்பீட்டு ஆய்வு எனலாகும். Comparative Litearuy Study என்பதற்கு, 'ஒப்பிலக்கியம்' என்னும் வழக்கையே அறிஞர் பலரும் கைக்கொண்டுள்ளனர். ஒப்பிலக்கணம் மொழி வளர்ச்சி முறையினைத் தெளியலாகும் இலக்கணங்களை ஒப்பிட்டு ஆராயும் ஓர் அறிவியல் நெறிப்பட்டதாலும், ஆராய்ந்த வழிமுறையை விளக்குவதாலும், அதுவும் ஓர் இலக்கணமாகச் சிறந்தது எனலாம். ஆனால், இலக்கியங்களிடை நிலவும் ஒற்றுமை, வேற்றுமைகளை ஒப்பிட்டுக் காணும் முயற்சியில் ஈடுபட்டுத் தெளியும் உண்மைகள் பலவும் கொண்டு, கொள்கை வழியில் வகுத்து விவரிக்குமிடத்து இது ஒரு வகை இலக்கணமேயாகும். *இலக்கியத்தின் இலட்சணம் இலக்கணம் என்னும் பொருள் தருமாறு 'இலக்கிய ஒப்பீட்டியல்' என்று பெயர்ப்பது துலக்கமுடையதாகும்.*

எவ்வாறு ஏற்பினும் இலக்கிய ஒப்பீடு குறித்த விளக்கந்தரும் நூல்கள் தமிழில் அருகியே பிறந்துள்ளன. புதினங்கள், தொடர்கதைகள், சிறுகதைகள் எனத் தமிழில் உரைநடை இலக்கியங்கள் பல்கிப் பெருகும் இக்காலத்தில் அத்துறையில் புதுமையும், மறுமலர்ச்சியும் தொடர்ந்து விளையவும், படிப்போர் சுவையும், பயனும் பெற்றிடவும், சமுதாய வாழ்வு மலர்ந்திடும் வழி கண்டிடவும் உலகெங்கும் தோன்றிய இலக்கியங்கள் மானிடத்துக்கும் வழங்கியுள்ள அரிய கொடைகள் பலவும் பிறமொழியினருக்கெல்லாம் கருத்தளவில் கிடைத்திடச் செய்வதற்கு இலக்கிய ஒப்பீட்டு ஆய்வு ஓர் வாயிலாகும்.

அரிய எண்ணங்கள் மாந்தரிடம் உரிய மதிப்பீடு பெறவும், மக்களை ஏதேனும் ஒருவகையில் பிறரிடமிருந்து பிரித்து வைக்கும் மயக்க உணர்வு மறையவும் இவ்வகை இலக்கியத்துறை சார்ந்த பணி துணையாகும். அப்படிப்பட்ட விழுமிய பயன் தரும் இலக்கிய ஒப்பீட்டியல் வளர்ந்த வகையையும், அதன் ஆய்வுப் பொருளான ஒப்பிலக்கிய மரபையும், பலதரப்பட்ட ஆய்வினாலும் உருக்கொண்ட ஒப்பிலக்கியக் கொள்கைகளையும் விரிவாக ''ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளதொரு அரிய நூல் இது" எனலாம்.

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறையில் கடந்த பத்து ஆண்டுகட்கு மேலாகச் சீரிய பணி ஆற்றும், பேராசிரியர் முனைவர் இரா. காஞ்சனா, அவர்கள் பல்வேறு இலக்கிய ஒப்பீட்டு ஆய்வு நூல்களை எல்லாம் பயின்றும், பட்ட மேற்படிப்பு மாணவர்கட்குப் பாடம் நடத்திய பட்டறிவுப் பயன் கொண்டும், திட்பமும், நுட்பமும், செம்மையும் தெளிவும் வாய்ந்த நடையில், 'ஒப்பிலக்கிய மரபும் திறனும் என்னும் இந்த அரிய, ஆராய்ச்சி வழிப்பட்ட நூலை இயற்றித் தந்துள்ளார்.

திருமதி. முனைவர். இரா. காஞ்சனா அவர்கள் இயற்றியுள்ள வேறு சில நூல்களைப் பெற்றும், படித்தும், சுவைத்தும் மகிழ்ந்தவன் நான். இஞ்ஞான்றும், *'இலக்கிய ஒப்பீட்டு இயல்'* ஆகும் இந்த நூலை இயற்றிட முனைந்து, இதன் ஆசிரியர் மேற்கொண்ட அயரா

முயற்சியும், தளராத உழைப்பும் என்றென்றும் எமது பாராட்டுக்குரியதாகும். 'ஒப்பிலக்கிய மரபும் திறனும்' என்னும் இந்த நூல், தமிழ்மொழி இலக்கிய ஒப்பீட்டு இயல் முறையைக் கல்லூரி மாணவர்கள் கற்றறிந்து கைக்கொள்ளவும், புதிய கொள்கைகளை அறிந்து தெளியவும் பேருதவி ஆகும். நூலின் பகுதிகள் தோறும் இடம் பெற்றுள்ள அரிய விளக்கங்களின் உள்ளே நான் சொல்லவில்லை எனினும் அவற்றைப் பயில்வோர் ஏராளமான சான்றுகள் கொண்டு அவை வரையப்பட்டிருப்பதைக் காண்பர்.

இந்த அரிய முயற்சியில் ஈடுபட்டுப் பயன்மக்கதொரு நூலைப் படைத்த பேராசிரியர் முனைவர். இரா. காஞ்சனா அவர்கட்கு என் பாராட்டும் வாழ்த்தும் உரியவாம்.

அன்பன்,

Foreword

"Thamizhannal" **Dr. RM. Periakaruppan,**
Former Prof. & Head of the Dept. of Tamil Studies,
Madurai Kamaraj University,
Emeritus Fellow of University Grants Commission, and
Vice President, Kural Peedam.

Scholars of Literature in India, wish to know about comparative literature, because it gives them some interesting new methods and new areas for their research. But most of them are not willing to take the task to the end, and try to understand the discipline with proper perspective.

What is Comparative Literature?

To understand the discipline with its wholesome meaning and Comprehensive view, one has to study all the definitions given to it from the beginning. Again it will not be sufficient to understand the theory and practice of the discipline. He has to go through its history of development stage by stage its origin and growth in various countries like Europe, America and other nations.

In India, as it is a multi lingual subcontinent with literature in several languages, there is an infinite field of Comparative studies among Indian Literatures. The opt quoted motto, National Integration may be achieved, only through the studies such as the interactions & the encounters with in these languages.

Tamil Scholars sometimes, plunge into Comparative literary research, without knowing the fundamentals of the discipline. English

scholars, who wish to do such literary studies, with Tamil literature are not well-versed in Tamil literature. This is a real handicap in Tamil Nadu as a hindrance to the proper development of the discipline. We have to find out some ways and means to make the two ends to meet together. New post-graduate courses shall be started, in which Tamil and English language and literature are given equal importance.

When I took the responsibility of a lecturer ship in the Department of Tamil studies, Madurai Kamaraj University, in 1971, I had been given a new syllabus which was called "Special subject: Comparative Literature". It happened to me to study day and night the new subject to teach my post-graduate students. Learning and teaching of the new-discipline were went on side by side. I can never forget the interest shown by my students and encouragement had from my colleagues.

Afterwards I had framed a new comprehensive syllabus of Comparative. Literature for the Tamil Students, which is followed hither to, in its full form or with some alterations and variations.

Dr. R.Kanchana, Reader in the Department of Comparative Literature, School of Tamil studies, Madurai Kamaraj University, has brought forth this book, for the benefit of the students and scholars of Comparative Literature. She was graduated in science, and then had her postgraduate studies in Tamil Literature. So has a natural attitude for Comparative Literary Studies, which insists upon scientific and unbiased approach., She is always in quest of knowledge, trying to find out the real sense, in all of her studies. So in the field of Comparative Literature also.

In the introductory chapter, she deals with the brief history of the discipline and definitions. Then she tries to differentiate between the terms "Indian Comparative literature", and "Comparative Indian Literature" through which she elucidates the Indianness of Indian

Literature and the common qualities which can be traced among the Indian Literature. It is really an interesting subject to ponder over at length, for the scholars of Indian Literature. How this new discipline was established in Tamil? How many books were published so far? What are the seminars held in this regard and how many research articles were written? All those developments were dealt with, and the new trends that had taken place were pointed out.

For the new scholars, there is a confusion between the theories of Reception and Influence. The author of this book, successfully tried to clarify both the theories with various evidences form Tamil Literature. I feel that those two will be the most useful chapters for the beginners to understand the main theories of the discipline.

Our heart-felt congratulations are due to the author, Dr.R. Kanchana Somasundaram, for she has taken so much of strain to collect all the data and materials to explain the theories, with elaborate and appropriate evidences from Tamil Literature.

I do hope that this book will be a significant addition in the field of Comparative Literature in Tamil. It will serve to the students and scholars to give a broad outline of the discipline and to do their research with new methods of Comparative Literature.

4/585, Sadasiva Nagar, **(THAMIZHANNAL)**
Main Road,
Madurai - 625 020.

கதிர் மகாதேவன், எம்.ஏ., எம்.லிட், பிஎச்.டி,
துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

அணிந்துரை

உலக மொழிகளில் ஒப்புநோக்கிற்கு உகந்த இலக்கியக் களங்கள் தமிழில் காணப்படுகின்றன. தமிழிலக்கிய வரலாற்றில், பழமைக்குச் சிறப்பூட்டும் இலக்கியக் கொள்கைகளும் புதுமைக்குப் பொலிவூட்டும் இலக்கிய வகைகளும், கடந்த மூவாயிரம் ஆண்டுகளாகத் தளர்ச்சியடையாத தொடர்ச்சியும் காணப்படுகின்றன. தொன்மநலஞ்சான்ற வனப்புமிக்க இலக்கிய மொழிகளான கிரேக்கம், இலத்தீன், சீனம், சமஸ்கிருத மொழிகளோடு ஒப்பிட்டும் உறழ்ந்தும் நோக்கும் பெற்றியுடைய இலக்கிய மொழி வளம் தமிழில் நிலவுவதைக் காணலாம்.

ஒப்பிலக்கிய வளமை சிறக்க இரு வழிகள் உண்டு. ஒன்று, தமிழில் காணப்படுகின்ற சீரிய நேரிய கூரிய ஒப்பிலக்கியக் கூறுகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல் ஆகும். பிறிதொன்று, ஆங்கிலத்தில் வளரும் ஒப்பிலக்கியத் திறன்களைத் தமிழாக்கம் செய்தல் எனலாம்; இவ்விரு வழிகளும் சாலச் சிறந்தவை.

முனைவர். இரா. காஞ்சனா அவர்கள், ஆங்கிலத்தில் காணப்படுகின்ற ஒப்பிலக்கிய மரபினையும் திறனையும் ஓதியுணர்ந்து தமிழாக்கம் செய்துள்ளனர். இந்நோக்கில் இந்நூல் அவர்தம் முதல் முயற்சி எனினும், ஒப்பிலக்கியம் பயில்வோர்க்கு முழுமையான பயன்நல்கும் அருமுயற்சி எனப் பாராட்டலாம்.

“ஒப்பிலக்கியம் - வரைவிலக்கணமும் பொருள் விளக்கமும்” என்ற முதற் கட்டுரை ஒப்பிலக்கியத்தின் வரலாற்றையும் பெயர்ப் பொருத்தத்தையும் நிரல்பட ஆராய்கிறது; நீண்டதொரு கட்டுரையாய் இது அமைகிறது.

“இரண்ணி வெல்லிக்கு” சுட்டிய தேசிய இலக்கியம், உலக இலக்கியம், பொதுமை இலக்கியம், ஒப்பிலக்கியம் எனவரும் பார்வை ஈண்டு நன்கு விளக்கப்படுகிறது.

இந்நூலாசிரியர், இக்கட்டுரையின்கண் பல்வேறு நாடுகளில் ஒரு மொழி வழக்கில் இருந்தாலும், ஒரே நாட்டில் பல்வேறு தேசிய மொழிகள் இருந்தாலும் ஏற்படும் சிக்கல்களைத் தெளிவுபடுத்தி இது குறித்து வெயிஸ்டீன் கூறும் கருத்தினை முன்வைக்கிறார். ஒப்பிலக்கியம் இத்தகைய சிக்கல்களுக்குக் காணும் தீர்வினை உணர்த்துகிறார்.

இந்திய மொழிகளில் எழுந்த இலக்கியங்களுள் இடையே உள்ள உறவுகளையும் அவை ஒன்றுடன் ஒன்று கொண்ட தொடர்புகள் மூலம், கொண்டனவும் கொடுத்தனவும் எவை எவை என ஆராய்வது ஒப்பியல் இந்திய இலக்கியக் கல்வியாகும் என்பதையும் ஆய்வுப் போக்கில் இரண்டு இந்திய மொழிப் படைப்புகளில் இரு இந்திய படைப்பாசிரியர்களிடையே உள்ள ஒரே மாதிரியான தன்மைகளை இணைநிலைக் களமாகக் காண்பது என்பதையும் ஒப்பாய்வில் அடக்குவது குறிப்பிடத்தக்கது. இத்தகைய ஆய்வினைப் பிரெஞ்சுக் கோட்பாட்டின் வழிநின்று நாற்பது பக்கங்களில் விளக்குவதைக் காணலாம்.

இணைநிலை ஆய்வுகள் குறித்து டாக்டர் அமியாதேவ் கூறும் கருத்துகள் ஈண்டுச் சிந்திக்கத் தக்கன; தாக்கங்கள் குறித்துக் கூறுவன இங்கு ஒருங்கு வைத்துக் காணத் தக்கன.

மூன்றாவது கட்டுரை, "தமிழும் ஒப்பிலக்கியமும்" என்ற தலைப்பில் வரையப்பட்டுள்ளது. இதுவரை வந்துள்ள ஒப்பீடுகளைத் தமிழ்-ஆங்கில ஒப்பீடு, தமிழ் - பிற தென்னிந்திய மொழிகள் ஒப்பீடு, தமிழ்-வடமொழிகள் ஒப்பீடு என்று பாகுபாடு செய்யலாம் எனக் கருதுகிறார்; மேலும், அவை பல்வேறு உட்பகுப்புகளில் அடங்கும் திறன் பற்றியும் ஆராய்கிறார். ஒப்பிலக்கிய நோக்கில் தமிழ் வகுத்துக் கொண்ட நோக்கினையும் போக்கினையும் காட்டுவது பயனுள்ள ஆய்வாகும். ஒப்பிலக்கியக் கருத்தரங்குகளினால் விளையும் பயன்கள் ஆய்வு வளர்ச்சியில் ஏணிப்படிகளாக அமையும் திறம் குறிப்பிடத்தக்கது.

"ஏற்புக் கோட்பாடு" என்ற நான்காவது கட்டுரை, ஏற்புக் கொள்கையினை (Reception Theory) விளக்குவதாக அமைகிறது.

ஏற்புக் கொள்கை, சமுதாயவியல் கலை வரலாறு எனும் இன்னபிற துறைகளில் ஏற்படுத்திய பாதிப்பையும் தாக்க நிலைகள் குறித்தும் இவ்வியல் ஆராய்கிறது. படிப்போர் நோக்கில் ஏற்புக் கொள்கை முன்னிலைப்படுத்தப்படுகிறது. எத்தகைய சூழல்கள் ஏற்பிற்கு உகந்தனவாகின்றன என்று ஆசிரியர் சுட்டிச் செல்கின்றார்.

ஏற்பிற்கும் தாக்கத்திற்கும் இடையேயான வேறுபாடுகளை ஒப்பீட்டாளர் அறிய வேண்டும் என்று ஜே.டி.ஷா குறிப்பிடும் விவரங்களை இவ்வியல்வழி அறியலாம். எஸ்.எஸ். பிராவர், உல்ரிச் வெயிஸ்டீன் ஆகியோர் கூற்றுக்களை இங்கு நூலாசிரியர் நினைவுகூர்தல் காணலாம். ஏற்பும் இலக்கியக் கருத்துத் தொடர்பும் பற்றிய ஆய்வுப் போக்குகளைப் பிராவர் வரிசைப்படுத்துவது. விளக்கப்படுகிறது. அன்றியும், இலக்கியத் திருட்டு ஏற்படும் சூழல்கள் ஈண்டு குறிப்பிடப்படுகின்றன. மேலும் ஏற்பு நிலை குறித்து அஸ்ஸெலின்யூ காட்டும் வழி இங்கு விவரிக்கப்படுகிறது. ஏற்பு, தாக்கம், இலக்கிய வரலாறு என்பன மட்டும் இரண்டு மொழி இலக்கியங்களில் மாற்றங்களை ஏற்படுத்தி இருக்கக் கூடும் என்று எண்ணுவது நன்று அன்று; மொழிபெயர்ப்புகள் காணப்படுகின்றன

என்பதால், தாக்கம் நிகழ்ந்திருக்கச் கூடும் என்பது ஏற்புநிலைக்கு ஏற்ற சான்றாகாது என்ற எச்சரிக்கை நோக்கத் தக்கது.

"இலக்கியச் செல்வாக்கும் இலக்கியத் தாக்கமும்" என்ற கட்டுரை மூலமும் தாக்கமும் என்ற கோட்பாட்டைச் சித்திரிப்பதாக அமைகிறது.

ஓர் ஆசிரியரிடமிருந்து பிறிதொரு ஆசிரியர் பெறும் செல்வாக்கு, ஒரு நூல், பிறிதொரு நூலின்மேல் செலுத்தும் செல்வாக்கு, ஓர் இயக்கமோ கருத்தமைவோ ஒரு நாட்டிலிருந்து ஊடுருவி பிறிதொரு நாட்டு இலக்கியப் படைப்புகளின் மேல் செலுத்தும் ஒட்டு மொத்தமான செல்வாக்கு, ஒரு தனி மனிதனின் கொள்கைகள், கருத்தமைவுகள் பிற நாட்டு இலக்கியங்களைப் பாதிக்கும் அளவு ஏற்படும் செல்வாக்கு எனப் பல நோக்கு நிலைகள் இக்கட்டுரையில் உரைக்கப்படுகின்றன.

கிளாடியோ கில்லன், ஏ.ஒ.ஆல்ரிட்ஜ், ஜே.டி.ஷா, வெயீஸ்டீன், பிராவர், பால்வான்தீகம், அன்னா பாலகியான், எச். ஆர் ஜாஸ் முதலியோர் இணைநிலை ஆய்வு, செல்வாக்கு என்பன பற்றிக் கூறியவற்றை நிரல்பட இந்நூலாசிரியர் ஆய்வது தேர்ந்து தெளியத் தக்கவை.

பாடஞ் சொல்லித் தரும் ஆசிரியரே நூல் எழுதுவது, ஆறே மரம் நட்டது போன்றதாகும்; எழுத எழுத எண்ணங்கள் பரவும்; கருத்துகள் வளம் பெறும்.

ஒப்பாய்வாளர்களும் மாணவர்களும் ஒப்புநோக்கு மரபையும் திறனையும் பெற, இந்நூல் வித்தாக அமையும் என உறுதியாகக் கூறலாம்.

4.2.2001

ஒப்பம்
(கதிர் மகாதேவன்)

என்னுரை

"ஒப்பிலக்கிய மரபும் திறனும்" எனும் இந்நூல் மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பதிப்புத்துறையின் மூலம் வெளியிடப்படுவது குறித்துப் பெரு மகிழ்வும் பெருமையும் கொள்கிறேன். பதிப்புத்துறை மூலம் இந்நூலை வெளியிட அனுமதி அளித்தத் துணைவேந்தர் மேதகு. மு.சாலிகு அவர்கட்கும், பல்கலைக்கழகப் பதிவாளர் அவர்கட்கும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

ஒப்பிலக்கியக் கொள்கைகளை அறிமுகம் செய்யும் நூல்களும், ஒப்பிலக்கியக் கொள்கைகளின் அடிப்படையில் ஒப்பீடுகளாக அமைந்த கட்டுரைகளின் தொகுப்பு நூல்களும் ஒப்பிலக்கியக் கொள்கைகளைப் பயின் முறையில் விளக்கும் நூல்களும் இதுவரை பல வந்துள்ளன. குறிப்பாகக் க.கைலாசபதி, தமிழண்ணல், கதிர் மகாதேவன், வை.சச்சிதானந்தன், அ.அ.மணவாளன், பாலா, ப.மருதநாயகம், கா.செல்லப்பன், ம.திருமலை ஆகியோரின் படைப்புகள் ஒப்பிலக்கியக் கொள்கைகளையும், அணுகு முறைகளையும் எடுத்துரைப்பன. அவ்வரிசையில் இந்நூலும் இடம் பெறுகிறது.

பணியில் அமர்ந்த ஓரிரு திங்களிலேயே என் ஆர்வத்தை மதித்து, ஒப்பிலக்கியக் கல்விக்கு அடிப்படையான, முக்கியமான 'Comparative Literary Study' எனும் எஸ்.எஸ். பிராவரின் ஆங்கில நூலை என்னிடம் தந்து, அதை அடியொற்றி, தமிழ் முதுகலை ஒப்பிலக்கிய மாணவர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் உறுதுணையாக அமையுமாறு ஒரு நூல் ஆக்கித் தருமாறு பணித்தார் பேரா.முருகரத்தினம் அவர்கள். அதன் விளைவே இந்நூல்.

எஸ்எஸ். பிராவரின் நூலில் அமைந்த ஒப்பிலக்கியம் என்றால் என்ன?, ஏற்பும் கருத்துத் தொடர்பும், செல்வாக்கு - இணைநிலை &

மரபு ஆகிய மூன்று இயல்களின் கருத்துகளை ஒட்டி இந்நூலின் "ஒப்பிலக்கியம்-வரைவிலக்கணமும் பொருள் விளக்கமும்" எனும் முதல் இயலும், "ஏற்புக் கோட்பாடு" எனும் நான்காவது இயலும், "இலக்கியச் செல்வாக்கும், தாக்கமும்" எனும் ஐந்தாவது இயலும் அமைந்துள்ளன. முழுமையான மொழிபெயர்ப்பாக அமையாது, கருத்துத் தொடர்புக்கு எற்ற விளக்கங்களும் தமிழ் எடுத்துக் காட்டுகளுமாக அமைகிறது. மேலும் ஸ்டாக்னெட் & பிரென்ஸ், வெயிஸ்ட்டீன் ஆகியோரது கருத்துகளும் உள்வாங்கப்பட்டு, பிராவரின் கருத்துகளுடன் இணைத்துக் காட்டப்பட்டுள்ளன. "இந்தியாவும் ஒப்பிலக்கியமும்", "தமிழும் ஒப்பிலக்கியமும்", எனும் இரு இயல்களும், ஒப்பிலக்கிய மாணவர்களுக்குக் கற்பிக்க முனையும் போது பெற்ற கல்வியின் அனுபவ அடிப்படையில் அமைந்தவை.

தமிழும் ஒப்பிலக்கியமும் எனும் கருத்தோடு நெருங்கிய தொடர்புடையது மதுரை காமராசர் பல்கலைக்கழகமும், தமிழியல் புலமும்; எனவே தமிழியல் புலத்தில் ஒப்பிலக்கியத் துறையில் பணியாற்றிய, பணிபுரிந்து கொண்டு இருப்பவர்களின் ஆய்வுப்பணிகளும் சிறப்பிடம் பெறுகின்றன. எனவே தான் துறையின் ஒவ்வொரு ஆசிரியருடைய ஒப்பிலக்கியப் பணிகள் குறித்தும் விரிவாக, குறிப்புகள் அமைந்த துணைநூல் பட்டியல் போல (Anotated Bibliography) தகவல்கள் தரப்பட்டுள்ளன. நூல்களையும் கட்டுரைகளையும் தந்து உதவியவர்களது படைப்புகள் பற்றி முழுமையாகவும், கட்டுரைகள் கிடைக்காத நிலையில் எனக்குக் கிடைத்தனவற்றைப் பற்றி மட்டும் குறிப்பதாகவும் அந்த இயலின் பகுதி அமைந்துள்ளது. ஒப்பிலக்கிய அணுகுமுறையில் ஆய்வு செய்ய விரும்பும் மாணவர்களுக்குத் துணையாக இருக்கும் என்ற நோக்கில் இவ்வணுகுமுறை இந்நூலில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒப்பிலக்கிய நோக்கில் எழுத முனையும் போதெல்லாம் ஊக்கப்படுத்தி நூல்களை வழங்கி உதவிய பேராசிரியர்கள் வை.சச்சிதானந்தன், விஜயவேணுகோபால், தமிழண்ணல், தி.முருகரத்தினம், கதிர் மகாதேவன் ஆகியோருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூல் வடிவம் பெறுவதில் பெரு முயற்சியும் முனைப்பும் கொண்டு, விரைவில் வெளிக்கொணர்வதில் என்னைவிடப் பெரிதும் அக்கறை எடுத்துக் கொண்டவர் மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பதிப்புத் துறை அதிகாரி, பேராசிரியர் இரா. காசிராஜன் அவர்கள். என்னைக் காணும் போதெல்லாம் நூலாக்கத்தை விரைவுபடுத்தியவர். அவருக்கு என் மனமுவந்த நன்றி என்றும் உரியது. பதிப்புத்துறை நண்பர்களுக்கும் திரு. நடேசன் அவர்களுக்கும் நன்றி. இந்நூலை அச்சிட்டுத் தந்த பல்கலைக்கழக அச்சகத்தாருக்கும் என் நன்றி.

தனது பல்வேறு அரசியல் பணிகளுக்கு இடையேயும் இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கி என்னைப் பெருமைப்படுத்தியப் பேராசிரியப் பெருந்தகை க.அன்பழகனார் அவர்களின் அன்புள்ளத்தைப் பணிவுடன் போற்றி வணங்குகிறேன்.

'ஒப்பிலக்கியம் எனும் தொடருக்குப் பதிலாக ''இலக்கிய ஒப்பீட்டியல்'' எனும் தொடரைப் பயன்படுத்துவது மேலும் பொருத்தமுடையதாக அமையக்கூடும் என்றும், அது இலக்கிய ஒப்பீட்டு இலக்கணம் எனப் பொருள்படும் என்றும் எடுத்துரைத்த பேராசிரியரின் கருத்து இத்துறை வல்லுநர்களைச் சிந்திக்கத் தூண்டுவதாக அமைகிறது. கருத்துத் தெளிவிற்கும் செறிவிற்கும் வழிகாட்டிய அன்னாருக்கு என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலிற்கு முகவுரை வழங்கிய தமிழண்ணல் அவர்களது அன்பிற்கும் அணிந்துரை நல்கிய தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மேதகு. கதிர் மகாதேவன் அவர்களின் நல்லிதயத்திற்கும் தலைவணங்குகிறேன்.

இந்நூலைத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு அறிமுகப்படுத்தும் பேராசிரியர் இரா. மோகன், பேராசிரியர் ம. திருமலை இருவருக்கும் மனம் நிறைந்த நன்றி.

20.2.2001 இரா. காஞ்சனா
மதுரை-21.

பொருளடக்கம்

இயல்

1. ஒப்பிலக்கியம் - வரைவிலக்கணமும் பொருள் விளக்கமும் 1

2. இந்தியாவும் ஒப்பிலக்கியமும் 35

3. தமிழும் ஒப்பிலக்கியமும் 93

4. ஏற்புக்கோட்பாடு 269

5. இலக்கியச் செல்வாக்கும் இலக்கியத் தாக்கமும் 311

குறிப்புகள் 359

துணைநூல் பட்டியல் 369

இயல் – 1

ஒப்பிலக்கியம் - வரைவிலக்கணமும் பொருள் விளக்கமும்

உலகளாவிய நோக்கில், இலக்கியப் படைப்புகளின் பொதுமையையும், ஒருமையையும், காணமுயல்வது ஒப்பிலக்கியம். கால எல்லையையும், மொழி எல்லையையும், நாட்டு எல்லையையும் கடந்து, உலக இலக்கியம் அனைத்தும் ஒன்றே என்ற முழுமை நோக்கத்தைக் கற்பிப்பது ஒப்பிலக்கியம் (Literature with out walls). எல்லைகளை எல்லாம் கடந்த இலக்கியப் பார்வையை நல்குவது ஒப்பிலக்கியம்.

ஒப்பிலக்கியம் என்பது தமிழ் இலக்கியம், வங்க இலக்கியம், ஆங்கில இலக்கியம், கிரேக்க இலக்கியம் என மொழி அல்லது நாட்டின் அடிப்படையில் அமைந்ததன்று; அதே போன்று பக்தி இலக்கியம், நீதி இலக்கியம் என்பன போன்று அமைந்த இலக்கிய வகையும் அன்று. இது ஓர் அணுகுமுறை; ஒரு நெறி முறை; இலக்கியத்தை ஆராயும் ஒரு வழிமுறை; இதை அறிவியல் அடிப்படையிலான, திறனாய்வு முறையின் வளர்ச்சியுற்ற ஒரு நிலையாகவும் இலக்கிய வரலாற்றின் ஒரு கிளையாகவும் கருதுவர். இது ஒரு மொழி இலக்கியத்தைப் பிறிதொரு மொழியிலுள்ள ஓர் இலக்கியத்துடனோ, ஒன்றுக்கு மேற்பட்ட இலக்கியங்களுடனோ ஒப்பிட்டுக் காண்பது. இவ்வாறு ஒப்பிட்டுக் காணும்போது, சில

ஒப்பிலக்கிய நியதிகளுக்கு உட்பட்டு, அறிவியல் நெறியில், உண்மைகளின் அடிப்படையில் காணவேண்டிய ஒன்று. இலக்கியத்தை இலக்கியத்துடன் மட்டுமின்றி, மனித அறிவின் வீச்சுகளுக்கு உட்பட்ட இலக்கியம் அல்லாத பிற துறைகளுடனும் ஒப்பிட்டுக் காண்பதும் இதனுள் அடங்கும். ஏற்பு, செல்வாக்கு, தாக்கம், இணைநிலை, அடிக்கருத்தியல், இலக்கிய வகை, இலக்கிய வரலாறு என்பன போன்ற ஒப்பிலக்கியக் கோட்பாடுகளின் அடிப்படையில் இரு வேறு மொழி இலக்கியங்களுக்கிடையே இருக்கக்கூடிய ஒற்றுமை வேற்றுமைகளைக் காண்பது; வேற்றுமையில் ஒற்றுமையும், ஒற்றுமையில் வேற்றுமையும் காண்பது; இரு வேறு இலக்கியங்களுக்கிடையே உள்ள உறவுகளையும், தொடர்புகளையும், கொடுக்கல் வாங்கல்களையும் காரண காரிய அடிப்படையில் இனம் காண்பது; ஒன்றினால் பிறிதொன்று பெற்ற வளர்ச்சியையும், மாற்றத்தையும், உயிரியல் வளர்ச்சி போலக் காண்பது; கல்விக்கூடங்களில் பயிற்றுவிக்கப்படும் சமூகவியல், மானுடவியல், அறிவியல், உளவியல் போன்ற ஒரு பாடத்துறையாக உயர்வு பெற்றது.

ஒப்பிலக்கியம் - சொற்றொடர் விளக்கம்

தோன்றிய பொழுதே சில கருத்து மோதல்கள் பிறக்க வழிவகுத்தது 'ஒப்பிலக்கியம்' என்ற பொருள்படும் 'Comparative Literature'- என்ற ஆங்கிலத்தொடர். ஆங்கிலத்தில் இத்தொடரை முதன்முதல் மாத்யூ அர்னால்டு 1848இல் பயன்படுத்தினார். அப்பொழுது முதலே இத்தொடர் பற்றி ஆங்கில அறிஞர்கள் மத்தியில் முழுமையான மனநிறைவு இல்லை. ஏனெனில் 'Comparative Literature' என்ற ஆங்கிலத்தொடரில் உள்ள 'Comparative' என்னும் முன்ஒட்டை இலக்கியம் என்ற சொல்லுடன் பொருத்துவது ஆங்கிலமொழி இலக்கண முறைப்படி சரியல்ல என்றனர். இலக்கியம் என்ற சொல்லின் (Literature) பொருண்மை ஆங்கிலத்தில் காலந்தோறும் மாறி வந்திருக்கிறது.

இலக்கியம் என்ற பொருளுடைய ஆங்கிலச் சொல்லான 'Literature' என்ற சொல்லின் சொற்பிறப்பியல் (etimology) கூறும்போது, கிரேக்க மொழியில் வழங்கி வந்த 'gramattica' என்ற சொல்லை முதலில் இலத்தீனில் 'Literature' என்று மொழி பெயர்த்தனர் என்றும் இந்த மொழிபெயர்ப்பின் அடிப்படையிலே ஆங்கிலச் சொல்லான Literature உருவாயிற்று என்றும் கூறுவர். இவ் ஆங்கிலச்சொல் முதலில் எழுத்துக்களின் அகரவரிசையைக் குறித்தது. பின்னர் இப்பொருளின் அடிப்படையில் எழுதப் படிக்கத் தெரிந்திருப்பதைக் குறித்தது. இதற்கு அடுத்த நிலையில் 'Letters' என்னும் ஆங்கிலச் சொல்லும் Literature என்னும் சொல்லும் பலதுறை நூல்களையும் பொதுப்படக் குறித்தது. பின்னரே இன்றுள்ள பொருளில் இலக்கியப் படைப்புகளை, கற்பனையும் முருகுணர்வும் இணைந்த கவிதை - உரைநடை நூல்களைக் குறிப்பதாயிற்று.[1]

இன்று இலக்கியம் எனும் சொல் படைப்பிலக்கியங்கள் அனைத்தையும் ஒரு சேரக் குறிப்பதாயிற்று. ஒருமையில் அமையாது பன்மைப் பொருளில் 'ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் அல்லது ஒரு குறிப்பிட்ட நாட்டில் அல்லது பொதுவாக உலகம் முழுவதிலுமாக எழுதப்பட்ட படைப்புகள்' என்ற பொருள் கொண்டதாகவும் வழங்கப்படுகிறது.

அதேபோன்று மிகச் சுருங்கிய பொருள் உடையதாக, ஒரு குறிப்பிட்ட பொருள் பற்றி எழுந்த கருத்துரை, கட்டுரை, நூல் என்ற பொருளிலும் இச்சொல் கையாளப்படுகிறது. இவ்வாறு இலக்கியம் என்ற சொல்லின் (Literature) பொருண்மை மாறுபாடுகள் எடுத்துரைக்கப்பட்டிருப்பதால் ஒப்பிலக்கியம் என்ற தொடரும் பல கருத்து வேற்றுமைகளுக்கு இடமளித்தது.

கல்வியறிவு, இலக்கிய ஆய்வு என்ற பொருண்மைகளைக் கொண்டிருந்த நிலையில் இருந்து இலக்கியங்களைக் குறிக்கும் நிலைக்கு மாறிய பொழுது (Literature) இலக்கியம் என்ற சொல்லுடன் ஒப்பீட்டு (Comparative) என்ற சொல்

பொருந்தவில்லை என்றனர். 'ஒப்பீட்டு இலக்கியக் கல்வி' (Comparative Literary Study) எனும் தொடர் குறிப்பது போல ஒப்பீட்டு இலக்கியம் (Comparative Literature) எனும் தொடரில் பொருள் பொருந்த வில்லை என்றனர்.

லேன் கூப்பரும் எஸ்.எஸ்.பிராவரும்

1920இல் லேன் கூப்பர் (Lane Cooper) இதை 'ஒரு வெற்றுத் தொடர்' என்றார்; இதில் பொருளும் இல்லை; இலக்கணத் தொடர்பும் இல்லை. இதைப்போன்றே நீங்கள் 'ஒப்பியல் உருளைக்கிழங்கு' என்றோ 'ஒப்பியல் உமிகள்' என்றோ கூட அழைக்கக்கூடும், என்று கேலியாகக் கூறினார்.[2]

எஸ்.எஸ்.பிராவரும் (S.S.Prawer) லேன் கூப்பரைப் போன்றே கருதினார். இவர் 'ஒப்பிலக்கியக் கல்வி' (Comparative Literary Study) என்ற தொடரே சரியான பொருளமைதி உடையது என்ற கருத்தை உடையவர். எனினும் இத்தொடர் நயமற்றதாகத் தோன்றினாலும் பொருள் சிறப்புடையதாகவும் சரியான விளக்கத்தைத் தருவதாகவும் உள்ளது என்றார். ஒப்பிலக்கியக் கல்வி பற்றிய தன் நூலில் சில நேரங்களில் சொற்சுருக்கத்திற்காக, 'ஒப்பிலக்கியம்' என்ற தொடரையும் எடுத்தாளுகிறார்.

குரேசேயின் கருத்து (Benedetto Croce)

இத்தாலியப் படைப்பாளியும் முருகியல் திறனாய்வாளருமான குரேசே ஒப்பிலக்கியம் என்ற தொடர் (Literatura Comparata) ஒரு தனி இயலைக் குறிப்பிடுகிறது என்ற கருத்தை வன்மையாகக் கண்டித்தார்.

பாசுநெட்டின் பணி

முதன் முதல் 'Comparative Literature' என்னும் தொடரைப் பொருள் பொதிய ஆண்ட பெருமை பாசுநெட்டையே சேரும் (Hutcheson Macaulay Posnett). இவர் 'ஒப்பியல் இலக்கியம்' என்ற

தலைப்பிட்ட நூலை வெளியிட்டார். பிற மொழிகளில் ஒப்பிலக்கியம் ஆங்கிலத்தில் பொருள் பொதிந்த தொடராக அமையுமுன்னே, பிரெஞ்சு, ஜெர்மனிய மொழிகளில் இத்தொடர் வழக்கத்தில் வந்துவிட்டது.

லிட்டரேச்சர் (Literature) எனும் சொல் ஆங்கிலத்தில் இலக்கியத் தொகுதியைக் குறிக்கிறது. பிரெஞ்சு மொழியில் இலக்கியக் கல்வியைக் குறிக்கவே வழங்கப்பட்டது. எனவே அங்கு 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் (Literature Comparee) லிட்டரேச்சர் கம்பாரி என்ற தொடர் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் எளிதில் அமைந்திருக்கிறது. 1800இல் அறிவியல் அறிஞரான கூவியர் (Cuvier) ஒப்பியல் உடல் கூற்றாய்வு (Anatomic Comparee) என்ற புகழ் மிக்க தொடரைப் பயன்படுத்திய பின்னரே இது மாதிரியான தொடர் அமைப்பில் இலக்கியவாதிகளிடையே வழங்க ஆரம்பித்தது. 1828-1829இல் வில்லமெயின் (Abel.Francais Villemain) etude de Literature Comparee என்னும் தொடரைப் பயன் படுத்தினார். இந்நீண்ட தொடரைச் சுருக்கி செயிண்ட் பியூவ் (Sainte Beuve) என்பவர் 1869இல் (Literature Comparee) என மிக அழுத்தமாகப் பயன்படுத்தினார்.[3]

ஜெர்மானிய மொழியில்

ஆங்கிலத்தில் உள்ள இத்தொடரை விட ஜெர்மானியரும் டச்சுக்காரர்களும் பயன்படுத்திய தொடர் மேலும் பொருத்த முடையதாக அமைந்தது என்பார் எஸ்.எஸ் பிராவர். வெர்கிலி சென்டே லிட்டரேச்சர் விஸ்ஸென் சாஃப்ட் (Vergle chande Literature wissen schaft) என்ற தொடர், இத்துறையில் என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதைத் திட்டவட்டமாக சுருக்கமாக விளக்குகிறது என்கிறார் அவர்.

'ஒப்பிலக்கியம்' என்ற தொடரமைப்பை விட 'ஒப்பிலக்கியத் துறை' என்ற சொல்லாட்சியை விரும்பிய ஜெர்மானியர் வெர்கிலி சென்டே லிட்டெரேசர் ஜெசிக்ட்டா (Verglichande Literature

geschichta) என்ற தொடர் அமைப்பை உருவாக்கிக் கொண்டனர்.[4]

தமிழில் ஒப்பிலக்கியம் எனும் சொல்

ஆங்கிலத்தில் 'ஒப்பியல் உடற்கூற்றாய்வு' (Comparative anotomy) என்னும் தொடர் ஒப்பீடு எனும் முன்னொட்டைக் கொண்டு முதலில் பழக்கத்திற்கு வந்தது போலத் தமிழில் 'ஒப்பியல் மொழி நூல்' எனும் தலைப்பிட்ட ஞா.தேவநேயப்பாவாணரின் சொல்லாட்சி தான் தமிழில் இத்தொடரை அறிமுகப்படுத்தியது என்பர்.

க. கைலாசபதியின் பணி

ஒப்பிலக்கியக் கோட்பாடுகளைத் தமிழில் முதன் முதல் அறிமுகப்படுத்திய பெருமை கலாநிதி க.கைலாசபதியையே சாரும். அவரது ஒப்பியல் இலக்கியம் எனும் நூல் இத்துறையில் முதன் முதல் வெளிவந்த தமிழ் நூலாகும்.

குளோரியா சுந்தரமதியின் சொல்லாட்சி

ரெனேவெல்லக் & ஆஸ்டின்வாரன் எழுதிய ஆங்கில நூலைத் தமிழில் குளோரியா சுந்தரமதி மொழிபெயர்த்தார். இலக்கியக் கொள்கை என்ற அந்நூலில் 'ஒப்பு இலக்கியம்' என்ற தொடரைப் பயன்படுத்துகிறார்.

தமிழண்ணலின் சொல்லாக்கம்

ஒப்பு இலக்கியம் என்ற தொடரை மேலும் தெளிவுடைய தொடராக்கி 'ஒப்பிலக்கியம்' என்று பயன்படுத்தியவர் தமிழண்ணல். இவர் ஒப்பிலக்கிய அறிமுகம் எனும் நூலின் கண் 'ஒப்பிலக்கியம்' என்ற தெளிவுடைய இத்தொடர் இலக்கியத்தின் ஒருமையை சுட்டிக்காட்டுகிறது - என விளக்குகிறார்.[5] இன்று ஒப்பிலக்கியம் என்ற தமிழ்த் தொடர் இவருக்குப் பின் ஆழமாகக் கால் கொண்டது எனலாம்.

க. செல்லப்பனின் பணி

ஆங்கில ஒப்பிலக்கியப் பேராசிரியரான இவர் 'ஒப்பியல் தமிழ்' என்னும் சொல்லாட்சியைக் கையாளுகிறார். ஒப்பிலக்கியம் என்ற சொல் ஆய்வு முறையையும் ஆய்வுக் களத்தையும் இணைத்துச் சுட்டும் சொல். இதையே 'ஒப்பியல் இலக்கியம்' என்று கைலாசபதி குறிப்பிட்டுள்ளார். தமிழில் இப்புதிய இயலை 'ஒப்பியல் தமிழ்' எனவும் கூறலாம் எனக் கூறும் இவர்[6], 'ஒப்பியல் தமிழ்' எனும் தன் நூலின் முன்னுரையில், ஏற்கனவே தமிழில் 'ஒப்பிலக்கியம்', 'ஒப்பியல் இலக்கியம்' எனும் சொற்கள் இருக்க 'ஒப்பியல் தமிழ்' என்னும் சொல்லாக்கத்தின் தேவையையும் நோக்கத்தையும் கூறுகிறார். 'ஒப்பியல் தமிழ், ஒப்பிலக்கியம்' இவையிரண்டும் தனி மொழிச் சார்பில்லாமல் இதை ஒரு பொது இலக்கிய வகையாகச் சுட்டுகின்றன. அதையே தமிழில் ஒரு அங்கமாக, பன்நெடுங்காலமாக வளர்ந்து வரும் இயற்றமிழின் ஒரு புது மலராகக் காண்பதுதான் புதுப்பெயரின் நோக்கம். டாக்டர் வ.செ.குழந்தைசாமி 'தமிழில் அறிவியல்' என்பதற்கு பதிலாக 'அறிவியல் தமிழ்' என்று அழைப்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். அறிவியல் பொது தான். ஆனால், அதைத் தமிழில் ஏற்கும்போது, பேசும்போது அது அறிவியல் தமிழாகிறது. ஒப்பிலக்கியம் என்று கூறும்போது, இலக்கியத்தின் ஒப்பியல் தன்மையை வலியுறுத்தினால், 'ஒப்பியல் தமிழ்' எனக் கூறும்போது ஒப்பிலக்கியத்தின் தமிழ் வடிவத்துக்கு முதலிடம் தருகிறோம்...... இலக்கியத்தை மையமாகக் கொண்ட பார்வையில் 'ஒப்பிலக்கியம்' 'ஒப்பியல் இலக்கியம்' என்றும், தமிழை மையமாகக் கொண்ட பார்வையில் 'ஒப்பியல் தமிழ்' என்றும் குறிக்கலாம்' என்ற விளக்கத்தைத் தருகிறார்.[7]

ஒப்பிலக்கியம் - வரையறைகள்

ஒப்பிலக்கியக் கல்வி எதைப்பற்றியதாக, எப்படி அமைய வேண்டும் என்ற நோக்கு நிலைகளின் அடிப்படையில் ஒப்பிலக்கியத்திற்கான வரையரைகள் காலந்தோறும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

I. இலக்கிய உறவுகளைக் காணும் ஒப்பீட்டுமுறை

1. பன்னாட்டு இலக்கியங்களுக்கு இடையேயான உறவுகளின் வரலாறே ஒப்பிலக்கியம் (History of International Literary relations) என்கிறார் எம்.எப்.கயார்டு (M.F.Guyard).[8]

2. பால்வான்தீகம் எனும் ஒப்பிலக்கிய ஆசிரியரும் உறவுடைய மொழிகளில் தோன்றிய இலக்கியங்களுக்கிடையேயான தொடர்புகளைக் காண்பதே ஒப்பிலக்கியம் என்று கருதுகிறார். வேறுபட்டுக் கிளைத்துச் செல்லும் இலக்கியங்களுக்கிடையே, ஒன்றிற்கொன்று கொண்டுள்ள உறவுகளைக் கண்டு கூறுவதே ஒப்பிலக்கியத்தின் குறிக்கோளாகும் என்று கூறுகிறார்.[9]

II. இலக்கிய வரலாற்றை அடியொட்டி இலக்கிய உறவுகளைக் காண்பது என்பது அடுத்த கருத்து

இலக்கிய வரலாற்றின் ஒரு கிளையாக ஒப்பிலக்கியத்தைக் கருதினர். ஒப்பிலக்கியம் என்பது இலக்கிய வரலாற்றின் ஒரு பகுதி. உலக நாடுகளின் பல்வேறு மொழிகளில் எழுதப்பட்ட இலக்கியங்களுக்கிடையே உணர்வு நிலையில் ஏற்பட்ட, உண்மையான தொடர்புகளை ஆராய்வது. பைரனுக்கும் புஷ்கினுக்கும், கதேக்கும் கார்லைலுக்கும், வால்டர் ஸ்காட்டுக்கும், விக்னிக்கும் இடையே ஏற்பட்ட உண்மையான தொடர்புகளை, வெளிப்படக் காணக் கிடைக்கும் தொடர்புகளை மெய்மைகளின் அடிப்படையில் ஆராய்வது என ஜே.எம்.கார் (J.M.Carre) கயார்டின் நூலுக்கு அளித்த முன்னுரையில் கூறுகிறார்.[10] மேலும் இதுபோல பல்வேறு இலக்கியப் படைப்புகளுக்கு இடையேயும், படைப்பாசிரியர்களின் வாழ்க்கையிலும், உணர்ச்சித் தூண்டல்களிலும் ஏற்பட்ட தொடர்புகளை ஆராய்வது ஒப்பிலக்கியம் என்று கூறுகிறார். இலக்கியத் தாக்கம் பற்றிய ஆய்வு என்ற நோக்கு நிலைக்கும் காரின் இவ்விளக்கம் அழைத்துச் செல்கிறது.

III. தாக்க ஆய்வு எனும் நோக்கில்

1. அன்னா சைத்தா ரெவிக்னாஸ் (Anna Saitta Revignas) எனும் அம்மையார் 'வெவ்வேறு இலக்கியங்கள் எதிர்ப்பட்டுத் தம்முள் கொண்ட இடைத்தொடர்புகள் ஒன்றின் மீது ஒன்று செலுத்திய, பெற்ற இலக்கியச் செல்வாக்குகளைப் பற்றிய பிரச்சனைகளை ஆராயும் இன்றைய அறிவியல்துறை ஒன்று தான் ஒப்பிலக்கியம் என்று வரைவிலக்கணம் தருகிறார். இங்கு கொள்வினை, கொடுப்பினை பற்றிய சிந்தனையே - நோக்குநிலையே ஒப்பிலக்கிய ஆய்வில் முதன்மை பெறுகிறது எனலாம்.[11]

2. ஃபெர்னாண்ட் பால்டென்ஸ்பெர்கர் (Fernand Baldens perger) என்ற பிரெஞ்சு ஒப்பிலக்கியவாதி இரண்டு இலக்கியங்கள் ஒன்றை ஒன்று உண்மையில் எதிர்ப்பட்டு, சந்தித்து, அச்சந்திப்பால் தன்னைப் பிறிதொன்று சார்ந்திருக்குமாறு செய்ததை எடுத்துரைக்காத, கண்டு கூறாத எந்த ஆய்வும் ஒப்பிலக்கிய ஆய்வைச் சேர்ந்தது ஆகாது' என எதிர்முகமாகக் கூறி, அதன் மூலம் ஒரு இலக்கியம் பிறிதொன்றைப் பற்றிப் படர்வதை, படர்ந்து வளர்ந்த தாக்கத்தை இலக்கிய வரலாற்று முறையில் காண்பதே ஒப்பிலக்கியம் என்பதை உணர வைக்கிறார்.[12]

3. வான்தீகத்தைப் பொறுத்தவரைப் பொதுமை இலக்கியத்திற்குள் ஒப்பிலக்கியம் அடங்கிவிடுகிறது என்று விளக்கும் ரெனெவெல்லக், வான்தீகம், இரு வேறு இலக்கியங்கள் இணைந்து உருவான உறவு நிலையை எடுத்துரைப்பது ஒப்பிலக்கியம் என்றும் பல்வேறு இலக்கியங்களுக்கு இடையே காணப்படும் பொதுத் தன்மைகளை, பொது உண்மைகளைக் கண்டு ஆயும் ஆய்வு பொதுமை இலக்கியத்தின்பாற்படும் என்றும் கூறுவதை விளக்கிவிட்டு, எடுத்துக்காட்டாக பிரெஞ்சில் வால்ட்டர் ஸ்காட் ஏற்படுத்திய தாக்கத்தையும், பிரெஞ்சில் உருவான வரலாற்று நாவல் வளர்ச்சி பற்றிய

ஆய்வும் முறையே ஒப்பிலக்கியத்தையும், பொதுமை இலக்கியத்தையும் சேர்ந்ததாக இருப்பினும் இரண்டுக்கும் இடையே சரியாகக் கோடு கிழித்துப் பிரித்துக் காண்பது அவ்வளவு எளிதல்ல என்று கூறி ஒப்பிலக்கியத்தையும் பொதுமை இலக்கியத்தையும் பிரித்துக் காண்பதும் கடினம் என விளக்குகிறார்.[13]

IV. ரெனெவெல்லக் தரும் விளக்கம்

ரெனெவெல்லக் இருவேறு இலக்கியங்களுக்கு இடையே உள்ள உறவைக் காண்பது மட்டும் ஒப்பிலக்கியமல்ல என்கிறார். அவ்வாறு காணும்போது இலக்கியத்தைப் பகுதிகளாக்கி, துண்டு துணுக்குகளை ஆதாரமாக எடுத்துக் காட்டும் போக்குதான் உருவாகுமென்றும், எனவே இக்குறுகிய போக்கை மட்டும் ஆதாரமாகக் கொள்வதனால் ஒப்பிலக்கியத்தை ஒரு தனித் துறையாகக் கருத இயலாது என்றும் கூறுகிறார்.

ரெனெவெல்லக் இத்தகு போக்கு இலக்கியங்களில் வெளிநாட்டு வாணிகம் என்றும் துண்டு துணுக்குகளாக இலக்கியத்தைப் பகுத்துத் தனியே பிரித்துக் காண்பதால், இலக்கியம் சார்ந்த முருகுணர்வும் அழகுணர்வும் காணாமல் போய்விடும் என்றும், இப்பார்வையில் இலக்கிய வரலாற்றின் ஒரு கிளையாகவே ஒப்பிலக்கியம் கருதப்படும் என்றும் எச்சரிக்கிறார். அதனால் தான் ஜே.எம்.கார், கையார்டு போன்றோர் ஒப்பிலக்கியத்தில் தேசியப் பார்வையையும் ஒவ்வொரு நாடும் பிறநாட்டின் மீது கொண்டுள்ள கருத்தையும் சேர்த்துக் கொண்டனர் என்கிறார் வெல்லக்.[14]

பிரெஞ்சு ஒப்பிலக்கிய அறிஞர்கள் ஒப்பிலக்கியம் என்ற சொல்லில் 'இலக்கியத்திற்கு' அதிக அழுத்தம் தந்தும், அமெரிக்க ஒப்பிலக்கிய அறிஞர்கள் 'ஒப்பு' என்ற சொல்லுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தும் ஒப்பிலக்கியம் என்ற துறையின் செயல்பாடுகளை விளக்கினர் என எடுத்துக்காட்டும் சச்சிதானந்தன்

பிரெஞ்சு ஒப்பிலக்கியவாதிகள் 'இலக்கிய வரலாற்றின் ஒரு கிளையாக ஒப்பிலக்கியத்தை எடுத்துக்கொண்டு இலக்கியப் படைப்புகளில் தாக்கத்திற்கான ஆதாரத்தைத் தேடுதல், செயற்கை முறையில் இலக்கியங்களில் அடிக்கருத்துகளை வரையறை செய்தல், தம் தேசியக் கலாச்சார நோக்கில் ஆராய்தல்' என்ற மூன்று போக்குகளுக்கும் அதிக முக்கியத்துவம் தந்தனர் என்கிறார். மேலும் காரணகாரிய ஆய்வு, பிறப்புறவு ஆய்வு, உயிர்களின் தோற்றம், கூர்தலறம், வளர்ச்சிப்படி நிலைகள் போன்ற அறிவியல் கொள்கைகளின் தாக்கத்தினால் இலக்கியப் படைப்புகளிலும் படைப்பாளர்கள் மீதும் இக்கொள்கையின் அடிப்படையில் ஆதாரங்களைத் தேட ஆரம்பித்தனர். தம் தேசிய இலக்கியத்தின் மீது கொண்டிருந்த ஆழ்ந்த பற்றினால் தம் தேசிய இலக்கியங்கள் பிறநாட்டு இலக்கியங்கள் மீது ஏற்படுத்திய தாக்கத்தைக் கண்டு கூறவும், பிரெஞ்சு எழுத்தாளர்கள் பிற நாடுகளில் எவ்வாறு செல்வாக்கு பெற்றிருந்தனர் என்பதை ஆராயவுமே முனைந்தனர். இந்த அடிப்படையிலேயே பிரெஞ்சு ஒப்பீட்டறிஞர்கள் எடுத்துக் கூறிய வரைவிலக்கணங்கள் அமைந்தன என்று கூறுகிறார் சச்சிதானந்தன்.[15]

ஹென்றி எச்.எச்.ரிமாக் (Hendry H.H.Remak) தரும் வரைவிலக்கணம்

அமெரிக்க ஒப்பிலக்கிய ஆசிரியரான ஹென்றி எச்.எச்.ரிமாக், ஒப்பிலக்கியம் என்பது, நாட்டு எல்லை, மொழி எல்லைகளைத் தாண்டிய இலக்கிய ஆய்வாகும். ஒரு கையில் இலக்கியத்தையும், மறு கையில் மனித அறிவு வீச்சுகளின் பல்வேறு துறைகளுக்கும் இடையே உள்ள தொடர்புகளை ஆய்வது. இலக்கியத்துடன் ஓவியம், சிற்பம், கட்டடக்கலை, இசை தத்துவம், வரலாறு போன்ற கலைத்துறைகளையும், சமூகவியல், அரசியல், பொருளாதாரம், உளவியல் போன்ற பல்வேறு சமூக அறிவியல் துறைகளையும், பிற அறிவியல் துறைகளையும், சமயத்தையும் ஒப்பிட்டு ஆய்வதாக அது அமையலாம். ஓர் இலக்கியத்தைப் பிறிதொரு இலக்கியத்துடனோ அன்றி சில இலக்கியங்களுடனோ சேர்த்து ஒப்பிடுவது போல,

இலக்கியத்தை இலக்கியம் அல்லாத ஏனைய அறிவியல், கலையியல் துறைகளுடன் ஒப்புநோக்குதலும் ஒப்பிலக்கியத்தின் பாற்படும்', என்கிறார் ஹென்றி எச்.எச்.ரிமாக்.[16]

ரிமாக்கின் இவ்வரைவிலக்கணம் இரு பகுதிகள் கொண்டது. இரண்டாவது பகுதியாகிய இலக்கியத்தைப் பிற அறிவுத் துறைகள், கலைத்துறைகளுடன் ஒப்பிடுதல் என்பது மிக கவனத்துடன் சரியான ஆய்வு முறைகளைக்கொண்டு செய்யப்பட வேண்டும் என்று ரெனெவெல்லக், வெயிஸ்ட்டீன் போன்ற பிற அறிஞர்கள் கருதினர்.[17]

ரிமாக்கின் விளக்கத்தின் இரண்டாம் பகுதி பற்றி விமரிசிக்கும் வெயிஸ்ட்டீன் எடுத்துக்காட்டு ஒன்றுடன் விளக்குகிறார். ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் இருக்கக்கூடிய வரலாற்று உண்மையை, வரலாற்று ஆதாரங்களை எடுத்துக்காட்டுவது இலக்கிய ஆய்வே. ஆயின் அவ் ஆய்வில் இலக்கியத்திற்கும் வரலாற்றியலுக்கும் இடையே ஒப்பீட்டைக் காண்பதாக இருந்தால் மட்டுமே அது ஒப்பிலக்கியம் ஆகும் என்று விளக்குகிறார்.[18]

VI. வெயிஸ்ட்டீன் தரும் விளக்கம்

'Comparative Literature' என்ற ஆங்கிலத் தொடர் மொழிப் பொருண்மையியல் (Semantic Point of View) அடிப்படையில் அவ்வளவு பொருத்தமற்ற சொல்லாட்சி எனக்கருதும் வெயிஸ்ட்டீன், தன் கருத்துக்கு ஆதாரமாக எம்.எம்.பாகனெட் என்ற ஆங்கில ஒப்பிலக்கியவாதியின் கருத்தை எடுத்துக் காட்டுகிறார். பிரெஞ்சு மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு வந்த இத்தொடர், ஒப்பிலக்கியம் எவ்வகை ஆய்வை, ஆய்வுப் பணியை மேற்கொள்ளப்போகிறது என்பதைக் குறிக்கிறதே தவிர, எந்த வழி முறையைப் பின்பற்றப் போகிறது எனக்குறிப்பிடவில்லை என்ற பாகுனெட்டின் கருத்தைக்கூறி, Comparative Literature என்ற இத்தொடர் ஒரு நாட்டின் தேசிய இலக்கியங்களைப் பிறிதொரு நாட்டு தேசிய இலக்கியங்களுடனோ பல்வேறு நாட்டு தேசிய

இலக்கியங்களுடனோ ஒப்பிடுவதைக் குறிக்கிறது என்கிறார். இவரைப் பொறுத்தவரை இந்த ஆங்கிலத் தொடரை விட ஜெர்மானிய சொல்லாட்சிகள் பொறுத்தமாக இருக்கின்றன எனக் கருதுகிறார்.

ஜெர்மானிய மொழியில் ஒப்பிலக்கியத்தைக் குறிப்பிட எழுந்த (Literatur geschichte) என்ற தொடரை விட Literatur wissen schaft என்ற தொடரில் ஒப்பிலக்கியம் பற்றி மேலும் அதிக விளக்கமும், அதன் பணி பற்றிய அதிக விளக்கமும் அமைந்துள்ளது எனும் வெயிஸ்ட்டீன் Literatur wissenchaft என்ற தொடரில் இலக்கிய வரலாறு பற்றிய ஆய்வுடன் இலக்கியத் திறனாய்வு, இலக்கியக் கொள்கை, கவிதையியல் ஆகியவை பற்றிய ஆய்வையும் உட்கொண்டுள்ளது என்கிறார். அதே சமயம் இலக்கியங்களை வெறும் சமுதாய ஆவணங்களாகக் கருதி, வரலாற்று ஆய்வு முறைக்கு முக்கியத்துவம் தந்து இலக்கியத்தின் கற்பனையழகும் முருகியல் உணர்வும் புறக்கணிக்கப்படுதலும் தவறு எனக்கருதும் வெயிஸ்ட்டீன் தன் கருத்துக்கு ஆதாரமாக ரெனெவெல்லக்கும் ஆஸ்டின்வாரனும் தம் இலக்கியக் கொள்கை எனும் நூலில் இலக்கியக் கொள்கை, இலக்கியத் திறனாய்வு, இலக்கிய வரலாறு ஆகிய மூன்று இலக்கிய நோக்கு நிலைகளிலும் சற்றே வேறுபாடுகள் இருப்பினும் அவை ஒன்றை ஒன்று சார்ந்து இருப்பவை என்றும் ஒன்றைவிட்டு ஒன்றைப்பிரிக்க இயலாது என்றும் கூறுவதை எடுத்துரைக்கிறார்.

இவ்விளக்கத்தின் அடிப்படையில், ஒப்பிலக்கியம் என்பது ஒப்பியல் இலக்கிய வரலாறு, ஒப்பியல் இலக்கியத் திறனாய்வு, ஒப்பியல் இலக்கியக் கொள்கை என்ற மூன்று பிரிவுகளாகப் பிரித்து அணுகப்படவேண்டும் என்கிறார், 'வெயிஸ்ட்டீன்'[19]

VII. வெல்லக் தரும் வரைவிலக்கணம்

எவ்வாறு கலையும் மனிதமும் உலகளாவிய நிலையில் ஒன்றாக இருக்கின்றனவோ அதைப்போலவே இலக்கியமும் ஒன்று என்ற

கருத்தை உடையவர் ரெனெவெல்லக். இந்த அடிப்படையிலேயே ஒப்பிலக்கியம் பற்றிய அவரது வரைவிலக்கணம் அமைந்துள்ளது. ஒப்பிலக்கியம் உலகளாவிய பார்வையில் (அனைத்து இலக்கியமும் ஒன்றே எனக் கொண்டு) இலக்கியங்களை அணுகி ஆராய வேண்டும். இலக்கியப் படைப்புகள் இலக்கிய அனுபவங்கள் எல்லாம் ஒன்றே என்ற ஒருமையுணர்வுடன் இலக்கியத்தை ஆராய வேண்டும். அதுவே ஒப்பிலக்கியம். மொழி, இனம், அரசியல் எல்லைகளைத் தாண்டி ஆராய வேண்டியிருப்பதால் ஒப்பிலக்கிய ஆய்வில் ஒரே ஒரு வழி முறை தான், ஒப்பிடுதல் மட்டும் தான் மேற்கொள்ளப்படவேண்டும் எனக் கூறமுடியாது.

விவரித்தல், பாத்திரங்களின் பண்புநலன்களை ஆராய்தல், உரைவிளக்கம் தருதல், எடுத்துரைத்தல், விளக்கமுரைத்தல், மதிப்பீடு செய்தல் போன்ற பல்வேறு முறைகளும் ஒப்பீடு செய்தலுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். வரலாற்றுமுறைத் தொடர்புகளைக் கண்டு கூறுவதற்கு மட்டும் ஒப்பீடு உரியது எனக் கருதுதல் கூடாது. மொழியியல் ஆய்வுகளில் பிறப்புறவற்ற, தொடர்பற்ற மொழிகளின் அமைப்பு முறைகளை ஆராய்வதும் தொடர்புடைய மொழிகளுக்கு இடையே உள்ள ஒப்புமைகளைக் கண்டு கூறுவதும் போலப் பயனுடையதே, மதிப்பு உடையதே எனக் கருதுபவர், அதுபோலத் தொடர்பற்ற மொழிகளுக்கு இடையேயும் இலக்கிய வடிவங்களை ஒப்பிடுவது பயனளிக்கும் என்று கூறுகிறார். மேலும் இலக்கிய வரலாறு, இலக்கியக் கொள்கை, இலக்கியத் திறனாய்வு மூன்றும் ஒன்றிற்கொன்று அரண் செய்பவை; தொடர்பு உடையவை என்றும், இலக்கிய முழுமை பற்றிய ஆய்விலிருந்து (The study of the totality of Literature) தேசிய இலக்கிய ஆய்வைப் பிரிக்க முடியாது என்றும் கூறினார்.[20]

VIII. எஸ்.எஸ். பிராவர் தரும் வரைவிலக்கணம்

'ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் உள்ள இலக்கிய நூல்கள், இலக்கியக் கொள்கைகள் பற்றிய நூல்கள், இலக்கியத்திறனாய்வு நூல்கள் போன்றவைகளை ஆராய்வதும்,

அவற்றிடையே காணப்படும் ஒற்றுமையுறவுகள், முரண்கள் இலக்கியங்களின் தோற்றம், தாக்கம் பற்றிய செய்திகளைத் துருவி ஆராய்வதும் இதில் அடங்கும்' பல்வேறு மொழிகளைப் பேசுப் பல இன மக்களிடையே ஏற்படும் இலக்கியத் தொடர்பும் உறவும் பற்றி ஆராய்வது 'ஒப்பிலக்கியக்கல்வி' என்கிறார், எஸ்.எஸ்.பிராவர்.[21]

இலக்கியத்திற்கும் இலக்கியம் அல்லாத பிற துறைகளுக்கும் இடையே ஒப்பீடு மூலம் இணைநிலை காணும் அணுகுமுறை ஒப்பிலக்கியத்தில் வளர்ந்தது.

IX. ஓவன் ஆல்ரிட்ஜ் தரும் இணைநிலை ஆய்வு விளக்கம்

'தம்முள் பிறப்புறவு அற்ற, வேறு எவ்விதத் தொடர்பும் அற்ற இருவேறு இலக்கியங்களுக்கு இடையே நடையிலோ, அமைப்பிலோ, பாடு பொருளிலோ காணப்படுகின்ற ஒற்றுமைக் கூறுகளைக் காண்பது' இணைநிலை ஆய்வு எனும் ஒப்பிலக்கியக் கல்வியின் பாற்படும் என்பது ஓவன் ஆல்ரிட்ஜின் (Owen Oleridge) கருத்து.[22]

ஒப்பிலக்கியத்தின் பயன்

ஒப்பிலக்கியம் என்பது இலக்கிய ஒருமையை (Literary wholesome), உலகளாவிய பொதுமையைக் (Universality) காணும் ஒருவழிமுறை.

இலக்கியத் திறனாய்வின் வளர்ச்சியுற்ற ஒரு வழிமுறையே ஒப்பிலக்கியம். இருவேறு மொழிகளில் அமைந்த இலக்கியங்களை ஒப்பிட்டு அவற்றின் சிறப்புகளை, மேன்மைகளை, தனித் தன்மைகளை எடுத்துரைக்கும் பொழுது அது ஒப்பீட்டுத் திறனாய்வு ஆகிறது. இவ்ஒப்பீட்டுத் திறனாய்வை உலக நோக்கில், அறிவியல் வழிநின்று, துல்லியமாக மதிப்பீடு செய்து, அவற்றின் மூலம் பெறப்படும் மெய்மைகளின் அடிப்படையில் இலக்கியக் கொள்ளைகளை உலகளாவிய நோக்கில் உருவாக்கவும், உலக

இலக்கிய வகைகள், வடிவங்கள், பாடுபொருள் ஆகியவற்றை வெளிக்கொணரவும் முயலும்போது அது ஒப்பிலக்கிய ஆய்வாகிறது. இவ்வாறான மதிப்பீடுகளை வரலாற்று நோக்கிலும் காணலாம். அழகியல் அடிப்படையிலும் காணலாம். உலக இலக்கியங்களுக்கு இடையேயான இடைத்தொடர்புகள், ஒன்றை ஒன்று எதிர்ப்படுவதால் ஏற்படும் விளைவுகளை எடுத்துரைத்தல், ஏற்பு, செல்வாக்கு, தாக்கம் ஆகியவற்றை எடுத்துக்காட்டுதல், இலக்கியங்களுக்கு இடையே காணப்படும் பிறப்புறவுகள் ஆகியவற்றைக் காண்பது ஒப்பிலக்கியம். புதிய புதிய இலக்கிய வகைகள் தோன்றக்காரணம் என்ன? அவை ஏன் தோன்றுகின்றன? அவை புதிதாய்த் தோன்றிய சூழல் என்ன? எந்த எந்த இலக்கியங்களின், வகைகளின் கூட்டுச் சேர்க்கையால் புதிய இலக்கிய வகை தோன்றியுள்ளது? அல்லது ஒரு பழைய இலக்கிய வகையின் கிளை வளர்ச்சியாக, புதிய பரிமாணமாகத் தோன்றியதா இந்த இலக்கிய வகை? இப்பரிமாணத்தில் புதிதாக இணைந்த பண்புக் கூறுகள் எவை? அவை எங்கிருந்து பெறப்பட்டன? அல்லது மாற்றுருப்பெற்றன என்பன போன்ற வினாக்களுக்கு விடை காண்பது ஒப்பிலக்கியக் கல்வியாகும்.

எஸ்.எஸ்.பிராவரைப் பொறுத்தவரை 'ஒப்பிலக்கியம்' இலக்கியக் கல்வியில். ஈடுபடும் பொழுது ஒப்பீட்டைத் தன் முதன்மையான கருவியாகக் கொள்ளவேண்டும். அப்பொழுது தான் ஒரு படைப்பாளியின் படைப்பின் தனித் தன்மைகளையும் சிறப்பையும் உணரமுடியும். வேர்ட்ஸ் வொர்த்தின் (Words worth) தனித் தன்மையை உணர்வதற்கும், அவர் வந்த இலக்கிய மரபையும், மரபில் அவர்பெற்ற சிறப்பிடத்தையும், மரபில் அவர் செய்த/ஏற்படுத்திய மாற்றங்களையும் உணர்வதற்கும், அவருடைய படைப்புகளை மேலோட்டமாகவோ, அன்றி ஆழ்ந்தோ, பிற நூலாசிரியர்களான மில்ட்டன், ஜேம்ஸ்தாம்சன், ஷெல்லி, கீட்ஸ் போன்றவர்களுடைய படைப்புகளுடன் ஒப்பிடல் தேவையாகிறது. இவ்வகை ஒப்பீடின்றி வேர்ட்ஸ் வொர்த்தை முழுமையாக உணர்ந்து பாராட்ட இயலாது. ஆகவே ஒப்பிலக்கியம் தேசிய எல்லைகளை ஊடுருவச் செய்கிறது என்கிறார் எஸ்.எஸ்.பிராவர்.

நாட்டு எல்லைகளைக் கடந்து நிகழ்த்தப்படும் ஒப்பிலக்கிய ஆய்வுகள் மூலம் ஒவ்வொரு நாட்டு இலக்கியமும் அந்த நாட்டுத் தேசிய மரபுகளை வெவ்வேறு, அரசியல், சமூதாயப் பின்னணிகளாக் கொண்டிருப்பதையும் இவைகளை அந்நாட்டு இலக்கியங்களில் பாடுபொருள், அடிக்கருத்து, உணர்வுகள், நடைப்பாங்கு, போக்குகள் ஆகியவற்றில் முக்கியமான வேறு பாடுகளைப் பெறுகின்றன எனவும் இவ்வாறு இனம் பிரித்துக்காண ஒப்பிலக்கிய ஆய்வு உதவும் எனவும் கூறுகிறார். (Comparative Literary Studies, Across National Frontiers)

ஒப்பிலக்கியப் போக்கில் மற்றொரு கூறாக இவர் கட்டுவது ஒப்பிலக்கியக் கல்வி மொழித் தடைகளையும் கடந்து ஆய்வது. (across linguistic barriers) ஒன்றுக்கும் மேற்பட்ட மொழிகளில் படைப்பாக்கத்திறன் பெற்றிருக்கும் ஆசிரியர்களின் படைப்புகளை ஒப்பிட மொழியியல் தடைகளை மீறி ஆராய வேண்டியுள்ளது. அதற்கு வழி வகுப்பது ஒப்பிலக்கியம் எனும் இவர் ஒப்பிலக்கியக் கல்வியின் இக் குறிக்கோளுக்கு ஏற்ற ஒரு எடுத்துக் காட்டாக, யுவான்கால் எனும் படைப்பாசிரியர் பிரெஞ்சு மொழியையும் ஜெர்மானிய மொழியையும் ஒருங்கே ஒரே திறமையுடன் கையாண்டமையைச் சுட்டுகிறார்.

சாமுவேல் பெக்கெட் (Samuel Beckett) ஆங்கிலத்தைப் போலவே பிரெஞ்சையும் இயல்பாகக் கையாண்டார். விலாடிமர் நபோகாவ் (Vladimir Nabokov) ஆரம்பத்தில் ரஷ்ய மொழியில் எழுதினாலும் பின்னர் ஆங்கிலத்திலும் எழுதினார். இவ் எழுத்தாளர்களின் படைப்பாக்கங்களைத் திறனாயும்பொழுது, பரந்த நோக்கும், பன்மொழித்திறனும் கொண்டிருத்தல் வேண்டும். அவர்கள் ஆங்கிலேய-ஐரிஷ் கவிஞரான ஏட்சும் (Yeats) ஆங்கிலேய-அமெரிக்கக் கவிஞர்களான எலியட்டும் பவுண்டும் (Eliot & Pound) படைத்தவற்றை ஆராயும் திறனாய்வாளர்களை விடச் சிறந்த திறமை கொண்டவர்களாய் விரிந்த நோக்குடையவர்களாய் விளங்க வேண்டும் என்கிறார்.

பொது இலக்கியம், தேசிய இலக்கியம், ஒப்பிலக்கியம்

பொது இலக்கியம் எனக் குறிப்பிடப்படுவதற்கும் - ஒப்பிலக்கியம் என்பதற்கும் இடையே, ஒரு குறிப்பிடப்பட்ட, முதன்மையான வேற்றுமை உள்ளது. இரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாட்டைப்பற்றி எஸ்.ஏ.சேய்ஸ் (S.A.Sayce) ஒரு செறிவான விளக்கம் தருகிறார்.

"மொழி எல்லைகளைக் கருத்தில் கொள்ளாத இலக்கியக் கல்வியே" பொது இலக்கியம் எனவும் "தேசிய இலக்கியங்களை, அவை ஒன்றுக் கொன்று கொண்டுள்ள இடைத்தொடர்புகளைக் கொண்டு கற்கும் கல்வியே "ஒப்பிலக்கியம்" என்றும் வரையறை செய்து தருகிறார். [23]

தனக்கே உரிய பிரச்சனைகளுக்கு அப்பால் (தேசிய இலக்கியம் எனில் எது என்ற பிரச்சனை) தேசிய இலக்கியம் என்ற கருத்துப் படிமத்தை நாம் ஏற்றுக் கொள்கிற வரையிலும் இது ஒரு பயனுடைய வரையறையாகும். இவ்விருவகைக் கல்வியும் ஒன்றனுள் ஒன்று ஒடுங்குவது தவிர்க்க இயலாதது; கட்டாயம் தேவைப்படுவதுமாம்.

தேசியப்பின்னணியில் இலக்கியக் கோட்பாடுகள், கவிதையியல், திறனாய்வு விதிகள் ஆகியவற்றைப்பற்றிப் பொதுவாக விவாதிப்பதைப் போன்றே "பொது இலக்கியம்" என்ற பார்வையும் நமக்குத் தேவை. எடுத்துக்காட்டாக ஐரோப்பாவில் பெட்ரார்ச்சின் (Petrarch) நாட்களில் இருந்து ஈரேழ்வரிப் போற்றிப் பாடல்களின் வளர்ச்சி பற்றி ஆராயும் ஆய்வு பொது இலக்கிய ஆய்வாகும். ஆனால் நம் ஆய்வு வழியில் ஷேக்ஸ்பியரின் ஈரேழ்வரிப் போற்றிப் பாடலுடன் பெட்ரார்ச்சின் பாடல் ஒன்றை ஒப்பிடுவோமேயாயின் நம் ஆய்வுப் பரப்பு, ஒப்பிலக்கியத் துறையின் வரையறைகளுக்குள் வந்துவிடும். தனித்தனியே பிரிக்க இயலாத இவ்விரு வகை ஆய்வுபற்றி, மேலும் தனித்தனிச் சான்று விளக்கங்கள் தேவையில்லை என்பார், எஸ்.எஸ்.பிராவர்.[24]

தற்கால மொழியியலாரைப் போலவே ஒப்பிலக்கியத் துறையினராகிய நாமும் செயல்பட ஆரம்பித்துள்ளோம். மொழியியலில் இருந்தே பெரும்பான்மையான மக்கள் நலம் சார்ந்த பிற துறைகள் யாவும், பல கருத்துக்களைக் கற்கின்றன. அதுபோன்றே நமக்கும், முக்கியமான சொற்றொடர்களைத் தனித்துக் காணாமல், தொடர்புபடுத்திக் காணவும், மொழியின் சொற்களஞ்சியத்துடன் இணைத்துக் காணவும், வழிவகுக்கிறது மொழியியல் துறையினர் அளிக்கும் சொற்களஞ்சிய அகராதி. ஒப்பிலக்கியம் (Comparative Literature) என்ற தொடர் பொது இலக்கியத்துடன் (General Literature) உலக இலக்கியத்தையும் (World Literature or welt literature) இணைத்துக் குறிப்பாகவே கூறுகிறது. கதே தாம் எழுதிய பிற்கால நூல்களில் இச்சொற்றொடரை மிகுதியும் பயன் படுத்தியுள்ளார். அதனால் பல மாறுபட்ட ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத பல பொருள்களைப் பெற்றது இத்தொடர்.

1. உலக இலக்கியம் பற்றிய முதல் கருத்து

இலக்கிய வரலாறுகள் பற்றிய நூல்களின் தலைப்புகளில் உலக இலக்கியம் எனும் தொடர் இடம் பெற்றது. இவ்விலக்கிய வரலாறுகள் உலகளாவிய அடிப்படையில் எழுத முனைந்ததையே இச்சொற்றொடர் விவரித்தது. (உலகளாவிய பார்வை இல்லை எனினும், குறைந்த பட்சம் ஐரோப்பிய அளவிலேனும் அவை இருந்தன), அவை பொருள் அடிப்படையில் பன்னாட்டு இலக்கியங்களை அடுத்தடுத்த இயல்களிலும், பிரிவுகளிலும் எடுத்துக்கூறின; பல நாடுகளிலும் பொதுவாகக் காணப்பட்ட இலக்கிய இயக்கங்கள், ஆற்றலுள்ள போக்குகள், இலக்கியக் காலப்பகுதிகள் போன்ற அடிப்படையில் அனைத்து நாட்டு இலக்கியங்களையும் முடிந்த அளவு வகைப்படுத்தி விளக்கின.

2. இரண்டாவது கருத்து

'உலக இலக்கியம்' என்ற தொடர், உலகில் தோன்றிய சிறந்த இலக்கியங்கள்,'செவ்வியல் நூல்கள்', 'உலகில், எழுதப்பட்டவற்றுள் மிகச் சிறந்தவை என்ற பொருளில் கையாளப்பட்டது.

ஒடிசி, ஏனெய்டு, டிவைன் காமெடி, ஃபாஸ்ட், பவோரி அம்மையார், 'மாயச் சிமையம் (குன்று) போன்ற அனைத்துமே இவ்வகையில் சேர்ந்தவை. தமிழ் இலக்கியங்களுள் திருக்குறளை இன்று உலக இலக்கியங்களில் ஒன்றாகக் கருதும்போக்கு வளர்ந்துள்ளது.

கதேயின் கருத்து

இவ்விரண்டு விளக்கங்களையும் விட கதே கூறும் விளக்கமே முக்கியமானதாகக் கருதப்படுகிறது. உலக இலக்கியம் (Welt literature) என்ற தொடருக்கு விளக்கம் கூறுகையில், பிறநாட்டு நல்லறிஞர் தம் திறமான புலமையை ஏற்கும் பரந்த மனப்பான்மையும் வேண்டும் என்கிறார் கதே. பல இலக்கியங்களிலும் காணப்படும் கொள்வினைக் கொடுப்பினைகளைப் பற்றிய ஆய்வும், தாக்குரவுகளைப் பற்றிய ஆய்வும், பொருளியல் வாழ்வில் உள்ள வணிகப் போக்கு வரவுகளையும், பண்பாட்டுப் பரிமாற்றங்களையும் பற்றிய ஆய்வுடன் ஒப்ப வைத்தும், இணைத்தும் காணப்படவேண்டும் என்கிறார் அவர். இவ்வாறு கூறுவதால் தேசிய இலக்கியத்தை ஒதுக்க வேண்டும் என்பதோ ஒழிக்க வேண்டும் என்பதோ கதேயின் கருத்தன்று.

கதேயும் ஆண்ட்ரே கைடும்

ஆண்ட்ரே கைட் என்பவர் (Andre Gide) பண்பாடு (Culture) ஐரோப்பிய மயமாக்கப் படவேண்டும் என்ற கருத்துடையவர். இக்கருத்தை அவர் தம் நாட்குறிப்பில் 9 அக்டோபர் 1916-இல்

எழுதியுள்ளார். இக்குறிப்பு கதேயினது உலக இலக்கியப் பார்வை பற்றிய கருத்துப் போன்றே உள்ளது. உலகப் போர்களுக்கு இடையே வேறுபட்டு நிற்கும், தனித் தன்மைகள் கொண்ட ஐரோப்பிய நாடுகளின் இலக்கியங்களினின்றும் வெளிப்படும் பண்பாட்டில் முழுக வி௫ம்பினார் கைட். மேலும் இவர் தனித்துவப்பட்டு நிற்கும் இலக்கியங்களைத் தேசியமயமாக்குவது ஒன்றே, ஐரோப்பிய மயமாக்கப்பட்ட பண்பொருமையைக் கொணர வழிகோலும் என்கிறார்.

இவ்விடத்தில் தான் இவர் கதேயினின்றும் மாறுபாடுகிறார். கதே மேலும் ஐரோப்பிய நாடுகளைத் தாண்டிக்காண ஆரம்பித்தார். கதே தம் பின்னாட்களில் பெர்சியா, அரேபியா, இந்தியா ஆகிய கீழைநாடுகளின் இலக்கியங்களுடனும் பண்பாட்டுடனும் இணக்கம் காண முயன்றார். இவர் தூர நாடுகளின் இலக்கியப் பண்பாட்டுத் தொடர்பினைக் கொண்டு ஜெர்மானிய இலக்கியங்களில் முழுமைகாண விழைந்தார். இவ் விருப்பத்தை அவர் தம் தொடர் கவிதை வரிசைகளுக்குப் (Poetry-Cycles) பெயரிட்டமையினின்று அறியலாம். அவை மேற்கு-கிழக்குக் கவிதைத் தொகுப்பு; சீன-செருமானிய நாட்காலங்களும் பருவங்களும் (West-Eastern Collection of poems, Chinese-German, seasons & Times of days) என்பன.

உலக இலக்கியம் (Welt Literature) என்ற செருமானியத் தொடர் ஒப்பிலக்கியத்துடன் மிகுந்த தொடர்பு உடையது. இது ஒப்பீட்டறிஞர்களின் பல ஆர்வமுள்ள வினாக்கள் எழ இடமளிப்பது.

"பேரிலக்கியவாதிகள் தம் இலக்கியக் கொள்கைகளை எவ்வாறு வகுத்துக் கொண்டனர்?"

"தாந்தேயின் இறைமை இன்பவியலில்" (Divine Comedy) "லூகானும்" ஸ்டாடியஸ்உம் முதன்மை பெறுவது ஏன்"?

"இருபதாம் நூற்றாண்டில், ஐரோப்பாவில் தாஸ்தே வெஸ்கி மேன்மேலும் பெருமை பெறுவது ஏன்?"

என்பன போன்ற வினாக்களுக்கு விடையளிக்க ஒப்பிலக்கியமே உதவ முடியும் என்று கருதுகிறார் பிராவர்.

ஐரோப்பிய இலக்கிய உலகில் தலைசிறந்த மூவரைக் குறிப்பிடும்படி கேட்கப்பட்டபொழுது ஜெனரல் டிகால் (Degaulle) தாந்தே, கதே, சடியூப்ரியாண்டு (Chateubriand) மூவரையுமே குறிப்பிட்டார். அவரது விடை எந்த அளவுக்குப் பிரதிநிதித்துவம் வாய்ந்தது? அல்லது விசித்திரமானது? ... என்பது போன்ற வினாக்கள் சமூக, அரசியல், நாகரிகப் பண்பாட்டியல்களுக்கு நம்மை இட்டுச் செல்வதாக அமைதல் வேண்டும்.

சார்போன் பல்கலைக்கழகப் பேராசிரியர் ரெனே எதியாம்பில் 1963-இல் எழுதிய ஒரு நூலில் (Comparison nest pas raison) ஒப்பிலக்கிய அறிஞர்கள் ஐரோப்பாவையும் தாண்டிக் காணும் கண்பெற வேண்டும் என்றும், கதேயை அதற்கு முன்மாதிரியாகக் கொள்ளலாம் என்றும் கூறினார். மேலை நாட்டு இலக்கியங்களைக் கீழைநாட்டு இலக்கியங்களோடு ஒப்பிட்டு, புதிய இலக்கிய நோக்கங்களையும், கொள்கைகளையும் முனைவுகளையும் ஆராய வேண்டும் என்றும் கோரினார் எனும் பிராவர், பின்னர் வந்தவர்களையும் ஒதுக்கி விடுதற்கில்லை என்கிறார். மில்மன்பரி, ஆல்பர்ட் பி.லார்டு, சி.எம்.பௌரா போன்றோர் ஒப்பிலக்கியத்தின் பரப்பையும் நோக்கையும் விரிவு படுத்தினர். வாய்மொழிப் பாடல்களுக்கும் இலக்கியத் தகுதியளித்து அவற்றையும் பிற இலக்கியங்களுடன் இணைக்க வேண்டும் என்றனர். ஏற்றம் பெறச் செய்தனர் என்பதை எடுத்துரைக்கிறார்.

உலக இலக்கியம் முழுவதற்குமான தனிப்பட்ட இலக்கியக் கோட்பாடுகளை முழுமையாக ஒருவர் தன் மனதில் கொள்ள இயலாது. தன் கருத்துக்கு மிகுந்த இயைபுடைய, ஒத்த கருத்துடைய ஆசிரியர்களையும் நூல்களையும் தேர்வு செய்து தன் வழியில்

அவற்றை ஆய்ந்த பின்னரே எந்த ஆசிரியரும் எந்நூலும் தன் கருத்துடன் ஒத்திசைவு கொண்டுள்ளது எனக் கூறமுடியும். பெரும்பாலானோர் செயின்ட் பியூவ் உரிமையுடன் வலியுறுத்திக் கூறிய செவ்வியியற் காலப் பண்புகளைச் சார்ந்து நிற்கவே முனைகின்றனர்.

செயின்ட் பியூவ் "செவ்வியல் என்றால் என்ன?" என்ற தன்னுடைய கட்டுரையில் (1850- அக்டோபர்) பின்வருமாறு கூறுகிறார். "எனதிறைவனின் உள்ளத்தில் பல்லறைகள் கொண்ட அடுக்கு மாளிகைகள் பலவுள", எனும் பொதுவான மரபுத் தொடரின் மூலம் இறைவனின் அருளாட்சி எல்லையைக் குறிப்பதை விட, இயற்கை எழிலாட்சியைக் குறிப்பிடுவது பொருத்தமாக உள்ளது." இங்குத் தான் கூறவந்த இறைவனின் அருளாட்சி பரந்த எல்லைகளை உடையது, அனைத்தையும் உள்ளடக்கியது என்ற கருத்தை செவ்வியல் கால மரபுத்தொடரைப் பயன்படுத்திக் கூறுவதை விட இறைவனின் எழிலாட்சியைக் குறிப்பிடுவதே சிறந்தது என்கிறார் செயின்ட் பியூவ்.

இறைவனின் அருளாட்சி எல்லையைப் போன்ற ஒரு பரந்த எல்லையைத் தமதாக்கிக் கொண்டவர்களுள், எங்கும் எதிலும் முதலில் நிற்பவர் ஹோமர். ஹோமரை இறைவனுக்கு அடுத்த படியாக, அல்லது மேலும் ஒரு படி சென்று இணையாகவே கருதினர். இதுவரை மேலையிலக்கியவாதிகள் அறிந்திராத மகாகவிகள் மூவருளர். அவர்கள் வால்மிகி, வியாசர், ஃபிர்துசி.

குழந்தை ஏசுவுக்குக் கீழ்திசையினின்றும் பரிசுகள் கொண்டு வந்த மூன்று அறிஞர்களைப் போன்று, இம்மூவரும் ஹோமரின் பின்வருபவர்கள். பழம்பெரும் ஆசிய மக்கள் போற்றித் துதிக்கும் மாபெரும் இதிகாசங்களை நல்கியவர்கள். இவர்களுள் வால்மீகியும், வியாசரும் இந்தியக் கவிகள். ஃபிர்துசி பெர்சிய நாட்டவர். கலைநுகர்உணர்வின் வரையறைக்குள் இத்தகைய பேரறிவாளர் இருந்திருந்தினர் என்பதான அறிவும் கூட நன்மை பயப்பதே. இவ்வுணர்வும் அறிவும் மனிதஇனக் கால்வழியை முழுமையாக அறிய உதவும்.[25]

இங்கு மற்றொரு கருத்தும் கவனிக்கத்தக்கது. அவர்களிடம் நமக்குள்ள மதிப்பை, அவர்களையும் மேலையிலக்கியம் பயிலும் மாணவர் படிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தித் தான் வெளிக்காட்ட வேண்டும் என்பதில்லை.

தாய்மொழிக் கல்வியைப் புறக்கணித்து, சற்றும் ஒற்றுமையுறவற்ற வேற்று மொழிக்கல்வியால் ஒப்பிலக்கியம் கற்பாருக்கு என்ன பயன் விளையும்? என்கிறார் பிராவர்.

கிழக்கும் மேற்கும் இணைய வேண்டும் என்ற கொள்கையுடைய இலக்கிய ஆராய்சியாளர்களுக்கும் இலக்கியம் கற்போருக்கும், 'ஹெர்மான்ஹெஸ்'ஸையோ, 'ஆர்தர் வாலி'யையோ (Herman Hesse or Aorthur Waley) இனம் கண்டுகொள்வதில் அளவிடற்கரிய அதிர்ச்சி இருக்கும்; ஏனெனில் அவர்களுடைய கொள்கைப்படி 'லீ தை போ'-வையும் 'கன்ஃபூஷியஸ்'ஸையும் (Li Tai Po and Confucius) கற்பதும் கதேயையும் கீட்சையும் கற்பதும் இணைந்தே இருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்கள் ஐரோப்பிய இலக்கிய வாசர்களிடையேயும், ஐரோப்பியர் அல்லாத வாசகர்களிடையேயும் இடைத்தொடர்பாளர்களாக விளங்குவர். மேலும் தனி விருப்பங்களுக்கு ஏற்பத் தமக்குத் தேவையானவற்றைத் தேர்ந்தெடுக்கப் பெரிய இலக்கியப் பரப்பையே மேலை இலக்கிய வாசகர்களுக்கு அளிக்கின்றனர்.[26]

ரெனெ வெல்லக் தன்னுடைய டிஸ்கிரிமினேஷன்ஸ் (Discriminations) என்ற நூலில் (Comparative Literature) என்ற தொடரில் உள்ள சொற்களையும் அதே பொருளில் வரக்கூடிய பிற சொற்களையும் வரிசைப்படுத்திக் கூறுகிறார். 'learning', 'letters', belles letters போன்ற சொற்கள் இலக்கியம் என்ற (Literature) சொல்லுக்குப் பதிலாக பயன்படுத்தப்படுவதையும், பன்னாட்டு இலக்கியம் (International Literature) ஒருமையிலக்கியம் (Universal literature) போன்ற தொடர்களை ஒப்பிலக்கியம் அல்லது உலக இலக்கியம் (Welt literature) போன்ற தொடர்களுக்கு இணையாகப் பயன்படுத்தலாமா என்பதைப் பற்றியும் விளக்குகிறார்.

எஸ்.எஸ்.பிராவர் தன் நூலில் 'ஒப்பிலக்கியக் கல்வி' என்ற தொடரைச் சொல்லாக்கம் செய்து பயன்படுத்துகிறார். அதற்கு அரண் செய்வதற்கேற்ற பல கருத்துக்களையும் வலுப்படுத்தக் கூடிய பல வரையறைகளையும் கூறியுள்ளார்.

ஒப்பிலக்கியக் கல்வி என்பது பற்றி விளக்கும் எஸ்.எஸ்.பிராவர் பின்வருமாறு கூறுகிறார். "ஒன்றுக்கும் மேற்பட்ட மொழிகளில் உள்ள இலக்கிய நூல்கள், இலக்கிய கொள்கைகள் பற்றிய நூல்கள், இலக்கியத் திறனாய்வு நூல்கள் போன்ற இவைகளை ஆய்வது; அவற்றில் காணப்படும் ஒற்றுமை உறவுகள், முரண்கள், இலக்கியங்களின் தோற்றம், தாக்கம் பற்றிய செய்திகளைத் துருவித் தேடுதலும் அலசி ஆராய்தலும் இதில் அடங்கும்''. "பல்வேறு மொழிகளைப் பேசும் பல இன மக்களிடையே ஏற்படும் இலக்கியத்தொடர்பும் உறவும் பற்றிய ஆய்வு - ஒப்பிலக்கியக் கல்வி."[27]

இவ்வரைவிலக்கணத்திற்கும் 'கிளாட்பிகாய்ஸ்'-உம் எம்.ஏ. ரூஸோவும் (Claude Pichois and A.M. Rousseau) கூறிய வரையறைக்கும் பொதுவான ஒற்றுமை இருப்பினும் இரு முக்கிய நோக்குகளில் அவர்களுடையதினின்றும் மாறுபடுகிறது. முக்கியமாக, ஒன்றுக்கும் மேற்பட்ட தேசிய, நாகரிகங்களை ஆராய்ந்தால்தான் ஒருவர் ஒப்பிலக்கியவாதி என ஏற்றுக் கொள்ளப்படுவார் என்ற கருத்தை இது, பொருளற்றதாக்குகிறது. ஏனெனில் பெக்கெட் (Beckett) போன்ற இரு மொழியாற்றல் படைத்த ஆசிரியர்களையோ அன்றி அல்சேஸ் (Alsace) சுவிட்ஜர்லாந்து போன்ற பல மொழி பேசும் மக்களை உடைய இடங்களைப் பற்றியோ ஆராயும் பொழுது இக்கருத்து உதவியாக இருப்பதற்குப் பதில் அதிக தொல்லையாகத் தான் இருக்கிறது.

ஆனால் இக்கூற்றால், இலக்கிய உதயத்திற்கும் வளர்ச்சிக்கும் தேசிய வட்டார, ஒழுகலாறுகள், மரபுகள் ஆகியன ஆற்றிய பங்கைக் குறைத்து மதிப்பிடுவதோ மறுப்பதோ தன் நோக்கமல்ல எனும் பிராவர், உயிரியல் அடிப்படையில் தேசியப்பண்புகள் அமைகின்றன

எனும் கருதுகோளை இன்று பலர் மறுக்கின்றனர். ஆயின், சமுதாயம் கல்வி, நிலஅமைப்பு, அரசியல், ஆகியவற்றின் அடிப்படையிலான வேறுபாடுகளை எவரும் மறுக்க இயலாது. மேற்கூறிய வலிமையுள்ள சூழல்களின் இயக்கத்தால் தேசியப் பண்புகள் வெவ்வெறு திசையில் பிரிகின்றன. அதுபோன்றே வலிமை மிக்க வரலாறுகளும் வெவ்வேறு நாடுகளையும் அதன் இலக்கியப் படைப்பாளிகளையும் உருவாக்குவதைக் காணமுடியும் என்கிறார்.

ஹென்றி ரிமார்க் (H.H. Remak) ஒப்பிலக்கியத்திற்கு அளித்த விளக்கத்தைப் பிராவர் மறுக்கிறார் 'ரிமார்க் கூறிய விளக்கத்தின் இரண்டாம் பகுதியாகிய, கலைகள், தத்துவம், வரலாறு சமூகவியல், அறிவியல்கள், சமயம் போன்ற மனித அறிவுக்குட்பட்ட பிற துறைகளுடனும் நம்பிக்கைகளுடனும் இலக்கியத்தை ஒப்பிடுவதே ஒப்பிலக்கியம் என்ற கூற்றைப் பிராவர் மறுக்கிறார்.

பிற அறிவுத்துறைகளும் நம்பிக்கைகளும் பற்றிய ஆய்வு இலக்கிய உண்மைகளுக்கு ஒளியூட்டுவனவாக மேலும் அரண் செய்வனவாக அமையும் என்பது உண்மையே. ஆனால் ஒப்பிலக்கியத்துறை என்பதனைப் பற்றிய விளக்கத்தில் இடம்பெற வேண்டியதில்லை என்னும் பிராவர், பிற இலக்கிய நெறியாளர்களிடமிருந்தும் அறிஞர்களிடமிருந்தும் தனித்துக் காணப்படும் ஒப்பிலக்கிய அறிஞர்களின் ஆய்வெல்லைக்குள், இந்த அறிவியல் துறைகளுக்கு இடமில்லை என்கிறார்.

அப்படியும் கூட ஒப்பீட்டறிஞரின் ஆய்வெல்லையை மிகச் சரியாக வரையறுத்து விட இயலாது. "இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகள்". என்ற சொற்றொடருக்கு ஒருவர் என்ன வரையறை கொள்ள முடியும்? இன்றைய ஆய்வுப்போக்கில் பிரிட்டனின் ஆங்கில புத்திலக்கியங்களையும் - அமெரிக்கரின் ஆங்கில இலக்கியங்களையும் தனித்தனியாக காண்கின்றனர்: ஜெர்மானிய மொழியையும் தனிதனியான, வேறுபட்ட மொழியியல் வகைகளாகக் கொள்கின்றனர். மற்றும் சிலர், உறவுடைய இரு

மொழித்திறனையும் 'இருமொழியில் கொண்ட நாவண்மையும்' உறவிலா இருமொழி படைப்புத்திறனையும் வேறுபடுத்திப் பார்க்கின்றனர்.

எடுத்துக்காட்டாக இந்தியைத் தாய்மொழியாக உடைய ஒருவர் வடமொழியில் (Sanskrit) இலக்கியம் படைக்கும்பொழுது உறவுடைய இரு மொழிகளிலும் அவருக்குள்ள ஆற்றல் வெளிப்படுகிறது. அவரே பாரசீக மொழியிலோ, திபேத்திய மலேசிய மொழியிலோ படைக்கும்பொழுது இரு வேறு மொழிகளைச் சிறப்புற ஆளும் திறனும் அவரது மேநிலையாக்க ஆற்றலும் வெளிப்படுகிறது எனலாம்.

கிரகாம் கிரீன் (Graham Green) ஆங்கிலத்திலும் சாலிங்கர் (Salinger) அமெரிக்க ஆங்கிலத்திலும் எழுதுவது அவர்கள் முறையே ஜெர்மானிய மொழியிலும் டச்சு மொழியிலும் அல்லது ஸ்பானிய, போர்ச்சுகீசிய மொழிகளிலும் எழுதுவதை விட மாறுபட்டே அமைகிறது.

தாகூர் ஆங்கிலத்திலும் பாரதி வங்க மொழியிலும் எழுதுவதைவிடத் தம் தாய் மொழியான வங்க மொழியிலும் தமிழிலும் எழுதுவது நிச்சயமாக வேறுபட்டு உயர்ந்த நிலையில் தான் இருக்கும்.

மாக்ஸ் வெயின்ரீச் (Max Weinreich) பிறர் காணும் பார்வையிலிருந்து மரபிலிருந்து மாறி ஒரு புதிய நோக்கில், எள்ளல் சுவையும் நகைச்சுவையும் கொண்ட மிகச் சிறிய பாவகைகளை (Epigram) இயற்றுவதிலேயே தன் வாழ்நாள் முழுவதையும் செலவிட்டார். அவை சொற் சுருக்கமும் சட்டென மாறும் கருத்துச் செறிவும் நகையுணர்வும் கொண்டவை.

மாக்ஸ் வெயின் ரீச்சின் இவ்வங்கதச் செய்யுள் வகையை ஒரு தனி மொழி வடிவமாகவே கருதலாம். ஈடிஷ் (Yiddish) அவ்வாறு தான் இவற்றை அடையாளம் கண்டார்.

"தனக்கென ஒரு பாதுகாப்புப் படையும் கப்பற்படையும் கொண்ட பேச்சுநடையே ஒரு மொழியாகும்". தனக்கென ஒரு மொழிக் கட்டமைப்பும், மொழிக் கொள்கைகளும் கொண்ட பேச்சு நடையே மொழியாகும். உலகமொழிப் பொதுமை (Universality of Language) அனைத்து மொழிகளிலும் இருப்பதை மொழி நூலார் ஒத்துக் கொண்டுள்ளனர். எனினும் மொழியின் மேல் நிலை அமைப்புக்களே (Peripheral Structures) ஒரு மொழியை மற்றொரு மொழியிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன. தொன்மையான மொழி தனக்கெனச் சிறப்பும் வளமும், சொல்திறனும் பிறசிறப்புகளும் பெற்றுள்ளது.

இச்சூழலில் 'இலக்கியம்' என்ற சொல் மிகச் சிறந்த உயரிய பண்புடைய படைப்புகளையே குறிக்க வேண்டும் என்பதில்லை; எவையெல்லாம் வெளிவந்துள்ளனவோ வெளிவரப் போகின்றனவோ அவற்றையும், ஒரு நாட்டின் இலக்கியக் கொள்கையையும், குறிக்கும் என்கிறார் பிராவர்.

பிற அறிஞர்களைப் போன்றே, ஒப்பிலக்கிய அறிஞர்களையும் செவ்வியற் கால நூல்களையும் தாண்டிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளும் அவர், மகிழ்வூட்டும் இலக்கியங்களிலும் நீதி இலக்கியங்களிலும் காணப்படும் எளிமையை எடுத்துக் காட்டல் வேண்டும் என்கிறார்.

டொனால்டு ஃபான்கரும் பிறரும் கூறியது போல, பால்சாக், டிக்கன்ஸ், தாஸ்த்தா வெஸ்கி போன்றோரின் முரண் பண்பாளர்களைப் பாத்திரங்களாகக் கொண்ட 'கோதிக்' புதினங்கள், இளமை முறுக்கேற்றும் இன்பவிழைவுப் புதினங்கள், துப்பறியும் புதினங்கள், திகில் கதைகள், மர்ம நாவல்கள், செய்தியிதழ்களில் வரும் சிறப்புக் கட்டுரைகள், திறனாய்வுக் கட்டுரைகள், மதிப்புரைகள், இன்பியல் நாடகங்கள், அரசுக் காவல்துறைப் பணி சார்ந்த அரசுச் செய்தி வெளியீடுகள் போன்றவையும் கூடக் குறிப்பிடத்தக்க தகுதியுடையவை என வெளிச்சம் போட்டுக்காட்ட முடியும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பெரும் புதின

ஆசிரியர்கள், ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் உள்ள பொழுதுபோக்கு அம்சங்களை மட்டும் எடுத்துக்கொண்டு இதுவரை எதிர்பார்க்காத அளவுக்கு திறமையுடன் புதினங்களாக மாற்றி அமைத்துள்ளனர்.

ஒப்பியல் இலக்கியக் கல்வியின் வரலாறானது, லிட்டரேசர் கம்பாரி (Literature Comparee) ஒப்பிலக்கியம் (Comparative Literature) ஆகிய தொடர்களின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்தது.

இவ்வரலாறு பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து துவங்குகிறது. பிரெஞ்சு நாட்டு அறிவியல் அறிஞர் கூவியர் (1800) ஒப்பியல் உடற் கூற்றாய்வு (Comparative Anotomy) என்ற புகழ் மிக்கத் தொடரை முன் மாதிரியாகக் கூறியதிலிருந்து ஆரம்பிக்கிறது, இவ்வரலாறு. நோயல் (Noel) என்பாரும் லாப்லேஸ் (Laplace) என்பாரும் சார்போன் பல்கலைக்கழகத்தில் ஒப்பிலக்கியத்தைத் தனியொரு துறை என்ற உயர்நிலைக்கு உயர்த்தினர். 1816-1825 வரை தொடர்ந்து பயிற்சிகள் அளித்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஐம்பதுகளில் அதனை ஒரு பேரியக்கமாக மாற்றினர். ஆயின் உண்மையில் இவ்வாறு பல்வேறு நாடுகளின், பல்வேறுபட்ட நாகரிகங்களை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு மொழி இலக்கியங்களை ஒப்பிடும் முறையானது மிகப் பழமையானது. உரோமர்கள் தங்களுடைய கவிதைகளையும் மேடைப் பேச்சுக்களையும் கிரேக்கர்கள்தம் கவிதைகளுடனும், மேடைப் பேச்சுக்களுடனும் ஒப்பிட்டனர்.

மறுமலர்ச்சிக் காலத்தில், மேலை இலக்கியங்களில் காணப்பட்ட கத்தோலிக்க நோக்கை வெளிக்கொணர விரும்பிய மதத் தலைவர்களுடைய நூல்களிலும் இவ்வொப்பிடும் முறை காணப்படுகிறது. மறுமலர்ச்சிக் கால இலக்கியங்களையும், அதற்கு முந்திய இலக்கியங்களையும் ஆராயும் ஒருவர் ஒப்பீட்டு நோக்கைக் கைக்கொள்ளாமல், ஒப்பீட்டு அறிஞராக மாறாமல், முழுமையான ஆய்வைச் செய்ய இயலாது.

பாரதியின் படைப்புகளில் மேலை இலக்கியங்களினால் ஏற்பட்ட தாக்கங்களை ஆராய்ந்து அறித்த சச்சிதானந்தன் அவர்கள் தமிழக, இந்திய எல்லைகளைக் கடந்து சென்றே ஆய்வைச் சிறந்த ஒப்பீட்டாய்வாகக் கொணர்ந்திருக்கிறார். ஒப்பிலக்கியப் பார்வையின் முழுமையை இங்குக் காண முடிகிறது.

ஸ்பானிய இலக்கியப் படைப்புக்களின் போக்குகளில் நிகழ்ந்த கோணல்களையும் கூனல்களையும் ஆராய்ந்த "கெய்த் வின்னம், (Keith Whinnom) 'என்ற ஆசிரியர் ஸ்பெயின் எல்லைகளைக் கடந்தே அவரது ஆய்வைச் செய்திருக்கிறார்.

"ஸ்பானிய மக்கள் தம் மொழியிலுள்ள இலக்கியங்களைக் கற்கத் தம்மை அர்ப்பணித்துள்ளனரா என்ற கேள்வியே எனது முதல் கேள்வியாயிற்று. இலக்கியக் கோணலுக்கான முதல் காரணம் இது என எண்ணினேன். ஸ்பானிய இலக்கியம் என்ற குறுகிய கண்ணோட்டத்தைக் கேள்வியுற்றதுமே அவர்கள் திகைத்தனர். இவ்வுணர்வே இலக்கிய உருமாற்றங்களுக்கு, புத்திலக்கியப் படைப்புக்குக் காரணம்" என்கிறார் கெய்த் வின்னம்.[28] மொழியியல் தடைகளை, அவை மொழி ஊடுருவல்களுக்கு வழிவிடுபவையாய் இருப்பினும் மீறி, ஐரோப்பிய இலக்கியங்களை ஒன்றினின்று பிறிதொன்றைப் பிரித்துக் காட்டும் நிலையிலிருந்து மாறி அனைத்து ஐரோப்பிய இலக்கியங்களும் ஒன்றே என்ற நோக்குடன் புத்திலக்கியங்கள் தோன்றலாயின; எனவே உருமாற்றங்களும் ஏற்பட்டன; இலக்கியப் போக்குகளும் மாறின. மறுமலர்ச்சி இலக்கியங்களிலும் இடைக்கால இலக்கியங்களிலும் இன்றைய புத்திலக்கியங்களிலும் கூட அதிகமான பெருவிளைவுகளை, இவ்விலக்கியப் போக்கு உண்டாக்கியது.

'உலகளாவிய மொழி' என்ற பேராற்றல் நிலையிலிருந்து இலத்தீன் கீழிறங்கியது. ஐரோப்பாவில் தேசிய உணர்வுகள் மேலோங்கின. அதனால் ஐரோப்பாக் கண்டம் மேலும் மேலும் சிறுபிரிவுகளாகப் பகுக்கப்பட்டது. இச்சூழலில் ஒப்பிலக்கியக்

கல்வி பல (கடமைகளை) செயல்திறன்களைக் கைக்கொள்ள வேண்டியதாயிற்று.

1. இழந்த ஒருமையுணர்வையும் ஒற்றுமை உணர்வையும் மீட்டுருவாக்க வேண்டியிருந்தது. (ஒப்பிலக்கிக் கல்வி மூலம்)

2. தேசிய உணர்வு என்ற குறுகிய கண்ணோட்டத்தை உடைய பழமரபினைப் பயனுடைய, பிறருடைய தொடர்பால் வளப்படுத்த வேண்டியிருந்தது.

3. இதுவரை ஒப்பிலக்கியம் என்பது ஐரோப்பிய இலக்கியங்களை ஒப்பிடுவதையே குறித்து வந்தது, அந்நிலை மாறி மேலை நாடுகளையும் தாண்டி வர ஆரம்பித்தது.

ஏ.டபிள்யூ.செலகல் இந்தியச் செவ்வியல் இலக்கியங்களையும், ஜெர்மானிய புனைவியல் இலக்கியங்களையும் ஒப்பிட்டார். கதேயின் படைப்புகளை அரேபிய, பெர்சிய, சீன இலக்கியங்களுடன் இணைத்துக் கண்டார் மாத்யூ அர்னால்டு. மேலும் கிழக்கே சென்று, ஆப்பிரிக்க இலக்கியத்துடனும், வாய்மொழி இலக்கியங்களுடனும் ஒப்பிடும் நிலையை ஃபிரடெரிக் செலகலிடம் காணலாம். மேலும் மேலும் நுணுக்கமான பகுப்பாய்வு முறைகளும் வகைபாட்டியலும் எல்லா வகை இலக்கியக் கல்வியையும் வளப்படுத்தின. மொழியியல் தடைகளையும் தாண்டி ஊடுருவிச் சென்று ஒப்பீடு மூலம் உணர்ந்த முரண்களால் தேசிய மரபுகளைப் பற்றிய உணர்வை மாற்றி அமைத்துக்கொள்ள உதவியது. எடுத்துக்காட்டுகளைப் பிறரிடமிருந்து காட்டுவதன் மூலம், ஒரு குறிப்பிட்ட தேசிய இலக்கியத்தின் நோக்கையும் போக்கையும் மாற்றுருவாக்க முடிந்தது.

விதிகளும் கட்டுப்பாடுகளும் நீங்கிய மிகப் பரந்த தொடர்புடைய தரவுகளால், இலக்கியம் பற்றிய ஒரு பொதுமைக் கொள்கையைக் காண முடிந்தது.

இம்மூவரையும் தொடர்ந்து செயிண்ட் பியூவ் (Saint Betuve) செப்.1868-இல் ஒப்பிலக்கிய இதழில் ஒப்பிலக்கியத் திறனாய்வுகளை அறிவு சார்ந்த புதுமை நாட்டத்துடனேயே செய்திருப்பது, அவற்றைப் பிற ஆய்வுகளில் இருந்து மேம்படுத்திக் காட்டியது.

அருந்திறம் வாய்ந்த அறிஞர்களாலும், திறனாய்வாளர்களாலும் ஒப்பிலக்கியக் கல்வி காப்பாற்றப்படுகிறது. கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் உள்ள ஒப்பிலக்கியத் துறையினராலும் படைப்பாளிகளாலும், கவிஞர்களாலும் நாடக, புதின நூலாசிரியர்களாலும் இத்துறை வளப்படுத்தப்படுகிறது. பிற மொழி இலக்கியத்தின் தாக்கத்தை இவர்கள் பெற்றனர். என்பதோடு பிற மொழிக் கல்வியினால் இலக்கியத் திறனாய்வும் செய்து, தம் கடமையை நிறைவேற்றுகின்றனர் என்பதே பொருந்தும். அத்தகையோர் ஒப்பிலக்கியத்தை ஒரு தனித் துறையாக எண்ணுவதை விட, ஒரு தனிப் பொருளாக, ஆய்வுக்குரிய பொருளாகக் கருதினர், என எடுத்துரைக்கிறார் பிராவர்.

தற்சார்பற்ற ஒரு அமெரிக்கரும் ஆங்கிலேயரும் முழு கருத்து ஈடுபாட்டுடன் தம் துறையில் ஈடுபடும்பொழுது தான், தங்களுக்குள் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்வர்.

ஆந்தனி தார்பி (Anthony Thorby) போன்றோர் ஒப்பிலக்கியக் கொள்கைகளாகச் சிலவற்றைக் கூறுகின்றனர்.

'இலக்கியப் படைப்புகளைப் பகுத்தாய்வதற்கு ஒப்பீடு ஒரு சிறந்த உத்தி' (கலை நுணுக்கத்தோடு சேர்ந்த உத்தி)[29] எடுத்துக்காட்டாக,

1. ஒரே மொழியிலுள்ள படைப்புகளை ஒப்பிடுவது என்ற குறுகிய வட்டத்தை விட்டு, ஒருவர் ஒப்பீட்டிற்கான கூறுபாடுகளைப் பிற மொழிகளில் இருந்தும் எடுத்துக் கொள்ளலாம், ஒரு குறிப்பிட்ட கவிதையையோ,

ஓவியத்தையோ அல்லது வெறும் கட்டிடத்தையோ பற்றி உணர்வதற்குக் கூட அவற்றின் பண்பு நலன்கள் பற்றிய அடிப்படை அறிவு தேவை.

2. இவ்வாறு ஆய்வதற்கு, ஒப்பீட்டுக் குணங்கள் இருக்கக்கூடிய ஒரேவிதமான கலைப்படைப்புகள் தேவை. ஆயின் இரண்டும் ஒன்றாகவே இருக்கவேண்டியதில்லை. ஒப்பிடற்குரிய ஒத்த குணங்கள் கொண்டதாக இருப்பின் போதும். அதாவது வேற்றுமையில் ஒற்றுமை இருக்க வேண்டுமேயன்றி, ஒரே தன்மை உடைய இரண்டை ஒப்பிடுதல் அவசியமற்றது.

எடுத்துக்காட்டாக பாரதியின் குயில் பாட்டிலும் கீட்சின் எண்டிமியான் (Endymion) கவிதையிலும் உள்ள குறியீட்டுப் பண்புகளை, ஆன்மா பற்றிய கருத்துக்களை ஒப்பிடலாமே தவிர, பாரதியின் பாடலிலும், பாரதிதாசன் பாடலிலும் காணப்படும் தமிழ்ப்பற்றை ஒப்பிடுவது என்பது தேவையற்ற ஆய்வாக முடியும்.

3. இவ்வாறு காண்பதற்கு முதற்படியாக ஒவ்வொரு படைப்பிலும் உள்ள நற்றிறமைகள் எவை, எவை? எது முதல் நூல்? கடினத்தன்மை எவ்வாறு உள்ளது? அப்படைப்பின் உள்ளடக்கம் என்ன? என்பது பற்றிய உணர்வு பெறுதல் வேண்டும் எனக் கூறும் பிராவர், லிலியன் ஃபஸ்ட்டின் (Lilian Furst) நூலை ஆய்வதில் இவ்வாறான முழுமையான ஒப்பீட்டாய்வை மேற்கொண்டனர் என்று எடுத்துக்காட்டு ஒன்றைத் தருகிறார்.

தனித்தனியாக ஒரு தேசிய இலக்கியத்தைப் பகுத்தாய்வதைக் காட்டிலும், சிறப்பாக, தன்னளவில் மேம்பட்டதாக, முன்பு நிகழ்த்தப்பட்ட ஒப்பீடுகளை விட உண்மையான கட்டமைப்பை வெளிக்கொணர்வதாய் நேர்மையான கண்ணோட்டத்துடன் சரியான பார்வையுடன் அது அமைந்தது, என்கிறார்.[30]

'கிரேக்க இலக்கியக் கல்வி' பற்றிய (1795-6) ஃபிரடெரிக் செலகலின் கட்டுரை மிகவும் பாராட்டத்தக்க திறனாய்வாகும். அதில் அவர் கூறியுள்ள மெய்மைகளின் அடிப்படையிலேயே, பெரும்பாலும் பிற ஆய்வுகளும் அமைந்தன.

தற்கால இலக்கியங்கள் பல எளிதில் விளக்க முடியாதனவாய் தோன்றுகின்றன. உலக இலக்கியம் என்ற பெரும் பரப்பிலிருந்து அவற்றைப் பிரித்துத் தம் தேசிய இலக்கியத்தின் ஒரு பகுதியாக மட்டும் காண்பதாலும் அவை தனி இருப்புடையனவை என்று காண்பதாலும் தான் இந்த இடர்பாடு.

அவை ஒன்றுடன் ஒன்று கொண்டுள்ள உறவு நிலைகளை ஆராயும்பொழுதுதான் அவற்றின் நுட்பமான உயிர்ப்புச் சக்தியை, த்வனியை உணர முடியும். அதன் பின்பே அவற்றின் வரையறைகளைப் பற்றி மதிப்பீடு செய்ய முடியும். எவ்வளவு தான் முழுமையாக நவீன இலக்கியங்கள் அனைத்தையும் கடை போகக் காண விரும்பினாலும் அப்பொழுதும் அது ஒரு முழுமையின் சிறுகூறாகவே இருக்கும் என்கிறார், செலகல்[31]. இங்கு இவர் கூறும் வரையறை குறித்துப் பேராசிரியர் ஹான்ஸ் எய்ச்னர் (Hansa Eichner) சில கருத்துக்களை எடுத்துக் கூறியுள்ளார். "ஒவ்வொன்றிலும் தொடர்பு உண்டு. ஒவ்வொன்றிலும் சான்று காட்டுதலும் உண்டு. விளக்கச் சான்றுகளும் உண்டு. எந்த ஒரு தனி இலக்கியமும் பிற இலக்கியங்களுடன், பிற நிகழ்வுகளுடன் தொடர்பு கொண்டாலன்றி முழுமையாக அமையாது" எனும் இவரது கருத்து, மாத்யூ அர்னால்டு வலியுறுத்திய கருத்துப் போன்றதே.

இலக்கியத் திறனாய்வில் ஒப்பிலக்கியக் கோட்பாடுகளை உட்படுத்துவது எவ்வாறு என்பதைப் பின்வரும் இயல்களில் காணலாம்.

இயல் – 2

இந்தியாவும் ஒப்பிலக்கியமும்

இந்தியாவில் ஒப்பிலக்கியம் செயல்பட வேண்டிய நெறி முறைகள், அணுகு முறைகள், பின்பற்றப்பட வேண்டிய கோட்பாடுகள் ஆகியனவற்றை வரையறுத்து, பாதையமைத்துத் தர பல ஒப்பியலறிஞர்கள், இந்தியாவில் ஒப்பிலக்கியக் கல்வி முறை அறிமுகமான காலகட்டத்தில் இருந்து இன்று வரைத் தொடர்ந்து முயன்று வருகின்றனர்.

இந்திய நோக்கில் ஒப்பிலக்கியம்

ஒப்பிலக்கியக் கல்வியில் நாம் பிரெஞ்சு, அமெரிக்க ஜெர்மானிய கோட்பாடுகளைப் பின்பற்றுகிறோம்; எனினும் ஒப்பிலக்கியம் இங்கு எவ்வாறு செயல்பட முடியும் என்பதைக் குறிப்பாகச் சுட்டவும், பிற நாட்டு நோக்குகளில் இருந்து விடுபட்டு, இந்திய நோக்கில் ஒப்பிலக்கியம் தனக்கே உரிய தன்மைகளைக் கொண்டிலங்க வேண்டும் எனவும் இந்திய ஒப்பியலறிஞர்கள் கருதினர். அவர்கள் முன்வைத்த இரு தொடர்களே "இந்திய ஒப்பிலக்கியம்" (Indian Comparative Literature) என்பதும் "ஒப்பியல் இந்திய இலக்கியம்" (Comparative Indian Literature) என்பதும், இவற்றுள் இந்திய ஒப்பிலக்கியம் என்ற தொடரை முழுவதுமாக ஏற்றுக் கொள்வதில் சில தடைகள் உள்ளன.

ஒப்பிலக்கியம் (Comparative Literature) என்பது இலக்கிய ஒருமையை (Literary Wholesome) உலகப் பொதுமையைக் (Universality) காணும் ஒரு வழிமுறை.

அவ்வாறான பொதுப்பார்வையுடைய ஒரு வழிமுறையில் இந்திய என்ற முன்னொட்டைச் சேர்த்து, தடைகளையும் சுவர்களையும், எல்லைகளையும் கடந்த, மொழிகளையும் நாடுகளையும் இலக்கியப் பரப்பையும் இணைக்கும் ஒரு ஆய்வு முறையைக் குறுகிய வட்டத்திற்கு உள்ளாக்குவது தவறு. இந்திய ஒப்பிலக்கியம் என்று கூறுவது சரியெனில், அதே போன்று கனடிய ஒப்பிலக்கியம், அமெரிக்க ஒப்பிலக்கியம், பிரெஞ்சு ஒப்பிலக்கியம், ஜெர்மானிய ஒப்பிலக்கியம், ஐரோப்பிய ஒப்பிலக்கியம், ஆப்பிரிக்க ஒப்பிலக்கியம் என ஒவ்வொரு நாட்டிற்கும் கண்டத்திற்கும் எனத் தனித்தனி ஒப்பிலக்கியம் உண்டோ? என்ற வினா எழுவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

இலக்கியம் அனைத்தையும் உலகம் முழுவதற்கும் பொதுவான ஒருமையும் முழுமையும் உடைய ஒன்றாகக் கருதுபவர்கள், ஆங்கில இலக்கியம், தமிழ் இலக்கியம், வங்காள இலக்கியம் எனக் கூறாது, ஆங்கிலத்தில் உள்ள இலக்கியம், தமிழில் உள்ள இலக்கியம், வங்காளத்தில் உள்ள இலக்கியம் என்று கூறுவதுதான் 'உலக இலக்கியம்' என்ற கருத்தமைவைக் காப்பதாக அமையும் என்பர்.

இந்திய ஒப்பிலக்கியம்

'இந்திய ஒப்பிலக்கியம்' என்ற தொடரை தேவிந்தர் மோகன், செல்லப்பன் போன்ற ஒப்பியலறிஞர்கள் பயன்படுத்துகின்றனர். "இந்திய ஒப்பிலக்கியமும் கல்வியயல் சிக்கல்களும்" எனும் கட்டுரையில் தேவிந்தர் மோகன் இந்திய ஒப்பிலக்கியம் பற்றிக் கூறும்போது, "அது தனக்கே உரிய வடிவமைப்பும் இலக்கணமும் கொண்டிருக்க வேண்டும் என்றும், வாழ்வியல் நடப்புகளை, உண்மைகளைச் சமிக்ஞைகளாகவோ குறியடையாளமாகவோ, மாற்றும் வழிமுறைகளைத் (encoding) தனக்கேற்ப, தனித்

தன்மைகளுடையனவாகப் பெற வேண்டும் என்றும் கூறுகிறார். அன்றாட வாழ்வியல் கூறுகளை, தன்மைகளை இந்திய நோக்கில் காண ஒரு வழிமுறையை உருவாக்கிக் கொள்ளவேண்டும்", என்று கூறுவதால் இக்கூறுகளை அடித்தளமாகக் கொண்டே இந்திய ஒப்பிலக்கியம் அமையும் என அவர் கருதுவதை அறிய முடிகிறது.[1]

"இந்திய ஒப்பிலக்கியம்" என்ற தொடரில் 'இந்திய' என்ற முன்னொட்டு இந்திய இல்கியங்களைப் பிற உலக இலக்கியங்களில் இருந்து வேறுபடுத்தி அறிய உதவுகின்றது எனவும் ஒப்பிலக்கிய உலகிற்கு இந்தியாவின் பங்கு என்ன என்பதை விளக்குகிறது என்றும் கூறுகிறார் செல்லப்பன். மேலும் 'இந்திய ஒப்பிலக்கியம்' எனும் போது ஒப்பிலக்கியம், முதன்மை பெறுகிறது என்றும் 'ஒப்பியல் இந்திய இலக்கியம்' எனும் போது 'இந்திய ஒப்பிலக்கியம்' என்ற கருத்தமைவிற்கு முதலிடம் அளித்த ஒப்பிலக்கிய அணுகுமுறையில் இந்திய இலக்கியங்களைக் காண்பதைச் சுட்டுகிறது என்றும் கூறுகிறார்.[2]

ஒப்பியல் இந்திய இலக்கியம்

'ஒப்பியல் இந்திய இலக்கியம்' (Comparative Indian Literature) என்ற தொடரில் 'ஒப்பியல்' என்ற முன்னொட்டு ஆய்வு நெறிமுறையையும் 'இந்திய' என்ற அடைமொழி நோக்கு குறித்த மனோபாவத்தையும், 'இலக்கியம்' என்ற சொல் ஆய்வுக்களத்தையும் சுட்டுகின்றன.

ஒப்பிலக்கியக் கோட்பாடுகளின் நெறிமுறைகளின்படி இந்திய இலக்கியத்தை ஆய்வுப் பொருளாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் ஒப்பியல் இலக்கியக் கல்வியே 'ஒப்பியல் இந்திய இந்திய இலக்கியம்' எனலாம். 'இந்திய ஒப்பிலக்கியம்' எனும்போது ஆய்வு நெறிமுறையில் இந்தியக் கண்ணோட்டம், இந்தியத் தன்மை (Indian perspective, Indianness) ஆகிய இரண்டும் முதன்மை பெறுகின்றன. ஆனால் ஒப்பியல் இந்திய இலக்கியத்தில் இந்தியத்தன்மை கொண்ட இலக்கியங்கள் ஆய்வுக்களங்களை நல்குகின்றன.

இச்சூழலில் 'இந்திய இலக்கியம்' என்றால் என்ன? 'இந்திய இலக்கியம்' - என ஒருமையில் சுட்டுவதா? அன்றி 'இந்திய இலக்கியங்கள்' எனப் பன்மையில் குறிப்பிடுவதா? 'இந்திய இலக்கியம்' என்று ஒரு இலக்கியத்தை ஏற்க அடிப்படை வரைமுறைகள் யாவை? இந்திய இலக்கியத்தில் இருக்க வேண்டிய 'இந்தியத் தன்மை' (Indianness) என்ன? - என்பது போன்ற வினாக்கள் எழுகின்றன.

இந்திய இலக்கியம் - வரையறைகள்

'இந்திய இலக்கியம்' என்ற தொடரை இந்திய மொழிகள் அனைத்திலும் எழுதப்பட்ட இலக்கியங்கள் யாவும் 'இந்திய இலக்கியம்' என்ற பொருளில் கொள்வதை விட, இந்திய மொழிகளில் உள்ள இலக்கியங்களுக்கு இடையேயான உறவு நிலைகளை ஒட்டு மொத்தமாகச் சுட்டும் ஒரு சொல்லாகக் கொள்வது பொருத்தமாகும்.

இந்திய நாட்டிற்கே உரிய பொதுவான பண்பு நலனையே இந்தியத்தன்மை எனலாம். ஒரு பொதுவான மூலத்திலிருந்து (அது கற்பனையான மூலமாகவும் இருக்கலாம்) மரபு வழியாகப் பெற்ற அடிக்கருத்துகள், தலைமைப் புனைவுக் கூறுகள், பாத்திரப் படைப்புகள். நிகழ்ச்சிச் சூழல்கள், மனப்பான்மைகள், கருத்தமைவுகள், இயக்கங்கள், போக்குகள் போன்ற கூறுகளின் அடிப்படையில், 'இவை இந்திய மரபிற்கே உரியவை'-எனப் பிரித்துணரக் கூடிய மரபுகளைக் கொண்டவற்றை இந்திய இலக்கியங்கள் எனலாம்.

இந்திய இலக்கியம் என்ற கோட்பாட்டை 19ஆம் நூற்றாண்டிலேயே பங்கிம் சந்திர சட்டோபாத்யாய, மைக்கேல் மது சூதன தத் (1855), ரவீந்திரர், அரவிந்த கோஷ் போன்ற பல அறிஞர்கள் முன் வைத்துள்ளனர். இவர்கள் இந்திய மொழிகளில் எழுந்த பல்வேறு இலக்கியங்களுக்கிடையே இருக்கக் கூடிய ஒற்றுமைகளைக் கண்டுணர ஓர் அடிப்படையாக 'இந்திய

இலக்கியம்' என்ற கருத்தமைவை முன் வைத்தனர். இவை ஒரு பொது மரபிலிருந்து தோன்றிய வெளிப்பாடுகளே என்று கருதினர். எனவே இவற்றுக்கிடையேயான உறவுகளை வெளிக் கொணர்வதில் நாட்டம் கொண்டனர். இந்திய மொழியில் உள்ள இலக்கியங்களில் ஒற்றுமையுறவுகளைக் காண்பதுடன் வேறுபாடுகளையும் எடுத்துக்காட்டி, அவ்வேறுபாடுகள் அந்த அந்த மொழிக்கே உரிய தனித் தன்மைகள் என்ற நிலையில் காண முற்படும் போதுதான் வேற்றுமையில் ஒற்றுமையைக் காணமுடியும் என்றனர்.

உலக இலக்கியம் என்றபோது உலகில் உள்ள அனைத்து இலக்கியப் படைப்புகளையும், எழுத்தாக்கம் பெற்ற அனைத்தையும் ஒரு முழுமையுடைய, பகுக்க முடியாத ஒன்றாகக் கருதியதைப் போன்றே இந்திய இலக்கியம் என்ற போதும் இந்தியாவில் தோன்றிய இலக்கியங்கள் அனைத்தையும் இணைத்து ஒன்றாக, ஒரு முழுமையின், பல கூறுகளாகக் கண்டனர். மேலும் மறக்க இயலாத, நினைவில் வைக்கத் தகுந்த இந்தியமொழி இலக்கியங்களை - அதாவது காலம் கடந்து நிற்கும் சிறந்த இலக்கியப் பகுதிகளின் தொகுதியை இந்திய இலக்கியம் என்றனர்.

"பல மொழிகளில் எழுதப்பட்டிருப்பினும், இந்திய இலக்கியம் என்பது ஒன்றே", என்று டாக்டர். இராதாகிருஷ்ணன் கூறியதையே தன் தாரக மந்திரமாகக் கொண்டிருக்கும் சாகித்திய அக்காடமி தன் கோட்பாட்டிற்கு மாறாக ஆண்டு தோறும் தரமான நூல்களுக்குப் பரிசு வழங்கும் போது ஒவ்வொரு இந்திய மொழியையும் கருத்தில் கொண்டு ஒவ்வொன்றிலும் சிறந்த நூலாக ஒவ்வொன்றைத் தேர்ந்தெடுத்துப் பரிசுகள் வழங்குகின்றது. இந்நிலை சற்றே முரணாகத் தோன்றுவதாகவும் இதில் இலக்கிய நோக்கைவிட அரசியல் நோக்கே பிரதானமாக ஒலிப்பதாகவும் கூறுகிறார் ஸ்வபன் மஜூம்தார்.[3]

இந்திய இலக்கியம் என்பது இந்திய மொழிகள் அனைத்திலும் எழுதப்பட்ட இலக்கியங்களின் ஐக்கியமாக, ஒருங்கிணைப்பாக இருக்கமுடியாது எனக் கூறும் அமியாதேவ்,

அதைப்போல ஒவ்வொன்றிலும் சான்றுக்காக சில பகுதிகளை ஒவ்வொரு மொழியிலிருந்தும் எடுத்துக்கொண்ட இலக்கிய பகுதிகளின் தொகுதியாகவும் இருக்கமுடியாது என்கிறார். இவைதான் இம்மொழியின் இலக்கியப் படைப்புகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள் எனக் குறிப்பிடத்தக்க பானை சோற்றுப் பருக்கைகளை எடுத்துக்காட்ட எதை அளவுகோலாகக் கொள்ள இயலும்? இவ்வாறான தேர்தலுக்குச் சரியான முறையியல் இதுவரை அமையவில்லை, என்றும் அமியாதேவ் கூறுகிறார்.[4]

பழமைமிக்க செவ்வியற் படைப்புகளை இந்திய இலக்கியம் என்று கொண்டால் வெறும் பண்பாட்டு வரம்புகளுக்குள் சிறை பட்டுப்போவோம்.

இந்தியா முழுவதும் பெயர் பெற்ற சிறந்த இலக்கியங்களின் தொகுதியே இந்திய இலக்கியம் எனக் கருதினால் அதிலும் சிக்கல் ஏற்படும். ஏனெனில் புகழ் பெற்றவை பல சமயங்களில் ஏற்றுக் கொள்ளத்தக்க அளவு சிறப்புடையனவாக இல்லாதிருக்கின்றன. மேலும் ஒரு குறிப்பிட்ட இலக்கியத்தின் ஏற்பும், பரவலும் சில நேரங்களில் அப்படைப்பாசிரியரின் பின்புலத்தாலும், அரசியல் சார்பாலும் கூட ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன.

அடுத்து வருவது 'இந்தியத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு இந்திய இலக்கியம் எது எனச் சுட்டலாம்' எனும் கருத்தமைவு. 'இந்தியத் தன்மை' என்பது பல சமயங்களில் நொய்ந்துபோன வளமையற்ற கருத்தாக அமைந்து விடுகிறது. 'இந்தியத் தன்மை' என்பதைப் பலர் மேலோட்டமாகக் காண்கின்றனர்.

'அனைத்திந்தியப் பிடிப்பு' என்ற கருத்து சற்றே ஏற்றுக் கொள்ளக்கூடிய அடிப்படையாக உள்ளது. இவ்வாறு அனைத்திந்தியக் கண்ணோட்டத்தில் இந்திய மொழிகளின் இலக்கியங்கள் அனைத்திலும் இடம் பெற்றவை எனக் காணப்புகும் போது, பெரும்பாலும் பழைய செவ்வியற்கால நூல்களின்

அடிக்கருத்துகளும், பக்தி இலக்கிய படைப்புகளும் மட்டுமே ஏற்கக் கூடியவையாக அமைகின்றன. இன்றைய இலக்கியப் படைப்புகளான புனைகதைகளில் படைத்துக் காட்டப்படும் இந்திய குடும்பச்சூழல், மத்தியதரக் குடும்பங்களில் காணப்படும் பிரச்சனைகள், சாதிக் கொடுமை, தீண்டாமை, மதத்தின் பெயரால் அடக்குமுறை, நடுத்தரத்தட்டில் உள்ள மக்களின் நன்னடத்தைக் கோட்பாடுகள், கிராமப்புறங்களில் வறுமை, நகரப்புறங்களில் வேலையில்லாத் திண்டாட்டம், மாணவர் அமைதியின்மை, குழந்தைத் தொழிலாளர் பிரச்சனைகள், நொய்ந்து போகும் மனித நேயம், தனி மனிதனுக்கும் அவன் குடும்பத்திற்கும், தனி மனிதனுக்கும் அவன் வாழும் சமூகத்திற்கும், தனிமனிதனுக்கும் அவனது 'தான்' (Self) என்பதற்கும் இடையே ஏற்படும் சிக்கல்கள், விவசாய சமுதாயம் கொஞ்சம் கொஞ்சமாகத் தொழில் மயமான நகர்ப்புற சமுதாயமாக மாறும் கால கட்டச் சித்தரிப்பு, அதை ஒட்டி வழி வழி வரும் மரபு நிலைகளில் மாற்றம் ஏற்பட்டு நவீன கண்ணோட்டத்திற்கு மாறும் இடைநிலை பற்றியச் சித்திரிப்பு போன்றவைப் பொதுவாக இந்திய நாவல்களில் இடம் பெறுகின்றன. இவற்றில் பல மூன்றாவது உலக நாடுகள் அனைத்திலும் பொதுவாகக் காணக்கூடியவை.

கல்விப்புலக் கண்ணோட்டத்துடன் 'இந்திய இலக்கியம்' என எதைச் சுட்டுவது? என்பதற்கு ஒப்பியல் இந்திய இலக்கியமே விடையளிக்க முடியும்.

'இந்திய இலக்கியம்' என அப்படியே சுட்டிக் காட்டத் தக்கதாக எதுவும் இல்லை. இந்தியமொழி இலக்கியங்களே உள்ளன. அவற்றிலிருந்து இந்திய இலக்கியம் என்றால் என்ன என்று கண்டுபிடிக்க வேண்டும், கண்டுபிடிக்க ஆய்வியல் நெறிமுறைகளை வழங்குது 'ஒப்பியல் இந்திய இலக்கியம்' என்கிறார் அமியாதேவ்.[5]

தேசிய இலக்கியமும் இந்திய இலக்கியமும்

இந்திய இலக்கியததை இனம் காண ஒப்பிலக்கிய நெறி முறைகளை அணுகும்போது அது இலக்கியத்தை ஒப்பிலக்கிய நோக்கில் ஆராய்வதற்கு நான்கு வித பார்வையைச் சுட்டும் தன்மை உதவிக்கு வருகிறது.

1. தேசிய இலக்கியம்
   (National Literature)
2. உலக இலக்கியம்
   (World Literature)
3. பொதுமை இலக்கியம்
   (Universal Literature)
4. ஒப்பிலக்கியம்
   (Comparative Literature)

இந்நான்கனுள் தேசிய இலக்கியம் என்ற பார்வைக்கு அவர்கள் வழங்கும் விளக்கங்கள் 'இந்திய இலக்கியம்' என்ற கருத்தமைவை வடிவமைக்கப் பயன்படுத்தப்படலாம்.

தேசிய இலக்கியத்தின் அடிப்படைகள்

இரண்டு அடிப்படைகளில் தேசிய இலக்கியத்தை வரையறை செய்வர்.

1. நில எல்லையையும் அரசியல், வரலாற்று அடிப்படையையும் கொள்வது.
2. மொழியை அடிப்படையாகக் கொள்வது

நில எல்லை

நில எல்லையை அடிப்படையாகக் கொள்ளும்பொழுது ஒரே கலாச்சார பண்பாடும் மொழியும் கொண்ட ஒரு நாட்டின் எல்லைகள் அரசியல் காரணமாக மாறும்போது அந்நாட்டின் இலக்கிய மரபை எவ்வாறு பிரிப்பது என்ற வினா எழுகிறது.. மொழியாலும் பண்பாட்டாலும் ஒன்றாக இருந்த ஜெர்மனி 'கிழக்கு ஜெர்மனி', 'மேற்கு ஜெர்மனி' எனப் பிரிக்கப்பட்டதையும், இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்து இன்று தனி நாடுகளான பாகிஸ்தான், பங்களாதேஷ் எனப் பிரிந்ததையும் 'மேற்கு வங்கம், கிழக்கு வங்கம்' எனப் பிரிந்ததையும் எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். இங்கெல்லாம் இலக்கிய மரபை எவ்வாறு பிரிப்பது என்ற வினா எழுகிறது.

பண்டைய இலக்கியங்களைச் சேரர் காலம், சோழர் காலம், பாண்டியர் காலம், பல்லவர் காலம் என ஆண்ட மன்னவர்களை (அரசியலை) அடிப்படையாகக் கொண்டு 'காலப்பகுப்பு அடிப்படையில் பிரிப்பது மரபு'. ஆனால் அன்றைய சேரநாடு இன்று தமிழகத்தில் இருந்து பிரிந்து மொழியால் வேறுபட்ட தனி மாநிலமாக விளங்குகிறது.

ஆந்திராவிலிருந்து வந்த விசயநகரப் பேரரசு காலத்திலும், கன்னடத்து மராட்டிய பேரரசு காலத்திலும் மதுரையிலும் தஞ்சையிலும் தமிழ் இலக்கியங்கள் படைக்கப்பட்டன. 'தென்னாந்திர தெலுங்கு இலக்கியங்கள்' எனப் பெயர் பெறும் அளவிற்கு தெலுங்கு இலக்கியங்கள் தமிழகத்தில் தோன்றின. தமிழகத்தில் எழுந்த தெலுங்கு இலக்கியத்தையும், தெலுங்கர்கள் வளர்த்த தமிழ் இலக்கியத்தையும் பிரித்து உணர்வது சரியா? அல்லது அந்த அந்த மொழி இலக்கியமாகக் கொள்வதா?

இது போன்ற சிக்கல்களை நோக்கும்போது அரசியல் நாட்டு எல்லைகளைத் தேசிய இலக்கியத்தின் அடிப்படையாகக் கொள்வது முற்றிலும் போதுமான வழிமுறையாகாது என்பது புலப்படுகிறது.

பன்மொழிப் புலமையால் சிக்கல்

1. மற்றொரு சிக்கலுக்கு உரிய நிலையும் சுட்டப்படவேண்டும். ஒரு நாட்டில் வாழும் எழுத்தாளர் அந்நாட்டு தேசிய மொழியில் மட்டுமின்றி நெருங்கிய தொடர்புடைய அயல்நாட்டு மொழிகளிலும் புலமை பெற்றத் தனித்திறன் மிக்க படைப்பாளிகள் பலரை மேலை இலக்கிய உலகில் காணமுடியும்.[6]

2. ஒரு குறிப்பிட்ட தேசிய மொழியில் எழுதிக் கொண்டிருந்தவர்கள், அதை விடுத்துத் தான் கற்றுத் தேர்ந்த வேறு ஒரு மொழியில் படைப்பதையும் உலக நாடுகளிலும் இந்தியாவிலும் காணமுடியும்.[7] இது போன்றோரை நாம் எந்த நாட்டு இலக்கியவாதியாக ஏற்றுக்கொள்வது?.

3. பிறப்பால் அமெரிக்கரான டி.எஸ்.எலியட் (T.S.Eliot) இங்கிலாந்து நாட்டுக் குடிமகனாகி ஆங்கிலத்தில் எழுதும் போது ஆங்கிலமே படைப்பு மொழியானாலும் அதை அமெரிக்க இலக்கியமாகக் கொள்வதா? பிரிடிஷ் இலக்கியமாகக் கருதுவதா?

4. ஐரிஷ் எழுத்தாளர்களான ஜியார்ஜ் பெர்னாட்ஷா (George Bernot Shaw), ஏட்ஸ் (Yeats) போன்றோர் எழுதிய ஆங்கில இலக்கியங்களை எவ்வாறு கருதுவது? என்பது போன்ற கருத்துக்களை, வெயிஸ்ட்டீன் சுட்டுகிறார்.[8]

பல்வேறு நாடுகளில் ஒரே மொழியினால் சிக்கல்

ஒப்பிலக்கியவாதிகள் மற்றொரு சிக்கலையும் எடுத்துக் காட்டுகின்றனர். ஒரே மொழியில் வெவ்வேறு நாடுகளிலிருந்து எழுதப்படும் இலக்கியத்தைப் பிரித்துக் காண்பது எவ்வாறு? இங்கு நில எல்லை எந்த அளவிற்குப் பயன்படும்? இதற்கு விடை கூறுகிறார் வெயிஸ்ட்டீன்.

'இலக்கியம் எந்த நாட்டில் தோன்றியதோ அந்நாட்டு இலக்கியமாகக் கருதுவதை விட, அவை படைக்கப்பட்ட மொழிக் குடும்பத்துடன் இணைத்துக் காண்பதே சரி', என்கிறார் வெயிஸ்டீன்.[9]

'அரசியல் அமைப்பு, நில எல்லை ஆகியவற்றை மட்டுமே அடிப்படையாகக் கொள்ளாது அந்தந்த நாட்டிற்குரிய பொருளையும், பண்பையும் அடிப்படையாகக் கொண்டு காணவேண்டும்' எனவும் அந்தந்த நாட்டிற்கே உரிய தெளிவான இலக்கிய நடை, இலக்கிய வடிவங்கள் போன்றவற்றையும் கொள்ளலாம்' என்றும் கூறுகிறார் எஸ்.எஸ்.பிராவர்.[10]

2. மொழியடிப்படை அணுகுமுறை

'முருகியல் அடிப்படையிலும் ஒரே கலாச்சார அடிப்படையிலும் ஒரு குறிப்பிட்ட தேசிய மொழியில் உலகின் எந்தப் பகுதியில் எழுதப்பட்டாலும் அது அந்த தேசிய மொழியைச் சேர்ந்த இலக்கியமாகக் கருதவேண்டும் என்ற கருத்தை முன்வைத்தனர் ஒப்பிலக்கியவாதிகள்'.[11]

இங்கும் ஒரு சிக்கல் எழுகிறது. பல்வேறு நாடுகளில் உள்ளவர்கள் ஆங்கில மொழியில் படைத்த படைப்புகள் பிரிட்டிஷ் இலக்கியமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றனவா? அமெரிக்கா, இந்தியா, ஐரிஷ் போன்ற பிற நாடுகளில் உள்ளவர்கள் ஆங்கிலத்தில் எழுதுகின்றனர். இவர்களது படைப்புகள் அமெரிக்க இலக்கியம், ஐரிஷ் இலக்கியம், இந்திய எழுத்தாளர்கள் ஆங்கிலத்தில் எழுதியவை என்பது போன்ற கண்ணோட்டத்துடனேயே பயிலப்படுகின்றன. இலங்கை, மலேசியா போன்ற நாடுகளில் இருந்து எழுதப்படும் தமிழ் இலக்கியங்களை அந்நாட்டு இலக்கியம் என்பதா? தமிழிலக்கியமென்பதா? இவற்றிற்கு விடையளிப்பது ஒப்பிலக்கியமே.

'ஒரு நாட்டு மக்களை ஒரு குடையின் கீழ் கொண்டு வரவேண்டுமெனில் நாட்டு ஒருமைப்பாட்டிற்கு தேவையான நெறி முறைகளைக் காட்டும் தேசிய இலக்கியம் வேண்டும்' என்பார் கார்லைல்.[12]

இந்த நோக்கை அடிப்படையாகக் கொண்டே இந்தியாவில் பல அறிஞர்கள் இந்திய இலக்கியம் என்ற கருத்தமைவை முழுமையாகக் கொணர விரும்பினர்.[13]

இந்தியாவிற்கே உரிய பண்பாடு, வாழ்க்கைத் தத்துவங்கள், மனித விழுமியங்கள் (Human Values) ஆகியவற்றைத் தம்முள் பொதித்து வைத்துப் பாதுகாக்கும் இலக்கியங்களை இந்திய இலக்கியம் எனலாம்.[14]

இந்திய இலக்கியம் பற்றிச் சண்முகம்பிள்ளை கூறும் விளக்கம்

'இந்திய எல்லைகளுக்குள், இந்தியா முழுவதும் பரவியதாக, அதே சமயம் வட்டார வேறுபாடுகளைக் கடந்ததாக இருக்கக் கூடிய, இந்திய மண்ணிற்கே உரிய பண்பாட்டையும் தத்துவத்தையும் அடிப்படையாகக் கொள்ளலாம்; இது இந்திய எல்லைகளுக்கு அப்பால் காணக்கூடியதாக இருத்தல் கூடாது; அப்படியே கண்டுபிடிக்கப்பட்டால் அது இந்தியாவில் இருந்து பரவியதாகவே இருத்தல் வேண்டும். அதே போல இந்திய மண்ணிலிருந்தே பெறப்பட்ட தத்துவம்-பண்பாக இருக்கவேண்டும். அப்படியின்றி அயல்நாட்டிலிருந்து வந்ததாக இருத்தல் கூடாது. அப்படியே வந்திருந்தாலும் அது இந்தியமயமாக்கப்பட்டிருக்க (Indianization) வேண்டும். இந்தியமயமாக்கப்பட்ட பண்பாடோ தத்துவமோ இந்தியாவிற்கு வெளியே காண இயலாததாக இருத்தல் வேண்டும்' என்று கூறுகிறார்.

இவ்வாறான அடிப்படையில் உள்ள இந்தியப் பண்பாட்டையும் தத்துவத்தையும் கொண்டதே இந்திய இலக்கியம்

எனவும் அவை இன்றும் நாட்டுப்புற இலக்கியங்களில் மண்ணின் மணம் கமழப் பேணப்படுவதால் அவையே முதன்மையான இந்திய இலக்கியம் எனவும் கூறுகிறார் சண்முகப் பிள்ளை'.[15]

இவ்வடிப்படையில் பல மொழிகளில் பல பனுவல்களில் (Text) பல பாடபேதங்களில் (Versions) கூறப்பட்டிருப்பினும் இராமாயணம், மகாபாரதம், இந்திய நாட்டுப்புற இலக்கியங்களில் இருந்து தோன்றிய செவ்வியல் இலக்கியங்கள் தவிர விக்கிரமாதித்தன் கதைகள், தென்னாலிராமன் கதைகள் போன்றவற்றிலிருந்து இந்திய இலக்கியத்திற்கான வரைவிலக்கணத்தை வகுக்கவேண்டும் எனவும் இவ்விந்திய இலக்கிய வடிவங்களிலிருந்து கொள்கைகளைப் பெறவேண்டும் எனவும் வலியுறுத்துகிறார். இது வளர்ச்சியுற்ற மொழியில் இருந்து, மொழிவளர்ச்சிக்கு முந்திய வடிவத்தை மொழியியல் துறையினர் தேடுவது போன்றது என்கிறார் அவர்.[16]

நம்நாட்டு இலக்கிய மரபின் வளர்ச்சியை வரலாற்று ரீதியாகக் காணும்போதுதான் இத்தன்மையைப் புரிந்து கொள்ள முடியும். இதற்கு உதவுவது ஒப்பிலக்கியம்.

'இந்திய சமுதாய - கலாச்சார ஒருங்கிணைவில் பிறந்ததே இந்திய இலக்கியம், வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு மக்களினமும் வெவ்வேறு மதங்களும் ஏற்படுத்திய தாக்கங்களின் விளைவாக ஏற்பட்ட ஒட்டு மொத்தமான சமுதாய, பண்பாட்டு வளர்ச்சியின் பிரதிபலிப்பே இந்திய இலக்கியம்' என்பார் கிருஷ்ணகிருபாளினி.[17] அவ்வாறு வளர்ச்சியுற்ற காலத்திலும் கூட சில நேரங்களில் ஒத்திசைவும், சில நேரங்களில் மாறுபாட்டுணர்வும் கொண்டிருந்ததையும், ஒவ்வொரு மொழியிலும் பண்பாட்டு வளர்ச்சியும் அறிவு வளர்ச்சியும் பல படிநிலைகளில் ஏற்பட்டுள்ளது என்பதையும் காணமுடிகிறது என்கிறார் இவர்.

'தேசிய இலக்கியம்' என்ற பார்வையை முன் வைத்த ஒப்பியியல் அறிஞர்கள் தேசியச் சூழல், தேசியப் பண்பு என

இரண்டு அளவீடுகளைச் சுட்டுவர். 'தேசிய இலக்கியம் அந்தந்த தேசத்தின் கலாச்சாரம், பண்பாடு, சமுதாய நிலைகள், அரசியல் சூழல் போன்ற தேசியச் சூழலலையும், மக்கள் வாழ்வியல் கூறுகளான இறைவன், சமயம், சடங்குகள், தத்துவம், அன்பு, காதல், போர், போன்ற தேசிய குணங்களையும் படம் பிடித்துக்காட்டுவதாக இருக்கவேண்டும் என்றும் இச்சூழலில் இருந்தும் குண நலன்களிலிருந்தும் முகிழ்ந்த இலக்கியமே தேசிய இலக்கியமாக முடியும்', என்றும் கூறுவர்.[18] இதே அளவீடுகளை நாம் 'இந்திய இலக்கியம்' என்பதற்கும் கொள்ள முடியும்.

'இந்திய இலக்கியம்' என்ற கருத்தமைவின் வரலாறு

இந்திய இலக்கியம் என்ற கருத்தமைவின் ஆரம்பத்தை 1852இல் இருந்தே காணமுடியும். அந்நிய ஆதிக்கத்தின் கீழ் ஆட்பட்டிருந்த பலமொழி பேசும் மக்களை ஒன்று திரட்ட, ஓரின மனப்பான்மை ஏற்படுத்தி, அதன்வழி 'நாம் இந்தியர்; நமது நாடு இந்தியா' என்ற உணர்வை ஊட்ட மேற்கொள்ளப்பட்ட வழி முறைகளில் ஒன்று தான் இந்திய இலக்கியம் என்ற கருத்தமைவு என்று கருதுவாரும் உண்டு. மொழி வழி, இலக்கியங்கள் வழி இந்த உணர்வைத் தூண்ட முற்பட்ட இந்திய சமுதாயத் தலைவர்களும் அரசியல் தலைவர்களும் மேற்கொண்ட வழி முறையே இது.

ஆயின் மற்றொரு கருத்தும் இங்கு நினைவில் கொள்ளத்தக்கது. இந்திய இலக்கியம் என்றால் என்ன என்பதை விளக்கி எழுதியவர்கள் மேலை நாட்டினரே. மூரிஸ் விண்டர் நிட்ஸ், ஆல்பர்ட் வெபர், கிரியர்சன் போன்றோர் இந்திய இலக்கிய வரலாறு என்ற நோக்கு நிலையில் இந்திய இலக்கியம் பற்றி எழுதியுள்ளனர். இந்திய இலக்கிய வரலாறு எனும் நூலில் (1852) வெபர் 'இந்திய இலக்கியம்' என்ற பெயர் விளக்கத்தைக் தருகிறார். (The name of 'Indian Literature') விண்டெர் நிட்ஸ் 'இந்திய இலக்கிய வரலாறு' எனும் மூன்று தொகுதிகளடங்கிய தன் நூலில்

(1907) இந்திய இலக்கியத்தின் வரலாற்றைத் தருகிறார். இங்கெல்லாம் பெரிதும் இந்திய இலக்கியங்களாகக் கருதப்படுபவை வடமொழி, பாலி, பிராகிருத இலக்கியங்களே. டாக்டர். எஸ்.இராதாகிருஷ்ணன் போன்றோர் இந்திய இலக்கியங்கள் யாவும் ஒன்றே என்ற ஒருமையை நோக்கி இலக்கியவாதிகளை அழைத்துச் செல்ல எண்ணினர். அதனால் தான் இராதாகிருஷ்ணன், 'பலவேறு மொழிகளில் எழுதப்பட்டிருந்தாலும், இந்திய இலக்கியம் என்பது ஒன்றுதான்' (Indian Literature, though written in many languages is one) என்றார். பாரதியின் கோட்பாடும் இதுதான்.

'செப்புமொழி பதினெட்டுடையாள் எனினும்
சிந்தனை ஒன்றுடையாள்' இந்தித்தாய் என்கிறார், பாரதி.

இந்திய இலக்கியம் என்ற கருதுகோளைப் பலரும் விளக்கியுள்ளனர். "இந்திய இலக்கியங்களில் ஒற்றுமை" (The Literary unity of India-Sunit Kumar Chaterji) என்ற சுனித்குமார் சட்டர்ஜியின் நூலும், "இன்றைய இந்திய மொழி இலக்கியங்கள்" (Literature in Modern Indian Languages) என்ற வி.கே.கோகக்கின் நூலும் "இந்திய இலக்கியங்கள் - ஓர் அறிமுகம்" என்ற நூலில் நாகேந்திரா எழுதிய "இந்திய இலக்கியங்களின் ஒற்றுமை" என்ற (The Unity of Indian Literature in 'Introduction to Indian Literature') கட்டுரையும், கிருஷ்ண கிருபாளினி எழுதிய "இன்றை இந்திய இலக்கியங்கள் - ஒரு அகல் பரப்புக்காட்சி" என்ற நூலும் ஆர்.கே.தாஸ் குப்தா எழுதிய "இன்றைய இந்திய இலக்கியங்கள் ஆய்வுச் சிக்கல்கள்", பி.லால் எழுதிய "இந்திய இலக்கியம் என்ற கருத்தமைவு" (The concept of Indian Literature) எனும் நூல், சிசிர் குமார் தாஸ் எழுதிய "இந்திய இலக்கியம் பற்றிய கருத்து" (The Idea of Indian Literature) போன்ற படைப்புகள் குறிப்பிடத்தக்கவை. "இந்திய இலக்கியம்" என்று பெயரிட்ட க.நா.சுவின் நூலும் "தேசிய இலக்கியம்" என்ற அ.ச.ஞானசம்பந்தம் அவர்களின் நூலும் இந்திய இலக்கியம் என்ற கருத்தமைவு பற்றி க.செல்லப்பனின் ஒப்பிலக்கிய நூலில் அமைந்த கட்டுரைகளும் சுட்டத்தக்கன. இங்கெல்லாம் இரண்டு நிலைகளில் இந்திய இலக்கியம் என்ற கருத்தமைவு பேசப்படுகிறது.

1. இந்திய மொழிகள் அனைத்திலும் எழுதப்பட்ட இலக்கியங்களில் செவ்வியற்பாங்கும், பழமையும் கொண்டவற்றின் தொகுப்பே இந்திய இலக்கியம்.

2. இந்தியாவுக்கே உரிய கலை, பண்பாட்டுக் கூறுகள் போன்ற இந்தியத் தன்மையை வெளிப்படுத்தும் இலக்கியங்களே இந்திய இலக்கியம் எனல்.

இவ்விரண்டு அடிப்படைகளும் முக்கியமானவை; ஆதாரமானவை; ஆயின் முழுமையானவை அல்ல; இந்திய இலக்கியங்களின் இந்தியத்தன்மை என்பது இந்தியா முழுவதையும் மனத்திற்கொண்டு காணவேண்டிய அகல் பரப்புக்காட்சி (Pan Indian Panoramic View). இந்தியாவின் அனைத்து மக்களினம், மொழிகள், சமூக, பொருளாதாரப் படிநிலைகள், சமுதாயப் பண்பாட்டுப் படிநிலைகள், புவியில் நிலைகள், இயற்கை நிலைகளும் பருவங்களும் போன்ற பலவற்றையும் பின்புலத்தில் அமைத்துக்கொண்டு இந்திய மொழிகளைத் தனித்தனியே ஆராய்ந்து அவற்றின் பொதுத்தன்மைகளைக் கண்டு அவை எவ்வாறு இந்தியா முழுவதற்கும் ஊடுபொருளாக இருக்கின்றன எனக் காணவேண்டும். பொதுத்தன்மைகளை வரிசைப் படுத்துவதுடன் ஒவ்வொன்றுக்கும் உரிய தனிச் சிறப்புகளையும் வேறுபாடுகளையும் விட்டுவிடாது, அவற்றைச் சரியான இடத்தில் பொருத்திக் காட்டுவதுடன் சில விதி விலகல்களையும், தனி இலக்கிய வேறுபாடுகளையும் எடுத்துக் காட்டுவதும் அவசியம். இவற்றை ஒப்பியல் இந்திய இலக்கியக் கல்வி மூலமே வெளிக் கொணர இயலும்.

இலக்கிய, கல்வி நிறுவனங்களின் நோக்கு நிலைகள்

ஒப்பியல் இந்திய இலக்கியக்கழகம் தன் செயல் பாடுகளுக்கான இரண்டு நோக்கங்களை முன் வைத்தது.

1. பல்வேறு மொழிக் குடும்பங்களுக்கு இடையே உள்ள உறவுகளை, ஒப்பீடுகள் மூலமும், ஒவ்வொரு மொழியிலும் ஏற்படும் இலக்கிய நிகழ்வுகளின் செயல்பாடுகளின் வரலாற்றை வெளிக்கொணர்வதன் மூலமும் கண்டுபடித்தல். இக்கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் 'இந்திய இலக்கியம்' எனும் கல்விப்புலத்தை உருவாக்குதல்.

2. 'இந்திய இலக்கியம்' என்ற கருத்தமைவை முழுமை பெறச் செயதல். அதன் மூலம் நம் பல்கலைக்கழகங்களில் இலக்கியத் துறைகளை நவீனப்படுத்துவது மட்டுமின்றி, நம் இலக்கியங்களின் பெருமையை வெளிக்கொணரும் பெரும் பொறுப்பையும் அது மேற்கொள்ளும். மேலும் காலம்தோறும் இந்திய வாசகரும் காணத்தக்கவாறு எடுத்துக் கூறுவதும் இக்கழகத்தின் நோக்கமாகும். (Comparative Indian Literature Association News Letter Vol. I No:1. p1.)

இவ்வாறு இன்றைய இந்திய இலக்கியங்களை ஒப்பியல் இந்திய இலக்கிய அணுகுமுறைகள் மூலம் காண்பது பல புதிய பரிமாணங்களை அளிப்பதுடன், அழகியல் ரீதியாகவும், வரலாற்று ரீதியாகவும் இந்திய இலக்கியங்கள் ஒன்றை ஒன்று சார்ந்திருப்பதையும், ஒன்றுடன் ஒன்று கொண்ட உறவுகளையும் வெளிக்கொணர்வதாகவும் அமையும் என்பதை உணரத் தலைப்பட்டனர்.

சாகித்திய அக்கடமி நிறுவனம்

'இந்திய இலக்கியம்' என்ற கருத்தமைவைப் போற்றிப் பாதுகாக்கும் சாகித்திய அக்கடமி ஒவ்வோராண்டும் இந்திய மொழிகள் ஒவ்வொன்றிலும் எழுதப்பட்ட சிறந்த இலக்கியங்களைத் தேர்ந்தெடுத்துப், பரிசுகள் வழங்குகிறது. 'இந்திய இலக்கியம்' (Indian Literature) எனும் இதழை இரு மாதங்களுக்கு ஒரு முறை வெளியிடுவதுடன் இந்தியச் சிந்தனைச் சிற்பிகளின் வரிசையையும்,

இன்றைய இந்திய இலக்கியத் தொகுதிகளையும் வெளியடுவதன் மூலம் இந்தியாவிற்குள்ளேயே வெவ்வேறு இந்திய மொழி இலக்கியங்கள் பற்றிய அறிமுகத்திற்கும் பரவலுக்கும் காரணியாகிறது. இவ்வாறான நோக்கு நிலைக்கான அடிக்கல் நாட்டியவர் சர் ஔஷத் முகர்ஜி என்பவரே எனலாம். 1919-இல் கல்கத்தா பல்கலைக்கழகத்தில் 'தற்கால இந்திய இலக்கியத்துறை'யை முதன் முதலாக ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் வங்காளிகள் பிற இந்திய மொழிகளின் இலக்கியப் படைப்புகள் பற்றிய அறிமுகம் பெறவேண்டும், அப்போது தான் இருவழி இலக்கியப் பரிவர்த்தனைகளுக்கு உதவ முடியும். நம் இலக்கிய வளர்ச்சி முழுமைடையும் என்று கூறியதுடன் இந்தியாவில் பரந்து விரிந்த மக்கட்தொகையை இலக்கியம் என்ற ஊடகம் வழி ஒன்றுபடுத்துவது மூலம்தான் உண்மையான தேசிய இலக்கியத்தை வளர்க்கமுடியும்", என்றார்.[19]

1954-இல் நிறவப்பட்ட சாகித்திய அக்கடமி நிறுவனம் டெல்லியில் டாக்டர்.எஸ்.இராதாகிருஷ்ணனின் அருமொழியை அடிப்படையாகக் கொண்டு செயல்பட ஆரம்பித்தது. 1957 முதல் 'இந்திய இலக்கியம்' என்ற இருமாதமொரு இதழ் வெளிவரத் தொடங்கியது. இதற்கும் முன்பே 1939-இல் லக்னோவில் இருந்து New Indian Literature என்ற காலாண்டிதழ் வரத் தொடங்கியிருந்தது. இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கம் சார்பில் இது வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி மையங்களின் நோக்கு நிலைகள்

பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் 'இந்திய இலக்கியம்' பற்றிய அறிமுகமும் ஆய்வும் தேவை என்றும், அதன் மூலம் பன்மையில் ஒருமை காணும் மனப்பாங்கும், வேற்றுமையில் ஒற்றுமை காணும் போக்கும் வளர்ந்து இந்திய ஒருமைப்பாடு வலுப்பெறும் என்றும் 'இந்திய இலக்கியம்' குறித்த பன்னோக்குப்

பார்வையும் பல்கலைக்கழக மாணவர் பெறுவர் எனவும் பல அறிஞர்கள் கருதினர்.

பி.கே.குப்தா (1983), மோதிலால் ஜேத்வாணி (1985) போன்றோர் இந்திய இலக்கியம் பட்டப்படிப்பிலும் முதுகலை அளவிலும் பாடமாக்கப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டனர். இவற்றின் அடிப்படையில் பல்கலைக்கழக மானியக் குழுவும் இதற்கு முக்கியத்துவம் அளித்தது.[20]

தமிழகப் பல்கலைக்கழகங்களிலும் தமிழ் முதுகலை, இளநிலைப்பட்ட ஆய்வுப் படிப்பு ஆகியவற்றில் 'இந்திய இலக்கியம்' ஒரு தாளாகக் கற்பிக்கப்படுகிறது. மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் முதுகலையில் ஒரு தாளாகவும், விருப்பப்பாடமாக எடுத்துக் கொள்ளப்படும் ஒப்பிலக்கியத் தாள்களுள் ஒன்றாகவும், இளநிலை ஆய்வுப்பட்ட மாணவர்களுக்கான பொதுத்தாளாகவும் இந்திய இலக்கியம் 1989ஆம் ஆண்டிலிருந்தே கற்பிக்கப்படுகிறது. "பாரதியார் பல்கலைக்கழகத்தில் இளநிலை ஆய்வுப்பட்ட பாடத்திட்டத்திலும், பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் முதுகலை தமிழ்ப் பாடத்திட்டத்தில் 1989 முதல் இந்திய இலக்கியம் ஒருதாளாகக் கற்பிக்கப்படுகிறது." தமிழ்ப் பல்கலைக்கழகம் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் உதவியுடன் 1990-91ஆம் ஆண்டில் கல்லூரி ஆசிரியர்களுக்கான புத்தொளிப் பயிற்சியை அளித்தது.

இந்திய இலக்கியம் - வரையறைகள்

தேசிய இலக்கியத்திற்கு அடிப்படையாகக் கூறப்படும் நாட்டு எல்லை, மொழி அடிப்படை போன்றவற்றை எடுத்துக்காட்டாகக் கொண்டு, இந்திய இலக்கியம் என்பதை இந்திய நாட்டிற்குள் எழுதப்பட்டவையையும், இந்திய மொழிகளில் எழுதப்பட்டவையை மட்டும் இந்திய இலக்கியம் எனல் சரியன்று. இந்திய தேசிய மொழிகளில் எழுதப்பட்டவற்றை ஒருவாறு இந்திய இலக்கியம் என்று கூறினாலும் இந்திய தேசிய மொழிகளுள் ஒன்றாக இல்லாத, ஆனால் இந்திய மக்களிடையே தொடர்பு மொழியாக இன்றும்

ஏற்கப்படும் ஆங்கிலத்தில் இந்திய படைப்பாளிகளால் எழுதப்படுவனவற்றையும் இந்திய இலக்கியம் எனறே சுட்டுகின்றனர். அதே போல வெளிநாடுகளில் இருந்து இந்திய மொழிகளில் எழுதப்படுவனவற்றை அந்த அந்த நாட்டு இலக்கியமாகக் கொள்வதா அன்றி இந்திய இலக்கியம் என்று கொள்வதா என்ற சிக்கல் எழுகிறது. எனவே இந்திய இலக்கியம் என்பது எந்த நாட்டில் இருந்து, எந்த மொழியில் எழுதப்பட்டாலும் அதில் இந்தியத் தன்மைகள் பொருத்தமுற அமைந்திருப்பின் அதை இந்திய இலக்கியம் எனக் கருதலாம்.

சண்முக செல்வகணபதி தரும் வரையறை

இந்திய மக்களின் தனிமனித, சமுதாய வாழ்வியல் முறைகள், சமய ஈடுபாடு, வழிபாட்டு முறைகள், சடங்குகள், நம்பிக்கைகள், வாழ்வு பற்றிய இலட்சிய நோக்கு, பூமி, நதி, செல்வம், கல்வி, கலை, வெற்றி, மொழி போன்ற அனைத்து நிலைகளையும் பெண்மையாகக் கருதிப் போற்றி வழிபடும் முறை, பெண்களைத் தாயாகவும் தாய்மையை இறைமையாகவும் போற்றும் முறை (இறைமையில் தாய்மையை, இறை அருளைத் தாய்மையின் இயல்பாகக் காண்பது கூட தாய்மையைக் கருணையின் வடிவமாகக் காண்பதன் வெளிப்பாடுதான் எனலாம்) மாதா, பிதா, குரு, தெய்வத்தைப் போற்றல், அறம் பொருள், இன்பம், வீடு என்பனவற்றை வாழ்வியல் கொள்கைகளாக ஏற்றல், பெருமையும் உரனும் ஆணுக்கு அழகாகவும், அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு நிலைகளைப் பெண்மைக்கு உரியனவாகவும் ஏற்றிப் போற்றும் பண்பாட்டு மரபுகள் இந்தியத் தன்மைகளாகும். இவை பற்றி உரைக்கும் இலக்கியங்களை, 'இந்திய இலக்கியம்' என்று உரைப்பது சாலப் பொருத்தமுடையதாக விளங்கும் என்கிறார் சண்முக செல்வ கணபதி.[21]

மதியழகன் கருத்து

ஒப்பிலக்கிய அறிஞர்கள் தேசிய இலக்கியத்திற்கு அடிப்படையாகக் கூறும் புவி அமைப்பு (Geographical System), அரசியல் அமைப்பு (Political System), மொழி (Language) ஆகியனவற்றையும் தாண்டி இலக்கிய வடிவங்களை அடிப்படையாகக் கொள்ளலாமா என்ற வினாவை எழுப்பும் மு.மதியழகன்,[22] இந்திய இலக்கிய வகைகளுள் தனிப்பாடல்களும் காப்பியங்களும் உலகந்தழுவிய இலக்கிய உருவங்கள், இன்றைய இலக்கிய வடிவங்களான நாவல், சிறுகதை, புதுக்கவிதை போன்றனவும் எல்லா மொழிகளிலும் காணப்படுபவை, இலக்கிய வடிவங்களில் ஆத்திச்சூடி, உலா, தூது போன்றவை பிற உலக மொழிகளில் இல்லாதவை. எனவே இவற்றை "இலக்கிய வகையும் வடிவமும் இந்திய இலக்கிய வரையறைக்கு அடிப்படையாகக் கொள்ளலாம்'' என்ற கருத்துக்கு எடுத்துக்காட்டுகளாகக் கொள்ளலாமே தவிர இது மட்டும் முழுமையான அடிப்படை ஆக முடியாது என்கிறார்.

இந்திய மொழிகளில் அமைந்த இலக்கியப் படைப்புகளை ஒட்டு மொத்தமாகக் கணக்கில் எடுத்துக்கொண்டு, அவற்றில் பொதுவாகக் காணப்படும் இலக்கியக்கூறுகளை, இந்திய இலக்கியம் என்பதற்கு அடிப்படையாகக் கொள்ளலாம். அவ்வாறு இலக்கியக் கூறுகளின் பொதுத்தன்மையைக் காணும்போது பாடுபொருள், அதை ஆசிரியர் அணுகும் முறை, அவரது அந்த அணுகு முறைக்கு அவர் சார்ந்த வாழ்க்கைத் தத்துவம், அவற்றை வெளிப்படுத்த அவ்வாசிரியர் மேற்கொண்ட இலக்கிய உத்திகள் ஆகியவற்றையும் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும் எனக் கூறும் மு.மதியழகன் இத்தகு கூறுகளை இருபெரும் பிரிவுகளுள் அடிக்கிக் காணலாம் என்கிறார். அவை,

1. குடும்பச் சூழல்களும் அவற்றின் வழி வெளிப்படும் சிக்கல்களும்,

2. பழைய புராண, இதிகாசச் செய்திகள் இடம்பெறுதல்.

பழைய புராண மரபுகளை அப்படியே ஏற்றுக்கொண்டு வெளிப்படுத்துவனவும், புராண மரபுக் கருத்துகளோடு முரண்பட்டுப் புதிய நோக்கில் வரைவும் என இருநோக்கு நிலையில் இக்கருத்தை அணுகமுடியும்; நவீன இலக்கியத்திலேயே புராண இதிகாசச் செய்திகள் மீட்டுருவாக்கம் செய்யப்படுகின்றன எனக் கூறும் இவர், அகலிகையின் சாபவிமோசனம், பாஞ்சாலியின் வெவ்வேறு படிமங்கள் போன்றவற்றை எடுத்துக்காட்டாகத் தருகிறார்.

இவர் எடுத்துரைக்கும் பிறதொரு அடிப்படையாக பக்தி இலக்கிய உத்திகளையும் அவற்றுள்ளும் குறிப்பாக நாயக நாயகி பாவத்தையும் சுட்டும் இவர் நாயக நாயகி பாவம் இந்திய மரபிற்கே உரியது என்கிறார். ஆயின் உலக சமயங்கள் பலவற்றிலும் நாயக நாயகி பாவ அணுகுமுறை உண்டு.

பா.ஆனந்தகுமார் வரிசைப்படுத்தும் கருத்துகள்

இந்திய இலக்கியம் - வரையறையும் அணுகு முறைகளும் எனும் கட்டுரையில்[23] இந்திய இலக்கியத்திற்கு இந்தித் தன்மையை அடிப்படையாகக் கொள்ளும் கருத்தை ஏற்றுக் கொண்டு இந்தியத் தன்மை என்பது எதை/எவற்றைச் சுட்டுகிறது என விரிவாக விளக்கும் பொழுது இக்கருத்தமைவை எடுத்துரைத்த பல அறிஞர்களின் கருத்துகளைத் தொகுத்துத் தருகிறார்.

இந்தியத் தன்மையைப் 'பாரத தருமம்' எனக் குறிப்பிடும் சுனித்குமார் சட்டர்ஜியைப் பின்பற்றும் நாகேந்திரா, இந்தியத் தன்மை என்பது சில நிலையான வாழ்க்கை மதிப்புகளின் ஒன்றிணைப்பு, அது காலம் தோறும் தன் அடையாளத்தைத் தக்க வைத்துக் கொள்கிறது என்று விளக்கம் தருவதுடன், இந்தியத் தன்மையின் சில அடிப்படைப் பண்புகளை வரிசைப்படுத்துவதையும் எடுத்துக்காட்டுகிறார் ஆனந்தகுமார்.[24]

அவையாவன :

1. சில உயர்ந்த ஆன்மீக ஆற்றலின் மீது நம்பிக்கை;

2. வாழ்க்கையின் மீதான நம்பிக்கை;

3. ஒற்றுமை மனப்பான்மை;

4. சமய அடிப்படையிலான மனித நேயம்;

5. சகிப்புத்தன்மை;

இரண்டாவதாக ஏ.என்.மூத்திராவ் என்ற கன்னட எழுத்தாளரின் விளக்கத்தை முன் வைக்கிறார் ஆனந்தகுமார். "கர்மா கொள்கை, தர்மத்தின் மீதான அழுத்தம், தெய்வங்களோடு கொண்டுள்ள நெருக்கம் என்ற மூன்றும் தான் நமது இந்திய இலக்கியங்களுக்கு இந்தியத்தன்மை என்ற முகவரியை வழங்க உதவுகிறது'' என்றும், புகழ்வாய்ந்த இந்தியத் தொன்மக்கள், வேதங்கள், உபநிடதங்கள், காப்பியங்கள், புராணங்கள், நமது குடும்ப அமைப்பு, சடங்குகள், திருவிழாக்கள், புனிதமாக நாம் கருதும் மலைகள், ஆறுகள் இவை எல்லாம் சேர்ந்து இந்தியத் தன்மை என்ற தொடரை உருவாக்கப் பங்களிப்பைச் செய்துள்ளன", என்றும் மூர்த்திராவ் கூறுகிறார்.[25]

இவ்விரு விளக்கங்களையும் காணும்போது இந்தியத் தன்மை என்பது இந்தியப் பண்பாட்டு மரபில் பிடிப்பும், இம்மரபின் வழி வந்த இலக்கியம், சமூகப் பண்பாடு, நம்பிக்கைகள், இறைபற்றிய நோக்கு நிலைகள், வாழ்க்கைத்தத்துவங்கள் போன்றவற்றை உள்ளடக்கியவற்றை இந்தியத் தன்மை எனக் கொண்டமை புரிகிறது.

அடுத்து தகழி சிவசங்கரம்பிள்ளை இந்நோக்கு நிலையிலிருந்து மாறுபட்ட இந்தியத் தன்மையைச் சுட்டுவதை

எடுத்துரைக்கிறார் பா.ஆனந்தகுமார். 'உண்மையான இந்தியா என்பது கிராமிய இந்தியாவே. கிராமவாசிகளின் அறியாமையும் வறுமையும் நம் இந்தியத்தன்மை என்பதை எவ்வளவு உயர்வாக இருக்கிறது என்பதை விளக்குகிறது' எனக்கூறும் தகழி சுட்டும் இந்தியத் தன்மையின் பாவம் நிறைந்த பகுதிகளையும் எடுத்துரைக்கிறார் அவர். மிக இளவயதுடைய பெண் வயது முதிர்ந்த கிழவனை மணக்கும் கொடுமை, காதலைப் பிரிக்கும் சாதிக் கொடுமை, இந்திய விவசாயிகளின் அல்லல்கள் போன்றவை இந்திய மொழி அனைத்திலும் காணப்படக்கூடிய கூறுகள், இவற்றின் அடிப்படையில் தகழி இந்தியத் தன்மையை ஒரு கிராமவாசியின் நிலையிலிருந்து காண்கிறார் எனவும் தகழியைப் பொறுத்தவரை இந்தியத் தன்மை என்பது இந்திய கிராமங்களில் வாழும் விவசாயிகளின் சமூகப் பண்பாட்டு வாழ்க்கையே எனவும் முடிவு கூறுகிறார் ஆனந்தகுமார்.

இங்கு எடுத்துக்காட்டப்பட்ட அறிஞர்களின் கருத்துகளின் அடிப்படையில் இந்திய இலக்கியத்திற்கு அடிப்படையான இந்தியத் தன்மையைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

1. பாரத தருமம்;

2. பழைய புராண மரபுக் கூறுகள் இடம்பெறுதல்;

3. அ. மரபினை ஏற்று அப்படியே வெளிப்படுத்துதல்;

   ஆ. புராண மரபுகளை இன்றைய சூழலுக்கு ஏற்ப, இன்றைய கண்ணோட்டத்தில் மாற்றி முரண்பட்டு அமைத்தல்;

   என இரு நிலைகளில் புராண மரபுக் கூறுகள் இந்திய இலக்கியங்களில் இடம் பெறுவதையும் ஏற்றுக் கொள்ளலாம்.

3. இந்திய மக்களின் பண்பாட்டு மரபில் வந்த வாழ்வியல் விழுமங்கள், வாழ்க்கை பற்றிய கோட்பாடுகள் போன்றவற்றை எடுத்துரைத்தல்.

4. சமூக, நம்பிக்கைகள், சடங்குகள் புனிதமாகப் போற்றக் கூடிய மொழி, ஆறு, மலை, இடங்கள் ஆகியன போற்றுதலோடு இடம் பெறுதல்.

5. தாய், தந்தை, குரு, தெய்வம் ஆகியோரைப் போற்றுதல்.

6. மொழி, நாடு, ஆறுகள், மண், செல்வம், வெற்றி போன்ற நிலைகளைப் பெண்மையாகக் கருதிப் போற்றி வழிபடும் முறை.

7. பெண்களைத் தாயாகவும் தாய்மையை இறைமையாகவும் போற்றுதல்

8. அறம், பொருள், இன்பம், வீடு நான்கையும் வாழ்வியல் கொள்கைகளாக ஏற்றல்.

9. குடும்ப உறவுகள், குடும்பச் சிக்கல்கள் தனிமனித, சமுதாய வாழ்வியல் முறைகள் பற்றிய செய்திகளைக் கொண்டிருத்தல்.

10. பக்தி, வழிபாட்டு நெறிகள், சமய நம்பிக்கைகள் ஆகியவற்றை வெளிப்படுத்துதல், சமய அடிப்படையிலான மனிதநேயம், சகிப்புத்தன்மை போன்றவற்றைக் கொண்டிருத்தல்.

11. வினைக் கோட்பாட்டையும், அறத்தின் மீது ஆழ்ந்த நம்பிக்கையும், இறைவனுடன் மனிதன் கொள்ளும் ஆண்டான்-அடிமை உறவு, மகமை உறவு, தோழமை உறவு, காதலன்-காதலி உறவு போன்றனவற்றையும் கொண்டிருப்பதே இந்தியத்தன்மை (ஏ.என். மூர்த்திராவ்).

12. இந்திய கிராமிய வாழ்வைப் படம் பிடிப்பது.

13. கிராமப்புற விவசாயிகளின் பிரச்சனைகளை, அவர்களது போராட்டங்களை, அறியாமையை, வறுமையை எடுத்துரைப்பது.

14. பொருந்தா மணம், விதவைகளின் வாழ்க்கைச் சிக்கல்கள், விதவை மறுமணம் பற்றிய கோட்பாட்டில் மாறுதலும் மன உளைச்சலும் போன்றவற்றைப் பாடுபொருளாகக் கொள்ளல்.

15. சாதிப்பாகுபாடு, சாதிக்கொடுமை, காதலர் பிரிவுக்குச் சாதியே காரணமாதல் போன்றன இந்தியா முழுவதும் காணப்படக் கூடிய பாடுபொருளாகும்.

16. இந்திய இலக்கிய மரபில் மட்டும் காணப்படக்கூடிய இலக்கிய வகைகளாக அமைதல். (எ.டு.) சதகம், உலா, தூது, தன்னுணர்வுப் பாடல்களில் சுட்டி ஒருவர் பெயர் கூறப்படாமை, வாய்மொழிப்பாடல்களில் சிறப்பாகச் சுட்டக்கூடிய தாலாட்டு, ஒப்பாரி போன்றவற்றையும் கருத்தில் கொள்ளலாம். விக்கிரமாதித்தன் கதைகள், தெனாலி இராமன், பீர்பல் கதைகள். முன்பு குறிப்பிடப்பட்ட பேராசிரியர் சண்முகம் பிள்ளையவர்களின் கருத்தையும் இங்கு இணைத்துக் காணலாம்.

இந்திய இலக்கியம் என்பது ஒன்றுதானா?

இந்திய இலக்கியம் என்பது ஒன்றுதான் என்ற கருத்தமைவை வினாவிற்கு உள்ளக்கியவர்களும் உண்டு. டாக்டர். நிகரஞ்சன் ராய் (Dr. Niharanjan Roy) இது பற்றிக் கேள்வி எழுப்பும்போது, இலக்கியம் முழுவதுமே மொழி சம்பந்தமானது. மொழியோ ஒரு பண்பாட்டுக்கூறு; அந்தந்த மொழிச்சூழலும் பண்பாட்டுச் சூழலுமே அம்மாநில இலக்கியத்தை உருவாக்குகின்றன, கட்டுப்படுத்துகின்றன. ஒவ்வொரு காலகட்டத்திலும் அந்தந்த நிலத்தில் நிலவிய சமுதாய-

வரலாற்றுத் தாக்கங்களையும் அவை பெற்றிருக்கும். இவை இப்படி இருப்பதால் ஒரு குறிப்பிட்ட மொழி இலக்கியங்கள் அவற்றிக்கே உரிய இலக்கிய வகை, வடிவம், நடைப்பாங்கு ஆகியவற்றில் தனிப்பண்பு நலன்களைப் பெற்றிருக்கும், அதே போல அந்த மொழிக்கும் சூழலுக்கும் உரிய படிமங்கள், குறியீடுகள், மரபுத் தொடர்கள், இரட்டைக் கிளவிகள் போன்றனவற்றைக் கொண்டிருக்கும். சில நேரத்தில் பாடு பொருளும் அடிக்கருத்தும் கூட அந்த நிலத்திற்கு உரியதாக அமையலாம். அப்படி இருக்கும்போது இந்திய இலக்கியம் என்பது எப்படி ஒருமையுடையதாக இருக்கமுடியும் என்று வினவுகிறார்.[26] ஆனால் இத்தகு தனிச்சிறப்பு வாய்ந்த குணங்களைப் பெற்றிருப்பதாலேயே அது ஒரு மொழி இலக்கியமாகிறது. இம்மொழியின் சிறப்புத் தன்மைகளுடன் பொதுவான இலக்கியத்திற்கு உரிய சில பண்புகளை, பிற இந்திய மொழி இலக்கியங்க்ளில் காணப்படும் பண்புகளை அது பெற்றிருக்குமாயின் அது தன் மாநில எல்லையையும் தாண்டி இந்திய இலக்கியமாகிறது.

ஜோஷியின் கருத்து

தத்தம் மொழி இலக்கியப் படைப்புகள் வழித் தம் மொழி வளர்ச்சியைத் தூண்டும், வளர்க்கும் படைப்பாளிகள், நம் நாட்டு இலக்கியங்கள் பல வற்றிலும் காணக் கூடிய பொதுமைப் பண்புகள், ஒரே விதமான வரலாற்றுப் பின்புலங்கள், பொதுவான தேவைகள், பொதுவான விருப்பங்கள் ஆகியனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒன்றாக இணைக்கப்பட்ட இலக்கிய ஒருமையை உருவாக்குகிறோம் என்ற எண்ணமே இன்றி இருந்த சூழலில் பாரதிதான் மிகச் சரியாக இவ்விலக்கிய ஒருமையை, இந்திய இலக்கிய ஒருமையைச் சுட்டிக் காட்டினர் என்கிறார், ஜோஷி.[27] 'செப்புமொழி பதினெட்டுடையாள் எனில் சிந்தனை ஒன்றுடையாள்' என்று பாடியமைக்குக் காரணம் இந்தியா முழுவதும் உள்ள தேசியப் பண்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளுக்கெல்லாம் நேரில் சென்று அவர் பெற்ற அனுபவங்களே.

வெவ்வெறு மொழியியல் கூறுகள் என்ற பல்வேறு இசைக் கருவிகள் இசைக்கப்பட்டாலும், அவையாவும் இசைமையுடன் ஒத்துப்போகும் ஒருவித இலக்கிய வகை மாதிரி (Literary Pattern) என்ற இசை நிகழ்ச்சியில் பங்கேற்பவை என்ற கருத்தை எடுத்துரைத்துள்ளார்.

இந்திய இலக்கியமும் காரண - காரியக் கோட்பாடும்

மொழிச் சூழல் தவிர சமுதாயச் சூழல், பண்பட்டுச் சூழல், பொருளாதாரச் சூழல் போன்றனவும் இலக்கிய உருவாக்கத்தில் பங்கு கொள்கின்றன. அரசியல் பொருளாதார வடிவ மாதிரிகள் (Pattern) சமூக நிறுவனங்களான குடும்பம், கல்வி, சமயம் போன்றன, வாழ்வியல் விழுமியங்கள் பற்றிய கருத்தமைவுகளின் தொடர்ச்சி-வளர்ச்சி-மாற்றம், கலை, கவிதை பற்றிய கோட்பாடுகள், மனித மேம்பாட்டுக் குறிக்கோள்கள் போன்றன பலவும் படைப்பைப் பாதிப்பன. இந்தியாவைப் பொறுத்தவரை சமூக வரலாற்றுச் சக்திகள் இந்தியா முழுவதும் ஒரே விதமான பாதிப்பை ஏற்படுத்தியமையால் இந்திய மொழிகள் பலவும் இப்பாதிப்பை ஒரே விதமாகவே பகிர்ந்து கொண்டுள்ளன. எனவே இவற்றில் இலக்கியங்களும் ஒரே விதமான விளைவுகளின் வெளிப்பாடுகளே.

இங்கு பிரெஞ்சு ஒப்பிலக்கிய அறிஞர்கள் எடுத்துரைத்த காரண-காரியக் கோட்பாடு தரும் விளக்கம் மிகப் பொருத்தமுடையதாகிறது. "காரணங்களும் சூழல்களும் ஒன்றாக அமையும்போது, அவற்றினால் உண்டாகும் விளைவும் ஒரே மாதிரியில் அமையும். அல்லது சமமான விளைவாக இருக்கும்" என்பது காரண-காரியக் கோட்பாடு. இதன்படி இந்திய மொழிகள் பலவும் ஒரே மாதிரியான பொருளாதார, அரசியல், பண்பாட்டுச் சூழல்களைக் கொண்டிருந்ததால், கொண்டிருப்பதால் அவற்றில் ஒத்த தன்மைகளை உடைய இலக்கியங்கள் தோன்றுகின்றன. எனவே இந்திய இலக்கியங்களில் அழகியல் அடிப்படையிலும் ஒப்பிலக்கிய அடிப்படையில் காணத்தக்க ஒத்த கூறுகள் காணப்படுகின்றன.

ஒரே மாதிரியான தனித்தனி இதழ்களைக் கொண்ட அடுக்கு மலரின் அழகுக்கு அத்தனித்தனி இதழ்கள் ஒழுங்குற அமைந்து அழகு சேர்ப்பதுபோல இந்திய இலக்கியத்திற்குத் தனித்தனி மொழி இலக்கியங்களின் ஒப்பிடத் தகுந்த கூறுகள் இணைந்து அழகு சேர்க்கின்றன. இந்திய மொழிகளில் ஒன்றிரண்டிலாவது இத்தகு பொதுமைக் கூறுகள் அமைந்திருப்பதைக் காணலாம்.

"இந்திய இலக்கியங்கள் அனைத்தையும் அடிக்கருத்துப் பகுப்பாய்வு எனும் சல்லடை கொண்டு சலித்தெடுத்தால் 'இந்திய குணநலன்களை' (Indianness) அடையாளம் காணமுடியும்", என்பார் நபனித தேவ் சென்.[28]

இந்திய இலக்கியக் கல்வியின் பயன்

கடந்த 4000 ஆண்டுகட்கு மேலாகச் சிந்தனை வெளிப் பாடுகள், கருத்து வளர்ச்சிகள் கொண்ட இலக்கியப் பாரம்பரியத்தைக் கொண்டது இந்தியா. இந்திய இலக்கியங்களில் காணப்படும் பொதுத் தன்மைகளை, ஒத்த தன்மைகளை எடுத்துக்காட்டி, பிற மொழிகளிலும் இவ்வாறான ஒற்றுமைகள் உள்ளன என ஒவ்வொரு இந்திய மொழி மாணவனுக்கும் அறிமுகப்படுத்தி., அதன் மூலம் ஒரு ஒத்துணர்வை நெருக்கமான மன உணர்வை இந்திய இலக்கியம் என்ற கருத்தமைவு உருவாக்கும். இக்கல்வி இந்திய இலக்கியம் என்றால் என்ன என்று விளக்கம் தருவதாக மட்டும் அமையாது, இந்திய மொழிகளின் இலக்கியங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய இந்திய இலக்கிய வரலாறு எழுதவும் பயன்படும். ஒவ்வொரு மொழியிலும் கால வரிசைப்படி எழுந்த இலக்கியங்களின் பெயர்ப் பட்டியலாக மட்டுமே அந்த இலக்கிய வரலாறு அமையாது. இந்திய இலக்கியங்களுக்கு இடையேயான உறவுகள், உறவுகளுக்கான காலச் சூழல், உறவுகளை எற்படுத்திய காரணிகள், அவற்றிடையே காணப்படும் பொதுவான அனுபவ வெளிப்பாடுகள், கருத்தமைவுகளின் வளர்ச்சியும் வேறுபாடுகளும் மாற்றங்களும் போன்ற பல்வேறு கூறுகளையும் கொண்டதான மிகப் பெரிய

இலக்கிய வரலாறாக அது அமையும். இலக்கிய ஒருமைப்பாட்டின் வழி நாம் இந்தியர் என்ற மன ஒருமைப்பாடு வளர்த்து புதிய தலை முறையிலாவது மொழிவழி, சாதி வழி, நில எல்லைகளின் வழியிலான பிரிவு மனப்பான்மை நீக்கப்படும். இந்திய மக்களின் ஒற்றுமைக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

'ஒரு தேசிய குணம் என்பது (இந்திய இலக்கியங்களில் 'இந்தியத் தன்மை' என்று கூறுவது போல) உண்மையில் அறியாமையின் பாற்படும்' என்ற மாக்ஸ் வெப்பர் கூற்றை (Max weber in The Protestant Ethics and The Spirit of Capitalism) எடுத்துக்காட்டும் எஸ்.எஸ். பிராவர், வெப்பர் சில குறிக்கோள் நிலையிலான தேசிய குணங்களை வகைப் பிரித்துக் காட்டியுள்ளதையும் சுட்டிக்காட்டுகிறார்.[29]

'மார்க்சியமும் தேசியம் என்ற வினாவும்' - என்ற கட்டுரையில் ஒரு தேசத்தின் அனைத்து மக்களும் ஒரே மொழியைப் பேசுபவர்களாக இல்லாத போது தேசிய சமூக உறவு நிலை என்ற கருத்தமைவு அர்த்தமற்றதாகி விடும், என்கிறார் ஜே.வி.ஸ்டாலின்.[30] இவரது கருத்துப்படி மொழி அடிப்படையில் ஒரே மொழி பேசும் மக்களையே ஒரு நாடு கொண்டிருக்க் வேண்டுமெனில் இந்தியா, ஐக்கிய அரபு குடியரசு, சோவியத்ரஷ்யா போன்ற நாடுகள் மிகச் சிறுசிறு நாடுகளாகப் பிரிய வேண்டி வரும்.

இந்திய இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டதே ஒப்பியல் இந்திய இலக்கியம் என்றாலும் கூட, இந்திய இலக்கியம் என்பது இந்திய மொழிகளில் எழுதப்பட்ட இலக்கியங்களின் ஐக்கியமுடைய அமைப்பாக இருக்க இயலாது. தேசம் முழுவதும் பிரதிபலிக்கும் ஐக்கிய அமைப்பாக இருக்க முடியாது. அதே போன்று இந்திய மொழி இலக்கியங்கள் அனைத்தும் ஒரே மொழியியல் மூலத்திலிருந்து கிளைத்தவை என்று கூற முடியாது. ஏனெனில் இலக்கியம் என்பது மொழி என்பதை காட்டிலும் மேலும் ஒரு படி முன்னேறியது. அதனால் பலமொழி பேசும் மக்களைக் கொண்ட இந்தியாவில் ஒவ்வொரு மொழி இலக்கியமும்

தனித்தனியான இலக்கியமே. ஆனால் இத்தனிதனி இலக்கியங்கள் யாவும் ஒரு பொதுவான வரலாற்றுப் பின்னணியில் இணைக்கப்பட்டவை. இந்த பிணைப்பைப் புரிந்து கொண்டுதான் இந்திய மொழி இலக்கியம் எதையும் அணுக முடியும்; இல்லையெனில் அந்த குறிப்பிட்ட மொழி இலக்கியத்தை முழுமையாகப் புரிந்து கொண்டவராக மாட்டோம், என்கிறார் அமியாதேவ்.[31]

மேலை இலக்கியங்களைப் பொருத்தவரை இவ்வாறான இலக்கியத் தொடர்புகளைக் கண்டு தெளிவது எளிது. ஏனெனில் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஆங்காங்கே இவ்வாறான தொடர்புகள் விட்டு விட்டு ஏற்பட்டிருக்கும். அதனால் இரு மொழிகளுக்கிடையேயான உறவு கொஞ்சம் கொஞ்சமாகப் பின்னப்பட்டிருக்கும். அதனால் ஒப்பிலக்கிய அடிப்படையிலான இலக்கிய வரலாறு எழுதப்பட்டால், ஒரே விதமான இரண்டு அல்லது மூன்று நிறங்கள் மாறிமாறி வரும் பின்னல் போல, இரண்டு அல்லது மூன்று மொழிகளின் இலக்கிய பிணைப்பைக் காணமுடியும். ஆனால் பல மொழிகள் வழங்கும் இந்தியாவில் பல்வேறு நிறங்கள் கொண்ட இடைத்தொடர்புகள் கொண்ட பின்னலாக அது இருக்கும் எனக் கூறும் அமியாதேவ் பொதுவாக இந்தியாவில் ஒவ்வொரு மொழியின் வரலாறும் ‘அம்மொழி இலக்கியம் + இந்திய நாட்டிற்கே உரிய பொதுவான பண்பு நலன்” என்ற அமைப்பிலேயே இருக்க முடியும் என்றும் அதனை எடுத்துக்காட்டாக வங்காளம் + ; தமிழ் + ; என்று குறிப்பிடலாம் என்றும் கூறுகிறார்.[32]

எனவே நம் நாட்டில் ஒரு மொழி இலக்கிய வரலாறு என்பது முற்றிலுமாக பிறமொழிகளிலிருந்து தனித்து காணதக்கதாக இருக்க இயலாது. இந்திய இலக்கியங்களில் வரலாற்று பிணைப்புகள் ஒருங்கிணைப்பதால் இவற்றில் பெரும்பாலும் இணைநிலைகளைக் காணமுடியும்.

'இந்திய இலக்கியத்தின் கட்டமைப்பே ஒப்பியல் சார்ந்தது எனவும் அதன் இலக்கிய அமைப்புச்சட்டமும் ஒப்பிடத்தக்கவையாகவும் பனுவல்களும் பனுவல்சூழல்களும் (text & Context) இந்தியத் தன்மை கொண்டும் இலங்குகின்றன எனவும் கூறுகிறார் சிசிர் குமார் தாஸ்[33] (The very structure of Indian Literature is Comparative; its frame work is Comparative and its texts & Contexts are Indian)

'ஒப்பியல் இந்திய இலக்கியம்' என்பது உலக ஒப்பிலக்கியத்தின் ஒரு கிளையாகக் கருதப்படுகிறதா? அல்லது அது தனக்கென ஒரு அடிப்படைக் கோட்பாட்டைக் கொண்டிருத்தல் அவசியமா என்ற வினாவை எழுப்புகிறார் அமியா தேவ்[34]. இந்தியாவில் ஒப்பிலக்கியம் பிரெஞ்சுக் கோட்பாட்டின் அடிப்படையில் இந்திய இலக்கியங்களின் வரலாற்றை, (இலக்கிய வகைகள் தோற்றம் வளர்ச்சி, பரிணாமம், பரிணாமத்திற்கானக் காரணம், இலக்கியப்பரிமாற்றங்கள், கொண்டனவும் கொடுத்தனவும் என்ற நிலைப்பாடுகளைக் கொண்டு ஆராய்வதா அல்லது அமெரிக்க கோட்பாடுகளின் அடிப்படையில் அழகியல் அணுகு முறையை ஏற்பதா என்ற வினாவும் எழுகிறது. இவ்விரண்டு நிலைப்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு எழுவதே 'ஒப்பியல் இந்திய இலக்கியம்'

இந்திய மொழிகளில் எழுந்த இலக்கியங்களுக் இடையே உள்ள உறவுகளையும் அவை ஒன்றுடன் ஒன்று கொண்ட தொடர்புகள் மூலம் கொண்டனவும் கொடுத்தவும் (Adān Pradān) எவை எவை என ஆராய்வதும் ஒப்பியல் இந்திய இலக்கியக் கல்வியாகும். இவ்வாறாக ஆய்வுப்போக்கில் இரு இந்திய மொழி படைப்புகளில், இரு இந்திய படைப்பாசிரியர்களிடையே, உள்ள ஒரே மாதிரியான தன்மைகளை, இணைநிலைகளைக் காண்பதும் இதற்குள் அடங்கும்.

மற்றொரு நோக்கு நிலையில் ஒரே ஒரு இந்திய மொழி இலக்கியத்தின் (தமிழ் அல்லது மலையாளம், இந்தி அல்லது

வங்காளம்) வரலாற்றை., அதன் பல்வேறு இலக்கிய வகைகளின் அமைப்புகளில் காணப்படும் நுண்ணிய வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டு நுழைபுல ஆற்றலுடன் பகுத்துக் காண்பதும் ஒப்பியல் இந்திய இலக்கியக் கல்வியின் பாற்படும்.

ஒரு மொழியிலேயே உள்ள இருவேறு இலக்கியப் படைப்புகளில் பேசப்படும் ஒரு குறிப்பிட்ட அடிக்கருத்தை, உணர்ச்சியை, பாத்திரப்படைப்பின் ஆளுமையை ஒப்பீடு செய்து கண்டு, 'பிறகு அவ்வுணர்ச்சிக்கான சூழலுடன் இணைத்துக் காட்டும் போது, அவ்வாய்வு அக்குறிப்பிட்ட இலக்கிய வகையின் வடிவமைப்பை முழுமையாக ஆராய்ந்ததாகும். இவ்வாறு ஒரு இலக்கிய வகையின் பாடுபொருளுடன் அதன் வடிவத்தையும் இணைத்துக் காண்பதுடன் சூழலுடன் ஒருங்கு வைத்துக் காணும் போது தான் இவ்விலக்கிய வகையின் உருவாக்கம், வளர்ச்சி போன்றவை தெளிவாகும். இத்தெளிவை வெளிக் கொணர்வதாகவே இலக்கிய வரலாறு இருக்க வேண்டும்.

ஒரு இந்திய மொழி இலக்கியத்தின் வரலாற்றை எழுதும் போது, அதன் வளர்ச்சிப் படிநிலைகளில் அது பிற இந்திய மொழிகளில் இருந்து பெற்ற ஏற்பும் தாக்கமும், பிறநாட்டு இலக்கியங்களில் இருந்து பெற்ற தாக்கம் ஆகியவற்றை எடுத்துக் காட்டுவதுடன் இத்தாக்கங்களின் விளைவினால் ஏற்பட்ட இலக்கிய மாறுதல்களையும் சுட்டிச் செல்வது அவசியம் என்கிறார் அமியாதேவ்[35].

ஏற்பு, செல்வாக்கு தாக்கம், விளைவு, தொடர் வாழ்வு போன்றவற்றைப் பேசும்போது பெரும்பாலும் பெறப்பட்டவை யாவை? என்றே எடுத்துக் காட்டப்படுகின்றன. கொடுக்கப்பட்டவை எவையெவை என எண்ணிப் பார்ப்பதில்லை. இதற்கு முக்கிய காரணம் இருமொழிகளில் ஆழ்ந்த புலமையற்ற தன்மையே எனலாம். சில நேரங்களில் வெளிப்படையாக மேலோட்டமாகக் கண்டுபிடிக்க இயலாதவற்றை, இலக்கிய நீரோட்டத்தில் வந்து கலந்து பிரிக்க முடியாது ஒன்றியவற்றை, எடுத்துக்காட்டுவது

கடினமான செயலே. இவற்றை உய்த்துணர முடியுமே தவிர பகுத்துணர இயலாது.

ஆனால் உய்த்துணர்ந்து பிரித்துக் காட்டும்போது, ஒரு குறிப்பிட்ட ஆசிரியரின் தாக்கம் பற்றிக் கூறும் போது துண்டு துண்டாக எடுத்துக்காட்டப்படுகிறது. அப்படி இல்லாது, தாக்கத்தை ஒரு முழுமையான கண்ணோட்டத்துடன் காணவேண்டும். எடுத்துக்காட்டாக பாரதியார் பக்கிம் சந்திரரின் 'வந்தே மாதரம்' பாடலைத் தமிழில் மொழிபெயர்த்தச் சூழலைத் தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதும் ஆசிரியர் சுட்டிக் காட்டும்போது, பாரதியின் பிற நூல்களையும் நன்கு நுணுகிக் கண்டபிறகே எடுத்துக் கூறவேண்டும். மேலும் அவர் அரவிந்தர், தாகூர் போன்ற வங்கக் கவிஞர்களின் படைப்புகளைப் பற்றிப் பெற்ற அறிமுகம், அரவிந்தரின் தொடர்பு, காங்கிரஸ் கட்சியின் தொடர்பினால் கல்கத்தா சென்றது, அதன் விளைவாக 'சுதந்திரம்' என்ற கருத்தமைவின் வீச்சுகளை விரிவு படுத்திக் கொண்டமை, அடிமைப்பட்ட பாரதத் தாயாக, பழைய தொன்மைப் பாத்திரமான பாஞ்சாலியை மாற்றுருவாக்கிய தன்மை போன்ற பல செய்திகளைக் கண்டு தான் கூறவேண்டும். அல்லது அவருடைய சம காலக் கவிஞர்களின் பாடல்களில் 'இந்தியத் தாய்' படிமம் எவ்வாறு இருந்தது என ஒப்பிட்டுக் காண வேண்டும். இவ்வாறு காண்பதே தாக்கம் பற்றிய ஒரு முழுமையான கண்ணோட்டமாக இருக்க முடியும்.

ஒவ்வொரு இந்திய மொழியிலும் குறிக்கோள் நிலையிலான குறிப்பிடத் தகுந்த பண்புகள் காணப்படுகின்றன. இவற்றைத் தனித் தனிக் குணநலக் கொத்தாகக் கொள்வோமாயின், இவ்வாறான பல கொத்துக்கள் கொண்டதாக 'இந்திய இலக்கியம்' காணப்படுகிறது எனலாம். 'இந்தியத் தன்மை என்பது இக்குணநலன்களின் ஒட்டு மொத்தமான அமைப்பே ஆனாலும் எந்த ஒரு இலக்கியத்திலும் இவை அனைத்தும் முழுவதுமாகக் காணக் கிடைப்பது அரிது. ஆனால் இவற்றின் இடையே ஏற்பட்ட உறவு நிலைகளை நாம் ஒவ்வொரு இலக்கியத்திலும்

காணமுடியும். இந்த அடிப்படையில் இந்திய மொழிகளுக்கிடையே உள்ள உறவுகளை ஆய்வது 'ஒப்பியியல் இந்திய இலக்கியம்' எனலாம்.

'ஒப்பியியல் இந்திய இலக்கியம்' என்ற இக்கோட்பாடு இந்தியாவில் இலக்கியக் கல்விக்கு மேலும் உரம் ஊட்டுவதாகவும், புதிய பரிமாணங்களை, புதிய வீச்சுகளை, புதிய நோக்குகளை அறிவிப்பதாகவும் அமைகிறது. மேலும் இந்திய இலக்கியங்களுக்கிடையே ஆன உறவுகளை, அவை கொண்டவற்றையும் கொடுத்தவற்றையும் எடுத்து விளக்குவதாகவும் அமையும்.

ஒப்பியியல் இந்திய இலக்கியம் இந்தியப் பார்வையில் ஒப்பிலக்கியக் கோட்பாடுகளை எடுத்தாய்வது. ஒன்றிற்கும் மேற்பட்ட மொழிகளில் ஈடுபாடு கொண்ட ஆய்வாக அது அமைதல் வேண்டும்.

இவ்வாறான ஈடுபாட்டின் அணுகுமுறைகள் நாம் எடுத்துக்கொள்ளும் இரு மொழிகளைப் பொறுத்து அமையும்.

1. முழுக்க முழுக்க வரலாற்று அடிப்படையில் அது அமையலாம்.

2. அல்லது முழுக்க முழுக்க அழகியல் அடிப்படையில் அது அமையலாம்.

3. அல்லது பாதி அழகியல் அடிப்படையிலும் பாதி வரலாற்று அடிப்படையிலும் அமையலாம்.

இந்திய மொழிகளுக்குள் காணக்கூடிய தொடர்பு பற்றிய ஆய்வு பாதி அழகியல் நோக்கும் பாதி வரலாற்று அடிப்படையிலும் அமையும்.[36]

இந்திய இலக்கியங்களை மேலை இலக்கியங்களுடன் ஒப்பிடும் போது முழுக்க முழுக்க வரலாற்று ரீதியில் அமையும். இந்த இரு வகைகளுமே ஒப்பியியல் இந்திய இலக்கிய ஆய்வே.

சில இந்திய மொழிகளில் மேலை இலக்கிய வரவிற்கு முன்பே பெர்சிய, அரேபிய இலக்கியத் தொடர்பு ஏற்பட்டிருந்தது. இவற்றைப்பற்றிக் காண்பது பாதி வரலாற்றியலும் பாதி அழகியலும் இணைந்த ஆய்வாக அமையும்.

ஒப்பியல் இந்திய இலக்கிய ஆய்வுக் களங்களைப்பற்றி எண்ணும்போது பின்வரும் கண்ணோட்டங்களில் செயல்பட முடியும்.

இரு இந்திய மொழிகளுக்கிடையேயான உறவுகளை, தொடர்புகளைப் பிரித்துக்காணும்போது பிரெஞ்சுக் கோட்பாட்டைப் பின்பற்றி

1. மூலங்கள் எவை?

2. தாக்கம் விளைவித்தவை எவை? எவை? தாக்கம் பெற்றவை எவை? எவை?

3. மூலங்கள் எவ்வாறு வாழ்வுபெற்றுள்ளன?

4. மூலங்கள் எந்த அளவு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன? போற்றி வளர்க்கப்பட்டுத் தொடர்வாழ்வு பெற்றுள்ளன?

5. இடைத்தொடர்புகள் எவை? எவை? எவையெல்லாம் இடைத்தொடர்புகளாக விளங்கியுள்ளன?.

6. இலக்கியச்சூழல் மாற்றங்கள் எவ்வாறு ஏற்பட்டன?

7. இலக்கிய இயக்கங்கள் சமூக இயக்கங்கள் போன்றவை எவ்வாறு அம்மொழி இலக்கியங்களைப் பாதித்துள்ளன? (பக்தி இயக்கம், பத்தொன்பதாம் நூற்றாண்டின் ராஜாராம் மோகன் ராயின் பிரம்மசமாஜம், தயானந்த சரஸ்வதியின் ஆரியசமாஜம், பிரம்மஞான சபை, (Madam Blavatsky Annie Besant) போன்றவையும், இருபதாம் நூற்றாண்டின் சுதந்திர இயக்கம், பகுத்தறிவு இயக்கம், தலித் இயக்கம் போன்ற நம் மண்ணில் தோன்றிய இயக்கங்களும், மேலை நாட்டின் வரவான புதுச்செவ்வியல் இயக்கம், புனைவியல் இயக்கம், இருத்தலியல் இயக்கம், என இன்றைய மாந்த்ரீக புனைவியல் வரை இலக்கியப்படைப்புகளைப் பாதித்துள்ளதை வரலாற்று ரீதியில் ஆராயலாம்.

8. மொழி பெயர்ப்புகள் மூலம் ஓர் இந்திய மொழியில் இருந்து பிறதொரு இந்திய மொழிக்குக் கிடைத்தவை எவை? அவை எவ்வாறு பின்விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன? மொழி பெயர்பைப் போல ஏற்பு மொழியில் வெளிவந்த போன்மையாக்கங்கள் எவை?

9. ஃபிரடெரிக் செலகல்லும் ஏ.டபிள்யூ செலகல்லும் இணைந்து வரலாற்றுப் பின்னனியுடன் அதே சமயத்தில் ஒவ்வொரு நாட்டின் தனித்தன்மையை எடுத்துக் கூறுவதாக உலகப்பொதுமைப் பார்வையுடன் 'எடுத்துரைக் கதை' என்ற இலக்கிய வகையின் வரலாற்றை எழுதினர். அதேபோல இவர்களைப் பின்பற்றி இந்திய இலக்கியங்களுக்கிடையே ஒரு குறிப்பிட்ட இலக்கிய வகையின் தோற்றம் வளர்ச்சியை வரலாற்றுப் பின்னனியுடன் இந்தியா முழுவதிலும் வளர்ச்சிப்பெற்ற தன்மையை எடுத்துக்காட்ட முனையலாம். இந்தியா முழுவதிலும் இருக்கக்கூடிய அடிக்கருத்து கொண்ட பக்திப் பாடல், (அதிலும் கூட இறைவனைத் தம் காதலனாகக் கொண்ட அடியார்களின் பாடல் வகை) அல்லது இரங்கல் பாடல், பெண்மையின் நிலை எனப் பல கூறுகளை ஆராயலாம்.

இவை இந்திய இலக்கியங்களை உலக நோக்கில் இலக்கியப் பொதுமையுடன் பார்க்கும் ஆய்வுகளுக்கு இட்டுச் செல்வதாய் அமையலாம். இவ்வாறு ஒரு தேசிய உணர்வானது உலக ஒருமை உணர்வுக்கு வழிகாட்டக் கூடும். தேசிய இலக்கிய வரலாற்றினை உலக வரலாற்றின் பின்னனியில் காணலாம். இந்திய அறிவுப்படைப்புகள் அனைத்தின் சாரமாக அந்த ஆய்வு திகழ முடியும்.

ஒப்பிலக்கியத்தின் முக்கியமான குறிக்கோளாக இலக்கியங்களுக்கிடையே, தேசிய, உலக இலக்கியங்களுக்கிடையே உறவு நிலை வளர்ச்சியைக் காண்பதைப் பல நாட்டு ஒப்பியல் அறிஞர்களும் கூறியுள்ளனர். அதிலும் குறிப்பாக பிரெஞ்சு நாட்டு அறிஞர்களான பால் வான்தீகம், கையார்டு, அன்னாசைத்தா ரெவிக்னாஸ், பால்டென்ஸ்பெர்கர், ஆல்பர்ட் ஜெரார்டு, ஜெம்.எம்.கார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். "ஒப்பிலக்கியத்தின் முக்கியமான குறிக்கோள் பல்வேறுபட்ட இலக்கியங்களுக்கிடையே ஒன்றிற்கொன்று கொண்டுள்ள உறவுகளை ஆராய்வது தான்" - வான்தீகம்[37] (The object of Comparative Literature is essentially the study of diverse literatures in their relation with one another - Van Tieghem) பன்னாட்டு இலக்கியங்களுக்கிடையேயான உறவுகளின் வரலாறே ஒப்பிலக்கியம் என்கிறார், எம்.எஸ் கையார்டு.[38] (Comparative Literature is the history of International Literary relations M.F.Guyarde in Literature Comparee 1931 P.7)

ஜெ.எம்.கார் இவர்களது வழியைப் பின்பற்றி ஒப்பிலக்கியம் 'உலகவரலாற்றின் ஒருகிளை; உலகநாடுக்களுக்கிடையே உணர்வு நிலையில் ஏற்பட்ட உண்மையான தொடர்புகளை ஆராய்வது; பைரனுக்கும் புஷ்கினுக்கும், கதேக்கும் கார்லைலுக்கும், வால்டர் ஸ்காட்டுக்கும் விக்கினிக்கும் இடையே ஏற்பட்ட வெளிப்படக் காணக்கிடைக்கும் தொடர்புகளை மெய்மைகளின் அடிப்படையில் ஆராய்வது. இது போன்று பல்வேறு இலக்கியங்களுக்கிடையேயும் இலக்கியப்படைப்பாசிரியர்களின் வாழ்விலும் உணர்ச்சித்

தூண்டல்களிலும் ஏற்பட்டுள்ள தொடர்புகளை ஆராய்வதும்'' ஒப்பிலக்கியம் என்று விளக்குகிறார்.[39]

"A Branch of Literary history. It is the study of Spiritual international relations of factual contacts which took place between Byron & Pushkin, Goethe & Carlyle, Walter Scott &Vigny, between the works, the inspirations and even the lives of writers belonging to several Literatures". Jean Marie Carre".

மற்றவர்களைப் போல ஒப்பிலக்கியம் என்றால் என்ன என இலக்கணம் வகுக்க முன்வராவிட்டாலும் ஒப்பிலக்கிய வாதிகள் மனதில் கொள்ளவேண்டிய ஒரு கட்டுப்பாட்டை முன் வைக்கிறார். ஜே.எம்.கார். இலக்கியங்கள் ஒன்றை ஒன்று எதிர்பட்டு அதன் விளைவாக ஏற்பட்ட சார்புகளை எடுத்துக்காட்டுவதே உண்மையான ஒப்பிலக்கிய ஆய்வாகும் என்கிறார்.[40] (a real encounter that has created a dependence)

இவ்விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டு காணும் போது இந்திய இலக்கியங்கள் ஒன்றை ஒன்று எதிர்பட்ட போதும், இலக்கிய படைப்பாளிகள் ஒருவரை ஒருவரை எதிர்பட்ட போதும் ஏற்பட்ட விளைவுகள், புதிய படைப்புகள் போன்றவற்றைக் காண்பதும் ஒப்பியல் இந்திய இலக்கியமாகும்.

இந்திய இலக்கியத்தின் பொதுவான ஆய்வுக்களங்கள்

1. இலக்கியங்களைக் காலப் பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு அந்தந்த காலப்பகுதியின் அரசியல் வரலாற்று உணர்வுடன் இலக்கியம் தோன்றிய சூழல் பின்னனியில் கண்டு முழுமையான இலக்கியத்தின் வரலாறாக எழுதப்படலாம். இங்கு மற்றொரு கருத்தும் நினைவிற் கொள்ளத்தக்கது. ஒவ்வொரு இந்திய மொழிக்கும் தனித்தனி வரலாறு உண்டு எனினும் அவற்றை

முழுமையாகப் புரிந்து கொள்ள, அவற்றை இந்தியப் பின்புலத்தில் பொருத்திக் காண்பதே சரி.

2. இந்தியா முழுவதிலும் காணக்கூடிய பொது இலக்கிய வகைகளையும்.

3. பொதுவான அடிக்கருத்துகளையும் தொகுத்துக் காணலாம்.

4. இலக்கியத்திற்கும் பிற அறிவுத்துறைகளான இசை, ஓவியம், கட்டிடக்கலை, மானுடவியல், வரலாறு, அரசியல், உளவியல், உயிரியல், சமூகவியல், நாட்டுப்புறவியல், போன்றவற்றுக்கும் இடையே உள்ள தொடர்பு, தாக்கம், இணைநிலை ஆகியன பற்றியும் அமெரிக்கக் கோட்பாட்டின் அடிப்படையிலும், ஆய்வுகள் மேற்கொள்வது ஒப்பியல் இந்திய இலக்கியம் ஆகும்.

இந்திய இலக்கியங்கள் ஒப்பிலக்கிய ஆய்வுகளுக்கேற்ற மிக வலுவான களங்களைத் தருபவை. பலமொழிகளைப் பேசும் நாடு ஆகையால் பலமொழி இலக்கியங்களுக்கிடையே பெரிதும் இணைநிலைகளும், ஏற்புகளும் தாக்கங்களும், காணக் கிடைக்கின்றன.

ஏற்பு பற்றியும் தாக்கம் பற்றியும் எழும் ஆய்வுகளை ஒப்பிலக்கியப் பரப்புக்குள் ஏற்கும் சில ஒப்பியல் அறிஞர்கள் இணைநிலை ஆய்வுகளை அவ்வளவாக ஏற்பதில்லை. ரெனெ வெல்லக் தேசிய இலக்கியங்களுக்கிடையே காணக்கூடிய தாக்கமும் உறவும் பற்றிய ஆய்வுகளை 'இலக்கியங்களின் வெளிநாட்டு வாணிபம்' பற்றியது எனக் குறை கூறினார்.

பொதுமை இலக்கியத்திற்கும் ஒப்பிலக்கியத்திற்கும் வேறுபாடு உண்டு எனக் கூறும் வான்தீகம், ஒப்பிலக்கியம் என்பது இரண்டு தேசிய இலக்கியக் கூறுகளுக்கிடையேயான உறவுகளை, தொடர்புகளை ஆராய்வது என்றும், பொதுமை இலக்கியம் என்பது

பல இலக்கியங்களுக்கும் பொதுவான உண்மைக்கூறுகளை ஆராய்வது என்றும் கூறுகிறார். இதை மறுக்கும் ரெனே வெல்லக் இவ்வாறு ஒப்பிலக்கியத்திற்கும் பொதுமை இலக்கியத்திற்கும் சரியான எல்லைகளை வகுப்பது இயலாது என்றும் எடுத்துக்காட்டாக வால்ட்டர் ஸ்காட் பிரெஞ்சு நாட்டில் ஏற்படுத்தியத் தாக்கம் பற்றிய ஆய்வும், பிரெஞ்சின் வரலாற்று நாவல்களின் வரலாறு என்ற ஆய்வும் எந்த எல்லைகளைக் கொண்டு பிரிய முடியும்? இவை இரண்டும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையன அல்லவா? என்றும் வினவும் போது துண்டு துணுக்குகளாக உறவுகளைக் காண்பது இலக்கிய வாணிபம் போன்றது என்கிறார் வெல்லக்[41] 'வெயிஸ்டீனும் ஆரம்பகாலத்தில் உறவு, ஒப்புமை பற்றிய ஆய்வுகளின் செம்மையினை மறுக்கும் (இவர்).......... கட்டுரையில் ஒப்புமை ஆய்வினை ஆதரிப்பதோடு தாக்கம், இணைவரை, ஒப்புமை ஆய்வுகளின் ஒட்டுமொத்தமான இணைப்பே ஒப்பிலக்கியம் என்று கருதுகிறார்'.[42]

5. இந்தியாவைப் பொறுத்தவரை இணைநிலை ஆய்வுகளுக்குப் பெருமதிப்புண்டு எனும் அமியாதேவ் அதற்கு அடிப்படைக் காரணம் இந்திய இலக்கியங்களை ஒருங்கிணைக்கும் வரலாற்றுப் பிணைப்பு இருப்பதே என்கிறார்.

ஒரு வங்கப் படைப்பாளியும் பஞ்சாபி படைப்பாளியும் பாக்கிஸ்தானது பிரிவால் ஏற்பட்ட அகதிகள் நிலையை அடிக்கருத்தாகக் கொண்டு படைக்கும் போது, இவ்விரு ஆசிரியர்களும் ஒருவரை ஒருவர் எவ்வழியிலும் அறியாதவராக இருந்தாலும் கூட, வங்க பஞ்சாபிய மொழி இலக்கியங்களுக்கிடையே அதிகமான போக்கும் வரவும் இல்லாதிருப்பினும், இருபடைப்புகளும் ஒரே மாதிரி அமைகின்றன. ஒரே மாதிரியான பாடுபொருளைக் கொண்டுள்ளன. இது மிகச்சரியான இணைநிலைக்கு எடுத்துக்காட்டாகும் என்கிறார் அமியாதேவ்.[43]

ஒப்பியல் இந்திய இலக்கியத்திற்கும் ஒப்பியல் மேலை இலக்கியத்திற்கும் அடிப்படையான இரு வேறுபாடுகளைச்

சுட்டுகிறார் இவர்.[44] (Comparative Indian Literature & Comparative Western Literature)

இணைநிலைகள் பற்றிய ஆய்வு மேலை நாடுகளில் இன்றும் உயிர் பெற்றுள்ளதா என்பது ஐயத்திற்கு உரியது; ஆனால் இந்தியாவில் மிகச்சிறந்த ஒப்பிலக்கியக் களத்தை நல்குவது இணைநிலை ஆய்வே. இதுவே அமியாதேவ் சுட்டும் முதல் வேற்றுமை.

இரண்டாவதாகப் பல மொழிகளைப் பேசும் மக்களை உடைய ஒரே நாட்டில் எதிர்ப்படும் சிக்கல்களை அடிப்படையாகக் கொண்டது ஒப்பியியல் இந்திய இலக்கியம். மேலை நாடுகளில், ஒப்பிலக்கியம் பல்வேறு வேறுபட்ட போக்குகளை உடைய உலக மொழிகள் பலவற்றிற்கு இடையே ஒப்பீட்டைக் காண்பது என்றும் இந்தியாவில் ஒப்பிட்டை அப்படியே செய்வதாக அமைய பிற நாடுகளில் ஒப்பீட்டின் மேல் செயல்படுவதாக அமைகின்றன என்றும் கூறுகிறார் இவர்.

ஒப்பியல் மேலை இலக்கியம் என்பது வெவ்வேறு தேசிய இலக்கியங்களைக் கற்பது,; ஒப்பியல் இந்திய இலக்கியம் இந்திய தேசத்திற்கே உரிய (ஒரே ஒரு தேசத்தின்) இலக்கியங்களைக் கற்பது.

மற்றொரு கருத்து ஒப்பியல் இந்திய இலக்கியம் என்பது பல மொழிகளில் எழுதப்பட்ட ஒரு தேசிய இலக்கியத்தைக் கற்பது என்று வலியுறுத்துமாயின், இக்கருத்தானது ‘ஒப்பிலக்கியத்தைப் பொறுத்தவரை ஒரு படிப் பின்னோக்கி இட்டுச் செல்வது‘ என்று கூறுகிறார் சிஸிர் குமார்.[45]

ஒப்பிலக்கியமும் தேசிய இலக்கியமும்

மேலை நாடுகளில் ஒப்பிலக்கியத்தின் நோக்கம், வரையறை, விளக்கம் ஆகியன கூறும் போது தேசிய இலக்கியப் பார்வையை

இணைத்துக் கண்டனர். அங்கு சுவிட்சர்லாந்து, பெல்ஜியம் தவிர பிற நாடுகளில் தேசிய மொழி ஒன்றாகவே உள்ளது; ஆங்கிலமே இலக்கிய மொழியாக உள்ளது. மேலும் சமயத்தைப் பொறுத்த வரையிலும் கூட ஒரு பொது சமயமே உள்ளது. ஆனால் இந்திய இலக்கியங்களின் சூழலே வேறு; இலக்கிய மொழியாகப் பல்வேறு மாவட்ட மொழிகள் இடம்பெற்றுள்ளன. இதே போன்ற நிலையை நாம் சோவியத் ரஷ்யாவிலும் காணமுடியும். எனவே 'தேசிய இலக்கியங்களுக்கிடையேயான உறவுகளைக் காண்பது' என்ற கருத்து மறுபார்வைக்கு உரியதாகிறது.

எனவே மொழியோ, அரசியல் எல்லைகளோ, பண்பாடோ தேசீய இலக்கியத்திற்கு முழுமையான அளவுகோல் ஆகமுடியாது.

மொழி அடிப்படை

மொழியை அடிப்படையாகக் கொண்டு ஒரு தேசிய இலக்கியத்தைக் கணிப்பது என்பதும் சிக்கலுக்குரியதே, ஒரே மொழியைப் பல நாடுகள் இலக்கிய மொழியாகக் கொண்டுள்ளன. அமெரிக்காவும் இங்கிலாந்தும் ஒரே மொழியை-ஆங்கிலத்தை இலக்கிய மொழியாகக் கொண்டிருப்பினும் அவற்றை வெவ்வேறு நாட்டு இலக்கியமாகவே கருதுகின்றனர். (குடியேறிகளின் நாடான அமெரிக்கா, ஆங்கிலேய, பிரெஞ்சு கலாச்சார ஆதிக்கங்களில் இருந்து வேறுபட்டுத் தமக்கென ஒரு பாணியை மேற்கொள்ள ஆரம்பித்த பின் இந்த கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் தங்கள் இலக்கியத்தை அவர்கள் ஆங்கில இலக்கியத்தில் இருந்து (பிரிட்ஷ் இலக்கியம்) வேறுபடுத்திக் காண ஆரம்பித்தனர்). ஆனாலும் கூட இவ்விரு நாட்டின் இலக்கியங்களுக்கிடையே செய்யப்படும் ஆய்வுகளை முழுமையான ஒப்பிலக்கிய ஆய்வாக ஏற்பதில்லை.[46]

இதே போன்று பெல்ஜியத்திலும், சுவிட்சர்லாந்திலும் கனடாவிலும் எழுதப்பட்ட பிரெஞ்சு எழுத்தை, பிரெஞ்சு இலக்கியமாகக் கொள்வதில்லை. இந்தியாவில் இந்தியர் ஆங்கில

மொழியில் படைப்பனவற்றையும் ஆங்கில இலக்கியத்துள் சேர்ப்பதில்லை. இங்கெல்லாம் மொழி என்ற அடிப்படை அடிபட்டுப் போகிறது.

நாட்டு நில எல்லைகளை அடிப்படையாகக் கொள்வது

நாட்டு எல்லை என்பதை அடிப்படையாகக் கொள்வதிலும் சிக்கல்கள் எழுகின்றன. அரசியல் ரீதியான நாட்டு எல்லை என்பது அடிக்கடி மாறக்கூடியது. எடுத்துக்காட்டாக, மொழியால் பண்பாட்டால் ஒரே நாடாக இருந்த ஜெர்மனியை மேற்கு ஜெர்மனி, கிழக்கு ஜெர்மனி என்றும் வங்காளத்தை மேற்கு வங்கம், கிழக்கு வங்கம் எனவும் பிரித்தமையைச் சுட்டலாம்.

1. ஜெர்மானிய பிரிவால் ஜெர்மனியைச் சேர்ந்த தாமஸ் மன் முதலில் பிரான்சுக்குச் சென்று செக் நாட்டுக் குடியுரிமை பெற்றுத் தம் இறுதி நாட்களை அமெரிக்காவில் கழித்தார். இதே போன்று பிறப்பால் அமெரிக்கக் குடிமகனான டி.எஸ்.எலியட் இங்கிலாந்து குடிமகனாகி ஆங்கிலத்தில் எழுதினார். இவரது எழுத்துக்களை ஆங்கில இலக்கியமாகக் கருதுவதா? அமெரிக்க இலக்கியமாகக் கருதுவதா? ஐரிஷ் எழுத்தாளர்களான ஜார்ஜ் பெர்னாட்ஷா, ஏட்ஸ் போன்றோர் எழுதிய ஆங்கில எழுத்துக்களை ஐரிஷ் இலக்கியம் எனப் பிரித்தல் சரியா? என்பது போன்ற வினாக்களை முன் வைக்கிறார் வெயிஸ்டின்.[47]

2. இதே போன்று வெவ்வேறு நாட்டை, பண்பாட்டைச் சார்ந்தவர்கள் ஒரே மொழியில் எழுதுவதும் காணப்படுகிறது. ஐரிஷ்நாட்டு பெர்னாட்ஷா, அமெரிக்க எழுத்தாளர் எச்.எல்.ஹென்சன், இங்கிலாந்து நாட்டு ஜான் ஆஸ்பார்ன் மூவரும் ஆங்கிலத்தில் தான் எழுதுகின்றனர். இவற்றை நாட்டு எல்லை அடிப்படையாகக் கொண்டு வெவ்வேறு இலக்கியம் என்பதா? மொழி அடிப்படையாகக் கொண்டு ஒரே இலக்கியம் என்பதா?

இவற்றை மனதில் கொண்டு காணும் போது இந்தியாவில் பலமொழிகளில் படைக்கப்பட்ட இலக்கியங்களிடையே செய்யப்படும் ஒப்பிலக்கிய ஆய்வுகள் ஏற்றுக்கொள்ளப்படுமா? இந்த வினாவிற்கும் விடையளிக்கும் இந்திய ஒப்பியல் அறிஞர்கள் பலரும் இவை ஒப்பிலக்கியக் கல்விதான் என்கின்றனர். இதற்கு அவர்கள் அளிக்கும் முதற் காரணம் இந்தியா ஒரு தேசமாகக் கருதப்பட்டாலும் அதன் பரப்பாலும், பலமொழி பேசும் தன்மையாலும் இதனைத் துணைக்கண்டமாகக் கருதுகின்றனர் என்பது. அடுத்தது இந்திய இலக்கியம் என்று தேசம் முழுவதற்கும் பொதுவான இலக்கிய மொழியில் படைக்கப்பட்டவை இல்லாதது. (ஒவ்வொரு மொழியிலும் தேசிய இலக்கியம் எனக் கருதத்தக்க படைப்புகள், இந்திய தேசத்திற்கே உரிய பண்பாடு, மக்கள் வாழ்க்கைமுறை, சமயம், கலாச்சாரம். இந்திய அரசியல் பாங்குகள் போன்றவற்றை விளக்ககூடிய இலக்கியங்கள் இருக்கிறன்றன என்பது வேறு விஷயம்).

தேசிய இலக்கியத்தின் அளவுகோல்

இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்துக் காணும் போது அனைவரும் ஒருமனதாக ஏற்றுக் கொண்டு பின்பற்றத் தக்க அளவுகோலை நாம் இன்னுமும் பெறவில்லை என்றே கூறவேண்டும். ஒரு மொழிக்குள்ளேயும் மொழி எல்லைகளைத் தாண்டியும் (intra linguistic and inter linguistic) ஒப்பிலக்கியம் அமையவேண்டும். உலகின் எந்த மூலையில் எந்த நாட்டிலிருந்து, எந்த மொழியில் எழுதப்பட்டாலும் அந்த இலக்கியம் எந்த இலக்கிய மரபுடன் தொடர்புடையதாக உள்ளதோ, எந்த பண்பாட்டுச்சூழலின், சமுதாயத்தின் ஆன்மாவை வெளிக் கொணர்வதாக இருக்கிறதோ அந்த நாட்டு இலக்கியமாகவே அதைக் கருதவேண்டும்.

ஒப்பியல் இந்திய இலக்கியத்தின் ஆய்வுக்களங்கள்

ஒப்பியல் இந்திய இலக்கியத்தின் ஆய்வுக்களங்கள் மிக விரிந்த வீச்சையுடையவை. ஒவ்வொரு இந்திய மொழியையும் தனித்தனியே முதன்மை ஆதாரமாகக் கொண்டு பிறிதொரு இந்திய மொழியுடன் முன்னது கொண்டுள்ள உறவுகள், கொண்டவை, கொடுத்தவை, பெற்று வளர்த்தவை என்ற நோக்குகளிலும் இணைநிலையாக உள்ள கருத்துகளையும், வடிவங்களை, வகைமைகளை, வளர்ச்சி நிலைகளைக் காணும் நோக்கிலும் ஒப்பியல் இந்திய இலக்கியம் ஈடுபடமுடியும்.

தாய்மொழி இலக்கியத்தைப் பிற இந்திய மொழிகள் ஒன்று அல்லது இரண்டுடன் இணைத்துக் காணும்போது அடிக்கருத்துகள், தலைமைப் புனைவுக்கூறுகள், இயக்கங்கள், காலப்பகுதிகள் போன்ற அடிப்படையில் ஒப்பீட்டாய்வை நிகழ்தலாம். எடுத்துக்காட்டாகத் 'தமிழ், தெலுங்கு, மலையாள' நாவல்கள் என எடுத்துக்கொள்ளும் போது தமிழ் நாவல் தோன்றி வளர்ந்த ஆரம்ப காலச் சூழ்நிலையைப் பிற இரு மொழிகளிலும் இணைத்துக் காணலாம். அல்லது தமிழ் நாவல் வகைகளைத் தெலுங்கு, மலையாள நாவல்களுடன் ஒப்பிட்டு, எந்த மொழியில் எவ்வகை நாவல் வளர்ச்சி பெற்றுள்ளது, அதற்கு அடிப்படைக் காரணங்கள் யாவை என ஆராயலாம். அல்லது நாவலில் இடம்பெறும் பாத்திரப் படைப்புகளை ஒப்பிடலாம். அல்லது உத்திவகையை ஒப்பிடலாம். உத்திகளிலும் நனவோடை, ஏடிபஸ் சிக்கல், எலக்ட்ராசிக்கல் போன்ற உளவியல் கூறுகள் உத்திகளாவதை ஒப்பிட்டுக் காட்டலாம். காலங்கள் அடிப்படையில், இலக்கிய, சமுதாய இயக்கங்கள் அடிப்படையில், அரசியல் இயக்கங்கள், இசங்கள் அடிப்படையில் காணக்கூடிய இணைநிலைகளை எடுத்துக்காட்டலாம்; அல்லது குறிப்பிட்ட மூன்று ஆசிரியர்களின் தமிழ், தெலுங்கு, மலையாளப் படைப்புகளில் காணப்படும் இணைநிலைகளைச் சுட்டிக்காட்டி அதற்கான காரணங்களை ஆராயலாம்; அல்லது மூன்று மொழி ஆசிரியர்களும் பெற்ற மேலை

நாட்டுத் தாக்கம் (ஓர் ஆசிரியர், ஓர் இசம், அல்லது குறிப்பிட்ட ஒரு வெளிநாட்டு மொழியின் இலக்கியவகைகளுள் ஒன்று, பிரெஞ்சு நாவல், சோவியத் புரட்சிக் கவிதைகள், அமெரிக்கப் புதுக்கவிதை, ஐப்பானிய ஹைக்கூ போன்ற ஏதேனும் பொதுவான ஒன்றின் தாக்கம்). இவர்களிடையே ஏற்பட்டதை எடுத்துக் காட்டாலம். மற்றொரு நோக்கிலும் தமிழ்ப் புதினங்களைக் காணலாம். ஆந்திராவிலிருந்தும், கேரளாவிலிருந்தும் (அரசியல் எல்லைகளைத் தாண்டி, மொழியால் ஒன்றுபட்ட படைப்பாளிகளால்) படைக்கப்படும் தமிழ்ப் புதினங்கள் எனக் காணலாம்.

அடிக்கருத்துகள் அடிப்படையில் காணும் போது, ஏறக்குறைய ஒரே மாதிரியான சமுதாயச் சூழலும், பண்பாடும், பொருளாதாரக் காலாச்சாரப் பின்புலங்களும் ஒத்திருக்கும் போதும் அரசியல் காரணிகள் ஒத்துபோகும் பொழுதும் ஒரே மாதிரியான அடிக்கருத்துகள் பயன்படுத்தப்பட்டிருப்பதை எடுத்துக்காட்ட இயலும்.

தென்னக நாவல்களில் தலித் 'இயக்கத்தின் தாக்கம் பிராமணிய எதிர்ப்பு' அரசியல் சீர்கேடு 'மாணவரிடையே காணப்படும் அமைதியற்ற தன்மை.' 'வேலையில்லாத் திண்டாட்டம்' 'வேலைகளுக்குச் செல்லும் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள்', 'சமுதாய விழுமியங்களில் மாற்றங்கள், 'கற்புக்கோட்பாட்டில் மாற்றம் 'பெண்மைச் சித்திரிப்பு' 'பெண்ணியநோக்கு, 'அடித்தள மக்களின் சித்திரிப்பு- என மூன்று மொழி நாவல்களிலும் உள்ள இணைநிலைகளைக் காணமுடியும்.

'தென்னக நாவல்களில் அடிக்கருத்துகள்' 'தென்னக நாவல் வகைகள்' 'அரசியல் இயக்கங்களும் தென்னக நாவல்களும்'- எனத் தென்னக நாவல்கள் பற்றிய ஒரு பொருள் நுதலிகளும் எழுதப்படலாம். இங்கெல்லாம் 'நாவல் என்ற இலக்கிய வகையை அதன் வரலாற்றுச் சூழலுடனும் இந்திய மரபுடனும் இணைத்துக் காணுதல் வேண்டும்.

இருபதாம் நூற்றாண்டின் இந்திய இலக்கியங்களைப் பொறுத்த வரைப் பொதுவாகக் காணக் கூடிய ஒரு நிலை மேலையிலக்கியங்களின் செல்வாக்கும் தாக்கமும். கடந்த 150 ஆண்டுக் கால இந்திய இலக்கியங்களை ஆய்வுக்களங்களாகக் கொண்டு ஒப்பிலக்கியக் கோட்பாடுகளுள் இன்றளவும் பெரிதும் போற்றப்படும் தாக்கமும் ஏற்பும் பற்றிய அணுகுமுறைகளைக் கொண்டு ஆய்வுகள் மேற்கொள்ளலாம். ஆனால் இங்குக் காணக் கூடியது பிரான்ஸ் நாட்டு ஒப்பிலக்கிய வாதிகள் கூறிய தாக்கக் கோட்பாட்டினின்றும் வேறுபட்டது. ஆங்கில ஆதிக்கத்துக்கு உட்பட்ட முன்னேற்றம் அடைந்து வரும் (பின் தங்கிய) நாடுகளின் இலக்கியப் போக்குகளில் காணக்கூடிய பொதுத் தன்மையிது, அரசியல் வரலாற்றுடன் பின்னிப் பிணைந்தது இந்திய இலக்கிய வரலாறு.

ஒரு குறிப்பிட்ட ஆசிரியர் அல்லது நூல் அல்லது இலக்கிய இயக்கத்தின் தாக்கமாக மட்டுமின்றி ஒட்டு மொத்தமாக அரசியல் சமுதாய மாற்றங்களின் தாக்கமும் ஏற்பட்டு உள்ளன. அந்நிய ஆதிக்கத்தின் கீழ் உட்பட்டிருந்த நாடுகள் அனைத்திலும் ஆதிக்க வர்க்கத்தின் நாகரிகப்பண்பாடுகள் சமுதாய விழுமியங்கள் போன்றவை மாறுதல்களை ஏற்படுத்தியதைப் போலவே இலக்கியப் படைப்புகளிலும் நோக்குகளிலும் கூட மாற்றங்களை ஏற்படுத்தின. வெறும் ஆங்கில நாட்டுத் தாக்கம் மட்டும் இந்தியாவில் இல்லை. அவர்களது வரவிற்கு முன்பிருந்தே அரேபியர் இஸ்லாமியர் ஆகியோரது தாக்கங்களும் பின்னர் போர்த்துகீசியர், ரஷ்யர் ஆகியோர் தாக்கங்களும் இலக்கியங்களிலும் மொழிகளிலும் ஏற்பட்டுள்ளன.

எடுத்துக்காட்டாக கொங்கனி இலக்கிய வரலாற்றை எழுதும் போது அது போர்த்துகீசிய இலக்கியத்துடன் கொண்ட தொடர்பை விட்டு விட்டுக் காண இயலாது. ஏனெனில் கோவாவில் பேசப்படும் கொங்கணியின் மீது போர்த்துகீசிய மொழியின் தாக்கம் அதிகம்; அதே போலவே பிரெஞ்சு, ரஷ்ய இலக்கியங்களை அதிகமாக மொழிபெயர்ப்புகள் மூலமாக இந்திய வாசகர்கள்

பெற்றிருப்பதால் அம்மொழிகளின் தாக்கம் இன்றைய இந்திய படைப்புகளில் அதிகம் காணப்படுகிறது.

இவ்வாறு தாக்கம் பற்றிய ஆய்வு இந்திய ஒப்பியல் இலக்கியத்தில் இரண்டு வகைகளில் மேற்கொள்ளப்படலாம்.

1. இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட இந்திய இலக்கியங்களுக்கு இடையேயான உறவும் தாக்கமும்.

2. இந்திய மொழி ஒன்றோ அல்லது ஒரு குறிப்பிட்ட தொகுப்பாகக் காணக்கூடிய மொழிக்குடும்பம், அல்லது மொழிகளின் தொகுப்போ வேறு ஒரு நாட்டு மொழியின் தொடர்பால் பெற்ற தாக்கம்.

'தமிழக்கவிதைகளில் மேலையிலக்கியத் தாக்கம்' பற்றிக் காண்பது போலவே 'தமிழ், தெலுங்கு, மலையாள மொழிகளில் புதுக்கவிதையில் மேலையிலக்கியத் தாக்கம்' என்றோ 'தென்னகக் கவிதைகளும் குறியீட்டியலும்' என்றோ காணலாம். ஒரு குறிப்பிட்ட இயக்கமோ, இசமோ, மும்மொழிக் கவிஞர்களிடம் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது எனக் காணலாம். எடுத்துக்காட்டாக 'பாரதி' வள்ளத்தோள், குரஜாட அப்பாராவ் கவிதைகளில் புனைவியல்' என்று காணலாம்; பாரதிதாசன், குமரனாசான், ஜாஷூவா கவிதைகளில் இணை நிலைகளாகச் சமுதாயச் சீர்திருத்தக் கருத்துகள், பெண்கள் முன்னேற்றம், சாதியக் கொடுமை, இயற்கை; கல்வி போன்ற கூறுகளை மதிப்பிடலாம் இவ்வாறான கருத்தமைவோ, இயக்கக் கொள்கையோ, முதலில் எந்த மொழியில் இடம்பெற்றது. அதன் வரலாற்றுச் சூழல் என்ன என வரலாற்று ரீதியிலும், சூழமைவு ரீதியிலும் காணலாம்.

ஆங்கிலேய ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த பல நாடுகளிலும் இலக்கியப் போக்குகளில் காணக்கூய பொதுத் தன்மையே இவ்வகை இலக்கியத் தாக்கங்கள் என்றாலும் இது ஒவ்வொரு மொழிக்கு ஏற்பவும், ஒவ்வொரு நாட்டிற்கு ஏற்பவும் மாறுபடும்.

சில மொழிகளில் இத்தாக்கம் வெளிப்படையாகத் தெரியும்படியும் இன்னும் சிலவற்றிலும் உய்த்துணரும் படியும் காணப்படும். சிலநேரங்களில் வழிவழி மரபுடன் முரண்பட்டு, இலக்கியச் சிக்கல்களை எதிர் கொண்டுள்ளன. இதற்கு நல்ல எடுத்துக்காட்டு இன்றைய வசன கவிதையும் புதுக்கவிதையும். வழி வழிவரும் இலக்கண மரபை எதிர்த்து, அத்துடன் முரண்பட்டு எழுந்த இலக்கியவகையே புதுக்கவிதை.

சில இசங்கள் மரபு மாற்றத்திற்குக் காரணமாக இருந்திருக்கின்றன. இருத்தலியல் போன்ற இசங்களின் அடிப்படையிலான புதினங்களில் (தமிழில் இந்திரா பார்த்த சாரதி, அம்பை போன்றவர்களின் படைப்புகள்) சமூக விழுமியங்களின் மாற்றங்களைப் படைத்துக் காட்டியுள்ளனர். சிலசமயம் எதிர்நிலைப் பாத்திரங்களைக் கதாநாயகர்களாகப் படைக்கும் முறையும் கோதிக் நாவல்களின் அடிப்படையில் வரும் கதாநாயகர்களையும் இம்மரபு மாற்றத்திற்கான சான்றுகளாகக் கூறலாம்.

இவையாவற்றையும் பொதுவான ஒப்பிலக்கிய முறை வழிப்பட்ட தாக்க ஆய்வின் மூலம் முற்றிலுமாக வெளிக் கொணர்வது என்பது எளிதன்று; தாக்கத்திற்கு அடிப்படையான இடைத் தொடர்பாளர்களும், மொழிபெயர்ப்புகளும், ஒரு மொழியில் காணப்படலாம். ஆனால் நாம் இவற்றின் உண்மையான செயல்பாடுகளைச் சரியான முறையில் கண்டுணர்ந்து கூறினால்தான் தாக்கம் ஏற்படக் காரணமானச் சூழலை மிக சரியாக வெளிக்கொணர முடியும்.

தமிழ் நாவல்களில் காஃப்கா, ஜேம்ஸ் ஜாய்ஸ், வெர்ஜீனியா உல்ஃப், செக்காவ், வால்ட்டர் ஸ்காட் ஆகியோரின் தாக்கங்களை உணரமுடியும். ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் ஆங்கில மொழி பெயர்ப்புகள் வழியாக மேலையிலக்கியப் படைப்பாளிகள் பலர் தமிழகத்தை வந்தடைந்தனர். இந்த இடைத்தொடர்புக்கு வெறும் மொழிமட்டுமே காரணமா? அன்றித் தமிழகப் படைப்பாசிரியர்களின்

கல்வியும் காரணமா? அவர்களுக்கு மேலையிலக்கிய ஆசிரியர்கள் பற்றிய வெளிப்பாடு (வெளிச்சம்) எந்த பாடத்திட்டத்தில் அடங்கியது?- என்றெல்லாம் தாக்கத்தின் அடிப்படைகளையும், இடைத்தொடர்புகளையும் தேடுவது அந்நிய ஆதிக்கத்துக்கு ஆட்பட்டிருந்த, மேலையலக்கியத் தாக்கத்திற்குட்பட்டு, இலக்கிய மாறுதல்களையும் புதிய போக்குகளையும் நோக்குகளையும் பெற்ற நமக்கு ஒரு அடிப்படை ஒப்பிலக்கிய ஆய்வு முறையியலாகிறது.

மேலை நாடுகளில் குறிப்பிட்ட ஓர் ஆசிரியரின் தாக்கம் பிறிதொருவர் மேல் எந்த அளவுக்கு உள்ளது எனத் தனித்துக் காண்பது இயல்பு. எடுத்துக்காட்டாக 'சேக்ஷ்பியரின் மேல் மாண்டீக் செலுத்திய தாக்கம்' 'டிக்கன்ஸ் காஃப்காவிடம் ஏற்படுத்திய தாக்கம்' என்பது, போல அமையும். ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரை மது சூதனதத் மேல் ஹோமர் ஏற்படுத்திய தாக்கம்' எனவோ 'ஸ்காட் கல்கியின் மேல் செலுத்திய தாக்கம்' எனவோ, 'ஷெல்லி' பாரதியின் மேல் ஏற்படுத்திய தாக்கம்' எனவோ தனித்துக்காண்பது சரியல்ல என்கிறார் அமியாதேவ்.[48]

மேலை நாட்டு தாக்க அழகியல் வாதிகள் உடனடியாகக் கிடைக்கக் கூடிய மெய்ம்மைகளையும், உளவியல் கூறுகளையுமே அடிப்படையாகக் கொண்டு தாக்கம் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்கின்றனர். நாமும் இம்முறையைப் பின்பற்றும்போது, நம் படைப்பாளிகள் எந்த இலக்கியங்களிலிருந்து எவ்வளவு செய்திகளை எடுத்துள்ளனர் என ஆராய்வதோ, எந்த அளவு தாக்கம் உள்ளது என ஆராய்வதோ, காண்பதோ, தான் பெற்ற செய்திகளை எவ்வளவு சிறப்பாகப் பயன்படுத்தியுள்ளார் மாற்றம் செய்து கொடுத்திருக்கிறார் எனத் தாக்கத்திற்கு உட்பட்ட படைப்பாளியின் படைப்புத் திறன் அடிப்படையில் காண்பது முக்கியமல்ல.

ஓர் ஆசிரியரை அவரது வரலாற்றுப் பின்னணியுடன் புரிந்து கொள்ள வேண்டும்; பிற இலக்கியங்களைக் காணும் வாய்ப்பினை எவ்வளவு தூரம் பெற்றுள்ளார் என்பதும் அவர் படித்த நூல்கள் யாவை? அவரது சொந்த உளவியல் எவ்வளவுதூரம் அவர்

பிறமொழிக் கருத்துக்களைத் தன் வயமாக்கிக் கொள்ளக் காரணமாக அமைந்தது? அவரது இலக்கியச் சூழமைவு போன்றவற்றுடன் அவரது பிற படைப்புகளையும் ஒட்டு மொத்தமாகக் காணவேண்டும். அத்துடன் அவரது சமகாலப் படைப்பாளிகள் அவரது மொழியில் படைத்தவை போன்றவையும் முக்கியமாகும். இவ்வாறு அனைத்து செய்திகளையும் ஒருங்கிணைத்துக் காணும் போதுதான் ஒருவர் பெற்ற உண்மையான தாக்கம், அத்தாக்கத்தின் விளைவு பற்றி முழுமையாக அறிய முடியும்.

பாரதிதாசன் ஷெல்லியிடம் இருந்து தாக்கம் பெற்றாரா? எனக் காண்போமாயின் அவர் நேரடியாக ஷெல்லியிடமிருந்து பெற்றவை எவை என்பதுடன் தனக்கு உடனடி முன்னோடியான பாரதி வழியாக ஷெல்லியை எவ்வளவு தூரம் புரிந்து கொண்டார்? அவரது கல்விச் சூழல் எனப் பலவற்றையும் காணும்போது பாரதிதாசன் பெற்ற நேரடியானத் தாக்கமும், மறைமுகத் தாக்கமும் தெளிவாகும். இவர் பாரதிக்குதாசன்; பாரதியோ ஷெல்லிதாசனாக விளங்கியவர். ஷெல்லியைப் பற்றிக் கற்கவும் பேசவும் ஓர் இலக்கிய அமைப்பையே உருவாக்கிக் கொண்டவர்.

இலக்கிய வரலாறும் இலக்கியத்தின் வரலாறும்.

ஒரு படைப்பாசிரியரின் வாழ்க்கைச் சூழல் ஆகியவற்றின் பின்னணியில் அவரது படைப்புகள் அனைத்தையும் இணைத்தும் ஆராயலாம், இது போன்று அம்மொழியில் உள்ள அணைத்து இலக்கியங்களையும் வரிசைப்படுத்தும்போது ஓர் இலக்கியத்தின் வரலாறு (History of Literature) கிடைக்கிறது (ஆனால் இலக்கிய வரலாறு (Literary History அன்று)

இலக்கியத்தின் வரலாறு (History of Literature) எனக் காணும் போது, தமிழில் பாரதி தான் முதல் வசன கவிதையைத் தந்தவர் என்பது புலனாகும். வசன கவிதை என்ற இலக்கிய வகைமையின் தோற்றம், தோன்றிய ஆண்டு, தோற்றுவித்த படைப்பாசிரியர் ஆகியன பற்றிய வரலாற்றைக் கூறுகிறது.

பாரதி வசன கவிதையைத் தோற்றுவித்தவர் ஆயினும் பழைய மரபுகளை விடாது புதிய புதிய பாடுபொருட்களைப் பழைய சிந்து, காவடி, திருப்பள்ளியெழுச்சி, திருத்தசாங்கம், காப்பியம் என்ற மரபுவழி இலக்கிய வகைகளைப் பயன் படுத்திப் பாடியிருப்பதை எடுத்துக் காட்டுவது இலக்கியத்தின் வரலாறு.

ஆனால் இலக்கிய வரலாறு (Literary History) இவரது இம்முறைகளுக்கான காரணத்தை விளக்குவதாய் இருக்க வேண்டும். பாரதி வசன கவிதை படைத்த காலச் சூழல் என்ன? இவ்வாறு இவர் ஒரு புதிய இலக்கிய வகையைத் தமிழில் ஆரம்பித்து வைக்கக் காரணம் யாது? எனக் கூற வேண்டும். இவ்வாறான இலக்கிய வரலாற்றிற்கு ஒருவர் ஒப்பிலக்கிய நெறிகளையே நாட வேண்டியுள்ளது. அதுவே உண்மையான ஒப்பிலக்கிய நெறியாக அமையும்.

இலக்கிய வரலாறும் ஒப்பிலக்கியம்

ஒப்பிலக்கிய ஆய்வில் இம்முறையிலான இலக்கிய வரலாற்று ஆய்வு தற்போதையக் கட்டாயத்தேவை என்பதை இந்திய ஒப்பிலக்கிய அறிஞர்கள் பலர் வற்புறுத்தியுள்ளனர். ஒப்பிலக்கியக் கல்வி ஒரு புறம் இவ்வாறான இலக்கிய வரலாற்றையும் எதிர் முனையில் உலகப் பொதுமை வாய்ந்த அழகியல் கோட்பாட்டையும் வைத்துக் கொண்டுள்ளது. பெனடிட்டோ குரோசே இலக்கிய நயம் பாராட்டல்கள் அனைத்துமே இறுதியில் ஒப்பீடாகவே அமைகின்றன என்று கூறியதை இங்கு நினைவு கூர வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட இலக்கியம் பிறிதொருமொழி இலக்கியப் படைப்புடன் தொடர்பு கொள்ளும் போதும், ஒரு கொத்தாக இலக்கியப் படைப்புகளின் தொகுதி, பிறிதொரு தொகுதியுடன் தொடர்பு கொள்ளும் போதும், ஒரு படைப்பாளி பிறிதொரு படைப்பாசிரியருடன் தொடர்பு கொள்ளும் போதும் ஏற்பட்ட தாக்கத்தை ஆராயும் போது, அது ஒரு குறிப்பிட்ட தனியொரு

படைப்பாளி பெற்ற தாக்கம் பற்றிய ஆய்வாக மட்டும் இருந்து விடக்கூடாது. அந்த படைப்பாளி சார்ந்த மொழி பெற்ற தாக்கத்தின் விளைவாகவே அவரது படைப்பைக் காணவேண்டும்.

தமிழ்க் கவிதை இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாரதி மூலம் பெற்ற புத்துயிர்ப்பும் புதுப்போக்கும் எவற்றின் விளைவுகள்? அவற்றின் காரணிகள் எவையெவை? மாற்றத்தின் பிரதான உருவமாக பாரதி மாறக் காரணம் என்ன? பாரதிக்குப்பின் அவரது வழித் தோன்றல்களான பாரதிதாசன், பிச்சமூர்த்தி, சுரதா போன்றோர் எவ்வாறு தாக்கம் பெற்றனர் எனக் காணும்போது தமிழ் மொழியில் கவிதை என்ற இலக்கிய வகையே முழுமையாகப் பெற்ற தாக்கத்தையும் விளைவுகளையும் கண்டவர்களாவோம்.

மேலும் ஒரு கருத்தை இங்குக் கவனிக்க வேண்டும் பாரதிக்கு மேலையிலக்கிய ஆசிரியர்கள் பலரது தாக்கம் இருந்தது உண்மையே[49]. அத்துடன் பிற இந்திய மொழிகளான, வடமொழி, வங்களாம் ஆகியவற்றில் ஈடுபாடும் பாண்டியத்தியமும் கைவரப் பெற்றவர் பாரதி; வேத, இதிகாசங்களில் ஆழ்ந்த புலமையும், அரவிந்தர் தொடர்பு மூலம் தாகூரின் கவிதைகள் பற்றிய அறிமுகமும் பெற்றவர் அவர்; முதல் வசன கவிதையைத் தமிழில் தந்தவர்; பிறநாட்டு புரட்சி இயக்கங்களின் தாக்கத்தைத் தமிழில் விதையாக்கித் தந்தவர்;. ஆகா வென்றெழுந்தது பார் யுகப் புரட்சி' என இரஷ்யப் புரட்சிக்குப் போற்றிப் பாடல் புனைந்தவர்; அதே சமயத்தில் சக்தி தத்துவத்தையும் வேதக் கருத்துக்களையும் தேசியத்துடன் இணைத்துக் கண்டவர்; அதனால் தான் "மகாளி பராசக்தி உருசிய நாட்டினிற் கடைக்கண் வைத்தாளாங்கே, ஆகா வென்றெழுந்தது பார் யுகப் புரட்சி" எனத் தீமைகளை அழித்துப் புதியதோர் உலகம் படைக்கும் படைப்புச் சக்தியாகவும் கண்டார். கீதை உரைத்த கர்மயோகம் பற்றிய கருத்துகளும், எல்லா உயிர்களிலும் நானேயிருக்கின்றேன் என்று உரைத்த கண்ணபிரான் சுட்டிய அத்வைதக் கருத்துக்களும், சக்தியை மூல முதலாக ஆதிசக்தியாகக் காணும் வடமொழிப் போற்றிப் பாடல்களான சௌந்தர்ய லஹரி (அழகின் அலைகள்) லலிதா சஹஸ்ர நாமம்

(தேவி லலிதாம்பிகையின் ஆயிரம் பெயர்கள்) ஆகியவற்றின் பாதிப்பையும் பாரதியின் வேதாந்தப் பாடல்கள், கடவுள் பாடல்கள் ஆகியவற்றுடன் காதல் பாடல்கள் தேசியப் பாடல்களிலும் கூட காணமுடிகிறது. கவிதை மடல்களாக (epistles) பல பாடல்களையும் இவர் தந்திருக்கிறார். (கவிதை மடல்கள் தமிழக்குப் புதிய வகையன்று; காப்பிய மாதவியின் இலக்கிய நயமும் பண்பு விளக்கமும் கொண்டக் காவியக் கடிதம் முதல், பெருங்கதை, சிந்தாமணி போன்றவற்றில் மட்டுமின்றித் தனிப் பாடல்களாகச் சிவப்பிரகாச சுவாமிகள், முத்தப்ப செட்டியார், உ.வே.சா. போன்ற பலரது கவிதை மடல்கள் தமிழுக்கு அறிமுகமான ஒன்றே.)

இடைக்கால இலக்கியங்களை ஒப்பிலக்கிய நோக்கில் காணும் ஒருவர் கட்டாயமாகப் பிறிதொரு இந்திய இலக்கியத்தின் தொடர்பும் கருத்துப் பரவலும் பற்றிய செய்திகளை இணைத்தே காணவேண்டி வரும். தனியாக ஒரு மொழிக்குள்ளேயே, அம்மொழியில் வளர்ந்த பக்தி இலக்கிய வளர்ச்சி பற்றிக் காணுதல் இயலாது. பக்தி இயக்கத்தின் தாய்வீடாகத் தமிழைக் குறிப்பிடலாம். இங்கிருந்தே பக்தி இயக்கம் வடகிழக்கும் வடமேற்குமாகப் பரவ ஆரம்பித்தது. அப்படி இருப்பினும் கூட தமிழில் பக்தி இயக்கம் எனும் போது அதில் ஆரியர் தம் கோட்பாடுகள் வந்து வளர்ந்த தன்மை வரலாற்று ரீதியில் ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும். கம்பரின் இராம காதையை ஆராயும் ஒருவர் வடமொழி வால்மீகி இராமாயணத்தையும் இந்தி துளசி இராமாயணத்தையும் எடுத்துக்கொண்டு அவற்றுடன் கொண்டுள்ள தொடர்புகள் அடிப்படையிலேயே காண முடியும்.

இந்தியச் சூழலில் இலக்கிய ஆய்வுக்கு வரலாற்றுத் தேவையும் முக்கியமாகிறது, ஆங்கிலம் / பிரெஞ்சு / ஜப்பான் மொழி இலக்கியங்கள் ஒட்டுமொத்தமாக ஏதேனும் ஒரு இந்திய மொழியின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் அளவு தொடர்பு கொண்டதை எடுத்துக்காட்ட வரலாற்று அறிவு மிகமிகத் தேவையானதாகும். ஒரு மேலைநாட்டு ஒப்பிலக்கிய வாதிக்கு இந்த அளவுக்கு

வரலாற்றின் தேவையிருக்குமோ என ஐயப்படும் அமியாதேவ் அதனால் தான் இந்தியாவில் ஒப்பிலக்கியக் கல்வி என்பது மேலை நாடுகளில் வழக்கிலுள்ள ஒப்பிலக்கிய அணுகு முறைகளை அப்படியே முன்மாதிரியாகக் கொண்டு செல்ல இயலாது என்றும் நாம் நமக்கு ஏற்ற ஒப்பிலக்கிய ஆய்வு நெறி முறைகளை வகுத்துக் கொள்வது அவசியம் என்றும் கூறுகிறார்.[50]

அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு முன்னேறிவரும் மூன்றாவது உலக நாடுகளில் நம் நாடும் ஒன்று. இந்த மூன்றாவது உலகச் சூழலானது நம் மீது உளவியல் சார்ந்த சில கட்டுப்பாடுகளை விதிக்கின்றது. நம்மை ஆண்ட ஆதிக்கக்கரங்களின் கீழ் அவர்தம் மொழியை, இலக்கியத்தை, மரியாதையுடனும் அவற்றின் தாக்கத்தை மகிழ்வுடனும் பெருமையுடனும் ஏற்கச் சித்தமானோம். மேலையிலக்கிய வகைகளை, அவை எவ்வித குற்றங்குறைகளும் பிழைகளும் அற்றவை என்ற ஆழ்ந்த நம்பிக்கையுடன் அப்படியே ஏற்றுக் கொண்டோம், அத்துடன் அவைபோல நம் சொந்த இலக்கியத்திலும் அவ்வகைகள் உள்ளன என எடுத்துக்காட்ட முனைந்தோம். இவ்வாறான முனைப்பானது நம் கௌரவத்தை நிலைநாட்டிக் கொள்ளும் முனைப்பே என்கிறார் சிஸிர்குமார்.[51] இவை போன்ற உளவியல் சார்ந்த தடைகளை மீறி, தற்சார்பின்றி நாம் நம் இலக்கியங்களை அவற்றினுள்ளேயே மூழ்கி ஆராய வேண்டும். நம் இலக்கியங்களின் அடிப்படையிலேயே, அவற்றிலிருந்து தோற்றம் பெறக் கூடிய இலக்கியக் கொள்கைகளை, நம் இலக்கியம் பற்றிய கருத்தமைவுகளை, மேலெழுப்பிக் காட்ட வேண்டும். அத்துடன் அந்த கோட்பாடுகளின் அடிப்படையில் இலக்கியங்களை அணுகவும் பயிற்சி பெற வேண்டும். அப்போது தான் நாம் நம் இலக்கியங்களை முழுமையாக அறிந்து கொள்வதுடன் பிறமொழி இலக்கியங்களையும் எந்தவித எதிர் உணர்வும், முற்சாய்வும் இல்லாமல் அணுக இயலும்.

இவ்வாறான அணுகு முறைகளை நாம் உருவாக்கிக் கொண்டால் தான் நமக்கு மேலையிலக்கியத் தாக்கம் ஏற்பட்டதைத்

தற்சார்பின்றி எடுத்துக்காட்ட இயலும். அதே போல மேலை நாட்டறிஞர்களிடம் நம் நாட்டுத் தாக்கம் இருப்பதையும் எடுத்துக் காட்ட முடியும். ஆனால் இவையாவும் வடமொழித் தாக்கங்களாகவே இருப்பதும் சுட்ட வேண்டிய ஒன்று. காரணம் வடமொழி இலக்கியங்களின் மொழிபெயர்ப்புகள், திறனாய்வுகள் மேல் நாட்டு அறிஞர்களின் பார்வைக்குக்கிட்டிய அளவு தமிழோ, தமிழின் மொழி பெயர்ப்புகளோ வேறு எந்த முன்னிறுத்தங்களோ அவர்களுக்குக் கிடைக்காதது தான்.

கதே காளிதாசரின் சாகுந்தலத்தைப் பெரிதும் பாராட்டியதுடன் தன்னுடய ஃபாஸ்ட் (Faust) இல் சாகுந்தலத்தின் ப்ரஸ்த்தாவனாவைப் பயன் படுத்திக்கொண்டுள்ளார். (Prolog on Theatre இல்) யேட்சுக்கு பதஞ்சலி யோக சூத்திரத்தில் ஈடுபாடு உண்டு என்பதையும், எலியட் கீதை உபநிடதங்கள், புத்தமதக் கருத்துக்கள் போன்றவற்றைக் கையாள்கிறார் என்பதையும் இந்தியாவின் தாக்கம் மேலை நாடுகளில் உண்டு என்பதற்கான எடுத்துக்காட்டுகளாகச் சுட்டிச் செல்லலாம். ஆயின் இவை மேலோட்டமானவையாகவே அமையும். மேலை நாட்டார் வரவால் நம் இலக்கியப் போக்குகளிலேயே பெரும் மாற்றம் ஏற்பட்டது போல அவர்களது போக்குகளில் ஏதும் நிகழ்ந்துள்ளதா என்பதை எடுத்துக்காட்டினால் அது உண்மையான இந்தியத் தாக்கமாக இருக்கும். ஆனால் அப்படியான நிகழ்வுகள் எதுவும் எதிர்ப்படவில்லையென்றே கூறவேண்டும். மேலை நாடுகளின் நவீன இலக்கியப் போக்குகள் அவற்றின் மரபுத் தொடர்ச்சியாக இருந்ததே தவிர மரபை உடைப்பதாக மரபிற்கு ஊறு விளைவிப்பதாக, மரபை எதிர்த்துத் தோன்றியவையாக இல்லை. ஆனால் இந்தியாவில் இலக்கிய நவீனத்துவம் என்பது இரு பெரும் கலாச்சாரங்கள் எதிர் எதிர் சந்தித்ததன் விளைவாக இந்திய ஐரோப்பிய இலக்கிய தொடர்புகளைக் கொண்டது. இவை திட்டப்பாங்குடைய மாற்றங்களுக்கும் உருத்திரிபுகளுக்கும் காரணமாயின. பிற அழகியல் கோட்பாடுகளும் இந்திய மரபும் வரலாற்று அரசியல் தாக்கங்களும் இணைந்து புதிய நவீன இந்திய இலக்கியம் தோன்ற வழி வகுத்தன.

இந்தியாவில் 'ஒப்பிலக்கியம்' என்ற தொடரின் முழுமையான அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய பொருள் கொணரவும் நம் இந்தியச் சூழலுக்கு ஏற்ற, (அமியாதேவ் கூறியது போல;) ஒப்பிலக்கிய ஆய்வுமுறையியலை அமைக்கவும் பல மொழிகளை இலக்கிய மொழிகளாகக் கொண்ட துணைக் கண்டச் சூழல். மூன்றாவது உலக நாட்டுச் சூழல்- இரண்டிற்கும் ஏற்ற ஒப்பிலக்கிய அணுகு முறையை இந்திய கண்ணோட்டத்தில் இந்திய உணர்வுடன் காண்பதற்கும் இந்திய இலக்கிய வாதிகள் அனைவரும் ஒருமனதுடன் இணைந்து முடிவு காணவேண்டும். அப்பொழுது தான் உண்மையான ஒப்பியல் இந்திய இலக்கியம் முழுமையான பார்வையைப் பெற முடியும்.

இந்தியாவில் ஒப்பிலக்கியத்தின் போக்கு இந்திய மொழி இலக்கியங்களை ஆழ்ந்து கற்பதை முதன்மை நோக்கமாகக் கொள்வதுடன் அவற்றின் பனுவல்களும் பனுவல் சூழல்களும் (Text & Context) இந்தியாவிற்கே உரியது என்பதை உணர்த்துவதாகவும் இருக்கவேண்டும். அதன் ஆய்வு முறையியல் ஒப்பிலக்கிய ஆய்வு முறையியலாக இயங்க வேண்டும். ஒப்பிலக்கிய ஆய்வுகளுக்குப் பயன்படக்கூடிய சரியான ஆய்வுப்பொருளாக இந்திய இலக்கியங்கள் விளங்க வேண்டும். இம்முறை அணுகுமுறை இந்தியாவிற்கே உரிய இந்தியா முழுவதற்கும் பொருந்தக் கூடிய ஒரு கவிதையியலைக் கண்டு பிடிக்க உதவுவதாக அமையும்; அமையவேண்டும்.

இயல் – 3

தமிழும் ஒப்பிலக்கியமும்

மனித மனம் சிந்திக்கத் தொடங்கிய நாளில் இருந்தே ஒப்பிட்டுக்காணும் மனப்போக்கும் நிலவுகிறது. ஏதேனும் ஒன்றினை மதிப்பீடு செய்ய, வகைப்படுத்த, தரம் பிரித்துக்காண, சிறந்ததைத் தேர்ந்தெடுக்க என ஒப்பீடு பல நிலைகளில் பல துறைகளில் பின்பற்றப்படும் ஓர் அணுகு முறையாகும்.

தமிழில் ஒப்பிலக்கிய அறிமுகம்

தமிழில் இலக்கிய, இலக்கணத் துறைகளில் ஒப்பியல் நோக்கில் தம் கருத்துக்களை எடுத்துக் கூறுவதையும் விளக்குவதையும் தொன்றுதொட்டுக் காணமுடியும். இலக்கண நூலாசிரியர்களும், உரையாசிரியர்களும், வடமொழி, தமிழ் மொழி இலக்கண மரபுகளை ஒப்பிட்டு, வேறுபடுத்திக் காட்டும் தன்மைகளையும் சமயவாதிகளின் சமயஒப்பீடுகளையும் தமிழ் ஒப்பிலக்கியக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் அறிமுகப்படுத்திய க.கைலாசபதியும்[1] ஒப்பிலக்கியத்தை ஒரு துறைக்குரிய மதிப்புகளுடன் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் தமிழியற் புலத்தில் அறிமுகப்படுத்தி, தமிழக மாணவர்களுக்கு ஒப்பிலக்கிய நுழைவாயிலாக ஒரு நூலையும் அளித்த தமிழண்ணல்[2] அவர்களும் எடுத்துக்காட்டியுள்ளனர்.

ஒப்பிலக்கியமும் ஒப்பீட்டுத்திறனாய்வும்

ஒப்பிலக்கியத்தை இலக்கியத்திறனாய்வின் ஒரு வளர்ச்சியுற்ற நிலை என்று கூறலாம். அறிவியல் வழிமுறைகளுடன் கூடிய இலக்கியத்திறனாய்வு முறையே ஒப்பிலக்கியம் எனலாம். இலக்கியத்தின் சிறப்பை, தனித்தன்மையை உண்மைத்தன்மையை, உள்ளவாறு, துல்லியமாக மதிப்பீடு செய்யவும், அம்மதிப்பீடுகளை மீண்டும் சரிபார்த்து நிலைநாட்டுவதற்கும் அறிவியல் ஆய்வுமுறைகளில் உள்ளது போல, தரவுகளின் அடிப்படையில், மெய்மைகளை வெளிக்கொணரப் பயன்படுவது ஒப்பீட்டுத் திறனாய்வு. இலக்கிய வகைகள், வடிவங்கள், பாடுபொருள் ஆகியவை பற்றிய இம்மதிப்பீடுகளை வரலாற்று நோக்கிலோ, அழகியல் அடிப்படையிலோ ஒப்பிட்டுக் காண்பது ஒப்பியலக்கியம் எனலாம். இலக்கிய இடைத்தொடர்புகளையும், எதிர்ப்பாடுகளையும் அவற்றின் விளைவுகளையும் ஆராய்வது. இலக்கியங்களுக்கிடையேயான இடைத்தொடர்புகளையும், ஒருமையையும் காணுவிரும்புவதும், அறிந்த ஒன்றைக்கொண்டு அறியாத ஒன்றை விளக்குவதும் இலக்கியங்களை தொகுத்தல், வகைகளாகப் பிரித்தல் என்பது போன்ற போக்குகளும், இலக்கியவரலாற்றின் ஆரம்பத்திலிருந்தே காணக்கூடியவை தான்; எனினும் அவற்றை எழுதும் ஆசிரியரின் நோக்கிற்கேற்ப தற்சார்பும், ஒருபாற்கோடலும் இருப்பதைக் காணவியலும். தமிழுக்கு ஒப்பிலக்கிய அணுகுமுறையை முதன்முதல் எடுத்துக்காட்டிய தேவநேயப்பாவணரின் "ஒப்பியல் மொழி நூலி"லேயே இவ்வாறான சார்புகள் இருப்பதை எடுத்துக்காட்டுகிறார் க.கைலாசபதி[3]. அதற்கு நேர்மாறாக சுநிதிகுமார் சட்டர்ஜி, பர்ரோ, போன்ற மொழியியல் அறிஞர்கள் செய்துள்ள மொழியியல் ஆய்வுகள் பற்றிக் கூறும் இவர் அறிவியல் நெறிமுறையினைப் பின்பற்றி எவ்வாறு வடமொழியையும் தமிழ்மொழியையும் ஒப்பிட்டுக் கண்டுள்ளனர் என விளக்குகிறார்.[4]

ஒப்பீட்டு அணுகுமுறையின் தொடக்கம்

தமிழில் ஒப்பீட்டு அணுகுமுறை பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இருந்தே கால்கொள்ளத் தொடங்கியது. சங்கத்தொகை நூல்கள் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டு சி.வை.தாமோதரம் பிள்ளை, உ.வே.சா. போன்ற சான்றோர்களால் புதுப்பிக்கப்பட்ட பிறகு அவை அனைவருக்கும் எளிதில் கிடைக்கக் கூடியதாயின. ஆங்கிலக் கல்வி கற்ற தமிழ் அறிஞர்கள் பலர் ஒப்பீட்டு நோக்கில் எழுத ஆரம்பித்தனர். ஆனால் அதற்கும் முன்னரே ஜி.யூ. போப் தமிழில் இருந்து திருக்குறள், திருவாசகம், புறப்பாடல்கள், புறப்பொருள் வெண்பாமாலை ஆகியவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததுடன், கிரேக்க தமிழ் செவ்வியல் பாக்களை ஒப்பிட்டு, அவற்றிடையே வடிவம், உள்ளடக்கம், சமுதாய நிலை பற்றிய சொற்சித்திரங்கள் ஆகியவற்றில் ஒற்றுமைகள் காணப்படுவதைச் சுட்டிக்காட்டியும் உள்ளார்.

இந்திய மேலைஅறிஞர்களின் பணி

சங்கப்பாடல்களை உலகின் பிற வீரயுகப்பாடல்களுடன் ஒப்பிட்டு எஸ்.கிருஷ்ணசாமி ஐயங்கார், என்.கே.சித்தாந்தா, எஸ். வையாபுரிப் பிள்ளை, ஜே.ஆர்.மார், தனிநாயக அடிகள், வ.சு.ப.மாணிக்கம், க.கைலாசபதி போன்றோர் ஆய்வுரைகள் வழங்கியுள்ளனர்.

எச்.எம்.சாட்விக், நோராசாட்விக், மில்மன்பரி போன்றோர் ஹோமரது காப்பியங்கள் வாய்மொழிப் பாடல்களில் இருந்தே தோன்றின என்று கூறியதைப் போல, க. கைலாசபதியும் தமிழ் வீரயுகப்பாடல்களுடன் வாய்மொழி மரபிலிருந்து வந்தவை தாம் என்று தமது "தமிழ் வீரயுகப்பாடல்கள்" என்ற ஆய்வேட்டில் கூறுகிறார்.[5]

தமிழ் அறிஞர்களின் பணி

தனிநாயக அடிகள் தனது "Indian Thought of Roman Stoicism" என்ற கட்டுரையில் சிசரோ, குவிண்டிலியன், செனகா, காட்டுலஸ் (Cicero, Quintilian, Seneca & Catullus) ஆகியோருக்கும் சங்கத்தமிழ் கவிஞர்களுக்கும் இடையே உள்ள ஒற்றுமைக் கூறுகளை, ரோமானிய தமிழ் மன்னர்களிடையே இருந்த உறவுகளின் பின்னனியில் எடுத்துக்காட்டுகிறார்.[6]

வ.வே.சு.ஐயரே தமிழில் இணைநிலை ஆய்வினை ஆரம்பித்தார் எனலாம். அதிலும் குறிப்பாக மேலை இலக்கியவாதிகளுடன் தமிழ்க் கவிஞர்களை இணைத்துக் காணும் போக்கினைத் தம் Kambaramayana A Study எனும் நூலின் மூலம் (1921-22லேயே எழுதப்பட்டதானாலும் 1950இல் தான் அச்சேறியது) தொடக்கி வைத்தார். கம்பரை அவரது மூல மொழியாசிரியரான வால்மீகியையும் மிஞ்சியவர் என்று காட்டியதுடன், ஹோமர், வெர்ஜில், மில்டன் ஆகியோருடனும் ஒப்பிட்டுக் காட்டுகிறார். இணைநிலை ஆய்வுத் தமிழில் தொடர்ந்து நிலவ தொ.மு.சிதம்பர ரகுநாதன், வி.சச்சிதானந்தன், சாமுவேல்தாசன், ஜி.ஜான் சாமுவேல், எஸ். இராமகிருஷ்ணன், அ.அ. மணவாளன், சிற்பி, பாலசுப்பிரமணியன், கே. செல்லப்பன், ப.மருதநாயகம், வி.முருகன், ஜி.சுந்தரமூர்த்தி, தமிழண்ணல், கதிர்.மகாதேவன், ந.சுப்பிரமணியன், பத்மா சீனிவாசன், க.த.திருநாவுக்கரசு போன்றோரின் ஒப்பிலக்கிய ஆய்வுகள் காரணம் எனலாம்.

தமிழும் ஒப்பிலக்கியமும்

தமிழும் ஒப்பிலக்கியமும் எனக் காணும்போது, இது காறும் நடைபெற்றுள்ள ஆய்வுகளையும், எழுதப்பட்ட நூல்களையும் தொகுத்துக் காண்பதுடன், ஒவ்வொரு நூல் பற்றிய சிறுகுறிப்புகளுடன் (anotated bibliography) தொகுத்தும் வகுத்தும் வெளிக் கொணர்வது முதன்மையான பணியாக விளங்கும்.

ஒப்பீட்டு ஆய்வு நெறியியல்

தமிழ் இலக்கியங்களில் காணப்படும் சிறப்புக் கூறுகளைப் பிற மொழிக் கூறுகளுடன் ஒப்பிட்டும், தனி நூல்களின் ஒப்பீடாகவும், தனி ஆசிரியர்களின் ஒப்பீடாகவும் இன்று வரை ஆய்வுகள் பல வெளிவந்துள்ளன. அவற்றைத் தொகுத்து,

தமிழ் - ஆங்கில ஒப்பீடு

தமிழ் - பிற தென்னிந்திய மொழிகள் ஒப்பீடு

தமிழ் - வடமொழிகள் ஒப்பீடு

என்ற பெரும் பிரிவுகளாகத் தொகுத்துக்கொண்டு, ஒவ்வொரு தலைப்பிலும் உட்பகுப்புகளாக,

1. தனி நூல்கள் ஒப்பீடு
2. தனி ஆசிரியர் ஒப்பீடு
3. ஒரு குறிப்பிட்ட சமுதாய, அரசியல் இயக்கங்களின் தாக்கம் பற்றிய ஒப்பீடு
4. ஒரு இலக்கிய இயக்கத்தின் தாக்கம் பற்றிய ஒப்பீடு
5. இரு மொழி இலக்கியங்களிலும் காணக்கூடிய இணைநிலைகள் பற்றிய ஆய்வுகள்

என்று விரிவாக எடுத்துக் கொண்டு ஆராயலாம்.

மேலும் இந்த ஆய்வின் உட்பகுப்பாக ஒப்பிலக்கியக் கொள்கைககளை விளக்கும் நூல்கள், ஒப்பிலக்கிய நோக்கின் அடிப்படையில் அமைந்த நூல்கள், எனவும், பயில்முறை

அடிப்படையில் மாதிரிகளாக இருக்கும் நூல்களை அவை தோன்றிய ஆண்டுகளின் அடிப்படையில் முதன்மைப்படுத்தி, அவற்றின் அடிச்சுவட்டில் பின் வந்த நூல்களைத் தொகுத்துக் காட்டல் எனவும் அமையலாம்.

நூல்களைப் போன்றே பிற ஆய்வேடுகள், பிஎச்.டி., எம்.ஃபில் ஆய்வுக் கட்டுரைகள் எனப்பகுத்து இணைவரைகள், தாக்கம் போன்றவற்றுள் எவ்வகைப் போக்குகள் அதிக கவனம் பெற்றுளளன என்பதை எடுத்துக் கூறலாம்.

ஒவ்வொரு ஆய்வு பற்றியும் அதன் ஆய்வுப் பொருள் ஆய்வுப்பகுப்பு, முடிவுரை என்பனவற்றைக் கூறுவதுடன் அவ்வாய்வு பற்றிச் சிறு திறனாய்வாகவும் மதிப்பீடாகவும் அமைந்தால் பின்வரும் ஆய்வாளர்களுக்குப் பெரிதும் பயன்படக் கூடும். மேலும் இவ்வடிப்படையில் இந்திய இலக்கியங்கள் அனைத்தையும் உள்ளடக்கக்கூடிய ஒரு பெரிய அளவிலான ஆய்வுக்கு வழிவகுப்பதாகவும் அமையும்.

1. ஒப்பிலக்கியக் கொள்கைகளை விளக்குவன

1. தமிழில் ஒப்பிலக்கியம் பற்றி வெளியிடப்பட்ட முதல் நூல் க.கைலாசபதியின் "ஒப்பியியல் இலக்கியம்". இதன் முதல் கட்டுரை அறிவியல் பூர்வமாக ஐரோப்பாவில் ஒப்பியல் ஆய்வுகள் எவ்வாறு தற்சார்பின்றி நிகழ்த்தபெறுகின்றன என எடுத்துக்காட்டுவதுடன் குறுகிய வட்டார உணர்வுடன், தமிழின் தொன்மையை மிகைப்படுத்திக்கூறும் தன்மையும் கொண்ட தமிழ் ஆய்வுகளை நேர்படுத்தும் ஒரு ஆய்வுப்போக்காக, தமிழில் ஒப்பிலக்கியம் திகழக்கூடும் என்றும் சுட்டுகின்றது. இந்நூலில் இடம்பெற்றுள்ள தமிழில் ஒப்பிலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிய கட்டுரையே தமிழில் முதன்முதலில் இத்துறை பற்றிய வரலாற்று உணர்வுடன் தகுந்த எடுத்துக்காட்டுகளுடன் எழுதப்பட்ட ஒன்று எனலாம். இதன் பிற கட்டுரைகள் ஒப்பிலக்கியக் கோட்பாடுகளையும் அணுகுமுறையையும் திறம்படக்

கையாண்டு, எழுதப்பட [illegible] றும் பின்வரும் ஒப்பிலக்கிய ஆய்வுகளுக்கு முன்மாதிரி [illegible] கூடியவை என்றும் கூறுகிறார். வை.சச்சிதானந்தன்.[7]

2. ஒப்பிலக்கியக் கோட்பாடுகளைத் தமிழில் விளக்கும் நூல்களுள் இரண்டாவதாக வெளிவந்தது தமிழண்ணலின் ஒப்பிலக்கிய அறிமுகம். 1973இல் முதன் முதல் முதுகலை மாணவர்களுக்கு ஒப்பிலக்கியத்தின் பண்பும் பயனும், தோற்றமும், வளர்ச்சியும், கோட்பாடுகள், ஆய்வுநெறிகள் ஆகியன பற்றி அறிமுகப்படுத்தும் நோக்குடன் வெளியிடப்பட்டது. இதுகாறும் ஆறு பதிப்புகள் வெளிவந்துள்ளன. தமிழ் ஆய்வுப்போக்கிற்கு ஒப்பிலக்கியம் துணைபுரியும் ஆற்றையும் ஆய்வுகளங்களின் வீச்சுகளையும் சுட்டிச்செல்கிறது இந்நூல்.

3. ஜான் சாமுவேலின் தமிழில் ஒப்பாய்வுகளங்கள், பற்றிய நூலும் (இலக்கிய ஒப்பாய்வுக் களங்கள் 1978) ந. பிச்சமூர்த்தியின் ''இலக்கிய இயக்கங்கள்'' எனும் நூலும் ஒப்பிலக்கிய கொள்கைகளைப் பயன்படுத்துவதற்கு அடிப்படைத் தகவல்களைத் தரும் நூல்கள் எனலாம்.

4. வை.சச்சிதானந்தன் 1985இல் வெளியிட்ட "ஒப்பிலக்கியம் ஓர் அறிமுகம்" என்ற நூலில் ஒப்பிலக்கியத்தின் இலக்கண வரையறைகள், வழிவகைகள் போன்றவற்றை விளக்குவதுடன் தாக்கம், ஏற்பு, இலக்கிய வகைகள், காலப்பகுதிகள், இலக்கிய இயக்கங்கள், அடிக்கருத்தியல், போன்ற ஒப்பிலக்கியத்தின் முதன்மையான, ஆய்வுக்களங்களை விளக்கிக் கூறுகிறார். மேலும் ஒப்பிலக்கியத்திற்கு அடிப்படையான கூறுகளில் ஒன்றான மொழி பெயர்ப்பு பற்றியும் இலக்கியத்தை உளவியல், சமூகவியல் ஆகிய பிற துறைகளுடன் ஒப்பவைத்தும் இணைத்தும் காட்டுகிறார். ஒப்பிலக்கியத்தின் முழுமையான வரலாறும், மேலைநாட்டு கீழைநாட்டு ஒப்பிலக்கிய வாதிகள் பற்றிய சிறுகுறிப்பும் பெற்றிருப்பது இந்நூலின் தனிச்சிறப்பாகும். இந்நூலே ஒப்பிலக்கியம் பற்றிய மேல் நாட்டு அறிஞர்களான நியூட்டன்

ஸ்டாக்னெட், ஹார்ஸ்ட் ஃபிரன்ஸ், எஸ்.எஸ். பிராவர், உல்ரிச் வெயிஸ்ட்டீன், ஃபிராங்க்காய்ஸ் ஜோஸ்ட் ஆகியோரின் நூல்களின் அடிப்படையிலும் (Newton P. Stallknecht, Hortst Frenz S.S. Prawer, Ulrich Weisstein, Frencois Jost) பிறஆய்வுக் கட்டுரைகளின் அடிப்படையிலும் எழுதியிருப்பதாக இதன் ஆசிரியர் கூறுகிறார். எனினும் வெயிஸ்ட்டீனின் தாக்கமும், ஹென்றி எச்.எச். ரிமாக்கின் தாக்கமும் நூல் முழுவதும் காணப்படுகிறது. தமிழில் இலக்கியமும் உளவியலும், இலக்கியமும் சமுதாயவியலும் என்ற பார்வையுடன் திறனாய்வுப் போக்குகள் அதிகம் வளர்ச்சியுற்றிருப்பதே அவ்விரண்டு இயல்களையும் தான் இந்நூலில் சேர்த்தற்குக் காரணம் என்கிறார் வை.சைச்சிதானந்தன்.[8]

5. தமிழில் ஒப்பிலக்கியக்கொள்கை விளக்க நூல்களுள் அடுத்தது கா.செல்லப்பனின் ''ஒப்பியல் தமிழ்'' இந்நூலில் ஏற்கனவே "ஒப்பியல் இலக்கியம்" எனவும் ஒப்பிலக்கியம் எனவும் குறிப்பிடப்படும் இவ்வியலுக்கு "ஒப்பியல் தமிழ்" என்ற புதுப் பெயர் ஏன் என்ற வினாவை ஆசிரியரை எழுப்பி அதற்கு விடையும் அளிக்கிறார். ஒப்பியல் இலக்கியம் ஒப்பிலக்கியம் என்னும் பெயர்கள் ஒரு குறிப்பிட்ட மொழியைச் சார்ந்து இல்லாமல் ஒரு பொதுஇலக்கிய வகையாகச் சுட்டுகின்றன என்றும் தமிழ் மொழியின் ஓர் அங்கமாகப் பன்னெடுங்காலமாக வளர்ந்து வரும் இயற்றமிழின் ஒரு புது மலராகக் காண்பதுதான் புதுப்பெயரின் நோக்கம் என்பதும் தெரிகிறது. மேலும் "ஒப்பியல் இலக்கியம்" "ஒப்பிலக்கியம்" இரண்டும் இலக்கியத்தை மையமாகக் கொண்டும் ''ஒப்பியல் தமிழ்'' என்பதில் தமிழை மையமாகக் கொண்டும் நோக்குகின்றன என்றும் விளக்குகிறார்.[9]

இந்நூலுள் ''ஒப்பியல் இந்திய இலக்கியம் சிக்கல்களும் அணுகுமுறைகளும்" என்ற கட்டுரை ஒப்பிலக்கியத்தை இந்தியக் கண்ணோட்டத்துடன் காணமுனைகிறது.

ஒப்பியல் இந்திய இலக்கியம், இந்திய ஒப்பிலக்கியம் என்ற தொடர்களின் பொருளும் நோக்கமும் விளக்கப்படுவதுடன், ஒப்பியல் நெறிமுறைகளை இந்திய இலக்கியங்களுக்கேற்ப "இந்தியத்தன்மை' அடிப்படையில் ஒரு தேசியக் கண்ணோட்டத்துடன் செயல்படுத்த வேண்டும் என்பதை எடுத்துரைக்கிறது.

இவ்விரண்டு கட்டுரைகளும் ஒப்பிலக்கியக் கொள்கை அடிப்படையில் அமைய, பிறகட்டுரைகள் யாவும் பயில்முறை அடிப்படையில் ஒப்பிலக்கிய நெறிகளுக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாக விளங்குகின்றன. இங்கும் ஆங்காங்கே ஒப்பிலக்கியக் கோட்பாடுகளின் விளக்கங்களும், தமிழ் இலக்கியங்களை ஏனைய இலக்கியங்களுடன் இணைத்துக் காணும் ஒப்பீட்டுப் பார்வைகளுக்கு அடித்தளங்களாக அவற்றைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட செயல்முறைத் திறனாய்வுப் போக்கும் காணப்படுகிறன்றன. குறிப்பாக "ஒரு மனிதம் ஓர் இலக்கியம்". எனும் கட்டுரை ஒப்பிலக்கியம் பற்றிய சுருக்கமான, செறிவான, விளக்கமாகத் திகழ்கிறது.. ஏற்பு, மொழிபெயர்ப்பு, தாக்கம் ஆகியவற்றுடன் அடிக்கருத்தியல் பற்றிய தெளிவுரைகள் ஒப்பிலக்கிய ஆய்வுகளுக்கு ஊற்றுக்கண்ணாக விளங்கக்கூடியவை.

கா. செல்லப்பனின் பிறநூல்களான "எங்கெங்கும் காணினும் சக்தி"(1981) "இலக்கியத்தின் பழம்புதுமையும் புதுப்பழமையும்" (1986) ஆகிய இரு நூல்களும் தமிழ் இலக்கியத் திறனாய்விற்கு புதிய அணுகுமுறைப் பரிமாணங்களைக் காட்டுவன.

6. முதல் நூலில் (எங்கெங்கு காணினும் சக்தி) காலத்தால் மொழியால் வேறுபட்ட பல இலக்கியப் படைப்பாளிகளின் படைப்புகளில் சக்தியின் பல்வேறு முகங்களைப் படைத்துக்காட்டும் தன்மைகளில் காணக்கூடிய ஒற்றுமைகளை எடுத்துக்காட்ட முனைகிறார் கா.செல்லப்பன். பாரதிதாசனும் ஷெல்லியும், வேர்ட்ஸ் வொர்த்தும், திரு.வி.கவும், மு.வ.வும், டி.எச்.லாரன்ஸ்சும் இயற்கையின் பல கூறுகளில் சக்தியைப் பல சாகைகளில் கண்டதை எடுத்துக்காட்டுகிறார். அமைதியின் இருப்பிடமாக,

ஆவேசமாக, இறைமையினை அணுக வழிவிடுவதாக, சக்தியை இயற்கையோடு இணைத்துக் கண்டதை விளக்கும்போதே ஒவ்வொரு ஆசிரியரையும் அவரது முழுபின்புலத்தைப் புரிந்து கொண்டு ஒப்பிடவேண்டும் என்ற அடிப்படையான ஒப்பிலக்கிய கொள்கையைச் செயல்முறையில் விளக்கிக்காட்டுகிறார். தேரோவின் வாழ்க்கைக் கண்ணோட்டத்தை எமர்சனின் கண்ணோட்டத்தில் இருந்து வேறுபடுத்திக்காட்டி, காந்தியடிகளுக்கும் தேரோவிற்கும் மனித உரிமைகளுக்காகவும் மனச்சான்றுகளுக்காகவும் போராடியதிலும் ஆன்மீக அரசியல் அடிப்படையிலும் ஒற்றுமை இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறார்.

7. இரண்டாவது நூலான இலக்கியத்தில் பழம்புதுமையும் புதுப்பழமையும் என்பதில் மு.வ.ஜெயகாந்தன், கல்கி, சுத்தானந்தபாரதி ஆகியோரின் கற்பனை வளத்திற்கு அடிப்படையானவை தொல்பழமையான மூலப்படிவங்களே என்று, மூலப்படிவத் திறனாய்வு அணுகுமுறையில் அவர்களது படைப்புகளுக்குப் பழமைவிளக்கம் தருகிறார். இன்றைய இலக்கிய வகைகளான புதுக்கவிதையிலும் புதினங்களிலும் வடிவவளர்ச்சி ஏற்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டுகிறார். கவிதையின் வடிவ மாற்றத்திற்கும் சொல்லாட்சி வேறுபாடுகளுக்கும் கூட சங்கப்பழமையின் ஊற்றுகண் காரணமாக இருப்பதை எடுத்து விளக்குகிறார்.

இவ்வாறு ஒரு இலக்கிய வகையின் வளர்ச்சியை வரலாற்றுணர்வுடன் எடுத்து விளக்குவதும் ஒப்பிலக்கிய ஆய்வுபோக்குகளுள் ஒன்றே. இங்கு மற்றொரு கருத்தும் நினைவிற் கொள்ளவேண்டும். இவ்விரு நூல்களும் ஒப்பிலக்கிய கொள்கைகளுக்குச் செயல் விளக்கங்களாக அமைபவை. கருத்துத் தொடர்பினால் இவை இங்குக் குறிப்பிடப்பட்டன.

8. கொள்கை விளக்க நூல்களுள் அடுத்து வருவது "ஒப்பிலக்கியக் கொள்கைகள்" எனும் நூல். ம. திருமலையும் அவரது மாணவரான ரா.சீனிவாசனும் இணைந்து எழுதிய இந்நூலில் முதற் பகுதி ஒப்பீட்டிற்கும் ஒப்பிலக்கியத்திற்கும் உள்ள வேற்றுமைகளை எடுத்துக்காட்டுகளுடன் சுட்டுகிறது. மேலும் ஒப்பிலக்கிய ஆய்வுப் போக்குகள் எவ்வாறு அமையமுடியும் எனச் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்குகிறது. இரண்டாவது கட்டுரை ஒப்பிலக்கியத்தில் பேரிடம் வகிக்கும் இணைநிலைக் கொள்கையை வரையறைகளுடன் விளக்குவதோடு அதன் வகைகளையும் சுட்டிக்காட்டுகிறது. கட்டுரையின் பிற்பகுதி பயின்முறை அடிப்படையில் முதல் தமிழ் மலையாள நாவல்களை அதன் தோற்றச் சூழல்களின் பின்னனியுடன் ஒப்பிட்டுக் காட்டுகிறது.

மூன்றாவது கட்டுரை, பிரெஞ்சு ஒப்பிலக்கிய வாதிகளால் பெரிதும் பின்பற்றப்பட்ட தாக்கக் கோட்பாட்டினை அதன் ஆறு வகைமைகளாகக் பிரித்துக்காட்டி விளக்குகிறது. அத்துடன் மார்க்ஸிம் கார்க்சியின் "தாய்" நாவலும் ஜெயகாந்தனின் "பாவம் இவள் ஒரு பாப்பாத்தி"யும் தாக்க அடிப்படையில் ஒப்பீடு செய்யப்படுகின்றன.

9. "க.நா.சுவும் கைலாசபதியும்" என்ற நூலில் பு.சி.கணேசன் தமிழிலக்கிய விமர்சனத்திற்குக் க.கைலாசபதியின் பங்களிப்பைப் பற்றிக் கூறும் போது அவரது Heroic Poetry எனும் நூலின் முன்னுரையில் "ஒப்பிலக்கியச் சிந்தனை தனக்கு உருவாக்குவதற்குரியவரை நினைவு கூர்வதை எடுத்துக்காட்டுகிறார்.[10] "இலங்கைப் பல்கலைக் கழகத்திலே எனக்குத் தமிழறிவித்த பேராசிரியர் கணபதி பிள்ளை உலகஇலக்கியங்களை அளந்து உணர்த்தியவர். எனது ஒப்பிலக்கிய வேட்கைக்கு உற்சாகம் தந்து உரம் ஊட்டியவரும் அவரே. பர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்தில் எனது ஆராய்ச்சிக்கு மேற்பார்வையாளரான பேராசிரியர் தாம்சன், "நடமாடும் கலைக்களஞ்சியம்" என்று வழங்கப்பட்டவர். ஒப்பியலின் தத்துவங்கள் பற்றி அவரிடம் கற்றது மட்டுமின்றி அவற்றிற்கு உருவம் கொடுக்கவும் பழகிக்கொண்டேன்" என்ற

கைலாசபதியின் கூற்றை எடுத்துக்காட்டி, மேலும் இவரது "தமிழ் வீரயுகப் பாடல் தோன்ற மில்மன் பரியும் சாட்விக் தம்பதியரும் சி.எம்.பௌராவும் சித்தாந்தாவும் காரணம் என்று கூறுகிறார். அடுத்து க.நா.சு - கைலாசபதி அணுகுமுறைகள் எனும் கட்டுரையிலும் தமிழில் ஒப்பியல் துறைபற்றியும் ஒப்பியல் நோக்கு பற்றியும் கூறுகிறார்.

ஒப்பிலக்கிய நோக்கில் தமிழில் எழுதிய க.ப.அறவாணன் (கவிதை கிழக்கும் மேற்கும்) கே.செல்லப்பன் (இளங்கோவும் ஷேக்ஸ்பியரும் - துன்பியல் நோக்கில் ஒப்பாய்வு) கதிர்.மகாதேவன் (ஒப்பியல் நோக்கில் சங்ககாலம்) கோ.சுந்தரமூர்த்தி (பழந்தமிழ் இலக்கியக் கொள்கைகள் ஓர் ஒப்பியல் ஆய்வு) போன்றோரைச் சுட்டிக்காட்டுகிறார். இவையாவும் ஒப்பிலக்கியக் கொள்கைகளை, நோக்குகளை அடிப்படையாகக் கொண்டு தமிழ் இலக்கியங்களை மேலையிலக்கியங்களுடன் ஒப்பிடும் நூல்கள். கோ.சுந்தர மூர்த்தியின் பழந்தமிழ் இலக்கியக் கொள்கைகள் பற்றிய நூல், தொல்காப்பியர் சுட்டும் இலக்கியக் கொள்கைகளை, வடமொழி இலக்கண ஆசிரியர்களான ஆனந்தவர்த்தனர், அபிநவ குப்தர், பரதர், தண்டி, ஆகியோரின் அழகியல் கோட்பாடுகளுடன் ஒப்பிட்டுக்காட்டி விளக்குகிறது.

10. ஒப்பிலக்கியம் தமிழ் வளர்ச்சிக்கு எவ்வாறு உதவ முடியும் என்ற நோக்கில் ஒப்பிலக்கியத்தைக் காணும் ச.வே. சுப்பிரமணியன் "கடலில் மூழ்குபவனுக்கு மிதவையாக ஒரு மரக்கட்டை கிடைப்பது போல நமக்கு கிடைத்திருக்கிறது ஒப்பிலக்கியம்" என்கிறார்.[11] இதன் மூலம் நமக்கு உரிமையான, சரியான இடத்தை, உலகயிலக்கிய அரங்கில் பெறுவதற்கான நம்பிக்கையைத் தருவது இது என்று கூறும் இவர் ஒப்பிலக்கியக் கல்வி நமது தமிழ் ஆய்வுகளின் வழிமுறைகளை மேலும் அறிவுபூர்வமாக ஆக்கவும் பயன்படும் என்கிறார்.

நமது சிறப்புமிக்க செவ்வியல் இலக்கியங்களை அவற்றின் தொல்மரபுகள், அடிக்கருத்துகள், புதுமைமங்கா படைப்பாக்க

முறைகள், மெய்ப்பொருளை நாடும் நாட்டம் ஆகியனவற்றை உலகிற்கு அறிமுகப்படுத்த ஒப்பிலக்கியம் பயன்படக்கூடும் என்றும் மேலைநாட்டின் இலக்கியத்திறனாய்வின் புதிய போக்குகளையும் நோக்குகளையும் இங்கு கொணர்வதுடன் புதிய படைப்பாக்க வழிமுறைகளையும் போக்குகளையும் இங்கு கொணரக்கூடும். இதனால் நமது இலக்கியத்திறனாய்வுகளின் வீச்சு அதிகரிக்கப் படுவதுடன் நம் இலக்கியம் வளமைபெறும் என்றும் கூறுகிறார்.

தற்சார்பின்றி, நம்முன்னோர்கள் பற்றிய மனிதத்துவ விழுமியங்களையும் பண்பாட்டுச் சிறப்புகளையும் நம்மைப்போன்றே தொன்மைமிக்க பண்பாடுடையோர் இலக்கிய மரபுடையோர் உலகின் பிறபாகங்களில் உண்டு எனப்புரிந்துகொண்டு, ஏற்றுக் கொண்டு அவர்களுடன் இணைநிலைகளைச் சுட்டிக்காட்டி ஒப்பீடு செய்து எடுத்துக்காட்டும் முறையை ஒப்பிலக்கியம் நமக்கு வழங்கியிருக்கின்றது என்கிறார்.

ஜி.யூ.போப் முதல் ஜி.எல்.ஹார்ட் வரை மேல்நாட்டு அறிஞர்கள் தமிழின் சிறப்பை எடுத்துக்கூறியிருப்பினும் உலகயிலக்கிய அரங்கில் தமிழ் பெற்றுள்ள இடம் என்ன?. தொன்மை மிக்க இலக்கிய மரபுகளைப் பெற்றிருப்பதாகக் கூறும் பலரிடையே நாம் எங்கே இருக்கிறோம் என்ற வினாக்களுக்கு விடைதேட முயலும் போதுதான் உலகோரின் பார்வையில் நம் இலக்கியம் இருப்பதே தெரியாமல் இருக்கிறது என்று வருந்தும் இவர் இதற்குக் காரணம் இந்த மண்ணின் மைந்தர்களே என்கிறார். நம்முள் பழம்பெருமைகளைப் பேசிக்கொண்டு, நம்மைப்பற்றிக் கூறிக்கொள்ளும் 'முதன் முதலில்', 'தலைசிறந்த' என்பனயாவும் நம்மைப்பிறரிடம் இருந்து ஏற்றுக்கொள்ள இயலா தனிமையில் தள்ளிவிட்டன என்கிறார்.[12]

ஒப்பிலக்கியத்திற்கு இரு பகைவர்கள் உண்டு எனக்கூறும் ச.வே.சுப்பிரமணியன், ஒன்று நம் இலக்கியத்தில் இல்லாதே இல்லை, என்ற போலியான உள்ள நிறைவு. தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்ற இம்மனநிலையால் ஒப்பீடு என்ற

கருத்தமைவே அடிப்பட்டு போகிறது என்றும் இரண்டாவதாக, தேசப்பற்றின் தூண்டலும் பண்பாட்டு விரிவாக்கம் பற்றிய எண்ணங்களும் என்கிறார். இது ஒப்பிலக்கியத்தின் வளரும் உயிர்ப் பகுதியையே துளைத்துத் தின்றுவிடும் காசநோய் என்கிறார். மனிதநேயமிக்க இத்துறை மேலும் வளரவேண்டுமெனில், சரியாக கிளைவிட்டுப் பரவவேண்டுமெனில், இவ்விரண்டு மனப்போக்குகள் பற்றி மிக விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும் என்கிறார்.

நமது இலக்கியங்களை உலகப்பொதுவானதாக்குவதை இத்தகைய மனப்போக்குகளே தடைசெய்து வந்துள்ளன. இன்று பல தமிழ் அறிஞர்கள் இதனை உணர்ந்துள்ளனர். ஒப்பிலக்கியம் என்பது அந்தந்த நாட்டு தேசிய இலக்கியங்களின் உயிர்த்தன்மையைப் புறக்கணிப்பது அல்ல என்பதையும் தேசிய இலக்கியமும் பொதுமை இலக்கியமும் ஒன்றை ஒன்று சார்ந்தவை. அத்துடன் வெவ்வேறு வட்டார, தேசிய இலக்கியங்களின் புனிதமான ஒருமையே பொதுமை இலக்கியத்திற்கும் உலக இலக்கியத்திற்கும் அடிப்படை என்பதை ஒப்பிலக்கியவாதிகள் உணரவேண்டும். அப்போது தான் ஒருமை உணர்வைப் பெறமுடியும் என்கிறார்.

இலக்கிய கொள்கைகளுக்கும் இலக்கிய படைப்புகளுக்கும் இடையே நிலவவேண்டிய ஒருமைபற்றிய உணர்வுடன் செயல் படவும், இலக்கியத்திற்கும் மனிதஎண்ணங்களின் வெளிப்பாடான பிறதுறைகளுக்கும் இடையேயான இணைநிலைகளை வெளிக் கொணரவும், நம் கலைப்படைப்புகளில் காணக்கூடிய அடிக்கருத்துகள், வாழ்வியல் விழுமியங்கள், மதிப்பீடுகள் போன்றவற்றை மீட்டு உருவாக்கவும் ஒப்பிலக்கியக் கல்வி பயன்படும் என்கிறார்.

சங்கப்பாடல்களில் பேசப்படும் ஆண்பெண் காதல் நிலைகளைப் பேசும் பாடல்களில் இயற்கைக்கும் மனிதனுக்கும் உள்ள இடையுறவுகள் மட்டுமின்றித் தொன்மக்கதைகளும், சடங்குகளும் மறைந்துக் கிடக்கின்றன. அவற்றின் முழுப்

பொருளையும் அறிந்துகொள்ள, யுங்கின் கூட்டு நனவிலியையோ தங்கவில் (Golden Bow) என்ற பல தொகுதிகளை எழுதிய ஃபிரேசரின் ஆழ்ந்த பார்வையோ, ஃபிராய்டின் உளப்பகுப்பாய்வையோ டி.எச். லாரன்ஸ் கூறிய Blood Conciousness, என்பதையோ அடிப்படையாகக் கொண்டு காண்பது மேலும் ஆழ்ந்த பொருட்புலப்பாட்டுக்கு வழிவகுக்கும் என்கிறார் ச.வே.சுப்பிரமணியன். அத்துடன் பிரிக்க இயலாத மனஅன்மை கொண்ட தலைவன் தலைவி உறவின் ஈடுபாட்டை நன்கு அறிந்துகொள்ள அது உதவும்.

இதே போன்று ஆழ்வார்கள், நாயன்மார்கள் பாடல்களை ஆங்கில மெய்மையியற் கவிஞர்களுடன் அடிக்கருத்து அடிப்படையிலும், பாக்களின் உருவ அடிப்படையிலும் ஒப்பிட்டுக் காணலாம், இதனால் வைஷ்ணவ, சைவ சமயப்பார்வைகளுக்குப் புதிய வெளிச்சம் கிடைக்கும் என்கிறார்.

11. "தென்னிந்திய இலக்கியங்களின் ஒப்பிலக்கிய ஆய்வின் இயல்பும் நோக்கமும்" எனும் கட்டுரையில் அய்யப்ப பணிக்கர் இதுகாறும் வந்த ஒப்பிலக்கிய ஆய்வுகள் மேல் நாட்டு ஆசிரியர்களை இந்திய ஆசிரியர்களுடன் ஒப்பிட்டுத் தாக்கத்திற்கும் இணைநிலைகளைக் காண்பதற்கும் முக்கியத்துவம் தரப்பட்டு நிகழ்த்தப்பட்டுள்ளன என்றும் தென்னிந்திய மொழிகளுக்கிடையே அதிகமான ஒப்பீடுகள் காணப்படவில்லை என்றும் கூறுகிறார்.[13]

இந்த எண்ணத்தைப் போக்குமாறு இன்று மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திலேயே இரு ஆய்வேடுகள் அளிக்கப்பட்டுள்ளன. வள்ளத்தோள், குருஜாட அப்பாராவ், பாரதி ஆகிய மும்மொழிக் கவிஞர்களைப் புனைவியல் கவிஞர்களாகக் காணும் பா.ஆனந்த குமாரின் ஆய்வும், தமிழ் மலையாள முதல் மூன்று நாவல்களின் இணைநிலைகளைக் காணும் இரா. சீனிவாசனின் ஆய்வும் "தமிழ் - தெலுங்கு பக்தி இலக்கியங்களில் அடிக்கருத்துப் பெயர்ச்சி" எனும் வி.ச. ஈஸ்வரியின் முனைவர் பட்ட ஆய்வும்) குறிப்பிடத்தக்கவை. ஜி.ஜான் சாமுவேலின் பாரதியையும் குமரனாசானையும் ஒப்பிட்டு எழுதிய கட்டுரையும் இத்தகையதே.

பல்கலைக்கழக மானியக்குழுவும் தெலுங்கு -ஒப்பிலக்கியத் துறையும் இணைந்து நடத்திய தேசியக் கருத்தரங்குகள் ஐந்திலும் தென்னிந்திய மொழிகளின் ஒப்பாய்வுகள் பெரும் பங்கு பெற்றுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நூல் ஆசிரியரின் ''தமிழ் - தெலுங்கு மொழிகளில் உளவியல் நாவல்கள்'' ''பாரதிதாசனும் ஜாஷ்வாவும்'' ''தமிழ் தெலுங்கு பக்தி இலக்கியங்களின் இடைத்தொடர்புகள்'' போன்ற கட்டுரைகளில் தமிழும் தெலுங்கும் ஆய்வுக் களங்களாக இருந்தது குறிப்பிடத்தக்கது. ஆனால் இவையாவும் ஐயப்ப பணிக்கர் கூறியது போல அந்தந்த கருத்தரங்குகளில் கருத்துப் பரிமாற்றங்களாகவும் ஆரம்ப வித்துகளாகவுமே இருந்தன என்பதும் அவை மேலும் ஆழ்ந்த ஆய்வுகளாக வளர வழி இருந்தும் மேற்கொண்டு வளரவில்லை என்பதும் உண்மையே.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய திராவிட மொழிகள் ஒரு பொதுவான மூலத்திலிருந்து கிளைத்தன வாதலால் இவற்றிடையே பொதுவான தன்மைகள் அதிகம் காணக்கிடைக்கும் எனவும் தமிழ் சங்க இலக்கியத்திற்கும், இந்நான்கு மொழிகளிலும் இலக்கிய வளர்ச்சிக்கும் உள்ள தொடர்பை ஒப்பிட்டுக்காண்பதும் அவ்வாறு காணும் போது இவற்றில் வடமொழியின் தாக்கமும் விளைவும் பற்றிக் காணலாம் எனவும் கூறுகிறார் அய்யப்பபணிக்கர்.

திராவிட அழகியல் பற்றிய ஆய்விற்குத் தொல்காப்பியத்தின் ஒன்பது இயல்களும் அடிப்படையை நல்கவல்லன எனவும் ஐந்திணைக் கோட்பாடுகள் வழி இன்றைய திராவிட இலக்கியங்களைக் காணமுடியும் என்றும் கூறுகிறார். இதற்கு எடுத்துக்காட்டாக நெய்தற் திணைக்கூறுகளும் கோட்பாடுகளும் தகழி சிவசங்கரன்பிள்ளையின் செம்மீனில் எவ்வாறு இடம் பெற்றுள்ளது எனக்காட்டும் தன் கட்டுரையில் எடுத்துக் கூறுகிறார்.

மொழியியல் நோக்கில் திராவிட மொழிகளும், துளு, கொங்கணி, உருது போன்ற கிளைமொழிகளும் ஒப்பியல் ஆய்வுக்கு உட்பட்டுள்ளன. இவற்றின் இலக்கியங்களிலும் ஒப்பிலக்கிய

ஆய்வுகள் நிகழ்த்தப்படவேண்டும். அதற்கு மானிடவியல், கட்டிடக்கலையியல், சமூகவியல், வரலாற்றியல் போன்ற பிற துறை வெளிச்சத்தினையும் உறுதுணையாகக் கொள்ளலாம். நாட்டுப்புறவியலின் ஆய்வும் இனக்குழு மக்களைப்பற்றிய ஆய்வும் ஒப்பிலக்கிய நோக்கில் நிகழ்த்தப்படுமாயின் இம்மொழிகளில் பொதுக்கூறுகள் பலவற்றைக் கண்டு கூறமுடியும். தலைமைப் புனைவுக்கூறுகள் (Motifs) பல தென்னிந்திய மொழி நாட்டுப்புற இலக்கியங்களில் இடம்விட்டுப் பெயர்ந்து சென்றிருப்பதைக் காணயியலும். இவற்றையெல்லாம் தொகுத்துக் காணும்போது, இப்பகுதி மக்களின் பண்பாட்டு, இன மரபுகள் பற்றி அறியமுடியும்.

திராவிட மொழிகளுடன் தொடர்புடைய அண்டைய மொழிகளில் இவற்றின் தாக்கம் பற்றியும் அவற்றிலிருந்து திராவிட மொழி பெற்றவற்றையும் அறிவது வரலாற்று, சமூகவியல் உண்மைகளைப் புரிந்து கொள்ள உதவும். இலக்கியப் போக்குகளின், மக்களின் ரசிகத் தன்மையிலும் ஏற்பட்ட மாற்றங்களுக்கான காரணங்கள் புரியும்.

இவ்வாறான ஆய்வுகள் கருத்தரங்குகளில் மட்டும் நிகழ்த்தப்படாமல் தொடர்ந்து ஒரு கூட்டு முயற்சியுடன் குறுகிய வட்டார மனப்பான்மையைக் கடந்து தொடர வேண்டும் என்றும், பல்கலைக்கழக ஆய்வாளர்கள் பிற மாவட்ட பல்கலைக் கழகங்களுடன் தொடர்ந்த தொடர்பும் கருத்துப் பரிமாற்றமும் கொள்ள வாய்ப்பும் வசதியும் ஏற்படுத்தவேண்டும். அப்பொழுது தான் ஒப்பியல் இந்திய இலக்கிய ஆய்வுகள் முழுமையும் நிறைவும் அடையும் எனவும் இவற்றிற்கு அடிப்படையாக, இந்த பகுதிகளுக்கு ஏற்ற ஒப்பிலக்கிய ஆய்வு நெறி வகுக்கப்படவேண்டும் என்றும் கூறுகிறார் அய்யப்பபணிக்கர். அது தேசிய ஒற்றுமைக்கும் இந்திய இலக்கிய ஒருமைப்பாட்டிற்கும் உதவும். பிற மாநில இலக்கிய அறிவு ஒவ்வொரு மாணவனுக்கும், இளங்கலை, முதுகலை அளவிலும் முனைவர் பட்ட அளவிலும் அவசியம் வற்புறுத்தப்படவேண்டும் என்கிறார் இவர்.

12. இவையேயன்றி வை.சச்சிதானந்தன்[14], ஜோ. விக்டர்[15], எஸ். ராமகிருஷ்ணன்[16], த. ஜெயகாந்தன்[17], செ.சாரதாம்பாள்[18] ஆகியோர் ஒப்பிலக்கியம் என்றால் என்ன என்றும் அதன் நோக்கங்கள் பயன்கள் பற்றியும் பலகட்டுரைகளில் தாம் உணர்ந்தவாறு எடுத்துக்கூறுகின்றனர். அ.ரமேஷ் தன் எம்ஃ.பில் பட்டத்திற்காகத் 'தமிழில் ஒப்பிலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்' எனும் ஆய்வேட்டை அளித்துள்ளார்[19].

13. ஒப்பிலக்கியக் கொள்கைகளை அடியொற்றி ஆங்கிலக் கவிஞர்களையும் தமிழ்க் கவிஞர்களையும் ஒப்பிட்டுக் காட்டும் போக்கு வ.வே.சு.ஐயரால் 1921-22லேயே ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து வருகிறது. தொ.மு.சிதம்பர ரகுநாதன் 'பாரதியும் ஷெல்லியும்' நூலில் இரு படைப்பாளிகளின் கவிதை பற்றிய கண்ணோட்டங்களையும் அரசியல் பற்றிய கருத்துக்களையும் எடுத்துக்காட்டுகிறார். "ஷெல்லியின் கவிதைகளில் இருந்தும், நோக்குகளில் இருந்தும் பாரதி பெற்ற உயிரோட்டமுடைய ஆவலை வெளிக்கொணர்வதாக இருப்பதற்குப் பதிலாக, திறனாய்வாளரின் (தொ.மு.சி) இடதுசாரி கம்யூனிச கொள்கையடிப்படையில் புரட்சிக் கருத்துக்களை இரு ஆசிரியர்களிடமிருந்தும் எடுத்துக் காட்டுகிறார்." என்கிறார் வை.சச்சிதானந்தன்[20].

14. வை.சச்சிதானந்தனின் 'பாரதி பெற்ற மேலை எண்ணங்களின் தாக்கம்' (Impact of Western Thought on Bharathi) எனும் நூலில் தமிழ் இலக்கியத்தில் புதுக்கவிதைக்கு வித்தூன்றிய பாரதி மேலைநாட்டுப் புனைவியல் கவிஞர்களான ஷெல்லி, வேர்ட்ஸ்வொர்த், பைரன், வால்ட்விட்மன் போன்றவர்களின் தாக்கத்திற்கு ஆளாகியிருப்பதை அகச்சான்றுகள் மூலமும் புறச்சான்றுகள் மூலமும் எடுத்துக்காட்டுகிறார். ஷெல்லியிடம் இருந்து பெண்மையின் மேன்மை பற்றிய நோக்கும், புரட்சிக் கருத்துகளும் பாரதியைப் பாதித்து, புதுமைப் பெண்ணைப் படைக்கவும் சமூக, அரசியல் நீதிக்காகக் குரல் எழுப்பவும் செய்தன என்றும் இயற்கையில் இறைமையைக் காணும் தன்மையையும் சாதாரண மக்களின் பேச்சு வழக்கை வசன கவிதையில் பயன்

படுத்துவதையும் வேர்ட்ஸ்வொத்திடம் இருந்தும் பைரனின் மொழிநடையிலிருந்தும் பெற்றார் என்றும் கூறுகிறார் சச்சிதானந்தன். 'நான்' எனும் தன் முனைப்பை விழுப்ப உணர்வுடன் 'யாம்' என உயர்த்திக் காணும் உணர்வுநிலை, பேச்சு வழக்குச் சொற்களைக் கவிதைகளில் பயன்படுத்துதல், ஜனரஞ்சகமான கவிதை மெட்டுகளில் பாக்களை யாத்தல், மக்களிடையே எளிதில் பரவக்கூடிய அடிக்கருத்துகளைக் கையாளுந்திறன் போன்றவற்றில் மேலையிலக்கியப் புனைவியல் கவிஞர்களின் தாக்கத்தை உணர முடிகிறது என்கிறார். 'புல்லின் இதழ்கள்' என்ற வால்ட்விட்மனின் கவிதைதான் முதல் வசன கவிதையைத் தமிழில் தரத்தூண்டியது என்கிறார்.

15. இவரது "வால்ட்விட்மனும் பாரதியும்" என்ற ஒப்பியல் நூலும் தத்துவநிலை, இயல்கடந்தநிலையில் மெய்ப்பொருளில் நாட்டம், அரசியல்நிலை, உருக் காட்சிகளைப் படைத்தல் போன்றவற்றின் அடிப்படையில் இரு கவிஞர்களிடமும் உள்ள ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் எடுத்துக் காட்டுகிறது.

16. 'சோமல' 1970 இல் பாரிசில் நடந்த மூன்றாவது அனைத்துலகத் தமிழ் மாநாட்டில் (Europian Imapact on Modern Tamil writing and Literature)" தற்காலத் தமிழ் எழுத்திலும் இலக்கியத்திலும் ஐரோப்பியத் தாக்கம்" எனும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரையை வழங்கினார். இது பின்னர் நூல் வடிவிலும் வெளிவந்தது.

ஆங்கிலேயரின் வரவினாலும் அவர்களது அச்சுக்கலையின் வரவாலும் தமிழ் எழுத்து பெற்ற மாற்றங்களும் பயன்களும் பற்றிக் கூறிப் பின்னர் ஆங்கில அறிஞர்களால் உரைநடையும், அகராதிக் கலையும் தமிழில் வளர்ந்ததையும் பின்னர் அவர்களால் தமிழ் மொழியியல்துறை பெற்ற ஆக்கங்களையும் ஊக்கங்களையும் சுட்டுகிறார் இவர்.

உரைநடையைப் போன்றே கவிதையிலும் மேலை நாட்டாரின் தாக்கம் ஏற்பட்டது. பெஸ்கி எனும் வீரமாமுனிவர் தம் தேம்பாவனியில் இலத்தீன், போர்ச்சுகீசியர் கருத்துக்களையும் உருவகங்களையும் தாஸோ, தாந்தே, வெர்ஜில் ஆகியோரது கருத்துக்களுக்கு இணையானவற்றையும் தமிழ்க் கவிதை வடிவில் தந்தவர். ஜி.யு.போப், எஃப்.டபிள்யூ.கெல்லெட், ஆகியோரின் தூண்டுதலால் பரிதிமாற்கலைஞர் தனிப் பாசுரத் தொகையை, ஆங்கில சானட் வகையை மாதிரியாகக் கொண்டு தமிழில் இயற்றினார் என்கிறார் இவர்.

பாரதியின் குயில்பாட்டு கீட்ஸ், சேக்ஷ்பியர் ஆகியோரின் குரல்களை எதிரொலிக்கிறது என்றும் ரஸ்கினிடமிருந்து சிட்டுக் குருவி பாடலுக்கான விவரனைகளையும், ஜான்பனியனிடமிருந்து 'ஞானரதத்துக்கான' கருத்தமைவையும் பெற்றுள்ளார் பாரதி எனவும் இவரது பல பாடல்களும் கீட்ஸ், ஷெல்லி, பைரன், டென்னிசன் ஆகியோரின் பாடல்களும் ஒரே மூலத்திலிருந்து கிளம்பியதாகத் தொன்றுகின்றன எனவும் கூறுகிறார். பிரெஞ்சுப் புரட்சியும் இரஷ்யப்புரட்சியும் பாரதியிடம் தாக்கம் ஏற்படுத்தியிருப்பதும் உணரத்தக்கது.

பாரதிதாசனின் குடும்பவிளக்கில் தங்கத்தின் பாத்திரப் படைப்புக்கு பிரெஞ்சுப் பண்பாடு காரணம் எனலாம்.

தேசிக வினாயகம்பிள்ளையிடம் ஆங்கிலக் கவிஞர்களான பிளேக், எமர்சன், டென்னிசன், ஃபிட்ஜெரால்டு, ஸ்பின்பர்ன் போன்றோரின் உருக்காட்சிகளின் தாக்கமும் வேர்ட்ஸ் வொர்த்தின் தனிப்பாடல்களின் தன்மையும் பர்ன்ஸின் பாடல்களின் இசையமைப்பும் காணலாம் எனவும் சில பாடல்களில் குட்ரிச், கிரே (தாமஸ்) போன்றோர் தத்துவப் பார்வைகள் இடம்பிடித்துள்ளன எனவும் எடுத்துக்காட்டுகிறார். வேறு சில புதுக்கவிஞர்களிடம் உள்ளடக்கம் வடிவம் ஆகியவற்றில் மேலையிலக்கியத் தாக்கத்தை உணரமுடியும். வசன கவிதையைப் பாரதி தமிழில் முதன்முதல்

அளித்தார்; அவரைத் தொடர்ந்து ந.பிச்சமூர்த்தி (காட்டு வாத்து, வழித்துணை) சாலிவாஹனன், திரிலோக சீத்தாராம் S.D.S. யோகி ஆகியோர் இவ்வடிவப் பரிசோதனையில் முனைந்து ஈடுபட்டனர் என்கிறார் சோமலெ.

17. தமிழண்ணல் "சங்க இல்ககிய ஒப்பீடு" எனும் நூலில் தொல்காப்பியர் எடுத்துக் கூறிய ஒவ்வொரு இலக்கியக் கொள்கையையும் தனித்தனியே விளக்கி, பின்னர் தொல்காப்பியர் சுட்டிய கவிதையியல் கொள்கைகளை வடநூலாரின் அலங்காரம், தொனி, அவுசித்தியம், வக்கிரோந்தி, இரசம், ரீதி போன்ற கோட்பாடுகளுடன் தகுந்த எடுத்துக்காட்டுகளைத் தந்து ஒப்பிட்டுக் காட்டுகிறார். பாடல்களில் பயின்றுவரும் அடைமொழிகள் உவமைகள் எவ்வாறு உருக்காட்சிகள், படிமக்காட்சிகள், தொன்மைக் கூறுகள் ஆகியனவற்றை உள்ளடக்கியுள்ளன என எடுத்து விளக்குகிறார். இறுதிப்பகுதியில் கிரேக்க, இலத்தீன், வடமொழி இலக்கியம் பற்றித் தமிழ் இலக்கியத்துடன் ஒப்பிடக் கூடிய அளவிற்குச் சுருக்கமாகவும் தெளிவாகவும் அறிமுகப்படுத்துகிறார். இந்நூலின் ஒவ்வொரு இயலிலும் உள்ள சிறு சிறு கூறுகளை அடிப்படையாகக் கொண்டு பல ஒப்பிலக்கிய ஆய்வுகளை மேற்கொள்ளக் கூடிய அளவிற்குத் தகவல்களைச் செறிவுடன் அளித்திருக்கிறார்.

18. "சங்க இலக்கிய ஒப்பீடு-இலக்கிய வகைகள்" எனும் இவரது நூல் ஒப்பிலக்கிய ஆய்வுகளின் மையப் பகுதியாக விளங்கும் வகைமை ஆய்வு பற்றி அறிமுகப்படுத்தி, வகைமைக் கோட்பாட்டைக் கிரேக்க, தமிழ், வடமொழி இலக்கிய வகைகளின் அடிப்படையில் விளக்கிக் காட்டுகிறது. மேலும் தமிழ் இலக்கிய வகை வளர்ச்சி பற்றிய இயல் டார்வினின் கூர்தலறக் கோட்பாட்டின் அடிப்படையில் மேலும் பல ஆய்வுகளுக்கு அடித்தளமாய் விளங்குகிறது.

19. தமிழண்ணல் தொல்காப்பியர் சுட்டும் நோக்கு, மெய்ப்பாடு, இறைச்சி, உள்ளுறை ஆகியனவற்றை ஒப்பீட்டு

நோக்கில் வடநூலாரின் கொள்கைகளுடனும் ஆங்காங்கே மேலை நாட்டாரின் திறனாய்வுக் கொள்கைகளுடனும் ஒப்பிட்டுத் தனித் தனியே சிறு நூல்களை வெளியிட்டிருக்கிறார்.

20. கதிர்.மகாதேவனின் 'தொன்மம்' தொன்மத் திறனாய்வின் அடிப்படைகளைத் தமிழிற்கு அறிமுகம் செய்கிறது. தொன்மங்களின் அமைப்புகள், வகைகள் அடிப்படையில் தமிழ் இலக்கியங்களில் காணக் கிடைக்கும் தொன்மக் கூறுகள் சுட்டப்படுகின்றன; இலக்கியங்களின் மூலக் கூறுகளாக தொன்மங்கள் சுட்டப் படுகின்றன. இவற்றின் அடிப்படையில் இன்று மேலும் பல ஆய்வேடுகள் வெளி வந்துள்ளன. இவரது இலக்கிய மரபியல் (Liteary genetics) எனும் ஆங்கில நூல் ஒப்பிலக்கிய நோக்குகளை அடிப்படையாகக் கொண்டு குறவஞ்சி இலக்கிய வகையின் தோற்றமும் பரவலும் பற்றிக் கூறுகிறது. முதல் இயல் தமிழகத்தில் இயற்கையாகத் தோன்றிய இவ்விலக்கிய வகை தென்மாநிலங்களில் மட்டுமின்றி வடக்கேயும் பரவியதைச் சுட்டுகிறது. தமிழ்த் தொன்மங்களும் தொல்படிமங்களும் சமுதாயத்தின் கூட்டு எண்ணங்களின் பிரதிபலிப்பாய் விளங்குவதை எடுத்துக்காட்டும் இயல் யுங்கின் உளவியல் நோக்கில் இலக்கியத்தை ஆராய்கிறது. அடுத்த இயல் படையியல் கூறுகள் இலக்கியத்தில் பயின்று வருவதை எடுத்து விளக்குகிறது. தமிழ்க் காதலைக் கிரேக்க வடமொழிக் காதல் பாடல்களுடன் ஒப்பிட்டுக் காட்டும் இயலும் ஹாரிலெவினின் (Harry Levin) 'ஒளி விலகல்' கொள்கையை (Theory of Refraction) அடிப்படையாகக் கொண்டு தமிழில் அகப்பாடல்களில் இருந்து புறப்பாடல்கள் எண்ணப் போக்குகளின் விலகல் அடிப்படையில் எவ்வாறு வேறுபட்டுக் காணப்படுகின்றன என்று விளக்கும் இயலும் ஒப்பிலக்கியத்தின் கோட்பாடுகளில் முக்கியமானவற்றை விளக்குவன. ஆங்கிலக் கவிதையியல் கூறும் ஒசை வண்ணங்களையும் தமிழின் சந்தப்பாவடிவ அமைப்பினையும் தொல்காப்பியரின் அடிப்படையில் ஒப்பிட்டுக் காட்டுகிறது மற்றொரு இயல். சைவசித்தாந்த அடிப்படையில் பாவைப் பாடல்களுக்கு அப்பாலைத்தத்துவப் பொருளைத் தந்து விளக்குகிறது ஒரு இயல். சமுதாயப்

பண்பாட்டின் விளைநிலத்தில் இலக்கியம் தோன்றியதையும் இலக்கியம் அது தோன்றிய சமுதாயப் பண்பாட்டைப் பிரதிப்பலிப்பதையும் விளக்குகிறது மற்றொரு இயல். தமிழ் இலக்கியத்தின் ஒப்பிலக்கியக் களங்களைத் தழிழறியாத அறிஞர்களுக்கு அறிமுகப்படுத்துவதாய் அமைந்துள்ளது இந்நூல் எனலாம்.

21. தனது மற்றொரு நூலான "ஒப்பிலக்கிய நோக்கில் சங்ககாலம்" (1975) எனும் படைப்பில் கைலாசபதியின் தமிழ் வீரயுகப் பாடல்கள் (Tamil Heroic Poetery) சி.எம்.பௌராவின் 'வீரயுகம் (Heroic age C.M. Bowra) H.M. சாட்விக்கின் வீரயுகம் (Heroic Age H.M.Chadwick) சாட்விக்குகளின் "இலக்கிய வளர்ச்சி" (H.M. Chadwick & N.Kershaw Chadwick's The growth of Literature) ஆகியவற்றின் அடிப்படையில் சங்க காலத்தை வீரயுகக் காலம் என்றும் வீரநிலைக் காலப் பாடல்களில் காணக்கூடிய வாய்மொழிப் பாடல் தன்மைகளைச் சங்கப் பாடல்களில் காணலாம் என்றும் எடுத்துக் கூறுகிறார் கதிர் மகாதேவன். வீரநிலைக் காலப் பாடல்களின் பண்புகளை விரிவாக விளக்கி, பட்டியலிட்டுக் காட்டி, அவற்றின் அடிப்படையில் சங்கப் பாடல்களின் தன்மைகளை உணரவைக்கிறார். இயற்கைபற்றிய பாடல்கள், தன்னுர்வுப் பாடல்கள் (காதல், கையறுநிலை) போற்றிப் பாடல்கள் என்ற வரையறைகளைத் தமிழ்ப்பாடல்களுக்கு ஏற்றிப் பார்த்து வகைப்படுத்துகிறார்; மேலைநாட்டுப் பாடல்களுடன், மட்டுமின்றி வடமொழிக் காதல் பாடல்களுடனும் அகப் பாடல்களை ஒப்பிட்டுக் காட்டும்போதே கிரேக்கப் பாடல்களையும் இணைநிலையாகக் காட்டிச் செல்கிறார்.

வடமொழி இலக்கியக் கொள்கைகளான தொனியையும் தொனிவகைகளையும் தொல்காப்பியர் விளக்கிய இறைச்சி உள்ளுறை ஆகியவற்றுடனும், வடமொழியாளரின் இலக்கணையை (Lakshana)த் தமிழ் இலக்கணம் சுட்டும் குறிப்புப் பொருளுடனும் ஒப்பிட்டுக் காட்டுகிறார் கதிர் மகாதேவன். மேலும் தொல்காப்பியர் சுட்டிச் சென்ற இருபது வண்ணங்கள், எண்வகை வனப்புகள்

ஆகியவை வடமொழியாளரின் ரீதிக் கோட்பாட்டு உண்மைகளுக்கு முன்னரே தமிழில் சிறப்புப் பெற்றிருந்ததை விளக்குகிறறர்.

22. கி. இராசாவின் "இலக்கிய வகைமை ஒப்பாய்வு", ஒப்பிலக்கிய நோக்கில் தமிழ் இலக்கியங்களை வகைப்படுத்திக் காட்டுவதுடன் தமிழில் அவ்வகைகள் தோன்றி வளர்ந்த வரலாற்றை, இலக்கியத்தின் வரலாற்றுணர்வுடன் எடுத்துக் காட்டுகிறது. இவரது முனைவர் பட்ட ஆய்வேட்டின் ஒரு பகுதியே இந்நூல்.

23. இவரது "ஒப்பிலக்கிய நோக்கு" எனும் நூல், இலக்கிய வகை ஒப்பாய்வின் ஒரு முன்னோடி நூல் எனலாம். இரு நூல்களிலும் கிரேக்க தமிழ் முல்லைப் பாடல்களின் ஒப்பாய்வுக் கட்டுரைகள் காணப்படுகின்றன.

24. "அறிவியல் நோக்கில் இலக்கிய வகை வளர்ச்சி எனும் கி.இராசாவின் மற்றொரு நூல் கூர்தலறக் கோட்பாட்டின் அடிப்படையில் இலக்கிய வகைகளின், வகைமைகளின் வளர்ச்சியையும், பரிணாமங்களையும் எடுத்துக்கூற முனைகிறது.

25. நா. ஆறுமுகம் "ஐரோப்பிய முல்லைப் பாடல்கள்" எனும் நூலில் முல்லைப்பாடல் பற்றிய விளக்கங்களிலும் தாந்தே, கதே ஆகியோரின் பாடல்களின் விரிவுரைகளிலும் தமிழில் முல்லை நிலப்பாடல்கள் பற்றிய சிறுசிறு செய்திகள் இணை நிலைகளாகச் சுட்டிக்காட்டப்படுகின்றனவேயன்றி ஒப்பிலக்கிய கோட்பாடுகளின் அடிப்படையில் ஒப்பிடப்படவில்லை; ஆயினும் தமிழ் அகப்பாக்களில் காணப்படும் முல்லைத்திணைப்பாடல்களின் உரிப்பொருளோ முல்லைக்குரிய மெய்ப்பாடுகளோ ஐரோப்பியப் பாடல்களில் இல்லை என்பதை எடுத்துக்காட்டும் ஆசிரியர் முல்லைநிலப்பின்னனி ஆயர்தம் வாழ்க்கை ஆகியவற்றின் பொதுத் தன்மைகளின் அடிப்படையில் தமிழ் முல்லை நிலப்பாடல்களை எடுத்துக்காட்டுகிறார். இத்தாலிய ஒப்பிலக்கியப் பேராசிரியர் ரெனடோ போக்கியாலி எழுதிய 'புல்லாங்குழல்' எனும் நூலை

அடிப்படையாகக் கொண்டே இந்நூல் எழுதப்பட்டது என்று தன் நூலில் குறிப்பிடுகிறார் ஆசிரியர்

26. க. கைலாசப்பதியின் 'இரு மகாகவிகள்' தாகூரையும் பாரதியையும் ஒப்பீட்டு நோக்கில் ஆராய்ந்து கூறுவது.

27. தனிநாயக அடிகள் பழந்தமிழ் இலக்கியத்தில் கவிதையும் பின்புலமும் எனும் (Land Scape & Poetry : A Study of Nature in Classical Tamil Poetry) நூலில் இறுதியியலில் வடமொழி, கிரேக்கம், இலத்தீன், ஆங்கிலம் ஆகிய மொழிகளின் இயற்கைக் கவிதைகளைச் சங்கக் கவிதைகளுடன் ஒப்பிட்டு, வேறுபடுத்திக் காட்டுகிறார். உவமை, உருவகம், உள்ளுறை மூலமாக உணர்ச்சி வெளிப்பாட்டிற்கு இயற்கைப்பின்னணியைப் பயன்படுத்தும் முறை, தமிழ்க் கவிதைகளில் காணப்படுவதைப் போன்றே சேக்ஷ்பியரின் லியர் மன்னன் நாடகத்திலும் இயற்கையின் கோபமான புயல் மன்னனின் கோபத்தை உருவகிக்கப் படைக்கப் பட்டுள்ளது என்கிறார்.

28. எஸ்.ராமகிருஷ்ணனின் "கம்பனும் மில்டனும் ஒரு ஒப்பாய்வு" எனும் தமிழ் நூலும் (1955) இதன் மூலநூலான "The Epic Muse : The Ramayana and Paradise Lost" எனும் ஆங்கில நூலும் கம்பனையும் மில்டனையும் அவர்களது வாழ்க்கைச் சூழல், காப்பிய மரபு, காப்பியக் கட்டமைப்பு, பாத்திரப்படைப்பு, பாடுபொருள் ஆகிய அடிப்படையில் ஒப்பீடு செய்கின்றன.

29. அ.அ. மணவாளனின் " The Epic Heroism in Milton and Kamban" எனும் ஆங்கில நூல் இவரது முனைவர் பட்ட ஆய்வேட்டின் நூலுருவாக்கமாகும். இதில் மில்ட்டனும் கம்பனும் காப்பியங்களுக்கே உரிய வீரப்பண்பைத் தம் படைப்புகளில் கையாண்டு உள்ள தன்மைகளை நடப்பியல்முறை, அறிவியல் முறை, பண்பாட்டுமுறை, ஆன்மீகமுறை என வகைப்படுத்தி இணைவரைகளை எடுத்துக்காட்டுகிறார். மில்ட்டனின் சுவர்க்க நீக்கம், சுவர்க்கமீட்சி எனும் இரு காப்பியங்களுடன் அவரது

கோமஸ், சாம்சன், அகனிஸ்டஸ் போன்ற கவிதைகளும் எடுத்தாளப்படுகின்றன. கம்பர் தமிழ் இலக்கிய மரபிலிருந்து விலகிச் செல்கிறார் என்றும் அதற்கு அடிப்படையாக இருப்பது அவரது முருகியல் நோக்கு என்றும் எடுத்துக்காட்டுகிறார் ஆசிரியர்.

30. ந.சுப்பரமணியம் ராபரட்ஃப்ராஸ்ட் எனும் அமெரிக்கக் கவிஞரையும், பாரதியையும் இயற்கையைப் பாடும், பயன்படுத்தும் அடிப்படையில் ஒப்பிட்டு முனைவர் பட்டத்திற்கான ஆய்வை முடித்து, பின் நூலாக ஆங்கிலத்தில் வெளியிட்டார். இதில் சமகால புலவர்களாக இருந்தும் இவ்விருவரிடையே எவ்வித தொடர்பும் அற்ற நிலையிலும் இணைநிலைகள் இருப்பதை எடுத்துக்காட்டுகிறார். இரு வேறு பண்பாட்டுச் சூழலைச் சேர்ந்த இக்கவிஞர்கள் இருவரிடமும் உலகஇயற்கையைக் காண்பதற்கும் மனித இயற்கையைக் காண்பதற்கும் உள்ள வேறுபாட்டை ஒப்பிட்டுக்காட்டுகிறார். பாரதி இயற்கையிடம் கொண்ட ஈடுபாடு மதச்சார்பும் இறைத்தன்மையும் கொண்டிருக்க, ஃபிராஸ்டின் ஈடுபாடு இயற்கையிடம் அதிக காதலுடையது என்பதை எடுத்துதியம்புகிறார்.

31. து. சீனிச்சாமி 'தமிழில் காப்பியக் கொள்கை' என்ற நூலில் தமிழ் காப்பியக் கொள்கைகளைக் கிரேக்க இலத்தீன் காப்பியக் கொள்கையுடன் ஒப்பிட்டுக்காட்டுகிறார்.

32. கூடல் இளவரசன் தம் 'காப்பியத் தலைவர்களில்' இளங்கோவடிகளும் சேக்ஷ்பியரும் தம் தலைமைப் பாத்திரங்களை எவ்வாறு படைத்துள்ளனர் என ஒப்பிட்டுக்காட்டுகிறார்.

33. இரா. பிரேமாவின் இராமாயணக் கிளைக் கதைகள் ஒப்பீடு எனும் நூல் இவரது ஆய்வேட்டின் நூல் உருவாக்கம் ஆகும். இது வால்மீகி, துளசிதாசர், கம்பர் ஆகியவர்களது இராமாயணங்களில் கிளைகதைகளின் இடம், மாற்றம் பற்றி ஒப்பிட்டுக் கூறுகிறது.

34. சாமுவேல் தாசனின் 'பாரதியும் வள்ளத்தோளும்' ஒப்பிலக்கியக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு பயில்முறை அடிப்படையில் உருவான ஒரு ஆய்வு நூலாகும்.

35. சி.கனகசபாபதியின் 'பாரதியும் பாரதிதாசனும்' ஓர் ஒப்பீட்டுத் திறனாய்வு நூல் எனலாம். ஒப்பிலக்கியக் கொள்கை அடிப்படையில் எழுந்த நூல் எனக்கூறுதல் இயலாது. ஆசிரியரே இதைச் சமூகவியல் சார்ந்த திறனாய்வு அணுகுமுறை கொண்டது என்கிறார். சமுதாய மாற்றம் பற்றிய சமூகவியல் கோட்பாடுகள் அடிப்படையில் இரு கவிஞர்களும் ஒப்பிடப்படுகின்றனர்.

36. ஜி.ஜான் சாமுவேலின் 'ஷெல்லியும் பாரதியும்- ஒரு புதிய பார்வை' பாரதியின் புனைவியல் பார்வைகளுக்குக் காரணம் புனைவியல் இலக்கியங்களுக்கிடையேயான மரபியல் தொடர்ச்சியே (Genetic relationship) எனச் சுட்டுகிறது.

37. கிருஷ்ணனின் 'பாரதியுகம்' பைரனுடன் ஒப்பிடும்போது பாரதியை ஷெல்லிப்பிரிவினராகவும் தாகூரை கதேப்பிரிவினராகவும் காட்டுகிறது. பாரதி பக்கிம்சந்திரர் இருவரிடையே சுதந்திரம்பற்றிய எண்ணபோக்கில் ரூசோவின் தாக்கம் இருப்பதாகவும் எடுத்துக் காட்டுகிறது. தாயன்பின் போதாமையே பாரதியைச் சக்திதாசனாக மாற்றியது என்றும் அவரது பெண்பாத்திரங்களும் பெண் தெய்வங்களும் தாயின் வெவ்வேறு உருவங்களே என்றும் கூறுகிறார் கிருஷ்ணன். எதிர்ப்புக் காப்பிய மரபை பக்கிம் சந்திரரைத் தொடர்ந்து தமிழ் இலக்கிய உலகிற்கு வழங்கியவர் பாரதியே என்று (ப.69) கூறுகிறார் இவர்.

38. செ.சாரதாம்பாளின் "அடிக்கருத்தியல்" இந்நூல் பற்றி இவ்வியலின் பிற்பகுதியல் சுட்டப்படுகிறது.

39. தகடூரான் தன் ''கம்பர் காவியத்தில்'' கம்பரது படைப்புத்திறனின் தனித்தனிக் கூறுகளை மேலையிலக்கியப் படைப்பாசியர்களின் வெவ்வேறு பாடல்களுடன் ஒப்பிட்டுக்

காட்டுகிறார். காளிதாசனின் ரகுவம்சம் மில்டனின் சுவர்க்க நீக்கம் ஆகியவற்றில் காணக்கூடிய மேலோட்டமான இணைநிலைகளையும் சுட்டிச் செல்கிறார் தகடூரான். பாத்திரப்படைப்பிலும் பின்புலச் சூழல்-களிலும் காணப்படும் இணைநிலைகளை எடுத்துக் காட்டியுள்ளார்.

II. ஒப்பிலக்கியக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட நூல்கள்

40. ஒப்பிலக்கியக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு எஸ். செல்வகணபதி "ஒப்பிலக்கிய நோக்கில் தமிழ் இலக்கியம்'' என்ற தம் நூலில் ஒப்பிலக்கியக் கோட்பாடு கொள்கை, வரலாறு பற்றி முதல் இயலில் கூறும்போது தமிழண்ணலின் ஒப்பிலக்கிய நூல்களை முன்னோடிகளாகக் கொண்டு எழுதியுள்ளார். இது முழுக்க முழுக்க ஒப்பிலக்கிய அடிப்படை கொண்டது எனக் கூற இயலாது. இதில் பல கட்டுரைகள் தமிழ் இலக்கியங்களுக்கு இடையே மேற் கொள்ளப்பட்ட ஒப்பீடுகள் சார்ந்தனவையாக உள்ளன எனினும் ஒரு கட்டுரை கம்பரை வால்மீகி, மில்ட்டன் ஆகியோருடன் ஒப்பிடுகிறது; ஒரு கட்டுரை தமிழ் வீரயுகப்பாடல்களைக் கிரேக்க லிரிக் கவிதைகளுடன் ஒப்பிட்டுக் காட்டுகிறது.

41. ப.ச.ஏசுதாசன், பூரணச்சந்திரன் இருவரையும் பதிப்பாசிரியர்களாகக் கொண்ட "உரசல்கள்" எனும் நூல் இலக்கிய ஒப்பாய்வுக் கட்டுரைகளைக் கொண்டது. இதில் செவ்வியல் கோட்பாட்டைத் தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகளில் ஏற்றிப் பார்க்கிறது ஒரு கட்டுரை.

42. செண்பகம் இராமசாமியின் ''கிரேக்க லிரிக் கவிதைகளும் சங்க இலக்கியக் கவிதைகளும் ஒப்பீடு" எனும் நூல் அவரது முனைவர் பட்ட ஆய்வேட்டின் நூலுருவாக்கம் ஆகும்.

அதில் கிரேக்க லிரிக் பாடல்களில் போற்றிப்பாடல்கள், தன்னுணர்வுப் பாடல்கள், பொதுவுணர்வுப்பாடல்கள், ஏளனப் பாடல்கள் போன்ற தனிப்பாடல்களையும் குழுப்பாடல்களையும் சங்கப்பாடல்களுடன் ஒப்பிட்டுக் காட்டுகிறார். பாடுபொருள் அடிப்படையில் ஒப்பிட்டுக் காட்டும் போது சங்கப்பாடல்களில் பாணர்களுக்கு இணையாக பாடிணியரும் பாட, கிரேக்கத்தில் பெண்கள் பாடிய நிலை இல்லாதிருந்தது என்பதையும், சங்கப்பாடல்களின் அடிப்படைக் கூறான திணை, துறைகள் கிரேக்கப் பாடல்களில் இல்லாததையும் எடுத்துக் காட்டுகிறார். இருமொழி இலக்கியங்களின் இணை நிலை ஆய்வுகள் இறுதியில் அவ்விலக்கியங்களின் பரிணாமங்கள், அவை சார்ந்த சமுதாய, பண்பாட்டு ஆய்வுகளாக முகிழ்ந்துவிடும் என்பார் டபிள்யூ.எம்.ஜிர்முன்ஸ்க்கி. (W.M.Zirmunsky ப.54 எஸ்.எஸ்.பிராவர்) செண்பகம் இராமசாமியின் இவ்வாய்வு நூல் கிரேக்க, சங்க இலக்கியங்களை உருவாக்கிய சமுதாயங்கள் பண்பாட்டு ஒப்புமைகள் உடையவை என்பதை விளக்குகிறது.

43. ஜி.ஜான் சாமுவேலின் ''இலக்கிய ஒப்பாய்வுக் களங்கள்", "பாரதியும் குமரன் ஆசானும்", "ஒப்பிலக்கிய ஆய்வுகள்" எனும் ஆங்கில நூல் (Studies in Comparative Literature) ஆகியவை தமிழை ஆங்கில இலக்கியக் கூறுகளுடனும் மலையாளத்துடனும், தமிழிலேயே ஒப்பீட்டு அடிப்படையில் காணக் கூடிய கூறுகளுடனும் ஒப்பிட்டுக் காட்டுகின்றன.

44. ஜி.ஜான் சாமுவேலின் "திராவிட மொழிகளின் ஆய்வு பண்பாடும் இலக்கிய ஒருமையும்' ''பண்பாட்டுக் களங்கள் க.ப.அறவாணனின் "தொல்காப்பிய ஒப்பீடு" "கவிதை கிழக்கும் மேற்கும்" சிதம்பர ரகுநாதனின் "அக்டோபர் புரட்சியும் தமிழ் இலக்கியமும்" பாரதியும் ஷெல்லியும் எஸ்.பி.இராமச்சந்திரனின் குறளும் கீதையும்; கதிர் மகாதேவனின் பழந்தமிழர் பண்பாடு; பெ.சு.மனியின் "ஔவையாரும் உலகப் பெண்பாற் புலவர்களும் ஆகிய நூல்கள் தமிழில் ஒப்பாய்வுக்களங்களின் வீச்சுகளின் விரிவை எடுத்துக் காட்டுவதுடன், ஒப்பிலக்கிய மாணவர்களுக்கு

புதுப்புது ஆய்வுக்களங்களை அறிமுகப்படுத்துவனவாகவும் அமைந்துள்ளன.

45. வ.சுப.மாணிக்கனார் "தமிழ்க்காதல்" எனும் நூலில் சங்க இலக்கிய அகத்திணைத் தலைவியர்தம் பண்பு நலன்களைக் கிரேக்கப் பெண்மையுடன் ஒப்பிட்டுக் காட்டுகிறார். ஆன்லிச் (Hanslicht) எனும் அறிஞர் பண்டைய கிரேக்கத்தில் பாலியல் வாழ்க்கை (Sexual life in Ancient Greece) எனும் நூலின் முன்னுரையில் கூறிய கருத்து பழந்தமிழகம் கண்ட அகத்திணையை ஆராயும் தன் கருத்துக்குப் படியெடுத்தது போன்று இருப்பதைக் கண்டு தான் வியந்ததாகக் கூறுகிறார், வ.சுப.மா. (ப.32). சில இடங்களில் உளவியல் அறிஞர்கள் பால் வாழ்க்கை பற்றிக் கூறிய கருத்துகள் சங்ககாலப் பாடல் மரபுகளுடன் ஒத்துப் போவதை எடுத்துகாட்டுகிறார்; பேராசிரியர் சி.எச். ஹெர்போர்டு, பெட்ராண்டுரஸ்ஸல் போன்றோர் மணவாழ்வு பற்றிக் கூறிய கருத்துக்களையும் இணைநிலைகளாக எடுத்துக் காட்டுகிறார்; எனினும் இதனை முழுமையான ஒப்பிலக்கியக் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்த நூல் எனவோ செயல்முறை விளக்க அடிப்படையில் அமைந்த நூல் எனவோ கருத இயலாது.

46. தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் பாரிசில் நடந்த உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் வாசித்தளித்த ஆங்கிலக் கட்டுரை தமிழில் பெயர்க்கப்பட்டுத் "தமிழும் பிற பண்பாடும்" என்ற நூலாக வெளியிடப்பட்டது. இந்நூலில் தமிழ் இலக்கியமும் பண்பாடும் பிற தென்னிந்திய மொழிகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளுடன், கொண்ட இருவழியுறவுகளை எடுத்தியம்புகிறது. தமிழிலிருந்து அம்மொழிகளுக்குச் சென்ற இடைக்கால, பக்தியிலக்கிய அடிக்கருத்துக்கள் பெரியபுராணக் கதைகள், அதன் மூலம் அவை பெற்ற, இலக்கிய வளர்ச்சி' அவை தமிழ் மொழிக்கு அளித்தவை என இலக்கிய அடிக்கருத்துப் பரவல் அடிப்படையில் (Migration of Literary Themes & Motifs) விரிவாக எடுத்துக்காட்டுகிறார்.

47. சி.ஆர்.சர்மா தமிழ், தெலுங்கு உறவுகள் பற்றித், "தெலுங்கு இலக்கியத்தில் தமிழ்க் கூறுகள்" என்ற ஆங்கில நூலில் விளக்குகிறார். இவரது (Tamil Elements in Telagu Literature) "தமிழ் இலக்கியத்தில் தெலுங்கர்களின் பங்கு" என்ற நூலும் இவ்விரு மொழிகளும் காலந்தோறும் பெற்றிருந்த உறவுகளையும் அதற்கு உறுதுணையான மன்னர்கள், தமிழ் இலக்கியப் படைப்பாளிகளாகவும் புரவலர்களாகவும் விளங்கிய தன்மையையும் தமிழ் வளர்ச்சிக்கு உதவிய தெலுங்கர்கள் பற்றியும் விரிவாகக் கூறுகின்றது. ஒப்பிலக்கியதில் "ஏற்பும் தொடர்ந்து வாழ்வு பெறுதலும்" (Reception & Survival) எனும் ஆய்வுக் களத்திற்கு உரமூட்டுபவை இப்போக்குடைய ஆய்வுகள் எனலாம்.

ஒப்பிலக்கியக் கட்டுரைகள்

ஒப்பிலக்கியக் கல்வி பெற்ற ஆங்கிலத்தமிழ் அறிஞர்கள் தாக்கம், இணைநிலை, தழுவல் ஆகிய அடிப்படைகளில் இருவேறு இலக்கிய ஆசிரியர்களைக் காண்பது ஒரு முக்கியமான ஒப்பிலக்கிய ஆய்வுப்போக்கு, இதன்றியும் ஒப்பிலக்கியத்தின் பிற அடிப்படைக் கொள்கைகளான அடிக்கருத்துகள், தலைமைப் புனைவுக் கூறுகள், வகைகள் என்ற அடிப்படைகளிலும், சமுதாய, அரசியல், இலக்கிய இயக்கங்கள் தமிழ்ப்படைப்பில் ஏற்படுத்திய மடைமாற்றங்களை எடுத்துக்காட்டும் நோக்கிலும் ஒப்பிலக்கிய ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

1. தமிழில் பெரும்பாலும் மேலையிலக்கியத் தாக்கம் பற்றிய ஆய்வுகளே மேற்கொள்ளப்படுகின்றன. வை. சச்சிதானந்தன் "இந்தியாவில் ஒப்பிலக்கிம் நடைமுறைச் சிக்கல்களும் (ஆய்வு) வாய்ப்புகளும்-தமிழைப் பொருத்தவரை" எனும் கட்டுரையில் "மேலைநாட்டுப் புனைவியலின் வீறுணர்ச்சிக் கவிதைகளின் சிறப்புக் கூறுகளான தன்னையே சார்ந்திருத்தல் (Self reliance) சுதந்திரம். (சமத்துவம், சகோதரத்துவம்) தனித்தன்மை, தூண்டல்கள் (inspiration) போன்றவற்றினால் கவரப்பட்ட இளம்

எழுத்தாளர்களிடையே, புதிய செவ்வியல் போக்கு எதிர் விளைவுகளைத் தோற்றுவித்தது எனவும் நம் நாட்டுத் தற்காலக் கவிஞர்களிடையே ஷெல்லி, பைரன், வேர்ட்ஸ்வொர்த் போன்றவர்களின் தாக்கம் எற்பட இப்போக்கு காரணமாயிற்று எனவும் கூறுகிறார். முக்கியமாக பாரதி போன்ற உணர்ச்சி பூர்வமான கவிஞர்கள் கீட்ஸின் அழகியல் கோட்பாடுகளால் கவரப்பட்டனர் என்கிறார்[21]. இதுவே பாரதியின் சோதனை முயற்சிகளான வசனகவிதை, கதை போன்ற இலக்கிய வடிவங்களுக்குக் காரணம்; உலகின் எந்தப் பகுதியில் இருந்து வந்ததாயினும் புதிய கருத்துக்களை ஆர்வத்துடன் ஏற்று அவற்றைத் தம் படைப்புகளில் வெளிக் கொணர்ந்த பாரதி இன்றைய ஒப்பிலக்கிய ஆய்வாளர்களுக்கு ஒரு மிகச் சிறந்த ஆய்வுக்களம். இவை இன்னமும் நம் நாட்டு அறிஞர்களால் முழுவதுமாக வெளிக் கொணரப்படவில்லை' என்று கருதுகிறார் வை.சச்சிதானந்தன்.

தமது இக்கட்டுரையில் உலகத் தமிழ் மாநாடுகளில் தமிழ் அறிஞர்கள் வாசித்தளித்த பல ஒப்பிலக்கிய நோக்குடைய கட்டுரைகள் பற்றியும் குறிப்பிடும் இவர் அவை தமிழில் ஒப்பிலக்கிய ஆய்வுகளுக்கு முன்னோடிகளாகத் திகழ்கின்றன என்றும் குறிப்பாக வி.ஐ. சுப்பிரமணியன், எஸ். சிங்கார வேலனார், ஜியார்ஜ் எல். ஹார்ட், பேராசிரியர் ஃபிலியோஜட் (Prof Filliozat) தெ.பொ.மீ. ஆகியோரின் கட்டுரைகள் பண்பாட்டு ஆய்வாகவும் தமிழ் மொழியுடன் வடமொழியும் பிற தென்னிந்திய மொழிகளும் கொண்ட உறவுகளையும் வெளிப்படுத்தும் ஆய்வுகளாகவும் திகழ்கின்றன என்றும் கூறுகிறார்.[22]

2. "அகப்பாடல்களில் அடிக்கருத்துகள்" என்ற ஆனிலட் பாமியின் முனைவர் பட்ட ஆய்வேடு, "புறப்பாடல்களில் அடிக்கருத்துகளும் தலைமைப் புனைவுக் கூறுகளும்" என்ற செ. சாரதம்பாளின் ஆய்வுக் கட்டுரை. "காப்பியங்களில் அகப்பாடல்களின் தலைமைப் புனைவுக் கூறுகளின் பயன்பாடு" (Treatmant of Akam Motifs in Epics) என்ற இந்திரா மானுவேலின் ஆங்கிலக் கட்டுரை, "சங்க இல்ககியங்களில் சில கவிதை வடிவ

வகை மாதிரிகள்" (Some Patterns of Poetic Composition in Sangam Literature) என்ற எல். குளோரியா சுந்தரமதியின் ஆங்கிலக் கட்டுரை போன்றவை குறிப்பிடத் தக்கவை.

3. R.S. தேசிகனின் 'பாரதியின் கண்ணன்பாட்டு பற்றிய கட்டுரையில் (Bharathi's Kannan Pattu in Essays on Bharathi, Bharathi Tamil Sangam, Calcutta-1962) ஷெல்லி, வேர்ட்ஸ் வொர்த், கீட்ஸ் போன்றோரிடம் ஆழ்ந்த புலமையும் ஈடுபாடும் கொண்டவர் பாரதி என்பது விளக்கப்படுகிறது.

4. வை.சச்சிதானந்தன் "விட்மனும் பாரதியும் - வேதாந்திகளாக" Witman and Bharathi As Vedatists என்ற கட்டுரையில் பாரதியின் வசனகவிதைக்கு விட்மனின் "புல்லின் இதழ்கள்" அடிப்படை நல்கியதைச் சுட்டுகிறார். 'பாரதியும் விட்மனும்' என்ற கருத்தரங்கக் கட்டுரை ஒன்றில் விட்மனின் Song of the Banner At Day-Break எனும் பாடலே பாரதியின் புகழ் பெற்ற தேசிய கீதங்களில் ஒன்றான "தாயின் மணிக் கொடிபாரீர்" பாடலுக்கு அடிகொடுத்தது என்கிறார்.[23]

5. K.K.பிள்ளை இலக்கிய உலகில் புதிய வெளிச்சம் பரவ மேல்நாட்டினரே காரணம் எனவும் தன்னுணர்ச்சிப்பாக்கள் துன்பியல் நாடகங்கள், நகைச்சுவை ஓரங்க நாடகங்கள் போன்றவை தோன்றக் காரணம் அவர்களே எனவும் கூறுகிறார்.

6. மி.ப.சோமசுந்தரம் தன் இளவேனில் கவிதைத் தொகுதியின் முன்னுரையில் மேலைநாட்டுத் தன்னுணர்ச்சிக் கவிதைகள் தம்மை மிகவும் பாதித்திருப்பதை, தன்னிடம் ஏற்படுத்திய தாக்கத்தை ஒத்துக்கொள்கிறார்.

7. சேக்ஷ்பியர், மில்ட்டன், ஸ்காட், டிக்கன்ஸ், ஷா, டி.எஸ்.எலியட், எமர்சன், தோரோ, விட்மன், மார்க்டுவைன், கதே, தாஸ்த்தாவஸ்க்கி, டால்ஸ்டாய் போன்ற மேலையிலக்கிய படைப்பாளிகளுடன், பங்கிம்சந்திரர், பிரேம்சந்த், காண்டேகர்,

தாகூர் போன்ற வங்கப்படைப்பாளிகளின் தாக்கமும் பாதிப்பும் தமிழ் எழுத்தாளர்களிடம் காணப்படுவதைப் பல கட்டுரைகள் எடுத்துக் கூறுகின்றன.

ஞ் 8. கல்கி, புதுமைப்பித்தன், அகிலன், மு.வ. ஜெயகாந்தன், சோ போன்ற கதாசிரியர்களின் படைப்புகள் பல மேல் நாட்டுக் கதாசிரியர்களின் படைப்புகளுடன் தாக்கக் கொள்கையின் அடிப்படையில் ஆராயப்பட்டு, பல இலக்கிய ஆய்வு இதழ்களில் கட்டுரைகளாக வெளிவந்துள்ளன.

9. சிவசங்கரியின் "திரிவேணி சங்கமம்" பியர்ல்பக் என்ற அமெரிக்கக் கதாசிரியரின் "புத்தாண்டு" என்ற கதையைத் (Pearl Buck's The New Year) தழுவி எழுதப்பட்டுள்ளது. புத்தாண்டை இந்தியர்கள் கொண்டாடும் தீபாவளியாகவும் ரோட்டரி கவர்னரை மாநில கவர்னராகவும் கதையின் மையப் பாத்திரமான பையனைப் பெண் பாத்திரமாகவும் கொரியப் பெண்ணை அமெரிக்கப் பெண்ணாகவும் இந்தியச் சூழல்களுக்கு ஏற்ப மாற்றி எழுதியுள்ளார் ஆசிரியை.

10. சோவின் "மனம் ஒரு குரங்கு" ஷாவின் 'Pigmalian' நாடகத்தைத் தழுவியது. ஷாவுடன் பல கூறுகளிலும் ஒத்துப் போகும் சோ, ஒரே ஒரு கூறில் மாறுபடுகிறார். பிக்மாலியனில் வரும் பேராசிரியர் ஹிக்கின்ஸ் எலிசாவை மணந்து கொள்ள விரும்புவதில்லை. ஆனால் மனம் ஒரு குரங்கின் கோபி தான் உருவாக்கிய மாலதியை மணக்க விரும்புகிறான். இங்கு சோ ஷாவைப் பின்பற்றுவதைக் காட்டிலும் ஷாவிற்கு மூலக்கதையை வழங்கிய கிரேக்கத் தொன்மத்தையே பின்பற்றுகிறார் என்கிறார் எஸ்.இரவீந்திரநாதன். "ஒவிட்'டினுடைய மாய உருமாற்றம் (Ovid's Metamophorsis) என்ற கவிதையின் கதையே பிக்மாலியன் நாடகத்தின் கதைக்கரு. கிரேக்க பிக்மாலியன் ஒரு சிற்பக் கலைஞன்; தான் படைத்த அழகிய பெண்ணின் சிற்பத்தை அவனே காதலிக்கிறான். காதல் கடவுளான வீனஸை நோக்கி வேண்ட அத்தெய்வம் அச்சிலையை கலாட்டியா (Galatea) என்ற

பெண்ணாக உயிர்ப்பிக்கின்றது. பிறகு அக்கலைஞன் அப்பெண்ணை மணம் புரிந்து கொள்கிறான்.

இத்தொன்மக் கதையையே சோ பின்பற்றி எழுதியிருப்பதாகக் கூறுகிறார் இரவீந்திரன், மேலும் உயர்நிலை நோக்கிய சமுதாய நகர்ச்சி, ஆண்-பெண் உறவுகள் போன்ற பிற கூறுகளில் ஒற்றுமையுறவுகள் இருப்பதை எடுத்துக் காட்டுகிறார்[24].

11. மு.வவின் "அந்தநாள்", "அல்லி" ஆகிய நாவல்களில் முறையே "மேஜர் பார்பரா" ,"எல்லோருக்கும் அரசியல் அறிமுகம்" ஆகிய ஷாவின் நாடகங்கள் (Major Barbara Everybody's Political what is what?) பற்றிய குறிப்புகளை அதில் வரும் பாத்திரங்களே சுட்டுகின்றன எனவும் இந்நாடகங்களின் தாக்கம் மு.வ.வின் நாவல்களில் காணப்படுகின்றன எனவும், ஷாவின் இலக்கிய உத்திகளில் ஒன்றான விவாத முறையை மு.வ. பயன்படுத்துகிறார் எனவும், செல்வம், வறுமை, போர் போன்ற அடிக்கருத்துகளைக் கையாள்வதிலும் ஷாவின் தாக்கத்தைக் காணமுடிகிறது எனவும் கூறும் வை.சச்சிதானந்தன் மு.வ.வின் கதாபாத்திரங்கள் ஷாவின் நாடகங்கள் பற்றிப் பேசுவதும் தாக்கத்திற்கான சூழலை வெளிப்படுத்துகின்றன எனவும் கூறுகிறார். அந்த நாளின் நாகப்பன் மேஜர் பார்பராவைப் பற்றி விமர்சிக்கும் போது 'போரின் பயங்கரம் பற்றிப் பேசுவது' அந்நாடகம் என்று கூறுவது அந்நாடகத்தை அவன் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதையும், உண்மையில் அந்நாடகம் உண்மைக்கும் பொய்த் தோற்றத்திற்கும் இடையேயான போராட்டங்களைச் சித்திர்ப்பது என்றும் இவ்வாறு ஒரு இலக்கியப் படைப்பைச் சரியாக புரிந்து கொள்ளாது தன் படைப்பில் பிறிதொரு ஆசிரியர் பயன்படுத்துவதைப் படைப்புத் துரோகம் (Creative treason) என்று குறிப்பிடுவர் என்றும் எடுத்துக் கூறுகிறார் வை.சச்சிதானந்தன்[25].

12. இவரது மற்றொரு கட்டுரை மு.வ.வின் "கரித்துண்டும்" "மலர்விழி"யும் முறையே "மதியும் மூன்று பென்ஸ்காசுகளும் (Moon Six Pence) "திருமதி கார்டாக்" (Mrs. Carddock) ஆகிய சாமெர்செட்

மாமின் (Somerst Maugham) புதினங்களின் கட்டமைப்பைப் பின்பற்றி எழுதப்பட்டவை என்றும் இவற்றின் பாத்திரப்படைப்பும் அடிக்கருத்துக்களும் இணை நிலைகளைக் கொண்டுள்ளன என்றும் எடுத்துக்காட்டுகிறது. மற்றொரு கட்டுரையில் மு.வ.வின் ''மண்குடிசை'' ஹெச்.ஜி.வெல்ஸின் 'கண்ணுக்குப் புலப்படாத மனிதன்' (The invisible man) இரண்டிலும் உள்ள அடிக்கருத்து ஒருமையுடையதாய் இருப்பதைச் சுட்டுவதுடன் மு.வ.ஹெச்ஜி, வெல்ஸின் அடிக்கருத்தை மேலும் வளர்த்துச் சென்று சிக்கலுக்கு முடிவு காண்பதாக அமைத்துள்ளார் என்றும் கூறுகிறார் வை.சச்சிதானாந்தன். தன் உடலையே ஆய்வுக்குட்படுத்தி, கண்ணுக்குத் தெரியாத மனிதனாகி, தன் சொந்த ஊருக்குச் செல்லும் வெல்ஸின் கதாநாயகன், தன்னையே அழித்துக்கொள்ள, மு.வ.வின் கதாநாயகன் புனைகதையின் இறுதிப்பகுதியில் அருவமான உடலுடன் தன் சொந்த ஊரில் சில சமூகச் சீர்திருத்தங்களைச் செய்ய முயல்கிறான். இவ்வாறான அருவ உடலால் ஏற்படக்கூடிய சமுதாய ரீதியான ஒழுக்க ரீதியான சிக்கல்களை எடுத்துக்காட்டி மனிதன் இறைமையின் இருப்பிடமானத் தன் உடலை அவ்வளவு எளிதாகக் கருதிச் சோதனைகளுக்கு உட்படுத்துதல் தவறு என்று மு.வ. உணர்த்த முனைகிறார் என்று இணைநிலைகளைச் சுட்டிக் காட்டுவதுடன் இரு ஆசிரியர்களின் சமூக, பண்பாட்டுச் சூழல்களால் ஒரே அடிக்கருத்து மாறுபாடுகளைப் பெறுவதையும் எடுத்துக் காட்டுகிறார் வை.சச்சிதானந்தன்.[26]

13. ஜெயகாந்தனின் படைப்புகளை டி.எச்.லாரன்ஸ், ஜேம்ஸ் ஜாய்ஸ், ஜான் உப்டைக் போன்ற பிறநாட்டு புனைகதைப் படைப்பாளிகளின் படைப்புகளுடன் ஒப்பிட்டு ஆய்வேடுகளும் நூல்களும் வெளிவந்துள்ளன.

ஒப்பிலக்கியக் கருத்தரங்குகள்

1. பாரதிதாசனை, பைரன், பர்ன்ஸ், வேர்ட்ஸ், வொர்த், கீட்ஸ், ராபர்ட் ஃபிராஸ்ட், விட்மன், டி.எச். லாரன்ஸ் போன்ற

பல மேல்நாட்டுக் கவிஞர்களுடன் ஒப்பிட்டு இணைநிலைகளையும் தாக்கங்களையும் எடுத்துக்காட்டும் பல கட்டுரைகள் ஒப்பிலக்கியக் கருத்தரங்குகளில் அளிக்கப்பட்டுள்ளன. இவற்றில் சில நூல் வடிவிலும் வெளியிடப்பட்டுள்ளன. 1991இல் மதுரைப் பல்கலைக்கழகத் தமிழியல் துறை பாரதிதாசனின் நூற்றாண்டு விழாவை ஒட்டி நடத்திய கருத்தங்கில் பாரதிதாசனைத் தமிழ் அறியாதவர்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்குடன் ஆங்கிலத்தில் பாரதிதாசனை ஒப்பிடும் கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. பின்னர் இவை நூல்வடிவம் பெற்றன.[27]

2. ஆய்வுக் கட்டுரைகளாக சோதனை முயற்சிகள் பல செயலாக்கம் பெற்றறுள்ளன. பல்கலைக்கழகங்களின் ஆங்கில தமிழ்த்துறைகளும் இணைந்து நடத்திய கருத்தரங்குகளும், ஆய்வுப் பயிற்சியரங்குகளும், ஒப்பிலக்கிய அறிஞர்களும் பேராசிரியர்களும் இணைந்து துவக்கிய இலக்கிய ஒப்பாய்வுக்கழகமும் இவ்வகை சோதனை முயற்சிகளுக்கு வழிவகுத்துத் தந்தன. 1977இல் மதுரையில் தமிழ்த்துறையும் ஆங்கிலத்துறையும் இணைந்து பல்கலைக்கழக மானியக்குழு நிதி உதவியுடன் நடத்திய கருத்தரங்கும் 1978இல் நடத்தப்பட்ட பயிற்சியரங்கு வகுப்புகள் ஆகியவற்றுடன் 1979இல் சென்னையில் பலமொழிகளையும் சேர்ந்த ஒப்பிலக்கிய அறிஞர்கள் (சங்கர் ராஜீ நாயுடு - இந்தி, க.த.திருநாவுக்கரசு - தமிழ், C.R.சர்மா - தெலுங்கு, பிரபாகர் வாரியார் - மலையாளம், குஷலப்பகௌடா - கன்னடம், சம்பத் - வடமொழி) இணைந்து ஒப்பிலக்கியத் துறைக்கு ஆக்கம் தேடும் வகையில் தொடங்கப்பட்ட இலக்கிய ஒப்பாய்வுக்கழகமும் இத்துறை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கவையாகும்.

3. இலக்கிய ஒப்பாய்வுக் கழகத்தில் ஒப்பிலக்கியக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு பயின்முறையில் செயல்படுத்தப்பட்ட பல கட்டுரைகள் படிக்கப்பட்டன. க.த.திருநாவுக்கரசு தமிழ்-கிரேக்க அறநெறிப்பாடல்களை ஒப்பிட்டுக் காட்டினார். தாகூர்-பாரதி கவிதைகள் இறைமை நாட்ட உணர்வு அடிப்படையில் ஒப்பிடப்பட்டன. கதேயின் சமூதாய அணுகல்

முறைகள் இந்திரா பார்த்தசாரதியிடம் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதை ஹட்டோபாதிரியும் எலியும் (Bishop Hatto and the Rat) என்ற கதேயின் கவிதையையும் குருதிப்புனலையும் ஒப்பிடுவதன் மூலம் எடுத்துரைக்கப்பட்டது. மொழிபெயர்ப்பாகவும் தழுவலாகவும் காணப்படும் கவிமணியின் ஆசிய ஜோதியை அதன் மூலத்துடன் ஒப்பிட்டுக்காட்டினர். சங்க அகப்பாடல்கள் இந்தி மொழி ரீதிக் கவிதைகளுடன் ஒப்பிடப்பட்டு அவற்றின் அடிக்கருத்துகளில் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் சுட்டப்பட்டன.

4. பாரதிதாசன் பல்கலைக்கழகம் முழுமையாக உருவாவதற்கு முன்பே, 'தன்னாட்சி பெற்ற முதுகலை மையமாகச் செயல் பட்டபோது' 1981இல் பல்கலைக்கழக நிதியுதவியுடன் 'மொழிபெயர்ப்புக் கொள்கைகளும் செயல்முறைகளும்' பற்றிக் கருத்தரங்கு நடத்தியது.

மொழிபெயர்ப்பு பற்றிய பல கட்டுரைகளும் சில கட்டுரைகள் ஒப்பிலக்கியமும் மொழிபெயர்ப்பும் தமிழ் வளர்ச்சிக்கு ஆய்வுகளுக்கு எவ்வாறு பயன்படும் என்பது பற்றியும்' படிக்கப்பட்டன. ஒப்பிலக்கியக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு பல கட்டுரைகள் படிக்கப்பட்டன.

தமிழ் நாவலாசிரியர்களுள் குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்குக் காரணமாக இருந்த ஜெயகாந்தனை ஆங்கில நாவலாசிரியரான டி.எச்.லாரன்ஸ் உடனும் (ரெஜினா சுந்தர்) மலையாள நாவலாசிரியரான தகழி சிவசங்கரன் பிள்ளையுடனும் (எம்.ஜே.ரபிசிங்) ஒப்பிடப்பட்டுக் கட்டுரைகள் படிக்கப்பட்டன. பாரதியும் வள்ளத் தோளும், கிருஷ்ணனை அடிக்கருத்தாகக் கொண்டு எவ்வாறு பாடியிருகின்றனர் என சிற்பி பாலசுப்பிரமணியம் ஒப்பிட்டுக் காட்டினார். கம்பரிலும் சேக்ஷ்பியரிலும் பாத்திரப்படைப்பு ஒப்பீட்டை எஸ்.இராம கிருஷ்ணனும் பலவேறு காப்பியங்களில் கொடைத் தன்மை எவ்வாறு காப்பியத்தலைமைப் பாத்திரத்தின் முக்கியப் பண்பாகப் படைக்கபட்டுள்ளது என அ.அ.மணவாளனும் எடுத்துக்காட்டினர்.

ஒப்பிலக்கிய ஆய்வுகள் மொழிபெயர்ப்புகளின் அடிப் படையில் நிகழ்த்தப்படும் போது ஏற்படக்கூடிய தவறுகளைச் சுட்டிகாட்டினார் அ.நோயல் இருதயராஜ். இக்கருதரங்கின் முடிவில் விவாதத்தின் பொழுது இந்தியச் சூழலுக்கு ஏற்ப ஒப்பிலக்கிய முறையியலையும் மொழிபெயர்ப்பு முறையியலையும் மாற்றுவதன் அவசியம் பற்றியும் பாடத்திட்டங்களில் இவற்றை இணைப்பது பற்றியும் பேசப்பட்டன.

இப்போக்குகள் ஒப்பிலக்கியம் பல்கலைக்கழகங்களில் மேலும் நன்கு வேரூன்றவும் தன் வீச்சுகளை அதிகரிக்கவும் உதவின எனலாம்.

5. 1981இல் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் ஒப்பிலக்கியத்தைக் கல்லூரிப் பாடத்திட்டத்தில் இணைப்பதற்கான ஆலோசனைக் கருத்தரங்கு நடத்தப்பட்டது. வை.சச்சிதானந்தனும் கா.செல்லப்பனும் ஒப்பிலக்கியத்தைப் பாடத்திட்டத்தில் இணைப்பதன் இன்றியமையாமை பற்றியும் அதை வெற்றிகரமாகச் செயலாக்குவது எவ்வாறு என்பது பற்றியும் பேசினர். அ.அ.மணவாளன் உலக இலக்கியம் என்ற அகன்ற பார்வையைத் தரும் ஒப்பிலக்கியத்தின் அடிப்படைக் கொள்கைகள் பற்றியும் நாகராஜன் ஒப்பிலக்கியத்தின் நன்மை தீமைகள் பற்றியும் எடுத்துக்காட்டினர்.

6. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் 'தமிழியல்' இருமொழி இதழின் பங்கு ஒப்பிலக்கிய ஆய்வில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஆங்கிலப் பேராசிரியர்கள் பலருடைய ஒப்பிலக்கியக் கட்டுரைகளைத் தாங்கி வரும் இவ்விதழ் தமிழில் உள்ள படைப்பாசிரியர்களை மேலையிலக்கியப் படைப்பாளிகளுடன் மட்டுமின்றி, சீன ஜப்பானிய கவிஞர்களுடனும், கவிதையியலுடனும், ஒப்பிட்ட கட்டுரைகளை அளித்து ஒப்பிலக்கியப் போக்குகளை விரிவுபடுத்த வழிவகுக்கிறது.

7. மகாத்மா காந்தி பல்கலைக்கழகம் (கோட்டையம்) கேரளாவில் நடத்திய கருத்தரங்கிலும் டில்லி பல்கலைக்கழகமும் சாகித்திய அக்கடமியும் இணைந்து புதுடில்லியில் ஒப்பிலக்கியச் சங்கத்தின் இந்தியப் பிரிவினரின் (Comparative Literature Association of India) சார்புடன் நடத்திய ஒப்பிலக்கியக் கருத்தரங்குகளிலும் தமிழ் இலக்கியத்தின் சில கூறுகள் பிற இந்திய மொழிகளுடனும் மேலைநாட்டு மொழிகளுடனும் ஒப்பிடப்பட்டு ஆய்வுரைகள் வழங்கப்பட்டன. தமிழில் இருந்து குறவஞ்சி இலக்கிய வகை பிற மொழிகளுக்குப் பரவியது பற்றிய கதிர். மகாதேவனின் கட்டுரையும், இந்தியப் புனைகதைகளில் கற்பு பற்றிய மாறிவரும் கருத்துகள் பற்றிய கட்டுரையும், ஆழ்வார் படல்களில் காணப்படும் இறைமை நாட்ட உணர்வை ஜான்டன்னின் ஆங்கிலக்கவிதைகளுடன் ஒப்பிட்டுக் காட்டிய பத்மா சீனிவாசனின் கட்டுரையும் தமிழ்-தெலுங்கு பக்தி இலக்கியங்களுக்கு இடையேயான இடையுறவுகள் பற்றிய இரா.காஞ்சனாவின் கட்டுரையும், எஸ். கனகராஜின் தமிழ்ப் புனைகதைகளில் கானன்டாயிலின் தாக்கம் பற்றிய கட்டுரையும் குறிப்பிடத்தக்கவை.

8. 1988இல் புதுவைப் பல்கலைக் கழகத்தின் காரைக்கால் மையத்தில் 'இந்திய - இலக்கியம் பொதுமை வடிவமும் கருவும்' என்னும் பொருளில் நடந்தேறிய அகில இந்தியக் கருத்தரங்கத்தில் அளிக்கப்பட்ட ஆய்வுரைகள் இணைந்து நூல் வடிவம் பெற்றன. அவற்றுள் கோ.சுந்தர மூர்த்தியின் 'இந்திய இலக்கியத்தின் பொதுவான உருவமும் உள்ளடக்கமும்' எனும் கட்டுரையும், சு.வேங்கடராமனின் 'இந்திய மொழிகளில் நாட்டியம் நாடகம் வழி பக்தி இலக்கியங்கள்' - என்னும் கட்டுரையும் க.நா.சு. வின் (Common Themes & Forms in Indian Literature) இந்திய இலக்கியங்களில் உள்ள பொதுவான அடிக்கருத்துகளும் வடிவங்களும் என்ற ஆங்கிலக் கட்டுரையும் புதுக்கவிதையின் வடிவங்களும் அடிக்கருத்துகளும் (Forms Themes in Modern Poetry) எனும் பாலாவின் ஆங்கிலக் கட்டுரையும் இந்திய இலக்கியங்களுக்கு

இடையே உள்ள உறவுகளையும் பொதுவான வடிவங்களையும் சில அடிக்கருத்துகளையும் எடுத்துக்காட்டின.

சில கட்டுரைகள் இந்திய மொழிகள் இரண்டில் குறிப்பிடத் தக்க ஒரு இலக்கியக் கூறை எடுத்துக்கொண்டு வேற்றுமையில் ஒற்றுமையும் ஒற்றுமையில் வேற்றுமையும் காண்பன. சில, குறிப்பிட்ட இலக்கிய வகையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி ஆராய்வன. இவையாவுமே ஒப்பிலக்கியக் கல்விக்கு அடிப்படைக் களங்களை விரிவுபடுத்துவன எனலாம்.

இன்றைய ஒப்பிலக்கிய ஆய்வுகளின் தொகுப்புகளைக் காணும் போது தாக்க ஆய்வுகளும், இணைநிலை ஆய்வுகளும் அதிகமாக இருப்பதை உணர முடிகிறது. ஆங்கிலப் பேராசிரியர்கள் தம் ஆங்கிலக் கல்வியின் துணை கொண்டு தமிழ் இலக்கியத் திறனாய்வுப் போக்குகளையும் ஒப்பிலக்கிய ஆய்வுகளின் சாகைகளையும் விரிவுபடுத்தும் நோக்கோடு ஆங்கிலக் கவிஞர்களை, படைப்பாளிகளை, தமிழ் இலக்கியப் படைப்பாளிகளுடன் ஒப்பிடுவதைக் காணமுடிகிறது. சிலர் வடமொழி இலக்கியக் கொள்கைகளையும், அழகியல் கோட்பாடுகளையும் தமிழுடன் ஒப்பிட்டுக் காட்டியுள்ளனர். (தமிழண்ணல், கோ. சுந்தரமூர்த்தி).

ஒரு சில கட்டுரைகளே பிற இந்திய மொழிகளுக்கு இடையே உள்ள உறவுகளையும் இணைநிலைகளையும் எடுத்துக் காட்டுகின்றன. தமிழுடன் பெரும்பாலும் தென்மாநில மொழிகள் ஒப்பிடப்படுகின்றன.

சில எடுத்துக்காட்டுகள்

1. தமிழ் - மலையாள நாடக வளர்ச்சி - ஓர் ஆய்வு - மா.ரேணுகா

2. பாரதி - உள்ளூர் - ஓர் ஒப்பீடு - டி.எச்.ஐசக் சாமுவேல் நாயகம்

3. தமிழ் - மலையாள முதல் நாவல்கள் ஒப்பீடு - ம.திருமலை

4. பாரதி, குமரனாசான், குருஜாட அப்பாராவ் கவிதைகளில் புனைவியல் (பா. ஆனந்த குமார்)

5. தமிழ் - மலையாளச் சிறுகதைகளில் சமுகம்-ஓர் ஒப்பாய்வு- ம.செ.இரபீசிங்

6. தமிழ் - மலையாள தொடக்க கால நாவல்கள் - இணைநிலை ஆய்வு - ச.சீனிவாசன்

7. தமிழ் மலையாள நாவல்களில் பெண்கள் - இ.ரா. விஜயகுமார்

8. Tamil Literary Tradition & The Oldest Malayalam Ramayana, Dr. A.Govindan Kutty.

9. A Comparative Study of Kumarn Asan and Bharathidasan - காஞ்சனா.

வடமொழி, இந்தியுடன் ஒப்பிடும் போக்கும் காணப்படுகிறது

1. A Comparative Study of Tamil & Hindi Bhakti Literature - என்.சந்திரகாந்த முதலியார்.

2. Thirumoolar & Goraknath - A Comparative Study - K.R. Nanchundan.

3. A Camparative Study of Kamba Ramayana & Tulasi Ramayana.

4. 19 ஆம் நூற்றாண்டில் தமிழ் - இந்தி நாடகங்கள் - ஒப்பீடு - சின்னப்பன்

5. மீராவும் ஆண்டாளும்-ஒப்பீடு - என்.சுந்தரம்

6. பாரதியும் வங்கப் புரட்சிக்கவி நஸ்ரூல் இஸ்லாமும் - பா.நடராஜன்

7. மீரா - ஆண்டாள் பாடல்கள் ஒப்பீடு - மீனா

8. திருவள்ளுவரும் கபீரும் - சே. ரவீந்திரகுமார்

9. பெரியாழ்வாரும் சூர்தாசும் - பி.ஆர்.ஜெகன்நாதன்

சீன, ஜப்பானிய கவிதைகளுடன் தமிழ்க் கவிதைகளை ஒப்பிட்டும் கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. (இதற்கு அடிப்படையாக ஆர்தர் வாலி போன்றோரின் சீன, ஜப்பானிய கவிதைகளின் ஆங்கில மொழிப் பெயர்ப்புகளும், ஜப்பானிய ஹைகூவைத் தமிழில் மொழி பெயர்த்துடன் விமர்சனம் செய்தும் எழுதிய லீலாவதி அம்மையாரின் நூல்களும் காரணமாயின எனலாம்).

பி.எஸ்.ஹபீப் மொகமதுவின் "தமிழ் சீன-ஜப்பானிய கவிதைகள் ஒப்பீடு" (A Comparison of Tamil poetry with Chiness & Japanese Poetry) மும்மொழிக் கவிதைகளையும் சில பொதுத் தன்மைகளின் அடிப்படையில் பொருத்திக் காட்டுகிறது.

தமிழ்ச் சங்கக் கவிதைகளை ஜப்பானியருக்கு அறிமுகப் படுத்தும் ஜரோஸ்லாவ் ஃபாமெனக் (Jaroslav Farmenek, Tamiliyal 12-142 Vol.6 செப்.1988) கட்டுரையும். கே.செல்லப்பன் சங்கக் கவிதைகளையும் ஜப்பானிய ஹைக்கூ கவிதைகளையும் ஒப்பிட்டுக் காட்டிய கட்டுரையும் (Unity in Dieversity: A Comparitive Study of Cankam Poetry & Japanese Haiku Poems : Tamiliyal Vol:1 No: செப்டம்பர் 83, 75-83Pp குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவை.)

இவ்வாறு தமிழில் பல்கலைக்கழகங்கள் மூலம் வெளிவரும் ஆய்வேடுகளும் கட்டுரைகளும் இலக்கிய ஆய்வாக மட்டுமே இருக்கக் கூடியனவற்றை விட இருமடங்கு ஆய்வுகள் ஒப்பிலக்கிய நோக்கில் வெளிவந்துள்ளன, ஆயின் இவையாவும் இலக்கியத்தை இலக்கியத்துடன் ஒப்பிடும் ஆய்வாகவே பெரும்பாலும் அமைந்துள்ளன. பிரெஞ்சு, அடிப்படையிலும் (மூலமும் தாக்கமும், காரண காரிய ஆய்வு, பிறப்புறவுக் கோட்பாடு) அமெரிக்கக் கோட்பாட்டினடிப்படையிலும் (அழகியல் ரீதியிலும் வரலாற்று ரீதியிலும்) முழுமையாக அமைபவை சிலவே; இது மேலும் இலக்கியத்திற்கும் மனித அறிவு வளர்ச்சியின் விரிந்த வீச்சுக்களுக்குள் அடங்கும் பல கலை, அறிவியல் துறைகளுக்கும் இடையேயான உறவுகளை அடிப்படையாகக் கொண்டு வளரவேண்டும்; வளர்வதற்கு நிறைந்த வாய்ப்புகளும், இலக்கிய வளமையும் தமிழில் இருப்பதால் ஒப்பியல் மாணவர்களுக்குச் சிறந்த எதிர்காலம் உள்ளது. அவர்களே நம் தமிழ் இலக்கியங்களின் சிறந்த பகுதிகளை உலக அரங்கில் நிலைநாட்டுவதுடன் உலக ஏற்பையும் உண்டாக்க முனைய வேண்டும். ஓர்உலகப் பார்வையுடன் தமிழ் இலக்கியங்களை நோக்கும் போதுதான் இந்நிலையை நாம் எய்த முடியும். அதற்குத் தேவையான பல்துறை சார்ந்த, வரலாற்று ரீதியான, அழகியல் நோக்கம் கொண்ட பன்னோக்குப் பார்வையை நல்கக் கூடியது ஒப்பிலக்கியமே.

முனைவர் இரா.மோகனின் கட்டுரைகள்

மலையாளச் சிறுகதைகள் ஒரு திறனாய்வு - (புனைகதைத்திறன், ஏரக வெளியீடு)

இந்திய இலக்கியத்தில் சிறுகதைத் துறையில் குறிப்பிடத்தக்க சுவடுகளைப் பதித்துள்ள மலையாளச் சிறுகதைகள் பற்றிய மதிப்பீடு. மலையாளச் சிறுகதைப் போக்கில் மூன்று தலைமுறை எழுத்தாளர்களை இனம்காட்டும் ஆசிரியர் ஒடுவில்குஞ்சு கிருஷ்ணமேன், அம்பாடி நாராயணப் பொதுவாள், கே.சுகுமாரன், ஈ.வி.கிருஷ்ண பிள்ளை, எஸ்.ராமவாரியார் ஆகியோரை முதல் தலைமுறையினர் என்றும். தகழி சிவசங்கரம்பிள்ளை, பி.கேசவதேவ். வைக்கம் முகமது பஷீர், எஸ்.கே.பொற்றேகாட்டு, பொன்குன்னம்வர்கி, பி.சி.குட்டி கிருஷ்ணன் காரூர் நீலகண்டபிள்ளை ஆகியோர் இரண்டாம் தலைமுறையினர் என்றும், எம்டி வாசுதேவன்நாயர், டி.பத்மநாபன், கோவிபன், எம்.முகந்தன், காக்கநாடன், ஒ.வி.விஜயன், ஜி.விவேகானந்தன், மாதவக்குட்டி போன்றோர் புதிய மூன்றாம் தலைமுறையினர் என்றும் கூறி, முதல் தலைமுறையினர் கதை கூறுவதையே முக்கியமாகக் கருதி யதார்த்தத்தை மீறிய கதைகள் எழுதினர் எனவும் இரண்டாம் தலைமுறையினரே மலையாளச் சிறுகதைக்கு ஒரு வலுவான முத்திரையைப் பதித்தவர்கள் எனவும், வறுமையும், சமூகப் பிரச்சனைகளும் முக்கியமான அடிக்கருத்துகள் எனவும், மனித உறவில் விளையும் சிக்கல்களையும் விழிப்போடு கவனித்துக் கலைப் படைப்பாக்கினர் எனவும், மூன்றாம் தலைமுறையினர் ஜேம்ஸ்ஜாய்ஸ், வெர்ஜீனியா உல்ஃப், காப்கா, கேமில் ஆகிய மேலை நாடடு எழுத்தாளர்களை முன்னுதாரணமாகக் கொண்டு சுகமான உணர்வுகளைச் சித்திரித்தனர் என்றும் கூறுகிறார்.

மலையாளச் சிறுகதைகளில் வறுமைச் சித்திரிப்பு (காரூர் நீலகண்ட பிள்ளையின் 'பெண் பேய்', வேட்டூர் ராமன் நாயரின் 'பசியும் தாகமும்' எம்.டி. வாசுதேவனின் 'திருவாளும் காற்சிலம்பும்)' நகைச்சுவை உணர்வு, (ஈ.வி. கிருஷ்ணபிள்ளை, வைக்கம் முகம்மது பஷீர், ஈ.எம்.கோவூர், எஸ்கே பொற்றே காடு, அனந்தகுட்டன், வி.கே.என் போன்றோர்) கூர்பார்வையும் தனித்திறனும் கொண்டமைந்ததனை எடுத்துக் காட்டுகளுடன் விளக்கிச் சொல்கிறார்.

"கவியரசர் பாரதியும் தமிழ்த் தென்றலும்" எனும் கட்டுரை இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற ஆய்வுக்கோவையில் (1986 தொகுதி 1) இடம் பெற்றுள்ளது. பாரதியும் திரு.வி.க.வும் சமுதாய மேம்பாட்டுச் சிந்தனையில் ஒத்த கருத்துக்களை உடையவர்கள். ஏழ்மையை விரட்டி அறிவு புகட்டி சமுதாயத்தை உயர்த்த இருவருமே விழைந்தனர். பாரதியின் புதுமைப்பெண் பற்றிய பார்வையும் திரு.வி.க.வின் தாய்மைப் பெண் பார்வையும் பெண்ணின் பெருமை பேசுபவை; பெண்மையை வாழவைப்பவை; உயர்த்திக் காட்டியவை. பிறருக்குப் பயன்படும் வகையிலான தொண்டு வாழ்வையே பயனைக் கருதாது கடமையைச் செய்து வாழும் ஒரு வாழ்வையே இருவரும் போற்றினர்.

பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திடும் பாரதியின் எண்ணமும் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' எனும் திரு.வி.கவின் எண்ணமும் சமூகக் கண்ணோட்டம் கொண்டவை. தமிழ் மொழியிடம் ஆழந்த ஈடுபாடும் பற்றும் கொண்டிருந்த இருவருமே தமிழின் பண்டைய பெருமை, அவர் தம்காலத்துத் தமிழ் தாழ்ந்த நிலை அடைந்திருந்தமை, இனி வரும்காலத்தில் தமிழ் பெறவேண்டிய வெற்றி மூன்றையும் எடுத்துரைத்துள்ளனர். என்று ஒப்பிட்டுக்கூறி இருவரிடமும் உள்ள ஒற்றுமைப் பண்புகளை எடுத்துரைக்கிறது.

''**கவிமணியின் மொழி பெயர்ப்புத்திறன்**'' (செந்தமிழ் தொகுதி 92. செப். 1998 பகுதி 9) தமிழ் வளர்ச்சிக்கு மொழி பெயர்ப்பின் பங்கு முக்கியமானது என்ற கருத்துடைய கவிமணி (1951 ஏப்ரல் திருச்சி வானொலி பேட்டி) தானும் மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபட்டு ஆசிய ஜோதியையும் உமர்கய்யாம் பாடல்களையும் தமிழாக்கித் தந்தவர். எட்வின் அர்னால்டின் (Light of Asia) எனும் தலைப்பை 'ஆசியாவின் ஒளி' எனப் பெயர் சூட்டியிருப்பது மிகவும் எடுப்பாக அமைந்த ஒன்று எனவும் 9 பகுதிகள்கொண்ட இந்நூலில் புத்தரும் ஏழைச் சிறுவனும், புத்தரும் மகனை இழந்த தாயும், கருணைக்கடல் ஆகிய பகுதிகள் கவிமணியின் மொழி பெயர்ப்புத் திறனுக்குக் கட்டியம் கூறுபவை எனவும் கூறுகிறார் கட்டுரையாளர். ஆசியஜோதி மூலத்தை வெல்லும் மொழி பெயர்ப்பு என எடுத்துக்காட்டுகள் தரும் கட்டுரையாளர் வையாபுரிப்பிள்ளையின் கருத்தையும் எடுத்துக் கூறித் தன் முடிவுக்கு அரண் சேர்க்கிறார். தமிழின் மறுமலர்ச்சி எனும் நூலில் "வையாபுரிப்பிள்ளை, ஆழ்ந்த உணர்ச்சியும், தமிழில் நிறைவும் கவிதையின் ஒருமைப்பாடும் படிப்போரது உள்ளத்தைக் கனிவிப்பன ஆகும். இப்பாடல்கள் பெயரளவில் தான் மொழி பெயர்ப்பு. இவற்றை ஒரு நூதன சிருஷ்டி என்றே நாம் கொள்ளுதல் வேண்டும்'' எனும் பகுதி எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

கவிமணியின் மொழிபெயர்ப்புப் பண்பாடும் வனப்பும் வெளிப்படும் பிறிதொரு படைப்பு உமர்கய்யாம் பாடல்கள். தமது மொழிபெயர்ப்பின் வாயிலாக நமது நாட்டில் உமர்காய்யாம் ஓர் அற்புதமான மறுபிறவி எடுக்கச் செய்துள்ளார் கவிமணி என்றும் தமிழகத்துச் சூழலை மொழிபெயர்ப்பில் கொணரும் கவிஞர் கம்பர், பாரி, இராஜராஜன் எல்லாம்வல்ல ஈசன் எனத் தமிழர் அறிந்த பெயர்களை அமைக்கிறார் என்றும் கூறும் கட்டுரையாளர் எடுத்துக்காட்டாக 'வெய்யிற்கேற்ற நிழலுண்டு' பாடலையும் எழுதிச் செல்லும் விதியின் கை பாடலையும் சுட்டி, இவை நேரடியான மொழிபெயர்ப்பல்ல. கருத்துகளை மட்டும் தமிழ்மக்களின் சூழலுக்கு ஏற்ற முறையில் மாற்றித் தருகிறார் என்கிறார். ஆங்கில

மூலத்தின் கருத்தினைப் பொதுப்பட எடுத்துக்கொண்டு தமிழ்ச் சூழலுக்கு ஏற்ற முறையில் மாற்றம் செய்து இயற்றியுள்ளார். ஒவ்வொரு பாடலிலும் கவிமணியின் ஆன்மா பிரவேசித்து நின்று பாடற்கருத்தின் வடிவினைத் தானே மேற்கொண்டு புதிய படைப்பாகத் தோன்றியுள்ளது என்பதே உண்மை. இவை மட்டுமின்றி ஆங்கிலம், வங்காளம், இந்தி, பிரெஞ்சு வடமொழிக் கவிதைகளையும் தனிப்பாடல்களையும் கவிமணி மொழி பெயர்ந்துள்ளார். "மலரும் மாலையும்" தொகுதியுள் இத்தழுவல் பாடல்கள் இடம் பெற்றுள்ளன எனும் இவர் கவிமணியின் மொழி பெயர்ப்புப் பாடல்களை மொழிபெயர்ப்பு என்றோ தழுவல் என்றோ கூறாது, மொழியாக்கப்பாடல்கள் என்று சுட்டுவதே பொருத்தம் என முடிவும் கூறுகிறார்.

"பாரதியாரும் விவேகானந்தரும்"

இந்தியாவின் பெருமையைப் பாரெல்லாம் புகழச் செய்த பாரதியையும் விவேகானந்தரையும் அவர்தம் வாழ்வினையும் வாக்கையும் ஒப்பிட்டுக்கண்டு இருவரிடையேயுள்ள ஒத்த கருத்துகளை எடுத்துரைக்கிறது இக்கட்டுரை. சகோதரி நிவேதிதாவின் சந்திப்பு பாரதியின் வாழ்வில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது போல விவேகானந்தருக்கு இராமகிருஷ்னரின் சந்திப்பது அமைந்தது எனக் கூறும் கட்டுரையாளர், இருவரின் பொது நோக்கம் இந்தியாவை, இந்திய இளைஞர்களை, பெண்களைச் செயல்படவைப்பது, நம்பிக்கையுடன் வீரத்துடன், அச்சமின்றிச் செயல்படவைப்பது என்பதை அவர்களுடைய வாக்குகளில் இருந்து எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குகிறார். எத்தனையோ பாவகைகள் பாடிய பாரதி தாலாட்டுப் பாடல் பாடவில்லை என்பதையும் திருப்பள்ளியெழுச்சியே பாடினார் என்பதையும் விவேகானந்தர் எழுமின் விழுமின் என்ற நீண்ட நெடுங்கால உறக்கத்திலிருந்து இந்திய இளைஞர்கள் விழித்தெழ வேண்டும் என்று உணர்ச்சியூட்டியதையும் ஒப்பிடுகிறார். அச்சம் தவிர், என்ற பாரதி அஞ்சி அஞ்சித் சாவார் நிலைகண்டு நெஞ்சு பொறுக்காது பாடியதையும் சுட்டி, அதேபோல விவேகானந்தரும் "அச்சமே

மரணம்; அச்சத்திற்கப்பால் நீ போகவேண்டும்; இன்று முதல் அச்சமற்றவனாக இரு" என்றும் இளைஞர்களை வீரக் குழந்தைகளே என்று அழைத்து, "நீங்கள் மகத்தான பணிகளைச் செய்யப் பிறந்தவர்கள் என்பதில் நம்பிக்கை கொள்ளுங்கள்" என்று கூறியதையும் எடுத்துக் காட்டுகிறார். சிறுமை கண்டு போராடும் குணமும், எதிர்ப்படும் பிரச்சனைகளை, துன்பங்களை எதிர்கொண்டு வாழ்வில் நம்பிக்கையுடன் செயல்படும் பாங்கும், வாழ்வில் வெற்றி கொள்ள, ஏதேனும் இலட்சியத்தை இலக்கை முன்னிறுத்தி முன்னேறும் தன்மையும் வேண்டும் என்ற இவர்களது கருத்துகளை ஒப்பிட்டுக்காட்டுகிறார் கட்டுரையாளர்.

தனி இதழ்களில் வெளிவந்த இக்கட்டுரைகள் தவிர தினமணிக்கதிரில் "மொழி பெயர்ப்பு சில சிந்தனைகள்" (தினமணி, டிசம்பர்30, 1987) "மொழிபெயர்ப்புத்துறை வளர", (தினமணி, வாசகர் மன்றம் டிசம்பர் 19, 1988) "மொழி பெயர்ப்பின் அடிப்படைகள்" (தினமணி தமிழ்மணி செப்டம்பர்9, 1989) ஆகிய மொழி பெயர்ப்பு சம்பந்தமான கட்டுரைகளையும் வழங்கியுள்ளார். இவை மொழி பெயர்ப்பியலின் அடிப்படைச் செய்திகளை மிக எளிய நடையில் பாமரர்க்கும் புரியும் வகையில் எடுத்துரைக்கின்றன. மொழி பெயர்ப்பு பற்றி அறிந்து கொள்ள, மொழி பெயர்ப்புப் பணியை மேற்கொள்ள விழையும் மாணவர்களுக்கு இக்கட்டுரைகள் உசாத் துணையாகும். ஒப்பிலக்கிய ஆய்வுகளில் மொழிபெயர்ப்பு இன்றியமையா இடத்தைப் பெற்ற களமாகும். ஒப்பிலக்கிய மாணவர்களுக்கு மொழி பெயர்ப்பின் தேவையும், இன்றியமையாதது. அவ்வகையில் இக்கட்டுரைகள் பெரிதும் பயனுடையன.

"திருவள்ளுவரும் மார்க்கஸ் அரேலியசும்" (தினமணி பிப்.22. 1989) இரு ஆசிரியர்களை ஒப்பிடும் பொழுது இருவரது வாழ்க்கைச் சூழல், வரலாறு, சமூகச் சூழல், அரசியல் சூழல், கருத்து வளர்ச்சியில் இலக்கிய வளர்ச்சியில் இவர்களது இடம் என்ற அடிப்படையில் ஒப்பிட்டுக் காண்பது மரபு. இங்கு

திருவள்ளுவரையும் மார்க்கஸ் அரேலியசையும் ஒப்பிடும் கட்டுரையாளர் திருவள்ளுவர், அரேலியசின் வாழ்க்கை வரலாற்றை ஒப்பிட திருவள்ளுவர் பற்றிய ஆதாரபூர்வமான வரலாறு இல்லாது போய்விட்டதைக் குறிப்பிடுகிறார். (மார்க்கஸ் அரேலியசு கி.பி.161-180 வரை ரோமானியப் பேரரசை ஆண்டவர். தத்துவ வேந்தர் என அறியப்பட்டவர்; ஸ்டாயிக் தத்துவத்தில் ஈடுபாடு கொண்டவர். ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவுடன் அதிகாரத்தை அரசை இரு பிரிவாக்கித் தன் தம்பிக்கு அளித்து ரோமானிய அரசின் மரபில் புதுமையைப் படைத்தவர்) இவரது சிந்தனைகள் அடங்கிய நூல் நாட்குறிப்பு வடிவில் அமைந்தது. 'Meditations' என்ற இந்த நூலை இராஜாஜி 'ஆத்மசிந்தனை' என்ற பெயரிலும் பொ. திரிகூட சுந்தரம் 'இதய உணர்ச்சி' என்ற பெயரிலும் மொழி பெயர்த்துள்ளனர். இதன் முன்னுரையில் வ.வே.சு ஐயர் இந்நூலிற்கு உலகத்தின் அற நூல்களில் சிலவற்றைத்தான் இணையாகக் கூறமுடியும். எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்தால் திருவள்ளுவதேவரின் திருக்குறளின் யோக்யதை இந்நூலில் உள்ளது எனச் சொல்லலாகும். எனக் குறிப்பிட்டுள்ளதை எடுத்துக் காட்டி இவ்வடிப்படையில் சிந்தனைஅளவில் திருவள்ளுவர்-அரேலியஸ் இருவரிடையே காணலாகும் சில முனைப்பான ஒப்புமைக் கருத்துகளை எடுத்துரைக்கிறார்.

தமக்குத் தீமை புரிந்தவர்களுக்கும் நன்மையே புரியும் நன்னெஞ்சையே திருவள்ளுவரும் அரேலியசும் வேண்டுகின்றனர்.

> "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
> நன்னயம் செய்துவிடல்" என்றும் (இன்னா செய்யாமை)

> "இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
> என்ன பயத்ததோ சால்பு" (சான்றாண்மை)

என்றும் கூறுவது போலவே அரேலியசும்,

> "பிறர் செய்த தீமைக்குத் தகுந்த பிரதி அவரைப்போல
> நாமும் செய்யாதிருத்தலே" என்றும்

"தீங்கு இழைத்தவனிடமும் அன்பு செய்வது உன் தருமம்" என்றும் கூறுகிறார். இவர் தீங்கு செய்தவனிடமும் அன்பு காட்டச் சொல்ல, திருவள்ளுவர் மேலும் ஒருபடி சென்று இன்னா செய்தார்க்கும் இனியவே செய்க, அவர் நாண நன்னயம் செய்க என அறிவுறுத்துவதை எடுத்துரைக்கிறார் கட்டுரையாளர். வள்ளுவர் மனத்துக்கண் மாசிலன் ஆதலே அறம் என்றதைப் போலவே அரேலியசும், உள்ளத்தைப் பரிசுத்தமாக்கிப் பயன்படுத்துதே அருமை, அதில்தான் சகல நற்பயனும் உண்டு, மற்றவை அனைத்தும் நிலையற்றவை; வெறும் புகையாப்போகும் என்கிறார். அன்றறிவாம் என்னாது அறம் செய்க என்றார் வள்ளுவர். அதைப்போலவே அரேலியசும், உயிருள்ள போதே அவகாசம் இருக்கும் போதே உள்ளத்தைச் சுத்தமாக வைத்துக் கொள் என வலியுறத்துகிறார். இன்பதுன்பங்களைச் சமமாகக் கருதும் மனப் பக்குவம் வேண்டும் எனக் கூறும் அரேலியஸ் (இன்பம், பிறப்பு-இறப்பு, புகழ்ச்சி-இகழ்ச்சி இந்தத் துவந்தங்களைச் சமஉணர்ச்சியுடன் கருதுபவனே தெய்வ பக்தன்) நேரும் சுகம்-துக்கம் இரண்டையும் வருத்தமின்றி ஒப்புக்கொள்வதே ஞானம் எனக்கூற வள்ளுவரோ இடுக்கண் வருங்கால் நகுக என்றும் இடும்பைக்கு இடும்பைப்படுக்க என்றும் அறிவுறுத்துகிறார். வள்ளுவர் ஒழுக்கத்தை வலியுறுத்தி ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் எனவும் ஒழுக்கத்தின் மூலம் மேன்மை எய்துவதையும் கூற, அரேலியசும் நல்லொழுக்கமும் நேர்மையுமே வாழ்க்கையில் மக்களின் குறிக்கோளாக இருக்கவேண்டுமென வலியுறுத்துகிறார். திருவள்ளுவர் பிற உயிர்களைக் கொல்லாமை உயிர் இரக்கம் ஆகியவற்றை வற்புறுத்துவது போல அரேலியசும் உயிர் இரக்கத்தைப் போற்றுகிறார். மரணத்தின் இயல்பையும் இருவருமே எடுத்துரைப்தைக் கோடிட்டுக் காட்டிய கட்டுரையாளர் இருவரும் வாழ்வாங்கு வாழ வழி காட்டியவர்கள் என முடிவு கூறுகிறார்.

"புதுக் கவிதை உத்திகள்" எனும் கட்டுரையில் (டிச.2,1989) புதுக்கவிதை எனும் இலக்கிய வகையில் படைப்பாளிகள் பயன்படுத்தும் கவிதையை மெருகேற்றும், கவிதைக்குச் செறிவூட்டும்

உத்திகள் பற்றிப் பேசுகிறார். இது இலக்கிய வகை ஆய்வில் இலக்கிய வகை ஒன்றின் (புதுக்கவிதை) வளர்ச்சியில் காணலாகும் புதிய போக்குகளை ஆய்வது எனக் கூறலாம்.

“புதுக்கவிதையில் மரபின் தாக்கம்” எனும் கட்டுரை (தினமணி ஜன. 11, 1989) “புதுக்கவிதை பற்றிக் குறிப்பிடும் பொழுது” திறந்தவெளிக் கவிதை ‘விலங்குகள் இல்லாத கவிதை’ சொற்கள் கொண்டாடும் சுதந்திரதினவிழா, கருத்துக்கள் தம்மைத் தாமே ஆளக் கற்றுக்கொண்ட புதிய மக்களாட்சி முறை என்றெல்லாம் அழைக்கப்படுவதைச் சுட்டிக் காட்டுகிறார். எந்த இலக்கிய வகையும் சூனியத்திலிருந்து தோன்ற முடியாது. தன் காலத்துக்கு ஏற்ற கருத்துகளையும் காலத்தின், சமூகத்தின் தேவையையும் நிறைவேற்றும் நோக்குடன் உருவாகும் புதிய இலக்கிய வகை தனக்குமுன்னே உள்ள இலக்கிய வகைகளின் சில பல கூறுகளை எடுத்துக் கொண்டு மேலே வளரும். இத்தன்மையைப் புதுக்கவிதையின் வளர்ச்சியிலும் காணலாம். இதையே கட்டுரையாளர் மரபின் தாக்கம் என்ற நோக்கில் எடுத்துரைக்கிறார். மரபினின்று கடன் வாங்கல் மரபின் தூண்டுதலால் படைத்தல், மரபை வளர்த்தல், மரபினை மாற்றல் மரபினை மீறல், மரபை உருவாக்குதல் என்ற நோக்கு நிலைகளில் புதுக்கவிதைகளில் இருந்து எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குகிறார். மரபுக் கவிதைக்கும் புதுக் கவிதைக்கும் இடைப்பட்ட மாற்றங்களுக்கு உட்பட்ட காலகட்டத்துப் படைப்பான பாரதிதாசனின் கவிதைகளில் இத்தகு மரபைப் போற்றல், மரபை வளர்த்தல், மரபை மாற்றல், மரபை மீறல், மரபை உருவாக்கல் ஆகியன காணப்படுகின்றன என்று எடுத்துக்காட்டுகிறார், "பாரதிதாசனின் காதல் சித்திரம்" என்ற கட்டுரையில்.

“திருக்குறளின் பொதுமைப்பண்பும் தனிச்சிறப்பும்” - (இலக்கியச் சால்பு பக்.35-80) எனும் கட்டுரை அகநிலை ஆய்வு ஒப்பியல் ஆய்வு எனும் இருபகுதிகளைக் கொண்டது. முதற்பகுதியில் முப்பால் பாகுபாட்டின் மாட்சிமை, பொதுமைப் பண்பு, அறநெறியில் அழுத்தமான நம்பிக்கை, பொருளின்

இன்றியமையை வலியுறுத்தல், ஊடல் சித்திரிப்பில் புரட்சி, உள்ளுறையைக் கையாளும் சிறப்பு போன்றனவற்றை விளக்கிய பின்னர் இரண்டாவது பிரிவுக்குச் செல்கிறார். இரண்டாம் பிரிவான ஒப்பியல் ஆய்வில் திருக்குறளை மனு தரும சாத்திரத்துடனும் அர்த்தசாஸ்திரத்துடனும், தம்ம பதத்துடனும் ஒப்பிடுவதுடன் திருவள்ளுவரை சாக்ரடீஸ், பிளாட்டோ, அரிஸ்ட்டாடில், மார்க்கஸ் அரேலியசு, கன்பூஷியசு ஆகியோரது கருத்துக்களுடன் ஒப்பிட்டு ஒற்றுமை வேற்றுமைகளைப் பிரித்துணர வைக்கிறார். இக்கட்டுரையில் கட்டுரையாளர் தன் ஒப்பீட்டு நோக்குகளுக்கு அடிப்படைகளை நல்கிய கட்டுரைகளையும், நூல்களையும் முதற்கண் ஒவ்வொரு பகுதியிலும் சுட்டிக்காட்டி, பின்னர் அவற்றிற்கும் மேல் தன் ஒப்பியல் ஆய்வுக் கருத்துகளை எடுத்துரைக்கின்ற பான்மை குறிப்பிடத்தகுந்தது.

“திருக்குறளும் மனுதருமமும்” - எனும் ஒப்பீட்டில் திருக்குறளும் இந்திய அற நூல்களும் எனும் நூலில் க.த. திருநாவுக்கரசு இரண்டுக்கும் இடையேயான பதினொரு ஒப்புமைகளை வரிசைப் படுத்தியிருப்பதைச் சுட்டி, ஓர் எடுத்துக்காட்டும் தந்தபின் இரண்டுக்குமிடையே உள்ள வேற்றுமைகளை எடுத்து விளக்குகிறார். பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் வருண தருமக் கோட்பாடு, நால்வகை ஆசிரமங்கள், ஆசாரங்களை அடிப்படையாகக் கொண்டமை, பெண்கள் பற்றிய கண்ணோட்டம், பெண்ணின் கற்பு நெறி பற்றிய சிந்தனை, கொலையையும் புலால் உண்ணுதலையும் அனுமதித்தல், உழவுத் தொழில் பற்றிய கண்ணோட்டம், ஆபத்துத்தருமம் பற்றிய செய்திகள் போன்ற கருத்தமைவுகளில் மனுதருமமும் திருக்குறளும் வேறுபடுமாற்றை விளக்கியுள்ளார்.

“திருக்குறளும் அர்த்தசாஸ்த்திரமும்” - எனும் ஒப்பீட்டில் இரண்டுக்குமிடையேயான ஒற்றுமைகளை விட வேற்றுமைகளே அதிகமிருப்பதைச் சுட்டுகிறார். கௌடலியர் தன் நாடு நலம் பெறுவதற்குரிய செயல்களைத் ‘தந்திரம்’ எனும் பகுதியிலும் பகை நாட்டைக் கொள்வதற்குரிய உபாயங்களை உபாயம் எனும்

பகுதியிலும் தருவதாகக் கூறும் கட்டுரையாளர், கௌடலியரிடம் பொருள் பற்றிய பார்வை முதன்மை பெற வள்ளுவரிடம் அறப் பார்வையே முதன்மை பெறுகிறது என்கிறார். வள்ளுவர் தீதின்றி அறவழியில் வரும் பொருளுக்கே முதன்மை தர, கௌடலீயர், அரசுக்கு நெருக்கடியான காலத்தில் மக்களை ஏமாற்றி, தண்டனையை மிகுதியாக்கிப் பொருள் ஈட்டலாம் என்கிறார்.

பகைவரை வெல்ல வஞ்சித்தல், மறைவிற் கொல்லுதல், மாயமந்திரங்களைப் பயன்படுத்துதல், 18 வகையான நஞ்சைப் பயன் படுத்திப் பகை நாட்டு மக்களுக்கும் பிற உயிர்களுக்கும் தீங்கிழைத்தல் போன்ற பல முறையற்ற வழிகளைக் கூறுகிறார் என்றும் இவையனைத்தும் வள்ளுவரது கருத்துக்கு மாறுபட்டவை என்றும் கூறுகிறார். மேலும் அரசியல் சமுதாயமாற்றத்திற்கு வன்முறையைக் கையாளச் சொல்லுகிறது அர்த்தசாஸ்திரம். பகைவனை அழிப்பதைக் கொள்கையாக் கொண்டது. ஆயின் வள்ளுவரின் கொள்கையோ பகைவனை அழிக்க எண்ணாது பகைவன் மனதில் உள்ள பகையை அழிக்க - மனமாற்றத்தை ஏற்படுத்த வழிகாட்டுகிறது என்றும் வேற்றுமைகளைச் சுட்டுகிறார் கௌடியல்யரின் நீதி வருணநீதி எனவும் திருவள்ளுவரின் நீதி மக்கள் நீதி எனவும் வேறுபடுத்திக் காட்டுகிறார். பரத்தமை அடிப்படையிலும் இருவரும் வேறுபாடுவதைச் சுட்டும் கட்டுரையாளர் கௌடலீயர் பரத்தையரை மையமாக வைத்து அரசு பொருளீட்ட வழிகாட்ட, காமத்துப்பாலில் வள்ளுவர் பரத்தையர் அற்ற ஊடலையே கட்டுகிறார் என்றும் வள்ளுவர் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கற்பு நிலையைச் சுட்ட, கௌடலீயர் ஆண் பெண் இருபாலருக்கும் பலதார மணமுறையைச் சுட்டுகிறார் என்றும் வேறுபடுத்திக் காட்டுகிறார்.

"திருக்குறளும் தம்மபதமும்" எனும் பகுதியில் ஒரு கருத்தை உடன்பாட்டாலும் எதிர்மறையாலும் எடுத்துரைத்து, சொல்ல வந்த கருத்தை வலியுறுத்தும் பாங்கு தம்மபதத்தில் உள்ளது என்றும். திருக்குறளிலும் இந்நடை நெறி, கல்வி கல்லாமை, பெரியாரைத் துணை கோடல், சிற்றினம் சேராமை, செங்கோண்மை,

கொடுங்கோல், இரவு, இரவச்சம் என்பது போல அமைந்துள்ளது எனவும் ஒரே குறளிலும் கூட இத்தன்மை வாய்க்கப்பெற்றுள்ளது (குறள் 137, 200, 616) எனவும் இத்தகைய குறட்பாக்களை வ.சுப.மாணிக்கம் 'இருமுகக்குறள்கள்' என்றழைப்பார் எனவும் எடுத்துரைக்கிறார். தம்மபதத்திற்கும் குறளுக்கும் இடையே உள்ள நுண்ணிய வேறுபாடு, தம்மபதம் வாழ்க்கையைத் துன்ப இயற்பண்பினதாகக் (Pesimistic) காட்ட வள்ளுவர் இன்ப இயற்பண்பினதாகச் (optimistic) சுட்டுகிறார் என்று எடுத்துரைக்கிறார். தம்மபதம் துறவிகளுக்கான நூல் எனவும், திருக்குறள் மக்கள் அனைவருக்குமான நூல் எனவும் வேறுபடுத்துகிறார்.

"திருவள்ளுவரும் சாக்ரடீசும்" எனும் பகுதியில் பிறப்பாலும் செல்வத்தாலும் சிறந்தோரே உயர்ந்தோர் என்று சாக்ரடீசு கருத, வள்ளுவர்

> "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமையான்"

எனும் புத்துலகக் கோட்பாட்டைக் கூறியவர் என்றும் கல்வி மேட்டுக் குடியனருக்கே என்று சாக்ரடீசு கருத, வாழும் உயிர்கள் அனைத்திற்கும் கல்வி கற்க உரிமை உண்டு என்கிறார் வள்ளுவர் என்றும் வேறுபடுத்திக் காட்டுகிறார். இதே போன்றே பிளாட்டோ, அரிஸ்ட்டாடில் ஆகியோரது கருத்துகளையும் ஒப்பிடுகிறார்.

அறமும் அரசியலும் இணைந்து இயங்க வேண்டுமெனும் கருத்தில் வள்ளுவரும் அரிஸ்ட்டாடிலும் நம்பிக்கை கொண்டவர்கள், அரசின் உறுப்புகளாக இவர்கள் வகுத்துக் காட்டியனவும் ஒப்புமையுடையன, அறிவின் பயனாக்கம் பற்றிக் கூறும் போது அரிஸ்டாட்டில் தீய செயலைச் செய்விலிருந்து தடுத்து, நல்ல செயலைச் செய்யுமாறு நெறிப்படுத்துவது அறிவு என்று கூறுகிறார். இக்கூற்று வள்ளுவரின்,

"சென்ற இடத்தால் செலவிடாது தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு"- (422)

என்ற குறட்கருத்துடன் ஒத்துப் போவது என்றும் எடுத்துக்காட்டும் இவர் நட்பு பற்றி இருவரது ஒத்த கருத்துகளையும் விரிவாக ஆய்கிறார். வேறுபாடாக உள்ளவற்றையும் காட்டும் இவர் நண்பர்களிடம் நம் துன்பத்தைக் கூறி அவர்களையும் துன்பத்தில் ஆழ்த்துவது முறையன்று என்று கூறும் அரிஸ்ட்டாடில் சுட்டும் நட்பில் தியாகத்திற்கு இடமே இல்லை எனவும் ஆயின் திருவள்ளுவர் நண்பர்களிடம் இருக்க வேண்டிய ஒத்த உணர்வு பற்றியும் உடுக்கை இழந்தவன் கைபோல நட்பு நண்பனின் இடுக்கண்களைய வேண்டியது பற்றியும் சுட்டுகிறார் என்றும் வேறுபாடுகளை எடுத்துக் காட்டுகிறார். அரிஸ்ட்டாடில் சுட்டும் குடிமகன் பெருந்தகையாளனாக, அறவோனாக, குறிக்கோள் நிலையில் விளங்க, வள்ளுவர் குடிமகன் சாதி, இனங்கள் கூட வேறுபாடற்ற அனைத்துலகக் குடிமகன் என்றும் சுட்டுகிறார். மார்க்கஸ் அரேலியசை வள்ளுவருடன் ஒப்பிடும் பொழுது இன்ப துன்பங்களைச் சமமாக பாவிக்கும் பொதுமல் தன்மையை இருவரும் சுட்டுவதாகக் கூறுகிறார். தமக்குத் தீங்கு இழைத்தவரிடமும் அன்பு பாராட்டும்படி அரேலியசு கூற, வள்ளுவரோ இன்னும் ஒருபடி மேலே போய் இன்னா செய்தாருக்கும் இனியவை செய்யும்படியும், அவர் நாண நன்னயம் செய்து விட்டு விடும்படியும் கூறுவதாக விளக்குகிறார்.

மனநலம் போற்றுவதில், ஒழுக்கத்தை உயிரிலும் மேலானதாகக் கருதுவதில், உயிர் இரக்கம் பேணுவதில் மெய்ப்பொருளை உணர்த்துவதில், மக்கள் வாழ்வாங்கு வாழ வழி காட்டுவதில் இருவரும் ஒன்றுபடும் இடங்கள் பல எனக் கோடிட்டுக் காட்டுகிறார் கட்டுரையாளர். வள்ளுவர் அரேலியசை விஞ்சும் இடங்களும் சில உள என்கிறார்.

“திருவள்ளுவரும் கன்பூசியசும்” - எனும் பகுதியில் சான்றோர் செயல் வீரர்கள். பேசுவதைவிட அதைச் செயலில்

காட்டுவது அவர்தம் தன்மை, விரிந்த மனப்பான்மையும், காழ்ப்புணர்வு அற்ற மனமும் கொண்டவர்கள் என்பார் கன்பூசியசு. வள்ளுவரும்,

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

என அறிவுறுத்துகிறார் என்றும் இருவருமே அறத்தான் வருவதே இன்பம் என்ற கோட்பாட்டினர் எனவும் காலத்தின் அருமையை இருவரும் வலியுறுத்துகின்றனர் எனவும் சுட்டுகிறார். சில கருத்து வேற்றுமைகள் தவிர, கன்பூசியசும் வள்ளுவரும் கூறும் அறிவுரைகள் பல ஒப்புமையுடையன எனக் கூறுகிறார். இவ்வாறான பல ஒப்புமைகளைக் கண்ட பிறகு திருக்குறளுக்கு இணையான நீதி இலக்கியத்தை உலகச் செம்மொழிகள் வேறொன்றிலும் நம்மால் காணமுடியவில்லை எனவும் முடிவு கூறுகிறார்.

"மு.வ.வும் காண்டேகரும்"
(மு.வ. கருத்தரங்கக் கட்டுரைகள், பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1987 பக்.240-255).

புகழ்பெற்ற, தமிழ் வாசகர்கள் நன்கு அறிந்த மராத்தி எழுத்தாளர் காண்டேகரின் படைப்புகளும் மு.வ.வின் படைப்புகளும் கட்டுரையில் ஒப்பிடப்படுகின்றன. இரு நாவலாசிரியரிடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகள் பகுத்தாயப்படுகின்றன. மு.வ.வின் நாவல்கள் அகமனப் போராட்டங்களை முதன்மைப்படுத்த காண்டேகரின் நாவல்கள் மனிதன் சமூகத்தோடும், தன்னிடம் அன்பு செலுத்தும் உறவினரிடமும், தன்னோடும் போராடும் நிலைகளைச் சித்தரிக்கின்றன. மு.வ.வின் ஒரு நாவலில் இடம் பெறும் பாத்திரம் அவரது பின்னயை நாவல்களிலும் உலவுவதாகப் படைத்துத் தம் பாத்திரங்கள் அனைவரும் ஓர் உலகத்தைச் சேர்ந்தவர்கள் என

உணரவைப்பார். காண்டேகர் மேலும் ஒருபடிச் சென்று தமக்கும் தம் கதை மாந்தருக்கும் இடையே ஒரு நெருக்கமான உறவை ஏற்படுத்திக் கொண்டுள்ளார் என்றும் காண்டேகரின் பாத்திரங்கள் அவரது எழுத்துகளில் அதிக ஈடுபாடு கொண்டவர்கள் என்றும் முடிவு கூறுகிறார் கட்டுரையாளர்.

பாத்திரப் படைப்புகளின் ஒப்பீடாக மு.வ. வின் நெஞ்சில் ஒரு முள், நாவலில் வரும் வடிவையும் காண்டேகரின் எரி நட்சத்திரம் எனும் நாவலில் வரும் உல்காவையும் ஒப்பிட்டு அவர்களுடைய வாழ்க்கைப் போக்குகள், மனப்பான்மைகள், ஈடுபாடுகள் போன்றவற்றிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை எடுத்துக் காட்டுகிறார் இரா.மோகன். இக்கட்டுரையின் இப்பகுதியை மையமிட்டு, பின்னர் ஒப்பிலக்கிய ஆய்வு மாணவர் ஒருவர் தம் இளநிலை ஆய்வாளர் பட்ட ஆய்வேட்டை மேற்கொண்டு பட்டம் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மு.வ.வின் நாவல்களில் 'பெற்றமனம்' 'அகல் விளக்கு', மலர்விழி ஆகிய மூன்று நாவல்களில் மட்டுமே நாவலின் கதை நிகழ்வின் காலப்பின்னணி சுட்டப்படுகிறது எனவும் அதற்குக் காரணம் மு.வ.வின் நாவல்களின் நிகழ்ச்சிகளைவிட பேச்சும் சிந்தனையுமே அதிக முக்கியத்துவம் பெறுவதால் காலப் பின்னணியில் விவரங்கள் அதிகம் குறிப்பிடப்படவில்லை எனவும் முடிவு கூறுகிறார். அதே சமயத்தில் காண்டேகரின் நாவல்களில் அழுத்தமான காலப்பின்னணி இடம் பெறுகிறது என்றும் குறிப்பாக சுதந்திரப் போராட்டமும், நாட்டுப்பற்று மிக்க விடுதலை இயக்கமும் சீர்திருத்த இயக்கமும் முக்கியமாக இடம் பெறுகின்றன எனவும் கூறுகிறார். உவமைகளைக் கையாள்வது, நோக்கு நிலைகளில் வேறுபாடுகளைக் கையாள்வது, கடித உத்தியையும் நாட்குறிப்பு உத்தியையும் பயன்படுத்துவது என்பனவற்றில் ஒற்றுமைகள் காணப்படுகின்றன எனவும் பல்வேறு நோக்கு நிலைகளைக் கையாண்ட காண்டேகர் மு.வ.வுக்கு அவ்வகையில் தூண்டுகோலாகவும் முன்னோடியாகவும் அமைந்திருக்கிறார் எனவும் கூறுகிறார் கட்டுரையாளர்.

முனைவர் இரா. மோகனின் நூல்கள்

'இலக்கியச் சுடர்' எனும் நூலில் (12 கட்டுரைகளின் தொகுப்பு நூல்) சில கட்டுரைகள் இலக்கிய வகை ஒன்றின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிக் கூறுவன. (வ.ரா.வின் நடைச்சித்திரம், தமிழில் பயண நூல்கள், ஒப்பியல் நோக்கில் ஆத்திச்சூடி இலக்கியம்) என்பதுகளில் புதுக்கவிதைப் போக்குகள் எனும் கட்டுரை ஒரு குறிப்பிட்ட இலக்கியவகையின் (புதுக்கவிதையின்) வளர்ச்சிப் போக்குகளை விவரிப்பது. கவிதையில் காலமும் கருத்தும் என்னும் கட்டுரை ஒரு குறிப்பிட்ட அடிக்கருத்து காலம் தோறும் கவிஞர்களால் எவ்வாறு பாடப்படுகிறது என்பதை விளக்குவது. 'மொழி பெயர்ப்பின் அடிப்படைகள்' எனும் கட்டுரை ஒப்பிலக்கியக் கல்விக்கு அடிப்படையான மொழி பெயர்ப்பில் பின்பற்ற வேண்டிய முறைகளையும் சிக்கல்களையும் விளக்குவது.

ஆங்கிலத்தில் ஏ.ஜி. கார்ட்னர் எழுதிய 'சமூகத்தின் தூண்கள்' (Pillars of Society) 'தீர்க்கதரிசிகளும்' மறையோரும் மன்னர்களும்' (Prophets Priests & Kings) போன்ற சொற்சித்திரங்கள் வாழ்க்கையில் வெற்றி கண்டோரை வாசர்களுக்கு அறிமுகப்படுத்துபவை. நாற்பதுகளில் பரவலாக ஏற்கப்பட்டவை. இத்தகைய சொற்சித்திரங்களைத் தமிழில் வரையவேண்டும் என்ற சித்தம் (வ.ரா) அவரது நெஞ்சில் எழுந்தது. அதன் விளைவாக 'நடைச் சித்திரம்' என்ற புதிய இலக்கிய வகை தமிழுக்கு வரலாயிற்று என்று கூறும் கட்டுரை ஆசிரியர் ஏ.ஜி. கார்ட்னரின் நடைச்சித்திர உத்தியை மட்டும் ஏற்றுக் கொண்ட வ.ரா. இறுதிவரை அவரையே பின்பற்றாமல் பாடுபொருள் தேர்வில் தன் நோக்கத்திற்கு ஏற்ப மாற்றங்களைச் செய்து கொண்டுள்ளார் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஏ.ஜி.கார்ட்னர் வாழ்க்கையில் வெற்றிப் படிகளில் ஏறிய - புகழேணியின் உச்சியில் உள்ளவர்களைப் பற்றி மட்டும் எழுத, வ.ரா.வோ சமுதாயத்தின் அடிமட்டத்தில் உள்ளவர்களது சித்திரங்களைத் தீட்டினார் என்கிறார். 'மைக் குறத்தி' 'அங்காடிக் கடை லட்சுமி' பியூன் சின்னக் கண்ணு 'தாஸி

கோகிலாம்பாள், 'அம்மாக்கண்ணு' என 37 நடமாடும் வாழ்க்கைச் சித்திரங்களை அளித்திருக்கிறார். வ.ரா. இவர்களை எல்லாம் கூர்ந்து நோக்கி, பரிவுணர்ச்சியுடன் வாசகர் இவர்களை அடையாளம் காணும்படி ஓரிருவரிகளில் ஒவ்வொருவரின் அடிப்படைப் பண்பையும் வெளிக்கொணர்ந்து விடுகிறார் வ.ரா. இவை அவலச் சுவையும் அங்கதச்சுவையும், நகைச்சுவையும் கொண்டு இனிப்பு மூலாம் பூசப்பட்ட கசப்பு மருந்து போல அமைந்தவை என்பதை எடுத்துக் காட்டுகள் தந்து விளக்கி 'நடைச்சித்திரத்துக்கு வ.ரா. என்று கூறலாம் என முத்தாய்ப்பும் தருகிறார்.

'தமிழில் பயண நூல்கள்' எனும் கட்டுரை பயண நூல்களின் வேர்களை, மூலங்களை, சங்க இலக்கியங்களில் இருந்தே தேடிக் கொணர்கிறது. ஆற்றுப்படை இலக்கியங்கள் பயண நூல்களுக்கு மூல வித்து போல பயண நூல்களுக்கான நோக்கத்தைக் கொண்டுள்ளன எனவும் கோவலன்-கண்ணகியின் மதுரைப் பயணம், செங்குட்டுவனின் வடதிசைப்பயணம், அனுமனின் இலங்கைப் பயணம், பக்தி இலக்கியங்கள் சுட்டும் மூர்த்தி, தலம், தீர்த்தம் நோக்கிய பயணங்கள், போன்றன பற்றியும் பயணம் பற்றிய பிற நூல்களான தகடூர் யாத்திரை, வழிநடைச் சிந்து, யாத்திரைக் கும்மி போன்றன பற்றியும், பயணத்திற்கான முன்னேற்பாடுகள் பற்றிய பாரதிதாசனின் கவிதை பற்றியும் கூறி பயண இலக்கியத்தின் பரிமாணங்களை எடுத்துரைக்கும் கட்டுரையாளர், பயண இலக்கிய வகைகளையும் விளக்குகிறார். "உள்நாடு வெளிநாடு எனப் பல இடங்களுக்கும் சென்ற பயணங்கள், கல்வியாளர்கள், தொழிலதிபர்கள், எழுத்தாளர்கள், அரசியல் வாதிகள், பத்திரிக்கையாளர்கள் எனப்பலரால் மேற் கொள்ளப்பட்ட பயணங்கள், பக்தி, பண்பாட்டுத் தொடர்பு, சுற்றுலா, தூது, ஆய்வு, கல்வி, விருந்து, உறவு, காட்சிகாணல் அடிப்படையில் எழுந்த பயணங்கள் எனப் பல நிலைகளில் தமிழில் எழுந்த" (இலக்கியச் சுடர் ப. 112) பயண நூல்களை வகைப்படுத்தி ஒவ்வொன்றுக்கும் எடுத்துக் காட்டு தந்து விளக்குகிறார். பயண இலக்கிய வரலாற்றில் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தவர் மணியன் (இதயம் பேசுகிறது,

மேற்கு ஆப்பிரிக்கப் பயணக் கதைகள்) எனவும், 'அடிச்சுவட்டில்' என்ற புதிய போக்கை ஏற்படுத்தியவர் சோ. சிவபாத சுந்தரம் (சேக்கிழார் அடிச்சுவட்டில்) எனவும் கூறுகிறார். பிலோ இருதயநாத்தின் தனித்தன்மை கொண்ட பழங்குடிமக்கள் பற்றிய பயண இலக்கியம் குறிப்பிடத் தகுந்தது என்பதையும் வெ. சாமிநாத சர்மாவின் எனது பர்மா வழிநடைப் பயணம் இரண்டாவது உலகப் போரின் பொழுது பர்மாவிலிருந்து கால்நடையாகச் சென்னை வந்து சேர்ந்த அவரது 145 நாள் வழிநடை அனுபவங்களை, நிகழ்வுகளைக் கூறும் யாத்திரை நூல் என்பதையும் விளக்குகிறார். பயண இலக்கியங்களின் மொழிநடை எவ்வாறு அமைதல் வேண்டுமென்பதை ஏ.கே. செட்டியார், கல்கி, தேவன், சாவி ஆகியோரின் பயண நூல்கள் விளக்குவன என்று எடுத்துரைக்கும் இவர் இன்றுவரை பயண நூல்களின் பயணம் வளர்ந்து வந்து கொண்டே இருப்பதைச் சுட்டுகிறார். இது பயண இலக்கியம் என்ற இலக்கிய வகையின் தோற்றம், வளர்ச்சி, கிளைத்துப்பரவிய நிலை போன்றவற்றை விளக்கும் கட்டுரை எனலாம்.

'எண்பதுகளில் புதுக் கவிதைப் போக்குகள்' எனும் கட்டுரை புதுக்கவிதையின் வளர்ச்சிப் போக்கில் காணப்படும் பிரதான அம்சங்களை விளக்குகிறது. பயில்தொறும் நூல் நயம் போல, படிப்பவரின் அறிவுநிலைக்கும் அனுபவ ஒளிக்கும் ஏற்பப் பொருள் ஆழம் விரிந்து கொண்டே செல்லும் பாங்கை என்பதுகளின் கவிதைகளில் சிறப்பாகக் காணமுடிகிறது என எடுத்துக் காட்டு மூலம் விளக்குகிறார் (ஆத்மா நாம் கவிதை) படிப்பவர் மனதில் சிந்தனைப் பொறிகளை, மின்னல்களை, தெறிப்புகளை சிலிர்ப்புகளைத் தோற்றுவிக்கும் குறுகத்தறித்த கவிதைகள்- ஆழமும் அழகும் குறையாத வாமனக் கவிதைகளுக்கு எடுத்துக்காட்டாக விக்ரமாதித்யனின் ஆகாசம் நீலநிறம், ஊருங்காலம், உள்வாங்கும் உலகம், எழுத்து, சொல் பொருள் போன்ற கவிதைத் தொகுதிகளைக் கூறும் ஆசிரியர் அடுத்து வழக்கமான போக்கிலிருந்து மாறுபட்டு எதையும் வித்தியாசமாகப் பார்ப்பதும் என்பதுகளின் கவிதைப் போக்கில் காணப்பட்ட சிறப்புப்பண்பு என்கிறார். (எ.டு. ராஜசுந்தரராஜன், - உயிர் மீட்சி; ஜெயபாஸ்கரன் - 'எல்லைகள்')

சத்யனின் 'நவீன' எண்பதுகள் எனும் கவிதை நிகழ்கால வாழ்வின் நிஜங்களைப் படம் பிடிக்கும் அக்காலகட்டத்து கவிதைப் போக்குக்கு எடுத்துக்காட்டாகத் தரப்பட்டுள்ளது. எண்பதுகளின் கவிஞர்கள் இந்த உலகத்தை, வாழ்க்கையை மனிதத்தை அவற்றின் அழகோடும் குரூரத்தோடும் நேசிக்கிறார்கள். அவற்றின் குற்றங் குறைகளோடு ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். விரக்தி, வேதனை, சோர்வு, புலம்பல் இவற்றைவிட நினைவு, மகிழ்ச்சி நம்பிக்கை, நடைமுறைத் தன்மை இவற்றையே சிறப்பித்துப் பாடுகிறார்கள் என்று கூறுபவர் வண்ணநிலவனின் 'திருந்திய பதிப்பையும்' ஆத்மாநாமின் கவிதையையும் எடுத்துக் காட்டுகிறார். அதிகார வர்க்கத்தை ஆதிக்க மனப்பான்மையை எதிர்க்கும் போர்க்குரலும் அறிவியலின் தாக்கமும் பெற்றுள்ளன எனவும் காலத்தின் தேவையை நிறைவேற்றுகின்றன எனவும் முடிவு கூறுகிறார்.

கவிதையில் காலமும் கருத்தும் - எனும் கட்டுரை - 'யாண்டு பலவாகியும் நரையில வாகுதல்' எனும் அடிக்கருத்து காலம் தோறும் பல கவிஞர்களால் நேரடியாகவும் எதிர் மறையாக முரண் கருத்தாகவும் எவ்வாறு பயன் படுத்தப்பட்டுள்ளது என்பதை விளக்குகிறது. ஒப்பிலக்கிய ஆய்வில் அடிக்கருத்து, அடிக்கருத்து முரண், அடிக்கருத்துச் சுழற்சி பற்றிய ஆய்வுகள் குறிப்பிடத் தகுந்த முக்கியத்துவம் பெற்றவை. இக்கட்டுரை அத்தகு ஆய்வுகளுள் ஒன்று எனலாம். 'வாழ்க்கை பற்றிய கருத்துகளும் மாறிக்கொண்டே இருக்கும் சூழலில் வாழ்ந்த வாழ்க்கையின் அடையாளமாக நரை, திரை, மூப்பைக் காணும் பார்வையிலும் ஏற்படும் மாற்றங்களே இந்த அடிக்கருத்தின் தொடர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்களுக்கும் முரணுக்கும் காரணம் எனலாம்.

பிசிராந்தையாரின் "யாண்டு பலவாக நரையிலராகுதல், யாங்காகியர்" என்ற புறப்பாடலின் அடிக்கருத்து, தன் நரை திரையற்ற தன்மைக்கு (மாண்புகள் மிக்க மனைவியும், அறிவுநிறைக் குழந்தைகளும் குறிப்புணர்ந்து நடக்கும் ஏவலரும், முறையோடு ஆட்சிபுரியும் மன்னனுமே) காரணம் எது என்பதே. பாரதிதாசன் குடும்பவிளக்கில் பிசிராந்தையாரின் இக்கருத்தை அப்படியே ஏற்று

விரிக்கிறார், முடியரசனும் சிவசக்தியும் இளமையில் நரை வந்ததாகப்பாடி நேர் எதிராக இவர்கள் படைத்த பாத்திரங்களான சுற்றத்தார், நாடு, நட்பு, ஆட்சியில் உள்ளோர் அனைவரும் அமைந்திருப்பதாகக் காட்டுகின்றனர். இதனை அடிக்கருத்து முரண் எனலாம். பெற்ற என் தாயோ பேசியும் ஏசியும்[2] ஒரு மகன் என்னை உறுதுயர்க்காக்கி[3], மருமகள் என்னும் மாபெரும் பகையால்[4], மனைக்கினியானை குலத்துயர்வாளைக் கொடுந்துயர்ப் படுத்தி, இல்லின் உயர்வும் என் புகழ் உயர்வும் கருதிலளாகிக் கடும் போர்த் தொடுத்தனள். ஆளும் அரசோ அயலவர்க்காகி நாளும் தமிழுக்கு நலிவே தந்து நெஞ்சிற் கவலை விஞ்சிடச் செய்தது .... தாய்மொழி ..... தாழ்ந்ததென நினைத்தோர் வயிறு வளர்ப்போர் வதிவது இந்நாடே; நச்செனும் பொறாமை .... இச்சகம் பேசல் ... மிக்கிடல் கண்டு மெலிந்தது என் உளனே; .... பழகும் சீரிலோர் பலரே" எனும் முடியரசனின் கவிதை காலத்தின் மாற்றம் மனித மனங்களிலும் மாற்றத்தைக் கொண்ர்ந்ததால் பார்வையில், நடத்தையில் மாற்றம் நிகழ்ந்தது என்பதை விளக்குகிறது. இம் - மாற்றங்கள் அடிக்கருத்து முரணுக்குக் காரணமாயின. சங்கக் கவிதையையும் முடியரசனின், சிவசக்தியின் கவிதைகளையும் ஒப்பவைத்துக் காணும்போது தான் இவ்வடிக்கருத்து முரண் வெளிப்படுகிறது. சங்கக் கவிதையின் அடிக்கருத்தின் சூழற்சி போல சுஜாதாவின் கவிதை அமைகிறது. ஆனால் காலத்தின் மாறுபட்ட கோணத்தில் "யாண்டு பல ஆகி ... வினவுதிர் ஆயின், ஆண்டு தவறாமல், வரி கட்டுகிறேன், மீண்டும் மீண்டும், 'டை' அடித்துக் கொள்கிறேன்' (நைலான்ரதங்கள் ப.56) எனும் கவிதையை எடுத்துக் காட்டிய கட்டுரையாளர் இங்கு ஓர் அடிக்கருத்தை எடுத்துக்கொண்டு காலம்தோறும் அது பெற்ற மாற்றங்களைச் சுட்டுகிறார்.

"ஒப்பியல் நோக்கில் ஆத்திச்சூடி" எனும் கட்டுரை ஔவையாரின் ஆத்திச்சூடியைப் பாரதியாரின் புதிய ஆத்திச்சூடி, பாரதிதாசனாரின் ஆத்திச்சூடி, இளையார் ஆத்திச்சூடி ஆகியவற்றுடன் ஒப்பு நோக்கிக் காண்கிறது.

ஔவையின் ஆத்திச்சூடியின் அமைப்புமுறை தமிழிலக்கியத்தில் ஏற்படுத்திய தாக்கத்தால் உருவான பல ஆத்திச்சூடி, சூடி நூல்களை வரிசைப்படுத்திக் கூறிய பின்னர் பாரதி, பாரதிதாசன் ஆத்திச்சூடிகளில் காணப்படும் மாற்றங்களையும், புரட்சி மனப்பான்மைகளையும் காலத்தின் தேவை என்கிறார். 'போர்த் தொழில் புரியேல்' 'தொன்மை மறவேல்', கிழமைபாடவாழ், தையல் சொல் கேளேல் போன்ற ஔவையின் கூற்றுகளுக்கு மாறாக பாரதி, பாரதிதாசனின் கூற்றுகள் அமைந்திருப்பதை எடுத்துக் காட்டுகிறார். ஔவையார் பெண்மையின் மென்மைப் பண்புக்குரிய குணங்களை அறிவுறுத்த, பாரதியார் இவற்றினின்றும் மாறுபட்ட புதுமையான அறக்கருத்துகளை வலியுறுத்துகிறார் என்றும் ஆத்திச்சூடியைப் பொறுத்தவரை பாரதி-பாரதிதாசனுக்கிடையே கருத்தொப்புமைகள் உள்ளன என்றும், என்றாலும் பாரதியும் பாரதிதாசனும் வேறுபடும் இடங்களும் உண்டு என்றும் இதற்குக் காரணம் பாரதிதாசனின் இயக்கச் சார்பு என்றும் கூறுகிறார். பொதுவாக ஆத்திச்சூடிகள் மூன்றுமே காலத்தால் வடித்தெடுக்கப்பெற்ற சாறுடை அறிவுக் களஞ்சியங்களே என்று முடிவு கூறுகிறார். இக்கட்டுரை ஒரு குறிப்பிட்ட இலக்கியவகையின் வளர்ச்சி நிலையில் காலத்தின் தேவைக்கு ஏற்ற, எண்ண மாறுதல்கள் காணப்படுவதையும் ஔவையின் ஆத்திச்சூடியின் தாக்கம் தமிழிலக்கியத்தில் எவ்வாறு இருந்தது என்பதையும் விளக்குகிறது.

இரா.மோகனின் மற்றொரு நூல் '**பண்டிதமணியின் நடைநயம்**' இது தனியொரு ஆசிரியரின் செந்தமிழ் நடைச் சிறப்பு, மேடைப் பேச்சுகளின் தன்மைகள், நயங்கள் ஆகியவற்றைத் திறனாயும் நூல். இத்திறனாய்வின் ஒரு பகுதியாக ஒப்பியல் நயங்கள் எனும் தலைப்பில் பண்டிதமணியின் மொழிப்புலமைகளை எடுத்தியம்புகிறது. வடமொழியின் கண்ணுள்ள அளவை நூல்கள், சுவையாராய்ச்சி நூல்கள், (இரக்கோட்பாடு பற்றியும் தொனியாலோகம் போன்ற தொனிக் கோட்பாடு பற்றியும் உள்ள நூல்களாகலாம்) காவிய ஆய்வு நூல்கள், காவிய ஆய்வுக்கான கருவி நூல்கள் பிற அறிவுநூல்கள் போன்றன தமிழில் மொழி

பெயர்க்கப்படவேண்டும். இச் செயலுக்கு வடமொழியுடன் தமிழ் மொழியும் பயின்றவர்கள் பலர் முயலவேண்டும்' என்று பண்டிதமணி விரும்பியதை எடுத்துரைக்கும் இரா. மோகன் பிறருக்குக் கூறியதைப்போலத் தானே வடமொழி நூல்களைப் பண்டிதமணி மொழிபெயர்த்துத் தந்திருப்பதையும் சுட்டுகிறார். 'சுக்கிரநீதி', கௌடலீயம்' எனும் இரு பெருநூல்களும், மிருச்சகடிகத்தின், மொழிபெயர்பான 'மண்ணியல் சிறுதேரும்' 'சுலோசனை', 'உதயணசரிதம்' எனும் உரைநடை நூல்களும் குறிப்பிடத்தகுந்தவை.

ஒப்பிலக்கிய நோக்கில் பண்டிதமணியின் 'கம்பன் கவிநலம்' எனும் கட்டுரையை விமர்சிக்கும் இரா. மோகன் 'தீயள் என்று நீ துறந்த என் தெய்வமும் மகனும் தாயும் தம்பியுமாம் வரந் தருக என' இராமன் தன் மறைந்த தந்தையிடம் வரம் கேட்ட நிலையைப் பண்டிதமணியவர்கள் வியாசரின் மகாபாரத்தில் வரும் சகுந்தலையின் வரலாற்றுப் பகுதி ஒன்றுடன் ஒப்பிட்டுக் காட்டியதை எடுத்துக் காட்டுகிறார்.

துஷ்யந்தனின் அரண்மனையில் நீ யார்? என வினப்பட்ட சகுந்தலை, பரதனிடம், குழந்தாய் நின் தந்தைக்கு வணக்கம் செய் என்றதும், அப்புதல்வன் தந்தையே வணக்கம் என்று அரசனை வணங்கியதும் பண்பாட்டு வெளிப்பாடு கொண்ட மிகுந்த நாகரிமான பேச்சுமுறை என்றும் கவியின் பெருமைக்கு எல்லையாக நின்று வியப்பளிப்பது என்றும் கதிர்மணியவர்கள் விளக்கியிருப்பது சுட்டப்படுகிறது. இரு சந்தர்பங்களிலுமே பேசுபவரின் பேச்சு தான் கூறக் கருதியதை, துளியும் பண்பாட்டுச் சறுக்கலின்றி மிக நாசூக்காக வெளிப்படுத்துவதை ஒப்பிடுகிறார் கதிர்மணி. இதேபோல மாணிக்க வாசகரையும் காளிதாசரையும் ஒப்பிடும் இடங்களும் சுட்டப்படுகின்றன. "அடிகள் (மாணிக்க வாசகர்) இறைவனைப் பற்றிக் (விழுத் தொண்டர்களால் தொடற்கரியாய் சுடர் மாமணியே - நீத்தல் விண்ணப்பம் ப.32) கூறிய பகுதியும் காளிதாச மகாகவி உலகியலில் வைத்துக் கூறிய பகுதியும் (நெஞ்சமே ... எப்பொருளை நெருப்பென்று ஐயுற்றனையோ, அஃது

அணிந்து கோடற்கரிய இரத்தினமாகும் - கண்ணுவர் ஆசிரமத்து சகுந்தலை பற்றி துஷ்யந்தன்) இலக்கிய நயத்தால் ஒற்றுமைப்பட்டு அறிஞர்க்கு இன்பம் செய்வனவாகும்" என்பது கதிர்மணி வாக்கு.

'ஒப்பியல் நோக்கு' எனும் மூன்றாம் பகுதியில் பண்டிதமணியவர்களின் உரைநடைப் போக்கை அவர்காலத்து, அவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த உ.வே.சா. அரசஞ்சண்முகனார், ரா. இராகவையங்கார், மறைமலையடிகள், ச.சோமசுந்தரபாரதியார், டி.கே.சி., திரு.வி.க, ந.மு.வேங்கடசாமி நாட்டார், கா. சுப்பிரமணியபிள்ளை, விபுலானந்த அடிகள் ஆகிய மதிப்பரின் உரைநடைப் போக்குகளுடன் ஒப்பிட்டுக்காட்டுகிறார் நூலாசிரியர், பிறிதோரிடத்தில் குறிப்பிட்டது போல ஒப்பீட்டின் நோக்கம் உயர்வு தாழ்வு கற்பிப்பதன்று ஒன்றைப் பிறிதொன்றுடன் ஒப்பிடும்போது ஒத்தும் உயர்ந்தும் பார்க்க வேண்டும். இரண்டுக்கும் இடையே விளங்கும் ஒற்றுமை, வேற்றுமைகளைக் கண்டறியவேண்டும். அதுவே சிறந்த ஒப்பியல் நெறியாகும் என்பதற்கு ஏற்ப இவ்வாசிரியர்களின் நடைச்சிறப்புகள் ஒப்பிட்டுக் காட்டப்படுகின்றன.

ஒவ்வொரு ஆசிரியரின் தனிச் சிறப்புகள், தமிழுக்கு அவர்கள் ஆற்றிய பணிகள், அவர்களது நடைப்போக்கில் ஆரம்பம் முதல் பிற்கால எழுத்துகள் வரை காணப்பட்ட மாற்றங்கள், அதற்கான எடுத்துக்காட்டுகள், பண்டிதமணிக்கும் இவ்வாசிரியர்களுக்கும் உள்ள தொடர்பு, இருவரின் நடைப் போக்கின் மாற்றங்கள் ஆகியன எடுத்துரைக்கப்படுகின்றன.

முனைவர் ம. திருமலையின் நூல்கள்

1. ''ஒப்பிலக்கியக் கொள்கைகள்'' எனும் நூல் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.

   1. ஒப்பீடும் ஒப்பிலக்கியமும்

   2. இணை நிலைக் கொள்கை

   3. தாக்கக் கொள்கை

இந்நூல் ம.திருமலையுடன் அவரது மாணவர் ச.சீனிவாசன் இணைந்து எழுதியது. 'ஒப்பீடும் ஒப்பிலக்கியமும்' என்ற பகுதியில் ஒப்பீடு, ஒப்பிலக்கியம் ஆகியன பற்றியும் இரண்டிற்குமுள்ள வேறுபாடுகள் பற்றியும் கூறுப்பட்டுள்ளன. ஒப்பிலக்கிய ஆய்வுப் பரப்பினை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பகுத்துக் காட்டுகிறார்.

1. இலக்கியத்தை இலக்கியத்துடன் ஒப்பிடுவது.

2. இலக்கியத்தைப் பிற துறைகளுடன் ஒப்பிடுவது.

இலக்கியங்களுக்கிடையே ஒப்பாய்வில், இலக்கிய வகைகளுக்கிடையே உள்ள பண்புகள் விளக்கிக் கூறப்பட்டுள்ளன. இலக்கியமும், பிறதுறைகளும் என்பதில்,

1. இலக்கியத்தைக் கவின் கலைகளுடன் ஒப்பிடுதல்.

2. இலக்கியத்தைத் தத்துவச் சிந்தனையுடன் ஒப்பிடுதல்.

3. இலக்கியத்தை வரலாற்றுடன் ஒப்பிடுதல்.

4. இலக்கியத்தை அரசியல், பொருளாதாரம், சமூகவியல் உளவியல் முதலிய சமூக அறிவியல்களுடன் ஒப்பிடுதல்.

5. இலக்கியத்தை அறிவியல் கொள்கைகளுடன் ஒப்பிடுதல்.

6. இலக்கியத்தைச் சமயக் கொள்கைகளுடன் ஒப்பிடுதல்.

7. இலக்கியமும் நாட்டுப்புறவியலும் என்ற முறையில் பகுத்து விளக்கியுள்ளார் நூலாசிரியர்.

ஓர் இலக்கியப் படைப்பைப் பிறிதோர் இலக்கியப் படைப்புடன் அல்லது கவின் கலைகள் அல்லது அறிவியல் ஆகியவற்றுடன் ஒப்பிடும் ஓர் இலக்கியவாதி இரண்டு தடங்களில் சொல்கிறான் என்கிறார். அவை,

1. இணை நிலை ஆய்வு
2. தாக்க ஆய்வு

என்பன. ஒப்பிலக்கிய ஆய்வுகள் அடிப்படையில் நோக்கும் போது இணை நிலை ஆய்வு நான்கு வகையான களங்களில் அமைந்துள்ளன.

1. ஓர் இலக்கியத்தை அதனுடன் தொடர்பில்லாத பிறிதோர் இலக்கியத்துடன் ஒப்பிட்டுக் காணுதல். இரண்டு இலக்கியப் படைப்புக்களையோ இலக்கிய வகைகளையோ இவ்வகையில் ஒப்பிடுதல்.

2. இலக்கியத்தைச் சிற்பம், ஓவியம் முதலான கவின் கலைகளுடன் ஒப்பிட்டுக் காணுதல்.

3. இலக்கியத்தை அறிவியல் கொள்கைகளுடன் ஒப்பிட்டுக் காணுதல்.

4. இலக்கியத்தை நாட்டுப்புறவியலுடன் ஒப்பிடுதல்.

மேலும் இக்களங்களில் மேற்கொள்ளப்பட்ட இணைநிலை ஆய்வுக் கூறுகளை வகைப்படுத்தியுள்ளார். அவை,

1. இரு வேறு இலக்கியங்களையோ, இலக்கியத்தையும் கலைகளையுமோ ஒப்பிட்டு நோக்கி அவை இரண்டுக்கும் காரணமாக அமைகின்ற பொது மூலத்தைத் தேடுதல்.

2(அ) வெவ்வேறு நாட்டு இலக்கியங்களிடையே காணப்படும், பொதுநியதிகளை ஆராய்தல்.

(ஆ) இலக்கியச் சமுதாய வரலாற்றுப் பின்னணியில் ஒப்பிட்டு இணைநிலை காணுதல்.

3. தொடர்பில்லாத இலக்கியங்களைச் சமூக அமைப்பு அடிப்படையில் ஒப்பிட்டு இணைநிலை காணுதல்.

4. அறிமுகமில்லாத கவிஞர்களின் படைப்புக்களில் காணப்படும் படிமங்களையும் படிமத்தொகுதிகளையும் சோதனை செய்தல்.

5. ஒரு குறிப்பிட்ட கருத்தை உலகளாவிய நோக்கில் அணுகுதல்.

6. நுண்மையான முழுமைப் பொருள்களைக் காணுதல்.

7. இலக்கியத்திற்கும் கலைக்குமிடையே இணைநிலை காணுதல்.

இவற்றிற்குத் தெளிவான விளக்கங்களையும் அவற்றிற்கான சான்றுகளையும் எடுத்துக்கூறியுள்ளார். தாக்கக் கொள்கை என்ற பகுதியில் இலக்கியங்களுடன் தொடர்புடைய சிற்பம், ஓவியம், இசை, நாடகம் முதலான கவின் கலைகள் பிற அறிவுத்துறைகள் முதலியவற்றை அவை கொண்டிருக்கிற தொடர்புகளின் அடிப்படையில் ஆராய்தல் தாக்க ஆய்வாகும். ஒன்றுடன் பிறிதொன்று கொள்ளும் உறவினால் ஏற்படுகின்ற விளைவுகள், மாற்றங்கள் முதலியன தாக்கக் கொள்கையின் அடிப்படைகளாகும் என்கிறார் நூலாசிரியர். மேலும் இப்பகுதியில் தாக்கத்தின்

தன்மைகள், தாக்கத்திற்குரிய சூழல், தாக்கங்களின் பல வகைகள் ஆகியன சுட்டப்படுகின்றன. 'தாய், பாவம் இவள் ஒரு பாப்பாத்தி' என்ற இரு நாவல்களைக் கொண்டு தாக்கஆய்வு விளக்கப்படுகிறது. இவ்விரு நாவல்களும் ஒப்புமையுடையன என்கிறார் நூலாசிரியர்.

2. ஒப்பிலக்கிய ஆய்வுகள்

இணைநிலை - தாக்கம் எனும் நூல்

1. இணைநிலையும் தாக்கமும்
2. தமிழ் - மலையாள மொழிகளில் நாவல் வளர்ச்சி இணைநிலை நோக்கு.
3. தமிழ், தெலுங்கு, மலையாள முதல் நாவல்கள் இணைநிலை நோக்கு .
4. ஜெயகாந்தன் - தகழி சிவசங்கர பிள்ளை நாவல்களில் பொது ஒப்புமை - இணைநிலை.
5. தமிழ் - மலையாளச் சிறுகதைகளில் குழந்தைக் காதல் - இணைநிலை நோக்கு
6. பா.ஜெயப்பிரகாசம் - எஸ்.கே.பொற்றேகாட் சிறு கதைகளில் சமூகப்பின்புலமும் இணைநிலையும்.
7. புதுமைப்பித்தன்- காரூர் நீல கண்டபிள்ளை சிறுகதைகளில் இணைநிலை
8. அகநோக்குத் தன்னுணர்வு நாவல்-இணைநிலை நோக்கு.
9. அயன்மை இலக்கியம்

என்ற ஒன்பது இயல்களைக் கொண்டுள்ளது.

முதல் இயல், இணைநிலைக்கொள்கை பற்றிய அடிப்படை அணுகுமுறைகளைத் தொகுத்துக் கூறுகிறது.

இரண்டாவது இயல், தமிழ் மலையாள மொழிகளின் நாவல் வளர்ச்சியில் காணப்படும் இணைநிலைகளை எடுத்துக் கூறுகிறது. நாவல்களின் காலப்பகுப்பு, தொடக்க கால நாவல்களின் பொதுத் தன்மைகள், சமுதாய விமர்சனம் சமூக மாற்றத்திற்கு எதிராக ஏற்கனவே இருந்துவரும் பண்பாட்டுக் கூறுகளின் சிறப்பு இயல்புகளை முன் வைத்தல் போன்றவற்றைச் சுட்டுகிறது. பிரதாபமுதலியார் சரித்திரம், கமலாம்பாள் சரித்திரம், பத்மாவதி சரித்திரம் ஆகிய நாவல்களின் போக்கை மலையாள முதல் நாவலான குந்தலக, அடுத்த இந்துலேக போன்றவற்றின் பொதுத்தன்மைகளுடன் இணைநிலை ஒப்பீடாகச் செய்து காட்டுகிறார் நூலாசிரியர். தமிழ்-தெலுங்கு மலையாள நாவல்களின் இணைநிலைகளைக் காட்டும் பகுதியில் முதல் நாவல்கள், தோன்றியவிதம், நாவலாசிரியர்களின் நோக்கங்கள், கதையமைப்பு, பாத்திரப்படைப்பு, பண்புகள், பண்பு ஒப்பீடு, ஒப்புமைக்குரிய காரணங்கள் என்று பல உட்தலைப்புகளில் விளக்குகிறார்.

நான்காம் பகுதியான ஜெயகாந்தன் - தகழி சிவசங்கரம் பிள்ளை நாவல்களில் காணப்படும் மரபு, மரபு மீறல், பரத்தமை, கதை மாந்தர்கள், காதல் போன்றவற்றில் ஒப்புமைக்கூறுகள் அமைந்திருப்பதை எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்குகிறார்.

பரத்தமை பற்றிய ஒப்பீட்டில் பெண்கள் நெறிதவறி நடப்பதற்கும் ஒழுக்கக்கேடுகள் நேர்வதற்கும், சமூக, பொருளாதார நிலைகளே காரணங்களாக அமைவதைச் சுட்டுகிறார். ஜெயகாந்தனின் லலிதா, காமாட்சி, தகழியின் சாரதா, கௌரிக்குட்டி ஜானகியம்மாள், பாப்பம்மை ஆகியோர் இன்றைய சமூக அமைப்பிலுள்ள சில பெண்களைப் பிரதிபலிப்பதை எடுத்துரைக்கிறார். புதிய சமூக விழுமியங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்து நிலையில் இரு படைப்பாளிகளுமே கற்பு, ஒழுக்கம் பற்றிய கோட்பாடுகளைக் கேள்விக்கு உள்ளாக்குகின்றனர்.

ஐந்தாம் இயலில் அகிலனின் ‘மகிழம்பூ’ எனும் சிறுகதையிலும் கோவூரின் ‘கூழாங்கல்லிலும்’ குழந்தைக் காதல் தோன்றும் சூழல், காதல் வளர்ச்சி, காதலின் முடிவு, காதலர் மனநிலை, கதைத் தலைப்புகளின் விளக்கங்கள் ஆகியவற்றை இணைநிலைக் கூறுகளாக எடுத்துரைக்கிறார் நூலாசிரியர்.

பா.ஜெயப்பிரகாசத்தின் 'காடு' சிறுகதையும் எஸ்.கே.பெற்றே காட்டின் ‘ஒட்டகம்’ என்ற சிறுகதையும் வெளிப்பாட்டு நிலையிலும் பாத்திரப்படைப்பிலும் வேறுபாடுகள் இருப்பினும் கதைக்கரு அடிப்படையில் ஒப்புமைகள் இருப்பதை எடுத்துரைக்கிறது, ஆறாம் இயல். இந்தியச் சமூக அமைப்பில் நிலவுடைமையாளர்களாலும், பணம் உடையவர்களாலும் எளிய மக்கள் சுரண்டப்படுவதையே இவ்விருகதைகளும் சுட்டுகின்றன என்கிறார்.

புதுமைப்பித்தன்-காரூர் நீலக்கண்டபிள்ளை இருவர் இடையே சிறுகதைகளிலும் (பொன்னகரம்-பெண்பேய்) வறுமையின் காரணமாக, தம் கணவரை நோயினின்றுக் காக்கக் கதைத் தலைவியர் நெறி பிறழ்வதைக் காட்டுகின்றன என ஒப்பிட்டுக் காட்டுகிறார். அடுத்த பகுதி நீலபத்மநாபனின் 'தேரோடும் வீதி' அகநோக்குத் தன்னுணர்வு நாவல் என்றும் அந்நாவலின் கதாநாயகனான சிவ.கதிரேசன் தன்னுள் தானமிழந்து போகும் மனநிலையில் அவரது தன்னுணர்வு வெளிப்பாடாகக் கதைக் கூறுகள் அமைகின்றன என்றும் சுட்டும் நூலாசிரியர் கதிரேசனின் மனஊசலாட்டம், புறஉலக நடப்புகள் அவரைப் பாதித்தல், தனிமையில் அவர் ஒதுங்கி இருத்தல், சூழ்நிலைகளில் இருந்து விலகி அந்நியமாதல், தொடர் நினைவுகள், காரணமற்ற அச்சவுணர்வு எ[illegible] நோக்கு நிலைகளில் விமர்சனம் செய்கிறார்.

பிற மாநிலங்களில் வாழும் தமிழ் எழுத்தாளர்கள் எழுதிய படைப்புகளை அயன்மை எழுத்துகள் எனும் பகுதி ஆராய்கிறது. தமிழகத்துத் தோன்றிய இப்படைப்பாளிகள் சந்தர்ப்பம் காரணமாக அயல் மாநிலங்களில் இருந்து கொண்டு தமிழில் படைக்கும்போது, அவ்வம்மாநில பண்பாட்டுக் கூறுகளின் தாக்கமும், தமிழ் மரபும்

இணைந்ததாக இவர்களது படைப்புகள் விளங்குகின்றன. எனவே இவர்கள் படைப்பில் ஒற்றுமைகளும் காணப்படுகின்றன. பெண்களின் நிலைப்பற்றிய தற்காலச் சிந்தனை உணர்வுடன் எழுதும் அம்பை, காவேரி இருவரது படைப்புகளில் இன்றைய இந்தியச் சூழலில், சமூகத்தில் பெண்கள் பெறும் இடம் பற்றிய விவாதங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன என்கிறார். நாஞ்சில் நாடன், ஆ.மாதவன், சுப்ரபாரதி மணியன், பாவண்ணன், நீல.பத்மநாபன் கதைகள் ஆராயப்படுகின்றன.

இந்நூலின் பல பகுதிகள் இவரது கட்டுரைகள் பற்றிய பகுதியில் (இந்நூலில்) விரிவான விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

ம.திருமலை - கட்டுரைகள்

"புதுமைப்பித்தன் - காரூர் நீலகண்ட பிள்ளை சிறுகதைகளில் இணைநிலை"

புதுமைப்பித்தனும் காரூர் நீலகண்டபிள்ளையும் படைத்த இரு சிறுகதைகள் ஒப்பிடப்படுகின்றன. கற்புக்கும் வறுமைக்கும் நடந்த போட்டியில் வறுமை வெற்றி பெற்றதைக் கூறும் கதைகள் இவை. புதுமைப்பித்தனின் 'பொன்னகரமும்' நீலகண்ட பிள்ளையின் 'பெண்பேயும்' அடிக்கருத்தளவில் ஒப்புமை உடையன என ஒப்பிட்டுக்காட்டுகிறார். புதுமைப்பித்தனின் கதையில் குதிரை வண்டிக்காரனான முருகேசன் அடிப்பட்டு வீட்டில் விழ அவனுக்குப்பால் கஞ்சி வார்க்கத் தன் கற்பை 3/4 ரூபாய்க்கு விற்க நேரிடுகிறது அவன் மனைவி அம்மாளுவிற்கு. நீலகண்ட பிள்ளையின் பெண்பேயிலும் மரியத்தின் கணவன் உதுப்பானின் தீராத இருமலைத் தீர்க்க மரியத்தின் அழகிய இளம் பெண் நெறி பிறழ நேர்கிறது. சமூக அமைப்பில் உற்பத்தி உறவுகள் சீர்கெடுவதாலும் அதனால் தான் வாழும் சூழலிலேயே மனிதர்கள் அந்நியமாவதாலும், சமூக மதிப்புகள் தம் பிடிப்பை இழக்க நேரிடுகிறது என்றும், வறுமையின் பாதிப்பு இந்தியா முழுவதும் ஒன்றுபோல் இருப்பதால் அதனால் ஏற்படும் விளைவுகளைச்

சித்திரிப்பதில் பொதுத் தன்மைகள் காணப்படுகின்றன எனவும் கூறும் ஆசிரியர் கதையின் உள்ளடக்கம், தொடக்கம் ஆகியவற்றில் இரு கதைகளும் ஒத்த தன்மைகளைப் பெற்றிருப்பதையும் கதை முடிவை அமைப்பதிலும் பாத்திரங்களின் உணர்வோட்டங்களைச் சித்திரிப்பதிலும் இரு ஆசிரியர்களும் வேறுபடுகின்றனர் எனவும் கூறித் தன் ஆய்வுவழி ஓர் இணைநிலை ஆய்வு எவ்வாறு அமையவேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகிறார்.

"தமிழ்-தெலுங்கு-மலையாள மொழிகளில் முதல் நாவல்கள்-ஓர் ஒப்பாய்வு" எனும் கட்டுரையில் இம் மூன்று நாவல்களிலும் இணைநிலைகள் காணப்படுவதை எடுத்துரைக்கிறார். தமிழின் பிரதாபமுதலியார் சரித்திரம், தெலுங்கின் ஸ்ரீரங்கராஜ சரித்திரம், மலையாளத்தின் குந்தலக ஆகியவை ஒப்பிடப்படுகின்றன. மூன்று படைப்பாளிகளின் படைப்பு நோக்கம் ஒப்புமையுடையதாக இருப்பதாகவும் கதையமைப்பு, பண்பொப்புமைகள், பண்பு ஒப்புமைகளுக்கான காரணிகள் போன்றவற்றாலும் இணைநிலைகள் காணப்படுகின்றன எனவும் கூறியுள்ளார்.

ம. திருமலைதமிழ்மாருதம் இலக்கிய இதழில் பல ஒப்பாய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். அவற்றுள் ஒன்று **"வள்ளத்தோளின் கவிதைகளில் காந்தியச் சிந்தனை"** (பொதி.9. ஏடு-6 செப்.1999). இக்கட்டுரையில் வள்ளத்தோள் காந்தியடிகளால் ஈர்க்கப்பட்ட பின்னர், 1920 முதல் 1925 வரையிலான கவிதைகளில் பெரும்பாலும் காந்தியச் சிந்தனைகளின் தாக்கம் அதிகமிருப்பதைச் சுட்டிக்காட்டும் கட்டுரையாளர் காந்தியடிகளின் இந்திய விடுதலைக்கும் இந்திய ஒற்றுமைக்குமாக முன்வைத்த பல கொள்கைகளுள் அன்பு, அஹிம்சை, வகுப்பு ஒற்றுமை, சமய வேற்றுமைகளைக் கடந்த மனநிலை, தீண்டாமை ஒழிப்பு, தொழிலாளர் உய்வு போன்றவற்றைத் தம் கவிதைகளின் பாடுபொருளாகக் கொண்டு வள்ளத்தோள் பாடியிருப்பதை எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குகிறார். இந்திய இலக்கியங்களில் காந்தியத் தத்துவத்தின் தாக்கம் பற்றிய, இந்திய இலக்கியங்களை உள்ளடக்கிய விரிவான ஆய்வுக்கு இட்டுச் செல்லும் கட்டுரை இது.

"குமாரன் ஆசான்" எனும் கட்டுரையும் (தமிழ்மாருதம், ஏப்ரல்'99 பொதி 9 ஏடு 1) இத்தகைய அறிமுகக் கட்டுரையே ஒரு கவிஞராக, பத்திரிக்கை ஆசிரியராக, மொழி பெயர்ப்பாளராக, இலக்கிய விமர்சகராக, சமூக சீர்திருத்தவாதியாக, அனைத்திற்கும் மேலான ஒரு சிறந்த மனித நேயவாதியாகத் திகழ்ந்த குமாரன் ஆசான் மலையாளக் கவிதை உலகின் மணி மகுடமாகத் திகழ்ந்தவர். தன் 14 ஆவது வயதிலேயே தான் கல்வி பயின்ற பள்ளியிலேயே ஆசிரியராகப் பணிபுரிந்தமையால் ஆசான் என்ற பட்டத்தையும் பாலகவி, நிமிஷ கவி என்ற பட்டங்களையும் பெற்றவர். சமூக விழிப்புணர்வுக் கவிதைகளை எழுதியவர், நாராயண குருவிடம் நாட்டம் கொண்டவர், கவிதைகளின் போக்கில் புதுமைகளைப் புகுத்தியவர்; எளிய நடையில் பாமரர்க்கும் புரியும்படிக் கவிதைகள் எழுதியவர்; புதிய புதிய கவிதை வடிவங்களைத் தந்தவர். புனைவியல் கவிஞர்; மனித இன உய்விற்கு அன்பு ஒன்றே வழி எனக் காட்டியவர். 'வீணபூவு' கவிதையில் உதிர்ந்த பூவை மனித வாழ்வின் குறியீடாகக் காட்டியவர். இவ்வுலக வாழ்வின் துன்பங்கள், சாவு, தோல்வி போன்றன யாவும் நிலைபேறுடைய ஒரு முழுமையின் பகுதிகளே எனக்கூறி, வாழ்வின் நம்பிக்கையை ஊட்டுவது இக்கவிதை. இவை தவிர 'நளின', 'லீல' போன்ற காதல் கவிதைகள் தூய காதலின் நித்தியத்தை உணர்த்துவன. இவரது 'சிந்தாவிஷ்டாய சீத' காப்பியக் கதைக்கூறையும் பாத்திரத்தையும் கவிஞர் தன் சிந்தனைப் போக்கிற்கும் காலத்திற்கும் ஏற்ப மாற்றிப்படைத்த கவிதை. சீதையைப் புதிய கோணத்தில் படைத்துக் காட்டியுள்ளார். இராமனின் அன்புக்காக ஏங்கும் சீதையாக இல்லாது, இவரது சீதை தன் தனித் தன்மையைப் பாதுகாப்பவள். இவரது 'துரவஸ்த்த', 'சண்டாள பிட்சுகி' இரண்டும் சாதிக் கொடுமைக்கு எதிராகக் குரல் கொடுப்பவை. இவரது 'கருண' கவிஞனின் உள்முகத் தேடலுக்கு எடுத்துக்காட்டு. இவரது பல தன்னுணர்ச்சிக் கவிதைகள் இவரது சுதந்திர மனப்பான்மையையும் வீறுணர்ச்சியையும் கொண்டவை - எனக் குமாரன் ஆசானின் படைப்புகள் பற்றிய ஒரு பருந்துப் பார்வையைத்தரும் இக்கட்டுரையும் பிற மாநிலக் கவிஞர் ஒருவரை அறிமுகப்படுத்தும் அளவில் ஒப்பிலக்கிய மாணவர்களுக்குப் பயன் உடையதே.

"தொ.மு.சி. ரகுநாதனின் ஒப்பிலக்கிய ஆய்வுமுறை" எனும் கட்டுரை தமிழியற்புலத்தில் வியாழவட்டத்தில் வாசித்தளிக்கப்பட்ட கட்டுரை. அச்சு வாகனம் ஏறாதது. ஒப்பிலக்கிய ஆய்வுகள் இரு நிலைகளில் மேற்கொள்ளப்படுகின்றன. ஒன்று கல்வி நிறுவனங்கள் சார்பாக, ஒப்பிலக்கியக் கோட்பாடுகளை அறிந்து அவற்றின் அடிப்படையில் ஒட்பிடுவது; மற்றொன்று இவை பற்றி அறியாமலேயே, ஒப்பிலக்கிய நெறிமுறைகளை ஒருபாடமாகப் பயிலாமலேயே உற்றுணர்வு சார்ந்த நிலையில் ஒப்பிலக்கிய ஆய்வுகளை மேற்கொள்வது என்று வகைப்படுத்திக் காட்டும் கட்டுரையாளர், இவ்விரண்டாவது வகையினரில் (முன்னோடிகளாக வ.வே.சு. ஐயர், எஸ்.வையாபுரிப் பிள்ளை, தனிநாயக அடிகள் போன்றோரையும் அவர்களைத் தொடர்ந்து வந்த க.கைலாசபதி, எஸ்.ராமகிருஷ்ணன், சச்சிதானந்தன், க.செல்லப்பன் போன்றோரின் தொடர்ச்சி, பின்னர் 70களில் ஒப்பிலக்கியக் கொள்கை விளக்க நூல்கள் தமிழில் எழுதக் காரணமாயின என விளக்குகிறார்) ஒருவரே தொ.மு.சி. ரகுநாதன் என்பதைக் குறிப்பிடுகிறார்.

ஷெல்லியையும் பாரதியையும் ஒப்பிடும் இந்நூலில் ஷெல்லி-பாரதி இருவரது கவிதைகளிலும் காணப்படும் 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' முதலிய கோட்பாடுகள், மன்னர்கள் மதகுருமார்கள் பற்றிய சிந்தனைகள், பொற்காலம், கிருதயுகம் பற்றிய கூறுகள், பெண்ணுரிமை, அன்பே ஆயுதம் என்ற சிந்தனை - காதல் - அழகு போன்றன பற்றிய இருவரது கருத்துகள், தனிப்பாடல்களில் காணப்படும் ஒப்புமைகள், ஷெல்லியின் நேரடியான தாக்கம் காரணமாக பாரதியிடம் காணப்படும் சிந்தனைகள், ஒப்புமையுடைய உவமைகள், பொதுவுடைமை சிந்தனைகள் என்ற அடிப்படையில் ஒரு முழுமையான ஆய்வாக அமைகிறது என்கிறார்.

தாக்கத்திற்கு உட்பட்ட படைப்பாளியின் வாழ்க்கை வரலாறு, நாட்குறிப்புகள், படைப்பாளியுடன் தொடர்புடையோர் தந்த குறிப்புகள் ஆகியவற்றின் துணையுடன் தாக்கம் பற்றிய முடிவுக்கு வருவதும் தாக்க ஆய்வின் நெறி எனில், முடிவுக்கு இட்டுச் செல்ல முதன்மைச் சான்றுகளைத் தாக்கத்திற்கு உட்பட்ட படைப்பாளியின்

படைப்புகளின் உள்ளிருந்தே அகச்சான்றுகளைத் தேடிக்கண்டு அவற்றின் அடிப்படையிலேயே கூறவேண்டும் என்பது ஒப்பிலக்கிய அறிஞர்களின் கருத்து. இந்த அடிப்படையிலேயே ரகுநாதன், பாரதி பெற்ற தாக்கங்களுக்கான ஆதாரங்களைப் பாரதியின் கவிதைகள், உரைநடைகள், கட்டுரைகள் ஆகியவற்றினின்று தேடித் தந்திருக்கிறார். ஒப்பிலக்கியக் கல்வியும், நெறிமுறைகளும் முறையாகத் தமிழில் பரவாத காலத்தில், ஒப்பிலக்கிய நோக்குகளையும், கொள்கைகளையும், போக்குகளையும் பற்றிய நூல்கள் தமிழில் அதிகம் வெளிவராத காலகட்டத்தில் இவ்வாறான நெறி முறைகளை தொ.மு.சி.ரகுநாதன் மேற்கொண்டிருந்த சிறப்பை எடுத்துரைக்கிறார் ம.திருமலை.

அகச் சான்றுகளைத் தேடித்தந்ததுடன் தாக்கத்தின் போக்குகளைக் கால அடிப்படையிலும் எடுத்துக்காட்டும் நூலாசிரியர், அதற்கான புறக்காரணங்களை(அரசியல், சமுதாய மாற்றம் - கருத்துக் குழப்பங்கள் நிலவிய நிலை)யும் எடுத்துரைத்து, தாக்கத்திற்குட்பட்ட பாரதி ஷெல்லியின் கருத்துக்களையும், கவிதை வகையையும் தம் தேவைக்கு ஏற்ப எவ்வாறு மாற்றிக் கொண்டுள்ளார் என்பதையும் நுணுகி வேறுபாடுகண்டு ரகுநாதன் ஆராய்ந்திருப்பதை எடுத்துரைக்கிறார் கட்டுரையாளர்.

ஒருபுடை ஒப்புமைகளைச் சுட்டுவது மட்டுமின்றி ஷெல்லி, பாரதி இருவரது படைப்புகளின் முழுமையான தொனிப் பொருள்களையும் தொகுத்து இருவரது கவியுள்ளங்களையும் முழுமை நிலையில் (தனித்தனி, சிறுசிறு ஒப்புமைகளைக் காட்டுவதில் கவனம் செலுத்தாது) ஒப்பிடுகிறார் என்று விளக்குகிறார் கட்டுரையாளர். இவ்வகையில் பாரதி-ஷெல்லி கவிதைகளில் காணப்படும் சுதந்திர தாகம், அடக்கு முறைக்கு எதிர்ப்பு, சுரண்டல், அடிமைத்தனத்திற்கு எதிர்ப்பு என்ற நிலைகளில் முழுமையான ஒப்பீடுகளை தொ.மு.சி.ரகுநாதன் செய்திருப்பது எடுத்துரைக்கப்படுகிறது.

ஒப்புமையுடன் நில்லாது வேற்றுமைகளை நுணுகி ஆராய்தல், வேற்றுமைகளுக்கான சான்றுகளையும் காரணங்களையும் சமூக, அரசியல் சூழல்களின் பின்னணியில் சுட்டுதல் என்ற நெறிமுறைகளை ரகுநாதன் பின்பற்றியிருப்பதும் சுட்டப்படுகின்றன.

ஷெல்லியின் பொற்காலக் கனவையும் பாரதியின் கிருதயுகம் பற்றிய சிந்தனையையும் ஒப்பிடும்போது ஷெல்லிக்கு பொற்காலக் கனவின் தூண்டு கோலாக பல தத்துவஞானிகளின் கருத்துக்களும் - குறிப்பாக வில்லியம் காட்வின் என்பாரது அரசியல் நீதி என்ற நூல் காரணமாக அமைந்தது என்பதை ஷெல்லியின் வாழ்க்கை வரலாற்று நூல்களின் அடிப்படையில் எடுத்துரைக்கும் ரகுநாதன், பாரதியின் கிருதயுகக் கனவு இடம்பெறும் ஞானரதம் ஷெல்லியின் ராணிமாப் போன்றது என்றும் கூறுகிறார். பாரதியின்

"இங்கு இந்த உலகத்திலேயே
மனிதர்கள் அமரத்தன்மை எய்த முடியும்.
அக்காலமே கிருதயுகம்"

என்ற கருத்துக்கள் ஷெல்லியின் தாக்கத்தால் மட்டுமின்றி, பாரதியின் இலக்கிய மரபு, இந்தியப் பண்பாட்டின் நம்பிக்கைகள், இந்தியத் தத்துவங்கள் ஆகியவற்றின் செல்வாக்குகளும் காரணங்கள் ஆகும் எனவும் இம்மரபுத் தொடர்ச்சியைத் தம் காலத் தேவைகள், சிந்தனை மாற்றத்திற்கும் ஏற்ப மாற்றிய பாரதி இதுவரைப் புராண நம்பிக்கைக்குப் பயன்பட்டுவந்த கிருதயுகத்தைத் தேசிய போராட்டத்திற்கான கருத்தாகப் பயன்படுத்திமையை எடுத்துரைக்கிறார் கட்டுரையாளர். இவ்வாறு ஒருபுறம் ஷெல்லியின் பொற்காலக் கனவின் தாக்கம், ஒருபுறம் இந்திய தத்துவ, பண்பாட்டு மரபின் சூழல், தமிழ் இலக்கிய மரபின் வழிமுறை, தன் கால சுதந்திர வேட்கைச் சூழலின் தேவை ஆகியவற்றின் விளைவே பாரதியின் கிருதயும் எனலாம். சுதந்திரப் போராட்ட உணர்வுகளை வெளிப்படுத்த ஷெல்லியின் பொற்காலக் கனவை கிருதயுகக் கனவாக மாற்றும்பொழுது பாரதி தன் தனித் தன்மைகளையும் கலந்து கவிதையாக்கி இருப்பது புலப்படுகிறது.

இவ்வாறு 30 ஆண்டுகட்கு முன் தொ.மு.சி.ரகுநாதன் எழுதிய நூல் இன்றைய ஒப்பிலக்கியக் கோட்பாடுகளுக்கும் நெறி முறைகளுக்கும் ஏற்ப ஒப்பிலக்கிய மாணவனுக்கு வழிகாட்டுவதாக அமைவதைக் கட்டுரையாளர் விளக்கமாக எடுத்துரைக்கிறார்.

"டாக்டர் க. கைலாசபதியின் ஒப்பிலக்கிய அணுகுமுறை"

தமிழில் ஒப்பிலக்கியக் கோட்பாடுகளை முதன் முதலில் அறிமுகம் செய்த க.கைலாசபதி ஒப்பியல் ஆய்வு என்பது 'இலக்கிய ஆய்வில் வந்து புகுந்த புதுமுறைகளில் ஒன்றே' என்று குறிப்பிடுவதைச் சுட்டும் கட்டுரையாளர், ஒப்பிலக்கிய ஆய்வுக்கு அறிவியல் நெறிமுறை இன்றியமையாதது என்று கருதியதையும், அதற்கு எடுத்துக்காட்டாக, ஒரு சொல் தமிழிச் சொல்லா, வடமொழிச் சொல்லா என்று காணத் தற்சார்பின்றி, தாய் மொழிப்பற்று ஆய்வில் தடையாக இருந்துவிடாது எவ்வாறு காண்பது என்று விளக்கியதை எடுத்துரைக்கிறார்.

'தமிழ் வீரயுகப் பாடல்கள்' எனும் நூலில் தமிழில் உள்ள தொன்மையான சங்கப் பாடல்கள் வீரயுகப் பாடல்கள் நிறுவிய வாற்றை எடுத்துரைக்கும்போது வீரநிலைக் கால இலக்கியம் என உலகு ஏற்ற கிரேக்க இலக்கியங்களுக்கும் சங்ககால இலக்கியங்களுக்கும் இடையேயான ஒப்புமைக் கூறுகளைத் திரட்டித் தருவதுடன் கிரேக்க சங்க ஒப்புமைகள் பற்றிய கருத்துகளைக் கூறிய ஆய்வறிஞர்களின் குறிப்புகளையும் தொகுத்து ஒத்ததன்மை உடைய சமுதாயங்களினின்றும் எழுந்த ஒரே விதமான இலக்கியங்கள் இந்த வீரயுகப் பாடல்கள் என்பதைக்கூறி, காரணங்களும் சூழல்களும் மாறாதிருக்கும் போது ஒரே விதமான விளைவே ஏற்படும் என்ற அறிவியல் உண்மையின் அடிப்படையில் இதைக் க.கைலாசபதி விளக்குகிறார் என்றும் எடுத்துரைக்கும் கட்டுரையாளர், அறிவியல் ஆய்வு நெறிப்படித் தன் கருதுகோளை (தமிழ்ச் சங்கப் பாடல்கள் வீரயுகப் பாடல்களே) மெய்ப்பிக்கும் திறனைப் பாராட்டுகிறார். இம்முறை ஒப்பிலக்கிய ஆய்வில் முதன்மை பெறும் இணைநிலை ஆய்வுக்கு அடிப்படையை நல்குவது என்கிறார்.

ஹோமரின் காப்பியம் வீரநிலைக் கால யுகோசுலாவிய வாய்மொழி இலக்கியங்களின் அடிப்படையில் தோன்றியவை எனக்கூறிய மில்மன்பரி, எடுத்துக்காட்டிய வாய்மொழிக் கூறுகளைப் போன்றே தமிழ்ச் சங்கப் பாடல்களிலும் உள்ள அடை புனை பெயர்கள், ஒரே சொல்லாட்சி திரும்பத் திரும்ப வரல், ஒரே மாதிரியான யாப்பிலோ, பாவகையிலோ அமைதல் என்பது போன்றவற்றைத் தரவுகளாகச் சுட்டி அவற்றின் அடிப்படையில் முடிவுக்கு வருவதைக் கைலாசபதியின் ஆய்வுப் பண்பாகச் சுட்டுகிறார். அறிவியல் பண்பு கொண்டதாக, உண்மையைத் தேடும் பண்புகொண்டதாக, தரவுகளை இலக்கியத்திற்கு வெளியிலும் தேடிக் கொணரும் தன்மை கொண்டு ஒரு அறிவியல் பரிசோதனை போல ஆய்வைக் கொண்டு செல்கிறார் க.கைலாசபதி, என்கிறார் கட்டுரையாளர்.

இதே போன்று ஒப்பிலக்கிய ஆய்வுகளைத் தமிழ் இலக்கியத்துடன் இணைத்துக் கண்ட அறிஞர்களின் ஆய்வுகள் அனைத்தும் திரட்டப்பட்டு மறுபார்வைக்கு உட்படுத்தப்படு, திரள் கருத்துகளைக் கொண்ட ஆய்வு செய்ய அதிக இடம் உள்ளது என்பதை இக்கட்டுரை கோடிட்டுக் காட்டுகிறது.

சார்பியல் கோட்பாடும் அசோகமித்திரனின் 'காலமும் ஐந்து குழந்தைகளும்' சிறுகதையும் - ஒப்பாய்வு

ஒப்பிலக்கியக் கல்விக்கு ஹெச்.ஹெச்.ஹென்றி ரிமாக் கூறிய வரைவிலக்கணத்திற்கு ஏற்ப, ஒரு கையில் சிறுகதையையும் மற்றொரு கையில் சார்பியல் தத்துவத்தையும் எடுத்துக் கொண்டு ஆராய்கிறது இக்கட்டுரை.

சார்பியல் தத்துவம் காலம் பற்றித் தரும் விளக்கத்தின் அடிப்படையிலும் காலத்தின் இயக்கம் நேர்க் கோட்டுத் தன்மையதா? முன்னும் பின்னும் தாவிச் செல்லும் தன்மையதா? கடந்த காலத்தின் தாக்கம் நிகழ் காலத்தில் உண்டா? இல்லையா?

எதிர்காலம் பற்றிச் சார்பியல் கோட்பாடு கூறும் கருத்துகள் போன்றவற்றின் அடிப்படையில் அசோகமித்திரனின் 'காலமும் ஐந்து குழந்தைகளும்' என்ற சிறுகதை ஆராயப்படுகிறது.

ஒரு இக்கட்டான, விரைந்து செயல்பட வேண்டிய சூழலில் காலத்தின் இயக்கம் பாய்ச்சலாகவும் கதை மாந்தரின் உளநிலைக்கு ஏற்ப மெதுவாய்ப் போவது போலவும் வேகமாகப் போவது போலவும் அசைவின்றி நின்று விட்டது போலும் தோன்றும். இக்கதையாசிரியர் காலத்தைப் பின்னணியாக மட்டுமின்றி கதை மாந்தரைப் போலப்படைத்து, காலத்திற்கும் கதை நாயகனுக்குமான உராய்வைச் சித்தரிக்கிறார் என்பதை எடுத்துரைக்கும் கட்டுரையாளர் காலம் என்ற ஒன்று தனியாக வெளியே ஒன்றும் இல்லை. மனிதனின் செயல், எண்ணம் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டது; சார்புத் தன்மை உடையது. காலத்தை உணர்ந்து கொண்டிருக்கும் ஒரு மனிதனின் உணர்வும் அறிவும் தான் காலத்தின் வேகத்தை உணரமுடியும் என்பதை அசோகமித்திரனின் கதையில் வரும் நாயகன் - மறுநாள் நடக்கவிருக்கும் நேர்முகத் தேர்விற்கு புகைவண்டி பிடித்துச் செல்ல வேண்டிய அவசரத்தில் இருப்பவன் - செயல்களும் மன நிலைகளும் சொல்லப்பட்ட விதத்திலிருந்து எடுத்து விளக்குகிறார். மனம் எனும் நிலைமைச் சட்டகத்தின் மூலம் காலத்தின் வேக இயக்கத்தை உணரவும் உணர்த்தவும் இக்கதை முயற்சி செய்வதாகவும் அதற்கு புறவிசை உராய்வுகளின் விவரிப்பு துணையாவதையும் எடுத்துக்காட்டுகிறார். இக்கதையில் காலம் என்பதை நிகழ்காலத்தில் இருந்து எதிர் காலத்திற்கும் கடந்த காலத்திற்கும் தாவிச் செல்லும் ஒன்றாகக் காட்டி காலம் நிகழ்காலத்திலிருந்து முன்னும் பின்னும் பாயக் கூடியது என்ற உணர்வை ஏற்படுத்துகிறது. டிக்கட் கவுண்டரில் நிகழ்காலத்தில் நிற்பவன், திடுமென நிராசை, ஏமாற்றம் என்னும் எதிர்காலத்திற்குத் தாவி, அதில் சஞ்சரிக்கும் போதே கடந்த காலத்திற்கும் சென்று மீண்டும் நிகழ்காலத்திற்கு வருவதாகக் காட்டுகிறார் கதாசிரியர் என்று விளக்கும் கட்டுரையாளர். இவ்வாறு ஒப்பீட்டுப் பார்வையுடன் சார்பியல் கோட்பாட்டுக் கூறுகளைச் சிறுகதையுடன் இணைத்துக் காணும்போது

சிறுகதையின் நோக்கத்தை, சிறுகதையை முழுமையாகப் புரிந்து கொள்ள முடிகிறது. அதுவே ஒப்பீட்டாய்வின் பயன் என்று முடிவும் கூறுகிறார்.

முதியோர் உளவியலும் அசோமித்திரனின் 'தலைமுறைகள்' குறு நாவலும்

உளவியல் நோக்கில் இலக்கியத்தை ஆராய்வதன் மூலம் கதை நிகழ்வுகள், பாத்திரப் படைப்பில் காணப்படும் குண வேறுபாடுகள் போன்றவற்றின் காரணங்களை முழுமையாகப் புரிந்து கொள்ள முடிகிறது. இக்கட்டுரையும் அசோகமித்திரனின் 'தலைமுறைகள்' எனும் குறுநாவலில் இடம் பெறும் இராமசாமி ஐயர் கோபம் உடையவராக, குடும்ப அங்கத்தினர்களிடம் அனுசரித்துப் போக முடியாதவராக, அவர்களுக்குச் சிறு சிறு இடையூறுகள் செய்பவராக, தன் முக்கியத்துவத்தையும் அதிகாரத்தையும் நிலைநாட்டிக் கொள்ள விழைபவராக படைக்கப்பட்டிருப்பதன் காரணத்தை உளவியல் முறையில் அலசுகிறது. (ஊழல் காரணமாகத் தன் பணியிலிருந்து கட்டாய ஓய்வு பெற்ற இராமசாமி அதனால் மனதளவில் பாதிக்கப்பட்டவர், எவ்வாறேனும் தன் முதன்மையை நிலை நாட்டிக் கொள்ளவும் தன்னால் தான் எல்லாம் நடக்கிறது எனக் காட்டவும் விழைபவர். ஆனால் அதற்கு ஏற்பத் தன் குடும்ப அங்கத்தினர்களுடன் அவராலும் அனுசரித்துப் போக முடியவில்லை. அவரது குடும்பத்தாரும் அவரது முதுமை, வேலையிலிருந்து ஓய்வு பெற்ற நிலை, மனநிலை ஆகியவற்றைக் கருதி அனுசரித்துப் போவதில்லை. அதனால் குடும்பத்தில் தந்தை-மூத்தமகன், தந்தை-தாய் என விவாதங்கள் ஏற்படுகின்றன. உறவுகளில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. பின்னர் சங்கரன், மூத்தமகன் தன்முனைப்பை விடுத்து, தந்தையை அனுசரித்துப்போக - வீட்டில் இயல்புநிலை ஏற்படுகிறது என அமையும் இக்கதையில்) முதியோர் உளவியல் அறிஞர்கள் கூறும் கருத்துகளுக்கு ஏற்ப ராமசாமி ஐயரின் குணநலன்கள் அமைந்து இருப்பதை எடுத்துக்காட்டும் கட்டுரையாளர், இவ்வாறான புரிதல்களுக்கு

இலக்கியத்தை உளவியலுடன் இணைத்துக்காணும் ஒப்பீட்டாய்வு மிகவும் பயன்படும் என்கிறார்.

"ரிஷிமூலம் என்ற நாவலில் உளவியற் பிரச்சனைகள்" என்ற கட்டுரையில் ரிஷிமூலம் பாலுணர்வை மையமாகக் கொண்ட நாவல் எனவும் இதில் ஏடிபஸ்காம்ளக்ஸ் என்ற தாய்-மகன் அதீத உறவு உளவியல் ரீதியாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது என்றும் கூறுகிறார். ரிஷிமூலத்தின் நாயகன் ராஜாராமன் தாயை மோகித்தது, தந்தையைப் பொறாமைகொண்டு வெறுத்தது, தாயைப் போன்றிருந்த சாரதா மாமியிடம் உறவு கொள்வது, தகாத உறவுக்காக அஞ்சி வீட்டை விட்டே ஓடியது போன்றன ஏடிபஸ் காம்ளக்சின் தன்மையைக் காட்டுவன எனவும் கூறுகிறார். பாலியல் அறிவுத்தெளிவு அற்றநிலையில் குழந்தைகள் வளர்க்கப்படுவதே ஏடிபஸ் சிக்கலுக்குக் காரணம் என்கிறார் கட்டுரையாளர். பாலுறவு பற்றிய ஆராக்கியமான மனநிலை உடையவராக ஆணும் பெண்ணும் வளர்க்கப்பட வேண்டும் என்ற செய்தி நாவல் முழுவதும தொனிப்பதாகவும் கூறுகிறார்.

"தமிழ் மளையாளச் சிறுகதைகளில் குழந்தைக்காதல்" எனும் கட்டுரையில் அகிலனின் 'மகிழம்பூ' எனும் சிறுகதையும் மலையாள எழுத்தாளரான கோவூரின் 'கூழாங்கல்' என்ற சிறுகதையும் ஒப்பிடப்படுகின்றன.

மகிழம்பூ கதையில் ஒரே ஊரில் வசிக்கும் உறவினர்களின் குழந்தைகளான முருகேசனும் சந்திராவும் சிறு குழுந்தைகளாக இருந்த பொழுதிலிருந்தே அன்புடன் பழகியவர்கள். பருவ வயது அடைந்ததும் திருமண ஏற்பாடு நடைபெறுகிறது. மூன்று ஆண்டுகள் கருத்தரிக்கக் கூடாது என்ற ஆலோசனை தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டு, சந்திராவுக்குக் குழந்தையே பிறக்காது எனக் கருதிய முருகேசனின் தாயின் இடையீட்டால் திருமணம் நின்று விடுகிறது. முருகேசனுக்கு வேறு இடத்திலும், சந்திராவுக்கு வேறு இடத்திலும் திருமணம் நடக்கிறது. பல ஆண்டுகட்குப் பின்னர் முருகேசனின் மருத்துவமனையில் வசதியற்ற எளிமைக் கோலத்தில்

தன் ஐந்தாவது குழந்தைப் பேற்றுக்காக வருகிறாள் சந்திரா. வளமான வாழ்க்கையை உடைய முருகேசனுக்கோ குழந்தைப்பேறு இல்லை என்பதே கதை.

இதே போன்ற குழந்தைக் காதல் முறிவைச் சுட்டுவதுதான் இ.எம்.கோவூரின் 'கூழாங்கல்' என்ற சிறுகதையும்.

கொச்சுமாத்தன், லில்லிக்குட்டி இருவரும் பொருளாதார அடிப்படையில் இரு கோடியில் இருப்பவர்களானாலும் குழந்தையிலிருந்து ஒருவரோடொருவர் அன்பு கொண்டவர்கள். சிறு சண்டைகள் ஏற்படும்போது தவறு புரிந்தவர் மற்றவர் உள்ளங்கையில் சிறுகூழாங்கல்லை வைக்க வேண்டும்; அத்துடன் சண்டை முடிந்துவிடும். இருவரும் பெரியவர்கள் ஆனபின் சிறு சண்டையின் காரணமாகப் பிரிகின்றனர். சில ஆண்டுகள் சென்ற பின் கொச்சுமாத்தன் சிப்பந்தியாகப் பணிபுரியும் லாட்ஜிலேயே லில்லிக்குட்டி தன் கணவனுடன் வந்து தேனிலவிற்காகத் தங்குகிறாள். அவள் கணவன் கொச்சுமாத்தனை இழிவாக நடத்துகிறான். புறப்படும்போது லில்லிக்குட்டி தன் கணவனின் தவறான செயல்களுக்காகவும் தன் தவற்றிற்காகவும் வருந்தி, கொச்சுமாத்தனின் உள்ளங்கையில் ரகசியமாகச் சிறு கூழாங்கல்லை வைத்து விட்டுப் போகிறாள்.

தமிழ்-மலையாளச் சிறுகதைகளில் பிள்ளைக் காதல் சித்திரிப்பும் அது நிறைவேறாத தன்மையும் ஒரே மாதிரி சுட்டப்பட்டாலும் நிறைவேறாமைக்குக் காரணங்கள் மாறுகின்றன என எடுத்துரைக்கும் கட்டுரையாளர், மகிழம்பூவில் தாயின் மனநிலையும் சமூக எதிர்பார்ப்பும் பிரிவிற்குக் காரணமாக, மலையாளக் கதையில் பொருளாதார ஏற்றத்தாழ்வு காரணமாகிறது. கொச்சுமாத்தனே, லில்லிக்குட்டி உனக்கு இப்போ புரியாது. நமக்குள்ளே பிரியமாயிட்ட பிறகு அது கஷ்டத்திலே வந்து விடியும் எனக் கூறுவது சுட்டப்படுகிறது. இரு கதைகளிளுமே ஆண்கள் சூழல்களுக்கு ஏற்ப மாறுபவர்களாக நடந்து கொள்ள, பெண் பாத்திரங்கள் உறுதியான முடிவுகளைத் தேர்பவர்களாகவும் காட்டப்படுகின்றனர் எனக் கூறும்

கட்டுரையாளர், இரு படைப்புகளின் தலைப்புகளும் பிள்ளைக் காதலில் குறியீடுகளாக அமைந்துள்ளன எனவும் காதல் தோன்றும் நிலை, காதல் வளர்ச்சி, காதலின் முடிவு, காதலர் மனநிலை என்ற நிலையில் இரு கதைகளுக்கும் இடையே ஆழ்ந்த ஒப்புமைக் கூறுகள் காணப்படுகின்றன எனவும் கூறுகிறார்.

"புதினங்களில் சோதனை முயற்சிகள்" எனும் கட்டுரை ஒரு குறிப்பிட்ட இலக்கிய வகையின் வளர்ச்சியில் ஏற்பட்ட புதுமைப் போக்குகளைச் சுட்டிக் காட்டுகின்றது. எண்பதுகளில் படைப்பிலக்கியம் என்ற கருத்தரங்கில் படிக்கப்பட்ட கட்டுரை, பின்னர் அக்கருத்தரங்கக் கட்டுரைகளின் நூலாக்கத்திலும் இடம் பெற்றுள்ளது.

இலக்கிய வகைகளின் வளர்ச்சிக்குச் சோதனை முயற்சிகளே வித்திடுகின்றன. இம் முயற்சிக்குப் புலவனின், கலைஞனின் எண்ணம் மட்டுமின்றிப் பல்வேறு புறக் காரணங்களும் உள எனும் கட்டுரையாளர் அவ்வக்காலச் சமூகச் சூழல்களுக்கும் தேசிய நீரோட்டத்திற்கும் ஏற்பப் புதுப்புது வகையான புதினங்கள் தோன்றின என்கிறார். மாறிவரும் சமூக மாற்றங்களுக்கு ஏற்ப புதினங்களிலும் அந்நியமாதல், பாலுறவுச் சிக்கல்கள், ஆளுமைச் சிதைவுகள், மாறிவரும் சமூக மதிப்புகள், பொருளாதார உறவுகளில் மாற்றம், வாழ்க்கை பற்றிய புதிய கண்ணோட்டங்கள் போன்றன இடம் பெறுகின்றன என்கிறார். சிக்கல்களைப் புறவயமாக அணுகி புதிய மதிப்பீடுகளை முன்வைக்கும் போக்கு, உள்முகப் பார்வையுடன் சிக்கல்களை அணுகும் போக்கு என்ற இரு நிலைகளைச் சுட்டும் இவர் இதற்குக் காரணம் சமூகச் சூழல் மாற்றங்கள் மட்டுமன்று. உலக இலக்கியங்கள், இலக்கியப் போக்குகள், இலக்கியப் படைப்பாளர்கள் பற்றிய அறிமுகம் போன்றன சிறு பத்திரிக்கைகள் மூலமாகவும் சில பதிப்பகங்கள் மூலமாகவும் தமிழகத்தில் பரவியமையே இச்சோதனை முயற்சிகளுக்குக் காரணம் என்கிறார். இந்திராபார்த்தசாரதி, ஜெயகாந்தன், ஆதவன், அசோகமித்திரன், சுந்தரராமசாமி, நீலபத்மநாபன், பொன்னீலன், சின்னப்பபாரதி, ராஜம்கிருஷ்ணன்,

சா.காந்தசாமி, நாஞ்சில்நாடன் போன்றோர் புதினங்களில் அடிக்கருத்து, வடிவம், உத்திகளில் சோதனைகள் செய்திருப்பதை எடுத்துக் காட்டுகிறார். தமிழவனின் ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்களில் சார்பியல் உத்திகள் பயன்பட்டுள்ளமையையும் மொழிநடை அதற்கு ஏற்ப கையாளப்பட்டுள்ளதையும் புனைவுக் கூறுகளையும், படிமத் தன்மை மிக்க கனவுக் கூறுகளையும், மரபின் அழுத்தத்தைக் காட்டுகின்ற வருணனை, திகிலான நடை, சற்று பின்னோக்கியக் காலப்பின்னணி போன்ற கூறுகளையும் இவ்வாறான சர்ரியலிஸ நடைக்குப் பயன்படுத்தியுள்ளமையை விளக்குகிறார் கட்டுரையாளர்.

ஜே.ஜே. சில குறிப்புகள் எனும் சுந்தர ராமசாமியின் புதினம் இருத்தலியல் கொள்கையின் அடிப்படையில் தமிழில் வெளிவந்த முதல் நாவல் என்கிறார். எக்ஸிஸ்டென்சியாலிசமும் பேன்சி பனியன்களும் என்ற நாவலும் இத்தகு முயற்சியே. இரண்டுமே இருத்தலியலின் கொள்கைகளான மரபுக்கு எதிர்ப்பு, ஒழுக்கக் கோட்பாடுகளைக் கேள்வி கேட்பது, என்ற அடிப்படையில் குடும்பம், உறவு, பாசம், திருமணம், காதல் போன்றன விமர்சிக்கப்படுகின்றன. மனிதனைக் கட்டுப்படுத்தும் அனைத்தின் மீதும் அவநம்பிக்கை கொண்டு அவற்றிலிருந்து விடுதலை அடைவதே நோக்கம் என்ற கொள்கையை விளக்குவதாக இக்கதைகள் அமைகின்றன. இப்புனைக்கதைகளின் நோக்கத்திற்கேற்ப கதை கூறும் உத்திகளில் மாற்றம் செய்வதுடன் தனிமனிதச் சிதைவுகளும் சுட்டப்படுவதற்கு ஏற்ப சிறுசிறு நிகழ்ச்சிக் குறிப்புகள் - நாட்குறிப்புகள் - சிறுசிறு கூறுகள் போன்ற நிலையில் சோதனைகள் செய்யப் பட்டிருப்பதாகக் கூறுகிறார் கட்டுரையாளர்.

தேரோடும் வீதியில் நீலபத்மநாபனின் சோதனை முயற்சி விளக்கப்படுகிறது. இது ஒரு படைப்பாளியின் கதை. படைப்பாளி எவ்வாறு உருவாகிறான் என்பதை விளக்குகிறது. படைப்பாளி உருவாவதில் புறநிலை யதார்த்தங்களின் பங்கும் அவனது இயல்பூக்கமும் முக்கியம் என்று காட்டுகிறது. அத்துடன் அரிஸ்டாடில் கூறிய கதார்ஸிஸ் கொள்கை அடிப்படையிலும்

இலக்கியப் படைப்பு உருவாகிறது என்றும் காட்டுகிறார், நீலபத்மாநாபன். இவை, இதுவரை நாவல் சிறுகதை வரலாற்றில் சொல்லப்படாத செய்திகள் என்கிறார் கட்டுரையாளர். கதைத் தலைவன் அகமுக வகையினனாகப் படைக்கப்பட்டுள்ளதால், அவனது பார்வையிலேயே பின்னோக்கு உத்தியிலும், அகமனப் பேச்சு உத்தியிலும் கதை சொல்லப்பட்டுள்ளது; என்பதுகளில் பல்வேறு கருத்து வேறுபாடுகளுக்கு இடமளித்தது இப்படைப்பு என்கிறார்.

'தாமஸ்வந்தார்' எனும் க.ந.சுவின் நாவல் திருவள்ளுவரையும் கிறிஸ்தவ பிரசாரகர் ஒருவரையும் இணைத்து வந்த ஒரு வரலாற்று நாவல். திருவள்ளுவர், ஏசுபிரான், தாமஸ் ஆகியவர்களை மனிதர்களாகக் காட்டாமல் தெய்வீக மனிதர்களாக் காட்டும் இந்நாவலில் கதையம்சம் குறைவு. நீண்ட விவாதங்கள் அளவை முறையிலானவை என்கிறார் கட்டுரையாளர். காவேரியின் ஆத்துக்குப் போகணும் எனும் நாவலில் 'வீடு' என்பதையே கதைப்பாத்திரமாக மாற்றும் போக்கு காணப்படுகிறது. வீடு எனும் பருப்பொருள் மனித மனதில் செலுத்தும் ஆதிக்கத்தை எடுத்துரைப்பது எனக் காட்டுகிறார்.

தோப்பில் முகம்மது மீரானின் 'ஒரு கடலோரக் கிராமத்தின் கதை' கேரளத்து எல்லையில் உள்ள கிராமத்தில் இசுலாமிய சமயத்தைச் சேர்ந்தவர்களின் கதையாதலால் இசுலாமிய சமயச் சொற்களும் தமிழும் மலையாளமும் கலந்த நடையுமாக புதுவகை நடையைக் கொண்டிருக்கிறது என்கிறார். கருத்தமைவு நாவலில் ஒன்றான 'இடைவெளி' ஒரே ஒரு கருத்தைக் கதைக் கருவாகக் கொண்டு, அக்கருத்தின் உண்மையைத் தேடும் முறையில் அமைந்தது. கதை, கதைப்பின்னல் போன்ற கூறுகளை இதில் மறுக்கும் ஆசிரியர் சம்பத் இந்த நாவலைச் சாவு என்ற பிரச்சனையை மையமாகக் கொண்டு வளர்க்கிறார். சாவு என்பது ஓர் இடைவெளி என உணர்த்த முயல்கிறார் என எடுத்துரைக்கிறார்.

ராஜம்கிருஷ்ணனின் 'மண்ணகத்துப் பூந்துளிகள்' உசிலம்பட்டி வட்டாரத்து தேவர் மக்களிடம் வீரத்தின் விளைவிடமாகக் கருதப்பட்ட இன மக்களிடம் பெண் சிசுக் கொலை எவ்வாறு ஏன் ஏற்பட்டது. இப்பிரச்சனைக்கு எவ்வாறு முடிவு காண்பது எனக் காட்டும் நாவல். நாவலில் பிரச்சனை பெண் சிசுக்கொலையானாலும் நாவல் முழுவதும் குறிப்பிட்ட அந்த இடத்து இன மக்களின் வாழ்க்கை முறையும் வரலாறும் தான் விவாதிக்கப்படுகிறது. கள ஆய்வு போல கிடைத்த தகவல்களின் மேல் எழுப்பப்பட்ட சமூக உணர்வுடைய நாவல்.

இவ்வாறு எண்பதுகளில் வெளிவந்த புதினங்களின் சோதனை முயற்சிகளை அலசுகிறது இக்கட்டுரை.

"தமிழவனின் ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள்" பற்றியத் திறனாய்வுக் கட்டுரை மிகை நடப்பியல் கோட்பாடு நாவலில் இடம்பெறும் தன்மையை, முதல் சர்ரியலிச நாவல் என்ற அடிப்படையில் விளக்குகிறது. மிகை நடப்பியல் என்றால் என்ன எனக் கோடிட்டுக் காட்டிப் பின்னர் அக்கூறுகள் எவ்வாறு இந்நாவலில் இடம் பெற்றுள்ளன என விளக்குகிறார் கட்டுரையாளர். எவ்வித சமூகப் பண்பாட்டுக் கட்டுப்பாடுகளுக்கும் அடங்காத, மதம், ஒழுக்கநியதி, கலாச்சார மதிப்பு ஆகியவற்றைப் புறம் தள்ளும் தன்மையுடன் உள்மன அவசங்களை உளவியல் அணுகுமுறையில் எடுத்துரைத்தனர் சர்ரியலிச வாதிகள். தொடக்கத்தில் கலைகட்குச் சென்று, பின்னர் இலக்கியத்திலும் இடம் பெற்றது இக்கொள்கை. கனவுகள், கனவுத்தன்மை வாய்ந்த கற்பனைகள் வினோதக் காட்சிப்படைப்புகள், அதியம், தற்செயல் நிகழ்வு முதலியவை சர்ரியலிசப் படைப்புக்களில் காணப்படும் கூறுகளாகும். மரபு மத எதிர்ப்பு, அறிவியல் எதிர்ப்பு விஞ்ஞானத்தின் மீது சந்தேகம், உழைப்பு எதிர்ப்பு, சமூக மதிப்புகளிலிருந்து மீட்கப்பட்ட காதல், சமூகத்தைத் தோலுரித்துக் காட்டும் நகைச்சுவை ஆகிய கூறுகளும் மிகை நடப்பியல் படைப்புகளின் உள்ளடக்கங்களாகும் என்று விளக்கும் கட்டுரையாளர் இவற்றின் பின்னணியில் ஏற்கனவே சொல்லப்பட்ட

மனிதர்களை விளக்கும்போது, இந்நாவல் சமூக அமைப்பின் மீதும் சமூக நடைமுகைள் மீதும், இயக்கத்தின் மீதும் செய்யப்பட்ட விமர்சனம் எனவும் இவ்விமர்சனத்திற்கு சர்ரியலிச உத்திகளைத் தமிழவன் கையாண்டுள்ளார், எனவும் சர்ரியலிச உத்திகளைப் பயன்படுத்தி மரபின் சுமையை அழுத்தமாகக் கூறுவதுடன் மரபில் ஏற்பட்டுவரும் மாற்றங்களையும் கூறுகிறார் தமிழவன் எனவும் எடுத்துக்காட்டுகள் தந்து நிறுவுகிறார். கதை மாந்தர்கள் அடுக்கப்பட்டிருக்கும் செங்குத்து வரிசையே, இந்நாவல் மரபின் சுமையை வலியுறுத்துகின்ற பான்மையை உணரச் செய்கிறது. நீண்ட பாரம்பாரியம் மிக்க குடும்பத்தில் ஏற்படும் சீரழிவுகள், மாற்றங்கள், பழைய வாழ்க்கை முறையில் காணப்படும் நயவஞ்சகக் குணங்கள், காமக்களியாட்டங்கள், பழம் பெருமையில் நிறைவுகாணல், நழுவல் மனோபாவம், போன்ற குடும்ப உறுப்பினர்களின் செயல்பாடுகள் மூலம் சுட்டப்படுகின்றன. ஐந்தாண்டுத் திட்டங்கள் பற்றிய கனவுகள், மாவுமில்லின் வருகை, மின்சாரத்தின் அறிமுகம், புதிய கல்வியறிவு முதலியன ஆங்கில ஆட்சி முறையின் பின்விளைவாக இந்திய நாட்டில் நுழைந்த தொழில்நுட்பங்களைக் குறிப்பிடுகின்றன. இவற்றை ஆரம்பத்தில் எதிர்த்த ஊர்மக்கள் நாளடைவில் இப்புதுமைகளை ஏற்றுக் கொள்கின்றனர். மாவுமில்லின் பெருத்த ஓசை ஊரில் கேட்க ஆரம்பித்த பிறகு முத்துப் பிள்ளையின் ஆவி வௌவாலாக இருந்து சப்தம் எழுப்புவது குறைந்து விட்டது என்பது பழமையின் ஆதிக்கம், மூடநம்பிக்கை, பழைய மரபுமுறைவாழ்க்கை ஆகியவற்றிலிருந்து ஊர் விடுபட்டதையே குறிக்கிறது. சர்ரியலிச பாணியில் அமைந்த மொழி நடையும் எடுத்துக்காட்டப்படுகிறது. "வம்ச சரித்திரம் தன் மனதின் தோலைக் கிழித்து உட்புகுந்த அத்தகைய நாட்களில், ஒரு ஞாயிற்றுக்கிழமை சுவடிகளைப் படித்துக் கொண்டிருந்த தாத்தாவின் கண் முன்பு, ஒரு வார்த்தை ஊஞ்சலைப்போல ஆட ஆரம்பித்தது. அந்த வார்த்தைக்கு விரைவில் ஒரு தலையும், வாலும் முளைத்தன" எனும் பகுதியில் பழைய கால எண்ணங்கள் தாத்தாவுக்கு ஏற்பட்டதைச் சொல்லவே இத்தகு நடையைத் தமிழவன் பயன்படுத்தியுள்ளார் என்கிறார் கட்டுரையாளர்.

கதை மாந்தர்கள் பலர் கனவு காண்பவர்களாகப் படைக்கப் பட்டுள்ளமை, புராணமரபுக் கூறுபோல போன்மையாக்கம் செய்துள்ளமை, அச்சம் தரும் உவமைகள், குறியீடுகள் போன்றவற்றைக் கையாளுதல், ஆகிய கூறுகள் சர்ரியலிஸ பாணியில் அமைக்கப்பட்டிருப்பினும் மேலை இலக்கியக் கோட்பாடான சர்ரியலிஸத்தை அப்படியே தமிழில் புகுத்தாமல், தமிழ் மரபுகளுக்கு ஏற்ப மண்வாசனையை அதில் ஏற்றியுள்ளார் தமிழவன் என்றும் முடிவு கூறுகிறார்.

சென்பௌத்தம் - ஜப்பானிய ஐக்கூ தமிழ் ஐக்கூ (ஆய்வுக் கோவை - 1995)

ஜப்பானிய ஐக்கூ கவிதைகளில் சென் பௌத்தத்தின் தாக்கம் பற்றி முதலில் கூறிப்பின், சென் பௌத்தக் கருத்துகளைக் கூறி, பின் ஜப்பானிய கவிதைகளில் சுயமற்ற தன்மை, தனிமை, நன்றியுடன் ஏற்றுக் கொள்ளுதல், பேச்சற்ற மௌனம், அறிவு சான்றான்மை, முரண்கள், நகைச்சுவை, சுதந்திரம், ஒழுக்கம் எளிமை, பொருட்சார்பு, அன்பு, துணிவு முதலிய மன நிலைகளின் அடியாக படைக்கப்படுகின்றன என்ற டாக்டர் லீலாவதியின் விளக்கத்தை அடிப்படையாகச் கொண்டு, இவற்றுள்ளும் அடையாளத்தை இழத்தல் எனும் மனநிலை முக்கியமானது என விளக்குகிறார்.

பசு குடித்த நீர் பாலாகிறது
பாம்பு குடித்த நீர் விஷமாகிறது

எனும் சென் தத்துவ உரை தண்ணீர் தன் அடையாளம் இழப்பதைக் குறிப்பிடுகிறது. அடையாளத்தை இழக்கும் மனநிலை மனிதனைப் பல வழிகளில் ஈடுபடுத்துகிறது. சகமனிதனுடன் நல்லுறவு கொள்ளத் தூண்டுகிறது, தன்னை இப்பிரபஞ்சத்தின் ஓர் அங்கமாகக் காணவும் வைக்கிறது. இம் மன நிலைகளைப் பல ஜப்பானிய ஐக்கூ பாடல்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன என எடுத்துக் காட்டுகள் தந்து விளக்குகிறார்.

மௌனநிலை என்பது மிகக் குறைவாகப் பேசி அதிகமான அர்த்தங்களை விளைவிப்பது. ஜப்பானிய ஐக்கூக்கள் இத்தகு பண்பின. வாழ்வில் அனைத்துக் கூறுகளையும் அறிவின் கண் கொண்டு நோக்காமல் உணர்வு நிலையில் நின்று காணும் பார்வையையும் இவை தருகின்றன. ஐக்கூவின் அடுத்த பண்பு முரண். இம் முரணகள் அறிவு அனுபவம் சார்ந்தனவாக அமைபவை. இம்முரணகள் சிந்திக்கவைத்து, சிந்திக்கும் தோறும் பொருள் விரிவு தருபவை. இவ்வுலகில் அனைத்துமே எளிமையானவை, வெளிப்படையானவை என்ற சென் கருத்தும் ஐக்கூவில் இடம் பெற்றுள்ளது.

இக்கருத்துகள் யாவும் தமிழில் ஐக்கூ கவிதைப் படைப்புகள் வெளிவர ஆரம்பித்த பின் அவற்றிலும் இடம் பெற்றுள்ளன என அறிவுமதி, மித்ரா, மு.முருகேஷ், ரவி, அமுதோன் போன்றோருடைய கவிதை எடுத்துக் காட்டுகளுடன் விளக்குகிறார்.

ஒரு புதிய இலக்கிய வகை வேறு ஒரு ஏற்பு மொழியில் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் ஏற்பு மொழியின் சமுதாயச் சூழலும் அதை ஏற்றுக் கொள்ளத்தக்க மனநிலை பெற்றிருக்க வேண்டும் என்பதை விளக்குகிறார் கட்டுரையாளர். "தாக்கத்திற்குரிய வித்து ஏற்பு மொழியின் இலக்கிய மண்ணில் விழவேண்டும். ஏற்பு மொழி இலக்கிய மரபும் படைப்பாளிகளும் புதிய வித்தினை ஏற்றுக் கொள்ளவும் அதற்குரிய எதிர்வினையைக் கொடுக்கவும் தயாராக இருக்கும் சூழல் நிலவவேண்டும். பல்வேறு வகைப்பட்ட தாக்கங்களை விளைவிக்ககூடிய பல தாக்கத்திற்கான வித்துகள் வந்து விழலாம். ஆனால் எதை ஏற்றுக் கொண்டு எதிர்வினை புரிவதற்கு ஏற்பு மொழி இலக்கிய மரபு தயாராக இருக்கிறதோ அந்த வித்துகள் மட்டுமே ஏற்பு மொழிச் சூழலில் உயிர்பிழைத்து வேர்பிடித்து வளரமுடியும் என்று தாக்க ஆய்வாளர் கூறும் கூற்றை எடுத்துரைத்து, தமிழ் மரபில் இருபதாம் நூற்றாண்டில் உலகின் பல பகுதிகளில் இருந்து பல்வேறு இலக்கிய வகைகளின் வித்துகள் வந்து சேர்ந்தன. ஆனால் அவை யாவுமே தமிழில் தழைத்து வளர்ந்து தமிழில் பெரிய

அளவிலான தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. ஆனால் ஐக்கூ கவிதைகள் தமிழில் பரப்பரப்பான வரவேற்பைப் பெற்று வேகமான வளர்ச்சியை அடைந்துள்ளன. இதற்குக் காரணம் ஏற்கனவே தமிழில் ஐக்கூவின் சாயலுடைய சுருங்கச் சொல்லும் பாங்கினை இலக்கிய வடிவங்களும் (குறள்) சென் பௌத்த கருத்துகளை ஒத்த சித்தர்களின் பாடல் கருத்துகளும் முறையே வடிவ அடிப்படையிலும் உள்ளடக்க அடிப்படையிலும் இருந்தமையாலும், ஐக்கூ கவிதையின் வடிவினை ஏற்று எதிர்வினை புரியும் சூழல் நவீனத் தமிழ் இலக்கிய உலகிலும், சமூகத்திலும் நிலவியதாலும் இங்கு செழித்து வளர்ந்தது என்கிறார். இறுதியாக இக்கட்டுரை ஐக்கூ கவிதை தமிழ் மண்ணில் எவ்வாறு வேர்கொண்டது என்று மட்டுமே விளக்குகிறது. இன்று ஐக்கூ எவ்வாறெல்லாம் வளர்ந்து, கிளை விட்டுப் பரவியுள்ளது எனக்காண்பது தனி ஆய்வாக அமையும் என்று கூறியது மேற்கொண்டு ஆய்வு செய்யத் தூண்டுவதாக அமைகிறது.

“தமிழ் மலையாள மொழிகளில் நாவல் இலக்கிய வகை வளர்ச்சிப்படி நிலைகள்” எனும் கட்டுரை (தமிழியல் ஆய்வுக் கட்டுரைகள் ம.கா.ப. 1990.ப.79-89)

தமிழ், மலையாளம் ஆகிய இரு மொழிகளிலும் நாவல் இலக்கிய வகையின் வளர்ச்சியில் காணப்பட்ட பொதுப் போக்குகளை விளக்குகிறது. நாவல் வளர்ச்சியின் முதல் கட்டத்து நாவல்களில் காணப்பட்ட சில பொதுத் தன்மைகள் அரசர்கள், செல்வந்தர்களின் வாழ்க்கை சித்திரங்கள் சமுதாயச் சீர்திருத்தம், பழமையான பண்பாட்டின் மேன்மைகள் சிறந்த அம்சங்களை நினைவூட்டுதல் போன்றன சுட்டப்படுகின்றன. தொடக்க காலத்தில் பண்பாட்டுணர்ச்சி பற்றி இருந்த நாவல்கள் பின்னால் துப்பறியும் நாவல்களும் வரலாற்று நாவல்களுமாக வளர்ந்த இரண்டாவது காலகட்டத்தைச் சமூக விமர்சனக் காலம் என்பர். தமிழில் சமுதாய விமர்சனம் தீவிரமான பொருளாதார அடிப்படையில் அமைந்த வர்க்கப் பார்வையாக அமையாமல் பெண் விடுதலை,

பெண் கல்வி, சாதி வேறுபாடுகளைக் கடிதல் என்ற நிலையில் மட்டும் அமைய, மலையாளத்தில் இக் கூறுகள் முதல் கால கட்டத்திலேயே பேசப்பட்டு விட்டன எனப் பொதுத் தன்மையிலும் வேறுபாடு இருப்பதைச் சுட்டுகிறார். மேலும் தமிழில் பொருளாதார அடிப்படையிலான பார்வை இடம் பெறாமைக்குக் காரணம் திராவிட இயக்கங்களின் செல்வாக்கும் முற்போக்கு இயக்கங்களின் செல்வாக்கின்மையுமே என்கிறார்.

30-களில் இருமொழிகளிலுமே மொழிபெயர்ப்புகளினால் நாவல்களின் போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டன என்கிறார். மூன்றாம் கட்ட நாவல் வளர்ச்சியில் தமிழில் சமூக முரண்பாடுகள், பெண்மையின் மாறுபட்ட கோணங்கள், மனிதநேயம், குடும்ப உறவுகளில் மாற்றம், தனி மனிதவாதம், பாலுணர்வு போன்ற பாடுபொருள் மாற்றம் ஏற்பட்டது எனவும் ஆயின் மலையாளத்தில் இரண்டாவது காலகட்டத்திலேயே இக்கூறுகள் இடம் பெற்று விட்டன என்றும் தமிழில் திராவிட இயக்கங்களின் சிந்தனைகள் செல்வாக்கு பெற்றிருந்த காலகட்டத்தில் மலையாளத்தில் பொதுவுடைமைக் கருத்துகள் செல்வாக்கு பெற்றிருந்தன என்றும் கூறுகிறார்.

"ஒப்பிலக்கிய ஆய்வில் தாக்கக் கொள்கை" - எனும் கட்டுரை (கலை இலக்கியக் கோட்பாடுகள், ஐந்தமிழ் ஆய்வாளர் மன்றம் 1995 பக். 107-112) தாக்க ஆய்வின் அடிப்படை விளக்கம், தாக்க ஆய்வின் வகைகள், நெறிமுறைகள் போன்றவற்றைக் கூறி ஒப்பிலக்கிய ஆய்வுகளுக்கு வழிகாட்டியாய் அமைந்துள்ளது.

ஒன்றுக்கொன்று தொடர்புடைய இருமொழி இலக்கியங்களுக்கு இடையே ஏற்படும் கொடுக்கல் வாங்கல்கள் பற்றியதாகவும், இலக்கியத்துடன் தொடர்புடைய சிற்பம், ஓவியம், இசை முதலான கவின் கலைகள் இலக்கியத்தின் மீதும், இலக்கியம் இக்கவின் கலைகள் மீதும் ஏற்படுத்துகின்ற தாக்கம் பற்றியதாகவும் தாக்க ஆய்வு அமைகிறது. ஒரு மொழியின் இலக்கிய

அடிக்கருத்துகள் உத்திகள் முதலியன பல்வேறு அரசியல், சமூகவியல் காரணங்களையொட்டி இடம் பெயர்வதும் அதனால் பிறிதொரு இலக்கியத்தில் ஏற்படுகிற புதிய விளைவுகளும் தாக்க ஆய்வில் ஓர் ஆய்வாளனுக்குச் சுவையூட்டும் பகுதிகளாக அமைந்திருக்கின்றன என்பர். தாக்கத்தை உணர்த்துகின்ற ஆய்வாளர், தாக்கத்திற்கு ஆளான படைப்பாளி, எந்த மையப் புள்ளியில் தாக்கத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு தன் தனித் தன்மைகளை வெளிப்படுத்துகிறான் என்றும் கண்டு கூறவேண்டும் என்கிறார்.

ஏற்பிற்கான சூழல், ஏற்பின் பல நிலைகள், தாக்கத்தின் படிநிலைகள், நேரடியான தாக்கம், மறைமுகத் தாக்கம் உறவுகளாலும், தொடர்புகளாலும், அரசியல், புலம் பெயர்ந்தோர், இடைத் தொடர்பாளர்கள் போன்ற பல கூறுகளாலும் ஏற்படும் தாக்கம், தாக்கமாக அன்றிப் படைப்பாளியின் படைப்பாக்க உணர்வுக்குத் தூண்டுகோலாய் அமையும் நிலை, எதிர்மறைத் தாக்கம் போன்ற பல கூறுகளைச் சுருக்கமாக, ஆயின் தெளிவாக விளக்குகிறது கட்டுரை.

“தமிழ்ப் புதினங்களில் அந்நியமாதல்” - எனும் இவரது கட்டுரை (ஆய்வுப் பொழில், தமிழாய்வு மன்றம், திருச்செந்தூர், 1998) ‘அந்நியமாதல்’ எனும் சமகால சமுதாயத்தில் தனி மனிதனின் நிலை பற்றிய கருத்தமைவு தமிழ்ப்புதினங்களில் உத்தியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளமையை விளக்குகிறது.

வாழ்க்கையில் சலிப்பு, சூனியம், வெறுமை ஆகியவற்றை உணர்தல், தன் எண்ணத்திற்கும் செயலுக்கும் தொடர்பற்றிருந்தல், செயல்களில் ஈடுபாடற்றநிலை போன்ற பல நிலைகள் அந்நிய மாதலுக்கு அடிப்படைகளாகின்றன என்பதைக் கூறும் கட்டுரையாளர் ஆற்றலின்மை, வாழ்வில் பொருளின்மை, மரபு மீறல், தனிமைப்பட்டுப்போதல், தன்பிணைப்பை அறுத்துக் கொள்ளுதல் எனும் ஐந்து கூறுகளை மெல்வின்மேன்

அந்நியமாதலுக்கான காரணங்களாகச் சுட்டுவதை எடுத்துக்கூறி இத்தகு கூறுகள் இந்திராபார்த்தசாரதி, ஆதவன், நீல.பத்மநாபன், ஜெயகாந்தன், க.நா.சுப்பிரமணியம், டி.செல்வராஜ், ராஜம்கிருஷ்ணன் போன்ற நாவலாசிரியர்களின் படைப்புகளில் இடம்பெற்றிருப்பதை எடுத்து விளக்குகிறது.

இலத்தீன் இலக்கியம்

தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்ட வாழ்வியற் களஞ்சியத்தில் இடம் பெற்றுள்ள "இலத்தின் இலக்கியம்" பற்றிய விளக்கக் கட்டுரை இலத்தின் இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றித் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப் படுத்துகிறது. இலத்தீன் இலக்கிய வரலாற்றைக் குடியரசு காலம், அகஸ்டஸ் காலம், பேரரசுக் காலம் என்ற மூன்று காலப்பகுப்புகளில் எடுத்துரைக்கிறார். குடியரசுக் காலத்(கி.மு.240-27 வரை)தில் நாடகம் தன்னுணர்ச்சிப்பா, அங்கதம், தத்துவம், சொற்பொழிவுக் கலை, வரலாறு என்று இலக்கிய வளம் வளர்ச்சியடைந்தது.

இலத்தீன் மொழியில் தொடக்ககால ஆசிரியர்களான லிவியஸ் ஆண்ட்ரோனிக்கஸ், (Lucius Livius Andronicus) நவியஸ், (Gnacus Navius) என்னியஸ், (Quintus Ennius) பிளாட்டஸ் (Titus Maecius Platus) ஆகியோரின் படைப்புகளால் இலத்தீன் இலக்கியம் தோற்றம் கொள்ளுதல், கொண்டு இலக்கிய வகைகள் விரிவடைதல் ரோமானியருக்கே உரிய புதிய இலக்கிய வகைகள் உருவாதல், கிரேக்க இலக்கிய மரபை இலத்தீனுடன் இணைத்தல், எளிய நடை வளர்ச்சி என்ற நான்கு நிலைகள் கொண்டிருந்ததைச் சுட்டுகிறார் கட்டுரையாளர். டெரன்ஸியஸ் (Publius Terentius) தத்துவ நோக்குகளைக் கொண்ட நாடகங்களை எழுதியவர், பசுவியஸ் (Pacuvius) தத்துவ நோக்கில் துன்பியல் நாடகங்கள் படைத்தவர்; கிரேக்க நாடக ஆசிரியரான அக்கியஸ் (Accius) போன்றோர் பற்றியும் இலத்தீன் மொழியில் எழுதப்பட்ட அங்கத நூல்கள், தத்துவ நூல்கள், தன்னுணர்ச்சிப் பாடல்கள் ஆகியன பற்றியும்

குறிப்பிடும் கட்டுரையாளர் லுக்ரீஷியஸ், காட்டுலஸ் சிசரோ பற்றிய குறிப்புகளையும் தருகிறார். ஜூலியஸ் சீசர் (கி.மு.-100-44) (Gaius Julius Caesar) இலத்தீன் வரலாற்றாசிரியராகவும் திகழ்ந்தார், தம் அரசியல் வாழ்க்கையில் இலக்கியத்தை ஒரு பிரச்சாரக் கருவியாகவே பயன்படுத்தினார் என்ற குறிப்பு குறிப்பிடத்தக்கது. ஆக்டேவியஸ் சீசர் (அகஸ்டஸ்) அரசியல் கொந்தளிப்பை அடக்கி, எழுத்துப் பணியை மரியாதைக்குரிய முழுநேரப் பணியாக்கியமையால் பேச்சுக்கலை தொய்யுமாறு காப்பியம், தன்னுணர்ச்சிப் பாடல், கையறுநிலைப் பாடல் போன்றன செழித்து வளர்ந்தன என இலக்கிய வரலாற்றை அரசியல் மாற்றத்தின் பின்னணியில் விளக்குகிறார். அரசவைப் பாடல்களே மிகுதியாயின என்பதும் குறிப்பிடப்படுகிறது. இலத்தீன் இலக்கியக் காப்பியக் கர்த்தாக்களுள் முதன்மையான வர்ஜில் பற்றியும் அவரது ஏனெய்டு (Aeneid) பற்றியும் பிற முல்லைப் பாடல்களான எக்லாக் (Eclogue), ஜியார்ஜிக்ஸ் (Georgics) பற்றியும் குறிப்பிடுகிறார். ஹோரேஸ், ஓவிட், திபுல்லஸ் போன்ற அறிஞர்கள் பற்றியும், லிவியஸ் ஆகியோர் படைப்புகள் பற்றிய குறிப்புகளும் கிடைக்கின்றன. பேரரசுக் காலமாகிய மூன்றாவது காலகட்டத்தில் கி.பி.414-476) சொற்பொழிவுக்கலை, கடிதம், வரலாறு, வாழ்க்கை வரலாறு, கதைகள் போன்றன உரைநடை வளர்ச்சியில் பங்கு கொண்டமையையும் செனகாவின் நூல்கள் பற்றியும் அங்கதமும் கையறுநிலைப் பாடல்களும் அதிகம் தோன்றியதையும் குறிப்பிடுகிறார். வெர்ஜிலைத் தொடர்ந்து இத்தாலிய மொழியில் காப்பியங்கள் படைத்த சிலியஸ் இத்தாலிகஸ் பற்றியும் பியூகானஸ் பற்றியும் ஸ்ட்டேஷியஸ் பற்றியும் குறிப்பிடுகிறார். இலக்கிய வரலாறு, வாழ்க்கை வரலாறு, கதைகள் ஆகியவை இக்காலத்தில் வளர்ச்சி பெற்றமையும் சுட்டப்படுகிறது. கிறித்தவ எழுத்தாளர்கள் கி.பி. இரண்டுக்குப் பிறகு அதிகமாகப் படைப்பாக்கத்தில் இடம் பெற்றதையும் அலியஸ்டோனடஸ் என்பார் இலக்கண நூல் பற்றியும் குறிப்பிடுகிறார் கட்டுரையாளர். ஒப்பிலக்கிய மாணவனுக்கு இலத்தீன் இலக்கியத்தின் பரப்பு முழுவதையும் ஒரு பருந்துப்பார்வையில் சுருக்கித் தருவது இக்கட்டுரை எனலாம்.

முனைவர் இரா. காஞ்சனாவின் நூல்கள்

1. இலக்கியமும் உளவியலும்

இலக்கியமும் உளவியலும் எனும் இந்நூல் இலக்கியத் திறனாய்வில் உளவியற் கொள்கைகள் பயன்படுமாற்றை விளக்கி நிற்கிறது. ஒப்பிலக்கிய ஆய்வு அணுகு முறையில் ஒன்றான பல்துறை ஒருங்கிணைப்பு ஆய்வுக்கு உறுதுணையாக அமையக் கூடிய நூல்.

நூற்பொருளை அறிமுகப்படுத்தும் முதல் இரண்டு இயல்களும் தொடர இருக்கும் செய்திகளுக்கு வலுவான அடித்தளத்தை அமைத்துத் தருகின்றன. அடுத்து வரும் இயல்கள் பயில்முறை அடிப்படையில் உளவிற் கொள்கைகளைச் சில இலக்கியப் படைப்புகளில் ஏற்றிப்பார்த்து ஆராய்வதாயும் ஆயும் வழி வகைகளைச் சுட்டுவதாகவும் அமைகின்றன.

உளவியல் கோட்பாடுகளையும் கோட்பாட்டாளர்களையும் அறிமுகப் படுத்துகையில் பிராய்டு, யுங், அட்லர், ஏர்னஸ்ட் கிரிஸ், காரன் ஹார்னி, எரிக்ஃபிராம், எரிக் எரிக்சன், மாசுலோ, ரெனெவெல்லக், லியோனல் டிரில்லிங் ஆகியவர்களது உளவியல் கோட்பாடுகள், உளவியல் அணுகுமுறைகள், இலக்கியமும் உளவியலும் பற்றியத் திறனாய்வு முறைகள் எடுத்து விளக்கப்படுகின்றன.

மூன்றாவது இயலிலும் நான்காவது இயலிலும் உளப் பகுப்பாய்வு பற்றிய கருத்து விளக்கங்கள் தரப்படுகின்றன. ஃபிராய்டு, யுங், அட்லர், ஹொாட்பர்ட்ரீட் ஆகியோரது விளக்கங்கள் கொண்ட இவ்விரண்டு இயல்களும் இலக்கியப் பாத்திரப் படைப்புகளின் உளப்பகுப்பாய்வு முறைத் திறனாய்விற்கு வழி காட்டுபவை.

ஐந்தாவது இயல் 'குழந்தை உளவியல் நோக்கில் அவர்களுக்குப் புரியாது' - இது குழந்தை மனநிலை பற்றிய உளவியல் செய்தியைச் சிவசங்கரியின் அவர்களுக்குப் புரியாது எனும் ஒற்றைப்படைப்பில் பொருத்தி விளக்குகிறது. ஆறாவது இயல் தாய்-குழந்தை உறவுச் சிக்கல் பற்றியது. குழந்தை தாயுடன் கொண்ட உறவு - அதில் ஏற்படும் தடைகள் - அதன் விளைவாகக் குழந்தையின் பிற்கால ஆளுமை வளர்ச்சியல் ஏற்படும் மாற்றங்கள் தாய் மாறாநிலைப்பாடு, 'தாய்-படிமம்', தாய்-பதிலி 'தந்தை-படிமம்' ஆகியன விளக்கப்படுகின்றன. சிவசங்கரியின் ஒரு மனிதனின் கதை, பொன் சௌரிராஜனின் தாயக்குமரி, ஆங்கிலத் திரைப்படமான 'சைக்கோ' தமிழ்த்திரைப்படமான 'மறுபிறவி' பரமஹம்சரின் 'அன்னை வழிபாடு' பாரதியின் தாய் நிலைப்பாடு ஆகியவற்றின் துணையுடன் இவ்வுறவுச் சிக்கல் விளக்கப்பட்டுள்ளது.

'பாலகுமாரனின் நாவல்களில் இளையோர் உளவியல்' எனும் அடுத்த இயல் இளையோர் உளவியல் பற்றிய உளவியலார் கருத்துகள் பாலகுமாரன் நாவல்களில் இடம் பெற்றிருப்பதை எடுத்துரைக்கிறது. 'உளவியல் நோக்கில் தலைவியில் கூற்றுகள்' எனும் எட்டாவது இயல் சங்க இலக்கியத் தலைவியின் கூற்றுகளை உளவியல் பார்வையுடன் அணுகுகிறது. களவு, கற்புக் காலத்தில் நிலவும் தலைவியின் மனநிலைகளை இன்றைய உளவியலார் கூறும் மனமயக்கம், திரிபுற உணர்தல், திரிபுக்காட்சிக்காணல், தம்மையே தாம் மறத்தல், உயிர் நீக்கும் இயல்பூக்கம், ஸ்கைசோ ஃபிரேனியாவைச் சேர்ந்த மனக்கோட்டம், விருப்பார்வக் காட்சியைக் காணல், மாயக் காட்சிகளைக் காணல் ஆகியவற்றுடன் ஒப்பிட்டுக்காட்டுகிறது.

முதியோர் உளவியல் பற்றிய ஒன்பதாவது இயல், மனித வளர்ச்சிப் படி நிலையில், இறுதிக் கட்டத்தில் நிற்கும் மனிதனின் உளநிலை மாறுபாட்டிற்கான சமூக, பொருளாதாரக் காரணங்களுடன், உடலில் ஏற்படும் மாறுபாடுகளும் காரணமாவதை விளக்குகிறது. படைப்பாக்கங்களில் இடம்பெறும் முதியோர் பாத்திரங்கள் பற்றிய உளவியல் திறனாய்வையும் நல்குகிறது.

உளவியல் அணுகுமுறையில் திறனாய்வை மேற்கொள்ள விரும்பும் மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் கையேடாகத் திகழக்கூடியது இந்நூல் எனலாம்.

சங்க இலக்கியத்தில் நிலையியல் உயிர்கள்

இது நூலாசிரியர் தம் முனைவர் பட்டத்திற்காக மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திற்கு அளித்த ஆய்வேட்டின் நூல் வடிவமே. 1988-ஆம் ஆண்டு "அறிவியல் நோக்கில் தமிழ் இலக்கியத்தில் சில நிலையியல் உயிர்கள்" எனும் தலைப்பில் பேராசிரியர் சுப.அண்ணாமலையவர்களின் மேற்பார்வையில் உருவான ஆய்வேட்டின் ஒரு பகுதி இங்கு நூல் வடிவம் பெற்றுள்ளது.

நூற்றுக்கணக்கான மலர்களையும், செடி, கொடிகளையும் பற்றிய நுணுக்கமான செய்திகளைக் காட்சிப் பின்புலம் மூலமாகவும் உவமைகள் வாயிலாகவும், உள்ளுறை, இறைச்சி வாயிலாகவும் வழங்கும் சங்க இலக்கியம் மு.வ.அவர்கள் குறிப்பிட்டது போன்று இன்றைய பயிரியலார் (நிலையியலுயிர் நூலார்) தம் ஆய்வுக்குத் துணைமை ஆதாரமாகக் கொள்ளத் தக்கவை. அதில் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை மேற்கொண்டிருந்த தமிழ் மக்களின் கூட்டு நனவிலி மனமாகக் செயல்படும் புலவர்களின் வெளிப்பாடுகளின் கூர்ந்த நோக்கும் தெள்ளிய பார்வையும் அறிவியல் அறிஞர்களின் கூர்ந்த நோக்கும் கொண்டவை. அவற்றில் வெளிப்படும் நிலையியலுயிரியல் செய்திகள், இன்றைய நிலையியலார் எடுத்துரைக்கும் ஒவ்வொரு நிலையியல் உயிர் பற்றிய செய்திகளுடனும் ஒப்பிடத் தக்கனவாய் அமைந்துள்ளன என்பதை எடுத்துக் காட்டுகிறது இந்நூல். பழந்தமிழ் நூல்கள் சுட்டும் நிலையியல் உயிர்களை இன்றைய நிலையியலுயிர் நூலார் சுட்டும் விளக்கங்களுடனும் ஒப்பிட்டுக் கண்டு இதுதான் அது என அடையாளம் காணும் வழிமுறையும் இந்நூலில் பின்பற்றப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக மராவைப் பற்றிய உரையாசிரியர்களின் வேறுபட்ட குழப்பமான விளக்கங்களை

எடுத்துரைத்து, அவற்றில் எது சரியான விளக்கம் என்பதைப் பிரித்துக் கழிக்கும் முறையில் 'இது இல்லை', 'இது இல்லை' எனப் பிரித்துக் கழித்து இறுதியில் மரா என்பது ஷோரியா ராக்ஸ்பர்கை (Shorea roxburgii G.Don-Dipterocarpaceae) எனும் நிலையியல் உயிர் என அடையாளம் காட்டப்படுகிறது. தமிழ் உரைகளில் மராவைக் கடம்பு, வெண்கடம்பு, செங்கடம்பு, மரவம், கள்ளி, ஆச்சா என்ற பெயர்களால் சுட்டும் நிலையில் இவை ஒவ்வொன்றின் நிலையியலுயிரியல் விளக்கங்கள் முன் வைக்கப்பட்டு அவற்றின் அடிப்படையில் அவை தமிழ் இலக்கியம் சுட்டும் மரா அல்ல என்று சங்கப் பாடல்களையே அடிப்படையாகக் கொண்டு மறுத்து, பின்னர் மராவின் (ஷோரியாவின்) இலக்கணங்களுடன் பொருத்திக் காட்டப்படுகிறது. இவ்வாறு வேறுபடுத்தும்பொழுது மராவும் கடம்பும் பெரிதும் உறழ்ந்து கூறப்படுவதால் அவற்றின் ஒப்பீட்டு விளக்கமும் அளிக்கப்படுகிறது. இதே போன்ற அணுகுமுறையில் பாலை பற்றிய முரண்பட்ட, பல்வேறு உரைகளும் கருத்துகளும் எடுத்துரைக்கப்பட்டுப் பின்னர் பாலை என்பது எது என நிறுவப்படுகிறது.

காந்தள், கரும்பு, காயா, வேங்கை, பாலை, மரா எனும் ஆறு நிலையியல் உயிர்களே சங்க இலக்கியப் பாடல்களின், அடிப்படையிலும் அறிவியல் அடிப்படையிலும் இந்நூலில் ஆராயப்பட்டுள்ளன. சங்க இலக்கியம் சுட்டும் நூற்றுக்கணக்கான பிற நிலையியல் உயிர்களையும் அணுக இது ஒரு வழிகாட்டியாக அமையும்.

ஒப்பிலக்கியக் கொள்கையாளர் ஹெச்.ஹெச். ஹென்றிரிமாக் சுட்டும் ஒரு கூறு இலக்கியத்தை ஒரு கையிலும் மனித அறிவு வீச்சுகளின் எல்லைக்குட்பட்ட எத்துறையையும் பிறிதொரு கையிலும் கொண்டு இரண்டுக்கும் இடையிலான இணை நிலைகளையும், ஒன்றால் ஒன்று பெற்ற தாக்கத்தையும் ஒன்றினால் ஒன்று பெறும் விளக்கத்தையும் எடுத்துக் காட்டுவது ஒப்பிலக்கிய ஆய்வு அணுகுமுறை என்பது. இங்கு நூலாசிரியர் சங்க இலக்கியத்தை ஒரு கையிலும் அறிவியல் துறைகளில் ஒன்றான

நிலையியல் உயிரியல் துறையை மறுகையிலும் எடுத்துக்கொண்டு ஒப்பிட்டு விளக்கம் கூறியிருக்கிறார். இங்கு வேங்கை, பாலை, மரா ஆகியவற்றின் உரை விளக்கங்களில் காணும் வேறுபாடுகளுக்கு மறுவிளக்கம் தந்து நிலையியலுயிரியல் உண்மைகளின் அடிப்படையில் விளக்கம் தந்திருக்கிறார். இலக்கியத்தைப் புலமைச் சிந்தனையாளர் நோக்கிலேயே அவர்களது அனுபவம் உள்ளுணர்வு, கற்பனை ஆகியவற்றின் கலவையாகப் பண்பாட்டுக் கோலங்களாகக் கண்டு வந்த ஆய்வு நிலையிலிருந்து மாறி அறிவியல் கண் கொண்டு இலக்கியங்களை அணுகும் முறையை இந்நூல் எடுத்துக்காட்டுகிறது. இன்றைய ஒப்பிலக்கிய போக்குகளில் முதன்மை பெறும் "பல்துறை ஒருங்கிணைப்பு" ஆய்வுக்கு உறுதுணையாக அமையக் கூடிய நூல். நூலின் சிறப்புகளுள் சுட்டிக் காட்டத்தக்க ஒரு கூறு, ஆராயப்படும் நிலையியல் உயிரை நிலையியல் உயிர்நூல் சுட்டும் வகைபாட்டு அடிப்படையில் அவை சார்ந்த குடும்பப் பிரிவுக்குள் அடக்கிக்காட்டுவது. மற்றொரு கூறு, அவற்றின் வரைபடங்களையும், நிழற்படங்களையும் தந்து அவற்றின் வளரிடம், வேர், தண்டு, இலை, இணர், மலர், கனி என வருனணை வழிப்பட்டு விளக்கம் தருவது. அறிவியல் நெறியிலான நூலின் இவ்வியல்பிற்காக இந்நூல் அனைத்திந்தியத் தமிழசிரியர்மன்றச் சிறப்புப் பரிசினைப் பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

முனைவர். இரா. காஞ்சனாவின் கட்டுரைகள்

I. ஒப்பிலக்கியக் கட்டுரைகள்

பாரதிதாசனும் ஜாஷ்வாவும் - இணைநிலையாய்வு

ஒப்பிலக்கிய ஆய்வுகளில் முதன்மை பெறும் இணைநிலைக் கொள்கையை விளக்கி அதன் அடிப்படையில் தமிழ் - தெலுங்கு மொழிகளைச் சேர்ந்த பாரதிதாசனும், ஜாஷ்வாவும் ஆராயப்படுகின்றனர். புரட்சிக்கவி பாரதிதாசன், விஸ்வகவி சாம்ராட் ஜாஷ்வா இருவரின் கவிதைகளில் காணப்படும் இணைநிலைகள்,

பொதுநியதிகள், கருத்து ஒற்றுமைகள், ஆகியவற்றை எடுத்துக்காட்டி அவற்றிற்கான காரணம் இருவருடைய அரசியல் சமுதாய, வரலாற்றுப் பின்னணிகள் ஒன்றாக அமைந்திருப்பதே என்பது விளக்கப்படுகிறது. கவிஞர்களின் காலச்சூழல், சமுதாயச் சூழல், இலக்கியப் பின்னணி ஆகியன விளக்கப்படுகின்றன. சாதி பேத மறுப்பு, தீண்டாமை மறுப்பு, பெண்ணுரிமைக் கருத்துக்கள், மூட நம்பிக்கைக் கண்டித்தல், இயற்கையைப் பாடும் முறை போன்ற கூறுகளில் காணப்படும் இணைநிலைகள் எடுத்துக்காட்டப் பட்டுள்ளன.

“இந்திய இலக்கியமும் ஒப்பியல் இந்திய இலக்கியமும்” (Indian Literature and Comparative Indian Liteature)

இந்திய இலக்கியம் என்றால் என்ன? இந்திய இலக்கியங்களில் காணப்பட வேண்டிய இந்தியத் தன்மை (Indianness) என்றால் என்ன? என்ற கருத்தமைவுகளை விளக்கும் இக்கட்டுரை இக்கருத்தமைவிற்கு முழுமையை வழங்கக்கூடியது ஒப்பிலக்கியமே என்கிறது. சிஸிர் குமார் தாஸ், கிருஷ்ண கிருபாளினி, அமியாதேவ், க.நா.சு. க.செல்லப்பன், சண்முகம் பிள்ளை ஆகியோரின் கருத்துக்களின் அடிப்படையில் ஒப்பியல் இந்திய இலக்கியம் என்ற கோட்பாட்டின் பொருள் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

ஒப்பியல் இந்திய இலக்கியம் எனும் தொடரில் ‘‘ஒப்பியல்’’ என்ற முன்னொட்டு ஆய்வு நெறிமுறைகளையும், ‘இந்திய’ என்ற அடைமொழி நோக்குநிலை குறித்த மனோபாவத்தையும் ‘இலக்கியம்’ என்ற சொல் ஆய்வுக் களத்தையும் சுட்டுவதையும், ஒரு மொழி இலக்கியத்தின் வரலாற்றை, வரலாற்றுணர்வுடன், காண்பதையும் ஒரு மொழிக் குடும்பத்திற்குள்ளும், மொழி எல்லைகளைத் தாண்டியும், தம்முள் கொண்ட உறவுகளை, இடைத் தொடர்புகளை ஆராய்வது என்பதையும் இவை பிற நாட்டு இலக்கியங்களுடன் கொண்ட தொடர்புகளால், எதிர்ப்

படல்களால் பெற்ற மரபு மாற்றங்கள், வளர்ச்சி நிலைகள், மரபு எதிர்ப்புகள் போன்ற விளைவுகளையும் ஆராய்வதும் ஒப்பியல் இந்திய இலக்கியம் என்று விளக்குகிறது கட்டுரை.

“ஒப்பிலக்கிய நோக்கில் இலக்கியத் தோற்றம்”
(தமிழ் மாருதம் இதழ்களில்)

காலம் தோறும் கருத்து நிலை மாறுதல்களுக்கு ஏற்ப் இலக்கியத் தோற்றம் பற்றிய கோட்பாடுகளும் மாற்றம் அடைந்துள்ளன. ஒப்பிலக்கிய நோக்கில் இலக்கியத் தோற்றம் பற்றி

1. ஒப்பிலக்கியக் கொள்கைகளும் இலக்கியத் தோற்றமும்

2. உயிரியல் கொள்கைகளும் இலக்கியத் தோற்றமும்

3. உளவியல் கொள்கைகளும் இலக்கியத் தோற்றமும்

என்ற மூன்று நோக்கு நிலைகளில் இருந்து ஆராய்கிறது இக்கட்டுரை.

வாய்மொழி இலக்கியங்களில் இருந்து வரி வடிவ இலக்கியம் தோன்றியது. தேசிய மரபும், காரண கரியத் தொடர்பும், இடைத் தொடர்புகளும், ஆற்றல் மிக்க போக்குகளும், இயக்கங்களும், பிறப்புறவுகள், மொழி பெயர்ப்பு, போன்மையாக்கம், நடைப்பாங்கு, கடன் பெறல், இலக்கிய மூலங்கள், ஏற்பு, இலக்கியக் கருத்துத் தொடர்பு, இலக்கியத் திருட்டு, தழுவல், எதிர்மறைத் தாக்கம், நையாண்டி (Parody), கிண்டல் (Burlesque), ஒட்டுச் சேர்க்கை (Pastiche), தாக்கங்களின் பதினொரு வகைகள் போன்ற பல ஒப்பிலக்கியக் கோட்பாடுகளின் அடிப்படையில் இலக்கியத் தோற்றத்தை விளக்குகிறது கட்டுரை.

லாமார்க் சுட்டும் சூழலுக்கு ஏற்ப உயிர்கள் மாற்றம் அடைதல், உறுப்புகளைப் பயன்படுத்தாதிருத்தல்/ அதிகம் பயன்படுத்துதல் மூலம் அவ்வுறுப்புகள் பெறும் மாற்றங்கள், பெற்ற மாற்றங்கள் அடுத்த தலைமுறைக்கு தொடர்தல், மாற்றங்களின் வகைகள் போன்ற அடிப்படையில் இலக்கிய மாற்றங்களையும் புதிய வரவுகளையும் காணலாம். அதே போல டார்வினின் பரிணாமக் கொள்கை அடிப்படையிலும் இலக்கியத் தோற்றம் வளர்ச்சி, கிளைத்துப் பரவுதல், தளர்ச்சி, வீழ்ச்சி போன்றவற்றையும் காணலாம் என்கிறது கட்டுரை.

விருப்பப் புனைவுகள், ஆசை நிறைவேற்றம், பகற்கனவு, இயல்பு ஊக்கங்களான வாழ்வுந்துதல், சாவுந்துதல், ஆதிக்கம் செலுத்தவேண்டும், தாக்க வேண்டும் என்ற உந்துதல்கள், சுதந்திரம், பெரிய ஒன்றுக்கு அடிமையாகுதல் போன்ற பல உளவியல் காரணிகள் இலக்கியத் தோற்றத்திற்குக் காரணம் ஆகலாம், யுங், நார்த்ரோப்பிரை போன்றோர் கூறும் தொன்மம், தொல்படிமங்கள், மாசுலோ போன்றோர் கூறிய தேவைகளின் அடிப்படைகள் போன்ற பல உளவியல் கூறுகளும் இலக்கியத் தோற்றத்திற்கு காரணம் ஆகலாம் என்கிறார் கட்டுரையாளர்.

"இலக்கியமும் நுண் கலைகளும்"
(ஆய்வுச் சிந்தனைகள்-ஐந்தமிழ் ஆய்வாளர் மன்றம், மதுரை, 1997)

இலக்கியத்தை இலக்கியமில்லாத பிற கலைகளுடனும், பிற அறிவுத் துறைகளுடனும் ஒப்பிட்டுக் காண்பது ஒப்பிலக்கிய ஆய்வின் ஒரு முக்கியத் தளமாகும். இக்கட்டுரை இலக்கியத்தையும் நுண் கலைகளையும் இணைத்துக் காணும் வழிமுறைகளைச் சுட்டுகிறது. இது இருவகை அணுகு முறைகளைக் கொண்டது. இலக்கியத்தில் நுண்கலைகள் பெற்றுள்ள இடம்பற்றி ஆய்வது ஒன்று; ஒன்றால் ஒன்று பெறும் விளக்கம் - இலக்கியத்தால் பிற கலைகளும், கலையால் இலக்கியமும் வளமும் வளர்ச்சியும் பெற்ற தன்மைகளை ஆய்வது பிறிதொரு வகை

எனவும் மூன்றாவதாக இலக்கியக் கட்டமைப்பிற்கும் இக்கலைகளுக்கும் உள்ள ஒப்புமைகளை எடுத்தியம்புவது என இத்தளத்தை வகைபிரித்துக் காட்டுகிறது கட்டுரை.

ஓவியமும் சிற்பமும் இலக்கியத்திற்குத் தூண்டுதலாக அமைந்ததையும், இலக்கியங்கள் சிற்பங்களின் நுட்பம், கருத்து, கவின் ஆகியனவற்றைப் பெற்றுச் சிறப்பதையும் மேலை இலக்கியத் திறனாய்வாளர்கள் வழி விளக்குகிறது கட்டுரை. 'ஓவியத்தை ஓர் ஊமைக் கவிதை' என்றும் 'கவிதையே பேசும் சித்திரம்" என்றும் கருதிய காலின்ஸ் கூற்று, 'Ut Pictura Poesis' — ஹோரசின் கூற்று; 'கவிதை பேசும் சித்திரம்' - சைமனாய்ட் கூற்று இயற்கையின் இசைக்கு எதிர்ப்பாட்டாக அமைவதே கவிதை' 20ஆம் நூற்றாண்டு பால்கிளீயின் இயற்கைக் காட்சி ஓவியங்களுடன் இணைநிலைகள் கொண்டிருப்பது - கவிதையின் பிரதிபலிப்பென ஸ்டீபன் ஸ்பெண்டரின் கருத்து - மேரி கைதரின் முவ்வகைப் பார்வைகள் - வெர்ஜில் ஏனெய்டில் குறிப்பிடும் லாகூன் தொன்மக் கதை - ரோமில் 1506இல் அகழி ஆய்வில் கிடைத்த லாகூன் சிற்பத்திறன் இரண்டுக்கும் உள்ள உறவு என்ற கூறுகளின் அடிப்படையில் கட்டுரை விரிகிறது. இங்கெல்லாம் ஓவியம் சிற்பம் போன்ற நுண்கலைகளுக்கும் இலக்கியத்திற்கும் உள்ள உறவுகள் சுட்டப் படுகின்றன.

அடிக்கருத்துகளும் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படும் தொடர்குறிப்பும் (Leit motif) இசையில் பயின்று வரும் தொடர்குறிப்பு போன்றதே. இலக்கிய வகை ஆய்வைக் காலப்பகுப்பு அடிப்படையில் காண்பது போல ஒரு குறிப்பிட்ட கலையையும் வரலாற்று அடிப்படையில் காணும்போது இரண்டுக்கும் உள்ள தொடர்பு, பரிணாம வளர்ச்சி இணைநிலைகளைக் காணலாம் என்றும் இசையும் நடனமும் இலக்கியத்துடன் கொண்ட தொடர்பும் இணைநிலையும் தொல்காப்பியர் சுட்டும் இலக்கிய மெய்ப்பாடுகள்-பரத முனிவரின் நாட்டிய, நாடக மெய்ப்பாடுகள், அரிஸ்டாடிலின் கவிதையியல் விளக்கம் நாடகச் சுவை பற்றிய கருத்துகளுடன் ஒப்பிட்டு

ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டு தமிழுக்கே உரிய இலக்கியக் கொள்கைகளை நிறுவ முடியும் எனல் என்று விரியும் கட்டுரை இலக்கியத்தையும் நுண்கலைகளையும் இணைத்துக் காணும் பதினைந்து அடித்தளங்களை எடுத்துரைக்கிறது. இவ்வணுகு முறைகள் மேற்கொண்டு ஆய்வு செய்ய விழையும் மாணவர்களுக்கு உதவும் எனலாம்.

"ஏற்பு - செல்வாக்கு - தாக்கம் - வேறுபாடுகளும் சார்புகளும்" (கலை இலக்கியம் - ஆய்வும் அணுகுமுறைகளும் - ஐந்தமிழ் ஆய்வாளர் மன்றம் - மதுரை)

இலக்கிய ஏற்பு, செல்வாக்கு, தாக்கம், என்றால் என்ன என்ற அறிமுக விளக்கமும் இம்மூன்று ஒப்பிலக்கியக் கோட்பாடுகளும் எவ்வாறு தொடர்புடையன என்றும் விளக்கும் இக்கட்டுரை ஏற்பிற்கான புறச் சூழல்கள், காரணங்கள், ஏற்பு செல்வாக்கை உருவாக்குதல், பிறிதொரு ஆசிரியரின் செல்வாக்கினால் உள்நாட்டுப் படைப்பாளி தாக்கதத்திற்கு ஆட்படுதல், இத்தாக்கத்தின் விளைவாக அவனது புதிய படைப்பு உருவாதல் எனறு அடுத்தடுத்த படிநிலைகளை விளக்குகிறது.

ஏற்பும், ஏற்பிற்குக் காரணமான இடைத்தொடர்புகளும் இலக்கியம் (Text) சம்பந்தப்பட்டது. ஆனால் தாக்கம், மனம்-உணர்வு சம்பந்தப்பட்டது. ஒரு புதிய படைப்பைப் படைப்பதற்கான மன எழுச்சிக்கும் காரணமாக அமைவது. படைப்பாக்கத்தின் பொழுது படைப்பு வழிமுறைகளில் செயல்படக் கூடிய உளவியல் காரணியே தாக்கம். இது கருதத்தியல் ரீதியானது என்று வேறுபடுத்தி விளக்குகிறார் கட்டுரையாளர்.

"இலக்கிய வரலாற்று வரைவியல்"

ஒப்பிலக்கிய ஆய்வுகளில் நான்கு முதன்மையான போக்குகள் குறிப்பிடத்தக்கவை.

1. வரலாற்று வரைவியல் (Historiograpy)

2. இலக்கிய வகைகளின் தோற்றம் பற்றிய ஆய்வு (Geneology)

3. அடிக்கருத்து ஆய்வு (Themetology)

4. மூலமும் தாக்கமும் இடைத்தொடர்புகளும், இணை நிலைகளும் பற்றிய ஆய்வு. இவற்றுள் இக்கட்டுரை இலக்கிய வரலாற்று வரைவியல் பற்றி விளக்குகிறது. "குறிப்பிட்ட மொழியில் குறிப்பிட்ட கால கட்டத்தில் குறிப்பிட்ட மனித சமூதாயத்தில் நிகழ்ந்த இலக்கிய நிகழ்வுகளையும், அந்நிகழ்வுகளுக்கு இடையே உள்ள உறவுகளையும் வரலாற்றுப் பார்வையுடன் எழுதுவதே இலக்கிய வரலாற்று வரைவியல். இலக்கியவரலாற்று வரைவியலுக்கு அடிப்படையான நான்கு கொள்கைகளை ஸ்பில்லர் வழி எடுத்துக் காட்டுகிறார் கட்டுரையில். அவை:

    1. விரிவான முறை இலக்கியவரலாறு;

    2. மூலமும் செல்வாக்கும் பற்றிய அடிப்படையில் இலக்கியவரலாறு;

    3. படைப்பாசிரியர் அனுபவ அடிப்படைக் கோட்பாடு;

    4. படைப்பின் அடிப்படைகள் பற்றிய கோட்பாடு.

படைப்பாக்கத்திற்கான அடிப்படைகளையும்

1. கருத்துநிலை;

2. சமூகத்தின் பண்பாடு;

3. நிறுவனங்கள்;

4. மரபும் தொன்மமும்;

ஆகிய நான்காக வரிசைப்படுத்தும் கட்டுரையாளர் இலக்கிய வரலாற்றின் நோக்கு நிலைகளை 6 வகைகளாகப் பிரித்துக்காட்டுகிறார்.

1. படைப்பாசிரியரின் வாழ்க்கை வரலாறு;
2. மூலமும் செல்வாக்கும் பற்றிய வரலாறு;
3. சூழமைவுகள் இலக்கியப் போக்குகளின் மன மாற்றத்திற்குக் காரணமாவதை ஆராய்வது;
4. இலக்கிய வகைகளின் தோற்றம் வளர்ச்சி, மலர்ச்சி, தளர்ச்சி பற்றி ஆய்வது;
5. சில இலக்கியக் கூறுகளின் - ஒரு குறிப்பிட்ட பாத்திரப்படைப்பு, தொடர் உருவகம், குறியீடு படிமம் போன்ற ஏதேனும் ஒரு இலக்கிய உத்தி - ஆகியவற்றின் வரலாறு;
6. சிந்தனைகளின் - கருத்தமைவுகளின் வரலாறும் சமூக, பண்பாட்டு வரலாறும். இவற்றின் விளக்கங்களும் எடுத்துக்காட்டுகளும் கட்டுரையில் தரப்பட்டுள்ளன.

"மொழிபெயர்ப்பும் இலக்கிய வகை வளர்ச்சியும்"

எந்த ஒரு இலக்கியமும் சூனியத்தில் இருந்து தோன்றிவிட முடியாது. தனக்கு முன்னே உள்ள பல இலக்கியங்களில் இருந்து சில பல கூறுகளை எடுத்துக்கொண்டு, தம் தேவைக்கு ஏற்ப அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளும் படைப்பாசிரியர் ஒரு புதிய இலக்கியத்தைப் படைக்கிறார். இவ்வாறான புதிய இலக்கிய வகைகள் தோன்ற மொழிபெயர்ப்பும் ஒரு காரணியாவதை இக்கட்டுரை சுட்டுகிறது. தமிழ் நாவல், நாடகம், கவிதை ஆகிய இலக்கிய வகைகளின் போக்குகளில் மாற்றத்தை ஏற்படுத்தி

இலக்கிய வகை வளர்ச்சிக்கு உறுதுணையாக மொழி பெயர்ப்புகள் அமைந்துள்ளன எனக் கூறும் கட்டுரை, நாவல் இலக்கிய வகை வளர்ச்சியில் ஆங்கிலத்திலிருந்தும், பிரெஞ்சிலிருந்தும், வங்க மொழியிலிருந்தும் மொழிபெயர்க்கப்பட்ட நாவல்களின் பங்கு குறிப்பிடத் தக்கது என விளக்குகிறது. வங்க மொழிபெயர்ப்புகளை அன்றைய வார இதழ்கள் மாத இதழ்கள் வெளியிட்டமையும். இந்த மொழிபெயர்ப்புகள் தமிழ் மக்களிடையே அதிகம் பரவவும் காரமாயிற்று. பக்கிம்சந்திரரின் ஆனந்தமடம் ம. குப்புசாமி ஐயர், திருச்சிற்றம்பலம் பிள்ளை, த.நா. குமாரசாமி, கு.ப. ராஜகோபாலன் ஆகிய பலராலும் வெவ்வேறு மொழிபெயர்ப்புகளாக வந்தமை வாசகர்களின் ஏற்பையே சுட்டுகிறது என்கிறது கட்டுரை. தாகூர், சரத்சந்திரர், விபூதிபூஷன் பானர்ஜி முதலியோரது படைப்புகளும் மொழிபெயர்ப்பு மூலம் தமிழ் வாசகரை வந்தடைந்தன. இவை தமிழ் வாசகரின் இரசிகத்தன்மையையும் நாவலாசிரியர்களின் படைப்பாக்கத் தன்மையையும் மாற்றியமைத்தன. வங்கநாவல்களின் குடும்பப் பின்னணி, பாத்திரப்படைப்புகள், உணர்ச்சி மோதல்கள், ஆழமானகாதல், காதலுக்காக உறவைத் தியாகம் செய்தல், குடும்ப உறவுகளிடையே நெருக்கமான பாசம், யதார்த்தநிலைச் சித்திரிப்புகள் ஆகியவை தமிழ்நாவல்களிலும் இடம் பெற்றன. இவற்றால் தாக்கம் பெற்றவர்களாகப், பி.வி. ஆர் போன்றோரைச் சுட்டலாம் என்கிறது கட்டுரை. கவிதை மொழி பெயர்ப்பினால் தமிழ்க்கவிதையில் புதிய இலக்கியவகை எனும் அடிப்படையில் ஹைகூவைக் குறிப்பிடுகிறது கட்டுரை. ஜப்பானிய ஹைகூவின் ஆங்கில மொழிபெயர்ப்புகளையும் (R.H. பிளித்) தமிழில் தந்தவர்களுள் சுஜாதா பாரதியார், லீலாவதி போன்றோரைச் சுட்டும் கட்டுரை, தமிழிலும் ஹைகூவின் போன்மையாக்கங்களும் தழுவல்களும், வர ஆரம்பித்ததைச் சுட்டி மொழிபெயர்ப்பு மூலம் கவிதைவடிவில் புதிய வரவாக வந்தது ஹைகூ எனக் காட்டுகிறது.

நாடக மொழிபெயர்ப்புகள் மூலம் தமிழில் ஏற்பட்ட புதிய நாடக வகைகளையும் கட்டுரை சுட்டிக் காட்டுகிறது.

மொழிபெயர்ப்பு எனும் அடிப்படையில் ஒரே நூலின் பல மொழிபெயர்ப்புகள் பற்றிய ஒப்பீட்டு ஆய்வு மொழிபெயர்ப்புகள் ஏற்படுத்திய தாக்கம்பற்றிய ஆய்வு என்ற நிலைகளில் ஒப்பீட்டு ஆய்வுக் களத்தின் புதிய பரிமாணங்களை விளக்குகிறது இக்கட்டுரை.

''பிள்ளைத்தமிழ் - இலக்கியவகை வளர்ச்சியில் குமரகுருபரின் பிள்ளைத் தமிழ் நூல்களின் இடம்''

இலக்கிய வகை வளர்ச்சி நோக்கில் தமிழில் தோன்றியுள்ள 'பிள்ளைத்தமிழ்' -எனும் இலக்கிய வகையின் வளர்ச்சி நிலைகளைக் குறித்தும் அவ்வளர்ச்சிப் படிநிலைகளில் குமர குருபரரின் பிள்ளைத்தமிழ் நூல்கள் பெறும் இடம் பற்றிக் கணித்தும் கூறுகிறது இக்கட்டுரை. இது இரு பகுதிகளைக் கொண்டது. முதற்பகுதி 'பிள்ளைத்தமிழ்' எனும் இலக்கிய வகையின் மூலக்கூறு இலக்கியங்களில் வளர்ச்சி பெற்றமை, பக்தி இயக்கக் காலகட்டத்தில் அதன் வளர்ச்சிநிலை, தனியொரு இலக்கிய வகையாகப் பரிணமித்த நிலை, கிளைகளாக ஆண்பாற் பிள்ளைத்தமிழ் பெண்பாற் பிள்ளைத்தமிழ் எனவும் ஆண்பால் பிள்ளைத்தமிழின் மறுகிளைகளாக ஆண் கடவுள் பிள்ளைத்தமிழ், சமுதாயத்தலைவர்கள் பிள்ளைத் தமிழ், அரசியல் தலைவர்கள் பிள்ளைத்தமிழ் என்று இன்றுவரை வளர்ச்சி பெற்றமை, பெண்பாற் பிள்ளைத் தமிழிலும் பெண் தெய்வங்கள் பற்றிய பிள்ளைத்தமிழ், ஆரசியல் தலைவிகள் பற்றிய பிள்ளைத்தமிழ் எனக் கிளைத்து 150-160க்கும் மேற்பட்ட பிள்ளைத் தமிழ் நூல்கள் உருவாகியமையைச் சுட்டுகிறது.

பிள்ளைத் தமிழின் மறு கைக் கிளைகளாக, குழமகன் (பிள்ளைத்தமிழ்+உலாவின் கூறுகள்) சுப்பிரமணியக் கடவுள் க்ஷேத்திரக் கோவைப்பிள்ளைத் தமிழ் (பிள்ளைத் தமிழ் + கோவை இலக்கணம் + சிவபுராணக் கூறு), பெயரளவில் மாற்றம் கொண்டுள்ள பிள்ளைத் திருநாமம், பிள்ளை இன்பம் போன்றனவற்றைச் சுட்டுகிறது கட்டுரையின் முதற்பகுதி.

இரண்டாம் பகுதியில் குமரகுருபரருக்கு முன்பே பிள்ளைத் தமிழ் நூல்கள் பல தோன்றியிருப்பினும் ஆண்பாற் பிள்ளைத் தமிழாகிய முத்துக் குமாரசாமிப் பிள்ளைத் தமிழும் பெண்பாற் பிள்ளைத் தமிழாகிய மீனாட்சி அம்மைப் பிள்ளைத்தமிழும் தெ.பொ.மீ. போன்றவர்களால் சிறப்பித்துக் கூறப்பட்டதையும் அப்பிள்ளைத்தமிழ் நூல்களின் சிறப்பியல்புகளையும் எடுத்துரைக்கிறது. மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழில் மதுரையுடன் தமிழை இணைத்துக் காட்டுவதையும் மதுரையின் சிறப்பு மீனாட்சியின் அவதாரத்தால் அமைந்ததாகக் கூறுவதையும் முத்துக் குமாரசாமிப் பிள்ளைத் தமிழில் முருகனைத் தமிழுடன் இணைத்துக் கூறுவதுடன் முருக தத்துவத்தையும் விளக்குவதையும் கூறி, குமரகுருபரரைப் பொறுத்தவரை முருகனும் சிவனும் ஒன்றே என்ற கருத்தையும் எடுத்துக் காட்டுகிறது கட்டுரை.

“கவசம் : ஓர் இலக்கிய வகைப் பார்வை”

இலக்கியவகை என்பது என்ன என விளக்கி, கவசத்தை ஓர் இலக்கிய வகையாகக் கொண்டு அதன் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிக்காணும் இக்கட்டுரை அடிப்படை ஆதாரமாகச் சண்முக கவசம், கந்தர்சஷ்டி கவசம், விநாயக கவசம், நாராணண கவசம், ஸ்ரீதேவி கருமாரி அம்மன் கவம், சக்தி கவம், சிவகவசம் ஆகிய நூல்களைச் சுட்டுகிறது.

“இரட்சையை உண்டாக்குவதாய், சுலோக ரூபமாயுள்ள மந்திர விசேடம்,'' “காவற்பண்ணு மந்திரம்' என்ற சொற்பொருள் விளக்கங்களின் அடிப்படையில், புறத்தலிருந்து வரக்கூடிய துன்பங்களில் இருந்து காக்கக்கூடிய மந்திரமாகக் கவச இலக்கியத்திற்கு விளக்கம் தருகிறார் கட்டுரையாளர்; கவசத்தின் மூலக் கூறைக் கோளாறுபதிகத்திலும் காணலாம் என்கிறார். மந்திரம் - திருமந்திரம் - பக்திப்பாடல்களின் காக்கும் தன்மை - திருக்கடைக்காப்பு - காப்புச் செய்யுள் - பிள்ளைத் தமிழ் நூல்களின் காப்புப்பருவம், காப்பு மாலை என்ற பிரபந்த வளர்ச்சி - (தெய்வம் காக்க என மூன்று, ஐந்து ஏழு செய்யுட்களில்

மொழிவது) தண்டபாணி சுவாமிகளின் 'பசுக்காப்புமாலை' (பசுவாகிய உயிரினைக் காக்க இறைவனை வேண்டிப்பாடும் 25 கொச்சகக் கலிப்பாவால் ஆனது)யின் வளர்ச்சி, ஒரு பெரு நூலின் பகுதியாக (திருபுவன சிவபுராணத்தில் வில்வகவசம், பிரம்மோத்திர காண்டத்தில் சிவகவசம், பாகவதத்தில் நாராயண கவசம்) கவசம் அமைதல்; 18ஆம் நூற்றாண்டில் கவசம் என்ற தனிவகையாக முழுமை பெறல்; 20ஆம் நூற்றாண்டு வரை கவசத்தின் தொடர்ச்சி -கவசம்-முருக கவசம் பல்கிப் பெருகுதல்-கண்ணதாசனின் ஸ்ரீகிருஷ்ணகவசம்-கவசத்தின் பாடுபொருள்- விநாயகவசத்தினின்றும் முருக கவசங்கள் மாறுபடுவது-கவச வகையில் யாப்பு மாற்றங்கள்-வரைமுறைப்பட்ட முதிர்ச்சி காணல் என அமைகிறது கட்டுரை.

"தமிழில் பாவைப் பாடல்கள் - ஒப்பாய்வு"

இக்கட்டுரையும் இலக்கியவகை வளர்ச்சி நோக்கில் தமிழில் தோன்றியுள்ள பாவைப் பாடல்களின் வளர்ச்சி நிலைகளை எடுத்துக்காட்டி ஒப்பிடுகிறது. கட்டுரையின் இருபகுதிகளுள், முதற்பகுதி பாவைப் பாடலின் மூலக்கூறு எது?. இம்மூலக் கூறு எவ்வாறு காலம் தோறும் வளர்ச்சி பெற்று முழுமை அடைந்துள்ளது. தனிவகையாக நிலைபெற்று அதன்கிளை வகைகள் எவ்வாறு பல்கிக் கிளைத்தன என்றும் அதன் இன்றைய நிலை என்ன என்றும் விளக்குகிறது. இரண்டாவது பகுதி தமிழில் காணப்படும் சைவ, வைணவ, இசுலாமிய, கிறித்தவ, சமண சமயச் சார்புடைப் பாவைப்பாடல்கள் பற்றிக்கூறி அவற்றின் அடிக்கருத்துகள், அடிக்கருத்துகளை அரண் செய்யும் புனைவுக் கூறுகள் ஆகியவற்றை ஒப்பிட்டும் காண்கிறது.

பாவைப் பாடல்களின் நோக்கம், பயன், பாவை நோன்பு ஆகியன விளக்கப்படுகின்றன. பாவைப் பாடலின் மூலத்தைத் தொல்காப்பியத்தில் நேரடியாகக் காணமுடியாது. எனினும் கொச்சக ஒருபோகிற்கு இலக்கணம் கூறும் நூற்பா உரையில் பேராசிரியர் "சிறுபான்மை பாவைப்பாட்டும் அம்மானைப் பாட்டும் முதலாயின நான்கு அடியின் இகந்து வருவனவாயின" என்றும்,

''சிற்றெல்லையாகிய பத்தடியளவும், பாவைப் பாடலும், அம்மானைப் பாடலும் போலும் தரவு கொச்சகம் வரும்'' என்றும் விதி வகுப்பதையே மூலமாகக் கொள்ளலாம் என்கிறார் கட்டுரையாளர். தனக்கெனத் தனி மூலக்கூறைப் பெறாவிட்டாலும் 'கடவுள் மாட்டு நயந்த பக்கம்' பற்றிய கருத்தும், 'துயிலெடை நிலை பற்றிய கருத்தும்' பாவைப் பாடல்களுக்கான மூலங்கள் எனவும் பாவைப்பாடலுக்கான சான்றுப்பாடல்களாகச் சங்க இலக்கியத்தில் நற்றிணை 11, அகநா 181, ஐங் 2, கலித் 59, பரிபாடல் ஆகியன (தைநிநீராடல் பற்றியன) அமைகின்றன எனவும் கூறுகிறது இக்கட்டுரை. நற்றினைப் (50) பாடல் தனக்குத் தழையும் மாலையும் முன்பு இத்துறையில் தந்த காதலனே தனக்குக் கணவனாக அமைதல் வேண்டும் என நினைத்துத் தைந்நீராடும் மங்கையைக் காட்டுகிறது. சங்கப்பாடல்களில் சமயச் சார்புகள் இன்றி அமைந்த ஆரம்பநிலையிலிருந்து மாறிப் பின்னர் பரிபாடலில் சமயத் தொடர்புடன் கூடிய அம்பாவாடலாக மாறியதை எடுத்துக் காட்டுகிறார் கட்டுரையாளர். (பரி11) தைந்நீராடல் மாணிக்கவாசகரின் திருவெம்பாவை, ஆண்டாளின் திருப்பாவை - மார்கழி நீராடல்; அருக தீர்த்தங்காரரின் புகழ்பாடும் அவிரோதநாதர் இயற்றிய சமணத்திருப்பாவை, பெருஞ்சித்திரனாரின் செந்தமிழ்ப்பாவை - யோகி சுத்தானந்த பாரதியாரின் தமிழ்த் திருவெம்பாவை-இவற்றைப் பாடுபொருள் மாற்றத்தால் எழுந்த பாவைப் பாடல்களின் கிளை வகை எனலாம். கண்ணதாசனின் தைப்பாவை - தை மாதத்தையே பெண்ணாக உருவகித்துப் பாடியது - கா.மு. ஷெரீபின் நோன்புப்பாவை' (ரமலான் நோன்பு பற்றிய பாவைப்பாடல்கள்-15) காரை இறையடியானின் திருவருட்பாவை (30 பாடல்கள்) கிறிஸ்தவப்பாவைப் பாடல் வளர்ச்சி- இறையரசன் இயற்றிய 'கன்னிபப்பாவை' (10 பாடல்கள்) எனத் தமிழில் பாவைப் பாடல்களின் வளர்ச்சியை 20ஆம் நூற்றாண்டு வரைக் காண முடிகிறதை எடுத்துரைக்கிறது.

பிற பாவைப்பாடல்கள் தோன்ற முன்னுதாரணமாகத் திகழும் திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்களின் மையக் கருத்து - அடிக்கருத்து - மார்கழித் திங்களில் துயிலெழுந்து வைகைறை

நீராட வரும்படி அழைத்தல். இதை அரண் செய்ய துயிலெழுப்புதல் எனும் தலைமைப் புனைவுக் கூறு துயிலெழுப்பும் பொழுதை உணர்த்தும் விடியல் வருணனை, புலரிக் காட்சி ஆகியன துணைமைப் புனைவுக் கூறுகளாக அமைந்துள்ளன.

மழையை வேண்டல் என்ற அடிக்கருத்தை வலியுறுத்த மழை மேகம், மின்னல், மேகமுழக்கம் ஆகியவற்றிற்குத் தத்தம் மதச்சார்புடன் உவமை தந்து மழையை இறைவியின் இன்னருளாகவும் திருமாலின் அம்பாகவும் காட்டும் புனைவுக் கூறுகள் இடம்பெறுகின்றன. இறைவனைப் போற்றுதல், சிவனடியாரிடம் அன்பு கொள்ளத்தூண்டுதல், துயிலெழுப்பல், நீராட அழைத்தல், இறைவனின் அன்பைப்பெற வேண்டிப் பெண்களை அழைத்தல் போன்ற கூறுகள், பிறசமய பாவைப் பாடல்களிலும் அமைந்துள்ளதை ஒப்பிட்டுக் காட்டுகிறது கட்டுரை.

"தமிழ் பக்தி இலக்கியமும் இசுலாமியர் வளர்த்த புதிய இலக்கிய வகைகளும்"

இசுலாமிய மெய்ஞ்ஞானக் கவிஞர்கள் தம் சமயக் கருத்துகளையும் நபிநாயகம் வழங்கிய ஹதீசுகளையும் தமிழ்ப்பாக்களில் தர முனையும்போது ஏற்கனவே உள்ள, தமிழ் பக்தி இலக்கிய வகைகளையும் வடிவங்களையும் அப்படியே ஏற்று, பாடுபொருளையும் பாட்டுடைத் தலைவர்களையும் மட்டும் தம் சமயச்சார்புடன் மாற்றிப்பாடிய தன்மைகள் விளக்கப்படுகின்றன. பட்டினத்தார் தாயுமானவர் இருவரது பாடலமைப்பும் நடைப்பாங்கும், பொருட் புலப்பாட்டுத் தன்மையும் பீர் முகம்மது அப்பா, மஸ்தான் சாகிபு பாடல்களில் பிரதிபலிப்பதைக் காட்டுகிறது இக்கட்டுரை. 'தமிழ்க் கடலைக் கடைந்து கோவை பாடுவது" என்பதற்கேற்ப அமைந்துள்ளது, சதாவதானி பாவலரின் சம்சுத்தாசீன் கோவை- சம்சுந்தாசீன் என்ற பாட்டுடைத் தலைவனின் பெயரை நீக்கிவிட்டுப் பழந்தமிழ் அறிந்தோரிடம் காட்டினால் இவை திருக்கோவைப் பாக்களாகவோ தஞ்சை

வாணன் கோவையாகவோ இருக்கலாம் என்று தான் கூறுவர் என்ற மு.அப்துல் ஹமீமின் கூற்று பொருந்துமாற்றை விளக்குகிறது. பழைய தமிழ் இலக்கிய வடிவங்களை ஏற்றாலும் இசுலாமியப் புலவர்கள் தம் சமயக் கொள்கைக்குப் புறம்பாகப் பாடுவது இல்லை. (எ.டு) பிள்ளைத் தமிழ் காப்புப் பருவத்திற்கும் ஓரிறைக் கொள்கையில் பிடிப்புடைய இசுலாமிய பிள்ளைத் தமிழ் நூல்களின் காப்புப் பருவத்திற்கும் உள்ள வேறுபாடு -இங்கு அல்லா ஒருவரையே பாடும் நிலை, பின்னர் வந்த பிள்ளைத்தமிழ் நூல்களிலேயே அல்லா, நபிகள் நாயகம், நாயகத் தோழர்கள், இறைஞானச் செல்வர்கள் ஆகியோரைப் புகழ்ந்து குழந்தை முகைதீனுக்கு அவர்கள் அருளவேண்டும் என்ற அமைப்பு காணப்படுகிறது. இது தமிழ் மரபைச் சார்ந்த வளர்ச்சிநிலை என எடுத்துக் காட்டுகிறது கட்டுரை. கலம்பகத்தைப் பாடும்போதும் இதுபோன்ற சில கூறுகளைத் தவிர்த்துள்ளனர். உலா எனும் தனி பிரபந்தத்தை இவர்கள் பாடவில்லை ஆயின் காப்பியம் போன்ற பிற இலக்கிய வகையின் உட்கூறுகளாக உலா இடம் பெற்றுள்ளது. எனத் தமிழ் பக்தி இலக்கிய வகைகளை இசுலாமியர் ஏற்றுக்கொண்டு அவற்றைப் போன்மையாக்கம் செய்தும், தழுவியும் புதிய படைப்புகளைத் தந்துள்ளதைக் கட்டுரை கூறுகிறது) (அத்துடன் தமிழில், இதுவரை அறிமுகம் இல்லாத சிற்றிலக்கிய வகைகளான கிஸ்ஸா, படைப்போர், மஸ்லா, முனாஜாத்து, நாமா ஆகியவற்றைத் தமிழுக்கு அவர்கள் அளித்தமையை எடுத்து இயம்புகிறது கட்டுரை. இது பிறநாட்டுப்படைப்பாளிகள் தாம் அறிந்த இலக்கிய வகைகளைத் தம்முடன் தாம் செல்லும் நாட்டிற்கு எடுத்துச் செல்வதுடன் அவ்வகைகளை உள்நாட்டு மொழியில் அறிமுகப்படுத்துவதும் இலக்கிய வகைப் பரவலுக்குக் காரணமாகும் எனும் ஒப்பிலக்கிய அறிஞர்களின் கூற்றுக்கு நல்ல எடுத்துக்காட்டு என்கிறார் கட்டுரையாளர்.

"பரணியும் படைப்போரும்"

பரணியின் இலக்கணங்கள் - தொல்காப்பியக் காலத்து மூலவித்து-

"ஆயிரம் யானை அமரிடை வென்ற
மானவனுக்கு வகுப்பது பரணி" (இலக்.விளக். 838)

எனும் நூற்பா - புறப் பொருண்மையும் அக்ககூறுகளும் கொண்ட நாடகக்காட்சிகளின் கோவைபோல அமையும் இச்சிற்றிலக்கியத்தின் தோற்றத்தைப் புறப்பாடல்களில் காணமுடியும் - பாடப்படும் மன்னனின் போர்க்கள வெற்றியைப் பாடிய செய்திகள் - வாகையின் முன் தேர்க் குரவை, பின் தேர்க்குரவை ஆகியன- 'களிறு எறிந்தோர் எதிர்த்தோர்படும்' களிற்றொடுபட்ட வேந்தனை அட்ட வேந்தன் வாளோர் ஆடும் அமலையும் எனச் சுட்டப்படும் தும்பையின் பகுதிகள், மறக்கள வழி, மறக்கள வஞ்சி, செருக்கள வஞ்சி, தானை மாலை, வஞ்சி மாலை போன்ற போர்ச் சார்புடைத் துறைகள் ஆகியன பரணி இலக்கிய வகை வளர்ச்சியின் முன்னோடிகள் (வகைமுன் வளர் நிலை- கி.ராஜா) - புறநானூறு → பதிற்றுப்பத்து → களவழி நாற்பது பரணியின் வளர்ச்சி → பரணியின் உறுப்புகள் என பரணி முழுமையடைந்த, இலக்கிய வகையான வடிவம் பெற்றதைக் கட்டுரையின் முதற்பகுதி சுட்டுகிறது. பரணியின் வகைவளர்ச்சியில் கிளை வகைகளாகத் தெய்வங்களுக்கு உரிய பரணியாக மாறியமையும் → எதிர்க்கப்பட வேண்டியது அஞ்ஞாமையாகிய இருளே என்று கூறும் ஞான வதைப் பரணி எனப் பாடுபொருள் மாற்ற அடிப்படையில் கிளைத்தமை - பிற்காலத்துச் சீனத்துப்பரணி - வங்கத்துப்பரணி - (காசுமீரத்து) போர்ப் பரணி என மறுகிளைகளின் தோற்றம் பற்றியும் விளக்குகிறது கட்டுரை.

இசுலாமிய படைப்போர் எனும் இலக்கிய வகையை இப்பரணி இலக்கியத்துடன் ஒப்பிட்டுக் காட்டுகிறது கட்டுரையின் இரண்டாவது பகுதி. இரண்டுக்கும் உள்ள வேறுபாடுகளும்

எடுத்துரைக்கப்படுகின்றன. கடவுள் வாழ்த்தில் வேறுபாடு, பரணியின் உறுப்புகளில் ஒன்றான போர் பாடியதை மட்டுமே பாடிப் பிற உறுப்புகளுக்கு முக்கியத்துவம் அளித்துப் பாடாமை, போர்முடிவு, காளிக்குக் கூளி கூறியதைப் பாடாமை-அதை மாற்றி உச்சிப் படைப்போரின் படை வீரர்களே 'பாரும்-பாரும்' எனக் காட்டுவதாக அமைத்தமை - இது களம்பாடியது எனும் உறுப்பில் காளிதேவி வாயிலாகப் போர்நிகழ்வுகளை நமக்கு அறிமுகப் படுத்துவதாக அமைந்த பகுதிக்கு ஏற்ப விளங்குவது என ஒற்றுமை வேற்றுமையை எடுத்துக்காட்டுகிறார். வேற்றுமைகளுக்கான காரணம் இசுலாமியப் புலவர்கள் தம் சமயக் கோட்பாடுகளை மீறாமல் பாடிய தன்மையே என விளக்குகிறார்.

"என்பதுகளில் சிறுகதைகளில் மனிதநேயம்"

இலக்கிய வகைகள் பற்றிய ஒப்பிலக்கிய அறிஞர்களின் கருத்துப்படி 'இலக்கிய மரபின் வேகமான மாற்றங்கள் நிகழ்வதற்கு ஏற்ப," ஒவ்வாரு ஐம்பதாண்டிற்கு ஓர் இலக்கிய வகை என்ற பரம்பரை அமைகிறது,'' ''இலக்கியக் காலக்கட்டங்கள் ஒரு பொதுவான போக்கையும் பண்பையும் கொண்டிருப்பதைக் காண இயலும்'' இவ்வகைப் பொதுப்போக்கு ஒரு தசாப்தத்தில் (10 ஆண்டுகளில்) எவ்வாறு இருந்தது என்பதைக் காணும் நோக்கில், 80களில் சிறுகதைகள் பற்றிய பாடுபொருள் மதிப்பீட்டாய்வாக இக்கட்டுரை அமைக்கிறது. மனித நேயம் (Humanism) என்பது சகமனிதனை நேயத்துடன் நோக்குவதுடன், அன்பு, அருள், இரக்கம், கொடைத் தன்மை ஆகிய பண்பு நலன்கள் கொண்டவனாக இருப்பதைக் குறிக்கும் எனும் கட்டுரையாளர், இர்வின் பப்பிட், பால் எல்மர் மோர் போன்ற புதிய மனித நேயக் கொள்கையினர் (Neo Humanist) வலியுறுத்திய சுயக்கட்டுபாடு, பகுத்தறிவு, நேர்நெறி ஆகியன மனிதனை மையப்படுத்தி, மனிதனை மனித நிலை கொண்டு கண்ட வளர்ச்சி நிலையைச் சுட்டுகிறார். கடவுள் மைய மனித நேயம் - மானிட மைய மனித நேயமாக மாறியதையும், கிறித்தவ மனித நேயத்தையும் பயனீட்டுக் கொள்கை அடிப்படையிலான மனித இனத்திற்கு நலன்பயக்கும்

தன்மையை அடிப்படையாகக் கொண்ட மனித நேயம்) மார்க்சிய மனித நேயம், பெண்ணிய நோக்கில் மனித நேயம் என மனித நேயத் தன்மைகளை, வளர்ச்சி நிலைகளை, மாற்றங்களை விளக்குகிறது கட்டுரையின் முதற்பகுதி. இரண்டாம்பகுதியில் இன்றைய சிறுகதைகளில் குறிப்பாக படைப்பாசிரியரின் மனிதநேயம், படைப்புகளில் காணப்படும் பாத்திரங்களின் மனித நேயம் என்ற இரு நோக்குகளில் ஆய்கிறது.

1. வாழ்வின் அவலத்தைச் சுட்டிக்காட்டுவன.
2. காரண காரிய முறையில் அமையாத வாழ்க்கை நிகழ்வுகளின் பாதிப்பை வெளிப்படுத்துவன.
3. மனிதன் இவ்வுலகில் இயற்கையின் தொடர்ச்சியான தன்னிலையை உணர்வது.
4. இயந்திர கதியில் இயங்கும் வாழ்க்கை ஏற்படுத்தும் குமட்டலை வெளிப்படுத்துவது.
5. உலகின் விரோதப்பாங்கு, காலமுரண், சாவின் நிச்சயம், ஆகியவற்றின் அடிப்படையிலான ஏமாற்ற உணர்வை வெளிப்படுத்துவது, வாழ்வின் சலிப்பை உணர்ந்து தற்கொலை செய்து கொள்வது / எதிர்ப்பது.
6. உலக விரோதப் பாங்கு தனிமனிதனின் மனித நேயத்திற்குச் சவாலாக அமைவது, எதிர் கொள்ளவது.
7. வாழ்க்கையை வாழ்ந்து பார்த்து விடுவோம் என்ற மனத் தின்மையுடன் எதிர் கொள்ளும் நிகழ்வுகளை விளக்குவது.
8. முரண் ஏற்படும்பொழுது இது இப்படித்தான் இருக்கும் என்ன செய்வது என உலகுடன் விரோதம் கொள்ளாது சமாதானப்படுத்திக்கொண்டு போவது/தலைவணங்கிப் போவது.

9. 'இவை யாவும் நாம் வாழ்க்கைக்கு அளிக்க வேண்டிய விலை' எனச் சமாதானமாகப் போவது -என்ற நிலைகளில் மனித நேயக் கோட்பாடுகளின் ஒவ்வொரு கூறையும் படைப்பாளிகள் தம் படைப்புகளில் அடிக்கருத்தாகப் பயன்படுத்தியிருப்பதைக் கட்டுரை விளக்குகிறது. பிரபஞ்சனின் 'பலி', மேலாண்மை பொன்னுசாமியின் 'அரும்பு', 'பிறந்த போதினிலே', வண்ணநிலவனின் 'குழந்தைகள் ஆண்டில்', மாலனின் 'பெண்மை வாழ்க', கந்தர்வனின் 'மங்கலநாதர்', மாலனின் 'ஆயுதம்" 'கல்லிற்குக் கீழும் பூக்கள்', 'சமுத்திரத்தின் சம்மதங்கள்', 'மனிதாபிமானம்', அம்பையின் 'மிலேச்சன்', லிங்கனின் 'கருணை மனு', ஜெயந்தனின் 'தீண்டாமை', வேலுச் சாமியின் 'ஒரு பைலின் முடிவு', ஜோதிர்லதா கிரிஜாவின் 'அடைக்கலம்', சிவசங்கரியின் 'அவர்களுக்குப் புரியாது', கி.ராஜ நாராணயனின் 'மிருக மனிதம்' ஆகிய கதைகள் மனித நேய அடிப்படையில் விளக்கப்படுகின்றன.

"கிறித்துவ சமய வளர்ச்சியும், தமிழ் இலக்கிய வகை வளர்ச்சியும்"

தமிழ் இலக்கிய வகைகளின் வளர்ச்சிக்குப் பல வகைகளிலும் கிறித்தவ சமயக் குருமார்களின் தொண்டு பற்றி விளக்குகிறது இக்கட்டுரை. தமிழில் உரைநடை வகைத் தோற்றத்திற்கு வித்திட்டவர்கள் இவர்கள். சில நாடக வகைகள், அகராதி நூல்கள் இயற்றியமை, செய்தித் தாள்கள், திங்கள் இதழ்கள், போன்றவற்றை மதச் சார்புக் கருத்துகளை வெளியிடப் பயன்படுத்தியமை, சமய, மருத்துவ அறிவியல் நூல்களைத் தமிழில் பெயர்த்துத் தந்தமை இவர்களது பணியுள் அடங்கும். சவிட்டு நாடகம், வாசகப்பா போன்ற புதிய நாடக வகைகளை அறிமுகப்படுத்தினர். மொழிபெயர்ப்புகள், சிறுகதைகள், தமிழ் ஆய்வு நூல்கள், ஒப்பீட்டு நெறிமுறை, துண்டுப் பிரசுரங்கள், செய்தி இதழ்கள்; தருக்க முறையில் விவாதித்து எழுதுதல், நெறிமுறைப்படி ஆய்வுகள் நிகழ்த்துதல், கடித முறையில்

கருத்துக்களை எடுத்துக் கூறுதல், போன்ற பல வழிகளில் தாம் கூற வந்தகருத்துக்களை மக்கள் மனதில் பதிய வைத்த பாங்கு தொடர்பு வாயில்களை நமக்கு விரிவாக்கியுள்ளது என்பதை விளக்குகிறது இக்கட்டுரை.

“திருக்குறளும் குருகிரந்த சாகிபும் - துறவு பற்றிய கருத்துகள்” இணைநிலை ஆய்வு

சீக்கியரின் குருகிரந்த சாஹிபும், திருக்குறளும் அளிக்கும் துறவு பற்றிய கருத்துகளை ஒப்பிடுகிறது இக்கட்டுரை..

துறவு - துறவறம் - உலகமறுப்பு - உலக வாழ்வில் இருந்து கொண்டே தான், தனது என்ற சுயநலம் விடுத்து, அகப்பற்றும் ஐம்புலன்கள் வழிவரும் புறப்பற்றும் விடுத்து மனம், சொல், செயலால் வரும் குற்றங்களை நீக்கி வாழ்வது என்பன முதலில் விளக்கப்படுகின்றன. குறளிலும் குருகிரந்த சாகிபிலும் இல்லறம், தவம், துறவு பற்றிய செய்திகள், சீக்கயத்தின் மீரி-பீரி கோட்பாடு, சீக்கியம் துறவை, உலக மறுப்பை, மாயைக் கோட்பாட்டை ஏற்காமை, சமூக நீதிக்கு முதன்மை தரல், செயல்பாட்டை வலியுறுத்தல். துறவு தப்பியோடும் மனப்பான்மை எனல் “கிரிகரோ வந்த் சாக்கோ அதே நாம் ஜப்போ“- விளக்கம் - கடமையையே இறைவனை அணுகும் வழியாகக் கொள்ளல் - உண்மையே இறைவன்- குருவின் வழிகாட்டலுக்கு முக்கியத்துவம் - இதயத்தூய்மை - மனத்துக்கண் மாசிலன் ஆதல், மலருள் மணம் போல் எங்கும் நிறைந்த இறைவன் உன்னுள் இருப்பதை உணர் - எனவே காட்டை நாடுதல் வீட்டை விடுதல் - தவம் - யோகம், விரதம்- புனித நீராடல், புனிதப்பயணம் - சடங்கு - சம்பிரதாயம் - புறவேடம் தேவையில்லை எனக்கூறுதல் - இரக்கமே பஞ்சு, நிறைவே கயிறு. ஒழுக்கமான உலகியல் வாழ்வே முடிச்சுகள், உண்மையே இழைகள்; இவையே உண்மையான அழுக்காகாத, வீணாகாத, எரியாத பூணூல்; இதனை அணிபவர் ஆசிர்வதிக்கப்படுவர் என்ற கருத்துகள் - தான் அறப்பெறல் - ஹௌமைன் தான், நான், எனது எனும் அகந்தை, ஆணவம்

என்பனவற்றைக் குறிக்கும் தான்மை, இவை இல்லாது ஆதல் - விட்டொழித்தல்- ஆகியவற்றை விளக்குகிறது. சீக்கியம் முழுத் துறவைக் கண்டிக்கிறது. குருகிரந்தம் சுட்டும் தூய அறம் என்பது உலகச் செயல்பாடுகளை வளப்படுத்துவதற்கு வழி காட்டுவதாக அமையவேண்டும் என்கிறது. திருக்குறளும் குருகிரந்தமும் இல்லறத்துடன் இணைந்த துறவு வாழ்வையே ஆதரிக்கின்றன. மனிதநேயம், கொல்லாமை, பிற உயிர்களைத் தம் உயிர்போலக் கருதி ஊறு செய்யாமை, புலால் உண்ணாமை, பொய்யாமை ஆகிய அறங்களைக் கடைப்பிடிக்க வலியுறுத்துகின்றன. மனத்துக்கண் மாசறுதலே அறம் என்கின்றன. வெளிவேடம், சடங்குகள் வீணானவை; வெளிப்பகட்டுகளை விடப் பிறர் ப்ழித்ததை ஒழித்துவிடலே முக்கியம்; தன்னலம் துறத்தலையும் தான் அறப்பெறுதலையும் இருநூல்களுமே வற்புறுத்துகின்றன. உலக மறுப்பை இருநூல்களும் ஏற்கவில்லை. உலகப்பற்றை விடுவதையே முன்னிறுத்துகின்றன. இறைநாமாவைக் குருவின் துணையுடன் பாடுவதே ஜபிப்பதே அசைவற்ற மனநிலையத்தரும் என்கிறது குருகிரந்தம். குறளும் பெரியாரைத் துணைக் கோடலைச் சுட்டுகிறது நீத்தார் பெருமை கூறினாலும் இறைப்பசியுடன் இறைக்காதலுடன் இறைவனின் நாமஜெபத்தை வலியுறுத்தவில்லை என இரு நூல்களின் ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்கிறது. இரு நூல்களுமே இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்று வாழ நம்பிக்கையைத் தருவன என முடிவு கூறுகிறது.

II. திறனாய்வு உயர் கோட்பாட்டு அணுகுமுறைகள்

"மார்க்ஸ்கோரரின் இலக்கியத் திறனாய்வும் உத்திகளும்" என்ற கட்டுரையின் மொழிபெயர்ப்பு.

(Technique as Discovery - Mark Schorer) இலக்கியப் படைப்பில் உள்ளடக்கத்திற்கேற்ப உருவத்தைப் பயன்படுத்துவதை இலக்கியப் படைப்பாக்க உத்தியாகக் கொண்டு திறனாய்ந்தால் பல இலக்கியங்களின் உண்மையான இயல்புகளைப் புரிந்து கொள்ளலாம் என விளக்கும் மார்க்ஸ்கோரர் இக்கட்டுரையில்

உருவ அமைப்பிற்கு அதிக முக்கியத்துவம் தந்து விளக்கிச் செல்கிறார். வெளிப்படையாகத் தெரியும் வடிவமே புனைகதைகளின் முழுமை எனவும் இவ்வடிவம் படைப்பாளியின் அனுபவ வெளிப்பாட்டிற்கு எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது, படைப்பு எந்த நோக்கு நிலையில் கூறப்பட்டுள்ளது என்ற இரு நிலைகளில் அறியலாம் என்று கூறுகிறார் இவர்.

"தொன்மம், புனைகதை, இடப்பெயர்ச்சி" - நார்த்ரோப் ஃபிரை **(Myth, Fiction and Displacement - Northrop Frye)**

இன்றைய இலக்கியப் படைப்புகள் அனைத்திற்கும் அடிப்படையாவது தொன்மங்களே என்றும், அதிலும் கதைக்கூறு உடைய படைப்புகளுக்கு (புனைகதைகள்) அடிக்கருத்துக்களை நல்குவன தொன்மங்களே என்றும் கூறுகிறார் நார்த்ரோப்ஃபிரை. ஏற்கனவே தொன்மங்களில் உள்ள படைப்பாக்கக் கூறுகளை (தலைமைப்புனைவுக் கூறுகள் போன்றவை) ஒரு சீட்டுக்கட்டில் மாற்றி மாற்றி அமைப்பது போல) இடம்மாற்றி அமைத்து புதிய புனைவுகள் உருவாக்கப்படுகின்றன என்கிறார் இவர்.

"பெண்ணியமும் பெண் உரிமைகளும்"

பெண்ணியம் என்ற கோட்பாடு உருவாவதற்கு முன்பே பெண் விடுதலை, பெண் கல்வி, பெண் முன்னேற்றம் என்ற நோக்கு நிலைகளில் சமுதாயச் சிற்பிகளின் சிந்தனையில் பெண்ணிற்கு இழைக்கப்படும் கொடுமைகளிலிருந்து அவள் விடுவிக்கப்படவேண்டும் என்ற எண்ணம் தோன்றி வளர்ந்தது. அதற்கு ஏற்ப அவளுக்கு உரிய இடம் அந்தஸ்த்து, உரிமைகளை வழங்க சட்டதிட்டங்கள் இயற்றப்பட்டன. அதுபற்றிப் பெண்ணிய நோக்கில் ஆராய்கிறது இக்கட்டுரை. இதில் பெண்ணின் சமூக உரிமைகள், பொருளாதார உரிமைகள், அரசியல் உரிமைகள் பற்றிய விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

"பெண்ணியத் திறனாய்வும் பெண் எழுத்தாளர்களும்"

அமெரிக்கப் பெண்ணியத் திறனாய்வாளர்கள் பெண்ணியத்திற்கு அளித்த விளக்கங்களையும், பெண்ணிய எழுத்தாளர் எனத் தம்மைக் குறிப்பிட்டுக் கொள்ளும் ஒருவரின் எழுத்தில் எவ்வகைக் கூறுகள் எல்லாம் அடங்கியிருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளனர். அவர்களது அக்குறிப்புகளைச் சுட்டிஅக்குறிப்புகளுக்கு ஏற்பத் தமிழில் பெண்ணிய எழுத்தாளர்கள் சிலரைத் தெரிந்தெடுத்துச் சுட்டும் இக்கட்டுரையில் வாசந்தி, ராஜம் கிருஷ்ணன், அனுராதா ரமணன் போன்ற பல பெண் எழுத்தாளர்களின் படைப்புகள் எவ்வாறு பெண்ணிய எழுத்தாகக் கொள்ள முடியும் எனவும் விளக்குகிறது. "Back to Kitchen" எனவும் Conservative Feminism எனவும் இன்று பெண்ணியப் போக்குகள் மாறியிருப்பதைச் சுட்டும் சிவசங்கரியின் கருத்துகள், அவரது 'அன்பு' (ANBU = Awareness Needed for Betterment of Unprivilidged) எனும் விழிப்புணர்வு இயக்கம் பற்றியும் சுட்டிக்காட்டுகிறது இக்கட்டுரை.

"பெண்ணியமும் பெண்ணியத் திறனாய்வும்"

பெண்ணியம் என்றால் என்ன? அதன் வளர்ச்சி நிலைகள், வகைகள் என்பன பற்றி விளக்கும் இக்கட்டுரை பெண்ணிய நோக்கை அடிப்படையாகக் கொண்டு இலக்கியத்தை அணுக பதினொரு வழிகள் கூறப்பட்டிருப்பதை எடுத்து விளக்குகிறது. அமெரிக்கப் பெண்ணியத் திறனாய்வாளர்களின் கருத்துக்களுக்கு ஏற்ப எது பெண்ணிய எழுத்து என விளக்கப்படுகிறது. அனுராதா ரமணனின் ''கதாநாயகிகளின் கதைகள்'' இவ்வடிப்படையில் அணுகப்பட்டுள்ளன.

"அண்ணாவின் நாடகங்களில் தொன்மச் சிதைவும் மறு உருவாக்கமும்" (Demythologisation and Reconstructions)

தமக்கு முன்னே உள்ளத் தொன்மக்கதையை எடுத்துக் கொண்டு, அதில் உள்ள பாத்திரங்களைத் தன் தேவைக்கு ஏற்ப மாற்றிப் படைப்பதும், அம்மாறுதலுக்கான விளக்கங்களைப் பகுத்தறிவுப் பார்வையுடன் அளிப்பதும் Demythologisation அல்லது தொன்மச் சிதைவு எனலாம். இதனைக் க. செல்லப்பன் புராண மறுப்பு எனக்கிறார். ப. மருதநாயகம் தொன்ம மீட்டுருவாக்கம் என்கிறார். ஷெல்லி, மில்டன் பைரன் போன்றோர் படைத்த புரோமீதியஸ், சாத்தான், கெயின் (Cain) போன்ற பாத்திங்களுடன் பாரதிதாசனின் இரணியனை ஒப்பிடலாம் என்று காட்டும் ப. மருதநாயகம் பின்னாளில் திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எழுதிய புனைகதைகள், நாடகங்களில் வரும் பாத்திரங்களுக்கான ஒரு தொல்படிமமாக (archetype)ப் படைத்திருக்கிறார் பாரதிதாசன் என விளக்குவதை எடுத்துக் காட்டி, அண்ணாவின், 46 நாடகங்களில் நீதி தேவன் மயக்கம், வழக்கு வாபஸ், பக்தியின் பெயரால், அவன் பித்தனா? கடவுளர் உலகில், தேவலோகத்தில், கறைபோகவில்லை ஆகிய நாடகங்களில் தொன்மக் கதைகளின் பாத்திரங்களும், கதைக்கூறுகளும் எடுத்துக் கொள்ளப்பட்டு, அவற்றின் கதைப் போக்கு, பாத்திரப் படைப்பு, பாத்திரங்களின் மன உணர்வுகள் ஆகியவற்றை அண்ணா தன் இயக்கச் சார்புப் பார்வையுடன் மாற்றிப்படைத்திருப்பதை எடுத்துரைக்கிறது இக்கட்டுரை.

மக்களின் அறியாமை, மூடப்பழக்க வழக்கங்கள், தீண்டாமை, ஒடுக்குமுறை, மேட்டுக் குடியினரின் சமூக உணர்வற்ற போக்கு போன்ற சமூகக் கொடுமைகளை ஒழிக்க, நாடகத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தியபோது, பழமரபுக் கதைகளை எடுத்துக் கொண்டு அவற்றில் உள்ள குறைகளை மக்களுக்குப் புரியவைக்கத் தொன்மச் சிதைவு உத்தியைப் பயன்படுத்தியுள்ளார் அண்ணா என எடுத்துரைக்கும் கட்டுரையாளர், "நீதிதேவன் மயக்கத்தில்" கம்பர்

இராவணனை 'இரக்கம் எனும் ஒரு பொருளிலா அரக்கன்' எனக் குற்றம் சாட்ட, அதை ஏற்காத இராவணன் தன் வழக்கைத் தானே நடத்துகிறான். யாகங்களில் உயிர்ப்பலியிடுவோர், இரக்கமற்று நடப்பது, தாய் பிடிக்க தந்தை அறுக்க, சீராளனைக் கறிசமைத்தது இரக்கமற்ற செயல் அல்லவா (கோட்புலி நாயனார்)என வினவ கம்பர் இந்த இரண்டுமே வாதத்திற்கு உரியதல்ல என மறுக்கிறார். இராவணன் மேலும் தன்னை அரக்கன் எனக் கூறினால், கைகேயி தன் கணவனையே தன் வரத்தால் உயிர்விடச் செய்ததன்றி, மகன் இராமனையும் சீதையையும் 14 ஆண்டுகள் காடேக வைத்தது இரக்கமற்ற செயல்லவா? பல நாட்கள் தன் காவலில் சீதை நலமுடன் இருக்க சூர்ப்பனகையை இராமன் ஒரே நாளில் மூளியாக்கியது இரக்க மற்ற செயல் அல்லவா? பெற்ற தாயைக் கொன்ற பரசுராமன், ஏகலைவனின் கட்டை விரலையே குருதட்சிணையாகக் கேட்ட துரோணாச்சாரியார், பஞ்சகாலத்தில் கோவில் பொருட்களை உண்டதற்காக ஊரார் அனைவரையும் வெட்டிக் கொன்ற கோட்புலி நாயனார் ஆகியோர் அரக்கர்களா எனக் கேட்கவைத்து, ஒவ்வொரு எடுத்துக்காட்டின் மூலமும் தொன்மக்கதைகளில் உள்ள ஓர் வஞ்சனையை மக்கள் உணரவைக்கிறார் அண்ணா. இத்தகு இராமாயண, மகாபாரத நூல்களைப் பூஜைக்குரியதாக்கி அவற்றின் பின்னனியில் உயர்மட்டத்தில் இருக்கும் ஒரு சாரார் பிறரை அடக்கியாள, அவர்களைச் சமயம் என்னும் மாயையில் மயங்கி இருக்கச் செய்ய மேற்கொண்ட உத்தியே அவை என்பதையும் உணரவைக்கவே இத்தகு தொன்மச் சிதைவு, அண்ணாவால் பயன்படுத்தப் பட்டுள்ளது என்கிறார் கட்டுரையாளர். மேலும் இராவணனைத் திராவிட இனத்தினனாகவும் இராமனை ஆரியர் தலைவனாகவும் கருத்துருவாக்கம் செய்யப்பட்ட பின்னனியில் திராவிடரின் பகுத்தறிவு வாதமாகவே இதை முன்வைத்துள்ளார் எனவும் அதற்கு இராவணனின் இத்தகு பாத்திர மாற்றம் தேவையாகிறது எனவும் எடுத்துரைக்கிறது கட்டுரை.

'வழக்கு வாபஸ்' நாடகத்திலும் இவ்வாறு பல தொன்மக் கதைக்கூறுகளை எடுத்துக் கொண்டு, அக்கதைகளை மாற்றாது,

அப்படியே எடுத்துக்காட்டி, தான் உணர்ந்த உண்மைகளைப் புரிய வைக்கிறார் அண்ணா என்பதையும், இது கா.செல்லப்பன் கூறிய புராண மறுப்பு என்ற விளக்கத்திற்கேற்ப அமைந்திருப்பதையும் கட்டுரை சுட்டுகிறது.

புராண மாற்றம் என்று செல்லப்பன் தரும் விளக்கத்திற்கு எடுத்துக்காட்டாகத், 'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை' எனும் குறளுக்குப் புலவர் குழந்தை தந்த உரையை எடுத்துக்காட்டுகிறார் கட்டுரையாளர். இவ்வுரை காலத்திற்கேற்ற பகுத்தறிவுக்கு ஏற்ற புத்துரையாக, புத்திசாலித்தனமான மறுஉருவாக்கமாக (intelligible reconstruction) அமைவதுடன் தொன்மச் சிதைவையும் உண்டாக்குகிறது. சூரியனை உதிக்காமல் நிறுத்திய பதிவிரதத் தன்மையிலிருந்து குறளை மீட்டு இன்றைய நடைமுறைக்கு ஏற்ற பொருளைத் தருவதால் நம்ப இயலாத, நடக்க இயலாத, இயல்பிறந்த தன்மை தவிர்க்கப்பட்டு, அதன் மூலம் தொன்மக் கருத்து உடைபடுகிறது எனத் தொன்மச் சிதைவாக்கத்திற்கு விளக்கம் தருகிறது இக்கட்டுரை.

திரௌபதி - தொல்படிமம்

இக்கட்டுரை ஒரு சமுதாயத்தின் கூட்டு நனவிலியின் வெளிப்பாடே தொல்படிமம் (archetype) என்றும் இது ஆதிமூல உருக்களால் (Primordial image) ஆவது என்றும் யுங் கூறுவதையும் நார்த் ரோப் ஃபிரை, மாட்பாக்கின் ஆகியோர் தொல்படிமம் பற்றிக் கூறும் விளக்கங்களையும் முதலில் தருகிறது. தொல்படிமங்கள் காலம் தோறும் மாற்றமடைந்து வந்தபோதிலும் புது வகையின் விளக்கம் தருவதற்கு ஏற்ப என்றும் நிலைத்து நிற்பன. மரபுவழியாகப் பெயர்ந்து வரும் ஒரு தொல்படிமத்தையே எடுத்து எழுதும் ஒருபடைப்பாளி, தன் சமகால சமுதாயத்தின் தன் சகமனிதர்களின் கூட்டு நனவிலி மனதின் உணர்வை வெளிப்படுத்துவதுடன், தன் தனித் தன்மைகளால்,

அத்தொல்படிமத்திற்குப் புத்துயிர் தந்து மீட்டுருவாக்குகிறான், புதுப்புது அர்த்தங்களையும் பெற வைக்கிறான் என எடுத்துரைக்கிறது.

பாரத சமுதாயத்தின் கூட்டு நனவிலியில் உருவான மகாபாரதக்கதையின் திருப்புமுனைப் பாத்திரம் திரௌபதி. இப்பாத்திரமும் வட மொழியில் இக்கதைக்கு முன்பிருந்த பதிவிரதைகளின் கதைகள் ஒன்றிலிருந்து பெறப்பட்டதே. திரௌபதியின் முற்பிறப்புக்கதை, துருபதன் வளர்த்த யாகத்தீயிலிருந்து தோன்றியமை, கருவுயிர்க்காது பிறந்த குழந்தைகள் என்ற தொல்படிமம், பாரதியின் திரௌபதி, - அடிமைப்பட்ட பாஞ்சாலி - அடிமைப்பட்ட பாரதமாதாவின் உரு - நாட்டு விடுதலை உணர்வு வெளிப்பாட்டிற்குப் பழைய தொன்மக்கதை - முற்றுமான சரணாகதி தத்துவத்துக்கு எடுத்துக்காட்டு - பாரதி போற்றிய சக்தியின் வெளிப்பாடு - எனத் தன் காலத்துச் சூழல், தேவைக்கு ஏற்ப உரிமைக்குரல் எழுப்பும் பெண்ணாக விடுதலை வேட்கையூட்டும் பாத்திரமாக, வீறு கொண்ட மகாசக்தியாக, விடுதலை வேண்டிப் போரிடும் பாரத அன்னையாக, முற்றிலுமான சரணாகதி அடையும் ஆன்மாவாக - பல நிலைகளில் வைத்து அடையாளம் காணத்தக்கவாறு திரௌபதி தொல்படிமத்தை மாற்றிப் படைக்கிறார் என விளக்குகிறது கட்டுரையின் அடுத்தபகுதி.

நாரணதுரைக்கண்ணன், 'உயிரோவியம்' எனும் நாவலில் ஓர் ஓரங்க நாடகமாகத் திரௌபதி தொல்படிமத்தைப் பயன்படுத்தியுள்ளமையையும், அதில் அவர் காலத்திற்கேற்ப மாற்றியதையும், முன்னைப்பழங்கதையிலிருந்து எடுத்த தொன்மப் பாத்திரத்தைத் தன் காலச் சூழலுக்கும், மக்கள் வாழ்வில் விழுமியங்கள் பெற்ற மாறுபட்ட கண்ணோட்டத்திற்கும் ஏற்ப மாற்றியிருப்பதையும் சுட்டுகிறார் கட்டுரையாளர். மேலும் இன்றைய புதுக்கவிதைகளில் திரௌபதி தொல்படிமம் குறியீடாக, சமூகச் சீரழிவால் பெண்கள் பெற்ற அவல நிலையைக் காட்டும் சமூக எள்ளள்தன்மை கொணடதாக மாற்றிப்

படைக்கப்பட்டிருப்பதை கலாப்பிரியா, கோ.இராசா, அப்துல் ரகுமான் போன்ற கவிஞர்களின் புதுக்கவிதைகள் கொண்டு விளக்குகிறார். இங்கெல்லாம் காலம்தோறும் திரௌபதி தொல்படிமம் புதுப்புதுப் பொருண்மை மாற்றங்களைப் பெற்றமை சுட்டிக்காட்டப்படுகிறது.

"சங்க இலக்கியத்தில் உணர்ச்சி வெளிப்பாடும் புறச் சூழல் இயைபுக் கோட்பாடும்" (25.11.99 வியாழவட்டம்)

டி.எஸ்.எலியட் எடுத்துரைத்த புறச்சூழல் இயைபுக் கோட்பாட்டைச் சங்க இலக்கியங்களில் ஏற்றிப்பார்த்து ஒப்பு நோக்குகிறது இக்கட்டுரை.

ஹாம்லெட் நாடகம் பற்றிய திறனாய்வில் டி.எஸ். எலியட் பயன்படுத்திய சொல்லாக்கமே (Objective Correlative) இத்தொடர் பின்னாளில் ஒரு திறனாய்வுக் கலைச் சொல்லாகவே ஏற்கப்பட்டது. எலியட்டே எதிர்பாராத அளவு பிரபலமாகி விட்டது. கவிதையில் ஒரு குறிப்பிட்ட உணர்ச்சியை விளக்குவதைவிட அவ்வுணர்ச்சியை வாசகனுக்கு அப்படியே உணர்த்துவதே சரி; அதற்குச் சரியான வழி இவ்வுணர்ச்சி வெளிப்பாட்டிற்கான பொருத்தமான குறியீட்டை அறிந்து பயன்படுத்துவது தான்; உணர்ச்சிகளைக் கவிதையால் தூண்டமுடியுமே தவிர, கவிதையில் நேரடியாக உணர்ச்சியை வெளிப்படுத்த முடியாது என்பது டி.எஸ். எலியட்டின் கருத்து 'ஒரு சூழல், ஒரு நிகழ்ச்சிக் கோவை அல்லது ஒரு பொருட்கோவை வழியாக வெளிப்படுத்த வேண்டும்' என்பது தான் புறச் சூழல் இயைபுக் கோட்பாடு என எடுத்துரைக்கும் கட்டுரையாளர் இதுபற்றி வை.சச்சிதானந்தன், ஞானி, ப.மருதநாயகம். மீனாட்சி முருகரத்தினம், பாலா, ஆரார் ஆகியோரது விளக்கங்களைத் தொகுத்துக் கூறுகிறார். பின்னர் சங்கக் கவிதைகளில் கவிதை மாந்தரின் நுண்ணிய மனஉணர்வுகளை, உரிப்பொருள் சார்ந்த உணர்வுகளை வெளிக்காட்ட நிலம், பொழுது, துறைசார்ந்த குறிப்புகள் போன்றன

உதவுகின்றன என்றும் அவ்வாறான வெளிப்பாடுகளை எலியட் கூறிய நான்கு அடிப்படைகளோடு பொருத்திக்காண இயலும் என்றும் விளக்குகிறார். எடுத்துக்காட்டாக "நள்ளென்றன்றே யாமம்'' எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடலைச் (6) சுட்டி வரைவிடை வைத்துப்பிரிந்த தலைவனின் பிரிவால் வாடும் தலைவி தவிக்கும் நிலையைச் சூழல் என்றும், நள்ளென்ற யாமம், (அலர்தூற்றுதலாகிய) சொல்லவிந்த, தன் உள்ளஉணர்வை அறிய மாட்டா மாக்கள் இனிது உறங்குதல், உயிர்கள் அனைத்தும் உறங்குதல், தான் ஒருத்தி மட்டும் உறங்காது தவித்தல் ஆகிய மூன்று குறிப்புகளும் "நிகழ்ச்சிகளின் வரிசை'' என்றும் முதலிரண்டு நிகழ்ச்சிகளுக்கு முரணாகத் தலைவி பற்றிய நிகழ்ச்சி சுட்டுவதும் நிகழ்ச்சிகளின் வரிசைமூலம் தலைவியின் துயர் குறிப்பாக வெளிப்படுத்தப்படுகிறதே தவிர, தலைவி நேரடியாக, 'நான் பிரிவால் துன்புறுகிறேன்' என்று கூறாமலேயே புரிய வைப்பதாகக் கவிஞர் அமைத்திருப்பதை எடுத்துக் காட்டுகிறது. அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில் எனும் பாரிமகளின் பாட்டும் சூழலை மட்டும் கூறி உணர்ச்சியைப் பெற வைப்பது என்றும் கூறுகிறது. குறிப்பிட்ட ஒரு உணர்ச்சி வெளிப்பாட்டிற்கு ஒரு குறிப்பிட்ட வாய்பாடு கொண்டு விளக்குவதற்குத் தமிழில் மரபுவழிப்பட்ட கவிதை மரபுகளை எடுத்துக் காட்டாகத் தருகிறது. முல்லை-கற்பு; காஞ்சி-நிலையாமை; உள்ளுறை உவமங்கள்; இறைச்சி போன்றன "சேற்று நிலை முனையிய செங்கட்காரான் எனும் அகநானூற்றுப் பாடலில் அமையும் பொருட்களின் வரிசையில் செங்கட்காரான் - தலைவன். கூர்முள் வேலி - சமுதாய ஒழுக்கக் கோட்பாடுகள். வள்ளை, தாமரை - பரத்தை, விறலியைப் பாணனாகிய கோட்டால் விலக்குவது - பரத்தையை நுகர்வது - என நிகழ்ச்சிகளின் கோவை அவற்றுக்கு இணையான உள்ளுறைப் பொருளைத் தருவதுடன், உள்ளுறைப் பொருளை உணர்வதன் மூலம் தலைவியின் கருத்தையும் உணர்வையும் பெற முடிகிறது. "கரும்பு நடுபாத்தியில் கலித்த தாமரை'', "கரைசேர் வேழம் கரும்பிற் பூக்கும்'' "பூத்த கரும்பிற் காய்ந்த நெல்'' - போன்ற சங்க இலக்கியத் தொடர்கள் பொருட்களின் வரிசை, சூழல், நிகழ்ச்சிக்கோவை போன்றனவற்றுள் எதையேனும் ஒன்றை நேரடியாகவோ, உள்ளுறையாகவா

கூறும்பாங்கு சங்க இலக்கியத்தில் இருப்பதைப் புலப்படுத்துகின்றன என விளக்குகிறது கட்டுரை.

"ஹைகூவும் கவிதை முடிப்பும்"

ஹைகூ கவிதையின் சொற்செட்டு, வாமன ரூபமான மூன்றடித் தன்மை, மூன்றாமடி உலகளந்த பெருமானாய் உயர்ந்து நிற்பது, தொல்காப்பியம் சுட்டும் 'நோக்கு' எனும் செய்யுள் உறுப்புக்கு ஏற்ப சொற்களை, அசைகளை செதுக்கிச் செதுக்கிச் சீர்தூக்கி, அமைக்கும் தன்மை, கவிதை முடிப்புபற்றிய செய்திகள், மூன்றாமடியின் திடீர் திருப்பம், ஆகியன சுட்டப்படுகின்றன. கவிதை புரிதலுக்கு மூன்றாம் அடியின் பொருட்சிறப்பு, முதல் இரண்டு அடிகளுக்கும் மூன்றாம் அடிக்கும் இடையே உள்ள தொடர்பை, வாழ்வின் வெளிச்சத்தை, தத்துவப் பார்வையை, உயிர் நேயத்தை, இயற்கை வருணனையை, நிலையாமைத் தத்துவத்தை, ஜென் தத்துவத்தை, முரண் எதிர்வை புரிந்துகொள்ள வாசகனும் கூட்டுப்படைப்பாளியாகித் தன் அறிவு வெளிச்சங்களுக்கு ஏற்பப்புரிந்து கொள்ளுதல் போன்ற செய்திகளை விவரிக்கிறது இக்கட்டுரை. சப்பானிய கவிதைகளைத் தமிழ் ஹைகூ கவிதைகளுடனும் சங்கக் கவிதைகளுடனும் ஒப்பிட்டுக்காட்டி விளக்குகிறது.

கவிதையின் இறுதியடி பற்றிய தமிழ் இலக்கணங்கள் கருத்து, யாப்பு வடிவத்திற்கேற்ப இறுதி அமைதல், (வெண்பா-ஆசிரியப்பா - பா இனங்களுக்கு ஏற்ப அமைதல்) அந்தாதியில் அந்தமே ஆதியாய் அமைதல், சப்பானிய கவிதைகளில் ஆன்ஜி (Onji) எனப்படும் ஒலிக்குறியீடு (Sound Symbal), தமிழ் அசைக்குப்பதிலாக இருநீண்ட உயிரொலிகள், ஒரு இறுதி மெய்யெழுத்துக் கொண்டதே ஆன்ஜி என்று இன்று குறிப்பிடப்படல் - 2/3 ஆன்ஜிக்கள் இணைந்து நாம் யாப்பு அலகாகக் கருதும் அசை ஆக முடியும்; ஹைக்கூவில் இடம்பெறும் பிறிதொரு ஒலிக்குறியீடான 'கிரேஜி' (Kireji) ஒரு ஒலிப்பு முறை, நிறுத்தல் குறியீடு எனலாம்-

ஹைக்கூவை இசைமை உடைய இரு அலகுகளாகத் துணிக்கும் ஒலிக்குறியீடு. (Cutting word) கவிதை வாசிப்பில் இடைவெளியைத் தந்து பொருள்மாறுபாட்டை பொருள் ஆழத்தை மிகுதிப்படுத்துவது, ஒரு பெயர்ச்சொல்லுடன் ஹைக்கூ முடிவடைவது ஆகியன விளக்கப்படுகின்றன.

கவிஞன் வாசகனுக்குத் தான் காட்டவிரும்பியதைச் சுட்டிக் காட்டும் பொழுது நிலவைச் சுட்டிக்காட்டும் ஒரு விரல் போன்று தன் கவிதையை அமைக்கிறான். சுட்டப்படுவதே இங்கு முக்கியம் பெறுகிறது. சுட்டுவிரலை அழகாய்ப்படைப்பது நோக்கமல்ல. எதன்மீதும் பற்று வைக்காது வாழ்க்கையை உயர்த்தச் சொல்வது ஹைகூ. நகை உணர்வினாலும் மிகு எளிமையாலும் முதல் பார்வைக்கு மிக இலேசானதாகத் தோன்றும்; சிறப்புகள் மறைக்கப்பட்டிருக்கும். இத்திரைகளை விலக்கிப் பொருள் அடுக்குகளைப் புரிந்துகொள்ள வேண்டியது வாசகனின் வேலை அதற்கு உதவுவது, வாசகனின் மனதில் பொருட் தொடர்ச்சியை ஏற்படுத்துவது இதன் மூன்றாவது அடியே என்கிறது கட்டுரை.

"ஹைகூ வாசிப்பு"

ஏற்பழகியல் கோட்பாட்டின் அடிப்படையில் ஐப்பானிய, தமிழ் ஹைகூவில் காணப்படும் பொருண்மை அடுக்குகளை வாசகன் எவ்வாறு விடுத்துக் காணமுடியும் என்று விளக்கும் இக்கட்டுரையாளர் விளக்கங்களுக்காக ஐப்பானிய ஹைகூ கவிஞர்களான மோரிடாகே, கியோசி, ஷிகி ஆகியோரின் ஹைகூக்களையும், மித்ரா, அமுதபாரதி ஆகியோரின் தமிழ்ஹைகூக்களையும் எடுத்துக்கொள்கிறார். பொருண்மை அடுக்குகளைத் திரள் உருவாக்கச் (Concretization) செய்யும் வாசகன், படைப்பாளியின் நோக்கங்களை உள்ளடக்கிய வாசகத்தின் கட்டமைப்பில் உள்ள இடைவெளிகளை இட்டு நிரப்பிக் கொண்டு பொருள் புரிந்து கொள்கிறான். வாசகனும் இங்கு ஒரு கூட்டுப்படைப்பாளியாகிறான் என்கிறார் கட்டுரையாளர்.

இலக்கியப்படைப்பின் வடிவமைப்பிலும் அதை ஏற்கும் வாசகனுக்குமான இடை வினைகள் கொண்டதே வாசிப்பு என்பது ஐசரின் கருத்து - வாசிப்பு 3 தொடர்புடைய கூறுகளைக் கொண்டது.

1. அர்த்த அடுக்குகளுக்கு ஏற்ற களங்களைப் பனுவல் பெற்றிருத்தல்.

2. பனுவலினூடே பயணிக்கும் வாசகளின் செயல்பாடு.

3. பனுவல்-வாசகன் இடைவினைக்கான சில முன்நிபந்தனைகள், கட்டுப்பாடுகள்.

ஹைகூ கவிதையில் பயன்படுத்தப்பட்டுள்ள சில அடையாள வகை மாதிரிகள் (பட்டுப்பூச்சி, சில்வண்டு, தவளை, செர்ரிமலர்) முன்னரே. விடை தீர்மானிக்கப்பட்ட பனுவல் புதிர்களுக்கு விடை காண்பதான வாசகனின் வாசிப்புச் செயல்பாட்டைத் திவீரமாகக் கட்டுப்படுத்துகின்றன என எடுத்துக் கூறும் கட்டுரையாளர், இந்த 'பனுவலின் அர்த்த நிபந்தனைகளை' ஐக்கூ கவிதைகள் வழி விளக்குகிறார்.

'மின் கம்பிகளில்
பறவைகள் பறவைகள்
அடேடே! நல்ல ஹைகூ' (மித்ரா)

இக்கவிதையில் பறவைகள் அமர்ந்த விதம், 3 மின்கம்பிகளில் அமர்ந்துள்ள தன்மை, 5,7,5 என்ற எண்ணளவில் அவை அமர்ந்துள்ள தன்மை ஆகியன சுட்டிக்காட்டப்பட்டு வாசகன் எவ்வாறு அர்த்தங்களை ஏற்படுத்திக் கொண்டு, இடைவெளிகளை இட்டு நிரப்பிக் கவிதை இன்பத்தில் ஈடுபடமுடியும் என விளக்குகிறது கட்டுரை.

உளவியல் அணுகுமுறைகள்

இலக்கியமும் உளவியலும்

இலக்கியப் படைப்பு, படைப்பாசிரியர், வாசகர் இவர்களுக்கு இடையேயுள்ள உளவியல் தொடர்பு எவ்வாறு படைப்பாக்கத்திற்கு வழி வகுக்கிறது என விளக்கும் இக்கட்டுரை, ரெனெவெல்லக் எடுத்தோதிய இலக்கியத்திற்கும் உளவியலுக்கும் உள்ள நான்குவகைத் தொடர்புகள், பிராய்டு, யுங், அட்லர், லியோன் எடல், மாஸ்லோ போன்றோர் கூறிய உளவியல் கோட்பாடுகளின் அடிப்படையில் இலக்கியப்பாத்திரங்களை எவ்வாறு அடையாளம் காண்பது என்றும் விளக்குகிறது, பிராய்டுக்குப் பின்வந்த எர்னஸ்ட் க்ரிஸ், லியோனல் ட்ரில்லிங் ஆகியோர் வழிமொழிந்த உளபகுப்பாய்வு அழகியல் பற்றியும் சுட்டப்படுகிறது.

உளப் பகுப்பாய்வு

மனநோய் சிகிச்சைக்கான முறையியலாக ஃபிராய்டு அளித்த உளப்பாய்வுக் கோட்பாடு பின்னர் யுங்கினால் வேற்றுமைப் படுத்திக் காட்டப்பட்டது. மனித மனத்தின் மூன்று தட்டுகள், அவற்றின் வேலைகள், ஆழ்மனதில் நனவிலிமனிதில் அடக்கப்பட்ட மறுக்கப்பட்ட ஆசைகள், ஆசை நிறைவேற்றத்தின் வெளிப்பாடுகளான கனவுகள், பதிலீடுகள், காப்பு உத்திகள் போன்றன விளக்கப்படுகின்றன.

ஹெர்பர்ட் ரீட் ஃபிராய்டு முன்மொழிந்த உளப்பகுப்பாய்வுக் கோட்பாடு திறனாய்வின் தீர்க்கப்படாத சிக்கல்கள் பலவற்றிற்குத் தீர்வு காண வழிவகுக்கும் என்று எடுத்துக்காட்டுகிறார். அது தவிர்க்க இயலாதது, எனினும் மேற்கொள்ளப்படவேண்டியது என்கிறார்.

இவர் இக்கட்டுரையில்

(1) உளப்பகுப்பாய்வு இலக்கியத்தில் பெறும் பொதுவான இடம் என்ன?

(2) கவிதை உருவாக்கச் செயல்முறை பற்றியோ, படைப்பாக்கத்திற்கான அகத்தூண்டல் பற்றியோ உளப்பகுப்பாய்வு எவ்வாறு விளக்கம் அளிக்கிறது?

(3) திறனாய்வின் செயல்பாடுகளைாப் பிறவழிகள் எதிலேனும் விரிவுபடுத்த உளப்பகுப்பாய்வு நமக்குத் துணையாக உள்ளதா?

போன்ற முக்கியமான வினாக்களுக்கு விடையளிக்கிறார். பிராய்டு, யுங், அட்லர், எர்னஸ்ட் ஜோன்ஸ் ஆகியோரின் கருத்துகள் அடிப்படையில் உளவியல் திறனாய்வு வீச்சுகளுக்குப் பயன்படுமாற்றை எடுத்து விளக்குகிறார் ரீட்.

குழந்தை உளவியல் நோக்கு

சிவசங்கரியின் 'அவர்களுக்குப் புரியாது' எனும் குறுநாவல் குழந்தை உளவியல் நோக்கில் அணுகப்படுகிறது.

கலைந்த குடும்பத்தில் இருக்கும் 6 வயதே நிரம்பிய அருணாவின் நடத்தையில் பெரியவர்களின் நிராகரிப்பும் அனுசரணையற்ற சூழலும் எவ்வாறான நடத்தை மாறுபாடுகளை ஏற்படுத்துகின்றன என விளக்குகிறது இக்கதை.

தன்னையும் தன் விருப்பத்தையும் பொருட்படுத்தாத குடும்ப உறவுகளிலிருந்து விலகி ஒடுங்கிப் போகும் அருணா, அடங்காத் தன்மையும் எதிர்புக்குணம் கொண்டவளாகவும் மாறுகிறாள். வகுப்பு ஆசிரியையிடமும் தோழியின் பெற்றோரிடமும் பக்கத்து

வீட்டு இளம் பெண்ணிடமும் இழந்த தன் தாயைக் காண முயலும் அருணா சூழல்களின் காரணமாக அவர்களிடமிருந்து விலக நேரும்போது வன்மம் கொண்டவளாக, பொய் பேசுபவளாக, மேலும் எதிர்ப்புடையவளாக மாற்றப்படுகிறாள். அருணாவின் மனக்குழப்பங்களை, எண்ண ஓட்டங்களை, விளைவுகளை உளவியல் நோக்கில் எடுத்துக்கூறுகிறார் ஆசிரியை என விளக்குகிறது கட்டுரை.

தாய்மாறா நிலைப்பாடு (Mother Fixation)

குழந்தை-தாய் உறவுச் சிக்கல்கள் பற்றிக்கூறும் உளவியல் அறிஞர்கள் தாய் சிக்கல் (Mother-Complex) தாய் மாறா நிலைப்பாடு (Mother-Fixation) தாய் உரு (Mother Image) தாய்-பகரம்/பதிலி (Mother Substitute) என்ற தொடர்களை முன்வைக்கின்றனர். இவற்றை விளக்குகிறது இக்கட்டுரை.

தன் தேவைகள் அனைத்தும் தாயின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு பற்றியது, தாய் மாறா நிலைப்பாடு. அதிக ஈடுபாடு கொண்ட தன் தாயுடனேயே தன்னை இணைத்துக் கொண்டு அதே படிநிலையிலேயே பின் தங்கிவிடுதலை இது சுட்டும். 4 முதல் 6 வயது வரையிலான காலக்கட்டத்தில் குழந்தை தன்னிடமே செலுத்திய பால் உந்து சக்தியைத் தாயிடம் செலுத்த ஆரம்பிப்பது தான் இதற்குக் காரணம். இந்நிலைப்பாடு பின்னர் வளர்ந்து விட்ட நிலையில் பல சிக்கல்களை உருவாக்கும். ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி, இந்த உறவுக்கு குந்தகம் விளையும் எந்தச் சூழலையும் தவிர்க்கவே விரும்புவர். தாயை விட்டுப் பிரிந்து விட நேரும் என்ற எண்ணத்தில் அப்பிரிவுக்குக் காரணமாக இருக்கக்கூடிய எவருடனும் உறவு கொள்வதில் இருந்து பின் வாங்குபவராகவே இருப்பர். இந்நிலையை ஜெயகாந்தனின் ஆடும் நாற்காலிகள் ஆடுகின்றன, பொன். சௌரிராஜனின் தாயக்குமரி, வாசந்தியின் தாகம், சைக்கோ திரைப்படம், மறுபிறவி தமிழ் திரைப்படம் ஆகியவற்றில் காணலாம் என்கிறார் கட்டுரையாளர்.

பாலகுமாரன் நாவல்களில் இளையோர் உளவியல்

பதின்மூன்று முதல் பதினெட்டு வரையிலான வயதையே இளையோர் பருவம் என்பர். இவ்வயதில் தன்னைப்பற்றி, சமூகத்திலும் வீட்டிலும் தன் 'இடம்' பற்றி, தன் உடல் பற்றி அதிகக் கவலைப்படுவர்; இவ்வயது வினாக்களும் பயங்களும் நிறைந்தது. தன் அடையாளம் காட்டும் முனைப்பு, வாழ்வியல் விழுமங்கள், விருப்பார்வங்கள், பொழுது போக்குகள், ஈடுபாடுகள் போன்றவற்றில் மாறுதல் ஏற்படுதல், இளையோர் வயதில் ஏற்படும் குற்ற நடத்தைகள் போன்ற பல கருத்துக்கள் விவாதிக்கப் படுகின்றன. இளையோர் எதிர்ப்படும் சிக்கல்கள் பற்றிக் கூறப்படுகிறது. இவற்றின் அடிப்படையில் பாலகுமாரனின் புனை கதைகளில் வெளிப்படும் இளையோர் நடத்தைகள் அணுகப்படுகின்றன. பந்தயப் புறாவில் சமூக ஏற்புக்கு ஆசைப்படும் திருவளர்ச்செல்வியைப் படைத்துக் காட்டுகிறார். தாயுமானவன், அந்தரங்கம் ஆகியவற்றில் பெண்ணின் உடல் வளர்ச்சியால் ஏற்படும் மாறுதல்களை ஆரோக்கியமான மனதோடு ஏற்றுக்கொள்ள வைத்தல் வலியுறுத்தப்படுகிறது. இரண்டாவது சூரியனில் பிரிந்த குடும்பத்துக் குழந்தையின் மனக்குழப்பங்களும், விருப்பங்களும் ஏக்கங்களும் உளவியல் அடிப்படையில் சுட்டப்படுகின்றன. வன்னிமரத்தாலி பெருமாள் தந்தையின் செயல்களால் தாழ்வு மனப்பான்மை உடையனவாகவும் குற்றவாளியாகவும் மாறி ஜெயிலுக்குப் போய்வந்தவன். கதாநாயகி செல்வ மனோகரி, அதிக உயரம் உடையவள். அதனால் தாழ்வு மனப்பான்மையும் அதன் விளைவாக எதிர்ப்புக்குணம் கொண்டவளாகவும் இருக்கிறாள். இளம் குற்றவாளிகள் பற்றியது பலாமரம். பெண்களின் கல்வி ஈடுபாடு பற்றிக்கூறும் இரண்டாவது சூரியனில் மனவளர்ச்சியுறாத பெண் குழந்தைப் பாத்திரமும் இடம் பெறுகிறது. கல்யாண முருங்கை விஜியின் ஒழுக்க வேறுபாடுகளுக்கு அவள் இளம் வயதில் அவளுடைய துணை பற்றிய இயல்பான எதிர்ப்பார்ப்புகள் கண்டிக்கப்பட்டமையும் அவளது இயல்பூக்கங்களும் காரணம் என்பது விளக்கப்படுகிறது.

முதியோர் உளவியல்

மிகவும் விருப்பப்படும் பருவமான மிகவும் பயனுடையதாகக் கருதப்படும் பருவமான, வாலைப் பருவத்திலிருந்து விலகிச் செல்லும் கால கட்டமே முதுமைப் பருவம். இந்நிலை அடைந்தோர் சென்ற காலத்தை எண்ணிக் கழிந்த இளமைக்காக ஏங்குதல், எதிர்காலம் பற்றி அதிகம் கவலைப்படாது நிகழ்காலத்தை ஓட்டுதல், சமூகத்திலிருந்து அந்நியமாதல், பிறருடன் அனுசரித்துப்போக இயலாமை, பொறுப்பற்றதன்மை, மறதி, இயல்பில் பிறழ்ந்த சிடுசிடுப்பு- போன்ற பலவும் மனப் பிறழ்ச்சியும் கூட பெற வாயப்புள்ளது. இந்நிலைகள் தமிழ் இலக்கியங்களில் திரைப்படம், புனைகதை போன்றவற்றில் எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளன என எடுத்துவிளக்கும் கட்டுரை சில ஆங்கில இலக்கிய எடுத்துக்காட்டுக்களையும் தந்து ஒப்பிட்டும் காட்டுகிறது.

உளவியல் நோக்கில் தலைவியின் கூற்றுகள்

சங்க இலக்கியங்கள் சுட்டும் கற்பனைத் தலைவியின் கூற்றுகள் எவ்வாறு அவளது மனநிலைகளின் வெளிப்பாடுகளாக உள்ளன என ஆராயும் இக்கட்டுரை அவ்வாய்மொழிகளால் வெளிப்படலாகும், அவளது பண்புகளை உளவியல் நோக்குடன் காண்கிறது.

பிரிவுக்காலத்தில் இடைவிடாது காதலர் நினைவு ஒன்றையே உள்ளத்தில் கருதியிருக்கும் காலத்து, தன் எண்ணத்தைப் பிறர் அறிந்து நோக்குகின்றனர் என மயங்குவது, நோக்குவது எல்லாவற்றிலும் தலைவனின் பண்புகளையும், உருவத்தையும் காண்பது போன்ற நிலைகளைப் பலபாடல்கள் சுட்டுகின்றன. விருப்பப் புனைவுகள், மாயக் காட்சிகள் காணுதல், பிளவுபட்ட மனநிலை, திரிபுர உணர்தல், உயிர் நீக்கும் இயல்பூக்கம், மனமுறிவு (Frustration) வெளிப்பாடு, இவற்றின் விளைவாக போராட்ட

மனப்பான்மையும் ஆதிக்கச் செயலூக்கமும் வெளிப்படுதல், புறத்தெறிதல் போன்ற பல உளவியல் கூறுகள் எவ்வாறு தலைவியின் கூற்றுகளால் வெளிப்படுகின்றன என விளக்குகிறது இக்கட்டுரை.

இலக்கிய உளவியலும் பண்பாடும்

(புத்தொளிப் பயிற்சி ம.கா.பல்கலைக்கழகம் 1997)

இலக்கியத்திற்கும் உளவியலுக்கும் உள்ள தொடர்பு பற்றி ரெனெவெல்லக் எடுத்துரைத்த படைப்பாளர் உளவியல், படைப்பாக்க உளவியல், படைப்பில் உள்ள பாத்திரங்களின் உளவியல், வாசகர் உளவியல் எனும் நான்கு நிலைகளை விளக்கி, நான்கு நிலைகளிலுமே பண்பாட்டின் தாக்கம் இருப்பதை எடுத்துக்காட்டுகிறது இக்கட்டுரை. படைப்பாளர் உளவியலில் கூறப்படும் ஏதேனும் இழப்பிற்கான பதிலீடாக, படைப்பாளி தன் அடையாளம் காணமுயலும் முயற்சியாக சமுதாய எதிர்பார்ப்புக்கு ஏற்பத் தம் விருப்பங்களை, அமுக்கப்பட்ட ஆசைகளை மாற்றிக் கொள்ளுதல், படைப்பில் மாற்றிப் படைத்தல், இதில் நனவு மனம் - நனவிலி மனம் ஆகியவற்றின் இடையே அறவுணர்வு மிக்க ஆழ்மனத்தின் செயல்பாடு ஆகியவற்றைப் பண்பாட்டுச் சூழல் அடிப்படையில் விளக்குகிறது கட்டுரை. மேலும் சமூகப் பண்பாட்டின் உளப்பகுப்பாய்வும் மேற்கொள்ளப்படலாம் என்பதை விளக்குகிறார் கட்டுரையாளர்.

இலக்கியமும் உளவியலும் - காப்பு உத்திகள்

(உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெள்ளிவிழாக் கருத்தரங்கு 1997)

சமுதாயத் தர நிர்ணயங்கள், பண்பாட்டுக் கட்டுப்பாடுகள் போன்றன, மனிதனில் இயல்பாய் எழும் உள எழுச்சிகளையும், இயல்பூக்கங்களையும் தடைசெய்வதால் பிறழாமல் இருக்க மனம் பல்வேறு உத்திகளைக் கடைப்படிக்கிறது. ஆழ்மன உளவியலார் (Debth Psychologists) மனதின் சமநிலையைக் காக்க இவை உதவுவதால் இவற்றை மனநலக் காப்பு உத்திகள் என்பர் எனக்

காப்பு உத்திகள் பற்றி உளவியலாளர் கருத்துகளும், ஃபிராய்டின் விளக்கமும் கட்டுரையின் முதல் பகுதியில் தரப்படுகின்றன. பின்னர் விருப்பப் புனைவு, பகற்கனவு, கனவு, படைப்பாக்கம், பதிலீடு, அடையாளாம் காணல், பொருந்திக் காணல், விழைவு ஏற்ற வெளியீடு, புறத்தெறிப்பு, காரணம் காட்டல், அறிவார்ந்த விளக்கம் தரல், பின்னடைவு (regression), மறுத்து மறத்தல் (repression) அழுத்துதல்/புதைத்தல் (Suppression), உண்மையை ஏற்க மறுத்தல், மறத்தல், சில கூறுகளை மட்டும் மறத்தல், எதிர்செயல் உருவாக்கல் (reaction formation), எதிர்மறைமறுப்பு, நாபிறழ்ச்சி, விழுப்பமுடைமையாக்கல், இடமாற்றம் (Displacement) என்பன போன்ற பல காப்பு உத்திகள் பற்றிய விளக்கங்களும் விளக்கங்களுக்கு ஏற்ற எடுத்துக்காட்டுகள் இலக்கியங்களில் இருந்தும் அன்றாட வாழ்வியல் நிகழ்வுகளில் இருந்தும் தரப்பட்டுள்ளன. இது உளவியல் நோக்கில் இலக்கியப் பாத்திரங்களை, அவர்களது மொழியை ஆராயமுற்படுவோருக்கு வழிகாட்டும் முன்னோடி எனலாம்.

தாலாட்டில் மகளிர் உளவியல்

(நாட்டுப்புறவியலில் பாலியல் வேறுபாடுகள், தென்னிந்திய நாட்டுப்புறவியல் கழகம், தமிழ்நாடு தமிழக நாட்டுப்புறவியல் ஆய்வுமையம், முதலாவது நாட்டுப்புறவியல் தேசிய மாநாடு, 12.5.1999)

உளவியலறிஞர்கள், குழந்தை தாயின் வயிற்றில் கருக்கொண்ட காலம் முதலே தாயின் உணர்வுகள் குழந்தையின் பொதுவான வளர்ச்சியை, மனப்பான்மையை, விருப்பார்வங்களை, திறன்களை, ஆளுமையை உருவாக்கும் வல்லமை படைத்தவை என்பர். புராணகால பிரகலாதன், அபிமன்யு முதல் இன்றைய கமலகாசன் வரைக் கருவிலே திருவுடையோராக இருந்தமைக்குக் காரணம் கருவாய் இருந்த நிலையிலேயே அவர்களுக்கு அமைந்த சூழல் எனலாம். கருவுற்ற காலம் முதல் குழந்தையை ஏற்கக்கூடிய தாயின் மனநிலை, தாயுடனான, சமூகத்துடனான குழந்தையின்

மனப்பான்மையை உருவாக்குகிறது. இதனைப் பிறப்பிற்கு முன்பான குழந்தை உளவியல் என்பர். (Prenatal Psychology) இதே போன்று குழந்தைக்குப் பாலூட்டும் பொழுதும், தாய் தன் குழந்தை எவ்வாறு உருப்பெற வேண்டும் என்று கனவு காண்கிறாளோ அதை மீண்டும் மீண்டும் குழந்தையிடம் மனதால் பேசிவர குழந்தையின் மனப் பான்மைகளும் அவ்வாறே உருப்பெறும். தாலாட்டும் இவ்வாறே குழந்தையின் ஆளுமை வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கிறது என்று இக்கட்டுரை விளக்குகிறது. தாலாட்டுப் பாடல்களின் வகைகளை அவற்றின் பாடுபொருள் அடிப்படையில் பிரித்துக் காட்டிப் பின் இப்பாடல்களில் பொதிந்து கிடக்கும் உளவியல் கூறுகளை எடுத்துரைக்கிறார் கட்டுரையாளர்.

உளவியல் கூறுகளை,

1. தேவை - தேவைக்குறை - தேவை நிறைவேற்றம்
2. சமூக ஏற்புத்தேவை
3. தன்னலத் தேவை
4. தன்னிறைவுத் தேவை
5. அடைவுத் தேவை
6. தாய் குழந்தையையும், தன் கணவனையும் தன் உடைமைப் பொருளாகக் கருதும் மனப்பான்மை
7. கனவு
8. பகற்கனவு
9. காப்பு உத்திகள்
10. மாசோசிசம்

போன்ற அடிப்படைகளில் விளக்கப்படுகிறது. தாய் தன் தமையனைத் தன் தந்தையின் பதிலியாகக் காணும் மனப்பான்மையும், அது தாலாட்டுப் பாடல்களிலும் வெளிப்படுவதையும் இக்கட்டுரை விளக்குகிறது. குழந்தை உளவியல் நோக்கிலும், மனப்பதிவு, ஊக்கிகள் (motives), கருத்தேற்றம் போன்ற உளவியல் கூறுகளின் அடிப்படையிலும் தாலாட்டுப் பாடல்கள் விளக்கப்படுகின்றன.

தாலாட்டுப்பாடல்களில் புறத்தெறிப்பு
(தமிழ்நாடு தமிழக நாட்டுப்புறவியல் ஆய்வு மைய இரண்டாவது தேசிய மாநாடு - 23.12.99)

நாட்டார், வழக்காறுகளைப் பற்றிய ஆய்வுரைகள், நாட்டார் வழக்காறுகளின் பல பணிகளுள் ஒன்று, வழக்கமான நேரான வழிகளில் வெளிப்படுத்த இயலாத, சொல்லப்படமுடியாத வெளிப்பாடுகளுக்கு சமூக ஏற்புடைய மாற்றுக்காலாக, ஊடகமாகப் பயன்படுவது என்று விளக்கம் அளிப்பதன் அடிப்படையில் தாலாட்டுப் பாடல்களில் வெளிப்படும் புறத்தெறிப்புகளை (Projection) விளக்குகிறது இக்கட்டுரை.

தாலாட்டுப் பாடல்களில் பயன்படுத்தப்படும் புறத் தெறிப்புகள், தாலாட்டும் பெண்ணின் அகமன வெளிப்பாடுகள். நனவிலி நிலையிலேயே இப்புறத்தெறிப்புகள் உருவாகின்றன. யுங் குறிப்பிட்ட கூட்டு நனவிலியும் - கூட்டு நனவிலியின் தொல் படிமங்களும் அடுத்தடுத்த தலைமுறைக்கும் கால்வழியாக எடுத்துச் செல்லப்படுவதைப் போலத் தாலாட்டின் இப்புறத் தெறிப்புகளும் வழிவழியாக எடுத்துச் செல்லப்பட்டு மக்களால் அனுபவிக்கப் படுவதை, பயன்படுத்தப்படுவதைக் கட்டுரை விளக்குகிறது.

தன்னிடம் உள்ள ஒன்றை வேறு ஒரு ஆளிடமோ, சூழல்மேலோ ஏற்றிப் பார்க்கும் மனநிலையே புறத்தெறிப்பு. இவ்வாறு பிறர்மேல் ஏற்றப்பட்ட ஒன்று பொதுவாக ஒரு

உள்ளார்ந்த துடிப்பு, ஒரு உணர்ச்சி போன்ற ஏதேனும் ஒன்று பிறரால் ஏற்கப்படாத ஒன்று, வருத்தமளிக்கக் கூடிய ஒன்று - தடை செய்யப்பட்ட ஒன்று - என அமையக் கூடும் - என்று விளக்குகிறது.

தாலாட்டுப்பாடல்களில் மன அழுத்தம் - மன அழுத்தம் நீங்குதல், சமூகம்சார் மனத்துடிப்பு - துடிப்பு மகிழ்ச்சியாக மாறுதல், தன் குழந்தை தனக்கு எவ்வளவு அருமையானது என்பதையும் அதைப்பெறத் தானும் தன் குடும்பத்தினரும் ஏற்ற நோன்புகள், தவங்கள் பற்றியும் கூறும்போது வெளிப்படும் உளவியல் கூறுகள் - தன் குழந்தை எவ்வாறெல்லாம் முதன்மை பெற்ற உயர்நிலை எய்துபவனாக வளரவேண்டும் என்ற புறத்தெறிப்புகள், தன் தாய்வீட்டாரையும் (பாட்டனார், மாமன்) தந்தை வீட்டாரையும் முன்மாதிரியாகக் கொண்டு அக்குழந்தை வளரவேண்டும் என்று தாய் குழந்தையின் மனதில் ஏற்படுத்தும் மனப்பதிவுகள், தன் தாய்வீட்டாரை, கணவன் வீட்டாரைப்பற்றிய கருத்தேற்றங்கள், குழந்தை பற்றிய தன் விருப்பார்வம், கனவு, எதிர்பார்ப்பு ஆகியன வெளிப்பாடல், தன் ஆசைகளைக் குழந்தையின் மேல் ஏற்றிப்பார்க்கும் தன்மை, மண்ணாள வந்தவனாக, தாழைமடல் ஓலை கொண்டு, தமிழ் படிக்க வந்தவனாக, படிப்பால் முன்னேறித் தாசில் பண்ணுபவனாக, தாய் சொல்லைத் தட்டாத தனஞ்செயனாக அவன்/அவள் வரவேண்டும் என்ற புறத்தெறிப்பு, போன்றன விளக்கப்படுகின்றன.

கொம்புத் தேனில் புறத்தெறிப்பு

இக்கட்டுரையில் பாலகுமாரன் எழுதிய குறுநாவலான 'கொம்புத் தேனில்', இடம் பெற்றுள்ள படைப்பாசிரியரின் புறத் தெறிப்பு, இந்நாட்டின் புறத்தெறிப்பு, படைப்பில் இடம்பெறும் கதாசிரியனாக வரும் தாமோதரனின் புறத்தெறிப்பு ஆகியன விளக்கப்படுகின்றன. நடக்க இயலாது சக்கர நாற்காலியில் அமர்ந்து செல்பவன் உருவாக்கிய பாத்திரமான அன்னாவி உயரம்

தாண்டுதலில் உலகப் போட்டியில் வென்று ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் பெற்று வருகிறான். இந்த வெற்றிக்குக் காரணமாக இருந்தவர்கள், அவன் பெற்ற பயிற்சிகள் பற்றிய விவரங்களில் அவனுக்கு வெற்றிக் குறிப்புகளைத் தந்தவர்களின் சிறுசிறு விழைவு நிறைவேற்ற வெளியீடுகளைக் காணமுடிகிறது எனவும் விளக்குகிறார் கட்டுரையாளர்.

(Psychology of Forms of Creative Literature - With Special Reference to Chitrakavi)

(திராவிட இலக்கியங்களில் சித்திரக்கவி - தேசியக் கருத்தரங்கு ம.கா.ப. 1995)

'படைப்பிலக்கிய வடிவங்களும் உளவியலும் - குறிப்பாகச் சித்திரக்கவிகள்' எனும் இந்த ஆங்கிலக் கட்டுரை, படைப்பாக்கம் பற்றிய உளவியல் கருத்து, கொள்கைகளை முதலில் வரிசைப்படுத்துகிறது. கெஸ்ட்டால் உளவியலாளர், ஈகோ உளவியலாளர், ஃபிராய்டுக்குப்பின் வந்த நவீன உளவியலாளர் (சாக்டெல், ரோகர்ஸ் போன்றோர்) கருத்துகள் விளக்கப்படுகின்றன.

படைப்பாக்கத்திற்கான அடிப்படையான மூன்று தேவைகளைக் குறிப்பிடுகிறார் கட்டுரையாளர்.

1. மரபு ரீதியாகப் பார்க்கும் பார்வையிலிருந்து மாறித் தனக்கு ஏற்படும் அனுபவங்களை, அவை எப்படி உள்ளனவோ அப்படியே எதிர்கொள்ளும் திறன், புலனுணர்வுகளிலும் நம்பிக்கைகளிலும் நெகிழ் தன்மையுடன் இருப்பது, பொருள் மயக்கத்தை, கருத்து வேறுபாடுகளை ஏற்பது, தான் எண்ணியவாறுதான் பொருள்விளக்கம் இருக்கவேண்டும் என வற்புறுத்தாது இருப்பது.

2. தன் படைப்பு பற்றிய பிறரது கருத்துகளை, பார்வைகளை ஏற்கலாமே தவிர, அவை தன் படைப்பைப் பாதிக்க விடக்கூடாது, அதற்காகத் தன் படைப்பை மாற்றக்கூடாது.

3. படைப்பு மூலக்கூறுகளை, கருத்துகளை வெவ்வெறு விதமாக விளையாட்டாக மாற்றிப்படைப்பது, விளையாட்டுத்தனம் → அறிவார்ந்த வெளிப்பாடு

இம்மூன்று தேவை/நிபந்தனைகளும் சித்திரக்கவி படைப்பில் அமைந்துள்ளதை விளக்குகிறது கட்டுரை. வடிவ அமைப்பில் புதிய புதிய வகைகளைத் கண்டுபிடித்தல், புதுமை விருப்பம், தன் சொல்லாட்சித்திறனை வெளிப்படுத்தப் புதிய புதிய உத்திகளைக் கையாளல், இப்புதிய உத்திகளைப் படைப்பதில் பொருள் மயக்கத்தை ஏற்றல் ஆகியன பொருத்தமுற சித்திரக்கவிகளில் அமைந்திருப்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கும் கட்டுரை ஒரு வேற்றுமையையும் சுட்டுகிறது. இங்கு விளக்கஉரையோ, எவ்வாறு படிப்பது என்ற வழிகாட்டலோ சித்திரக்கவிகளின் புரிதலுக்குக் கட்டாயத் தேவையாகிறது.

சித்திரக்கவிகளில் எழுத்துக்களை, எழுத்து வர்க்கங்களைக் கையாள்வது, வார்த்தை விளையாட்டு, சிலேடை, பொருள் மாற்றுப் பொருள்கோள், ஒரே கவிதையில் இரண்டு, மூன்று வெவ்வேறு கதைக்கூறுகளை (பாரதம், இராமாயணம், பாகவதம்) வைத்துப் பாடுவது, இரண்டு, மூன்று பொருள் வரப்பாடுவது (த்வியர்த்தி, த்ரியர்த்தி) மாலை மாற்று, சக்கரம், சுழிகுளம், ஏகபாதம் என்பன போன்ற பல்வேறு வகையான வடிவங்கள் கொண்ட சித்திரக்கவிகளில் புதியதாக, வேறுபட்ட தனித்திறமை கொண்ட தனிப்பெருமை உடையவனாகத் தன்னை அடையாளம் காட்டிக் கொள்ள விரும்பும் படைப்பாளியின் ஆசையும் நிறைவேறுகிறது, புதிய வகை வடிவங்களும் உருவாகின்றன என எடுத்துரைக்கிறது இக்கட்டுரை. ஜே.பி.கில்ஃபோர்ட் அறிவுக் கூர்மை என்பது 120க்கும் மேற்பட்ட கூறுகளை (Factors) கொண்டது என்றும் வெவ்வேறு திறமைகளை அடிப்படையாகக் கொண்டவை என்றும் அவற்றுள் சிந்திக்கும் திறன் வாய்ந்த திறமைகளுள் ஒன்றே படைப்பாக்கம் என்பதையும் விளக்கி படைப்பாக்கம் வேறுபட்டுச் சிந்திக்கும் திறன்பால்பட்டது (Divergent thinking ability) என்றும் விளக்கும் அடிப்படையில் சித்திரக்கவிகள் எவ்வாறு வேறுபட்டுச்

சிந்திக்கும் திறன் கொண்ட படைப்பாக்கங்கள் என விளக்குகிறார் கட்டுரையாளர். கில்ஃபோர்டு சுட்டிய படைப்பாக்கச் சிந்தனைக் கூறுகளுள் சொல்லாட்சித்திறன், கருத்து வெளிப்பாட்டு வேகம், மிகை, வாக்கியத் தொடரில் சொற்களைப் பொருள்படமாற்றி மாற்றி வேறுபட அமைப்பது, கண்ணால் கண்ட ஒரு உருவத்தில் வேகமாக பலமாற்றங்களைச் சுட்டுவது, சொல்லிணைப்புத்திறன் வெளிப்பாட்டுத் திறன் (கரந்துறைப்பாட்டுபோல) குறியீடுகளை வேறுவிதமாக மாற்றிப் புதுப் பொருள் தரப்பயன்படுத்தும் திறன், தன்திறன் (Originality) சிறுகூறு ஒன்றைப் பெரிதாக்கிப் படைக்கும் திறன், வாக்கியத்தை வேறு வேறு விதங்களில் பிரித்து மறுவிளக்கம் தருதல் அல்லது ஒரு பழைய பயனுடைய ஒரு பொருளுக்குப் புதுப் பயன்பாட்டை அளித்தல் போன்ற கூறுகளுக்கு ஏற்ற சித்திரக்கவிகளை எடுத்துக்காட்டி ஒப்பிட்டு உளவியலறிஞரின் கருத்துக்கு ஏற்ப அவை அமைந்திருப்பது சுட்டப்படுகிறது.

கென்னத்பர்க் வாசகர் நிலையில் ஒரு இலக்கிய வடிவத்தின் முக்கியத்துவம், நோக்கம் பயன் ஆகியவைகளை விளக்கியதற்கு ஏற்ப சித்திரக்கவிகள் அமைந்துள்ளதையும் எடுத்துக்காட்டுகிறார் கட்டுரையாளர்.

தலித் பெண்ணியமும் பெண்ணிய உளப்பகுப்பாய்வும்
(ஞா.த.ப. ஆய்வுமன்றம் - 2000)
(தமிழிலக்கியத்தில் பெண்ணியமும் தலித்தியமும்)

தலித் பெண்ணியம் என்பதால் முதலில் தலித்தியம் பற்றியும், பின்னர் பெண்ணியம் பற்றியும் விளக்கங்கள் தரப்படுகின்றன. பெண்ணியத்தின் ஒரு வகையாகத் தலித் பெண்ணியத்தை எளிதாக எழுதிவிட முடியாது என்றும் ஒரே சமயத்தில் ஒரு தலித் பெண் மும்மடங்கு அடக்கப்படுவதால் இவையனைத்திற்கும் எதிராகப் போராடுவதுடன் ஒட்டு மொத்தமான தலித் சமுதாய முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ள அனைத்துக் கூறுகளையும் அகற்றவும், மீறவும், உடைக்கவும் முயல்வது தலித் பெண்ணியத்தின் நோக்கம் என்றும் கூறுகிறது கட்டுரை.

தலித் பெண்ணியம் தலித் ஆணைத் தன் எதிரியாகக் கொள்ளாது, உயர்ஜாதி ஆணாதிக்க சமூகத்தையே இலக்காகக் கொள்வது; பொருளாதாரச் சுயச்சார்பு, கணவனை விலக்கி வாழ்தல், அறுத்துக் கட்டுதல், சாமியாடுதல் போன்றவற்றில் மேல்சாதிப் பெண்களில் இருந்து வித்தியாசப்படுவது போலவே விதவைக்கோலம், பால்யவிவாகம், உடன்கட்டை ஏறல் போன்ற சாதியச் சடங்குகளைப் பின்பற்றாதத் தன்மையிலும் தலித் பெண்கள் வேறுபடுகின்றனர். இங்கு கற்பு, கணவனின் மேலாதிக்கம், குடும்பச்சிறை போன்றன வலுவிழந்து தொடர் வாழ்வுக்கான போராட்டமே முதன்மை பெறுவதைச் சுட்டிக் காட்டி, தலித் பெண் தனக்கென உள்ள பண்பாட்டுக் கூறுகளை உயர்த்திப் பிடித்து, தன்னை அடையாளம் காட்டி நிலை நிறுத்திக்கொள்ள உதவுவதே தலித் பெண்ணியம் - என விளக்குகிறது இக்கட்டுரை.

அடுத்து பெண்ணிய உளப்பகுப்பாய்வு பற்றிய விளக்கம் இடம் பெறுகிறது. பெண்களின் மன உணர்வுகளை, உள்ளக் குமுறல்களை, விடுபட வேண்டும், என்ற ஆவேசத்தை, தன்னால் முடியும், சாதிக்கவேண்டும் என்ற நம்பிக்கையை தன்மீது பூசப்பட்ட 'பெண்', 'தீண்டாமை', 'தீட்டு', 'பலவீனம் மிக்கவள்' 'இரண்டாம் தரமானவள்' போன்ற கற்பிதங்களை உடைக்க வேண்டும் என்ற உணர்வுகளை வெளிப்படுத்தும் பெண்ணின் பேச்சையும் எழுத்தையும் நடத்தையையும் பகுத்தாய்ந்து புரிந்து கொண்டு, அவள் இவற்றை மீறிவர, அவளை அவள் அறிய உதவுவது பெண்ணிய உளப்பகுப்பாய்வு. பிராய்டுக்குப் பின் வந்த லக்கானின் உளப்பகுப்பாய்வு அடிப்படையிலும் அமெரிக்க நாடுகளில் உருவான பொருள்-உறவுக் கோட்பாடு (Object relation Theory) அடிப்படையிலும் உருவானதே பெண்ணிய உளப்பாகுப்பாய்வு என்றும் கூறுகிறார் கட்டுரையாளர்.

பெண்ணின் தாழ்வு மனப்பான்மை - காரணங்கள் - தீர்வு பாலின விழிப்புணர்வு - ஆண்ட்ரோகைனி - இருபாலின குணநலன்களின் ஒருங்கிணைவைத் தீர்வாக முன்வைக்கும்

சாண்ட்ரா பெம் (Sandra Bem) கூறும் தீர்வு - மாறாக மில்லர் தம் குறைகளாகக் கூறப்பட்ட குணங்களையே பெண்கள் தம் மேன்மைக்கான குணங்களாக மீட்டெடுத்து வளர்த்தலைத் தீர்வாகச் சுட்டல், மெலனி கிளைனின் பொருள் உறவுக் கோட்பாடு - லக்கானின் உளப்பகுப்பாய்வு குறியீட்டுத் தன்மை மிக்க ஒழுங்கமைவைப் (Symbolic Order) பெண்ணியவாதிகள் எதிர்த்தல் - காரணம் 'பெண்மைத் தன்மைகள்' குணங்கள் என்பன இக்குறியீட்டுத் தன்மைமிக்க ஒழுங்கமைவால் கட்டமைக்கப் பட்டவையே என்று விளக்கப்படுகிறது. இவை போன்ற உளப்பகுப்பாய்வுக் கோட்பாடுகளின் வழி தலித் பெண்களின் மனநிலை, தாழ்வுமனப்பான்மை, தம் நிலையை விதி என ஏற்றுக் கொள்ளவைத்த சமூக மனப்பயிற்சி (Social Conditioning) தம் ஆண்களே தம்மை அடிமைப் படுத்த எண்ணுவதற்கு உளவியல் ரீதியாகக் காரணம்கண்டு கூறல், தலித் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களுக்குப் பெண்ணிய நோக்கில் மட்டுமின்றி உளவியல் நோக்கில் காரணம்கண்டு தீர்வு காண முயலுதல் - என்று தலித் பெண்ணியத்தின் வீச்சுகளுக்குப் புதிய பார்வையை இந்த பெண்ணிய உளப்பகுப்பாய்வு வழங்க முடியும் என்று கூறி பாமாவின் 'சங்கதி', 'கருக்கு' ஆகிய நாவல்களை அணுகுகிறது இக்கட்டுரையின் பிற்பகுதி.

ஒப்பிலக்கிய ஆய்வுகள்

தாயுமானவர் - மஸ்தான் சாகிபு பாடல்களில் இறை இயல்பு - தாக்க ஆய்வு

இருவேறு சமயக் கோட்பாடுகளைப் பின்பற்றுபவர்களின் பாடல்களில் அமைந்துள்ள ஒப்புமைக் கூறுகளைக் கூறும் இக்கட்டுரையில் சைவ சமயமும் இசுலாமிய சூபித்துவமும் கூறும் இறை இயல்புகள் - குறிப்பாக இறைமையின் அருள் ஆற்றல் பற்றி ஒப்பிட்டுக் காட்டப்படுகிறது. சைவசித்தாந்தம் இறைவனை முத்திற மேனி கொண்ட, குணங்குறி கடந்தவராய், ஒருருவாய், ஒப்பாற்றவராய், அழிவும் மாற்றமும் இல்லாதவராய்,

சலிப்பில்லாதவராய், இன்ப சொருபராய், அணுவுக்கு அணுவாகவும் மகத்துக்கு மகமாகவும், ஆனந்த உருவாய் இருப்பவர் என்பதைத் தாயுமானவர் உணர்ந்து கூறியதை எடுத்துக்காட்டும் கட்டுரையாளர் சூபித்துவம் கூறும் இறை இயல்புகளை இமாம்கஸ்ஸாலி, அபுல்ஹாசன் நூரி, அபு அலிகஸ்ஸானி, அபுஹால்சாலுமி அபுமுகம்மது அல்ஜீனரய்ரி போன்றவர்களது கருத்துக்கள் அடிப்படையில் எடுத்துக்கூறி இக்கருத்துகள் மஸ்தான் சாகிபு பாடல்களில் படிந்திருந்குமாற்றைக் கூறுகிறார். சூபிகள் கூறும் ஆன்மீகப் பயணத்தின் ஏழு படிநிலைகள் இடம் பெற்றிருப்பதையும் எடுத்துக்காட்டி தாயுமானவர் பாடல்களிலும் மஸ்தான் சாகிபு பாடல்களிலும் இறையருள் வேண்டும் தன்மையில் பெரிதும் நடையடிப்படையிலும், சொல்லாட்சியடிப்படையிலும், பாவகையடிப்படையிலும் ஒத்த தன்மைகள் காணப்படுகின்றன என்பதையும் மஸ்தான் சாகிபு பெற்றிருந்த தாயுமானவரின் தாக்கம் பற்றியும் எடுத்து இயம்புகிறார்.

தமிழ்-தெலுங்கு நாவல்களில் உளவியல்-இணைநிலை ஆய்வு

தமிழ்-தெலுங்கு மொழிகளின் உளவியல் நாவல்களில் இடம்பெறும் உளவியல் கருத்துகள் ஒப்பிடப்படுகின்றன. ஜெயகாந்தனின் ரிஷிமூலமும், புச்சிபாபுவின் (சிவராஜ வெங்கடசுப்பா ராவ்) ‘சிவரிகி மிகிலேதி’ எனும் நாவலும் ஃபிராய்டிய ஏடிபஸ் மனச்சிக்கல் அடிப்படையில் அமைந்திருப்பதை இணைநிலை நோக்கில் எடுத்துக் காட்டப்படுகின்றன. இவ்விணைநிலை ஆய்வில் இவற்றின் பொது மூலமாக பிராய்டின் ஏடிபஸ் மனச் சிக்கல் பற்றிய கருத்துகளும் அதன் அடிப்படையிலான மேலைத் திறனாய்வுகளும் அமைந்திருப்பதைக் கட்டுரை சுட்டுகிறது.

பாரதிதாசன் - ஜாஷ்வா படைப்புகளில் அம்பேத்காரின் பெண் முன்னேற்றம் பற்றிய கருத்துகள் (இணை நிலை - பொது மூலம் காணல்)

தீண்டாமை, சாதி, மத வேறுபாடுகள், எல்லோருக்கும் கல்வி வாய்ப்பு, சமூகத்தில் பெண்களின் இடம், பெண் முன்னேற்றம், பெண்கல்வி, விதவை மறுமணம் போன்ற அம்பேத்காரின் பகுத்தறிவாதக் கருத்துகள் இந்திய படைப்பாசிரியர்கள் அனைவரிடமும் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் இடம் பெற்றிருந்தன. அவ்வாறு அம்பேத்காரின் செல்வாக்குக்கு ஆட்பட்ட கவிஞர்களில் பாரதிதாசனும் ஜாஷ்வாவும் கருத்தளவில் இங்கு ஒப்பிடப்படுகின்றனர். இருவருமே பகுத்தறிவு வாதிகள், புரட்சிக் கவிஞர்கள், சமுதாய ஏற்றத் தாழ்வுகளைக் கண்டித்தவர்கள். பெண்களின் தற்போதைய நிலையும் அவர்கள் அக்கட்டிலிருந்து மீண்டு முன்னேறக் கல்வியே பெண்களுக்கு ஆயுதமாக அமையும் என்பதும் இருவரது கவிதைகளிலும் இணைநிலையாக அமைந்திருப்பதைக் காணலாம். இவ்விணை நிலைக்குக் காரணம் இருவருமே குறிப்பிட்ட காலகட்டத்தின் பிரதிநிதிகளாகத் தத்தம் மொழியிலும் அமைந்திருப்பதும், அக்காலகட்டத்தில் முதன்மை பெறும் கருத்தாக (Spirit of the age) இவை விளங்கியமையும், அம்பேத்கர் அக்காலகட்டத்தின் குரலாக (Mouth piece of the age) ஒலித்தமையுமே எனலாம். இவ்வாய்வும் இரு கவிஞர்களின் படைப்புகளில் காணப்படும் இணை நிலைகளுக்கான பொது மூலம் தேடும் போக்கைக் கொண்டுள்ளது எனலாம். அம்பேத்காரின் கருத்துகளை ஏற்று அவற்றின் செல்வாக்கைத் தன் படைப்புகளில் வெளிக்கொணர்ந்த ஜாஷுவாவின் சமூகச்சூழல் பாரதிதாசனைவிட அதிகச் செல்வாக்கு பெறுவதற்குக் காரணமாக இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது என விளக்குகிறது கட்டுரை.

தமிழ் - தெலுங்கு பக்தி இலக்கிய இடையுறவுகள் (ஏற்பும் செல்வாக்கும்)
(Interaction Between Tamil & Telugu Bhakthi Literature)

ஒருமொழி இலக்கிய வளர்ச்சியில், புதியபுதிய இலக்கிய வகைகளும் வடிவங்களும் தோன்ற மொழிகளுக்கு இடையேயான இடையுறவுகள் காரணமாகின்றன. தமிழ், தெலுங்கு இலக்கிய வரலாற்றில் காணப்படும் இத்தகு இடையுறவுகளை எடுத்துக்காட்டுகிறது இக்கட்டுரை. பக்தி இயக்கம் தோன்றி வளர்ச்சியுற்ற காலகட்டத்தில் இவ்வாறு பக்தி இலக்கியங்களிடையே உறவுகள் உண்டானமையும், இவ்வியக்கம் ஆழ்வார்கள் நாயன்மார்களின் கருத்துகளை வடக்கு நோக்கிப் பரப்பியதையும், பக்தி இலக்கியத்தின் அடிக்கருத்துகள் பரவியதையும் கூறுகிறது கட்டுரை. அரசியல் இடையுறவு, சமூக இடையுறவு சமய இடையுறவு, இலக்கிய இடையுறவு எனும் நான்கு தலைப்புகளில் இரு மொழி உறவுகளை ஆராயும் கட்டுரையாளர் தமிழிலிருந்து தெலுங்கிற்கும் தெலுங்கிலிருந்து தமிழிற்கும் மாறிய முக்கிய இலக்கியங்கள் பற்றியும் குறிப்பிடுகிறார். இக்கட்டுரை ஏற்பும் செல்வாக்கும் பற்றிய அணுகு முறையில் அமைந்தது.

ஏற்பழகியல்
(ஞாலத் தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மன்றம்-மதுரை)

படைப்பாளியிடமிருந்தும் படைப்பிலிருந்தும் கருத்து, பொருண்மை எவ்வாறு வாசகத்திற்கும், பின்னர் வாசகருக்கும் மாறி வருகிறது என்பது பற்றிக் கூறுவது ஏற்பழகியல் கொள்கை (Reception aesthetics). ஒப்பிலக்கியக் கொள்கைகளுள் ஒன்றான இது பொருள்கோள் இயலின் (Hermeneutics) தொடர்ச்சியே. படைப்பு-படைப்பாசிரியன்-படைப்பை நுகரும் வாசகன் இவர்களுக்கு இடையேயான உறவுகளையும், அவ்வுறவுக்கு அடிப்படையாகும் அகப், புறச் சூழல்களையும் சமுதாய உளவியல் நோக்கில் ஆய்கிறது இக்கட்டுரை. புகழ்பெற்ற படைப்பாசிரியரை

விட அவருக்குப்புகழை வழங்கிய மக்களும் தனி மனிதர்களும் ஆய்வின் மையமாக அமையவேண்டும் என வாசகருக்கு முதன்மை அளித்தவர் ஹ்ரிஷ் கடாமர். இதை 'விளைவுகளை ஏற்படுத்தவல்ல வரலாறு' (வாசகரின் ஏற்பு வரலாறு) என்பார். இவ்வேறுபிற்கு இரசனையும் இரசனை மாற்றமும் காரணம். சுவையுணர்வு மாற்றங்களின் வரலாற்றையும் சமூகவியல் நோக்கில் காணலாம் எனக்கூறுகிறது இக்கட்டுரை.

படைப்பாக்கம் முடிந்த பின் படைப்பாளி விலகிக்கொள்ள, அதன் முழுமை வாசகனின் விரிவுரை, விளக்கங்களாலேயே முழுமை பெறுகிறது. எனவே வாசகனும் இங்கு ஒரு கூட்டுப் படைப்பாளி ஆகிறான். பனுவலிடையே உள்ள இடை வெளிகளை இட்டு நிரப்பி முழுமையாகக் காண்பது வாசகனின் வேலை; இவ்வாறு வாசகனே வாசகத்தைத் திறள் உருவாக்குவதை ஏற்பழகியல் Concretization என்கிறது. வாசகன் தன் அனுபவத்திற்கும், கல்வி அறிவிற்கும் ஏற்ப, தன் சார்புகளுக்கு ஏற்ப, ஒரு பிரதியில் மறைந்திருக்கும் அர்த்த அடுக்குகளை விடுத்துக்கொண்டே செல்கிறான். அத்தகு பொருள் விரிவிற்கு ஏற்ற குறிப்புகளை வைத்துப் படைக்கிறான் படைப்பாசிரியன் என்கிறது இக்கட்டுரை.

IV. பல்துறை இணை ஆய்வு

ஞாழல் : (Heritiora litoralis) (தமிழியல் ம.கா.ப.)

ஒப்பிலக்கியம் சுட்டும் பிற துறைசார் ஆய்வுகளில் அறிவியலையும் இலக்கியத்தையும் இணைத்துக்காணும் முறை இன்று அதிகம் பரவிவரும் நிலையில் இக்கட்டுரை தமிழ் இலக்கியங்களில் பாடப்பெறும் பெற்றியை உடைய 'ஞாழல்' (Heritiora litoralis) எனும் நிலையியல் உயிரை 'இதுதான் அது' என அடையாளம் காட்ட நிலையலுயிர் நூலார் தரும் விளக்கங்களை அடிப்படையாகக் கொள்கிறது. நுண்மான்

நுழைபுலத்துடன் இயற்கையை நுணுகி நோக்கி, நோக்கியவற்றையெல்லாம் உவமைகளாக்கிப் படைக்கும் சங்கக் கவிஞர்களின் ஞாழல் பற்றிய சொல்லோவியங்கள் நிலையியலுயிர்நூலார் கூறியிருப்பது போல் சொற் சுருக்கத்துடன், சிலவாகிய சொற்களில் பொருள் விளக்கம் தெற்றெனப் புலப்படுமாறு அமைந்துள்ளன. அவற்றைத் தொகுத்து, நிலையியலுயிர்நூலார் கருத்துப்படி மரபு வழிப்பட்ட வருணனை முறைப்படி வேர், தண்டு, இலை, இணர், மலர், காய், கனி என்ற வரிசையில் வகைப்படுத்திக் காட்டுகிறது கட்டுரை.

சங்க இலக்கியம் கட்டும் ஞாழலை இன்று நிலையியலுயிர் நூலாரால் சுட்டப்படும் ஹெரிடியோரா லிட்டராலிஸ் (Heritioralitoralis) எனும் நிலையியலுயிராக அடையாளம் காட்டும் கட்டுரை அதற்கு அடிப்படையாக சங்க இலக்கியம் தரும் ஞாழலின் விளக்கங்களைக் கொள்கிறது.

1. ஞாழல் மலர்கள் கொத்துக் கொத்தாக நுனிவளர் மஞ்சரியாக, பலகைக்கிளைக்கும் மஞ்சரியாகப் (Compound raceme - Panicle) பூப்பது. (ஐங் 141, நற் 106; குறுத் 8)

2. ஐயவியன்ன சிறுவீ ஞாழல் என்று அதன் மிகச் சிறு மலர்கள் குறிப்பிடப்படுவது.

3. கொத்துக் கொத்தாக ஐந்து/ஆறு உலர் கனிகள் ஒன்று சேர்ந்து புலிநகம் போன்று காய்ப்பதால் புலிநகக் கொன்றை என்று ஞாழல் அழைக்கப்படுவது.

இவ்வடிப்படைகளில் காணும்போது சங்கப் புலவர்களின் நுண்ணிய காட்சியறிவு இன்றைய பயிர்நூலார் ஆராய்ச்சிக்கு உதவக் கூடியது என்று மு.வ. அவர்கள் கூறும் கருத்து உண்மையே என அறியமுடிகிறது என்கிறது கட்டுரை

மராவும் கடம்பும்
(ஒப்பிலக்கியமும் நாட்டுப்புறவியலும், இருநாள் கருத்தரங்கில் அளிக்கப்பட்ட கட்டுரை)

சங்கப்பாடல்களில் இடம்பெற்ற பெற்றியை உடைய பல நிலையியல் உயிர்களில் மராவும் ஒன்று. மரா என்ற சங்கப் பெயர் எந்த நிலையியல் உயிரைச் சுட்டுகிறது என்பதில் பல பொருட்பேதங்கள் உள்ளன. நிலையியலுயிர்நூல் அறிவு மூலம் இச்சிக்கலுக்குத் தீர்வு காண்கிறார் கட்டுரையாளர்.

உரையாசிரியர்களும் நிகண்டாசிரியர்களும் அறிந்த பொருள் அடிப்படையில் சொல்லடைவுகளும் அகராதிகளும் மராவிற்கு வேறுவேறு பொருட்களைத் தருகின்றன. மராவைக் கடம்பு, செங்கடம்பு, வெண்கடம்பு, சுள்ளி, சாலம், ஆச்சா எனப் பல பெயர்களால் சுட்டுகின்றனர். காணப்படும் அகச்சான்றுகளின் அடிப்படையிலும் இவற்றை ஒப்பிட்டு இது மரா அன்று இது மரா அன்று எனப் பிரித்துக் கழிக்கும் முறையில் ஒதுக்கி, எது மரா என முடிவு கட்ட நிலையியல் உயிரியல் நூல்களின் துணையுடன் சரிபார்த்து நிறுவ முயல்கிறது இக்கட்டுரை.

உரையாசிரியர்கள் மராவைக் கடம்பு, செங்கடம்பு, வெண்கடம்பு எனச் சுட்டிச் சென்றிருப்பதால் இக்கட்டுரையில் கடம்பும் கடம்பின் வகைகளும் பற்றிய செய்திகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இக்கட்டுரை இலக்கிய உரைச் சிக்கல் ஒன்றுக்கு நிலையியல் உயிரியல் அடிப்படையில் முடிவு காணும் வழி முறையை நல்குகிறது.

நெய்தல் நில நிலையியல் உயிர்களின் தனித்தன்மை
(ஞாலத் தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மன்ற வெளியீடு) 1997.

நெய்தல் நில நிலையியல் உயிர்கள் தம் வாழிடத்திற்கும் சூழலுக்கும் நீர்வளத்திற்கும் ஏற்பப் பெற்றுள்ள தகவமைப்புகளை

(adoptations) எடுத்துக்காட்டுகிறது கட்டுரை. இத்தகவமைப்புகளை நுண்ணிதின் அறிந்த சங்கப் புலவர்கள் நெய்தல் நிலக் காட்சியமைப்பில் தரும் விவரணைகளில் அவை சுட்டப்படுவதைக் கண்டு கூறுகிறது. தாழையில் முட்டு வேர்கள், ஞாழல், அவிசீனியா போன்றவற்றில் காற்று உறிஞ்சு வேர்கள் (Pnematophores) போன்ற தகவமைப்புகள், சதுப்பு நில உயிர்களுக்கு ஏற்ற 'விவிப்பாரி' எனும் (Vivipary) 'தாய்ச் செடியிலிருக்கும் போதே கனிவிதை முற்றி முளைவிடும் தன்மை' ஆகியன சங்கச் சான்றுகள் மூலம் எடுத்துரைக்கப்படுகின்றன.

மஞ்சரிகள் (Inflorescences)
(வியாழ வட்டம், ம.கா.ப. 1989)

தமிழ் இலக்கியங்களில் மலர்கள் மிக அதிக அளவில் இடம் பெறுகின்றன. குறியீடாக, உள்ளுறையாக, உவமையாக இடம்பெறும் இம்மலர்களுள் சில திணைகளுக்கு உரிய உரிப் பொருளைச் சுட்டவும் (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, உழிஞை, காஞ்சி, வெட்சி, கரந்தை போன்று) பயன்படுகின்றன. இவற்றுள் சில கொத்துக் கொத்தாக மலரும் தன்மையன. சங்கப் புலவர்கள் இப்பூங் கொத்துகளை விவரிக்கும்பொழுது மிகச் சரியாக, துல்லியமாக உணர்த்தக் கூடிய சிலவாய சொற்களால் விளக்கியுள்ளனர். இவ்விளக்கங்களை, நிலையியல் உயிர்நூலார் கூறும் விளக்கங்களுடன் பொருத்திக் காட்டி, வகை பிரித்து விளக்குகிறது இக்கட்டுரை.

பூங்கொத்து இலக்கியங்களில் இணர் என்றும் மஞ்சரி என்றும் சுட்டப்படுகின்றது. கவிஞர்கள் மலரின் வண்ணத்திற்கும் வடிவத்திற்கும் ஏற்ப, பொன்னிணர், வாலிணர், செவ்விணர் எனவும் தாழிணர், நீடிணர், விரியிணர், குவியிணர் எனவும் கூறுகின்றனர். இவற்றை நிலையியல் உயிர் நூலார் கூறும் நுனிவளர் மஞ்சரி, நுனிவளரா மஞ்சரி, பூத்தலை மஞ்சரி, குடை மஞ்சரி, காரிம்ப் வகை, கதிர்வகை மஞ்சரி, மடல் கதிர்

ஆகியவற்றுடன் ஒப்பிட்டுக் காட்டும் இக்கட்டுரை சங்கப் பாடல்களின் கலை நுணுக்கத்துடன் பொருள் வெளிப்பாட்டுத் திறனையும் எடுத்துரைக்கிறது. இதற்கு எடுத்துக் காட்டாக, கொன்றை, வேங்கை, காஞ்சி, பூளை, கடம்பின் துணை ஆர் கோதை, குவியிணர்க்குரவு, குவியிணர்த் தோன்றி 'முகை தலை திறந்த' முல்லை, வரகு, சேம்பு, வாழை, வெண்கடம்பு ஆகிய மலர்க்கொத்து வருணைகளைச் சான்றுகளாகக் கொள்கிறது. ஒழுங்கான அமைப்புடைய இணர்களேயன்றி தனிப்பட்ட மாறுபாடுடைய இணர்கள் பற்றியும் தமிழ்ப் பாடல்கள் சுட்டுவதை எடுத்துரைக்கிறார் கட்டுரையாசிரியர். உறிப்பாந்தோடியம் (Hypanthodium) எனும் இணர் தமிழில் 'கோளி' எனும் சொல்லால் சுட்டப்படுவதைக் 'கோளிஆலம்' எனக் கூறுவதிலிருந்து விளக்குகிறார்.

திருக்குறளில் நிலையவலுயிரியல்

(உலகத் திருக்குறள் மாநாடு கருத்தரங்கக் கட்டுரைக் கோவை தமிழ்நாடு திருக்குறள் பேரவை - 2000)

திருக்குறள் மனித வாழ்வை மணம் பெறவைக்கும் அரிய கருத்துக் கருவூலமாக இருப்பது போன்றே, பல்வேறு அறிவுத்துறைகள், வாழ்வியல் கோட்பாடுகள் பற்றிய குறிப்புகளையும் கொண்டது எனக் கூறும் இக்கட்டுரையாளர் உவமை மூலமும் சுருங்கக் சொல்லிக்கருத்தைப் பதிய வைக்கும் நிலையிலும் குறட்பாக்களில் நிலையியலுயிர்களின் வெளியமைப்பியல், வாழிடம், வாழ்பண்பு போன்ற செய்திகள் அளிக்கப்படுவதை எடுத்துக் காட்டுகிறார். பெயரளவில் சுட்டப்படும், நெருஞ்சி, திணை, தாமரை, கரும்பு, குவளை ஆகியன பற்றி நிலையியல் உயிர்நூல் வழி விளக்கம் தரப்படுகிறது.

புல்லின் வகையாகத் தினையும் பனையும், புதல்-மரம்-வள்ளுவர் சுட்டும் மர வகைகள்-இணர், மலர், மலர்நீட்டம்-காழில்கனி-விதையும் முளையும் என்ற நிலையியலுயிர்நூல் உண்மைகள் எடுத்தோதப்படுகின்றன. அடுத்து பெயர் குறித்துச்

சொல்லப்படும் நிலையியல் உயிர்களில் அனிச்சம் எது என்பதை நிறுவ நிலையியல் உயிர்நூல் விளக்கங்கள் அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றன. அனிச்சத்தை நிலையியலுயிர் நூலார் சுட்டும் அனகாலிஸ் ஆர்வென்சிஸ் (Anagallis Arvensis) என்று நிறுவ அதன் 'மோப்பக் குழையும் அனிச்சம்' என்ற தொடருக்கு அறிவியல் விளக்கம் தந்து 'இதுதான் அது' என நிறுவுகிறது கட்டுரை.

பாவைப் பாடல்களில் இயற்கை (தமிழ் மாருதம் - 2000)

பாவைப் பாடல்களின் நோக்கங்கள், பாவை நோன்பு, பாவைப் பாடல்களின் பயன், தமிழில் பிற பாவைப்பாடல்கள் ஆகியவற்றை விளக்கியபின் பாவைப்பாடல்களில் இயற்கை இடம்பெறுமாற்றை விடியல் வருணனை, புலரிக் காட்சிகள், மழை எனும் அடிப்படையில் இக்கட்டுரை விவரிக்கின்றது. இவ்விவரங்களின் ஊடே இயற்கை வருணனை கால ஆய்வு முடிவுக்கு உறுதுணையாய் இருப்பதை வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று எனும் தொடர் விளக்கத்தில் எடுத்துரைக்கிறது; புலரிக் காட்சிப் படைப்பில், நிலையியல் உயிர் நூலார் சுட்டும் ஒளிச்சார்புடை இயக்கம் (Photonastic Movement) சுட்டப்படுவதை உங்கள் புழக்கடைத் தோட்டத்து வாவியுள், செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து ஆம்பல் வாய் கூம்பின காண், எனும் பாடலடிகள் மூலம் விளக்குகிறது. ஒளி வெள்ளம் பரவப் பரவத் தாமரை போன்ற வெளிச்சத்தின் வரவால் விரியும் சிலமலர்கள் போல, கருணை வெள்ளம் பெருகப் பெருக விரியும் விழித்தாமரையைச் சுட்டும் வருணனையையும் இவ்விளக்கத்தின் மூலம் பொருளாழம் காணச் செய்கிறது. இசைக்குச் செடி கொடிகள் இயங்கும் தன்மையை உரையாசிரியர் கூறும், "காலத்தில் இளமை இத்தாமரையை மொட்டிக்கச் செய்கிறது; இவர்களுடைய (பாவை நோன்பு நோற்கும் பெண்கள்) ஆர்த்தத் த்வனியாகிற ஆதித்யன் அலரச் செய்கிறது" - என்ற விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எடுத்துரைக்கிறது.

இவற்றுடன் இயற்கையில் இறைமையைக் காணும் தன்மையும், உவமைகளின் தத்துவச் சார்புகளையும், உளவியல் அடிப்படையில் பாவைப் பாடல்களைக் காண்பதற்குரிய வழிமுறைகளையும் சுட்டுகிறது இக்கட்டுரை.

முருகனுக்கு உரிய மலர்கள்

இக்கட்டுரை முருகனின் வழிபாட்டிலும் அலங்காரத்திலும் பயன்படக்கூடிய நாள் மலர்கள் பற்றி நிலையியல் உயிர்நூலார் தரும் விளக்கங்கள் அடிப்படையில் முருகனைத் துதிக்கும் திருப்புகழ், திருவலங்கல் திரட்டு, பரிபாடல், நற்றினை, புறநானூறு, காசிக் கலம்பகம் போன்ற நூல்களின் விளக்கங்களது துணையுடன் எடுத்துக் காட்டுகிறது. காலை, மாலை, உச்சி பூசைக்குரிய நாள் மலர்களும், கடம்பு, மரா, குரா, காந்தள், வெட்சி ஆகிய மலர்களும் முதன்மை தந்து விளக்கப்படுகின்றன.

தாமரை

இக்கட்டுரை தமிழிலக்கியத்தில் பாடப்பெறும் பெற்றியை உடைய மலர்களுள் சிறப்பிடம் பெறும் தாமரை பற்றி நிலையியல் உயிர்நூல்வழி விளக்குகிறது, தாமரையின் இனமான விக்டோரியா அமேசானிகா (Victoria Amazonica) வின் இலை ஒரு சிறு பெண்ணைத் தன் மேல் தாங்கக்கூடிய வலிமை உடையது என்பதைக் கூறி இதன் மூலம் புரி நெகிழ்ந்த தாமரை மலரின் கண் வீறெய்தி, திரு நயந்திருந்த தன்மை உண்மையாகலாம் என எடுத்துரைக்கிறது. தாமரை மலரில் பல உறுப்புகள் அடுக்குகளாக, உள்வரிசைகளாக அமைந்து இருப்பது மன்னனின் படை உறுப்புகளுக்கும் மதுரையின் நகர அமைப்பிற்கும் உவமையாகி வந்திருப்பதைக் கட்டுரை சுட்டுகிறது; இத்துடன் மலரின் ஒளிசார் இயக்கம் பற்றியும், தாமரையின் மருத்துவப் பயன்கள் பற்றியும் எடுத்தியம்புகிறது.

நிலையியல் உயிர்ப் பெயர்ச் சொல்லாக்கத்தில் எதிர்ப்பட்ட இடர்பாடுகளும் சில தீர்வுகளும்

அறிவியல் தமிழாக்கத்தின் பொழுது கலைச் சொல்லாக்கத்தில் இடர்ப்பாடுகள் தோன்றுவது போலவே நிலையியல் உயிர்களின் பெயர்களைத் (நிலையியல் உயிர்நூலார் சுட்டும் பெயர்கள்) தமிழில் தர முனையும்போது ஏற்படும் சிக்கல்களையும் . சில தீர்வுகளையும் முன்வைக்கிறது இக்கட்டுரை.

நிலையியல் உயிர்களை (தமிழிலக்கியத்தில் இடம் பெறுவனவற்றை) அடையாளம் காண்பதில் ஏற்படும் சிக்கலில் உரையாசிரியர்களுக்கும் நிகண்டாசிரியர்களுக்கும் பெரும் பங்குண்டு; பெயர் விளக்கம் தரும்போது பெயர்களை மாற்றி, மாற்றித்தந்து பொருள் மயக்கம் ஏற்படுத்தியுள்ளனர் எனச் சுட்டும் கட்டுரையாளர் அவை எவை என அடையாளம் காணமுயலும் பொழுது நிலையிலுயிர் நூலார் சுட்டும் ஆங்கில, இலத்தீன் பெயர்களைத் தமிழ்மொழி மரபிற்கு ஏற்ப மாற்றித் தருகையில் மொழி மரபுச்சிக்கலும், இலக்கணச் சிக்கல்களும் உருவாகின்றன என்கிறார்.

(எ.டு) ஒலிபெயர்த்து எழுதுதல்

காஞ்சியைக் குறிக்கும் ப்ரீவியா நூடிஃப்ளோரி
வேங்கை-டீரோ கார்ப்பஸ் மார்சுப்பியம்
குருக்கத்தி (மாலதி) - உறிப்டேஜ் மடாப்லேட்டா
மரா-ஷோரியா ராக்ஸ்பர்கை

இங்கு மொழிமாற்றம் செய்யும்பொழுது எழுத்துப் பெயர்ப்பாகப் (Transliteration) பெயர்கள் சுட்டப்படுகின்றன. எனவே மொழி முதலாகா எழுத்துக்கள், அடுத்தடுத்து வாரா ஒற்றெழுத்துகள் ஆகியன பற்றிய கவலை இல்லாது இவ்வாறு பெயர்க்கப்பட்டுள்ளன.

2. எழுத்துப் பெயர்க்கும் பொழுது மொழி மரபிற்கேற்ப மாற்றித் தருவது. காந்தளைக் குறிக்கும் (Gloriosa Superba) எனும் பெயரை க்ளோரியோசா எனக்குறிப்பிடாது குளோரியோசா எனக் குறிப்பது என்ற எடுத்துக்காட்டுகள் மூலம் சிக்கல்கள் சுட்டப்படு கின்றன.

கலைச் சொல்லாக்கமும் இலக்கியமும்

இயற்கையில் தாம் நுண்ணிதின் கண்டுணர்ந்த உண்மைகளை உயர்வு நவிற்சியின்றி, உண்மைத் தன்மையுடன் சங்கக்கவிஞர்கள் வெளிப்படுத்தும் நுண்காட்சிப் பதிவுகளை, பொருத்தமுற தம் பாடல்களில் பயன்படுத்திய சொற் கோவைகளை, நிலையியல் உயிர்கள் பற்றிய கலைச் சொல்லாக்கத்திற்குப் பெரிதும் துணையாகக் கொள்ளலாம் என விவரிக்கிறது இக்கட்டுரை.

கலைச் சொல்லாக்கத்தின் பொழுது, மக்கள் வாழ்வில் பயன்படுத்தும் எளிய நடைமுறைச் சொற்கள், அவர்கள் அறிந்த இலக்கியச் சொற்கள் ஆகியவற்றை எடுத்துக் கொள்ளலாம் என்பது கலைச் சொல்லாக்கக் கொள்கைகளுள் ஒன்று. அவ்வடிப்படையில் தமிழ் இலக்கியச் சொற்களைப் பரிந்துரை செய்கிறது இக்கட்டுரை.

(எ.டு) விழுது - தாங்கு வேர்கள் (Proproots)

வீழ்தாள் - முட்டுவேர்கள் (Stilt roots)

இவர் நணை வளர்கொடி - நுனி நிமிர் நிலம்படர் தண்டு (Decumbent Stem)

முழாவரை - காடெக்ஸ் (Caudex)

தூம்பு, புழலுடைத் தண்டு - உள்ளீடற்ற, குழல் போன்ற தண்டு (Tubular stem)

நுகும்பு - வாழையிலையின் நுனி பற்றுக்கம்பி போல் சுருண்டநிலை (Cirrhose apex)

இலையில் மலர் - மலருங்காலத்து இலையூழ்த்தும் தன்மை (Hysterantherous)

காழில்கனி - விதையில்லாக்கனி - (Partheno carpy)

ஆர்க்கு - சூலகக்காம்பு ஏற்படுத்தியத் தழும்பு (Hilum)

கோளி - மலர் இணரே கனியாதல் (Hypanthodium)

இவ்வாறான ஆய்வுகள் மூலம் உரையாசிரியர்கள் ஏற்படுத்தியுள்ள உரைக் குழப்பங்களையும் நிகண்டாசிரியர்கள் சுட்டும் ஒரு பொருட் பல சொல் மூலம் ஒன்றைப் பிறிதொன்றாகத் தவறாகக் கருதும் பொருட் திரிபுகளையும் அகற்றித் தெளிவுடன் புரிந்து கொள்ள முடியும் என்றும் இலக்கியக் கல்வியில் உண்மையான உவமையின்பத்தைப் பெற இயலும் என்றும் கூறும் கட்டுரை இவ்விடர்களை நீக்க இலக்கியப் புலமை உடையோரும், நிலையிலுயிர் வல்லுநரும் இணைந்து செயல்பட வேண்டும் எனக் கூறுகிறது.

தமிழில் கணினி கலைச் சொல்லாக்கம்

கலைச் சொல்லாக்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகள், கலைச்சொற்களைத் தரப்படுத்துதல், மொழிபெயர்ப்புகள், எழுத்துப் பெயர்ப்பு என்ற விளக்கங்களை முதலில் தரும் கட்டுரையாளர் இரண்டாம் பகுதியில் கணினி பற்றிய கலைச் சொல்லாக்கத்தில் ஏற்படும் இடர்ப்பாடுகள், அதைத் தீர்க்கும் வழிகள் பற்றிய செய்திகளைத் தருகிறார்.

1. பொதுமக்கள் பேச்சு மொழியில் இருந்து எடுக்கும் சொற்களுக்குக் கலைச் சொல் ஏற்றம் தருதல்.

2. சாமுவேல் பிரஷ்கிரீன் தந்த கலைச் சொல்லாக்கக் கோட்பாடுகள்

3. மொழிபெயர்ப்பு-கடன்பெறல்-கலப்புச்சொல் -கலைச்சொல் (ஆங்கில) உணர்த்தும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழில் குறுகிய, திட்பமுடைய சொற்களை மொழி மரபுக்கு ஏற்ப உருவாக்கல்,

4. இரு சொற்களை (தமிழில் வழக்கில் பயன்படுத்தப்படும்) சொற்களைக் கொண்டு உருவாகும் புதிய சொல்லைக் கலைச் சொல்லாக்கல்

5. காரணப் பெயர், சரியான நேரடியான மொழிபெயர்ப்பு: (Abacus) மணிச் சட்டகம் (Soft ware) மென்பொருள்;

6. தவறான நேரடியான மொழி பெயர்ப்பு: (Bit-துண்டு/ துணுக்கு) (Bug-மூட்டைப்பூச்சி)

7. கலப்பு மொழிபெயர்ப்பு (And gate - அண்ட் கதவு (உம்மினைக்கதவு) Binary substraction - பைனரி கழித்தல்; (Cathode ray tube - கேதோடு கதிர்க்குழாய்;

8. பல சொல் ஒரு பொருளைக் குறிக்க - Computer- கணிப்பொறி; கணிப்பான், கணினி (தரப்படுத்தப்பட்ட சொல்)

9. ஒரு சொல் பலபொருள் - வரிசை என்ற ஒரே சொல் (bubble sort, row, Serial, Sequence, string, list - ஆகிய பல சொற்களுக்கும் இணையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது;

10. தலையெழுத்துக் குறுக்கீட்டுச் சொல்லை அப்படியே பயன்படுத்தல் - BASIC, FORTRAN, LAZER CD ROM).

11. காரணத்தோடு உவமை போன்று கூறும் சொற்களை மொழிபெயர்த்தல் Cursor-சுட்டுவாள், ஒளிர்புள்ளி, Mouse - சுட்டெலி, Daizy wheel Printer - டெஸ்சி சக்கர அச்சடிப்பான் போன்ற மொழிபெயர்ப்பு வகைகள் சுட்டப்பட்டு விளக்கப்படுகின்றன. சிக்கல்களைத் தீர்க்கும் 12 வழிமுறைகள் சுட்டப்பட்டுள்ளன.

தமிழில் கணினியின் வரலாறு

தமிழ் மொழியை ஊடகமாகக் கொண்டு கணினியின் அறிமுகம், கணினியின் செயல்பாடு, கணினி மொழிகள், மென்பொருட்களின் பயன்பாடு குறித்து எழுதுவதும் கற்பதும் ஒருநிலை. கணினிப் பயன்பாட்டில் தமிழ் மொழியைப் பயன்படுத்துவது பிறிதொரு நோக்குநிலை, இதுவும் இரு பிரிவுகளில் காணத்தக்கது.

1. தமிழ்மொழியைக் கணினியில் தகவல் சேமிப்புக்கும், தகவல் பரப்புவதற்கும் பயன்படுத்துவது.

2. கணினியை ஒரு தட்டச்சுப்பொறி போலப் பயன்படுத்துவதும் தகவல் சேகரிப்பின் அதிகபட்ச நிலையாகத் தகவல் பக்கங்களை அமைப்பது.

இந்நிலைகளில் கணினியில் தமிழ்பெறும் இடம்பற்றி வரலாற்று அடிப்படையில் கட்டுரை விளக்குகிறது. மொழிச் செயலாற்றியைத் (Word Processor) (சொல்லாளர்) தமிழ் மொழி கொண்டு செயல்படுத்தத் தேவையான மென்கலப் பொதிகள் (Software packages) பற்றி (பாரதி, கபிலன், பிரகாஷக், கார்த்திக் போன்ற பல); கணினி விசைப் பலகைக்கும் எழுத்துக்களுக்கும் மாற்றுகளைத் தரும் தமிழ் எழுத்து மாற்றிகள் (ஆதவன், மயிலை, முரசு, இணைமதி போன்றன) பற்றியும் தமிழ் இணையம் பற்றியும் தமிழ் இணைய தளங்கள்/தனி ஆட்களின் வலைப்பக்கங்கள்

போன்ற செய்திகளும் கட்டுரையில் வரிசைப் படுத்தப்பட்டுள்ளன. தமிழ் கம்யூட்டர், தமிழ் இணையம், இண்டர்நெட் போன்ற தமிழ் இதழ்கள் கணினியின் செயல்பாடு, செயல்பாட்டு நெறிமுறையில் தீர்வு காணுதல் - வினா - விடை முறையில் தீர்வு காணுதல் போன்று கணினித் தகவல் தரவென்றே வெளியிடப்படுதல்-தமிழிலேயே கணினியைச் செயல்படச் செய்யக்கூடிய கணினி மொழி (கனி மொழி - அ. ஆனந்த், வே. வெற்றிச்செழியன் - ஒலியியல் அமைப்பு வடிவம் (Phonetic interphace) எழுத்துப் பிறப்பு அடிப்படை எழுத்து வடிவம் (genetic interphace) ஆகிய வழிகளில் தமிழ் எழுத்து அமைப்புகளை உருவாக்கியோர் பற்றிய செய்திகள், 'கணியன்', 'நளினம்' போன்ற சொற்தொகுப்புகள் பிற இந்திய மொழிச் சொற் தொகுப்புகள் போன்றே தமிழ் சொற்தொகுப்புகளான இளங்கோ, பாரதி, பிரகாஷக் போன்றவற்றின் வரவு -'பதமி' எனும் மென்கலம் - 'சென்னைக்கவிகள்'தந்துள்ள குறளமுது போன்ற ஒலி-ஒளியமைப்புடைய வலைத் தகவல் பக்கங்கள் ஆகியன பற்றிய செய்திகள் விளக்கப்படுகின்றன.

பாரதிதாசனின் கல்விக் கொள்கைகள்

கல்வியின் நோக்கம், கல்வியின் அமைப்பும் முறையும், செயல்பாட்டு முறை, பயிற்றுவிக்கும் முறை, பயிற்சி மொழி ஆகியன பற்றிய கருத்துக்களை நிரல்பட ஒழுங்குபடுத்தி எடுத்தியம்புவதைக் கல்விக் கொள்கை எனலாம்.

நாட்டு முன்னேற்றம், சமுதாய முன்னேற்றம், தனி மனித முன்னேற்றம் ஆகிய மூன்றனுள் சமுதாய நோக்கை அடிப்படையாகக் கொண்டவை பாரதிதாசனின் கல்விக் கொள்கைகள்

1. அனைவருக்கும் கல்வி
2. கட்டாயக் கல்வி
3. தமிழ் வழிக் கல்வி

இம்மூன்றையும் வற்புறுத்தும் பாரதிதாசன், பெண் கல்வியை மிகவும் வற்புறுத்தியவர். நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் எனும் கோட்பாட்டினைக் 'குடும்ப விளக்கு' மூலமும் எல்லா நலமும் ஈந்திடும் கல்வி இல்லா வீட்டை 'இருண்ட வீடென்று' 'இருண்ட வீடு' மூலமும் விளக்கும் இவர் தாய்மொழி வழிக்கல்வியையும் வற்புறுத்துகிறார் என எடுத்துக் கூறுகிறது இக்கட்டுரை.

தாய்மொழிக் கற்பித்தல் - கற்றலில் மொழியாய்வுக் கூடம்

தாய்மொழியைக் கற்பிக்கும் பொழுது மாணவன் அடிப்படையான நான்கு மொழித் திறன்களிலும் பயிற்சி பெற வாய்ப்பு அளிக்கப்படவேண்டும். நேரிடையாக வாய்மொழிப் பயிற்சியும், கேட்கும் திறனில் தனித் தகைமையும் பெற வாய்ப்பளிப்பது மொழியாய்வுக் கூடம். படிக்கும் பொழுது சொற்களுக்கு ஏற்ப இருக்க வேண்டிய இயல்பான இடைவெளி, பேச்சின் போக்குகளுக்கு ஏற்ப இருக்க வேண்டிய அழுத்தம் போன்ற கூறுகளிலும் மொழிக்கட்டமைப்பு, தொடர் உருவாக்கம், அண்மை உறுப்புகளால், சொற்கள் பெறும் பொருள் வேறுபாடுகள், கிளை மொழிகள், தனி மனித பேச்சு வழக்கு, மயங்கொலிகள் போன்ற பல செய்திகளில் மொழியாய்வுக் கூடம் விளக்கமாக, நுணுக்கமாக பயிற்சி அளிக்க முடியும் எனும் இக்கட்டுரை ஒரு உரைச் சித்திரமாக மதுரை வானொலியில் வழங்கப்பட்டது.

அனைத்துலக சமயங்களும், அமைதி ஆக்கமும்-பௌத்தமும் உலக அமைதி ஆக்கமும்

உலக அமைதிக்குச் சமயங்களின் பங்கு பற்றி ஆராய்ந்த கருத்தரங்கில் படிக்கப்பட்டது இக்கட்டுரை. பௌத்த மதம் உலக அமைதி ஆக்கத்திற்கு ஆற்றிய, ஆற்ற வேண்டிய பங்குகளையும் ஆற்றத் தவறிய சூழல்களையும் எடுத்துக் காட்டுகிறது. இதில் அமைதியான அரசியல், சமூக நிலைகளைப் பெற பௌத்த சமயம் கூறும் கருத்துக்கள் நிரல்படுத்தப்பட்டுள்ளன.

பௌத்த சமயத்தின் தோற்றம், தோற்றுவித்த ஞானியும் அவரது சீடர்களும், அச்சமயத்தின் கோட்பாடுகள் ஆகியவற்றை விளக்கி மாற்றங்களை விளைத்த பெரு நூல்கள், போதனைகள், கொள்கை வளர்ச்சியும் பிரிவுகளும், இன்றைய நிலையில் மாறுபாடுகள், அமைதி ஆக்கத்திற்கான வழி முறைகள் என்பன பற்றி விளக்குகிறது கட்டுரை.

முனைவர். செ. சாரதாம்பாள் நூல்கள்

செவ்வியல்

'செவ்வியல்' எனும் நூல் 1) அறிமுகம், 2) சொற்பொருள் விளக்கம், 3) செவ்வியல் கருத்து வளர்ச்சி வரலாறு, 4) செவ்வியல் கோட்பாட்டு வரையறை விளக்கம், 5) இலக்கியத்தில் செவ்வியல் எனும் ஐந்து இயல்களைக் கொண்டுள்ளது. இறுதியில் துணைநூற்பட்டியல், செவ்வியல் கலைச்சொல் நிரல், பெயர் பொருள் நிரல் போன்றன இணைக்கப்பட்டுள்ளன.

'செவ்வியல்' என்றால் என்ன என்பதையும் செவ்வியல் இலக்கியப் பண்புகளையும் அக்கருத்துருவாக்க வரலாற்றையும் சங்கச் செவ்வியலின் மாண்பையும் காண்பதே இந்நூலின் கருத்தாகக் கொண்டு இந்நூலை இயற்றியுள்ளார் நூலாசிரியர்.

அறிமுகப் பகுதியில் செவ்வியல் பற்றியும் செவ்வியல் கருத்து வளர்ச்சி பற்றியும் கூறியுள்ளார். மிகச் சிறந்த உயர்ந்த செம்மை மிக்க இலக்கிய நூல் யாதாயினும் அதைச் 'செவ்விலக்கிய நூல்' எனலாம் என்று எண்ணும் அளவு கருத்து வளர்ச்சி பெற்றமையை நூலாசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார். ஆயினும் செவ்வியல் என்பது ஒரு காலகட்டத்திற்குரிய இலக்கியமாக விவரிக்கப்படுகிறது. அவ்வியக்க வளர்ச்சி பற்றியும் அப்பண்புகள் பற்றியும் தெளிவாக அறிதல் வேண்டும் என்கிறார்.

'செவ்வியல் சொற்பொருள் விளக்கம்', 'செவ்வியல் கருத்து வளர்ச்சி வரலாறு' ஆகியவற்றைத் தொகுத்துத் தருகிறார். 'செவ்வியல் கோட்பாட்டு வரையறையும் விளக்கமும்' 'செவ்வியலும், புனைவியலும்' வளர்ச்சி நிலையில் வேறுபடும் அடிப்படைப் பண்புகளும் வேறுபாடுகளும் சுட்டப்படுகின்றன. நூலின் இறுதிப் பகுதியில் இலக்கியங்களில் செவ்வியல் பங்கு பற்றி எடுத்துக் காட்டுகளுடன் விளக்கியுள்ளார். தனி மனிதனுக்கு மட்டுமின்றி அனைவர்க்கும் உரியது என்றெண்ணியபடி கருத்துக்கள் பொதுமைப்படுத்திக் கூறப்பட்டிருக்கும் செவ்வியல் பண்புகளை இலக்கியத்துடன் பொருத்திப் பார்க்கும் முயற்சி, அதன் உலகளாவிய விளக்கத்திற்கு மேலும் உதவுவதாகும் என்பதைப் புறப்பாடல்களைக் கொண்டு விளக்குகிறார்.

சங்கச் செவ்வியல்

'சங்கச் செவ்வியல்' எனப் பெயரிய இந்நூல் செ.சாரதாம்பாள் முனைவர் பட்டத்துக்கு அளித்த ஆய்வேட்டின் நூல் வடிவமாகும். இந்நூலின் கண் செவ்வியற்கோட்பாட்டை மிகத் துள்ளியமாக விளக்கியுள்ளார்.

1. செவ்வியல் கொள்கைவிளக்கம்
2. தொல்காப்பியம்
3. சங்க இலக்கியப் பண்பும் செல்வாக்கும்

என்ற மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்து அவற்றிற்கிடையே 17 இயல்களில் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது. அவை

1. செவ்வியல் சொற்பொருள் விளக்கம்
2. செவ்வியல் வளர்ச்சி
3. செவ்வியல் பண்புகள்
4. தொல்காப்பியமும், செவ்வியல் பண்புகளும்
5. தொன்மையுடையமையும், தலைமையுடைமையும்

6. மரபுடைமை
7. காலவரையறையும் சமுதாயச்சித்தரிப்பும்
8. பாடுபொருள்
9. பாடுபொருள் வெளிப்படுத்தும் முறை
10. பாடுபொருள் முடிவுறும் தன்மை
11. மகிழ்வுறுத்தலும் அறிவுறுத்தலும்
12. யாப்பமைதி
13. மாந்தர் படைப்பு
14. புராண மரபுக்கதைகள்
15. இயற்கைப் புனைவும் கற்பனையும்
16. சங்க இலக்கியத்தில் இலக்கிய இயக்கக் கூறுகள்
17. பிற்கால இலக்கியங்களில் சங்க இலக்கிய மரபும், செல்வாக்கும்

எனும் 17 இயல்களைக் கொண்டது இந்நூல். முடிவுரை, பின்னிணைப்பு, துணைநூற்பட்டியல், கலைச் சொற்பொருள் நிரலும் வரிசை முறையில் வகைப்படுத்தித் தரப்பட்டுள்ளன.

செவ்வியற் பண்புகளை முழுமையாக வரையறை செய்து கொண்டு அவற்றைச் சங்க இலக்கியத்தில் பொருத்திக்காட்டி அதனைச் செவ்வியல் இலக்கியம் என நிறுவுகிறது இந்நூல். பல்வேறு மொழிகளில் செவ்விலக்கியங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ள கருத்துக்களைச் சற்று சுருக்கமாகவே ஆசிரியர் தந்துள்ளார்.

'செவ்வியல் பொருள் விளக்கம்' செவ்வியல் வளர்ச்சி, செவ்வியல் இலக்கியங்கள், செவ்வியல் இலக்கியங்களில் கருத்துக்களைச் சொல்லும் முறையில் ஒருமைப் பண்பு பின்பற்றப்படுகிறது என்பனவும் செவ்வியல் இலக்கியங்கள் பண்டைக் கவிஞர்களின் படைப்புக்களைப் பின்பற்றி அமையவேண்டும் என்பதால் மரபைப் பின்பற்றும் பண்பும் இதன் அடிப்படைப்பண்பாக அமைந்துள்ளது என்றும் கூறும் ஆசிரியர் செவ்வியல் பற்றி சிற்சில பொதுப் பண்புகளைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

அடுத்து தொல்காப்பியத்தில் சுட்டப்படும் செவ்வியல் பண்புகள் பங்கு பற்றிச் சற்று ஆழமாக விளக்கிக் கூறியுள்ளார். தொல்காப்பியத்தில் அமைந்துள்ள சில இலக்கியக் கோட்பாட்டு விதிகள் கிரேக்க இலக்கியத்தில் அமைந்துள்ள சில செவ்வியல் பண்புகளுடன் பொருந்தி வருகின்றன போன்றவற்றை இப்பகுதியில் சுருக்கித் தந்துள்ளார் நூலாசிரியர்.

சங்க இலக்கியத்தில் செவ்வியல் பண்புகள் பற்றிப் பதினொரு (5முதல் 15வரை) இயல்களில் விளக்கியுள்ளார். ஒவ்வொரு இயலும் ஒரு செவ்வியற் பண்பு அடிப்படையில் அமைந்துள்ளது. சங்க இலக்கியப் பண்பும் செல்வாக்கும் பற்றிச் 'சங்க இலக்கியத்தில் இலக்கிய இயக்கக் கூறுகள்' 'பிற்கால இலக்கியங்களில் சங்க இலக்கிய மரபும் செல்வாக்கும்' என்ற பகுதியில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. நடப்பியல், புனைவியல், குறிக்கோளியல் மூன்றும் ஒன்றிற்கொன்று வேறுபட்டனவே தவிர அவை முற்றிலும் முரண்பட்டன அல்ல என்பதைச் சங்கச் சான்றுகளுடன் விளக்கியுள்ளார்.

அடிக்கருத்தியல்

இந்நூல்,

1. அடிக்கருத்தியல் சொற்பொருள் விளக்கம்
2. தலைமைப் புனைவுக் கூறு
3. மேலை நாட்டுத் திறனாய்வாளர் கருத்துகள்
4. தமிழ் இலக்கியங்களில் அடிக்கருத்து பற்றிய கருத்துகள்
5. அடிக்கருத்தின் பொது வரையறைகள்
6. ஆற்றுப்படைபபாடல்களில் அடிக்கருத்து

எனும் 6 இயல்கள் கொண்டது.

அடிக்கருத்தியல், தலைமைப்புனைவுக் கூறு பற்றிய இரு இயல்களிலும் அடிக்கருத்து பற்றியும் அடிக்கருத்து உருவாக்கத்தில்

துணைநிற்கும் தலைமைப் புனைவுக் கூறுகள் பற்றியும் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. அடிக்கருத்து பற்றித் தமிழில் விளக்கும் ஒப்பிலக்கிய நூல்களுள் குறிப்பிடத் தக்கது சச்சிதானந்தத்தின் 'ஒப்பிலக்கியம் அறிமுகம்; அடிக்கருத்து பற்றிய முனைவர் பட்ட ஆய்வேடுகள் இரண்டு வெளிவந்துள்ளன. ஆனிலெட் பாமியின் ஆய்வேடும் வி.ச.ஈஸ்வரியின் ஆய்வேடும் குறிப்பிடத்தக்கவை. ஒன்று அடிக்கருத்து பற்றிய விளக்கங்களும், வரைவிலக்கணங்களும் தந்து, தமிழில் அகப்பாடல்களில் அமையும் அடிக்கருத்துகளையும் தலைமைப்புனைவுக் கூறுகளையும் பகுத்துக்காட்டுவது. இரண்டாவது ஆய்வேடு அடிக்கருத்துப் பரவல் பற்றியது. இவ்வாய்வேடும் அடிக்கருத்து, தலைமைப் புனைவுக் கூறுகள் பற்றிய விளக்கங்களைத் தந்த பின் பக்தி இலக்கிய அடிக்கருத்துகள் தமிழிலிருந்து தெலுங்கிற்குப் பரவியதை எடுத்துரைக்கிறது. அடிக்கருத்தியல் எனும் இந்நூல் இவற்றிற்கும் மேலான மேலையிலக்கியத் திறனாய்வாளர்களும் (எலிசபெத் பிராங்கல்) வெயிஸ்டீன், பிராவர் போன்ற ஒப்பிலக்கிய அறிஞர்களும் அடிக்கருத்து பற்றிக்கூறிய செய்திகளைத் தொகுத்துக்கூறி, அவற்றின் அடிப்படையில் சங்க இலக்கிய புறப்பாடல்களின் அடிக்கருத்து ஆய்வுகளுக்கு முதன்மை தருகிறது.

அடிக்கருத்து வகைகள் பற்றிக் கூறும்பொழுது கதைத்தலைவர் பற்றிய அடிக்கருத்துகள், சூழல் சார்ந்த அடிக்கருத்துகள், வரலாறு சார்ந்த அடிக்கருத்துகள் எனும் வகைகளை எடுத்துரைக்கிறார் நூலாசிரியர். அடிக்கருத்தியல் ஆய்வும் கருத்துகளின் வரலாறும் எனும் பகுதியில் புராணக் கதைப் பாத்திரங்களை இன்றைய புனைகதை ஆசிரியர்கள் எவ்வாறு எடுத்தாள்கின்றனர் என எடுத்துரைக்கிறார்.

தமிழ் இலக்கியங்களில் அடிக்கருத்து பற்றிய கருத்துகள் எனும் இயலில் சங்க இலக்கியப் பாடல்களில் பயின்று வரும் அடிக்கருத்துகள் எவையெவை என்று எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்கப்படுகின்றன.

அடிக்கருத்து நோக்கில் தொல்காப்பியத் திணை, துறைகளை விளக்கி, திணை வகைகள் பயன்படுத்தும் அடிக்கருத்துகளைப் பட்டியலிடுகிறார். புறப்பாடல்களின் அடிக்கருத்துகளில் முதன்மை பெறுவது அரசனின் வெற்றிச் சிறப்பைப் பாடுவதே என்கிறார்.

அடிக்கருத்தின் வரையறைகள், அடிக்கருத்தின் தோற்றம், அடிக்கருத்தும் படைப்பாக்க உணர்வும், அடிக்கருத்து விளக்கம், அடிக்கருத்தைக் கண்டுணரும் முறை, அடிக்கருத்தும் பாத்திரச் சார்பும், அடிக்கருத்தும் சூழலும், அடிக்கருத்தும் தொன்மமும் போன்ற ஆதாரக் களங்களும் விளக்கப்படுகின்றன. இறுதியில் அடிக்கருத்தாய்வின் பயன்கள் சுட்டப்படுகின்றன.

ஆற்றுப்படைப் பாடல்களில் அடிக்கருத்து எனும் இயல் ஆற்றுப்படைப் பாடல்களை அடிக்கருத்து நோக்கில் ஆய்கிறது. கொடையில் சிறந்த ஆண்மகனைப் பாடுவதே இங்கு அடிக்கருத்தாவதை எடுத்துரைக்கிறது.

முனைவர். செ. சாரதாம்பாளின் கட்டுரைகள்

ஒப்பிலக்கிய நோக்கிலும் பெண்ணிய நோக்கிலும், உளவியல் நோக்கிலும் இவரது கட்டுரைகள் அமைந்துள்ளன.

குறுந்தொகையும், விழுப்பக் கோட்பாடும், கிரேக்கப் பாவகைகள், தொல்காப்பியரும் அரிஸ்ட்டாடிலும், சங்க இலக்கியத்தில் செவ்வியல், சங்க இலக்கியத்தில் புனைவியல், சங்க கிரேக்க இலக்கியங்களில் வஞ்சினப் பாடல்கள், அரச வாகைப் பாடல்களில் அடிக்கருத்து, ஒப்பிலக்கிய நோக்கும் போக்கும், இந்திய இலக்கியமும்- இந்திய ஒப்பிலக்கியமும், சங்க இலக்கியத்தில் குறிஞ்சிப்பாட்டும் ஒருமைக் கோட்பாடும், ‘வள்ளத்தோள் கவிதையில் சீதை உருவ முன்னோக்கு’ போன்ற கட்டுரைகள் ஒப்பிலக்கிய நெறியிலும் இணைநிலை ஆய்வு முறையிலும் அமைந்தவை. சில நேரடியாக ஒப்பிலக்கியம் பற்றிய திறன்களைக் கூறுபவை. சில ஒப்பிலக்கிய நோக்கில் பயில்முறை அடிப்படையில்

சங்க இலக்கியங்களையும் கிரேக்கச் செவ்வியல் இலக்கியங்களையும், ஒப்பிடச் செவ்வியல் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்பவை.

தாய்மைத்துவ நோக்கில் இராஜம்கிருஷ்ணனின் வீடு, பெண்ணியத் திறனாய்வு நோக்கில் சிவசங்கரியின் மூக்கணங்கயிறு, அமெரிக்கப் பெண்ணியத் திறனாய்வு, மனிதவள மேம்பாட்டு நோக்கில் பந்தயப்புறா ஆகிய கட்டுரைகள் பெண்ணிய நோக்கில் அமைந்த திறனாய்வுகள். இவை ஒரு புறம் தமிழ் இலக்கியத்தையும் மறுபுறம் இலக்கியத்தில் புதிதாக வந்து சேர்ந்த பெண்ணியம் என்ற கோட்பாட்டையும் வைத்துக்கொண்டு பார்ப்பதால் ஒப்பிலக்கிய ஆய்வின் பிறிதொரு நிலையென இவற்றைக் கொள்ளலாம்.

மனித அறிவின் வெளிப்பாடுகளுள் எதையும் இலக்கியத்துடன் இணைத்துக் காணலாம் என்பது ஹெச்.ஹெச். ஹென்றி ரிமாக் தந்த விளக்கமாதலால் இவ்வகை ஆய்வுகள் ஒப்பிலக்கிய ஆய்வுக்குள் வருகின்றன. இதே போன்றே இலக்கியத்தையும் உளவியலையும் இணைத்துக்காணும் போக்குகளும் இக்கட்டுரையாளரின் சில கட்டுரைகளில் காணமுடிகிறது. 'இளையோர் உளவியல் நோக்கில் சிவசங்கரியின் அவன்' மாசுலோவின் தன்னிறைவுக் கோட்பாடு நோக்கில் அண்ணாவின் சிறுகதைகள், குறுந்தொகையில் மடலேறுதல் பிறழ்நிலை உளவியல் நோக்கு, சங்க இலக்கியத்தில் 'மடலேறுதல் - பிறழ்நிலை ஆய்வு'போன்றன குறிப்பிடத்தக்கன. 'அந்நியன் நாவலில் இருந்தலியல்' எனும் கட்டுரை இருந்தியலியலின் தாக்கம் புனைகதைகளில் இடம்பெறும் தன்மையை விளக்குவது.

ஒப்பிலக்கிய ஆய்வில் தனியிடம் கொண்ட ஒப்பிலக்கிய கொள்கையான அடிக்கருத்தியல் பற்றிய இவரது ஆய்வுகள் குறிப்பிடத்தக்கன. **'அரசவாகைப் பாடல்களில் அடிக்கருத்தும் தலைமைப் புனைவுக் கூறும்'** எனும் கட்டுரை (தமிழியல் 1 ம.கா.பா. 1990 பக். 31-42) இவ்வகையில் முன்னோடியான ஒன்று.

இதில் அடிக்கருத்தின் வரைவிலக்கணம், அடிக்கருத்தை எவ்வாறு கண்டுணர்வது, தலைமைப் புனைவுக் கூறுகளின் பண்புகள், அடிக்கருத்தும் தலைமைப் புனைவுக் கூறுகளும் எவ்வாறு தொடர்புடையன, அரசவாகைப் பாடல்களில் அடிக்கருத்துகள் ஆகியன விளக்கப்படுகின்றன. அரசவாகைப் பாடல்களில் பாடப்படும் மன்னவனின் வெற்றியைப்பாடுதலும் மன்னனின் இயல்பைக் (சிறப்பை) கூறுதலும் அடிக்கருத்துகளாகும்போது, அவற்றைக் கட்டமைக்கும் தலைமைப் புனைவுக் கூறுகளாக மன்னனின் பேராற்றல், விளித்தல், நாட்டு வளம் கூறல், பகைவர்நிலை, வாழ்த்து, போர்க்களத்தோற்றம், ஆட்சிச் சிறப்பு, முன்னோர் மரபு ஆகியனவும், கருத்தலகுகளாக ஈகையும் புகழும், அரண் பற்றிய செய்திகள், களிறு வருணனை, விழா, விருந்தோம்பல், வேள்வி, முதுகுடிப்பிறப்பு, அறச் செய்தி ஆகியன அமைகின்றன என விளக்குகிறது கட்டுரை.

அடிக்கருத்து பற்றிய ஆய்வில் அடிக்கருத்து சுழற்சியும் கருதத்தக்க ஒரு கூறு. அதற்கு அடிப்படையாக அமைவது உருவ முன்னோக்கு என்றும் அதற்கு மூலமாக இருப்பவை தொன்மங்களும் தொன்மப் பாத்திரங்களும் என்றும் கூறுவர் எஸ்.எஸ். பிராவர். இந்த அடிப்படையில் தன் ஆய்வை மேற்கொண்ட இவரது கட்டுரை ஒன்று **‘வள்ளத்தோளும் தொன்மைப் பாத்திரச் சீதை உருவ முன்னோக்கும்’** (ஆய்வுப் பொழில், தமிழாய்வு மன்றம் திருச்செந்தூர் 1998 பக்.115-120). உருவ முன்னோக்கு பற்றிய விளக்கமும் வள்ளத்தோளின் சிந்தையில் ஆழ்ந்த சீதை எனும் குறுங்காவியத்தல் சீதை பாத்திரப்படைப்பு உருவமுன்னோக்கிற்கு ஏற்ப அமைந்தது, வள்ளத்தோளின் சமுதாய சீர்திருத்த எண்ணத்திற்கு ஏற்ப மாற்றிப் படைக்கப் பட்டிருப்பதையும் விளக்குகிறது இக்கட்டுரை. சிலம்பின் கனவுகளை பிராய்டு தரும் கனவு விளக்கங்கள் அடிப்படையில் ஆராய்கிறது ஒரு கட்டுரை. **“குறள் கனவும் தலைவியின் உளவியலும்”** எனும் கட்டுரையும் (உலகத் திருக்குறள் மாநாடு கருத்தரங்கக் கட்டுரைக் கோவை-தொகுதி 1 பக்.226-231) கனவின் தன்மைகள் பற்றியதே. கனவு ஏற்படக் காரணங்களை

ச.தண்டபாணி தேசிகர், ச.வே.சுப்பிரமணியம் ஆகியோரது விளக்கங்களின் அடிப்படையில் விளக்கும் கட்டுரையாளர். திருக்குறளில் கனவுநிலை உரைத்தல் எனும் அதிகாரம், நினைத்தவர் புலம்பலின்பின் அமைந்திருப்பது உளவியல் ரீதியாக, இடைவிடாது பிரிந்த தலைவனையே எண்ணிக் கொண்டிருந்த தலைவிக்கு, உறக்கத்தில் கனவாக வருவதை உய்த்துணர முடிகிறது என்கிறார். பிராய்டின் உளப்பகுப்பாய்வும் கனவும் பற்றிய குறிப்புகளுக்குப் பின் குறளில் சுட்டப்படும் கனவுகளையும் அவை உணர்த்தும் தலைவியின் ஆழ்மன உணர்வுகளையும் பட்டியலிட்டுக் காட்டுகிறது கட்டுரை.

'குறுந்தொகையில் மடலேறுதல் -பிறழ்நிலை உளவியல் நோக்கு' (தமிழியல் ஆய்வு) எனும் கட்டுரையும் **'மடலேறுதலும் பிறழ்நிலை உளவியலும்'** (ஆய்வுக்கோவை 1999 பக் 678 682) எனும் கட்டுரையும் சங்கப்பாக்களில் இடம்பெறும் மடலேறுதல் என்னும் கருத்தமைவு தலைவனின் பிறழ்வு நடத்தை என்பதை விளக்குகின்றன. மடலேறுதலின் இலக்கியக் கூறுகள், அக்கூறுகள் கூறும் உளவியல் உண்மைகள், மனத்தவிப்பு, மனமுறிவு, போராட்டம், பிறழ்வு நடத்தை என படிப்படியே மடலேறுதலை எவ்வாறு பிறழ்வு நடத்தையாகக் கொள்ளமுடியும் என விளக்குகிறது கட்டுரை. மாசுலோவின் தன் முனைப்புக் கோட்பாட்டு அடிப்படையில் அண்ணாவின் சிறுகதைகளை ஆராய்கிறது ஒரு கட்டுரை.

'சமூகத் தன் முனைப்புக் கோட்பாட்டு அடிப்படையில் பாரதிதாசன்' எனும் கட்டுரை (பாரதிதாசன் படைப்புகளில் விழிப்புணர்வுச் சிந்தனைகள் தமிழியற்புலம், ம.கா.ப கழக வெளியீடு 1998) உளவியல் அறிஞர்களில் ஒரு பிரிவினரான தன்முனைப்பு உளப்பகுப்பாய்வாளர்கள் கூறும் சமூகத் தன் முனைப்புத்திறனை வெளிக் கொணர்கிறது. படைப்பாளியான பாரதிதாசனின் ஆளுமை வளர்ச்சி வெளிப்பாட்டுத் திறனுக்கு அவரது சமூக, அரசியல் சூழல்களையும், காரணிகளாகக் கொண்டு விளக்குகிறது கட்டுரை. சுயமரியாதை இயக்கத்தினாலும்

பகுத்தறிவு வாதத்தாலும் தாக்கம் பெற்றமையால் ஆரிய எதிர்ப்பு பிராமணர் அல்லாதர் ஒடுக்கப்படுவதற்கு எதிர்ப்பு, திராவிட இன ஈர்ப்பு, தமிழ் மொழிப்பற்று, வர்க்க எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு, முதலிய கருத்துக்கள் கொண்ட படைப்புகள் உருவாயின. பெண் விடுதலையும் மறுமலர்ச்சியும் பற்றிப் பேசிய இந்திய இயக்கங்களின் தாக்கத்தால் கைம்மை மறுமணம், குழந்தைமண எதிர்ப்பு, பெண் கல்வி, பெண் உரிமை ஆகிய கருத்துகள் கொண்ட சஞ்சீவி பர்வதத்தின் காரல், புரட்சிக்கவி, குறிஞ்சித்திட்டு, குடும்பவிளக்கு, இருண்டவீடு ஆகிய படைப்புகள் வழி பாரதிதாசனின் தன்முனைப்பு வெளிப்படுகிறது என்கிறார் கட்டுரையாளர்.

'சங்க கிரேக்க வீரயுகப்பாடல்களில் வஞ்சினம்' (சங் இலக்கியம் - கவிதையியல் நோக்கு - சிந்தனைப் பின்புல மதிப்பீடு - ந. கடிகாசலம் ச. சிவகாமி (ப.ஆ) உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் 1998 ப்க 359) எனும் கட்டுரை, வஞ்சினம் என்பதைச் சூழல் சார்ந்த அடிக்கருத்தாகக் கொண்டு அவ்வடிக் கருத்து எவ்வாறு சங்க வஞ்சினப் பாடல்களில் கட்டமைக்கப்பட்டுள்ளது என விளக்குகிறது.

சங்க இலக்கியப் புறப்பாடல்களிலும் சிலம்பிலும் கிரேக்க காப்பியமான இலியட்டிலும் வஞ்சினச் சூளுரைகள் இடம் பெறும் சூழல், வஞ்சினம் ஆற்றும் பாத்திரங்கள், வஞ்சினம் கொள்வதன் நோக்கம், கூற்றுமுறை, வஞ்சினச் செயல்கள், கூற்றளவில் நின்றுவிட, நீண்ட கதைப்பாடலான - காப்பியமான சிலம்பிலும் இலியட்டிலும் பாத்திரப் படைப்பின் முழுமை வேண்டி வஞ்சின நிறைவேற்றமும் சுட்டப்படுகின்றது என முடிவும் கூறுகிறார்.

ஒப்பிலக்கியம் பற்றிய ஆய்வேடுகள்

ஆனிலட்பாமியின் சங்க அகப்பாடல்களின் அடிக்கருத்துகள் வி.எஸ். ஈசுவரியின் சைவ இலக்கியத்தின் அடிக்கருத்துப் பரவல் - (தமிழ் -தெலுங்கு) ஆகிய இரண்டும் அடிக்கருத்தியல் நோக்கில்

நிகழ்த்தப்பட்ட ஆய்வேடுகள். முதலாவது அடிக்கருத்து பற்றிய விளக்கங்கள், வரைவிலக்கணங்கள், மேனாட்டாசிரியர்கள் அடிக்கருத்து, தலைமைப் புனைவுக் கூறு ஆகியன பற்றிக் கூறிய கருத்துகள், அடிக்கருத்து பற்றிய கருத்தமைவு தோன்றியமை, அடிக்கருத்தின் வளர்ச்சி, அடிக்கருத்து வகைகள், அடிக்கருத்து ஆய்வுகளுக்கான மேனாட்டு எடுத்துக்காட்டுகள் ஆகியன விளக்கமுற அறிமுகப்படுத்தப்பட்டுப் பின்னர் அடிக்கருத்து பற்றிய நோக்கில் சங்க அகப்பாடல்களின் திணை துறைகளைப் பகுத்துக்காட்டி அடிக்கருத்தும் அடிக்கருத்து அலகுகளும் எவ்வாறு அமைந்துள்ளன என விளக்குவது.

இரண்டாவது ஆய்வேடு (வி.எஸ.ஈசுவரி) அடிக்கருத்து, தலைமைப்புனைவுக்கூறு, மாற்றுப்புனைவுக் கூறு, தொடர்குறிப்பு போன்றவற்றிற்கான விளக்கங்களுள் தந்து பின்னர் பக்தி இலக்கியத்தில் குறிப்பாகப் பெரியபுராணத்தின் அடிக்கருத்துகளை வகுத்துக்காட்டி, அவை தெலுங்கு பக்தி இலக்கியத்தில் குறிப்பாக பசவபுராணத்தில் இடம் பெறும் அடிக்கருத்துகளோடு ஒப்பிட்டுக்காட்டி, கருத்தும் கதையும் தமிழில் இருந்து தெலுங்கிற்குப் பரவிய தன்மையும் விளக்கப்படுகின்றன.

இ.பரிமளத்தின் ஜப்பானிய-தமிழ்ஹைகூ கவிதைகள் -ஓர் ஒப்பாய்வு எனும் ஆய்வேடு தமிழ், ஜப்பானிய ஹைகூ கவிதைகளின் பாடுபொருள், உத்திகள், அமைப்பு ஆகிய அடிப்படைகளில் ஒப்பிடப்படுகின்றன. இராசேசுவரியின் 'தமிழ் -ஆங்கில மொழிபெயர்ப்புகளில் சிக்கல்களும் தீர்வுகளும்' எனும் ஆய்வேடு ஒப்பிலக்கியமும் மொழிபெயர்ப்பும் எனும் அடிப்படையில் அமைவது. மொழிபெயர்ப்பு பற்றிய கோட்பாடுகள், விளக்கங்கள், செய்யுள் மொழிபெயர்ப்பு நிகரமைக்கோட்பாடு, மொழிபெயர்ப்பில் பொருண்மைப் புலப்பாட்டில் ஏற்படும் சிக்கல்கள் ஆகியன பற்றி விளக்குகிறது. 'இந்திரா பார்த்தசாரதி நயந்தராசாகல் நாவல்கள் ஒப்பாய்வு' எனும் ஆய்வேடு (எஸ். பூங்கொடி) இருவரது நாவல்களிலும் கால மாறுபாடுகளுக்கு ஏற்ப சமூக நிலையில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத் தகுந்த மாற்றங்கள் சித்திரிக்கப்பட்டுள்ள முறை ஒப்பிடப்படுகிறது.

குடும்ப உறவுநிலைச் சித்தரிப்பிலும் அரசியல் சூழல் சித்திரிப்பிலும் இடத்திற்கேற்ற மாற்றங்கள் பெற்றிருப்பதையும், நாவலாசிரியர்களின் நோக்கங்கள், கருத்துகள் வெளிப்படுவதையும் விளக்குகிறது.

இளநிலை ஆய்வாளர் பட்ட ஆய்வேடுகள்

'வடமொழி ரீதிக்கோட்பாடும் தொல்காப்பியரின் வண்ணமும்' 'மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் தமிழியற்புலத்தில் ஒப்பிலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்', 'புதுக்கவிதையில் தொன்மம்', 'வள்ளத்தோள்-பாரதிதாசன் கவிதைகள் ஒப்பீடு', 'ஒப்பிலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்', 'இந்திராபார்த்த சாரதியின் நாவல்களில் சர்ரியலிசம்', 'அடிக்கருத்தியல் நோக்கில் குறிஞ்சிக்கலி', 'சூடாமணி ராஜம் கிருஷ்ணன் நாவல்களில் பெண்ணியம்', ஜெயகாந்தனின் "ஒரு நடிகை நாடகம் பார்கிறாள்'= சரத் சந்திரரின் 'சாவித்திரி' 'நாவல் ஒப்பாய்வு', 'ஜெயகாந்தனின், பாவம் இவள் ஒரு பாப்பாத்தி-மார்க்சிம் கார்க்கியின் தாய் - ஒப்பிலக்கிய ஆய்வு' வி.ஸ.காண்டேகரின் எரி நட்சத்திரமும் மு.வ.வின் நெஞ்சில் 'ஒரு முள்ளும் - இணை நிலை ஆய்வு' 'வ.வே.சு.ஐயரின் ஒப்பிலக்கியப் பணி', 'தெ.பொ.மீ-யின் ஒப்பிலக்கியப்பணி' போன்ற ஆய்வுகளைக் குறிப்பாகச் சுட்டலாம். ஒப்பிலக்கிய ஆய்வுக் களங்களின் பன்முகத் தன்மைக்கு இவை சான்றாகின்றன.

இங்கு சுட்டப்பட்ட நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வேடுகள் ஆகியவை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில், தமிழியற் புலத்தில் மட்டும் மேற்கொள்ளப்பட்ட ஒப்பிலக்கியப் பணிகள். இதுபோல் தமிழகப் பல்கலைக் கழகங்கள் பலவற்றிலும், குறிப்பாகக் காந்தி கிராமப் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப் பட்டுள்ள ஒப்பிலக்கியப் பணிகளும் கண்டு கூறப்படல் வேண்டும். அதுபோல் தமிழோடு பிற இந்திய மொழிகளை இணைத்து இந்தியப் பல்கலைக்கழகங்கள் பிறவற்றில் நிகழ்த்தப் பெற்றிருக்கக் கூடிய ஆய்வுகளும் சுட்டப்படல் வேண்டும். அம்முயற்சி தனியே ஒரு குழுவினர் இணைந்து செயல்பட வேண்டிய மிகப்பெரிய ஆய்வுத்திட்டத்திற்கு உரியபொருளாகும்.

இயல் – 4

ஏற்புக்கோட்பாடு

ஜெர்மனியில் 1960களில் சமுதாய இலக்கிய அறிவாற்றல் சார்ந்த மாற்றங்களும் முன்னேற்றங்களும் ஏற்பட்ட நிலையில் அவற்றின் பாதிப்பால் வெளிவந்த ஒரு இலக்கியக் கொள்கையே ஏற்புக் கொள்கை. பல கொள்கைகளுக்கு அடிப்படையாய் கடந்த முப்பது ஆண்டுகளாக இருப்பதுடன், தனியாகவும், வேறு பல இலக்கியக் கலைச் செரற்களுடன் இணைந்தும் கூட்டுச் சொல்லாகவும் வந்து தொடாத இலக்கியதுறையே இல்லை என்று கூறும் அளவிற்கு பரந்த வீச்சுகளைப் பெற்றது இச்சொல். (Reception) தனி ஒருவரால் முன்மொழியப்பட்டதல்ல இக்கொள்கை. ஒரே நோக்குடன், முழுமையான ஈடுபாட்டுடன், அனைவரும் இணைந்து, ஒரு குழுவாகி, தமக்குள் கருத்துத் தொடர்பு அறுபடாது, தொடர்ந்து கொண்டுசெலுத்திய கொள்கையே இது. பல்கலைக்கழகங்களிலும் இலக்கியத் திறனாய்வுத் துறையிலும் உள்ள பலரும் தம்முள் ஏற்படுத்திக் கொண்ட கருத்துப் பரிமாற்றத்தினால் விளைந்த இக்கோட்பாடு இன்று இலக்கியத் துறையை மட்டுமின்றிச் சமுதாயவியல், கல்ல, வரலாறு போன்ற பிற துறைகளிலும் அதிக பாதிப்பை ஏற்படுத்திய நெறிமுறையாகும்.

ஜெர்மனிய மொழியில் Rezeption (Reception) என்றும் Wirking (response or effect) என்றும் இரு சொற்கள் உண்டு. இவ்விரு சொற்களுமே ஒரு கலைப்படைப்பு வேறொரு கலைப்படைப்பினால் பெற்ற பாதிப்பைப் பற்றிப் பேசுவனவே. இருசொற்களையும் முழுமையாகப் புரிந்து கொண்டு எல்லைகள் வகுப்பது எளிதல்ல.

Rezeption என்ற சொல் வாசகர் சம்பந்தப்பட்டது. Wirking என்பது வாசகம் பற்றிய கூறுகளை விளக்குவது. Wirking gestchichte என்ற சொல் ஒரு நூல் அல்லது ஒரு ஆசிரியரின் பாதிப்பு காலம் தோறும் எவ்வாறு இருந்து என்று தாக்கம் பற்றி வரலாற்று ரீதியில் ஆராயும் தன்மையைச் சுட்டுவது. (எ.டு) டி.எஸ்.எலியட்டின் தாக்கம் தமிழ்க் கவிதையில் எவ்வாறு உள்ளது எனக் காணும்போது முதலில் புதுமைப்பித்தன், ந.பிச்சமூர்த்தி போன்றவர்களில் இருந்து ஆரம்பித்து டி.எஸ்.எலியட்டின் 'பாழ் நிலம்' (Waste land) கிழவன் (Gerontia) மங்கையின் ஓவியம் (Portrai of a lady) போன்ற கவிதைகள் இன்று எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தி, புதிய படைப்புகளுக்கு வழிகோலின எனக் காணலாம். இது ஒரு குறிப்பிட்ட ஆசிரியர் வேற்று மொழியில் முதலில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தினார்; பின்னர் தாக்கத்திற்கு உள்ளான ஆசிரியர் அவரைப் பின்தொடர்ந்த படைப்பாளிகளிடம் எவ்வாறு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளார் எனக் காண்பது.

ஷெல்லியின் தாக்கம் பெற்ற பாரதி, பாரதிதாசன், இவர்கள் இருவரையும் தொடர்ந்த சுரதா, தமிழ் ஒளி, பரிணாமன் என நேரடியான, மறைமுகமான தாக்கங்கள் பற்றிக்காணலாம்.

ஜெர்மனிய மொழியில் Rezeption Gestchichte எனும் ஒரு சொல்லும் உண்டு. இது ஏற்பின் வரலாற்றைக் கூறுவது. இதற்கும் முன் சொன்ன Wirkings Geschichte எனும் சொல்லுக்கும் வேறுபாடு உண்டா? (ஏற்பின் வரலாறு & துலங்கல் அல்லது விளைவின் வரலாறு. (Histroy of reception & history of response or effect)

இதே போன்று துலங்கல் அல்லது விளைவின் அழகியல் என்பதற்கும் ஏற்பழகியலுக்கும் (Reception aesthetics & aesthetics of Reception) வேறுபாடு உண்டா? என்பது போன்ற ஐய வினாக்கள் கடந்த முப்பது ஆண்டுகளாக ஜெர்மனியில் நிலவி வருகின்றன.

படைப்பாளியிடமிருந்தும் படைப்பிலிருந்தும் கருத்து எவ்வாறு வாசகத்திற்கு மாறி வருகிறது என்பதைப்பற்றிக் கூறுவது ஏற்புக்கொள்கை. இது மரபு வழியான தாக்கம், ஏற்பு பற்றிய ஆய்வு நெறிமுறைகள் போன்ற அனைத்தையும் அடக்கிய ஒரு சொல். ஆனால் ஏற்பழகியல் (Aesthetics of reception) என்பது ஜாஸ் வழி, நெறிமுறையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது.

இதனுடன் தொடர்புடைய மற்றொரு சொல் வாசகர்துலங்கல் (Reader response criticism) திறனாய்வு என்பது. இத் தொடரும் பல கருத்துப் பொருண்மைகளை உள்ளடக்கிய ஒரு சொல். நார்மன் ஹாலண்டின் பரிவர்த்தனைத் திறனய்வு, ஜோனத்தான் கல்லரின் அமைப்பியல் ரீதியான கவிதையியல், ஸ்ட்டான்லி ஃபிஷ்ஷின் வாசகனிடம் பாதிப்பை விளைவிக்கும் நடையியல் போன்ற (Norman Holland's Transactive Criticism; Jonathan Culler's Structuralistic Poetics, Stanley Fisher's Affective Stylistics) பலவற்றை உள்ளடக்கியது.

இம்முறை ஆய்வுகளில் படைப்பாசிரியரைவிட வாசகனே முதன்மை பெறுகிறான். வாசகர் துலங்கல்பற்றி (வாசகம் - வாசகன்) ஆராய்ந்த உல்ஃப்காங் ஐசர்(Wolf Gong Iser) ஏற்புக் கொள்கையை முன்னிலைப்படுத்திய பலருள் முக்கியமானவர் ஆவார்.

செல்வாக்கு (Influence) என்பது படைத்து முடிக்கப்பட்ட படைப்புகளிடையேயான உறவுகளைப்பற்றிப் பேசுவது, ஆனால் ஏற்பு என்பது மேலும் விரிவான வீச்சைக்கொண்டது. இவ்விலக்கிய உறவுகளுக்கும் மேல், அவற்றின் பிற சூழல்களான அவற்றின் ஆசிரியர்களுக்கு இடையேயான உறவு, அவற்றின் வாசகர்களுக்கு இடையேயான உறவு, அவற்றின் திறனாய்வாளர்கள், பதிப்பாளர்கள் ஆகியவர்களுக்கு இடையே உள்ள தொடர்புகள் போன்ற புறச்சூழல்களையும் அடிப்படையாகக் கொண்டது. எனவே இலக்கிய ஏற்பு என்பது பற்றிய ஆய்வுகள், இலக்கியமும் சமுதாயமும் இலக்கியமும் உளவியலும் பற்றிய திசையில் திரும்பி வருவதாயும் அமைகின்றன.

ஒரு படைப்பு முழுவதுமாக வெற்றியடைக் காரணமாய் அமைவது அதை வாசகர் ஏற்பதில் தான் உள்ளது. அப்படைப்பு பற்றிய வெகுஜன ஏற்பு எவ்வாறு உள்ளது என்பதை அது அதிகமாக விற்பனையாகும் நூல்களுள் ஒன்றாக ('best sellers' list) இருப்பதை வைத்தே அறிந்துவிடமுடியும். இவ்வகையான வெற்றிகள் நிலைத்தனவாயும் இருக்கலாம் அல்லது சில புற நிகழ்வுகளும் காரணமாக இருக்கலாம். (எ.டு) ஒரு நூலுக்கு சாகித்திய அக்கதமி பரிசோ அல்லது நோபல்பரிசோ கிடைக்கும் பொழுது அதற்கு அதிகமாக விளம்பரம் கிடைத்து பிறரால் ஏற்கப்படுகிறது. அவ்வாசிரியரின் அகால மரணம், வெளியிடுதலில் அரசாங்கத்தின் தடை, வியாபாரிகளின் விளம்பரம் அல்லது ஒரு முக்கிய அரசியல் விளைவு குறித்த செய்தியை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட படைப்பு என அவை அமையலாம். ஆயின் இவற்றின் அலை அடங்கியதும் அப்படைப்பு விற்பனையும் ஏற்பும் கூட குறைந்து விடலாம். ஏதேனும் ஒரு சர்வாதிகாரத்தை எதிர்த்த ஒரு ஆசிரியர் அச்சர்வாதிகாரத்தால் தண்டிக்கப்படுவதுடன் அவரது நூலும் தடை செய்யப்படும். அப்பொழுது அந்நூல் பிரபலமாகலாம். பொது மக்களின் கவனத்தைக் கவர்ந்து ஈடுபாடு கொள்ளச்செய்யும் அந்நிகழ்வும் பிறகு மற்ற ஆசிரியர்களால் போலுமையாக்கத்திற்கு உட்படுத்தப்படுகிறது. இது வியாபார ரீதியாகவும் அமையக்கூடும். இவ்வாறான வெற்றிகள் அல்லது மக்களிடம் பெற்ற ஏற்புகள் தாக்கத்திற்கு வழி கோலுகின்றன எனலாம். ஒரு குறிப்பிட்ட நாவலின் வெற்றி அதே போன்ற கதையமைப்பு, பாத்திரப்படைப்பு, கருத்தமைவு, முடிவு கொண்ட பல நாவல்களை எழுதத் தூண்டுகோலாக அமையும்.

பால்வான் தீகம் போன்ற பிரெஞ்சு ஒப்பீட்டறிஞர்கள் இவ்வாறு ஒரு ஆசிரியர் மக்கள் மத்தியில் பெறும் புகழும் , அதனால் உண்டாகும் ஏற்பும் பற்றி ஆராய்வதற்கு, விரிவான எளிதில் பயன்படுத்தத்தக்க ஆய்வு முறைகளை உருவாக்கினர். ஆனாலும் கூட ஏற்பு என்ற கோட்பாட்டிற்கும் தாக்கம் என்ற கோட்பாட்டிற்கும் இடையே பெருங்குழப்பம் ஏற்பட்டது.

ஒரு ஆசிரியரை ஒரு மக்கள் குழுவினர் ஏற்பதற்கு அவரைப்பற்றியும் அவரது நூல் பற்றியும் இதழ்களிலும் செய்தித்தாள்களிலும் வரக்கூடிய மதிப்புரைகளும் திறனாய்வுகளும் காரணமாகலாம்.

ஏற்பின் அளவு பற்றி மதிப்பிட ஒரு வேற்று மொழி ஆசிரியரின் குறிப்பிட்ட நூல் எத்தனைப் பதிப்புகள் இங்கு உள்ளூரில் வெளிவந்துள்ளன என்பதை வைத்துக் கணக்கிடலாம், அந்த ஆசிரியரின் நூல்களில் எத்தனை மொழி பெயர்க்கப்பட்டு வந்துள்ளன என்பதன் மூலமும் அறியலாம்.

ஒரு வெளிநாட்டு ஆசிரியரின் நூல்கள் உள்நாட்டில் ஏற்கப்படுவதற்கு இங்குக் கிடைக்கக் கூடிய நூல்களின் அளவும் காரணமாகலாம். அதிகமான எண்ணிக்கையில் கிடைக்கும் பொழுது பெரிய வாசகர் வட்டத்தைப் பெறுவதால் அதிகமாக ஏற்கப்படுகிறது. பரவலாகக் கிடைக்கும் பொழுது ஆசரியர் எளிதாக ஏற்கப்படுகிறார்.

பதினெட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் பிரெஞ்சு இலக்கியங்கள் நேரடியாக இரஷ்யாவில் வரவேற்கப்பட்டன. பிறநாட்டு, பிறமொழிப் படைப்புகளும் பிரெஞ்சு மொழி பெயர்ப்புகள் மூலம் இரஷ்யாவை வந்தடைந்தன.

இந்தியாவில் மேலையிலக்கியப் படைப்புகள் யாவும் ஆங்கில மொழிபெயர்ப்பின் மூலமே பரவின. அதே போல இந்தியாவிற்குள்ளேயும் ஒரு மாநிலத்திலுள்ள சிறந்த படைப்புகள் பிற மாநிலங்களுக்கு ஆங்கில மொழி பெயர்ப்பின் மூலமே பரவுகின்றன.

குறிப்பிட்ட சில ஆசிரியர்களும் இலக்கிய இயக்கங்களும் இலக்கியம் அல்லாத இலக்கியத்தைத் தாண்டிய பாதிப்புகளை ஏற்படுத்தினர். சமுதாய பாதிப்புகள் ஏற்பட்டன. இந்தியாவில் டால்ட்ஸ்ட்டாயின், கருத்தமைவுகள் காந்திஜியின் மூலம் பரவின. டால்ட்ஸ்ட்டாய் எழுத்தாளர் என்ற எழுத்துத் திறனடிப்படையில்

ஏற்கப்பட்டதை விட அதிகமாக அவரது கருத்துக்களுக்காகவே பெரிதும் வரவேற்கப்பட்டார், தமிழறிஞர்கள் ஷாவை சிறந்த நாடக ஆசிரியராக அறிந்ததை விட அவரது கடி ஜோக்குகளுக்காக (bitting humuor) அறிந்திருந்தனர்.

ஒரு குறிப்பிட்ட ஆசிரியர் பிறிதொரு நாட்டில் ஏற்கப்படுவதால் அவருடைய தாக்கம் ஏற்படுவதை விட அதிகமாக, அவரை எதிர்த்துப் போட்டியிட்டு எழுதிய, அவர் நாட்டு வேறொரு ஆசிரியரின் தாக்கம் ஏற்படக் காரணமாக முதலாமவரின் ஏற்பு அமையக் கூடும். எடுத்துக்காட்டாக ஐரோப்பாவில் பைரன் பெற்ற புகழ் தாமஸ் மூர் அதிகம் புகழ்பெறக் காரணம் ஆயிற்று என்பார் வை. சச்சிதானந்தன்.

ஏற்பும் தாக்கமும் கொள்கையளவில் ஒரே இலக்கை நோக்கி இட்டுச்செல்வன; எனினும் இரண்டிற்கும் இடையேயான வேறுபாடுகளையும் ஒப்பீட்டறிஞர்கள் அறிந்திருக்க வேண்டும் என்பார் ஜே.டி.ஷா. ஒரு குறிப்பிட்ட ஆசிரியர் வேறொரு நாட்டில் மிக அதிகமாக, பரவலான புகழைப் பெற்றிருக்கலாம்; அம்மக்கள் அவரைப்பற்றி அறிந்திருக்கலாம்; ஆனால் கட்டாயமாக இவரது ஏற்பு தாக்கத்தை உண்டாக்கியிருக்கவேண்டும் என்பதில்லை. இலக்கியத்தாக்கம் எதையும் ஏற்படுத்தாமலேயே இவர் வரவேற்கப் பட்டிருக்கலாம். காந்திஜியின் மூலம் இந்தியாவிற்கு அறிமுகமானவர் தேரோ. அவர் இந்தியாவில் பலரால் நன்கு அறியப்பட்டவர் எனினும் இந்திய இலக்கியப் போக்கில், படைப்பில் எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

ஏற்பின் ஒரு தனி வகையே இலக்கிய நல்வாய்ப்பு அல்லது எதிர்காலம் என்பது. (Fortune or Success) ஒரு நூல் பலராலும் பெரிதும் ஏற்றுக்கொள்ளப்படும் போதே ஏற்பு மொழி வாசகர்களிடையே அது வெற்றி பெற்றுள்ளது எனக் கூறமுடியும், இந்நூல் எவ்வளவுதூரம் வெற்றிபெற்றுள்ளது என நாம் அளந்தறியவும் முடியும். அதிக விற்பனையாகும் பட்டியலில் இது இடம் பெறுவது அதனுடைய வெற்றிதான், ஆனால் ஒரு

இலக்கியத்தின் வெற்றி சில நேரங்களில் மேலோட்டமானதாக இருக்கலாம்/அல்லது குறைந்த காலத்திற்கு உரியதாக இருக்கலாம்.

இவ்வாறான ஏற்பு பற்றியும் அதனால் ஏற்படும் செல்வாக்கு, தாக்கம் போன்றவை பற்றியும் எஸ்.எஸ்.பிராவர், உல்ரிச் வெயிஸ்டீன் போன்ற ஒப்பிலக்கிய நூலாசிரியர்கள் விரிவாக விளக்கியுள்ளனர்.

ஏற்பும் இலக்கியக் கருத்துத்தொடர்பும் பற்றிய ஆய்வுப் போக்குகளை வரிசைப்படுத்துகிறார் பிராவர்.

1. நீண்டகால இலக்கிய உறவுகளைப் பட்டியலிஞ்டுவதும் ஆய்வதும் ஒரு புறமிருக்க ஒப்பிலக்கியவாதிகள் அடிக்கடி இரு முக்கிய, சிறந்த ஆசிரியர்களை தேசிய எல்லைகளையும் மொழி எல்லைகளையும் ஊடுருவி ஆராய்க்கின்றனர். (எ. டு) C.E. Norton The Correspondence between Goethe and Carlyle, London 1887). இதன் மூலம் குறிப்பிட்ட உள்நாட்டு ஆசிரியர் வெளிநாட்டு ஆசிரியர் ஒருவரின் படைப்புகளைப் படித்திருப்பதற்கான ஆதாரங்கள் முழுவதையும் திரட்டுவதுடன் இந்த நோக்கில் இவரது எழுத்துகளையும் விளக்குவதன் மூலமும் இருவரிடையேயுள்ள தொடர்புகளையும் காணமுயன்றனர். (எ.டு) J.Boyd : Goethe's knowledge of English Literature, Oxford 1932).

2. ஒரு படைப்பாளி தன் சொந்தப் படைப்புகளில் வேறொரு வெளிநாட்டு ஆசிரியரின் படைப்புகளிலிருந்து மேற்கோள்களைப் படைப்பினுள் கையாள்வது, நூல்களைப்பற்றி, நூலில் வரும் பாத்திரங்களைப்பற்றி, பிரசித்தி பெற்ற வசனங்களைப்பற்றியக் குறிப்புகளைத் தன் நூலில் தருவது போன்ற பல்வேறு முறைகளை எடுத்துக்காட்டி அந்த வெளிநாட்டு ஆசிரியருடன் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர் இவர் என எடுத்துக்காட்டினர். (S.S.Prawer Heine's Shakespeare:A Study in Contexts, Oxford 1970)

3. மேற்கோள் போல அடிக்குறிப்போ யாரிடம் இருந்து எடுத்து ஆளப்படுகிறது என்ற குறிப்போ இன்றி வேறு ஒரு ஆசிரியரின் எழுத்தையோ கருத்தையோ அப்படியே கையாளப்படுவதை (இலக்கிய திருட்டு) எடுத்துக்காட்டுவதும் பிறிதொரு ஆய்வாகும். (எ.டு) ரிம்பாடு (Rimbaud) வில்லான் (Villon) ஆகியோரது படைப்புகளை கார்ல் கிளாமர் (Karlklammer) மொழிப்பெயர்ப்பு செய்தார். இவற்றிலிருந்து பெரும் பகுதிகளை பிரெக்ட் மேற்குறிப்பிட்ட மாதிரி எவ்வித ஒப்புதல் குறிப்புமின்றி எடுத்தாள்கிறார்.

4. வெளிநாட்டு இலக்கியங்களின் மிச்சம் மீதியாகத் தங்கியிருப்பதைத் தேடிக்கண்டு பிடித்துக் கூறினர் (எ.டு) தாஸ்த்தா வெஸ்க்கியின் (The Insulted and Injured) எனும் நூாலுக்கும், டிக்கன்சின் old Curiosity Shop நூாலுக்கும் இடையே காணப்படக்கூடிய இணைநிலைகளை எடுத்துக்காட்டுவது; ஒரு ஆசிரியர் தன் சொந்த படைப்பிற்கு பிறநாட்டு மொழியிலக்கியங் களில் இருந்து எவ்விதமான தூண்டுதல்களைப் பெற்றிருக்கிறார் என முடிவு கட்டுவதும் கூட இதில் அடங்கும்.

இவை போன்ற ஆய்வுகள் யாவும் இணைநிலைகள் என்ற கோணத்திலிருந்து வேறுபட்டவை. நேரடியான தொடர்புகள் சம்பந்தப்பட்டவை. ஒரு ஆசிரியர் இவை போன்ற கூறுகள் தன்னைப் பாதிக்க விடுவதும் விரும்புவதும் கூட ஏற்புக்குக் காரணம் எனலாம். இதுபோன்ற உணர்வுகள் கூட இவர்மூலம் இவர்நாட்டில் பிறிதொரு ஆசிரியரின் ஏற்புக்குக் காரணமாகலாம். ஒரு வெளிநாட்டு ஆசிரியரைப்பற்றிச் சிறப்பாக மரியாதையுடன் இவர் தன் நூலில் குறிப்பிடுவதும், அவருடைய கருத்துக்களுக்குத் தான் ஆட்படுவதும் இவருடைய வாசகர்களிடையே இவர் குறிப்பிட்ட வெளிநாட்டு ஆசிரியரை அறிமுகப்படுத்தி, ஏற்றுக்கொள்ள வைக்கும்.

அஸ்ஸெலின்யூ காட்டும் வழி

ஏற்பு, இரண்டறக் கலத்தல், இலக்கியத்தின் நல் வாய்ப்பு/ எதிர்காலம் ஆகிய மூன்றும் பற்றிய ஆய்வுகள் ஒப்பிலக்கியக் கல்வியின் முக்கியமான பகுதிகளாகும். ஆனால் சரியான முறையில் கையாளப்படாது இவ்வகை ஆய்வுகள் இயந்திரத்தனமான பட்டியலிடல்களாகத் தரம் குறைத்து விட்டன. ஆனால் இவ்வாறு குறைபடாமல் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்வது ரோகர் அஸ்ஸெலின்யூவின் ஆய்வு. ஏர்னெஸ்ட் ஹெமிங்வேயினது படைப்புகள் பிரெஞ்சு நாட்டில் ஏற்கப்பட்டுத் தொடர்ந்து வாழ்வு பெற்றிருப்பதைப் பற்றிய ரோகரின் ஆய்வு, எவ்வாறு இவ்வாய்பிற்கானத் தரவுகளைத் திரட்டுவது, அவற்றிற்கு எவ்வாறு விளக்கங்கள் அளிப்பது என எடுத்துக் காட்டுகிறது.

அஸ்ஸெலின்யூ முதலில் ஹெமிங்வேயின் நூல்களில் பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதை எடுத்துக் கொண்டார். இரு உலக மகாயுத்தங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் அவை மொழிப்பெயர்க்கப்பட்டன. அவை காலவாரியாக தொகுக்கப்பட்டன. இவை பின்னர் அம்மொழி பெயர்ப்புகள் குறித்த திறனாய்வுக்கட்டுரைகள் மதிப்புரைகள் வெளிவரக் காரணமாயின. இவற்றைத் தொகுத்துக் காணும் போதே ஆரம்பத்தில் அதிக ஆர்வமும் இடையே ஒரு தொய்வும் மீண்டும் 31-32களின் ஆரம்பத்தில் மொழி பெயர்ப்புகள் பெருகியதும் காணமுடிகிறது. மேலும் காலிமார்ட் (Gallimard) என்ற அதிக செல்வாக்கும் திறனும் உடைய பிரெஞ்சு பதிப்பகத்தார் மூலம் 32 இல் ஹெமிங்வேயின் A Farewell to Arm என்ற நூலை M.E. காயிண்ட்ரு மொழிபெயர்த்து அளித்ததை வெளியிட்டது. இது ஹெமிங்வேயின் நூல்களுக்கு பிரெஞ்சில் ஒரு நல்வாய்பை ஏற்படுத்தியது.

ஏற்கனவே இருந்த கைட், ஜாக்குவஸ், ரிவ்வியேர் (Gide & Jaques Riviere) போன்றவர்களின் மொழி பெயர்ப்புகளுடன் இதுவும் சேர்ந்து கொண்டது. பிற மொழி பெயர்ப்பாளர்களை விட

M.E. காயிண்ட்ரு கடினமான மொழிபெயாப்புப்பணியில் சிறப்பாக செயலாற்றுபவர். ஆனால் இவர் பின்னர் ஹேமிங்வேயை Les Cahiers dusud என்ற நூலில் எதிர்த்து முரண்படுகிறார். இரண்டாவது உலகப் போரின் ஆரம்பத்தில் ஹெமிங்வேயிடம் பிரெஞ்சு மக்களுக்கு இருந்த ஆர்வம் குறைந்து மீண்டும் 1945 க்குப் பிறகு அதிகரித்தது.

பிரெஞ்சு நாட்டில் 1928 முதல் 1932 வரை ஹெமிங்வே பெற்ற வெற்றியின் பின்னணியை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார் அஸ்ஸெலின்யூ. அதற்குக் காரணமாக அக்காலகட்டத்து பிரெஞ்சு மக்களின் இலக்கியச் சுவையுணர்வு, சமுதாயப் பண்பாட்டு வாழ்க்கை, போன்றவற்றையும் எடுத்துக் காட்டுகிறார்.

ஹெமிங்வேயின் புனைகதை வடிவம், அவற்றின் பாடு பொருள் மாற்றங்கள், போன்றவை பிரெஞ்சு மக்களைக் கவர்ந்ததுடன் பிரெஞ்சு நாவல்களின் தொனியையே மாற்றியதாகக் காட்டுகிறார் அஸ்ஸெலின்யூ. மால்ராக்ஸ் (Malrax) நாவல்களில், அந்த காலகட்டத்தில் நிலவிய பொருத்தமற்ற தன்மையும் சோகபாவமும் கொண்டவற்றிற்கு மாறாக வீரியமும் வீரதீரப்பண்புகளும் உயிர்ப்புத் தன்மையும் கொண்டவைகளாக விளங்கின.

இதை எடுத்துக் காட்டிய அஸ்ஸெலின்யூ ஹெமிங்வேயின் வெற்றிக்குக் காரணமான குறிப்பிடத்தகுந்த கூறுகளையும் எடுத்துக் கொள்கிறார்.

முதல் உலகப் போருக்குப் பின் ஹெமிங்வே பாரிசில் வாழ்ந்து வந்தார். அப்போது அவரது புகழை அவரைத் தனிபட்ட முறையில் நன்கு அறிந்திருந்த பல பிரெஞ்சு படைப்பாளிகள் அதிகமாகப் பரப்பினர். அமெரிக்க எழுத்துலக ஜாம்பவான்களுள் சிறப்பு பெற்றிருந்த இந்த அம்மையாரைப் பற்றி மேலும் அறிய ஆர்வத்துடன் முனைந்தனர் ஐரோப்பிய ஆசிரியர்கள்.

பெருவாரியாக உற்பத்தி செய்வது, தரக்கட்டுப்பாடு போன்றவற்றை எதிர்த்தவர் ஹெமிங்வே. மனக்கசப்பு, நடைமுறைக் கோட்பாடுகளை மறுத்தல் (சூனியவாதம்) போன்றவற்றை ஹெமிங்வேயின் படைப்புகளில் தேடிக் கண்டுபிடித்ததுடன் பிரெஞ்சு நாட்டிலும் அதே போன்ற மனநிலை இருந்ததை இணைநிலையாகக் காட்டுகிறார். தூய்மைவாதத்தை எதிர்த்தவர்கள் ஹெமிங்வேயின் மனம்திறந்த வெளிப்படையான பாலுறவு பற்றிய சிந்தனைகளை வரவேற்றனர். முக்கியமாக அந்தக் காலகட்டத்தில் பிரெஞ்சில் காணப்பட்ட இலக்கியப் படைப்புகளுக்கு எதிர்மாறாக, ஹெமிங்வேயின் கதைகளில் படம்பிடித்துக் காட்டப்பட்ட சக்தியும், உயிர்ப்புத் தன்மையும், நேரடியான கதைப்பாங்கும், அறிவு ஜீவிகளுக்கே உரியதான நிலையில் இருந்து இறங்கி வந்த தன்மையும் பிரெஞ்சு வாசகர்களுக்குப் பிடித்திருந்தன. அதே நேரத்தில் வாழ்க்கையையொட்டி கதையைப் பின்னுவதும். நேரடியாகக் கூறுவதும், ஹெமிங்வேயின் நுண்மான் நுழைபுலத்தைக் காட்டுகின்றன என்பதையும் உணர்ந்திருந்தனர். தொலைதூரத்தில் இருந்து காண்பது போல் வாழ்க்கையை உள்ளது உள்ளபடி குறுகிய வடிவில் காட்டுவது, தேவையற்றவற்றை ஒதுக்குவது, எதிர்வாதக் குறிப்புகளைத் தருவது போன்ற கூறுகளில் ஹெமிங்வேயின் வாழ்க்கையைக் கூர்ந்து கவனித்து, உற்றுநோக்கிக் கண்டவற்றைப் படைத்துக் காட்டும் தன்மைகளைத் திறனாய்வாளர்கள் எடுத்து விளக்கியுள்ளனர். சில சிறந்த திறனாய்வாளர்கள் 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஐரோப்பிய நாவலாசிரியர்களின் உத்திகளை ஹெமிங்வே எவ்வளவு தூரம் கற்றுக் கொண்டு பயன்படுத்தியுள்ளார் எனக் கண்டுபிடித்துக் கூறினார். ஹெமிங்வேயின் நாவல்களில் இருந்து அமெரிக்க இலக்கியப் போக்கைத் தாம் தெரித்து கொள்வதாகப் பிற பிரெஞ்சு வாசகர்கள் எண்ணிக்கொண்டிருக்க, திறமையான இத்திறனாய்வாளர்கள் அமெரிக்காவிற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு வளர்க்கப்பட்ட பிரெஞ்சு எழுத்தாளர்களின் உத்திகளையே அவர்கள் மீண்டும் கண்டு பிடித்துக் கூறுகிறார்கள் என்று புரிந்து கொண்டனர்.

பின்னர் அஸ்ஸெலின்யூ ஹெமிங்வேக்கு கிடைத்த நல்வாய்ப்புகளில் ஏற்ற இறக்கங்கள் இருந்ததைச் சுட்டிக்காட்டுகிறார். பைரன் தன் படைப்புகள் மூலம் கடுமையான சூனிய வாதத்தைப் பரப்பியதையும் மருள்நீக்கியதையும் அதன் பலனாக சார்த்ரே, காம்யூ (Sartre, Camus) போன்றோர் மிக ஆழமாக பாதிக்கப்பட்டதையும் எடுத்துக் கூறுகிறார்.

அஸ்ஸெலின்யூ ஆய்வுமூலம் நமக்கு ஒவ்வொரு திறனாய்வாளரின் நோக்கு நிலைக்கும் எவ்வளவுதூரம் மதிப்பளிப்பது, முக்கியத்துவம் அளிப்பது என்பதும், சமுதாயக் கூறுகள், அரசியல் வரலாற்றுக்கூறுகள் ஆகியவற்றின் அடிப்படையில் வெவ்வேறு காலகட்டதில் ஹெமிங்வே பெற்ற வெவ்வேறு வாசகர்கள் என்பன பற்றி அறிய இவர்களது திறளாய்வுகள் உதவுகின்றன எனவும் புரிந்து கொள்ள முடிகின்றது.

இத்திறனாய்வுகளும் மக்கள் தொடர்புச் சாதனங்கள் (பத்திரிக்கை, திரைப்படம், விளம்பரங்கள்) ஒரு புகழ்பெற்ற பெயரும் ஈடுபாடும் கொண்ட பதிப்பகத்தால் வெளியிடப்படுவது போன்ற பலவும் இந்த மாற்றங்களுக்குக் காரணம் ஆகலாம்.

மேலும் ஹெமிங்வேயின் (படைப்புகளில்) பலமும் பலவீனமும் A Farewell to Arms, The first Forty Nine போன்ற சிறந்த படைப்புகளில் இருந்தும், For whom the Bell Tolls, Across the river & into the Trees என்பன போன்ற படைப்புகளின் மாறிய தன்மைகளில் இருந்தும் அறிய முடிகிறது என்கிறார்.

இவ்வாறு பல்வேறு தரவுகளையும் திரட்டும் போது எண்ணிக்கை அடிப்படையைக் கொள்வது போதாது என்பதையும், ஒவ்வொரு தரவையும் எவ்வாறு திரட்டி, அளந்து மதிப்பீடு செய்வது என்பதையும் நாம் புரிந்து கொள்ளலாம்.

2. பிரடெரிக் கண்டால்ஃப் காட்டிய வழி

பிரடெரிக் கண்டால்ஃப் எழுதிய, "ஜெர்மனியில் சேக்ஷ்பியர் பெற்ற நல்வாய்ப்பு'' என்ற ஆய்வும் குறிப்பிடத்தக்கது. இங்கு இடைத்தொடர்பாளர்கள் பணியும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டது. 17ஆம் நூற்றாண்டில் ஆங்கிலக் கோமாளிகள் என்ற பெயரில் சேக்ஷ்பியரின் இன்பியல் நாடகத் தழுவல்கள் நடிக்கப்பட்டன.

லெஸ்ஸிங், கதே, ஸ்கில்லர் போன்ற ஜெர்மனியப் படைப்பாளிகளும், பின்வந்த புனைவியல்வாதிகளும் சேக்ஷ்பியரிடமிருந்து பெற்ற தாக்கத்தை இவர் மிக விரிவாகப் பகுத்துப்பகுத்து, எடுத்துக்காட்டுகிறார். மேலும் சேக்ஷ்பியரின் புகழ்பெற்ற சானட் வகைப்பாக்கள் ஜெர்மனியில் பாதிப்பை ஏற்படுத்தும் நல் வாய்ப்பைப் பெற்றமையையும் அதனால் வீலாண்ட் முதல் ஸ்கில்லர் வரை (Wieland to Schiller) அப்பாவகையைப் பயன்படுத்தியதையும் எடுத்துக்காட்டுகிறார். ஜெர்மனிய இலக்கிய வரலாற்றையும் கருத்தியல் வரலாற்றையும் எடுத்துரைக்கும் முக்கிய நூலாக இது விளங்குகிறது.

3. கண்டால்ஃபின் பணி

ஷேக்ஸ்பியரை முழுமையாக அவரது மூலநூலின் மூலமே அறிந்திருந்தால்தான் இவ்வாறு சிறப்புற ஆராய முடியும். இவ்வாறான ஆய்வுக்கு எலிஸபெத் கால மக்கள் சேக்ஷ்பியரை எவ்வாறு கண்டனர்?. ஜாக்கபிய மக்கள் அவரை எவ்வாறு உணர்ந்தனர் என வேறுபடுத்தி உணரவும் திறம் பெற்றிருக்க வேண்டும். இத்திறன்களே கண்டால்ஃபை மிகச்சிறந்த மொழி பெயர்ப்பாளராகப் பெயர் பெற்றிருந்த A.W. செலகலின் மொழி பெயர்ப்பில் கூட சில பேதங்கள் இருப்பதை எடுத்துக்காட்ட வைத்தன. அதன் மூலம் ஒப்பீட்டுத் திறனாய்வை மிகச் சிறப்பான முறையில் படைக்க முடிந்தது.

ஜெர்மனியில் சேக்ஷ்பியரின் படைப்புகள் ஒன்றாகக்கலந்து மயங்கியதோடு ஜெர்மனிய இலக்கிய வளர்ச்சிப் போக்கை நிர்ணயிப்பதாகவும் சேக்ஷ்பியரின் வரவு அமைந்தது எனவும் சேக்ஷ்பியரின் சில கூறுகளை அப்படியே ஏற்று ஒவ்வொரு காலகட்டத்திலும் கொஞ்சம் கொஞ்சமாக தன் வயமாக்கிக் கொண்டு ஜெர்மனிய இலக்கியத்தின் வளர்ச்சி எவ்வாறெல்லாம் பல்வேறுபட்ட வழிகளில் வளர்ந்தது என்பதையும் எடுத்துக்காட்டுகிறது, கண்டால்ஃபின் நூல். ஜெர்மனிய எழுத்தாளர்கள் சேக்ஷ்பியரின் நாடகங்களை மாதிரியாகக் கொண்டு தம் நாடகங்களுக்கான பாடு பொருளை எடுத்துக் கொண்டனர். அவர்களுக்குத் துன்பியல் இன்பியல் நாடக முறைகளைத் தந்தவர் ஷேக்ஸ்பியர். இவை பிரெஞ்சிலிருந்து வந்தவற்றிலிருந்து வேறுபட்டிருந்தன. (வடிவத்தில்) ஜெர்மனிய இலக்கியமும் வாழ்க்கையும் ஒன்றைவிட்டு ஒன்று விலகியிருந்த கால கட்டத்தில் இலக்கியத்தையும் வாழ்க்கையையும் அணுகும் முறைகளையும் அளித்தன, சேக்ஷ்பியரின் மொழி பெயர்ப்புகள்.

4. டி.எஸ்.எலியட்டின் பணி

T.S. எலியட்டின் "போவிலிருந்து வாலெரி வரை" (From Poe to Valery 1938) என்ற கட்டுரையும் ஏற்பு பற்றிய விளக்கத்தை அளிப்பது.

பிரெஞ்சில் வெவ்வேறு காலகட்டத்தைச் சேர்ந்த வெவ்வேறு தலைமுறையைச் சேர்ந்த கவிஞர்களை எடுத்துக் கொண்டு அவர்கள் சமகாலத்து அமெரிக்கக் கவிஞரான எட்கார் ஆலன்போவின் படைப்புகளால் எவ்வாறு பாதிக்கப்பட்டனர், எவ்வாறு எதிர்வினை புரிந்தனர் என எடுத்துக்காட்டுகிறார் டி.எஸ்.எலியட். டி.எஸ். எலியட்டைப் பொறுத்தவரை எட்கர் ஆலன்போவிடம் உள்ள மனிதனால் கவரப்பட்டவரே போதலர். கவிஞனாவதற்கு முன்பிருந்த போவையே அவர் விரும்புகிறார் என்கிறார் எலியட். கவிஞன் என்பவன் தன்னுடைய சமுதாயத்தால் அவ்வளவு அதிகமாக கவனிக்கப்படாமல் ஏனோதானோவென்றே மதிப்பளிக்கப் பெறுகிறான் என்கிறார் அவர்.

ஒரு அனாதை தன்னுடைய கொடிய வளர்ப்புப் பெற்றோரிடமிருந்து தனித்தே இருப்பது போல ஒரு (படைப்பாளி) கவிஞன் தன்னுடைய சொந்த சமூகத்திலிருந்தே அதனுடைய கொடூர மனப்பான்மை காரணமாகப் பிரிந்திருக்கிறான் என்பார் ஹாரிலெவின். இவர் போவினுடைய நூல்களைச் சிறப்பாக மொழிபெயர்த்தவர். போவினுடையை கதைகள் இவருடைய இந்த நோக்கு நிலையை அரண் செய்கின்றன எனலாம்.

மல்லார்மே [Mallarme] யைப் பொறுத்தவரை போவினுடைய கவிதைகளில் முதலில் ஈடுபாடு கொண்டிருந்தவர் பின்னர் அவரது கவிதை உத்திகளில் ஈடுபாடு கொள்கிறார் என்கிறார் டி.எஸ்.எலியட். ஏனெனில் ஆங்கிலத்தைத் தம் தாய்மொழியாகக் கொண்டிருக்கும் வாசகர்களை விட ஆங்கிலத்தைத் தம் தாய்மொழியாகக் கொள்ளாத வாசகர்களுக்கே போவின் கவிதைகளைப் பிடிக்கும் என்கிறார். வாலெரியைப் பொறுத்தவரை (Valery) அவரில் காணும் மனிதனோ அவரது கவிதைகளோ கவர்ந்ததை விட அவரது கவிதைப் படைப்பில் அவர் பின்பற்றிய இலக்கியக் கொள்கைகள் மக்கள் கவனத்தை கவர்ந்தன என்கிறார்.

போவினது "The Philosophy of Composition," "Th poetic Principle" ஆகிய கட்டுரைகளால் பெரிதும் கவரப்பட்டவர் வாலேரி. இவற்றில் போ, "கவிதையாப்பு என்பது மிக நுண்ணிய நோக்கோடு எண்ணிப்பாாத்து செயலாற்றவேண்டிய ஒன்று எனவும் கூர்ந்த அறிவு சார்ந்த பயிற்சி" எனவும் கூறுவதாகவும் எடுத்துக்காட்டுகிறார் டி.எஸ்.எலியட்.

இதுவரை விவாதிக்கப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் 'ஏற்பு' எனும் கோட்பாடு பற்றிய கருத்துகளைப் பின் வருமாறு நிரல்படுத்தலாம்.

1. ஒரு குறிப்பிட்ட நூலின் ஆசிரியரின் ஏற்பு பிறிது ஒரு நாட்டிலோ, ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திலோ எவ்வாறு இருந்தது என்பதை ஆராய்வதும் 'ஏற்பு' பற்றிய ஆய்வினுள் அடங்கும்

என்பதை மேலே காட்டிய எடுத்துக்காட்டுகள் சுட்டுகின்றன. இதையே From Poe to Valery என்ற டி.எஸ்.எலியட்டின் திறனாய்வுக் கட்டுரை எடுத்துக்காட்டுகிறது. வால்டர்மஸ்க் எழுதிய (Tragic History of Literature) “இலக்கியத்தின் சோக வரலாறு” ஜெர்மனியில் ஹேம்லட் நாடகத்தின் ஏற்பு பற்றிக் கூறுவதையும் சுட்டலாம் .

2. ஒரு தனி ஆசிரியர் மற்றொரு மொழியில் உள்ள வேறொரு ஆசிரியரிடம் கொண்டுள்ள தொடர்பு பற்றி எடுத்துக் கூறுவது.

எ.டு.ஃபிலாபர்ட்டுடன் ஹென்றிஜேம்ஸ் கொண்ட உறவு (Henry James to Flaubert) பற்றிய ஆய்வு.

அ) ஜேம்ஸ் தன் இரு கட்டுரைகளை ஃபிலாபர்டிற்கு அர்ப்பணித்துள்ளார்.

ஆ) தன் முன்னுரைகளில், கட்டுரைகளில், பத்திரிக்கை எழுத்துகளில் தன்னுடைய நாவல்களில் ஃபிலாபர்ட்டைப் பற்றிய தன் உயர்வான மதிப்பை, தன் ஈடுபாட்டை வெளிப்டுத்திக் கொண்டுள்ளார்.

1910 களில் ஜெர்மனிய கதேயின் நூல்களை இங்கிலாந்தில் அதிகம் விரும்பிப் படித்தனர். 1925இல் மிகச்சிலரே படித்தனர்; புனைவியல், பின்புனைவியல் காலத்தில் ஹ்யூம், பௌண்ட், வின்தாம் லூயிஸ் ஆகியோரிடம் ஏற்பட்ட ஈடுபாட்டால் கதே விடுபட்டுப் போகிறார். (Hume, Pound & Wyndham Lewis)

3. ஜெர்மனிய உன்னதக்கோட்பாட்டில் ஈடுபாடு குறைந்தமை போன்றவற்றால் 1910 - 1915 இல் வாசகர்களிடையே இலக்கியச்சுவை மாறுபாடும் ஈடுபாட்டில் வேறுபாடும் ஏற்பட்டன. வாசகர்களின் இரசிகத்தன்மை, சுவையுணர்வில் ஏற்பட்ட மாறுபாடு காரணமாக ஒரு ஆசிரியர் ஏற்கப்படலாம் அல்லது ஒதுக்கப்டலாம் என்பதை இது எடுத்துரைக்கிறது.

ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் தம் ஊருக்கு எனத் தலவரலாறு கட்டாயம் இருக்க வேண்டும் எனக்கருதப்பட்டுத் தலவரலாறுகள் தமிழில் பெருகின. ஆயின் இன்று தலவரலாறு படைக்கப்படுவது மிகமிகக் குறைவு. இதையும் இங்கு ஒருங்கு வைத்து எண்ணலாம்.

4. தனியொரு ஆசிரியர் பிறிதொரு மொழியில் படைக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட நூலினால் பெரிதும் கவரப்பட்டு அவரது கருத்து முழுவதையும் தொடர்ந்து ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதையும் அதன் காரணத்தையும் அதனால் ஏற்பட்ட விளைவுகளையும் ஆராய்வதையும் ஏற்பு பற்றிய ஆய்வாகவே கொள்ளலாம்.

(எ.டு) மார்க்ட்டுவைன் டான்குவிக்ஸ்ஸோடால் பாதிக்கப்பட்டமை. (Mark Twein & Don Quixote) ஹென்றிஜேம்ஸ் பொவரி அம்மையாராலும் (Henry James & Madame Bovary).டால்ஸ்டாய் சேக்ஸ்பியிரின் லியர் மன்னனாலும் கவரப்பட்டனர்.ரில்க் (Rilke) போதலே(ர்)யின் Une Charogine என்ற கவிதையால் பெரிதும் ஆக்கிரமிக்கப்பட்டார்.அதனால் பொதுவாக இலக்கியங்களில் இடம் பெறாத அழகற்றவையும், கோரவடிவினவும் பயங்கரங்களும் பாடுபொருளாவதை ஏற்றுக் கொள்கிறார் போதலே(ர்).

இவ்வாறு இரு ஆசிரியர்கள் எதிர்ப்படும் போது இரண்டு கொள்கைளை மனதில் கொள்வது நல்லது என்கிறார் பிராவர் (ப.37) அதற்கு டொனால்ட்ஃபாங்கர் என்பவர் தரும் விளக்கத்தையும் தருகிறார். (Donald Fanger / "Dostoe veskey and Romantic Relations : A Study of Dostoeveskey in Relation to Balzac, Dickens & Gnogol, Cambridge Mass 1965)

1. ஒவ்வொரு ஆசிரியரையும் ஐரோப்பிய மரபில் எந்த இடத்தில் இருக்கிறார் எனக்கண்டு வரையறை கூற முனைவதற்கு முன் அவரிடம் அவரது தாய் நாட்டின் இலக்கிய மரபும் அவருக்கே உரிய சொந்த மண்ணின் மணமும் அவரிடம் எவ்வாறு

உள்ளது என்பதைக் காண்பது அவசியம் என்கிறார் டொனால்டு ஃபாங்கர்

2. இரண்டாவது கொள்கை ஏற்பு அல்லது வரவேற்பு பற்றிய ஆய்வுகள் அந்த ஏற்பினால் ஏற்பட்ட செல்வாக்கு, விளைவு பற்றிய கண்ணோட்டங்களையும் இணைத்துக் கொண்டு சொல்ல வேண்டும் என்று கருதுவது (Horst Rudeger) ஹார்ஸ்ட் ரூடிகர் என்பவர் Wirkung (effect) என்ற ஜெர்மானியச் சொல்லுக்கு விளக்கம் தரும்போது (Rezeption) ஏற்பும் அதன் முனைப்பான விளைவும் ஒன்றை ஒன்று சார்ந்து நிற்பவை, அரண் செய்பவை என்கிறார் .

"ஒரு உள்ளார்ந்த மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய வளமை கொண்ட உயிரேட்டமுடைய உந்து சக்தியினால் பெறப்படுவதே விளைவு" என்கிறார் இவர். மேற்கு - கிழக்கு திவான் (West Eastern Divan) என்ற நூலை எழுத கதே கீழை நாடுகளில் இருந்து பெற்ற மூலங்கள் எவை எனவும் மேலை நாடுகளிலிருந்து பெற்ற மூலங்கள் எவ்வளவு எனவும் மட்டும் எடுத்துக்காட்டுவது ஒரு ஒப்பிலக்கிய வாதியின் முழுமையான நோக்கமாக இருக்க முடியாது. அவர் எவ்வெவற்றை எங்கிருந்து கடன் வாங்குகிறார்? மூலத்திலிருந்து எவ்வளவு தூரம் விலகிச்செல்கிறார்? போன்ற பலவற்றையும் விளக்க ஒப்பீட்டை மேற்கொள்வதே உண்மையான ஒப்பிலக்கிய ஆய்வாக இருக்கும். இவ்வாறு செயல்பட வேண்டும் என்பது தான் இரண்டாவது கொள்கை.

இவ்வாறு காண்பது கூட ஆய்வுக்கான தகவல் திரட்டலின் முதல் நிலையாகவே இருக்கும். உண்மையில் மரபு வழியாகத் தான் பெற்ற செய்திகளைக் கதே தன்னகப்படுத்திக்கொண்டு, அவற்றைத் தன் படைப்புகளில் எவ்வாறு பயன்படுத்தியுள்ளார், அதற்கு அவர் கையாளும் சிறந்த வழிமுறைகள் எவை என எடுத்துக்காட்டுவது முதல் நிலை. கதேயின் பிற்கால எழுத்துக்களின் மொழி நடையே இம் மூலங்களால் பாதிக்கப்பட்டிருப்பதைக் காண்பது அடுத்த நிலை.

இவ்வாறு ருடிகர் கூறும் இந்த எடுத்துக் காட்டின் மூலமாக விளைவும் (Wirkung effect) ஏற்பும் (Rezeption) ஒன்றை ஒன்று சார்ந்தவை; ஒன்றுக்கு ஒனறு துணைநிற்பவை; அரண் செய்பவை என்ற உண்மையை உணர்த்துகிறார் எஸ்.எஸ். பிராவர்

3. இடைத்தொடர்பாளர்கள்

மூன்றாவதாக இடைத்தொடர்பாளர்கள் பற்றிய ஆய்வும் இந்த ஏற்பு, இலக்கியத்தொடர்பு ஆகியவற்றுடன் இணைத்துக் காணவேண்டிய ஒன்றாகும். தற்போதைய காலத்தை "கருத்துத்தொடர்புக் காலம்" எனலாம். தகவல் தொடர்புச் சாதனங்களின் பெருக்கமும் எளிதாக்கப்பட்ட பயண முறைகளும் ஒரு நாட்டில் இருந்து பிறிதொரு நாட்டிற்கு இலக்கியத் தொடர்பு ஏற்படுவதற்குப் பெரும் வாய்ப்புகளை நல்குகின்றன. இவ்வாறான இலக்கிய உறவுகளுக்கு அடிப்படையாக இருக்கும் இடைத்தொடர்பாளர்களின் வகைகள், செயல்பாடுகள் பற்றியும் ஆராய்வதன் தேவை இன்று அதிகம் உணரப்பட்டுள்ளது. கருத்துத்தொடர்பு பற்றி ரேமண்ட் வில்லியம்ஸ் வரைவிலக்கணம் தருகிறார்.

"கருத்துக்கள், அறிவிப்புகள், மனப்பான்மைகள் போன்றவை நிறுவனங்கள் மூலமாகவும், வடிவங்கள் மூலமாகவும் பரப்பப்படுகின்றன அல்லது ஏற்கப்படுகின்றன" என்கிறார் அவர். (ப.38 எஸ்.எஸ் பிராவர்) ஒரு குறிப்பிட்ட மொழியின் இலக்கிய வரலாறு எழுதப்படும் போது எவ்வாறு அம்மொழியில் கருத்துத்தொடர்புகளும் இலக்கிய உறவுகளும் ஏற்பட்டுள்ளன என்று காண்பது அவசியமாகிறது.

"எண்ணப் போக்குகளின் பயணம் இலக்கியங்கள் பயணம் சென்ற வழியே அமைகிறது என்னும் ஒரு பருந்துப் பார்வையில் காண்பது இலக்கிய வரலாற்றை அணுகுவதற்கான வழியாக அமையும்" என்று கூறும் பிராவர், அதற்கு எடுத்துக்காட்டாக

டி.ஆர். ஹென் எழுதிய “The Apple and the Spectograph” என்ற நூலைச் சுட்டுகிறார். இந்நூல் மத்திய தரைக்கடல் பகுதியிலிருந்து கருத்து வளங்கள் வடக்கே பரவின என்பதை, எண்ணப் பரவலை விளக்கும் ஒரு வரைபடம் போலக் கோடிட்டுக் காட்டியிருப்பதைச் சுட்டுகிறார்.

இந்நூலில் ஹென், ‘ஐரோப்பிய வரைபடத்தை நம்முன் வைத்துக்கொண்டு பார்த்தால் இலக்கியங்களும் எண்ணங்களும் மத்திய தரைக்கடல் பகுதியிலிருந்து வடக்கு நோக்கி நகர்ந்த, வழித்தடத்தை நன்கு கணிக்க முடியும்’ - என்கிறார் எகிப்திலிருந்து கிரேக்கத்திற்கு, பாலஸ்த்தீனத்திலிருந்து கிரேக்கத்திற்கு; கிரேக்கத்திலிருந்து சிசிலிக்கு, சிசிலியிலிருந்து வடக்கு நோக்கி நகர்ந்து ரோமிற்கு, ரோமிற்குள்ளேயே சுற்றிச்சுற்றிப்பின் மீளவும் கான்ஸ்ட்டாண்டி நோபிளில் மேலெழும் வரை அடிமட்டத்தில் அமுங்கிக்கிடந்து, பின் மேலெழுந்தது என்று கருத்துப் பயணத்தின் வழித்தடங்களை எடுத்துரைக்க முடியும். ஹெலனிய பண்பாட்டின் மீதங்களாக எஞ்சிய எண்ணங்களையே மிகச்சிறப்பானதாகப் போற்றிக்காத்தது கான்ஸ்டாண்டி நோபிள். துருக்கியர்களின் தாக்குதலுக்கு உள்ளான கான்ஸ்ட்டாண்டி நோபிள் பின்னர் 400 ஆண்டுகளில் ஐரோப்பிய எண்ணப் போக்குகளை நிர்ணயிக்கத் தக்கதாக மாறியது; செவ்வியல் சார்ந்த மனித நேயத்தை வடக்கு இத்தாலியில் ஏற்படுத்தியது; வடக்கு இத்தாலியிலிருந்து வடக்கே ரோனே (Rhone) பள்ளத்தாக்கிற்குப் பரவியது. ரோனே பள்ளத்தாக்கைப் போர், வணிகம் இலக்கியம் போன்ற அனைத்துப் பரிமாற்றங்களுக்கும் உரிய தேசிய போக்கு வரவிற்கு உரிய இடமாக, ஒரு நாற்சந்தி எனக்கூறுவர், இத்தகைய நாற்சந்தியின் வழியாக அது பாரிசிற்குப் போயிற்று. அவ்வாறு வடக்கு நோக்கிய அதன் பயணத்தின் போதே அது கிழக்கும் மேற்குமாக பரப்பிக் கொண்டே சென்றது.

பாரிசில் மொராக்கோ வழியாக அபேியாவிலிருந்தும் எகிப்திலிருந்தும் வந்த வேகமிக்க ஆற்றல் மிக்க போக்குகளுடன் சேர்ந்து கொண்டது. இங்கிருந்து நேரே ஸ்பெயின் நாட்டிற்குச்

சென்று பிரெஞ்சு வழியாக வடக்கு நோக்கிப் பரவியது. மீண்டும் வடக்கு இத்தாலியை அடைந்தது எனக் கூறும் டி.ஆர். ஹென்னின் கூற்றை முன்வைப்பதன் மூலமாக எண்ணங்கள், கருத்துக்கள் போன்றவற்றின் பயணத்தை வரைபடத்தில் வரைவது போலவே எடுத்துக் கூறமுடியும் என்பதை வலியுறுத்துகிறார் பிராவர்.

முரிய கலாச்சாரத்தில் வளர்ந்து வளம் பெற்றதாகக் கருதப்படும் கணக்கியல் பற்றிய கல்வியும், இயற்பியல் பற்றிய கல்வியும் எவ்வாறு ஐரோப்பாவில் பரவியது என்று அரிஸ்ட்டாடில் பற்றி அராபியத் திறனாய்வாளர்கள் கூறும் பொழுதும் இத்தகைய ஒரு கருத்துப் பயணத்தைச் சுட்டிக் காட்டுகின்றனர்.

தன் வழிநெடுக ஒரு சீரான (உந்துவிசை) தாக்க ஆற்றலைக் கொண்டு கொஞ்சம் கொஞ்சமாய் அரேபிய நாடுகளில் இருந்து இங்கிலாந்து நோக்கிப் பயணித்தன எனவும், இந்த உந்து விசையை அவை அரசியல் நிகழ்வுகள் மூலம் பெற்றிருக்கலாம் அல்லது கல்வியாளர்கள், அறிஞர்கள், சமுதாயச் சிற்பிகள், இளவரசர்கள் போன்ற தனியாள் முயற்சியால் அவ்வுந்து விசையைப் பெற்றிருக்கலாம். பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த அக் கருத்துக்களை, அவற்றின் அரண்கள் உடைக்கப்பட்டு இங்கிலாந்து வரைப் பரவ இவர்கள் காரணமாக இருந்திருக்கின்றனர் எனவும் எடுத்துக்காட்டகிறார் எஸ் . எஸ் .பிராவர்.

இந்த கருத்துவெள்ளப் பெருக்கு ஒரு நேரம் ஒரு குறிப்பிட்ட திசை நோக்கி ஓடிவரும்; இதன் மூலம் கலாச்சார பண்பாட்டு மரபுகளுக்கு அடித்தளமாய் இருப்பனவற்றைக் கொண்டு வந்து சேர்க்கும் (அவற்றில் சிலவற்றை இங்கு நாம் நினைவு கூரலாம்.

கிறிஸ்தவமரபு ஏற்கனவே ஹீப்ரு மொழியில் இருந்த கருத்துக்களையும் ஹெலனிய கருத்துக்களையும் இணைத்து உள்வாங்கிக் கொண்டு தன்னகப்படுத்திக் கொண்டுள்ளது.

எகிப்து, அரேபியா, கிரேக்கத்திலிருந்து அறிவியல் கணக்கியல். வானியல் கூறுகள் உலகமெங்கும் பரவியது, ரோமிலிருந்து அரசியல் கொள்கைகளையும் சட்ட நுணுக்கத்தையும் இத்தாலியிருந்து ஓவியக் கலையையும் பிரெஞ்சு நாட்டின் வடபகுதியிலிந்து கதிக் கட்டிக் கலையையும் (Goethic) இவர்கள் கொண்டு சென்றனர். தொடர்ந்து 300 ஆண்டுகளில் இக்கருத்துகள் யாவும் இங்கிலாந்தைச் சென்றடைந்தன. T.R. Hen. ப. 99-100)

இவ்வாறு ஹென் பலவாறாக ஏற்பின் போக்கும் வரவும் பற்றி எடுத்துக் கூறுகிறார். ஆனால் இத்தகைய ஆய்வுகளின் போது தாயகத்திற்கே உரிய "தனித்தன்மை கொண்ட சிக்கல்கள் நிறைந்த மரபுகள்" யாவை? எவற்றின் செல்வாக்கு இம்மரபுகளில் மாற்றங்களைக் கொணர்ந்தன என்பது பற்றிய அக்கரையும் தேவை என்கிறார் ஹென்.

முதலில் இவ்வாறான ஒரு கோட்டில் வரைந்த வரைபடம் போன்ற இலக்கிய வரலாற்றை - எண்ணப் போக்குகளின் வரலாற்றை வரைந்து கொண்டு பின்னர் அதன் வழியிலேயே விரிவாகவும், சிக்கல் நிறைந்த பல வரவுகளின் இணைப்பாகவும் இருக்கக்கூடியற்றைப் பொருந்தக்கூடிய இடங்களில் பொருத்தி விளக்கமாகப் படம் பிடித்துக் காட்ட வேண்டும்.

ஆங்கில இலக்கிய வரலாற்றைக் காண்போமாயின் அது இலத்தீன் மொழியில் இருந்தும் பிரெஞ்சு மொழியிலிருந்தும் தொடர்ந்த செல்வாக்கைப் பெற்றிருப்பது புரியும். அந்நாட்டிற்கே உரிய சொந்த இலக்கிய வளர்ச்சியைப் பெரிதும் வெளிநாடுகளில் இருந்து வந்த அதிகார பூர்வமான வலிமையான செல்வாக்கு பாதித்து (தான் மேலோங்கி) வந்தது. ஆனால் காலப்போக்கில் இவ்விரண்டின் இணைவும் ஒரு புதிய ஒருங்கிணைவானதை நாம் நினைவு கூர வேண்டும் என்கிறார் பிராவர்.

டிரைடன் போன்ற புதிய செவ்வியற்காலத் திறனாய்வாளர்கள் சேக்ஷ்பியரைப் பற்றிக் கூறியனவற்றை இங்கு

எண்ணிப் பார்க்கலாம். இவர்கள் சேக்ஷ்பியரிடம் பிரெஞ்சிலிருந்து வந்து சேர்ந்த நாடகம் பற்றிய கருத்துக்கள் இருப்பதை எடுத்துக்காட்டுகின்றனர். ஆனால் சேக்ஷ்பியரையே பிரெஞ்சு புனைவியல் இலக்கியத்திலிருந்து பிரித்துக் காண்பது இயலாது என்பார் கிரஹாம் ஹோ. (Graham Hough, Image Experience - Studies in a Literary Revolution, London, 1960 P.71) (In-Prawar P.40) சேக்ஷ்பியர் தன் பல படைப்புகளுக்கான மூலப்பொருளை அவற்றிலிருந்தே பெற்றார் என்பர்.

இடைத்தொடர்பாளராகக் கலைஞர்கள்

'பல்கலைக்கழகங்களில் ஒப்பிலக்கியக் கல்வி எனும்போது டிரைடன், எஸ்ரா பௌண்ட் போன்ற இடைத்தொடர்பாளர்களை விட்டுவிட்டு ஒப்பிலக்கிய ஆய்வு செய்தல் இயலாது. அதே போல இலக்கியத் தொடர்புபற்றிய வரைபடத்தில் ஊர் ஊராகச்சென்று கலைக்காட்சிகளை நடத்தும் நடிகர்களையும் கலைஞர்களையும் ஒதுக்கிவிட முடியாது, என்கிறார் பிராவர். எடுத்துக்காட்டாக "ஆங்கிலேய இன்பியல் நாடகத்தார்" என்ற நாடகக் குழுவினர், ஜெர்மனியில் 17ஆம் நூற்றாண்டில் சேக்ஷ்பியரின் பல நாடகங்களைத் தொடர்ந்து நடித்து அதன் பரவலுக்குச் காரணமாக இருந்ததை எடுத்துக் காட்டுகிறார் பிராவர்.

ஐரோப்பாவில் 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஃபாண்டஸ்மகோரியா நடத்திய நாடகங்கள் சேக்ஷ்பியரின் பரவலுக்குக் காரணமாயின.

பிரெஞ்சில் கதிக் புனைவியல் பரவலும் நாடகமும்

ராபர்ட்ஸன் எனும் கலைஞர் பாரிஸ், பார்டியாக்ஸ், மாட்ரிட் போன்ற பல இடங்களில் ஒலி - ஒளி நிகழச்சிகள் நடத்திக்காட்டினர். ஓவியங்களையும் ஒளி மாறுபாடுகளையும் கொண்டு நிகழ்த்தப்பட்ட அக்காட்சிகளால், உருவங்களை

பார்வையாளர்களின் அருகில் கொண்டு வந்து, தூரமாக நகர்த்திச் சென்று பல அற்புதமான வடிவ உருக்களின் நிழல்கள் மூலமாக நல்ல இரசனை உணர்வை ஏற்படுத்தினார். இதனால் இவர்கள் நுண்ணிய கலை உணர்ச்சி பெற்றவர்களாயினும் இல்லாதிருப்பினும் அவர்களிடையே ஒரே மாதிரியாக கதிக் புனைக்கதைகள் பற்றியும் கவிதைகள் பற்றியும் ஒரு நல்ல சுவையுணர்வு மேலோங்கியது.

பல காட்சிகளில் வௌவால்களும் மண்டையோடுகளும் எலும்புக்கூடுகளும் திரைக்கு முன் ஓடிப் பறந்தன; திடீரென பார்வையாளர்களின் தலைக்கு மேல் தோன்றின. ராபர்ட்ஸனின் நிகழ்ச்சிகளைப் பத்திரிக்கைகள் பெரிதும் பாராட்டின. 'யங் என்பவரின் இரவு எண்ணங்கள்' என்ற (Young's Night Thoughts) கவிதையில் வரும் மணி மண்டபக்கூரை, ஏமாற்ற மடைந்ததால் மனச்சோர்வுபெற்ற காதலன், காதலுக்கும் சாவுக்கும் இடையேயான கவிதை முரணிசைவு போன்ற பல கூறுகளும் ராபர்ட்ஸனின் நிகழ்ச்சியமைப்புகளின் மூலக் கூறுகளாகும். அந்நிகழ்ச்சிகளுக்கு இக்கவிதைகள் தான் பின்புலம் தரும் மூலமாக விளங்கின என்கிறார் ஜே.ஈ. வாரி (J.E.Varey, Robortsons Phantasma gloria in Medrid 1821, Theatre Note Book Vol. IX No.4.pp 89-95 & Vol XI No.3.pp 1–10).

இரண்டாவதாக இடுகாட்டுக் கல்லறைகளின் பின்புலத்தில் சோக இழைக்கு நேர் எதிராக அதற்கு ஈடு செய்வது போல உணர்வுமயமான காதல் காட்சியும் ராபர்ட்ஸன் காட்சிகளில் அமைந்திருக்கும். மூன்றாவது ஒரு கூறு, ராபர்ட்ஸன்னுக்கு வேற்று நாட்டிலிருந்து கொணரப்பட்ட அயற்பண்புகள் பால் உள்ள அதிக ஈடுபாடு. இவையாவும் இணைந்து பிரெஞ்சில் கதிக் ஈடுபாட்டை அதிகப்படுத்தின. அதேபோல ஆங்கில நாடக மரபிற்கும் பிரெஞ்சு மரபிற்கும் இடையே இடைத்தொடர்பாளராக மைக்கேல் செயிண்ட் டெனிஸ் (Michel Saint-Denis) முக்கிய பங்கு வகிக்கிறார்.

போலன் நாட்டு நாடகத்திறனாய்வாளரான ஜன்காட் (Jankott) "டைட்டஸ் அண்ட்ரோனிகஸ்" என்ற நாடகத்தை இயற்றி

நடித்த பீட்டர் ப்ருக்ஸின் செல்வாக்கு ஆங்கில நாடக உலகத்தில் அதிகம் கால் கொண்டது என்றும் அதன் காரணமாக சேக்ஷ்பியரை அணுகும் நோக்கே மாறியது என்றும் கூறுகிறார். ஜன்காட் ஆரம்பித்து வைத்த சேக்ஷ்பியர் பற்றிய இந்தத் திறனாய்வு நோக்குடன் பிரெக்ட்டின் நாடகக்குழுவும் இணைந்து ஆங்கிலத்திறனாய்வு நோக்கையே மாற்றியது, கிளிஃபோர்டு வில்லியம்ஸ், பீட்டர் புரூக் ஆல்ட்விச் போன்ற பலருடைய நாடகக் குழுக்களும் காட்டினுடைய "சேக்ஷ்பியர் நம் சம காலத்தவர் "(Shakespear our contemperarion) என்ற நூலுக்குக் கடமைப்பட்டுள்ளன.

இடைத்தொடர்பாளராகத் திரைப்படங்கள்

பால்வான்தீகம் உண்மையில் பிரெஞ்சுப் புனைகதைகள் அமெரிக்கப் புனைகதைகளின் தாக்கத்தைப் பெற்றுள்ளதா என்ற ஐயவினாவை எழுப்பி, அமெரிக்க பிரெஞ்சுப் புனைகதைகள் அவற்றின் சமகாலத் திரைக்கதைகளின் தாக்கத்தைப் பெற்றுள்ளனவா என்ற வினாவே உண்மையானது எனக் கூறுகிறார். இக்கூற்றின் மூலம் திரைப்படம் ஒரே சமயத்தில் இருவேறு மொழிகளிலும் (அமெரிக்க, பிரெஞ்சு) தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதனால் இரண்டு மொழிகளும் ஒன்றை ஒன்று தாக்கியிருப்பதான மாயத்தோற்றத்தைத் திரைப்படம் ஏற்படுத்துகிறது என்கிறார் இவர். வெவ்வேறு மொழிப்படங்கள் பார்ப்பதால் வேற்று மொழி இலக்கியம் பற்றிய அறிவு ஏற்படுகிறது; அந்தத் திரைப் படங்களைக் காண்பவர்கள் அப்படத்தின் மூலக் கதையைப் படிக்க வேண்டும் என்ற தூண்டுதலுக்கும் உள்ளாகிறார்கள்; அதனால் ஒரு நாட்டு இலக்கியம் நாடுவிட்டு நாடு பரவுகிறது; இலக்கிய உறவு ஏற்படுகிறது. தாமஸ் மானின் Death in Venice எனும் நாவல் திரைப்படமாக்கப் பட்டதற்குப்பிறகு மேலும் அதிகமாக விற்பனையாயிற்று. லூயிஸ்ஸின் The Monk, யங் கினுடைய Night thoughts (இதை மாய உருக்காட்சிகளின் வேத நூல் எனக் கூறுவர்) போன்ற நூல்களும் திரைப்படமாக்கப்பட்ட பின்னர் அதிகமாக விற்பனையாயின. ராபர்ட்ஸன்னின் ஒரு திரைப்படக் காட்சியின்

மூலம் அதிகமாக மகிழ்வோடு கவரப்பட்டுப் பின் பிரெஞ்சு மக்களும் ஸ்பானிய மக்களும் இந்த நூலைத் தேடியலைந்ததாகக் கூறுகிறார் பிராவர் (ப.42)

இடைத்தொடர்பாளர்களாகப் பயணிகள்

இடைத்தொடர்பாளர்களாக விளங்கும் நாடுவிட்டு நாடு செல்லும் பயணிகள் மீண்டும் தம் நாட்டிற்குத் திரும்புகையில் தாம் சென்ற நாட்டுக் கலைச்செல்வங்களையும் அங்கு காணக்கூடிய முக்கியமான பொருட்களையும் வியப்பூட்டக் கூடியனவற்றையும் தம்முடன் கொணர்வர்: இதனாலும் இடைத்தொடர்பு ஏற்படலாம். இவ்வாறுதான் கதே இங்கிலாந்துக்குள் வந்தார்; அவரை ஹென்றிகிராட் ராபின்ஸன் ஆங்கில வாசகர்களுக்கு அறிமுகப் படுத்தினார்.

யூஜீன் மெல்கியர் டி. வாக் (Eugene Melchior de Vogue) பிரெஞ்சு நாடின் அயல்நாட்டுத் தூதரகச் செயலராக இரஷ்யாவின் செயிண்ட் பீட்டர்ஸ்பர்கில் (St. Petersburg) ஆறு ஆண்டுகள் இருந்தவர். பிரெஞ்சில் இரஷிய இலக்கியத்தை ஒரு நிறுவனச்செயல் ஊக்கத்துடன் அறிமுகப்படுத்திப் பரப்பியவர். அதிலும் குறிப்பாக இரஷ்ய புதினங்களை அறிமுகப்படுத்தினார். இவர் பிரெஞ்சு புனைகதையாசிரியாரன பிலாபர்ட் புனைகதைகளின் போக்கைத் தவறான திசையில் இட்டுச்சென்று விட்டார் என்றும் அதைச்சரிப்படுத்த நல்ல தகுதி வாய்ந்த புனைகதைகளை அறிமுகப்படுத்த வேண்டியது தம் கடமை எனவும் கருதினார்.

இவையாவும் ஒரு வழிப்பாதையாக ஒரே திசையில் செலுத்தப்படும் செல்வாக்குகள்.

இலக்கியத்தில் இருவழி உறவுகள்

இலக்கியத்தில் இரு வழி உறவுகளையும் காண முடியும். மாங்க் "Monk" எனும் புனைகதையை எழுதிய லூயிஸ்

இலண்டனில் பிறந்தவர். ஆக்ஸ்ஃபோர்டிலும், வீமரிலும் (Oxford, Weimar) கல்லூரிப் படிப்பை முடித்தவர். அவர் காலத்து கதிக் காட்சிகள் கொண்ட நாடகங்களைப் பார்ப்பதில் ஆர்வம் மிக்கவர். வீமரில் கல்வி கற்கும் போதுதான் இவருக்கு கதேயைச் சந்திக்கும் வாய்ப்பு கிட்டியது. இவர் காலத்தில் வீரதீரச் செயல்களும் மிகைக் கற்பனையும் மிகுந்த திகில் கதைகள் அதிகம் பரவியிருந்தன; அத்தகு கதைகளில் லூயிசுக்கு ஆர்வம் அதிகம். பகுத்தறிவுக் கொள்கை, அனுபவ ரீதியாகவே அனைத்தையும் உணர்தல் என்பனவற்றிலிருந்து விலகி தொல்பழமையுடைய பொருட்களில் ஆர்வம், இயற்கை இகந்த நிகழ்ச்சிகளைப் படைத்துக் காட்டுதல்- அதுவும் இரசிகர்கள் ஏற்றுக் கொள்ளும்வண்ணம் அதிசயத்துடன் இணைந்த பயங்கரங்களைக் கொண்ட காட்சிகள் பெற்றிருத்தல் போன்ற பண்புகளை உடைய நாடகங்களும் புனைகதைகளும் லூயிஸ்ஸிடம் செல்வாக்குப் பெற்றிருந்தன.

(எ.டு)

1) ஹோரேஸ் வால்போல் எழுதிய புதினம் கீழை நாட்டு அரண்மனை (The Castle in Oriento). இதில் பழமைமிக்க அரண்மனை, தொன்மை மிக்க ஓவியங்கள், பழமை மிக்க வரலாற்றுக் கால மக்கள், இயற்கை இகந்த நிகழ்வுகள் போன்றவை இடம் பெற்றிருந்தன.

2) ராடிகிளிஃபெக்ஸ் என்பவர் எழுதிய 'உடால்ஃபோ அதிசயங்கள்' எனும் (The mysteries of Udolpho by Redecliffex) புனைகதை - இயற்கை இகந்த நிகழ்வுகளுக்கான விளக்கம் என்றே இந்தப்புனைகதை பற்றித் திறனாய்வாளர்கள் கூறுவர்.

3) இவரிடம் செல்வாக்கு பெற்றவை ஜெர்மனியைச் சேர்ந்தவை; இவற்றிலும் இயற்கை இகந்த நிகழ்ச்சிகள் அதிகம் இடம்பெறும்; ஆடல் சார்ந்த பாடல்களும் (Ballads) இடம்பெறும்; ஆனால் இயற்கை இகந்த நிகழ்வுகளுக்கான விளக்கம் இரா. இயற்கை உலகிற்கும், இவ்வுலகிற்கும் அப்பாற்பட்ட வெவ்வேறு வெளி உலகங்களுக்கம் இடையே சிக்கிக் கொண்டவனாக மனிதன்

படைக்கப்படுவான். அறிவுக்கு ஏற்புடைத்தாய் இல்லாத அந்த தொடர்ந்து தொல்லைகட்கு உட்படுத்தப்பட்டு, பின் மனிதன் அழிக்கப்படுவான்.

இத்தகைய ஆடல்சார்ந்த பாடல்களின் பலவகைகளையும், மொழி பெயர்ப்புகளையும் தொகுத்த லூயிஸ், அவற்றைத் "திகில் கதைகள்" என்றும் "அதிசயக்கதைகள்" (Tales of Terror, Tales of wonder) என்றும் தொகுப்புகளாக வெளியிட்டார்.

ஸ்பியர்ஸ் என்பவரின் "குள்ளபீட்டர்", மூசாவின் புகழ் பெற்றக்கதைகள் (Spier's Dwarf Peter, Musau's Popular Tales) போன்ற பல ஜெர்மானிய கதைகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பல தலைமைப் புனைவுக்கூறுகளைப் போன்ற பல கூறுகளைத் தன் படைப்புகளில் பயன் படுத்தினார் லூயிஸ்.

இதன் மூலமாக இவர் ஆங்கிலத்தில் கதிக் புனைகதை வகையில் திகில்கதை வகையை முழுமையாகப் பரப்பினார் எனலாம். இவ்வாறு ஜெர்மனியில் இருந்து பெற்ற கதிக் புனைகதை உத்தியும் வடிவமும் ஆங்கில இலக்கிய மரபில் அதிகம் பரவக் காரணமாக இருந்தார் லூயிஸ்; அதே போன்று ஜெர்மனியில் ஏற்கனவே இருந்த கதிக் தன்மைகளுடன், சூழலிருந்து குறிப்புப் பொருளைப் பெறவைக்கும் உத்தி, சிற்றின்பநாட்டம் போன்ற கூறுகளை (திருமதி ரட்க்ளிஃப் இடம் இருந்து பெற்றவை) இணைத்துக் கதையெழுதும் பாணியை அதிகமாக்கினார் லூயிஸ். அத்துடன் இவை பின்னர் இவரது தாக்கத்திற்கு ஆட்பட்ட பல படைப்பாளிகளால் பிரெஞ்சிற்கும் இரஷ்யாவிற்கும் பரவின.

இவர் மனித மனதின் இருண்டபகுதிகளுடன், வெளிச்சம் போட்டுக்காட்ட இயலா நாட்டங்களுடன், இயற்கை இகந்த செய்திகளை இணைத்துக்காட்டினார். இவர் திருமதி ரட்க்ளிஃப் போல இயற்கை இகந்த நிகழ்வுகளை விளக்கவும் இல்லை; ஹொரேச் வால்போலைப் போல அவற்றை விலக்கி நிறுத்தவும் இல்லை. இவரது Monk முதலில் 1799-இல் வெளியிடப்பட்டது;

அதன் மூலம் புனைவியல் கூறுகளைச்சற்றே உள்ளடக்கியுள்ள ஜெர்மானிய புனைகதைப் படைப்பாக்க முறைகளையும் ஆங்கில இலக்கியத்துறைக்குக் கொணர்ந்தவர் இவர். இதன் விளைவாக வேர்ட்ஸ் வொர்த் சற்றே பின் வாங்கும் அளவுக்கு ஆங்கில வாசகர்களின் இரசிகத்தன்மையில் மாறுதல் ஏற்பட்டது. அதே போல ஜெர்மனியிலும் லூயிஸின் Monk பாதிப்பை ஏற்படுத்தியது.

ஜெர்மனியில் நடப்பிலிருந்த கிளர்ச்சியூட்டும் இலக்கியப் பாணியையும் பகுத்தறிவுக்குப் பொருந்தா புனைவுப் போக்குகளையும் அதிகமாக்கியது எனலாம். ஏற்கனவே நிலவிய இவ்விருப்பப் போக்குகளுடன் திருமதி ரட்க்ளிஃப் - இன் புனைகதைகளில் சூழலிலிருந்து குறிப்புப்பொருளைப் பெற வைக்கும் உத்தியுடன், சிற்றின்ப நாட்டத்தையும் இணைத்து ஒரு கதிக் புனைகதை வகைக்கு அடிகோலினார். லூயிஸ் முன்னிறுத்திய இவ்வகை கதிக் புனைகதைகள் ஜெர்மனியில் அதிகமாகப் பரவின. இவரது Amrosia, The Monk போன்ற புனைகதைகள் ஹாஃப்னேம் எழுதிய The Davies Elixirs எனும் நூலில் மறுஉரு பெற்றன என்கிறார் பிராவர் (ப.44). ஹாஃப்மேன் லூயிசுக்குக் கடப்பாடுடையவர் என்பதை அவரது புனைகதையின் அகச்சான்றுகளிலிருந்தே அறியமுடியும். ஹாஃப்மேனின் முக்கிய கதாபாத்திரங்களில் ஒரு பெண் தன் வாழ்வின் எதிர்காலத் திருப்பதங்களைத் தீர்மானிக்கும் போது லூயிஸ்சின் திகிலூட்டுகின்ற நடுங்க வைக்கும் கதையைப் படித்தாகக் காட்டுகிறார். லூயிஸிடமிருந்து ஹாஃப்மேன் பெற்றவை பின் பிரெஞ்சு இலக்கியப் பரப்பிற்கும் இரஷ்யாவிற்கும் பரவிச் சென்றன. அம்மொழிகளில் 19ஆம் நூற்றாண்டில் மொழி பெயர்க்கப்பட்ட இவரது படைப்புகளே இதற்குக் காரணம். ஹாஃப்மேன், பால்சாக், டிக்கன்ஸ் ஆகியோர் மூலமாக கதிக் புனைகதைக் கூறுகள் தாஸ்த்தாவஸ்கியின் படைப்புகளில் இடம் பெற்றன.

கற்பனை நயம் மிக்க படைப்பாளர்கள் இடைத் தொடர்பாளர்களாக இருந்ததை இதுவரை பார்த்தோம். இவ்வாறு படைப்பாசிரியர்களாகத்தான் இடைத்தொடர்பாளர் இருக்க

வேண்டும் என்பதில்லை. மொழி பெயர்ப்பாளர்களும், இலக்கிய அறிஞர்களும்கூட இடைத்தொடர்பாளர்களாக இருக்க முடியும். ஐரோப்பிய நாடுகளுக்கும் தூரக்கிழக்கு நாடுகளுக்கும் இடையே இடைத்தொடர்பாளராக விளங்கியவர் ஆர்தர்வாலி (Aurther Walay). இவருக்கு அதிகம் கடன்பட்டவர்கள் பிரெக்ட், எஸ்ராபவுண்ட், ராபர்ட்லோத் போன்றவர்கள். (Brecht, Ezra Pound, Robert Lowth)

18ஆம் நூற்றாண்டில் இடைப்பகுதியில் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் ஆங்கிலத்துறையில் கவிதையியல் பேராசிரியராக (Profossor of Poetry) விளங்கியவர், இவர் ஜே.பி.மைகேலிஸ் போன்ற பேராசிரியர்களுடன் கொண்ட நட்பு ஜெர்மானிய இலக்கியக் கோட்பாடுகளும் இலக்கியப்படைப்பு முறைகளும் மரபுகளும் பெரிதும் பயன் பெறக்காரணமாயிற்று. விவிலிய பாடல்களைப் புரிந்துகொள்ள முயன்ற ராபர்ட்லோத் எந்தச் சூழலில் எந்தப் பண்பாட்டுப் பின்புலத்தில் அவை தோன்றியனவோ அந்த நாட்டிற்கே சென்று அவை தோன்றக் காரணமாக இருந்தவற்றின் மிச்சம் மீதிகளை நேரில் பார்த்துப் புரிந்துகொள்ள முயன்றார். இதே எண்ண ஓட்டம் உடைய மைக்கேலிஸ்ஸிற்கு லூத்தின் நூல்கள், படைப்புகள், கடிதங்கள் ஆகியவை நல்ல வழிகாட்டிகளாய் அமைந்தன.

இவ்வாறு விவிலிய மறை நூலின் பாடல்களை ஆராயப்புகுந்தவர்கள் பின்னர் ஹோமரின் காப்பியப் பாடல்களையும் இம்முறையிலேயே ஆராயத் தலைப்பட்டனர்.

ஹோமருக்கே உரிய தனித்திறமும் மேதகவும் வாய்ந்த தன்மைகள் பற்றிய கட்டுரை (Essay in the Original Genius of Hommer-Woods 1759) 1759 இல் லண்டனில் வெளியிடப் பட்டதும், மீண்டும் மைக்கேலிஸ் ஆங்கில இலக்கிய வாதிகளின் பார்வையில் தனித்திறம் வாய்ந்தவராகப் பேசப்பட்டார்.

தனித்திறமையைக் (Original Genious) காண்பது என்ற இந்த கருத்துப் போக்கை கதேயும் மைக்கேலிஸும் சிறந்த ஆய்வுப்

போக்காக மாற்றியவர்கள் எனலாம். இவ்வாறு ஜெர்மனிக்கும் இங்கிலாந்திற்கும் இடையே இலக்கியத் தொடர்புக்கான இடைத்தொடர்பாளராக விளங்கினார் மைக்கேலிஸ்.

இடைத்தொடர்பில் இடம்

உலக நாடுகளுக்கு இடையேயான இலக்கியத்தொடர்புக்கு, இலக்கியப் பரிமாற்றங்களுக்கு 'ஒரு முதன்மை வாய்ந்த இடம்' முக்கியக்கருவியாகத் திகழலாம். ஆயின் அந்த இடத்தில் ஒரு சரியான திறமை வாய்ந்த ஒருவர் தோன்றியிருக்க வேண்டும் 'இடம்' என்பது தேசம் முழுவதையும் கூடக் குறிப்பிடலாம் (எ.டு) சுவிட்சர்லாந்து; அல்லது ஒரு குறுகிய மாவட்டமாகவும் இருக்கலாம். (எ.டு) (Alsace) அல்சேசு; அல்லது ஒரு கூட்டுறவு அமைப்போ, நிறுவனமோ ஒரு 'இடமாகக்' குறிக்கப்படலாம்; அல்லது ஒரு அச்சகம் கூட சுட்டப்படலாம். 16,17 ஆம் நூற்றாண்டுகளில் சில ஆங்கிலப் பதிப்பகங்கள் இத்தாலிய படைப்புகளையும் இலக்கியங்களையும் பல பதிப்புகளாகக் கொண்டு வந்தன. அதனால் ஆங்கிலேயரிடையே இத்தாலிய இலக்கியப் படைப்புகள் இத்தாலியப் பொருட்களுக்கே தனி மரியாதையை ஏற்படுத்தும் அளவிற்குப் பரவின.

அதே போல தற்காலத்தில் தனியார் பதிப்பகங்கள், வானொலி, தொலைக்காட்சி போன்றனவும் தம் பங்கை ஆற்றியுள்ளன.

இலக்கிய இதழ்களின் பணி

பன்னாட்டு இலக்கிய இதழ்கள் பல தனிப்பட்ட ஈடுபாடுகளை வளர்ப்பதற்குத் துணை நின்றுள்ளன. இவை ஒரே சமயத்தில் பல மொழிகளில் வெளியிடப்பட்டதால் குறிப்பிட்ட தனி ஈடுபாடுகளை வளர்த்தன எனலாம்.

பெர்லினிலிருந்து வெளியான இதழான 'ஸ்டர்ம்' ஹெர்வார்த் வால்டெனை ஆசிரியராகக் கொண்டது (Herwarth Waldens's 'Sturm') இது இத்தாலிய ஃப்யூச்சரிலிசம், ஜெர்மானிய உணர்ச்சி வெளிப்பாட்டியம், பிரெஞ்சு நாட்டின் நடப்பியலின் ஆரம்பநிலை போன்ற பல இயக்கங்களின் ஒரு அங்கமாகவே கருதப்பட்டது.

அதேபோன்று முதல் உலகப் போருக்கு முன்பு ஹங்கேரிய இலக்கியத்தை மேலையிலக்கியமயமாக்கியது ஆஸ்வேட் என்பவரது 'நியூகட்' (Osvat's Nyugat) என்ற இதழ். யூரூன் ஜோலா என்பவரது 'மாறுதலின் இடைப்பட்ட காலம்' - என்ற பொருளுடைய 'ட்ரான்ஸிஷன்' (Transition) எனும் பத்திரிக்கையும் பண்பாட்டுத் தொடர்பிற்கு அதிகம் உதவியுள்ளது. ஜோலா நியூ ஜெர்சியில் பிறந்தவர். குழந்தைப் பருவத்திலேயே இவர் பிரெஞ்சு மொழி பேசப்படும் லோரைன் (Lorraine) என்ற இடத்தில் உள்ள உறவினர் இல்லத்திற்கு இட்டுச் செல்லப்பட்டார் பிறகு ஜெர்மானிக்கு சென்றார். அங்கு ஜெர்மானிய பள்ளிகளில் படித்து அமெரிக்காவிற்குச் சென்றார். அங்கு அயோவாவில் இருந்த தன் உறவினர்கள் வீட்டில் தங்கி இருந்தார். அமெரிக்காவில் ஒரு பத்திரிக்கை நிருபரானார். அதன் மூலம் அமெரிக்க எழுத்தாளர்கள் பலரது அறிமுகம் கிட்டியது. பிறகு 1922 முதல் 1925 வரையிலும், பிறகு 1926லும் இவர் பத்திரிக்கை நிருபராகப் பணிபுரிந்தார். பிரெஞ்சுநாட்டில் ஜோலா பத்திரிக்கை நிருபராகப் பணியாற்றிய காலகட்டத்தில், ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபதுகளில் அங்கு 'எதிலும் நற் கூறுகளையே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் இயக்கம்' (Possitivisticism) பரவியிருந்தது. அத்துடன் எதிர்காலத்தில் நம்பிக்கை வைத்து எதிர்காலம் எவ்வாறு இருக்கும், இருக்கவேண்டும் எனக் கணிக்கும் ஃபியூச்சரிலிசமும் இணைந்த சூழலில் தான் அவரது (Transission) வெளிவர ஆரம்பித்தது.

புதிய இயந்திரக் கண்டுபிடிப்புகளுக்குப் பேராதரவு கொடுத்த அதே வேளையில் அறிவியல் கண்டுபிடிப்புகளின் காரணமாக அனைத்தும் இயந்திரமாவதையும் கண்டித்தது. இச்சூழலில் 1927இல் ஜோலா பாரிஸில் தன் இதழை வெளியிட ஆரம்பித்தார்.

இப்பத்திரிக்கையைப் பற்றிக் கூறும் கௌலி இதன் பதிப்பாசிரியரான ஜோலா ரிம்பாட், ஜாய்ஸ் ஆகிய இரு ஆசிரியர்களுடைய கருத்துகளின் செல்வாக்கைப் பெற்றிருந்ததைப் போன்றே நடப்பியல் கோட்பாடுகளின் செல்வாக்கையும் பெற்றிருந்தார் என்கிறார்.

புலன்மயக்கங்களை அளிக்கும் மாயக் காட்சிப்புனைவை ரிம்பாட்டிடம் இருந்தும், மொழிநடையில் புதிய புதிய சொல்லமைப்புக்களை, கட்டமைப்புகளை ஜாய்ஸிடம் இருந்தும், கற்பனையான முன்னேற்றங்கள் தாமே நடந்து விடும் என்பது போன்ற எண்ணங்களையும் கனவுகளையும் வலியுறுத்தும் கூறுகளை நடப்பியலிருந்தும் பெற்றிருந்தார் இவர் என்கிறார் கௌலி.

ஜெர்மானிய மொழியிலிருந்தும் இரஷ்ய மொழியிலிருந்தும், மொழி பெயர்ப்புகளையும் விவாதக் கட்டுரைகளையும் பிரெஞ்சு மொழியில் வெளியிட்டார். அத்துடன் சோதனை முயற்சிகளான பிரெஞ்சு எழுத்துகளையும் வெளியிட்டார். இவற்றுடன் ஜாய்ஸின் - 'Work in Progress' ஐயும் தொடர்ந்து தன் இதழில் இடம்பெறச் செய்தார், இவ்வாறு இவர் பல்வேறு ஐரோப்பிய அமெரிக்க புதுமைப் போக்குகளின் சங்கமம் பிரெஞ்சு நாட்டில் அதிகம் அறிமுகமாக, பரவ வழிபுரிந்தார். பிரெஞ்சு படைப்பாளிகளில் சோதனை முயற்சிகளை மேற்கொள்பவர்களின் படைப்புகளும் இவ்விதழில் இடம் பெற்றமையால் அவர்களுக்கு ஓர் அங்கீகாரம் கிடைத்தது. தம் படைப்புகளுடன் இணைந்து வெளிவந்த வெளிநாட்டாசிரியர்களின் படைப்பாக்க முறைகளின் புதிய போக்குகள் பற்றிய அறிமுகமும் அவர்களிடம் இருந்து கிடைத்தது.

ஒரு இதழ் எவ்வாறு ஒரு நாட்டின் எழுத்துப் போக்கையே மாற்றுமளவிற்குப் பிறநாட்டு எழுத்தாளர்கள், படைப்புகள் பற்றிய அறிமுகம் தந்து அவர்களது செல்வாக்குப் பரவக் காரணமாக இருக்க முடியும் என இதன் மூலம் எடுத்துக் காட்டுகிறார் பிராவர். ப.(46)

இதே போன்று இன்னொரு வித சங்கமத்தையும் எடுத்துரைக்கிறார் பிராவர்; பிளாக் அர்ஃபியல், அப்பியா,

ஆப்பிரிக்கக்கலைகள், இன்றைய ஆப்பிரிக்கா போன்ற பல பத்திரிக்கைகளில் எழுதும் ஆசிரியர்கள் ஐரோப்பிய மொழிகளை (ஆங்கிலம், பிரெஞ்சு, போர்த்துகீசிய மொழி) பயன்படுத்தும் போது அவர்களது வட்டார வழக்குகள், பாதித்திருப்பதை எடுத்துக் கூறுகிறார். ஆப்பிரிக்க எழுத்தாளர்கள் பிற ஐரோப்பிய இலக்கியங்களின் படைப்பாக்க வழி முறைகளையும் அடிக்கருத்துகளையும் தம் மொழிகளின் படைப்பு உத்திகளுடனும் அடிக்கருத்துக்களுடனும் இணைத்துக் கொண்டு ஒரு கலவையாக ஒரு புதிய ஆப்பிரிக்க இலக்கியப் போக்கை உருவாக்கியுள்ளனர். ஒப்பிலக்கிய அறிஞர்களுக்கு இந்த இலக்கியப்பரப்பு மிகச் சிறந்த ஆய்வுக்களமாகத் திகழக் கூடும். கதை சொல்லும் மரபிலும், கவிதை வடிவிலும் பழைய மரபிலிருந்து புதிய மரபுகளுக்குச் செல்லும் இடைப்பட்ட வழியில் காணக்கூடிய இலக்கிய வகைகள் பற்றிய ஆய்விற்கு இங்கு அதிக இடம் கிடைக்கும். செங்கார், ஓனோலாகியெம், டாடே, ஸாயிங்கா, அச்செபே, ஓயொனோ போன்ற (Senghor, Onologuem, Dadie, Soyinka, Achobe Oyono) பல ஆப்பிரிக்கப் படைப்பாளிகளின் எழுத்துகளில் பல ஐரோப்பிய இலக்கிய வடிவங்களின் இணைநிலைகள் சேர்க்கைகள் எவ்வாறு நிகழ்ந்துள்ளன எனவும் காண இயலும்.

தகவல் தொடர்புச் சாதனங்களின் பணி

இலக்கியப் பரவலுக்குத் தகவல் தொடர்புச் சாதனங்களும் காரணமாகலாம். தகவல் தொடர்பின் தேவையை ஆரம்பத்தில் சமூகவியல் அறிஞர்களும், பண்பாட்டு வரலாற்றியல் அறிஞர்களும் அதிகம் உணர்ந்திருந்தனர். இன்று ஒப்பிலக்கிய வாதிகளும் அதன் பயனை உணரத்தலைப்பட்டுள்ளனர். இலக்கியப்பரவல், ஏற்பு செல்வாக்கு, தாக்கம் ஆகியவற்றுக்கான காரணியாக இதைக் காண ஆரம்பித்துள்ளனர்.

இலக்கியப் பரவலுக்கான ஒரு வகைமாதிரியை (Pattern) அமைத்துக் காட்ட முயலும்போது ராபர்ட் எஸ்கார்ப்பிட் சில எடுத்துக் காட்டுகளைத் தந்தார். ஐரோப்பிய அமெரிக்க தகவல் தொடர்பு

அமைப்புகள் எவ்வாறு இலக்கியப் படைப்புகளைப் பரப்புகின்றன என விளக்கும் போது படைப்பாசிரியர்கள், அப்படைப்பு பற்றி வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தும் விளம்பரதாரர்கள், வினியோகஸ்த்தர்கள் எனப்பலரும் ஒரு குழுவாக இணைந்து இலக்கியப் பரவலுக்குக் காரணமாவதைச் சுட்டிக் காட்டுகிறார். அமெரிக்க நிறுவனங்கள், சில படைப்பாசிரியர்களையும் கூட ஊதியத்திற்கு அமர்த்திக் கொண்டிருந்ததைச் சுட்டிக் காட்டுகிறார்.

இருபதாம் நூற்றாண்டில் இலக்கிய இடைத்தொடர்புகள் என்பது பற்றிப் பேசும்போது இடைத்தொடர்புகளை மிக அதிகமாகவும் மதிப்பிட்டு விடக்கூடாது. லிலியன்ஃபஸ்ட் எனும் (Lilian Furst) அம்மையார் ஜெர்மானிய பிரெஞ்சு இலக்கிய உறவுகள் பற்றிய ஆய்வில் இதைப்பற்றி அழுத்தமாக வலியுறுத்துகிறார்.

இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் புனைவியல் இயக்கம் பற்றி ஒரு ஒப்பிலக்கிய ஆய்வு செய்தவர் லிலியன்ஃபஸ்ட். ஜெர்மானிய ஆசிரியரான ஏ.டபிள்யூ. செலகலிடம் ஈடுபாடு கொண்டவர் டி.ஸ்தேல் அம்மையார். இவரது படைப்புகள் மூலம் ஜெர்மானிய எழுத்தாளரான செலகலின் கருத்துகள் பிரெஞ்சில் புகுந்தது என்பதை எவரும் மறுக்க இயலாது. காரணம் அந்த கால கட்டத்தில் தகவல்தொடர்புச் சாதனங்கள் அவ்வளவு அதிகமாக வளர்ச்சி பெற்றிருக்க வில்லை. மேலும் உலகப் போரினாலும் இடைத்தொடர்புகள் பாதிக்கப்பட்டிருந்தன. அதனால் அருகில் உள்ள பக்கத்து நாடுகளின் வளர்ச்சிகள் பற்றிக்கூட தாமதமாகவே கிடைத்தன. தற்செயலான நிருபர்கள் போன்றமைந்த பயணிகளே இடைத் தொடர்பாளர்களாக இருந்த நிலை. இவர்கள் மூலம் தான் புதிய கருத்துகள் இடம் பெயர்ந்து சென்றன; மிக மிக மெதுவாக, சிறு சிறு துளிகளாக பிற நாட்டிற்குள் சென்றன.

மிகச்சிறந்த கூர்ந்த மதியுடையவரும் பல நாடுகளுக்கு அடிக்கடிச் சென்று வருபவருமாக இருந்தாலும் கூட ஸ்தேல் அம்மையாரின் நூலில் (1810லேயே எழுதப்பட்டது) மிக மிகச் சிறு அளவில்தான் புனைவியல் கருத்துகள் காணப்பட்டன.

இக்கருத்துகளும் கூட செலகலிடம் இருந்து அவர் பெற்றவை. இதற்கு 50 ஆண்டுகட்குப் பிறகே பிரெஞ்சில் புனைவியல் இயக்கம் பரவியது.

இடைத்தொடர்பில் தனிக் கூறுகள், குழுக்கள்

இலக்கிய உறவுகள் பற்றிய ஆய்வில் இரண்டாவதாகக் கருத்தில் கொள்ள வேண்டிய, கவனம் சிதறினால் சறுக்கிவிடக் கூடிய கூறு ஒன்று உண்டு; அதுதான் தனியொரு மனிதனையோ தனியொரு கூறையோ மட்டும் இடைத்தொடர்புக்கானக் காரணமாகக் கொள்வது; தவறக் கூடிய இடம் இது; ஒரே ஒரு ஆக்கக்கூற்றினை இலக்கிய இடைத்தொடர்பாகக் கொண்டு விடுவது தவறாக முடிந்து விடக்கூடும். ஒரு நாட்டின் இலக்கியப் போக்கையோ, ஒரு படைப்பாசிரியரின் மனப்பான்மையையோ குறிப்பிட்ட திசையில்மாற்ற ஒரே ஒரு ஆக்கக்கூறு (Facter) மட்டுமே வலுவான செல்வாக்கை ஏற்படுத்தி விடும் எனக் கூறுவது இயலாது. பல வரலாற்று, சமுதாய, பொருளாதார ஆற்றல் மிக்க போக்குகள் இடைத்தொடர்புக்கு உதவிபுரிவதாக, துணையாக நிற்கலாம். சில சமயங்களில் இடைஞ்சலாக, தடையாக இருக்கக்கூடும். ஒரே ஒரு ஆக்கக் கூறு முதன்மையான இடைத் தொடர்புச் சாதனமாக இருப்பினும், அத்துடன் பிறபல கூறுகள் இணைந்து அத்தொடர்பை வலுவுடையதாக, பயனுடையதாக புதிய புதிய படைப்பாக்கங்களுக்கு வழிவகுப்பதாக மாற்றுகின்றன எனலாம்.

அதே போன்று ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்கி இலக்கியப் போக்கை இட்டுச் செல்லப் பலர் தனித்தனியாகவோ ஒன்றாக இணைந்தோ, செயலாற்றியிருக்கலாம். இவர்கள் அறிந்து, வேண்டுமென்றே முனைப்புடன் செயல்பட்டிருக்கலாம்; அன்றி அவர்களையறியாமல் தற்செயலானதாகவும் இருக்கலாம்.

இவ்வாறு பலர் இணைந்து செயல் பட்டதால் ஒரு குறிப்பிட்ட ஆசிரியரின் செல்வாக்கு வேறொரு நாட்டில் ஏற்பட்டதற்கு நல்ல எடுத்துக்காட்டாக சேக்ஷ்பியரைக் குறிப்பிடுகிறார் பிராவர்.

ஜெர்மனியில் 18ஆம் நூற்றாண்டில் சேக்ஷ்பியர் அந்த அளவு வெற்றிபெறப் பலர் தனித்தனியே ஆற்றிய செயல்கள் துணை புரிந்துள்ளன.

இலண்டன் மாநகரில் நடத்தப்பட்ட ஷேக்ஸ்பியர் நாடகங்கள் பற்றி லிச்டென் பெர்க் எழுதிய விமர்சனங்கள், வீலாண்டும் எஸ்சென்பர்கும் இணைந்து மொழிபெயர்த்த ஷேக்ஸ்பியர் நாடகங்களின் மொழிபெயர்ப்புக்கள், ஆஸ்ட்ரிய நாடக மேடைக்காக ஹியூஃபெல்ட் எழுதிய ஷேக்ஸ்பியர் நாடகங்களின் தழுவல்கள், ஹாம்பர்கில் ஸ்க்ரோடர் நாடக அமைப்பாளராகவும் நடிகராகவும் செயல்பட்டமை, காட்ச்செட்டை எதிர்த்து லெஸ்ஸிங் எழுதிய வாதங்கள், ஹெர்டர் அளித்த இலக்கியத் திறனாய்வுகள், இலக்கிய வரலாறு எழுதுவது பற்றிய பார்வைகள் போன்ற பலவும் இணைந்து ஷேக்ஸ்பியர் ஜெர்மனியில் வெற்றிபெறக் காரணமாயின என்கிறார் பிராவர்.

ஒரே ஒரு நூலும் கூட ஒரு இலக்கைக் தீர்மானிக்கும் தூண்டுகோலாகத் திகழ முடியும். எடுத்துக்காட்டாக ஆங்கில மொழியைப் படைப்பாக்கத்தின் ஊடகமாகக் கொண்டுள்ள பல எழுத்தாளர்கள் பிரெஞ்சு நாட்டில் ஆரம்பித்து வளர்ந்த குறியீட்டியல் பக்கம் திருப்பியதுடன், அவர்கள் தம் படைப்புகளிலும் பொருத்தமுற அதைப்பயன் படுத்தவும் தூண்டியது ஆர்தர் சைமன்ஸின் ‘இலக்கியத்தில் குறியீட்டியல் இயக்கம்’ (Arthur Symon’s The Symbols Movement in Literature) என்னும் நூல், இந்நூல் வெளியிடப்பட்ட பிறகு பிரெஞ்சுக் கவிதைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பற்றிக் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்த பல ஆங்கிலக் கவிஞர்கள் அவற்றால் தூண்டப்பட்டனர்.

இலக்கியப் படைப்புகள் மட்டுமின்றி வேறுபல கலைப் படைப்புகளும் கூட ஒரு நாட்டு இலக்கியம் பிற நாடுகளுக்கும் பரவவும், அவற்றில் ஆர்வத்தை உண்டாக்குவனவாகவும் இருந்திருக்கின்றன.

ஆப்பிரிக்கச் சிற்பங்கள் ஆப்பிரிக்க இலக்கியங்களின் பால் உலகின் கவனம் திரும்பக் காரணமாயின; நடப்பியல் சார்ந்த ஓவியங்கள், டாடாயிசத்தின் பரவலுக்குக் காரணமானதுடன் நடப்பியலுக்கு எதிராக எதிர்ப்பு இலக்கியங்கள் தோன்றவும் காரணமாயின.

பீத்தோவான் போன்ற பல இசை அமைப்பாளர்களாலும் உலகெங்கும் கதே, மோரிக், ஐசென்டார்ஃப், ஹெயின், போன்ற படைப்பாசிரியர்களின் படைப்புகள் பற்றிய அறிமுகம் ஏற்பட்டது. ஜெர்மானிய புனைவியலை பிரெஞ்சு ஆசிரியர்களுக்கு அதிகமாக அறிமுகப்படுத்திய இடைத்தொடர்பாளராக விளக்கியவர் ரிச்சர்ட் வாக்னெர். இதனால் பிரெஞ்சு இலக்கியங்களின் வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் பெரிதும் மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன.

இலக்கிய இடைத்தொடர்புகள் பற்றிய கல்வியில் சில நேரங்களில் இலக்கண விதிகளையும் இணைத்துக்கொள்ளுதல் அவசியமாகிறது. சில ஆசிரியர்களின் எழுத்துக்களில் அவர்கள் எதைப்பற்றி எழுதினாலும் குறிப்பிடத்தகுந்த தெளிவு காணப்படும்.

வெளிநாட்டிலிருந்து வந்த ஒரு இலக்கியத்தில் படைக்கப்பட்டுள்ள ஒரு சமுதாயமோ அல்லது சமுதாயத்தின் ஒரு கூறையோ விவரிக்கும் போதும் இத்தெளிவைக் காணமுடிகிறது. அது அந்த சமுதாயத்தை நன்கு விளக்கும், சரியாக எடுத்துக்கூறும் இலக்கண விதி போன்றமைந்திருக்கும்.

கிரஹாம் ஹோ எழுதிய 'தொன்னூறுகளில் ஜியார்ஜ் மூர்' எனும் கட்டுரையில் இத்தகைய விதியை எடுத்துக் காட்டியிருப்பதைச் சுட்டுகிறார் பிராவர் (ப.44)

1. பிற எழுத்தாளர்கள் அனைவரையும் விட மூர் பிரெஞ்சு இலக்கியத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர். சைமன்ஸ்ஐயும் விட அதிகமாக பிரெஞ்சு இலக்கிய பாதிப்பைப் பெற்றவர்; இவர்

காலத்தில் ஆங்கில இலக்கியத்தையே மாற்றி அமைத்துக் கொண்டிருந்த பிரெஞ்சு இலக்கியச் செல்வாக்கின் நுணுக்க மொழிகளையெல்லாம் நாம் மூரிடம் காணமுடியும். அவரது பிரெஞ்சு இலக்கிய அனுபவம் ஆங்கில இலக்கிய உலகில் புனைகதை வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தையே ஆரம்பித்துவைத்தது எனலாம். அவருடைய படைப்புக்களைக் காணும்போது முக்கியமான மூன்று ஆழ்ந்த ஈடுபாடுகளை உய்த்துணர முடியும். முதலாவதாக அனைவராலும் ஒத்துக்கொள்ளத் தக்க ஒரு கதையைக் கூறுவதிலிருந்து விலகி, உண்மையான ஒரு அனுபவத்தை எடுத்துக் கூறுவது (இந்தப் போக்கை இவர் ஆரம்பித்துவைக்கிறார்).

2. நூலகங்களையும், பொருள்களையும் சுற்றிச்சுற்றி வந்து கதை பண்ணுவதை விட சுதந்திரமான கற்பனை மூலம் கதை எழுதுவது.

3. வெளிப்பாட்டிலும், கதைக்கட்டமைப்பிலும் உள்ளதை உள்ளவாரே இயல்பானவாறே நியாயத்துடன் கூறுவதும் அழகை அப்படியே படைத்துக் காட்டுவதும் மூன்றாவது கூறு; இவர் உறுதியாக இவற்றைப் பின்பற்றினார். இதற்கு முன்பும் இவர் காலத்திலும் ஆங்கில இலக்கியப் படைப்பாளிகள் மிக முனைந்து துணிச்சலுடன் சரிக்கட்டி எழுதும் புனைவுகளே அதிகமாக இருந்தன. இந்த ஆங்கிலப் புனைகதை மரபை உடைப்பனவாகவும் அமைந்தன மூரின் படைப்புக்கள்.

துணிகர வீரதீரச் செயல்களைப்பற்றிய கதைகள், வகைதொகையற்ற நகைச்சுவைக் கதைகள், அன்புடனும் ஆதரவுடனும் எழுதப்பட்ட எண்ணற்ற கதைகள், சமூக மாற்றத்தைக் கொணரும் கதைகள் என்ற போக்கிலிருந்து முழுவதுமாக மாற்றி செறிவான கலைத் தன்மைமிக்க குறிக்கோளான படைப்புக்கள் அவற்றின் இடங்களைப் பிடித்தன. இதற்குக் காரணமாக மூரின் படைப்புக்களை மட்டும் கூறிவிட முடியாது; மூர் பெற்ற கருத்துக்களை அவரைத் தொடர்ந்து ஹார்பி, கொணார்டு,

ஹென்றிஜேம்ஸ் ஆகியோரும் பெற்றனர். அவர்கள் படைப்புகளும் அவருடைய படைப்புகளுடன் இணைந்து இந்த இலக்கிய மாற்றத்தை ஏற்படுத்தின என எடுத்துக் கூறுகிறார் கிரஹாம் ஹோ.

மூரைப்பற்றிய இந்த ஆய்வின் மூலம் ஆங்கிலப் படைப்பாளிகள் எவ்வாறு முரண்பட்ட போக்குகளை உடைய இலக்கியக் கூறுகளை, கோட்பாடுகளை ஒரு சேர இணைத்துக் கொண்டு படைக்கும் திறம் பெற்றிருந்தனர் என்பதை உணர முடிகிறது. எடுத்துக்காட்டாக ஜோலா (Zola) நடப்பியல் சார்ந்த எழுத்தாளர்களின் படைப்புகளையும் இயற்கையியலாரின் கோட்பாடுகளையும் இணைத்துக் கொண்டு எழுதினார். காட்டியர்; (Gautier) குறியீட்டியலாரின் படைப்புகளையும் அழகியல் கோட்பாடடையும் ஒன்றிணைத்து எழுதினார்.

இது போன்ற ஒப்பிலக்கிய ஆய்வுகள் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

ஆண்.டனி தால்பி (Antony Thalby) என்பவர் இது போன்று பன்னாட்டு இலக்கிய உறவுகளைப் பற்றிக் காண்பதும், பன்னாட்டு செல்வாக்குகளைக் காண்பதும், ஒரு ஆசிரியர் மற்றொரு நாட்டில் ஏற்கப்படுவதும், இவர் அங்கு புகழ்பெறுவதும் அவர் நாட்டில் பெறமுடியாத புகழை இங்கு பெறுவதும் பொதுவாக இரண்டாம் தரமான ஈடுபாடுகளையே காட்டுகிறது என்றும், இவை பெரும்பாலும் செயற்கையாகத் திரட்டப்படும் தகவல்களே என்றும், இது மிகக் குறைந்த அளவிலேயே ஒப்பீட்டாய்வு எனக்கருத முடியும் என்றும் கூறுகிறார். ஆனால் இவரே, தொடர்ந்து பேசும் போது பால்டென்ஸ்பர்க்கர், வெல்லக் போன்றவர்கள் இது போன்ற சிறந்த நூலை எழுத முடியும் என்கிறார். வெல்லக் பற்றிய இக்கருத்தை ஏற்றுக் கொள்கிறார் பிராவர். இவர்களைப் போன்றவர்கள் எந்த ஆசிரியர் தாக்கத்தை ஏற்படுத்தினாரோ, அவரைப் பற்றியும், தாக்கம் பெற்ற ஆசிரியர் பற்றியும் ஆழ்ந்த கூர்மதியுடன் காணும் திறமும் உள்ளுணர்வுடன் அவர்களுடைய மனதை அறியும் திறமும் கொண்டு ஆராயக்கூடும்; இலக்கியம்

எவ்வாறு வரலாறாயிற்று எனவும், சமுதாய வாழ்வின் மாற்றங்களில் இலக்கியத்தின் பங்கு என்ன என்பது பற்றியும், இலக்கிய மரபுகளையும் வழி வழி வந்த வடிவங்களையும் உடைத்து எவ்வாறு புதிய வடிவங்களை உண்டாக்கின? எவ்வாறு புதிய மரபுகளைத் தோற்றுவித்தன எனக் காண்பதும் முக்கியமே என்கிறார், பிராவர் (ப.50).

தன்னுடைய இக்கருத்தை அரண் செய்ய கிளாடியோ கில்லன் எழுதிய (Literature as System : "Essays towords the Theory of Literature") எனும் கட்டுரையிலிருந்து ஒரு பகுதியை எடுத்துக் காட்டுகிறார்.

வரலாற்றுப் பின்னணியில் இலக்கியப் படைப்புகளை அவற்றுக்கு உரிய இடத்தில் மாற்றி அமைக்கும் பொழுதுதான் இலக்கிய வரலாற்றை முழுமையாகக் காண முடியும் என்றும் இலக்கிய வரலாற்றினை எழுதும் போது காணப்படக்கூடிய இடைவெளியை நிரப்ப இலக்கியப் படைப்புகள் உதவுகின்றன எனவும், உயிரியலில் இரண்டு வகுப்புகளுக்கு இடையே இருக்கக்கூடிய இடைவெளியைப் பற்றிய கணிப்பிற்கு, ஒரு உயிர் வகுப்பைப் பற்றிய ஆய்வு அனுபவங்களைக் கொண்டு அந்த இடைவெளியைப் பற்றிய கண்ணோட்டத்தைக் கூறுவது போல இங்கு இலக்கிய வரலாற்றில் ஏற்படும் இடைவெளியைக் கவிதைக்ளின் இடத்தை மாற்றி அமைப்பதன் மூலம் நிரப்பலாம் என்றும் இதற்கு அடிப்படைகளை ஒப்பிலக்கியக் கல்வியின் ஒரு பிரிவான ஏற்பும் தாக்கமும் பற்றிய ஆய்வுகள் நல்குகின்றன எனவும் கூறுகிறார் கிளாடியோ கில்லன்.

ஏற்பு பற்றிய ஆய்வுகளில் கிடைக்கக்கூடிய தரவுகளின் எண்ணிக்கை அடிப்படையில் பார்க்காமல், ஏற்பையும் தாக்கத்தையும் ஏற்படுத்திய தரங்களைப்பற்றியே கவனம் செலுத்த வேண்டும் என எச்சரிக்கிறார் பிராவர்.

பண்பாட்டுப் பரிவர்த்தனைகளின் அடிப்படைகளாக விளங்கும் மொழிபெயர்ப்புகள், பயணக்கட்டுரைகள், மதிப்புரைகள், மாத, வார இதழ்கள் போன்ற கூறுகளில், அதிக கவனம் செலுத்த வேண்டும் என்ற மனப்பாங்கு ஏற்படும். இவ்வாறு காணும்போது வெவ்வேறு இலக்கியங்களுக்கு இடையே உள்ள தொடர்புகளை எண்ணிக்கை அடிப்படையில் கணக்கெடுத்துக்கொண்டு உண்மையான இடைத்தொடர்புத் தரங்கள் விடுபட்டுப் போகக் கூடிய அபாயம் ஏற்படலாம். ஆனால் ஒரு மொழியிலிருந்து பிறிதொரு மொழிக்கு அதிக அளவில் மொழிபெயர்ப்புகள் வந்துள்ளன என்பதாலும், படைப்பாசிரியர்களிடையே தனித்தொடர்புகள் உள்ளன என்பதாலும் மட்டுமே இரண்டுமொழி இலக்கியங்களில் கட்டாயம் மாற்றம் நிகழ்ந்திருக்கும் எனக் கூறிவிட இயலாது.

ஏற்பு, தாக்கம், இலக்கியவரலாறு, இடைத்தொடர்புகள் ஆகியவைபற்றி எழுதிய பலரும்-அஸ்ஸெலினியூ, எலியட், பீகாக் ஹோ, கண்டால்ஃப் ஆகிய பலரும்-இது குறித்து எச்சரித்துள்ளனர்.

இயல் – 5

இலக்கியச் செல்வாக்கும் இலக்கியத் தாக்கமும்

இலக்கியப்படைப்புகளுக்கு இடையேயான உறவுகள் பற்றிய ஆய்வில், முக்கிய இடத்தைப் பெறுவன செல்வாக்கும், தாக்கமும், மொழித் தடைகள், நாட்டு எல்லைகள், கலாச்சார, பண்பாட்டு வேற்றுமைகள் போன்ற எல்லைகளையெல்லாம் தாண்டி படைப்பாளிகளிடையே காணப்படும் பரஸ்பர உறவுகள் ஏற்படக் காரணம் என்ன? யார்? எதிலிருந்து? எந்த அளவு? எதைப் பெற்றுள்ளார்? யாருடைய மாதிரியில் இருந்து தனக்குத் தேவையான படைப்பு மாதிரியை எடுத்துக்கொண்டு, தன் தனித்தன்மையுடன், அதை மாற்றிப் படைத்துள்ளார்? என்று மூலமும் தாக்கமும் பற்றி ஆய்வு செய்வது ஒப்பிலக்கியத்தின் உயிர்ப்பகுதியாகும்.

பால் வான்தீகம், காரே, பால்டென்ஸ்பர்கர் போன்ற பிரெஞ்சு ஒப்பீட்டறிஞர்கள் இலக்கியத்தோற்றத்தில் பிறப்புறவையும், காரணங்களையும் காணும் போக்கை வலியுறுத்தி வளர்த்தனர். ஆனால் இவ்வாய்வுப் போக்கை ரெனெவெல்லக் போன்ற ஆசிரியர்கள் கண்டிக்கின்றனர். துண்டு துணுக்குகளாக இலக்கியத்தைப் (முழுமையாகப் பார்க்காமல்) பகுத்துக் காண்பதாலும், அந்த ஆசிரியரின் சொற்களை இவர் கையாள்கிறார், குறியீடுகளை எடுததுக்கொண்டுள்ளார், சொற்றொடர்களையும்

உவமைகளையும் அப்படியே எடுத்தாள்கிறார், எனப் பிரித்துப் பிரித்துக் காண்பதாலும் ஒரு அயல் நாட்டு வாணிபம் போல் உள்ளது எனக் கடிந்து கூறுவார் வெல்லக்.

செல்வாக்கு பற்றிய ஆய்வில் எந்தப் பனுவலில் இருந்து செல்வாக்கு ஆரம்பமாகிறது. எந்தப்பனுவில் முடிவடைகிறது? என்று காண்பதால் இங்கு இரண்டு நூல்கள் அடிப்படை ஆய்வுக் களங்களாகின்றன. இவ்விரண்டு நூல்களும் ஒரே நாட்டினதாகவும் இருக்கலாம்; அல்லது மொழிநாட்டு எல்லைக்களைக் கடந்த வெவ்வெறு நாட்டு நூல்களாகவும் இருக்கலாம். பாரதி தமிழில் தோற்றுவித்த வசன கவிதை மரபின் தாக்கம் தமிழ் இலக்கிய வளர்ச்சியை எவ்வாறு பாதித்துள்ளது எனக்காண்பது முதல்நிலை; ஜப்பானிய ஹைகூ கவிதைமரபு இன்றைய புதுக்கவிதைப் போக்குகளை மாற்றியுள்ளதைக் காண்பது இரண்டாம் நிலை. இவ்விரு போக்குகளையும் காணும் அணுகு முறையில் வேறுபாடு உண்டு. முதல் நிலையில் ஒரு புதிய வரவாகத் தமிழ் மொழிக்கு வந்த புதிய இலக்கிய வடிவை பாரத்திக்குப் பின் வந்தவர்கள் பயன்படுத்தப் பாரதி காரணமாக இருந்ததை ஆராய்வது; இரண்டாவதில் மொழி, நாட்டு எல்லைகளை, தடைகளைத்தாண்டி ஹைக்கூவின் வடிவம், பொருட்புலப்பாடு, சொற் சுருக்கம், திடீர் திருப்பம் போன்றவை எவ்வாறு தமிழ்ப் புதுக்கவிதைகளைப் பாதித்தது எனக்காண்பது; இதற்குக் காரணமாக அமைந்தவை எவை என 'தமிழ் ஹைக்கூ'வின் வரலாற்றையே காரணங்களுடன், சூழலுடன் இணைத்து ஆராய்வது.

அமெரிக்க ஒப்பிலக்கிய அறிஞர்களுள் இகாப் ஹெச் ஹாசன், அன்னா பாலகியான், ஹாஸ்கல் பிளாக், கிளாடியோ கில்லன், ஜோசஃப், டி.ஷா (IhabH. Hassan, Anna Balakian, Has Kall Block, Claudio Guillen and Joseph T. Shaw) போன்றவர்கள் செல்வாக்கு, தாக்கம், இவை இரண்டுக்கும் உள்ள உறவு, வேறுபாடுகள் என்ற பல நோக்கு நிலைகளில் இருந்து காரசாரமாக விவாதித்துள்ளனர்.

செல்வாக்கு பற்றிய ஆய்வானது வெறும் காரணகாரிய தொடர்பு (Cause & effect) பற்றி மட்டுமோ அன்றி அதற்குக் காரணமாக இடைத்தொடர்பாளர்கள் பற்றிக் காண்பது மட்டுமோ நோக்கமாகக் கொண்டமைந்து விடக்கூடாது என்கிறார் வெயிஸ்ட்டீன்.

செல்வாக்கு பற்றிய ஆய்வுகள் பொறுப்பற்ற முறையில் மேற்கொள்ளப்படுவதாகக் கருதிய சில ஒப்பிலக்கிய அறிஞர்கள் அவை சரியான மதிப்புடையனவா, பெறுமதியுடையனவா என்பது பற்றித் தம் ஐயத்தைத் தெரிவித்துள்ளனர். ஹென்றி பெயர் (Henry Peyre) செல்வாக்கு, தாக்கம் பற்றிக்குறை கூறவில்லை எனினும் இவற்றைவிட இணைநிலை ஆய்வுகள் முருகியல் நோக்கு உடையன; சிறந்தன; முக்கியமானவை என்கிறார்.

டேவிட் நலோன் (David Nalone) மேற்போக்காகப் படித்துக் காணக்கூடிய உண்மைகளின் அடிப்படையிலேயே தாக்கம் பற்றி எடுத்துரைக்கப்படுகின்றன. அதனால் நேர் காட்சிவாத அடிப்படையிலான (Positivistic) இவ்வகையாய்வில், தம் கூற்றுக்கு துணையாய் அமையக்கூடிய சில கூறுகளை மட்டும் எடுத்துக்கொண்டு, விலக்கானவற்றை விட்டு விடும் போக்குக்கு வழி உள்ளது என்கிறார்.

ஜே.டி.ஷா. செல்வாக்கு பற்றிய ஆய்வு மிகவும் சிக்கலானது. நேரடியான செல்வாக்கு, மறைமுகமான செல்வாக்கு (Direct influence, indirect influence) என இருநிலைகளில் கணிக்கவேண்டும் என்கிறார். ஒரு வெளிநாட்டுப் படைப்பாளி(அ)யின் நூலைப்படித்து அவ்வாசிரியரின் செல்வாக்கைப் பெற்ற ஒரு ஆசிரிய, வாசகர்(ஆ) தன்னாட்டு இலக்கிய மரபிற்குள் அந்த வெளிநாட்டு ஆசிரியரைக் (அ) கொணர்ந்து அறிமுகப்படுத்தலாம். இந்த உள்நாட்டு ஆசிரியரின்(ஆ) செல்வாக்கால் மேலும் பல உள்நாட்டுப் படைப்பாளிகள் (ஆ1, ஆ2, ஆ3) அந்த குறிப்பிடப்பட்ட வெளிநாட்டு ஆசிரியரின் (அ) மரபைப் பின்பற்றக் கூடும்; இம்மரபை மேலும் வளர்க்க புதிய படைப்பாளி ஒருவர் தோன்றக்கூடும்(இ).

இவர் நேரடியாக அந்த வெளிநாட்டு ஆசிரியரை அணுகி மேலும் அதிக செய்திகளையும் உணர்ச்சியின் குரல், குறிப்புப் பொருள், உருக்காட்சிகள் போன்ற வேறு சில கூறுகளை, அதுவரை தன் நாட்டு ஆசிரியர்களால் முழுவதுமாக எடுத்துக் கொண்டு வந்து தரப்படாத சில பாதிப்புகளை வெளிக்கொணர முயலலாம்.

இத்தகு செல்வாக்கில் வெளிநாட்டு ஆசிரியரான 'அ'விடமிருந்து உள்நாட்டு ஆசிரியர் 'ஆ' பெற்றது நேரடியான செல்வாக்கு : உள்நாட்டு ஆசிரியரான 'ஆ'விடம் 'இருந்து அவரது சக ஆசிரியர்களான அல்லது அவரைப் பின்பற்றிய பிற ஆசிரியர்களான ஆ1, ஆ2, ஆ3 ஆகியோர் பெற்றது மறைமுகமான செல்வாக்கு; இவர்கள் வெளிநாட்டு ஆசிரியரின் செல்வாக்கை நேரடியாகப் பெறாமல் தன் நாட்டு ஆசிரியர் வழியாகப் பெற்றுள்ளனர்.

மூன்றாவது நிலையில் மறைமுகச் செல்வாக்கு பெற்ற ஒருவர் (இ) மீண்டும் வெளிநாட்டு ஆசிரியரின் படைப்புகளைத் தானே நேரடியாக அணுகுவது. இதற்கு எடுத்துக் காட்டாக புஷ்கின் இரஷ்ய இலக்கிய மரபிற்குள் பைரனின் கவிதை மரபைக் கொணர்ந்ததை சுட்டிக்காட்டுகிறார் வெயிஸ்ட்டீன்.

பைரன் (அ) ஆங்கிலத்தில் கடைப்படித்த கதைப்பாடல் மரபைப் பின்பற்றி அதைப்போன்று இரஷ்ய மொழியில் படைத்தவர் புஷ்கின் (ஆ). புஷ்கினிடமிருந்து படைபாக்கக் கூறுகளை, உத்திகளைக் கடன் வாங்கினார், மிகெய்ல் லெர்மன்டோவ் (Michail Lermonotov) (இ) பின்னர் இவர் நேரடியாக பைரனின் நூல்களையே அணுகுகிறார். பைரனின் பாடல்களில் காணப்பட்ட ஆங்கிலக் கவிஞர்கள் பின்பற்றிய பாத்திரப் படைப்பாக்க முறையை நேரடியாகப் பின்பற்றத் துவங்கினார். இவ்வாறு மிகெய்ல் பைரனிடம் இருந்து பெற்ற செல்வாக்கு இரு பக்கங்களைக் கொண்டது என விளக்குகிறார் வெயிஸ்ட்டீன் (ப.29) இவ்வெடுத்துக் காட்டில் மற்றொரு உண்மையும் உணரத்தக்கது. செல்வாக்கின்

படிநிலைகளாக அமையக் கூடிய போன்மையாக்கம், கடன் பெறல், செல்வாக்கிற்குட்படல் போன்ற நிலைகளையும் இங்குக் காணமுடிகிறது.

ஏ.ஓ. ஆல்ரிட்ஜ் செல்வாக்கு பற்றிப்பேசும் போது 'ஒரு ஆசிரியர் பிறிதொரு ஆசிரியரின் முழுமையான தாக்கம் பெறாமல், அவரது படைப்பின் ஒரு பகுதியால் பாதிக்கப் படலாம், தனக்கு முன்னோடியான அவரது படைப்பு முழுவதையும் அறியாமல், அவரை ஒரு கலைஞராகவே அறியாமலேயே இவர் பயன் படுத்தலாம்' என்கிறார்.

காந்திஜி மூலம் இந்திய மக்களுக்கு அறிமுகமான தேரோ கலைஞராக, படைப்பாளியாக அறியப்பட்டதைவிட தத்துவ வாதியாக அறிமுகமானதை இங்கு மீண்டும் இணைத்துக்காண முடியும்.

சில கருத்துப் பள்ளிகளில் செல்வாக்கு பற்றிக் கூறும் போது, ஒரு ஆசிரியருக்கும் அவரது மாணாக்கருக்கும் உள்ளது போன்ற தொடர்போ, அன்றி ஒரு தலைவருக்கும் அவரைத் தொடரும் தொண்டர்களுக்கும் உள்ளது போன்ற உறவோ, வெளியிடுபவருக்கும் (செல்வாக்கை ஏற்படுத்துபவருக்கும் செல்வாக்கிற்கு ஆட்படுபவருக்கும்) ஏற்பவருக்கும் இடையே நிலவுவதாகக் கருதுகின்றனர். ஆயின் இது உண்மையில் செல்வாக்கல்ல; போன்மையாக்கமே.

போன்மையாக்கம், செல்வாக்கு இரண்டிற்கும் உள்ள தொடர்பை மிக அழகாக எடுத்துக் கூறுகிறார் வெயிஸ்ட்டீன், செல்வாக்கை அறிந்தே செல்வாக்கிற்கு உட்படுவது (Concious Influence) என்றும் தானறியாது செல்வாக்கிற்கு உட்படுவது (Unconcious Influence) என்றும் இரண்டாகப் பிரித்துக் காணலாம் என்று கூறும் வெயிஸ்ட்டீன் "தன் நினைவற்ற போன்மையாக்கமே செல்வாக்கு. தன்னை அறியாமலேயே இன்னொரு ஆசிரியரைப் பார்த்து அதைப்போலப் படைப்பது எனவும் இலக்கு நோக்கிய

செல்வாக்கே போன்மையாக்கம் (Influence is unconcious imitation and imitation is directed influence) எனவும் குறிப்பிடுகிறார். (ப.31) செல்வாக்கு போன்மையாக்கத்திற்கு எதிர் மாறானது. செல்வாக்கிற்கு ஆட்பட்ட படைப்பாளி தனக்கே உரிய சொந்தமான படைப்பு ஒன்றைப் படைப்பது பற்றியது செல்வாக்கு போன்மையாக்கத்தில் ஒரு ஆசிரியரைப்பார்த்து இன்னொரு படைப்பாளி அதே போன்ற பிறிதொரு படைப்பைப் படைப்பது, இங்கு இரண்டாவது ஆசிரியரின் தனித்தன்மையோ சுய சிந்தனையோ முக்கியமல்ல; மூலத்தைப் பின்பற்றிப் படைப்பது ஒன்றே குறி. ஆனால் இவ்வாறான போன்மையாக்கங்களை ஆராய்ந்து மூலங்கள், மூலங்களில் இருந்து சிறு சிறு கடன்கள், உருக்காட்சிகள், சிறுசிறு தனித்தனிப்பகுதிகளின் இணைநிலைகள் இவை பற்றிக் காண்பது மட்டுமே செல்வாக்கு பற்றிய ஆய்வு ஆகாது. இவையாவும் அதனுள் அடக்கமேயானாலும் கூட என்று வெயிஸ்ட்டீன் கூறுகிறார்.

செல்வாக்கு பற்றிய வரைவிலக்கணம் ஒன்றைத் தருகிறார் ஏ.ஓ.ஆல்ரிட்ஜ். "ஒரு படைப்பாளியின் (ஆ) குறிப்பிட்ட ஒரு படைப்பில் காணப்படும் ஒரு கூறு இந்தப் படைப்பாளி தனக்கு முந்தைய ஒரு ஆசிரியரைப் (அ) படிக்காமல் இருந்திருந்தால் இங்கு காணப்படுவதற்கு வாய்ப்பே இல்லை என்று எதைக் கருதுகிறோமோ அதுவே செல்வாக்கு என்று கூறுகிறார். மேலும் 'ஷா கூறியது போல ஒரேயொரு திடமான வழியில்தான் செல்வாக்கு வெளிப்படும் எனக் கூற முடியாது' எனவும் 'வெவ்வேறு விதமான வெளிப் பாடுகளின் அடிப்படையிலேயே செல்வாக்கு பற்றிக் கூறமுடியும்' எனவும் செல்வாக்கை அளவிட்டு எண்ணிட்டு கணக்கிட முடியாது எனவும் கூறுகிறார். (ப.32) வெயிஸ்ட்டீன்)

ஜே.டி.ஷாவும் ஆல்ரிட்ஜ்ஜைப் போன்றே விளக்கம் தருகிறார். ஒரு எழுத்தாளனின் வளர்ச்சிக்குக் காரணமான ஒரு கூறு, அவனது இலக்கிய மரபிற்கு வெளியில் இருந்து வந்த ஒன்றாக இருக்கக் கூடும்ட; அவனது கலைப்படைப்புக்குக் காரணமாக அது அமையக் கூடும்; ஆனால் அவனது சொந்த மொழியின் இலக்கிய மரபும்

வளர்ச்சியும் அக்கலைப் படைப்பிற்கான காரணமாக விளங்கும் அக்கூற்றை விளக்க இயலாததாக இருக்கும்; இப்படிப்பட்டச் சூழலில் அவனது இலக்கியப் படைப்புக்கான காரணமாக எடுத்துக் காட்டப்படும் அக்கூறு வெளிநாட்டு எழுத்தாளரிடமிருந்து அவன் பெற்ற செல்வாக்கு எனக்கூறலாம். செல்வாக்கிற்கு உட்பட்ட அந்த ஆசிரியரின் படைப்பில் அச்செல்வாக்கு இல்லையேல் அதில் காணப்படும் பல்வேறு உயிரோட்டம் மிக்க பண்புகள், சிறப்புகள் இருந்திருக்காது என்று கூறத்தக்க அளவில் இடம் பெறும் கூறுகளே உண்மையான செல்வாக்கு எனச் சுட்டப்படும். அஃதன்றி மேலோட்டமாக இரு நூல்களுக்கு இடையே காணக்கூடிய ஒப்புமைப் பகுதிகள், மேற்கோள்கள், வர்ணனைகள், குறியீடுகள் போன்றவற்றைக் காண்பது செல்வாக்கு பற்றிய ஆய்வாகாது. இஃது வெறும் ஏற்பு என்ற அளவிலேயே முடிந்துவிடும்.

ஒரு ஆசிரியரிடமிருந்து பிறிதொரு ஆசிரியர் பெறும் செல்வாக்கு, ஒரு நூல் பிரிதொரு நூலின் மேல் செலுத்தும் செல்வாக்கு, ஒரு இயக்கமோ கருத்தமைவோ ஒரு நாட்டிலிருந்து கிளம்பி பிறிதொரு நாட்டு இலக்கியப்படைப்புக்களின் மேல் செலுத்தும் ஒட்டுமொத்தமான செல்வாக்கு, ஒரு தனி மனிதனின் கொள்கைகள், கருத்தமைவுகள் பிற நாட்டு இலக்கியங்களை பாதிக்கும் அளவு ஏற்படுத்தும் செல்வாக்கு எனப் பல நோக்கு நிலைகளில் இருந்து செல்வாக்கு பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

செல்வாக்கின் ஆரம்பம் எங்கிருந்து கிளம்புகிறது (யாரிடமிருந்து - நதி மூலம் போல) எத்திசை நோக்கிப் பாய்கிறது, எவ்விடத்தில் முடிவடைகிறது எனக்காண்பது உண்டு.

இவ்வாறு காணும்போது வெளிநாட்டு ஆசிரியரின் எந்த நூலில் இருந்து எவையெவற்றை உள்நாட்டு ஆசிரியர் கடன் வாங்கியுள்ளார்? அவ்வாறு சில கூறுகளை மட்டும் தேர்ந்தெடுத்துப் பெற்றமைக்குக் காரணம் என்ன? அவற்றை அவர் எவ்வாறெல்லாம் மாற்றியுள்ளார்? அவற்றை எவ்வாறு தன் மயமாக்கிக் கொண்டு

தம்படைப்பில் பயன்படுத்துகிறார்? எந்த இடத்தில் தாக்கம் முடிவடைந்து ஆசிரியரின் தனித்திறன் (individuality) சுயம் (Originality) ஆரம்பமாகிறது? எனக்காண்பது அவசியமாகிறது.

ஒரு ஆசிரியரின் படைப்பின் மீது வேறொரு ஆசிரியர் செலுத்துகின்ற செல்வாக்கை மெய்ப்பிக்க அந்தப்பனுவலே முக்கியமான ஆய்வு மூலமாக இருக்கின்றது. இதனுடன் வெளியிலிருந்தும் சான்றாதாரங்களைத் தேட வேண்டும் என்கிறார் ஜே.டி.ஷா. செல்வாக்கிற்குட்பட்ட ஆசிரியரின் பிற நூல்களிலும் அவர் பயன்படுத்தும் மேற்கோற்கள், குறிப்புகள் அவர் பயன்படுத்திய தனி நூலகம், அவரது சொந்தக் குறிப்பேடுகள், நாட்குறிப்புகள், கையெழுத்துப்பிரதிகள் ஆகியவற்றைக் காண்பதுடன் அவரது சமகாலத் திறனாய்வாளர்கள், நண்பர்கள் அவரைப்பற்றி எழுதியவை, கடிதங்கள், போன்றவற்றையும் காண வேண்டும் என்கிறார்.

19 ஆம் நூற்றாண்டின் இறுதி வரை இலக்கியச் செல்வாக்கு என்பது வெளிப்படையாகத் தெரியக் கூடிய ஒத்த தன்மைகள் இரண்டு ஆசிரியர்களிடம் எவ்வாறு அமைந்துள்ளன எனக் காண்பதாகவே இருந்தது, அடிக்கருத்துகள், இலக்கிய வடிவங்கள், வகைகள் போன்றன மற்றொரு இலக்கியத்திற்கு எளிதில் எடுத்துச் செல்லப்படும் (Mignation of Themes & Genres) என்ற கருதுகோளின் அடிப்படையிலேயே இந்தச் செல்வாக்கு பற்றிய ஆய்வுகள் வழி வழியே பின்பற்றப்பட்டன.

'செல்வாக்கு என்பது ஒரு தற்சார்பற்ற கருது கோள்; தொட்டுணரத்தக்க நிலையான பொருண்மை பற்றிய ஆய்வாகும். இவ்வாய்வு முடிவில் செல்வாக்கின் மெல்லிய இழைகளேனும் கண்கூடாக எடுத்துக்காட்டப்பட்டு, மறுக்க இயலாதவாறு சுட்டப்பட வேண்டும்' எனக்கிறார் கிளாடியோ கில்லன் (Claudio Guillen)

(An influence is an objective cenception, a tangible affair, of which some material traces ought to remain after the work is finished, "The aesthetics of Literary Influence" Literature as system Princeton 1971. P.32)

இரு இலக்கியங்களுக்கு இடையே ஒற்றுமைகளைக் காண்பதற்கும், வாசகங்களில், பனுவல்களில் உள்ள ஒத்த தன்மைகளை உடைய இணைநிலைகளைக் காண்பதற்கும் செல்வாக்கு பற்றிய ஆய்வுகளுக்கும் வேறுபாடு அறியாமல் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும் செல்வாக்கு பற்றிய ஆய்வே இலக்கியப் பிறப்புறவுகள் பற்றிய, உளவியல் சார்ந்த ஆய்வுகளுக்கெல்லாம் அடிப்படையானது என்கிறார் கில்லன்.

இவ்விரு ஒப்பிலக்கிய ஆய்வுகளுக்கும் இடையே உள்ள வேற்றுமைகளை எடுத்துக்காட்டும் கில்லன் செல்வாக்கினால் ஏற்பட்ட ஒத்த தன்மைகளை இரு ஆசிரியர்களது படைப்பில் எடுத்துக்காட்ட முடியும், ஆனால் ஒவ்வொரு இணைநிலையும் நிச்சயம் செல்வாக்கினால் தான் ஏற்பட்டுள்ளது, எனக் கூறுவது முடியாது. ஏனெனில் செல்வாக்கு என்பது ஏதேனும் ஒரு வகையில் உறவுடைய இரு இலக்கியங்களுக்கு இடையே காணப்படும் ஒற்றுமை பற்றியது. இதில் செல்வாக்கு ஆரம்பமாகும் இடம் → அதன் போக்குக்கு → வழித்தடத்துக்குக் காரணமான இடைத்தொடர்பாளர்கள் → செல்வாக்கு முடிவடையும் இடம் → முடிவடையும் இடத்தில் ஒரு படைப்பாளியின் சுயத்துடன் வெளிப்படும் படைப்பு → எனப் புதிய ஒரு இலக்கியப்படைப்பு தோன்றுவதற்கு உந்து சக்தியாக, மன எழுச்சிக்குக் காரணமாகப் பிறிதொரு நூலோ, ஆசிரியரோ வேறு காரணிகளோ இருப்பது எடுத்துக் காட்டப்படுகிறது.

ஆனால் இணைநிலை ஆய்வு என்பது எவ்விதத்திலும் தொடர்பு அற்ற. மொழியாலும் நாட்டு எல்லைகளாலும் கலாச்சாரத்தாலும் பிரிக்கப்பட்ட இரு எழுத்தாளர்களின் பனுவல்களில் ஒத்த தன்மைகள், கருத்து, இலக்கிய வெளிப்பாட்டுத் திறன்கள், இலக்கிய உத்திகள் போன்றவற்றில் ஏதேனும் ஒன்று ஒரே மாதிரியாக இருப்பதை எடுத்துக் காட்டுவது.

செல்வாக்கில் ஒரு இலக்கிய மரபு வழியில் வரும் ஒரு படைப்பாளியின் உள்ளம் சம்பந்தப்பட்ட அனுபவங்களும் காரணம்

ஆகின்றன. ஆனால் பனுவல்களுக்கிடையேயான இணை நிலைகளில் இலக்கிய வகைகளின் படிநிலை வரிசை மட்டுமே சம்பந்தம் உடையது.

எனவே கில்லனைப் பொறுத்தவரை 'ஒரு செல்வாக்கின் பெருமதி அழகியல் ரீதியான ஒன்றல்ல; உளவியல் ரீதியானது' (the value of an influence is not aesthetic but Psychological (மு.நூ.ப.39) எனவேதான் செல்வாக்கு பற்றிய ஆய்வு இலக்கிய மரபுகள், உத்திகள் பற்றிய ஆய்வினின்றும் வேறுபட்டது என்கிறார் கில்லன்.

செல்வாக்கு பற்றிய தன்னுடைய கருத்து இதுதான் என எடுத்துக் கூறும் கில்லன், 'ஒரு இலக்கியப் படைப்பின் பிறப்பில் குறிப்பிடத்தகுந்த அளவு, அடையாளம் காணக் கூடிய அளவு தன் பங்கினை ஆற்றக் கூடிய ஒன்று தான் செல்வாக்கு' என்கிறார்.

படைப்பாக்கத்தின் பொழுது, படைப்பு வழிமுறைகளில் செயல்படக் கூடிய உளவியல் காரணியே செல்வாக்கு. ஏற்கனவே இருக்கும் இலக்கியப் படைப்புகளே இந்த செல்வாக்கின் தோற்றுவாய்கள் என்று கூறும் கில்லன் படைப்பாளியின் வாழ்க்கையும் அவரது படைப்புகளும் இருவேறு தளங்களைக் கொண்டவை என்றும், வாழ்க்கை அனுபவங்களில் (கல்வி அனுபவங்கள்) இருந்தே ஒரு படைப்பாளி செல்வாக்கைப் பெறுகிறார். குறிப்பிட்ட இயல்புகளைக் கொண்ட தனிப்பட்ட அனுபவங்களே செல்வாக்கிற்கு அடிப்படை எனவும் கூறுகிறார். இவ்வனுபவங்கள் அப்படியே அவரது படைப்பில் வெளிப்படும் என்பதில்லை.

இவை படைப்பாளியின் வாழ்வில் வலிந்து புகுந்து, சிற்சில மாற்றங்களுடன் படைப்பாக வெளிப்படுகின்றன.

உளவியல் ரீதியான இம்மாற்றங்கள் படைப்பாக்க வழி முறையில் சற்றேனும் மாற்றத்தைக் கொணர்கின்றன எனவும்

இம்மாற்றங்கள் எவ்வளவு குறைந்த அளவினதாக இருப்பினும் கவிதையின் (படைப்பின்) தோற்றத்தில் குறிப்பிடத்தகுந்த மறுக்க இயலாத விளைவை ஏற்படுத்தும் எனவும் கூறுகிறார் கில்லன். (உல்ரிச் வெயிஸ்ட்டீன் ப.43) இவரைப் பொறுத்தவரை செல்வாக்கு என்பது படைப்பாக்க வழிமுறையில், ஏற்படுவதே தவிர, அது செல்வாக்கின் விளைவாக மாற்றம் பெறும் படைப்புத்திறன் மூலம் தோன்றும் இலக்கியத்துடன் தொடர்பு அற்றது. ஆனால் இந்தக் கருத்தை வெயிஸ்ட்டீன் மறுக்கிறார். செல்வாக்கை இலக்கியப் படைப்பாக்க வழிமுறையில் குறிக்கிட்டு மாற்றும் ஒரு செயலாக கில்லன் கருதுகிறார்; ஆனால் எந்தத் திறனாய்வாளனும் படைப்பாக்கத்தின் போது படைப்பாளியின் உள்ளம் எவ்வாறு செயல்படுகிறது என்பதை அறுதியிட்டுக் கூற இயலாது என்கிறார் வெயிஸ்ட்டீன்.

மேலும் கில்லனே ஒரு கலைப்படைப்பு தன்னைப் படைத்த ஆசிரியரை விட்டு விலகி, சுதந்திரம் பெற்று, ஒரு தனித்த உயிரியைப் போலத் தனக்கென முருகியல் உயிர்புத்தன்மை (asthetic vitality of its own) பெறுகிற தருணம் எது என யாரும் நிச்சயமாகக் கூறமுடியாது என்பதை ஏற்றுக் கொள்கிறார். இங்கு இவர் செல்வாக்கு என்று சுட்டுவது உண்மையில் பிறர் கவிதை உருவாவதற்குக் காரணமாகச் சுட்டும் மன எழுச்சியே (Inspiration) எனக் கூறும் வெயிஸ்ட்டீன், கவிதை 'பிறப்பிற்குரிய தூண்டுவிசை" யையே (genetic incitation) கில்லன் செல்வாக்கு எனச் சுட்டுகிறார் என்று விளக்குகிறார்.

இந்த மன எழுச்சி உளவியல் ரீதியானது; படைப்பாளியைப் பாதிப்பது என்றாலும் இதனுடைய இருப்பைப் படைப்புகளில் காண்பது அரிது; படைப்பின் மூலக்கூறுகளுள் ஒன்று எனவும், மேலுலகிலிருந்து கவிஞன் பெறும் வரப்பிரசாதம் அது எனவும் கருதப்படுகிறது; தன்முன் உள்ள பல அடிக்கருத்துகள், உத்திகள் போன்றவற்றுள் படைப்புக்கான மூலத்தை எதிலிருந்து பெறுவது எனும் மன எழுச்சி படைப்பாளியின் மனதில் ஒரு மின்னலைப் போலச் சட்டென ஒளிர்கிறது எனவும் இத்தகு மன எழுச்சி

பொதுவாக இலக்கியத்திற்கு வெளியிலிருந்தும் பெறப்படலாம் எனவும் எடுத்துக்காட்டாகப் பிற துறைகளான ஓவியம், இசை, வரலாறு, உலக வாழ்க்கை போன்ற எதிலிருந்தும் பெறப்படலாம் எனவும், ஆனால் இந்த மன எழுச்சியை அறிவியல் பூர்வமாக விளக்கமுடியாது ஆதலால் கில்லன் கூறிய செல்வாக்கு ஆய்வுக்கான வழிமுறை நடைமுறைக்கு ஏற்றதல்ல எனவும் விளக்குகிறார் வெயிஸ்ட்டீன் (ப.45)

மன எழுச்சி பற்றி எஸ்.எஸ்.பிராவர்

செல்வாக்கு என்பது போன்மையாக்கத்தைச் சுட்டுவதை விட பெரும்பாலும் உள்ளுணர்வுத் தூண்டுதலையே (Impulsion) குறிக்கும் என்கிறார் பிராவர். (ப.64) லெட்விக் டெய்க் எனும் ஜெர்மானிய நாடக ஆசிரியர் தன் நாடகங்களுக்குத் தூண்டுதலாக இருந்த இத்தாலிய கட்டுக்கதைகளைப் பற்றிக் கூறியதை எடுத்துக் காட்டுகிறார் 'பிராவர்' 'நான் கார்லோ கோசி (Carlo cozzi) யின் கதைகளைப் படித்த போது ஏற்பட்ட மன மகிழ்வும், ஊக்கமுமே அவற்றை ஜெர்மனிய நாடக மேடைக்கு ஏற்ற நாடகமாக இயற்றத் தூண்டியது'- என்கிறார் லெட்விக்.

ஆந்த்ரே கைடு (Andre' Gide) தன்னுடைய சமகால படைப்பாளிகளின் படைப்புகளினால் தூண்டப்பட்டது பற்றித் தன் நாட்குறிப்பில் எழுதியிருப்பதையும் எடுத்துக் காட்டுகிறார் பிராவர்.

பிளேக், தாஸ்த்தா வெஸ்க்கி ஆகியோரின் படைப்புகளைத் தான் மொழி பெயர்த்ததற்குக் காரணம் தன்னுடைய கருத்துக்களைப் போன்ற ஒத்த கருத்துகள் அவர்களுடைய படைப்புகளிலும் இருந்தமையும் தன்னுடைய கருத்துகளை அவர்களது படைப்புகளில் அடையாளம் கண்டதும் தான் என்கிறார் ஆந்த்ரே கைடு.

தன்னுடைய 'வழித்துணை' என்ற கவிதையைப் புனைவதற்கு வால்ட் விட்மனின் 'என்னைப் பற்றிய பாடல்' (Song of Myself) என்ற கவிதையில் போகிற போக்கில் கைக்கோல் பற்றி வருகிற ஒரு குறிப்பே மன எழுச்சியைத் தந்தது என்று குறிப்பிடுகிறார் ந. பிச்சமூர்த்தி.

பால் வான்தீகம் போன்ற பிரெஞ்சு ஒப்பிலக்கிய அறிஞர்கள் செல்வாக்கு, தாக்கம் (விளைவு) ஆகியவற்றை வேறுபடுத்திக் காண்பது தேவையற்றது எனக் கருதுகின்றனர். 'வேற்று மொழியாசிரியரின் மேலோ அன்றி வேறு ஒரு நாட்டின் மீதோ ஒரு ஆசிரியர் செலுத்தும் செல்வாக்கு பற்றிய ஆய்வானது அவரைப்பற்றிய நலம் பாராட்டும் திறனாய்வு, அவரது நல்லூழ் போன்றன' பற்றிய ஆய்வுகளுடன் நெருங்கிய தொடர்புடையது; இரண்டையும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரித்துக் காண்பது இயலாது என்று கூறுகிறார் வான் தீகம் (ப. 35 உல்ரிச் வெயிஸ்ட்டீன்).

கயார்டு (Guyard) படைப்பாளியின் நல்லூழ் (The fortunes of the Authors) எனும் தலைப்பில் ஆராயப்பட வேண்டிய பல கூறுகளில் ஒன்றே செல்வாக்கு என்று கூறுகிறார். ஆனால் அவரே பரவல், போன்மையாக்கம், நல்லூழ், செல்வாக்கு ஆகியவற்றுக்கிடையேயான வேறுபாடுகளை (diffusion, imitation, fortune & influence) ஒப்பிலக்கியவாதி அறிந்திருக்க வேண்டும் எனக் கூறுகிறார்.

கயார்டின் நூலுக்கு முன்னுரை எழுதிய கரே (Carre) செல்வாக்கு பற்றிய ஆய்வைக் கையாள்வதில் அதிக கவனம் தேவை எனவும் அது சமயத்தில் ஏமாற்றிவிடக் கூடும் என்றும் கூறுகிறார். அதனால் அவர் நேரடியான ஏற்பு பற்றிய ஆய்வுகளுக்கே முதன்மையளிக்கிறார்.

அன்னா பாலகியான் ஏற்பு, செல்வாக்கு இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை அறிந்து அதற்கு ஏற்ப, ஆய்வுகள் நிகழ்த்தப் படவேண்டும் என்கிறார். ஏற்பு பற்றிய ஆய்வு மூலம் ஏற்கப்படும் ஆசிரியரின் கலைப் பண்புகள் அதிக வெளிச்சத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டும். ஆனால், செல்வாக்கு பற்றிய ஆய்வுகள் பொதுவாக சமுதாய உளவியல் ரீதியான இனமரபு சார்ந்த கூறுகளின் அடிப்படையிலும் தரவுகளின் எண்ணிக்கை அடிப்படையிலுமே மேற்கொள்ளப்படுகின்றன. புகழையும் மதிப்பையும் உணர வைப்பதாக இருக்க வேண்டும் என்று கூறுகிறார் அன்னா பாலகியான்.

1. செல்வாக்கு பற்றிய ஆய்வு படைப்பாக்கத்தின் மூலத்தைக் கண்டுபிடிப்பதிலேயே முக்கியமாகக் கவனம் செலுத்துகிறது. ஏற்பில் அளவுகளை எடுத்துக் காட்டுவதில் உள்ள ஆர்வம் இங்கு பண்புகளை அடிப்படையாகக் கொண்டு மாறுகிறது. இங்கும் போன்மையாக்கம், சுயமான படைப்பு பற்றிய செய்திகளும் ஆராயப் படுகின்றன. இவ்வாய்வுகள் இரண்டுவித முக்கிய செயல்பாடுகளைக் கொண்டிலங்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார் இந்த அம்மையார்.

2. செல்வாக்கிற்கு ஆட்பட்டப் படைப்பாளி வெளியிலிருந்து பெற்ற உத்தி, வடிவம், நடை போன்றவற்றுடன் இவரது ஒருசில தனித்தன்மைகளும் அவருக்கே உரிய குறிப்பிடத்தக்க சுயமான சில பண்புகளும் அடையாளம காணப்பட்டுச் சுட்டப்பட வேண்டும்; அப்போது தான் அந்த ஆய்வு நியாயம் உடையதாகக் கருதப்படும்.

3. அந்த படைப்பாளி எந்த இடத்தில் செல்வாக்கிலிருந்து விடுபட்டுத் தன் சுயத்தை வெளிப்படுத்தியிருக்கிறார் என்று சுட்டுவதும் மிக முக்கியமானது (YCGL II 1962, ப.29.)

இலக்கிய இடைத் தொடர்புகள் மூலம் மேலோட்டமான செல்வாக்கு ஏற்படும் எனும் வெயிஸ்ட்டீன் மேற்கோள், மறைகுறிப்புகள், குறிப்புச்சுட்டுகள் (quotation, allusion, reference) போன்றவை இதிலடங்கும், ஆனால் இவற்றை ஏற்பு என்ற நிலையிலேயே சுட்டமுடியும் என்கிறார்.

இவ்வாறான கருத்துக் கடன் பெறுவதிலோ செல்வாக்கிற்கு ஆட்படுவதிலோ குறை காண்பதற்கு ஏதுமில்லை; கொடுப்பதிலும் கொள்வதிலும் பெருமையோ சிறுமையோ ஏதுமில்லை; சொல்லுக்குச் சொல் அப்படியே போன்மையாக்கம் செய்வதைப் படைப்பாளிகள் பெரிதும் விரும்புவதில்லை; இங்கு பெரும்பாலும் நிகழ்வது இரு இலக்கியங்கள் ஒன்றை ஒன்று எதிர் கொள்வதால் ஏற்படும் திடீர் மாற்றங்களே. எனவே செல்வாக்கினை உண்டாக்கும் ஆசிரியரை உயர்வாக மதிப்பிடுவதோ செல்வாக்கிற்கு ஆட்படும் ஆசிரியரைக் குறைவாக மதிப்பிடுவதோ தவறு.

தத்துவக் கோட்பாடுகளின் தாக்கத்தின்பொழுது செல்வாக்கை ஏற்படுத்துபவரை விட ஏற்கும் படைப்பாளியே செயல்திறம் மிக்கவர் என்று லெஜெக் கொலகோவ்ஸ் (Leszek Kolakowski) என்பவர் கூறுகிறார். ஏனெனில் இங்கு செல்வாக்கு மூலத்தின் ஆற்றலால் மட்டும் ஏற்படுவது அல்ல; செல்வாக்கிற்கு ஆட்படுபவர் தானே வலிந்து சென்று தன் சமகாலச் சிக்கல் ஒன்றுக்குத் தீர்வுகாண தனக்கு முந்தைய தத்துவத்தைத் தேடிச் சென்று தன்னுடைய கேள்விகளுக்கு விடையைக் கண்டு பிடிக்கத் தூண்டப்பட்டு அதில் ஏதேனும் கிடைக்குமா என முயன்று பார்த்துப் பெறுகிறார். (எஸ்.எஸ்.பிராவர் ப.64)

ஏற்புக் கோட்பாட்டு அடிப்படையிலான ஆய்வுகளில் அழகியல் சார்ந்த நோக்கிற்கு இடமே இல்லை அல்லது மிகக் குறைந்த இடமே உள்ளது எனலாம், கால அடிப்படையில் ஒருவித தன்னகப்படுத்தலுக்கான- தன்மயமாக்கலுக்கான படிநிலையே ஏற்பு; இந்த தன்னகப்படுத்தலே செல்வாக்கு.

ஓவன் ஆர்ரிட்ஜ் செல்வாக்கு பற்றிச் சிந்திக்கும் போது இணைநிலைகள், ஒற்றுமைக் கூறுகள், மரபு ஆகியனவும் இணைந்தே காணவேண்டிய களங்கள் என்கிறார். இணைநிலை பற்றிய வரைவிலக்கணம் தரும் போது இவர் “எவ்விதத் தொடர்பும் அற்ற மொழி, நாட்டு எல்லைகளைக் கடந்த இரு இலக்கியப் படைப்புகளில், நடைப்பாங்கு, வடிவம், உணர்ச்சி, கருத்து ஆகியன, ஒன்றில் இருப்பதைப் போன்றே மற்றொன்றில் காணப்படுவதை இணைநிலை அல்லது ஒற்றுமைக்கூறு (analogy or affinity) என்று கூறலாம்’’ என்று விளக்கம் தருகிறார் (எஸ். எஸ். பிராவர். ப. 52)

எவ்வித இடைத்தொடர்பும் அற்ற சீன, ஐரோப்பிய இலக்கியங்களுக்கு இடையே கவிதை மரபு, நாடக மரபு ஆகியவற்றில் இணைநிலைகள் இருப்பதை எடுத்துக் காட்டுகிறார். ஜே.ஜே.ஒய்.லியூ.

எலிசபெத் கால ஆங்கில நாடகங்களுக்கும் தொலைதூர கீழைநாட்டு நாடகங்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லாத போதும் அங்கும் இணைநிலைகள் இருப்பதையும் இவர் எடுத்துக் காட்டியுள்ளார்.

எச்.ஆர்.ஜாஸ் ஒரு ஜெர்மானிய ஒப்பிலக்கிய அறிஞர். இவர் ஹ்யூகோவின் 'கிராம்வெல்லுக்கு முன்னுரை' (Preface to Cromwell) எனும் நூலில் (மனிதன், விலங்கு, கொடி ஆகியவற்றின் விசித்திர இணைப்புகள் போன்ற) பொருந்தாக் கற்பனை பற்றிய கருத்தமைவு எவ்வாறு கையாளப்படுகிறது எனக்காண்கிறார். இவ்வாறு காணும் போதும் ஹ்யூகோவிற்கு முன் இருந்த பொருந்தாக் கற்பனையிலிருந்து ஹ்யூகோ எவ்வாறு வேறுபடுகிறார் என எடுத்துக்காட்டுகிறார். பொருந்தாக் கற்பனை போன்று ஒத்த கருத்துக் உடைய வெவ்வேறு சொற்களையும் அவை சுட்டம் கருத்தமைவுகளையும் ஒப்பிடுகிறார்; அவற்றின் சிறு சிறு வேறுபாடு களையும் சுட்டுகிறார்.

இவ்வாறு இரு இலக்கியங்களுக்கு இடையே உள்ள ஒற்றுமைக் கூறுகளைக் காண்பது போலவே வேற்றுமைகளையும் எடுத்துக் காட்டுவதும் ஓர் ஒப்பிலக்கிய அணுகு முறைதான். இவ்வாறான வேறுபாடுகளுக்கு அப்படைப்புகள் எழுந்த இலக்கிய மரபில் உள்ள வேறுபாடுகள் தான் காரணம் என்கிறார் எஸ்.எஸ் பிராவர். ஆனால் இவர் ஆல்ரிட்ஜ் எவ்விதத் தொடர்புகளும் அற்ற இலக்கியங்களுக்கு இடையில் தான் இணைநிலைகளைக் காண வேண்டும் எனக் கூறுவதை மறுக்கிறார். இணைநிலைகள் உள்ள இரு படைப்பாளிகளிடையே இருக்கக்கூடிய உறவுகளை ஒரு எடுத்துக்காட்டு மூலம் விளக்குகிறார். இணைநிலைகளுக்கு ஒரே விதமான சமுதாய அனுபவம், வரலாற்று அனுபவம், ஒத்த, உணர்வுகள் காரணமாகும். ஹ்யூகோவும் ஹெயினும் (Hein) 19 ஆம் நூற்றாண்டின் உண்மைகளைக் கூறப் பழைய செவ்வியற்பாங்கான அழகியல் கூறுகள் போதாது என உணர்ந்தமை தான் இருவரிடமும் ஒரே விதமான விளைவை ஏற்படுத்தியுள்ளது என்கிறார் பிராவர். ஒரே விதமான சமுதாயச்சூழல் எதிர்ப்பு, வரலாற்றுச் சூழல் எதிர்ப்பு,

தம்நாட்டுச் சமூக வரலாறுகளை அளவுகோலாகக் கொண்டு அளந்து பார்ப்பதை எதிர்ப்பது, என இருவரிடமும் ஒரே மாதிரியான சிந்தனைகள் இருந்ததால் இருவரிடமும் இணைநிலைகள் காணப்படுகின்றன. (எஸ்.எஸ். பிராவர் ப.54)

இவ்வாறு இரு படைப்புகள் எழுந்த சமுதாயச்சூழல்/சமூக அமைப்பு ஒன்றாக இருக்கும்போது அங்கு இணைநிலைகள் உண்டாகின்றன என்ற கருத்தை ஜிர்முன்ஸ்க்கியும் ஆதரிக்கிறார்.

இவர் இரண்டு வழிகளில் இணைநிலைகளைக் காணலாம் என்று கூறுகிறார்.

1. எவ்வகையான உறவோ நேரடியான செல்வாக்கோ இல்லாத இரு இலக்கியங்களுக்கு இடையே இணைநிலை காண்பது.

2. இலக்கியங்களுக்கும் நாட்டார் கதைப் பாடல்களுக்கும் இடையே உள்ள இணைநிலைகளைக் காண்பது.

பொதுவான இலக்கியப் பரிணாமத்தின் போக்குகளை ஒப்பிடும்போது இவ்வொப்பீட்டாய்வு, இலக்கியவகை வளர்ச்சிப்பற்றிய பொதுவான விதிகளுக்கு இட்டுச்செல்லக் கூடும். இதன் மூலம் அவ்விலக்கியங்கள் எழுவதற்குக் காரணமான சமுதாய நிலைகளைச் சுட்டவும் முடியும், அதே சமயத்தில் அவ்விலக்கியம் எழுந்த அவ்வந் நாடுகளுக்கே உரிய தனித்தன்மை கொண்ட தேசிய, வரலாற்றுக் கூறுகளையும் புரிந்து கொள்ள உதவும் என்கிறார் ஜிர்முன்ஸ்க்கி.

கிளாடியோ கில்லனைப் பொறுத்தவரைச் செல்வாக்கு உளவியல் ரீதியானது. செல்வாக்கின் பெருமதியானது உளவியல் ரீதியாக அது செயல்படுவதில்தான் உள்ளதே தவிர அது அழகியல் சார்ந்தல்ல எனக்கூறும் இவர் கருத்துப்படி 'தற்கால அழகியல் வீச்சுகள் காணக்கூடிய செயல்பாடு, ஒழுக்கம், விவாதிக்கும் முறை போன்றவை வெவ்வேறு தனித்தனி இருப்புகள். இக்கொள்கையின்

படி ஒரு இலக்கியப்படைப்பானது அதனளவில் முழுமையான புதிய பொருள்; அதற்கெனத் தனி உலகைக்கொள்வது; எனவே அது அதற்கு முந்திய எந்த கலைப்படைப்புடனும் எவ்விதத் தொடர்பும் அற்றது; அது படைப்பாக உருவான பிறகு அது வேறு; அதன் படைப்பாளி வேறு; அதே போன்று அதன் சமூகச் சூழலினின்றும் விடுபட்டது' இக்கொள்கைப்படி செல்வாக்கு பற்றிய ஆய்வானது சற்றும் பயனுடையதல்ல; ஏனெனில் செல்வாக்கு ஆசிரியரின் உளவியல் சார்ந்தது. அவருடைய ஆளுமையைச் சார்ந்தது; அவருடைய படைப்பைப் பற்றியது அல்ல. (படைப்பு அவருடைய ஆளுமையிலிருந்து விடுபட்டுத் தனித்து நிற்பது) படைப்பில் தேடிக் காணக்கூடிய சில ஒப்புமைகள் வடிவம், மரபு போன்ற ஒப்புமைகள் படைப்பாக்கச் செயலின் பொழுது பயன்படும் கருவிகளே; தவிர செல்வாக்கை நிச்சயமாக இவ்வாறுதான் செயலாற்றியது என எந்த திறனாய்வாளனும் எடுத்துக்கூற முடியாது; படைப்பாளியே ஏதேனும் நாட்குறிப்போ அல்லது தன்படைப்பு முறை பற்றிய விளக்கங்களோ தந்தால் தவிர இதை எடுத்துக்காட்ட முடியாது. மேலும் செல்வாக்கு ஒரே ஒரு ஆசிரியர் நூலில் இருந்து ஏற்பட்டது எனக்கூறவும் முடியாது. அப்படைப்பாளி ஒரே ஆசிரியரின் பல நூல்கள், கருத்துகளைப் பெற்று அவற்றின் ஒன்றிணைப்பான செல்வாக்கை உளவியல் ரீதியாகப் பெற்று, அதைத் தன் படைப்பாக்கத்தில் பயன்படுத்தும் போதும் கூட அவற்றை ஒரு தூண்டுதலாகக் கொண்டு தன் தனித்திறமைகளுடன், சுய ஆற்றலுடன் படைக்கும் போதுதான் ஒரு உண்மையான படைப்பாக்கம் நிகழ்கிறது. இதனை அறிவியல் பூர்வமாக நிறுவுவது கடினம், எனவேதான் கில்லன் செல்வாக்கு பற்றிய ஆய்வு பயனற்றது எனக் கூறுகிறார்.

ஆனால் புதிய திறனாய்வாளர்கள் ஒரு படைப்பு அது அளவில் தனிப்பட்ட ஒன்று, என்று கூறினாலும் அதைப் பற்றி விவாதிக்கும் போது அதற்கு முந்தைய படைப்புகளில் எதிலிருந்து கருத்துக்கள் பெறப்பட்டன என்பனவற்றையும் கருத்தில் கொண்டே பேசுகின்றனர். எடுத்துக்காட்டாக டி.எஸ். எலியட்டின் பாழ்நிலம் (Waste land) பற்றியத் திறனாய்வில் கிளியந்த்ப்ரூக் (Cleanth Brook's

Modern Poetry and the Tradition) எலியட் தாந்தே பற்றி எழுதிய கட்டுரைகளையும் பிரெஞ்சு குறியீட்டியல் பற்றிய டி.எஸ். எலியட்டின் கருத்துகளையும் எடுத்துக்காட்டி இவற்றின் அடிப்படையில் 'பாழ் நிலத்தின்' பல பத்திகளை விளக்குகிறார். தம் திறனாய்வுக் கருத்துக்களைப் பின்னர் மாற்றிக் கொண்ட புரூக் 1965இல்) வெளியிடப்பட்ட புதிய பதிப்பின் முன்னுரையில் அதைக் குறிப்பிடுகிறார். (Modern Poetry and The Tradition, 1965).

டி.எஸ்.எலியட்டே பின்னாட்களில் எழுதிய ஒரு கட்டுரையில் படைப்பாசிரியரின் வாழ்க்கைச் சரிதம்பற்றிய அறிவு, அவரது கவிதையைப் புரிந்து கொள்வதில் பெரிதும் துணை செய்யும் என்கிறார். சில நேரங்களில் அது மிகவும் துணை புரியும்; சில கவிஞர்களைப் புரிந்து கொள்ள அது தேவையற்றது என்கிறார்; டி.எஸ்.எலியட். ("The forntiers of Criticism" in On Poetry & Poets; Faber; & Faber London 1957 P.III)

தமிழில் பாரதியின் 'அக்கினிக் குஞ்சு' பற்றிப் புரிந்து கொள்ள அவரது காலச்சூழலும் அவரது கவிதைகளில் 'தாய்' பெறும் இடத்தைப் புரிந்து கொள்ள அவரது வாழ்க்கை வரலாறும் பெரிதும் உதவுகின்றன எனலாம். சங்க இலக்கியத்தில் நக்கண்ணையாரின் பாடல்களைப் புரிந்து கொள்ள அவரது வாழ்க்கை நிகழ்வுகள் பற்றிய செய்திகள் துணைபுரிகின்றன.

சாதாரண வாசகன் ஒரு கவிதையின் சொற்களைப் புரிந்து கொள்ள சொல்லகராதியையோ கலைக்களஞ்சியததையோ பயன்படுத்துவது போன்றே திறனாய்வாளன் ஒரு படைப்பைப் புரிந்து கொள்ள ஆசிரியரின் வாழ்க்கைச் சரிதத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் முற்றுமாய்ப் புரிந்து கொள்ள அணுக்கத் தொடர்புடன் கவிதையை நெருங்கிப் படிப்பதே முக்கியம்.

ஹெரால்டு ப்ளூம் என்பவர் 'தனிப் பனுவல்கள் என்பது ஏதுமில்லை. பனுபவல்களுக்கு இடையிலான உறவுகள் மட்டுமே உண்டு'என்று கூறுவதே செல்வாக்கு என்பதன் பொருள் என

விளக்குகிறார். இவர் கருத்துப்படி செல்வாக்கை மூலம் பற்றிய ஆய்வு, கருத்துக்களின் வரலாறு பற்றிய ஆய்வு, உருக்காட்சிகளின் வகை மாதிரிகள் பற்றியக் கல்வி-என்றெல்லாம் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. பிராய்டு கூறியதைப் போன்று ஒரு குடும்பத்தில் நிலவும் காதல் உறவைப்போன்று கவிஞர்களிடையே நிலவக்கூடிய உறவைப் பற்றியது இது. எனவே ஒரு கவிதை இன்னொரு கவிதையினால் ஏற்பட்ட துலங்கலே - ஒரு கவிஞன் இன்னொரு கவிஞனால் உருவாக்கப்படுவது ஒரு மனிதன் அவனது பெற்றோரால் உருவாக்கப்படுவது போல - என்கிறார் ப்ளூம்.

ஆனால் இவை போன்ற புறத்தகவல்கள் யாவும்-டி.எஸ்.எலியட் கூறியது போல-கவிதை தோன்றிய காலகட்டம், கவிஞனின் சமுதாயச்சூழல், அந்த காலகட்டத்து கருத்தோட்டங்கள் அக் கவிதையில் இடம் பெற்றிருத்தல், அக் காலகட்டத்து மொழிநடை, இவையாவும் நம்மைக் கவிதையை நோக்கி இட்டுச் செல்வனவே, கவிதையைப் புரிந்து கொள்ள, நயம் பாராட்ட நாம் அதற்குள் மூழ்கிச் சென்று வழியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.(டி.எஸ்.எலியட் மு.நூ.ப.117)

கிளாடியோ கில்லன் கருத்துப்படி செல்வாக்கு என்பது ஒரு கலைப்படைப்பு மற்றொரு கலைப்படைப்பின் மீது ஏற்படுத்திய குறிப்பிடத்தக்க எதிர் விளைவு-தொட்டு உணரத்தக்க விளைவு. இதனை இலக்கியத் தோற்றங்கள் பற்றிய ஆய்வு மிக குறைந்த இடத்தையே பெறும் இணைநிலைகளுடன் குழுப்பிக் கொள்ளக் கூடாது என்றும் தற்செயலான ஒற்றுமைகளும் ஒன்றைப் போல் மற்றொன்று அமைவனவும் செல்வாக்கு பற்றிய ஆய்வின் மூலங்கள் ஆகா எனவும் குறிப்பிடுகிறார் கில்லன். ஆனால் செல்வாக்குபற்றிய ஆய்வில் மரபு, இலக்கிய உத்திகள் ஆகியவற்றை ஒதுக்கிவிட முடியாது. ஏனெனில் ஒரு படைப்பாசிரியர் மரபில் வருவனவற்றுள் சிலவற்றைத் தன் படைப்பாக்க உத்திகளுக்காக ஏன் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்? சிலவற்றை ஏன் ஒதுக்கி விடுகிறார்? என்ற வினாக்கள் இவ்வாய்வில் முக்கியம் வாய்ந்தவை. எடுத்துக்காட்டாகத் தமிழில் சங்க இலக்கியங்களில் பெரும்பாலும் ஆசிரியப்பா யாப்பு

பயன்படுத்தப்பட்டிருக்க அடுத்துவந்த நீதி இலக்கியங்கள் வெண்பா யாப்பைப் பயன் படுத்தக் காரணம் என்ன? எனக் காண்பது செல்வாக்கு பற்றிய ஆய்வில் மரபின் இடம் பற்றிக் காண்பது.

நீதி இலக்கியங்கள் தமிழில் உருவாகக் காரணமாக இருந்தவர்கள் பெரும்பாலும் சமண, பௌத்தத் துறவிகளே. இவர்களுக்குத் தம் கருத்துகளைச் சுருக்கமாக, மனதில் பதியும் வண்ணம், மக்கள் நினைவில் இருத்திக் கொள்ளத் தக்க அளவு கூறுவதற்கு ஏற்ற யாப்பு வடிவமாக வெண்பா யாப்பு அமைந்தது ஒரு காரணம். அத்துடன் இவர்கள் வடமொழி, பிராகிருதம் ஆகியவற்றின் இலக்கிய மரபுகளின் தாக்கம் பெற்றவர்கள், வடமொழியில் காப்பியங்கள் கூட சுலோகங்களாக இலக்கண நூற்பாக்கள் போல அமைந்தவை; அந்த அமைப்பு முறையைப் போன்று தமிழில் உள்ள யாப்பு வெண்பா ஆதலால் அதைப் பயன்படுத்தினர் எனலாம்.

ஆரம்பகால புதினங்களை எழுதியவர்கள் தம் படைப்புகளின் முன்னுரையில் தாம் படித்த ஆங்கிலப் புதினங்களைப் போன்று தமிழ் வாசகர்களுக்கு அளிக்க விரும்புவதால் அப்புதின வடிவத்தைத் தேர்ந்தெடுத்ததாகக் கூறுகின்றனர். (சிட்டி சிவபாத சுந்தரம், தமிழ் நாவல் நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும் ப.1.6) எனவே தமிழ்க் காப்பிய மரபிலிருந்து வேறுபட்டு, ஆங்கிலப் புனைகதை செல்வாக்கிற்கு உட்பட்டமையால் ஏற்பட்ட பின் விளைவே இன்றைய புனைகதைகள் எனலாம். இதையே “குறிப்பிடத்தக்க தாக்குதலின் விளைவு” (Significant repercussion) என்கிறார் கில்லன்.

எனவே இலக்கியச் செல்வாக்கு கருத்துகள், வடிவங்கள், உத்திகள், குறியீடுகள், உள்ளக் குறிப்புகள், தொனி, உருக்காட்சிகள், நடைப்பாங்கு முறை போன்ற பல கூறுகளை அடிப்படையாகக் கொண்டு அமையலாம். ஆனால் தற்செயலான இணைநிலைகளைச் செல்வாக்கு எனப் பிறழ எண்ணிவிடக்கூடாது. செல்வாக்கைத் தனித்தும் எடுத்துக்காட்ட முடியும். அதாவது ஒரு குறிப்பிட்ட ஆசிரியர் வேறு ஒரு வெளிநாட்டுப் படைப்பாளியின் மீது

செலுத்திய செல்வாக்கை, குறிப்பாக ஒரு தனி நூலின் செல்வாக்கை, ஒரு கருத்தின் செல்வாக்கை, ஒரு இயக்கக் கோட்பாட்டின் செல்வாக்கை எடுத்துக்காட்ட முடியும். இவையாவுமே தனித்து எடுத்துக்காட்டக் கூடிய செல்வாக்குகள். இவை ஒவ்வொன்றும் (ஒரு ஆசிரியர், ஒரு நூல், ஒரு இயக்கக் கோட்பாடு) குறிப்பிட்ட ஒரு ஆசிரியரை மட்டுமின்றி, தொடர்ந்து ஒரு தலைமுறை எழுத்தாளர்களையே செல்வாக்கிற்கு ஆட்படுத்தலாம்; இதை எடுத்தக் காட்டுவது வரலாற்று ரீதியானது.

செல்வாக்கை வரலாற்று ரீதியாகக் காணும் ஃபிரொடரிக் கண்டால்ஃப் (Frederic Gundolf) செல்வாக்கைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லை influence என்ற சொல்லின் வேர்ச்சொல் அடிப்படையில் புரிந்து கொள்ள வேண்டும் என்கிறார். Ein fluss என்ற அவ்வேர்ச்சொல்லின் பொருள் 'வெளியிலிருந்து உள்ளே பாய்ந்து வரும் ஆற்றல் மிக்க போக்கு ஒன்று, ஏற்கனவே பாய்ந்து கொண்டிருக்கும் நதியின் போக்கை இயல்பை முழுமையாக மாற்றுவது' என்பதாகும். "ஒளி விலக்கல்: ஒப்பிலக்கிக் கட்டுரைகள்" (Refraction : Essays in Comparative Literature : Oxford University Press New York 1968) எனும் நூலில் ஹாரி லெவின் ஒப்பிலக்கிய நோக்கில் சேக்ஷ்பியர் எனும் கட்டுரையைக் கொண்டு செல்கிறார். இவருக்கு இக்கட்டுரையை எழுதத் துணையாக இருந்தது கண்டால்ஃப் எழுதிய சேக்ஷ்பியர் பற்றிய நூலே. அதில் கண்டால்ஃப் சேக்ஷ்பியர் எவ்வாறு ஜெர்மானிய இலக்கியத்தின் போக்கையே மாற்றுகிற அளவு செல்வாக்கை ஏற்படுத்தினார் என எடுத்து விளக்குகிறார்;

தமிழில் கவிதை மரபின் போக்கையே மாற்றுமளவுக்கு பாரதி ஷெல்லி, கீட்ஸ், வால்ட் விட்மன் போன்ற ஆங்கிலக் கவிஞர்களிடம் இருந்து பெற்ற செல்வாக்கின் ஆற்றல் மிக்க போக்கு காரணமாக இருந்ததை இங்குக் குறிப்பிடலாம். பாரதிக்குப்பின் ஒரு தலைமுறையினரே இந்த செல்வாக்கிற்கு ஆட்பட்டனர்.

இலக்கியச் செல்வாக்கு பற்றிய கருத்துக்களைப் பின் வருமாறு தொகுத்துரைக்கலாம்.

1. ஒப்பிலக்கிய அறிஞர்களுக்கு 'செல்வாக்கு' என்ற கருத்தமைவு விரும்பிச் சுவைக்கும் விருந்து போன்றது. இதைப் பிறப்புறவு நோக்கில் இருந்தும் ஆராயலாம். இலக்கிய மரபு என்ற நோக்கில் இருந்தும் ஆராயலாம். செல்வாக்கு பற்றிய பகுப்பாய்வில் பால் வான்தீகம் ஆரம்பகட்ட ஏற்பிலிருந்து படிப்படியாக அதன் ஆழமான பாதிப்பு வரை விரிவாக விளக்குகிறார்.

2. இலக்கிய இணைநிலைகளுக்கும் செல்வாக்கிற்கும் உள்ள வேறுபாட்டை உணர்ந்து செயல்பட வேண்டும் என எச்சரிக்கிறார் வெல்லக். ஹென்றிபெயிர் இணைநிலைகள் பற்றி ஏதும் மறுப்புக் கூறவில்லை என்றாலும் எவ்வித உண்மையான அடித்தளமும் அற்ற எவ்விதமான தொடர்பும் அற்ற இணைநிலைகள் பற்றிய ஆய்விற்கும் இணைநிலைகள் உள்ள இரு பனுவல்களுக்கும் பொதுவான ஒரு மூலம் இருப்பதைக்கண்டு கூறும் ஆய்விற்கும் வேறுபாடு உண்டு என்பதை எடுத்துரைக்கிறார்.

3. இலக்கியச் செல்வாக்கு என்பது ஏதேனும் ஒரு விதத்தில் தொடர்புடைய இரு ஆசிரியர்கள், இரு நூல்கள், இரு சமுதாயம், பண்பாடுகள் ஆகியவை ஒன்றை ஒன்று தாக்கியதால் ஏற்பட்ட விளைவுக்கான காரணங்களைக் கூறுவது. மொழி, நாட்டு எல்லைகளைக் கடந்து இலக்கிய உறவுகள் ஏற்பட்டதற்கான காரணங்களையும் எவ்வாறு, எவ்வித ஏற்பினால் எவ்வித மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன எனத் தேடிக்காண்பது. ஆனால் இணைநிலை ஆய்வு என்று கூறும்போது எவ்விதத்திலும் தொடர்பற்ற இரு பனுவல்களில், இரு மொழி இலக்கியங்களில் காணக்கூடிய ஒத்த தன்மைகளைக் காண்பது. இவ்வாறு காண்பதன் மூலம் அவ்வொத்த தன்மைகளைப் படைத்த சமுதாயச் சூழல்கள் ஒன்றாக இருப்பதை எடுத்துக்காட்டுவதாகவும் கூட இவ்வாய்வுகள் மாறக்கூடும்.

4. ஏற்பும் செல்வாக்கும் ஒன்றை ஒன்று அரவணைத்துக் கொண்டு செல்லக்கூடியவை எனினும் இரண்டுக்கும் இடையே வேறுபாடுகள் உண்டு.

ஜெர்மானிய புனைவியல் இலக்கியத்தையும் அதன் தனித் தன்மையையும் பிரெஞ்சு மக்களுக்கு அறிமுகப்படுத்தியவர் ஸ்தேல் அம்மையார், இது ஏற்பே அன்றி செல்வாக்கு ஆகாது.

ஜெர்மானிய ஆசிரியரான செலகலிடம் ஈடுபாடு கொண்ட காலரிட்ஜினால் ஆட்கொள்ளப்பட்டவர் போ. இவரிடமிருந்து ஜெர்மானிய புனைவியல் கூறுகளைப் பெற்றவர் போதலே(ர்) போதலே(ர்) மூலமே பிரெஞ்சில் ஜெர்மானிய புனைவியலின் செல்வாக்கு ஏற்பட்டது. இதுவே உண்மையான செல்வாக்கிற்கு எடுத்துக்காட்டு என்பார் வை.சச்சிதானந்தன்.

5. செல்வாக்கு பற்றிய ஆய்வு ஒரு முழுமையான பகுப்பாய்வாகவும் ஆழ்ந்தும் மிக நுணுகியும் துகல்களாகப் பகுத்துக் காணுவதாகவும் இருக்கவேண்டும். இரண்டு நூல்களுக்கு இடையே காணும் செல்வாக்கைவிட இரண்டு ஆசிரியர்களுக்கிடையேயான இலக்கிய உறவையும் செல்வாக்கின் போக்கையும் காண்பதே சிறப்புடையது என்பார் அன்னா பாலகியான். அதேசமயத்தில் போன்மையாக்கத்தில் ஈடுபடும் செல்வாக்குக்கு ஆட்பட்ட ஆசிரியரின் சுயமான தனித்தன்மைகளை வெளிக்கொணர்வதாகவும் இவ்வாய்வுகள் அமையவேண்டும். அளவீடுகளாலும் எண்ணிக்கைகளாலும் செல்வாக்கு மதிப்பீடு செய்யப்படக்கூடாது; ஆனால் செல்வாக்கைச் செலுத்தும் ஆசிரியர் எவ்வளவு ஆழ்ந்த செல்வாக்கைச் செலுத்துகிறார் என்பதே அடிப்படையாக அமையவேண்டும்.

செல்வாக்கு பற்றிய ஆய்வுகள் உளவியல், மொழியியல், அழகியல் கூறுகளுடனும் சம்மந்தம் உடையவை, புறச் சான்றுகளைவிட அகச்சான்றுகள் செல்வாக்கிற்கு உட்பட்ட படைப்பின் அடிப்படைப் பண்புகளை, சிறப்பியல்புகளை

வெளிக்கொணர்வதாக இருக்கும்; எனவே செல்வாக்கிற்கு ஆட்பட்ட நூலை முழுமையாகவும் காணவேண்டும்.

1. செல்வாக்கிற்கு ஆட்பட்ட இலக்கியக் கடனைப் பெற்ற ஆசிரியரின் தனித்த சிறப்பில்புகளை வெளிக்கொணரும் போதுதான் அவ்வாய்வு வெற்றிபெற்றது எனக் கூறலாம்.

2. செல்வாக்கிற்கு உட்படும் ஆசிரியர் எந்த திருப்பு முனையில், கோணத்தில் தன்னைச் செல்வாக்கிலிருந்து விடுவித்துக் கொண்டுத் தன் சுயத் திறமைகளுடன் செயல்படுகிறார் என்பதை எடுத்துக்காட்டுவதாகவும் ஆய்வு அமையவேண்டும்.

3. வெயிஸ்ட்டீன் செல்வாக்கைப் பற்றிச் சுட்டும் போது தன்னுணர்வற்ற போன்மையாக்கமே செல்வாக்கு எனவும் குறிப்பிட்ட நோக்கோடு செயல்படும் செல்வாக்கே போன்மையாக்கம் என்றும் குறிப்பிடுகிறார்.

ஒரு இலக்கியத்தின் நல்வாய்ப்பு (நல்லூழ்) எவ்வாறு இருந்தது எனத் தேடுவதும், ஒரு ஆசிரியரின் செல்வாக்கு யாரிடமெல்லாம் எவ்வாறெல்லாம் இருந்தது? அவற்றின் பின் விளைவுகள் யாவை என மதிப்பீடு செய்வதும், எதிர்மறையான செல்வாக்கை எடுத்துக்காட்டுவதும் சிறந்த ஒப்பிலக்கிய ஆய்வுக் களங்களாகும்.

செல்வாக்கு பற்றிய ஆய்வுகளின் செயல்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. நேரடியான செல்வாக்கு (Direct Influence)

2. மறைமுகமான செல்வாக்கு (Indirect Influence)

3. உள்ளார்ந்த செல்வாக்கு / தன்மயமாக்குதல் (Internal Influence & assimilation)

4. வெளிப்படையான செல்வாக்கு (External Influence)

5. உடன்பாட்டுச் செல்வாக்கு (Positive Influence)

6. அ. எதிர்மறைச் செல்வாக்கு (Negative Influence)

ஆ. கருத்து வெளிப்பாடு அமுக்கப்படல் (Suppression)

இ. மறுப்பு இலக்கியம் (Counter design)

7. சுயநினைவுடன் செல்வாக்கிற்கு ஆட்படுவது (Concious influence)

8. தம்மையறியாமல் செல்வாக்கிற்கு ஆட்படுவது (Unconcious influence)

(I) நேரடியான செல்வாக்கு

அ) முதல் பார்வையிலேயே இது தெரிந்து விடும். எமர்சனின் 'பிரம்மா' என்ற கவிதை நேரடியான செல்வாக்கிற்கு எடுத்துக்காட்டு. இந்திய இலக்கியங்களில் பிரம்மாவைப்பற்றிக் கூறும் பகுதிகளில் எது இந்தச் செல்வாக்கை ஏற்படுத்தியது எனக் கண்டுபிடிப்பது திறனாய்வாளனின் வேலை. இதற்கு அவனுக்குத் துணை நிற்பவை எமர்சனின் வாழ்க்கைச் சரிதம், அவர் கற்றிருக்கக் கூடிய இந்து மத நூல்கள், மூலத்திலிருந்தோ மொழி பெயர்ப்பு மூலமோ அவர் படித்தவை பற்றிய குறிப்புகள், அவர் இந்த கவிதையை எழுதிய காலகட்டத்திலோ அதற்கு முன்போ படித்தவை - இது போன்ற குறிப்புகள் கிடைத்தவுடன் திறனாய்வாளர் அந்த தலைப்புள்ள மூலங்களையும் எமர்சனின் கவிதையையும் ஒப்பிட்டு எதில் ஒத்த சொல்லாட்சி நிலவுகிறதோ அதுவே செல்வாக்கை எற்படுத்தியிருக்கக்கூடும் என எடுத்துக் காட்டலாம். ஆனால் இதற்கு எமர்சனின் கவிதையை நெருங்கிப்படிப்பதும் அவசியம். மேலும் இதே தலைப்பில் எமர்சன் எழுதிய வெவ்வேறு கட்டுரைகளும் உதவும்.

போப் தன் கவிதைகளில் ஹோமரின் இலியட் அல்லது ஒடிசியின் சில கவிதை வரிகளைச் சில பாத்திரங்கள் பற்றிய விளக்கங்களைத் தன் கவிதையின் ஆரம்பத்தில் முற்குறிப்பாகத் (alluison) தருகிறார். டி.எஸ்.எலியிட் தாந்தேயிடம் இருந்து பெற்றச் சில வரிகளைத் தன் கவிதைகளுக்கு முகவுரை போலத் (epigram) தருகிறார். இது இவர்களுடைய கவிதையின் பாடு பொருளை, கவிதையில் வரும் பாத்திரங்களைப் புரிந்துகொள்ள உதவுகின்றன. இதற்கான உந்துதல்களை எந்த இடத்தில் இருந்து போப்பும் எலியடும் பெற்றனர் என்பதை அவர்களே தந்து விடுகின்றனர். இவை நேரடியான செல்வாக்கிற்கு எடுத்துக் காட்டுகளாக அமைபவை.

தமிழில் நேரடியான செல்வாக்கிற்கு எடுத்துக்காட்டாக பாரதி பாடல்களில் தீ பற்றிய பாடல்களில் இடம் பெறும் வேதக் கருத்துகளைக் கூறலாம், பாரதியின் கட்டுரைகளிலும் பத்திரிக்கையில் எழுதிய குறிப்புகளிலும் வேதக்குறிப்புகள் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். இதே போல ஷெல்லி தாசன் என்ற புனைபெயருடன் இவர் ஷெல்லியின் கவிதைகளில் இருந்து பெற்ற நேரடியான செல்வாக்குடன் கவிதைகள் எழுதியிருப்பதை வை.சச்சிதானந்தன், ரகுநாதன், ஜான் சாமுவேல், க. செல்லப்பன் ஆகியயோர் எடுத்துக் கட்டியுள்ளனர். வை. சச்சிதானந்தன் பாரதி பெற்ற மேலையிலக்கியத் தாக்கம் பற்றித் தன்னுடைய 'பாரதியிடம் மேலையிலக்கியத் தாக்கம் (Western Impact on Bharathi) எனும் நூலில் விரிவாக விளக்குகிறார்.

பாரதியின் நகரம் என்ற ஆங்கிலக் கட்டுரையில் வால்ட் விட்மனிடம் இருந்த பெற்ற செல்வாக்கைக் காணமுடிகிறது. வால்ட் விட்மனின் அகன்ற கோடாரி பற்றிய பாடல் (Song of Broad Axe) என்ற கவிதை இலட்சிய நகரம் ஒன்றைப் படைத்துக் காட்டுகிறது. இது பாரதியின் விழைவுக் கற்பனை நிறைந்த ஞான ரதத்திற்கு அடிப்படையாக இருப்பதை உணர முடிகிறது.

(I)ஆ. நேரடியான செல்வாக்கில் பிறிதொரு பிரிவும் உண்டு

இங்கு ஒரே ஒரு ஆசிரியரின் செல்வாக்கிற்குப் பதிலாக இடைத்தொடர்பு உடைய இரண்டு அல்லது மூன்று மொழி இலக்கியங்களில் இருந்து செல்வாக்கைப் பெற்று, அவற்றைத் தன் கலைத்தன்மையால் அழகிய மொசைக் வடிவமாகக் கலையழகுடன் புனைகிறார். பிரெஞ்சு, இத்தாலிய, இலத்தீன் இலக்கியங்களிலிருந்து கதைக்கூறுள், பாடலடிகள், மரபுத் தொடர்கள் போன்றவற்றை எடுத்துக் கொண்ட சாசர் புதிய புதிய வகைமாதிரிகளாக, படைப்பாக்கத்திற்கான புதிய புதிய அடித்தளங்களாக அவற்றைக் கொண்டு ஆங்கிலக் கவிதைகளைப் படைத்தார். ஆயின் இவ்வாறு பல மொழிக்கூறுகளைக் கொணர்ந்து ஆங்கில இலக்கியத்தை வளப்படுத்தும் பொழுது சாசர் தன்னுடைய தனித்திறமைகளை மறைத்து போகவிடவில்லை என்பதையும் கருத்திற்கொள்ள வேண்டும் எனக்கூறுகிறார் உல்ஃப்காங் கிளமென். (Wolfgang Clemen). இவரை அடியொற்றியே எஸ்.எஸ்.பிராவர் செல்வாக்குகளின் வகைகளைத் தொகுத்துக் தருகிறார் (ப.60 எஸ்.எஸ். பிராவர்)

வால்ட்விட்மன், ஷெல்லி, பைரன், கீட்ஸ், வேர்ட்ஸ் வொர்த் போன்ற பல படைப்பாசிரியர்களின் செல்வாக்கை ஒருங்கே பெற்றிருந்த பாரதி முழுவதுமாக அவர்களுக்கே ஆட்பட்டு விடாமல், தன் தனித்திறமையை விட்டுவிடாது புதியபுதிய பாடுபொருட்களைக் கொண்ட புதிய புதிய கவிதை வடிவங்களைத் தந்தமையை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

ஃபிரே லூயிஸ்டி லியான் எனும் கவிஞர் தன்னுடைய சலினாஸ் பற்றிய போற்றிப்பாடலில் (Fray Luis Leon's ode to Salinas) பிளாட்டோ காலத்து அழகியல் பற்றிய கோட்பாடுகள், ஆன்மா இறைவனிடம் சென்று கலப்பது பற்றிய மெய்ப் பொருளியல் சார்ந்த கருத்துகள் ஆகியவற்றைப் பாடுபொருளாக எடுத்துக்கொண்டு அதை வெளிப்படுத்தும் வடிவாக்கத்திற்கு

ஹொரேசிய ஓட் காட்டும் சிக்கலின் உச்சநிலை, சிக்கல் வீழ்ச்சி, போன்ற வழக்கமான மரபுவடிவத்தை எடுத்துக்கொள்கிறார். இவற்றை இணைத்து புதிய வடிவமாகத் தரும் பொழுது பல வண்ண நூலிலைகளைக் கொண்டு பின்னப்பட்ட அழகிய மணிக்கயிறு போலப் பின்னியிருக்கிறார் என்று கவிதையியல் பற்றி ஆராய்ந்த அலென்ஸோ (Damaso Alonso) கூறுகிறார். (ப.61 எஸ்.எஸ்.பிராவர்)

பிராவர் தரும் இந்த எடுத்துக்காட்டில் இரண்டு கூறுகளை நாம் காணமுடியும்.

ஒன்று; ஒரு நாட்டு இலக்கியமரபில் பல்வேறு இலக்கியங்களில் இருந்து வந்த புறத்தூண்டல்கள் பல ஒருங்கிணைகின்றன.

அடுத்து இவை இணைந்து உள்நாட்டு படைப்பாளி ஒருவர் இயற்கையாகப் பெற்றிருக்கக்கூடிய தனித்திறமைகளை மேலும் தூண்டி விடுகின்றன. இதனால் அந்தப்படைப்பாளி ஒரு புதிய இலக்கியத்தைப் படைக்கிறார். அப்படைப்பு உள்நாட்டு இலக்கிய மரபு, வெளிநாட்டிலிருந்து வந்து உள்நாட்டு இலக்கியமரபுடன் இணைந்த இலக்கியக்கூறுகள், அப்படைப்பாளியின் தனித்திறன்கள் ஆகிய மூன்று தன்மைகளும் இணைந்த பின்னலாக விளங்குகின்றது.

இவ்வாறு செயல்படும் பொழுது செல்வாக்கிற்கு ஆட்படும் படைப்பாளிகள் மூன்று நிலைகளில் வினைபுரிகின்றனர்

1. தனக்குத் தேவையான அளவிற்கு மேல் நூலிழை அளவு கூட அதிகமாக மூலத்திலிருந்து பெறாமலிப்பது.

2. தனித்துப் படைக்கும் தன் சொந்தத் திறமையை இழக்காதிருப்பது.

3. மூலத்திலிருந்து தனக்கு வேண்டிய கருத்தை எடுத்துக் கொண்டு, அதை உள்வாங்கிக் கொண்டு, தன்மயமாக்கிக் கொண்டு, தன்சொந்தத் திறமைக்கேற்ப அதைப்பயன் படுத்தலாம்.

மூன்று கூறுகளையும் வெளிக்கொணர்வதாக அமைவதே உண்மையான செல்வாக்கு பற்றிய ஆய்வாக மிளிரும்.

(II) மறைமுகமான செல்வாக்கு

ஒரு மூலநூலைப் படித்து அதன் விளைவாக மற்றொரு நூல் வெளிவரும் பொழுது அதனை நேரடியான இலக்கியச் செல்வாக்கு என்கிறோம். ஆனால் ஒரு உள்நாட்டு ஆசிரியர் (ஆ1) இவ்வாறு வேறொரு ஆசிரியரின் (அ) செல்வாக்கைப் பெற்றவர் இருக்க, இவரைப் பின்பற்றி இவரது சமகாலத்தவரும், இவரது சீடர்களாக வருபவர்களும் (ஆ2, ஆ3, ஆ4, ஆ5) அந்த வேற்று நாட்டு ஆசிரியரின் தாக்குதலுக்கு உட்படும்பொழுது அதனை மறைமுகமான செல்வாக்கு எனக் கூறுகிறோம். ஷெல்லி (அ) தாசனான பாரதி (ஆ)யைப் பின்பற்றிய பாரதிதாசனின் கவிதைகளில் ஷெல்லியின் செல்வாக்கு இடம் பெறுவதை இதற்கு எடுத்துக்காட்டாகத் தரலாம். இச்செல்வாக்கு மேலும் அடுத்த தலைமுறைக்கும் தொடர்ந்து சுப்புரத்தினதாசனான சுரதாவிடமும் (ஆ2) பரிணாமனிடமும் (ஆ3) காணும் போது அது ஒரு கால்வழியை ஏற்படுத்திக் கொள்வதைக் காணமுடிகிறது.

இவ்வாறு ஷெல்லியிடம் இருந்து மறைமுகமானத் தாக்கத்திற்கு உள்ளான சுரதா, மீண்டும் நேரடியாக ஷெல்லியின் கவிதைகளை மூல மொழியிலிருந்து பெற்று, படித்து, அதன் காரணமாக அதுவரை தமிழில் பாரதியாலும், பாரதிதாசனாலும் கொண்டுவந்து சேர்க்கப்படாத ஷெல்லியின் படைப்பாக்கக் கூறுகளையோ உத்திகளையோ தன் படைப்புகளில் பயன்படுத்துவதாயின் அதையும் மறைமுகத் தாக்கம் என்றே கூறலாம்.

இத்தகு மறைமுகச் செல்வாக்கு பற்றி வெயிட்டீன் தந்த விளக்கமும் எடுத்துக்காட்டும் பற்றி இந்நூலின் முந்தைய பக்கங்களில் விளக்கப்பட்டுள்ளது.

(III) அ) உள்ளார்ந்த செல்வாக்கு

இதனைத் தன்மயமாக்குதல் என்றும் கூறலாம், மூலத்தின் கருத்துக்களைப் பார்த்துப் போன்மையாக்கமாகவோ, தழுவலாகவோ படைக்காது, தன்னகப்படுத்திக்கொண்டு, பிறகு தனக்கே உரிய முழுவதும் தன்னுடைய சுயப்படைப்பாகத் தருவது, இதில் செல்வாக்கின் இழைகளைக் கூட எடுத்துக் காட்டுவது கடினம். ஆனால் மூல நூலைப்படித்திருக்கும் வாசகன் இப்புதிய படைப்பைப் படிக்கும் பொழுது, இதன் மூலம் எது என்பது அவனுக்குத் தெரிந்துவிடும்.

மனோன்மணியம் நாடகத்தின் ஒரு சிறு பகுதியாக வரும் சிவகாமி - நடராஜன் காதல் கதையின் மூலம் லிட்டன் பிரபு எழுதிய 'இரகசியப்பாதை' (The Secret way). தமிழ் மட்டுமே அறிந்த வாசகனுக்குச் சுந்தரனார் தன்மயமாக்கி எழுதிய மூலம் பற்றித்தெரிய வாய்ப்பே இல்லை. தழுவல் என்று கூறுவதற்குக் கூட இயலாத படித் தமிழ் வடிவத்தை அமைத்துள்ளார் சுந்தரனார். ஆனால் மூலத்தைப் படித்திருக்கக்கூடிய வாசகனுக்கு இரு பனுவல்களிலும் காணப்படக்கூடிய ஒற்றுமைகள் புரியும்.

எஸ்ராபவுண்டு ஜப்பானிய ஹைகூ கவிதைகளைத் தன் மயமாக்கிக் கொண்டு எழுதியதைச் சுட்டிக்காட்டுகின்றார் தாகியா. (Bhim. S. Dahia "The idea of influence in literature" P.302) எஸ்ராபவுண்டின் வாழ்க்கை வரலாறு, அவர் எழுதிய பிற படைப்புகள், அவர் படித்தவை பற்றிய குறிப்புகள் போன்ற பலவற்றையும் அறிந்த வாசகரே அவரிடம் ஜப்பானிய ஹைகூவின் செல்வாக்கு இருப்பதை எடுத்துக் காட்டமுடியும் என்கிறார் இவர்.

(III). ஆ)

தன்மயமாக்கலின் வேறு சில நிலைகளும் இங்கு சுட்டப்படுதல் வேண்டும். ஒரு குறிப்பிட்ட இலக்கியப்படைப்பு இலக்கியவகை, ஒரு ஆசிரியர் எனத்தனியொரு இலக்கிய நிகழ்வைத் தன்மயமாக்கிக் கொள்வது ஒரு நிலை. இதன்றியும் பல ஆசிரியர்களைக் கற்று அவர்கள் பலரும் பயன்படுத்திய படைப்பாக்கக் கூறுகள், உத்திகள் இவற்றின் இணைவாக ஒரு புதிய இலக்கியத்தைப் படைப்பது மற்றொரு நிலை. ஒரே ஒரு மூலத்திலிருந்து செல்வாக்கு பெறுவது என்ற நிலைக்கு மாறாக, இங்கு பல ஆசிரியர்கள் செல்வாக்கிற்கான மூலங்களை அளிக்கின்றனர். ஆனால் இவை அனைத்தையும் வெளிப்படையான செல்வாக்காகக் காட்டாமல் இவற்றைத் தன்னகப்படுத்திக் கொண்டு புதிய படைப்பை அளிப்பதும் இங்கு நிகழ்கிறது.

இதற்கு எடுத்துக்காட்டாக ந.பிச்சமூர்த்தி வால்ட் விட்மன், டி.எஸ்.எலியட் போன்ற ஆசிரியர்களிடம் இருந்து பெற்ற கருத்துகளை, உத்திகளைத் தன் தனித்திறமையுடன் கலந்து அளிப்பதைக் கூறலாம்.

இது குறிப்பிட்ட ஒரே ஒரு ஆசிரியரிடம் இருந்து ஏற்படலாம்; ஒரு காலகட்டத்தைச் சேர்ந்த பல ஆசிரியர்களிடம் இருந்து (ஒரே கருத்துப்பள்ளியைச் சேர்ந்த பல ஆசிரியர்கள்) ஏற்படலாம்; ஒரு இயக்கத்தின் சார்பான எழுத்துக்களால், பிறிதொரு ஒரு நாட்டின் இலக்கிய மரபால் ஏற்படலாம். இவை ஒன்றோ பலவோ இணைந்து செல்வாக்கிற்கு உட்படும் ஆசிரியரின் பார்வை வீச்சுகளை மாற்றி அமைக்கலாம். இவ்வாறு செயல்படும் பொழுது கிளாடியோகில்லன் கூறியது போல இப்புதிய படைப்பாளியின் உளவியல் சார்ந்த மாற்றங்களுக்கு இவை காரணமாகலாம். இதனால் ஏற்படும் விளைவான புதியபடைப்பில் இத்தாக்கத்தை ஏற்படுத்திய மூலக்கூறுகளைக் கல்வி வீச்சுகளைப் பெற்ற வாசகன் உய்த்துணர முடியும். இதனை கில்லன் ஒருங்கிணைந்து செயல்படும் பல்வேறு கூறுகளைக் கொண்ட செல்வாக்கு என்கிறார் (Collective, Shared influence) (ப.68 பிராவர்.)

(IV) வெளிப்படையான செல்வாக்கு

எளிதில் ஒற்றுமைக் கூறுகளை அடையாளம் காணும் அளவிற்குச் செல்வாக்குக்கு ஆட்பட்ட நூலில் மூலநூலின் கருத்துகள், சொல்லாட்சிகள் உவமை, குறியீடு, வடிவம் போன்றவை அமைந்திருக்குமாயின் அதை வெளிப்படையான செல்வாக்கு எனக்கூறலாம்.

வெளிப்படையான செல்வாக்கு என்ற கருத்தமைவிற்குள் செல்வாக்கின் பல்வேறு படிநிலைகள், வெவ்வேறு மாற்று உருவங்கள். எனக்கருதக் கூடியனவாய் ஜே.டி. ஷாவும் உல்ரிச் வெயிஸ்ட்டீனும் கூறியுள்ள பல கூறுகளை எடுத்துக் காட்டலாம்.

(i) மேற்கோள் (Quotation)

இடைத்தொடர்புகள் மூலம் மேலோட்டமான செல்வாக்குக்கு ஆட்படும் ஒருவர் தம்மிடம் பாதிப்பை ஏற்படுத்திய சில பகுதிகளை, சிலதொடர்களை, சிலகருத்துகளை மூலத்திலிருந்து அப்படியே பெயர்த்துத் தன் படைப்பில் பயன்படுத்துகிறார். அவ்வாறு பயன்படுத்தும் பொழுது தான் கூறவந்த கருத்தை அரண்செய்ய, வலியுறுத்தி நிலைநாட்ட தன் படைப்பாக்கத்தைக் கலைத்திறனுடன் திகழச்செய்ய எனப் பல காரணங்களுக்காக மேற்கோள்கள் கையாளப்படும் பொழுது அவை எந்த ஆசிரியரின் எந்த நூலிலிருந்து எடுக்கப்பட்டவை என்ற குறிப்பும் தரப்படுகிறது. எனவே இவற்றைப் படைப்பாளியின் படிப்பறிவை வெளிக்காட்டுவதாக அமையும் மேலோட்டமான ஏற்பிற்குள்தான் அடக்க முடியும் என்கிறார் வெயிஸ்ட்டீன் (ப.36,37).

(ii) மறை குறிப்புகள் (Allusion)

தனக்கு முந்தைய படைப்புகளில் இருந்து ஒரு வாசகத்தையோ ஒரு பாத்திரத்தையோ அல்லது ஒரு இடத்தையோ நேர்மாறாகவோ

அல்லது சுருக்கமாகவோ சுட்டிக்காட்டுவதை மறை குறிப்புகள் எனலாம். இவ்வாறின்றி நேரடியாக ஒரு செய்தியை அல்லது கருத்தை குறிப்பிட்டுச் சுட்டுவதைக் குறிப்புச்சுட்டு (reference) எனலாம். மறைகுறிப்பு சில கவிஞர்களால் ஒரு படைப்பாக்க உத்தியாக மேற்கொள்ளப்படுகிறது எனினும் இதையும் ஏற்பு எனும் வகைக்குள் அடக்கி விடமுடியும்.

(iii) தொடர் குறிப்பு (Leit motif)

இங்கும் மேற்கோள் தான் சுட்டப்படுகிறது. தொடர் குறிப்பு எனும் பொருளுடைய ஜெர்மானியச் சொல்லால் எந்த விதமான நோக்கமும் இன்றி சில நேரங்களில் எடுத்தாளப்படும் மேற்கோளை விளக்குகிறார் வெயிஸ்ட்டீன். ஒரு ஆசிரியரின் குறிப்பிட்ட கருத்தையோ சொல்லாட்சியையோ, நடைப்பாங்கையோ மேற்கோளாகக் காட்டவேண்டும் என முனைந்து முழுமனதுடன் செயல்படாமல் எவ்வித நோக்கமும் இன்றி மேற்கோளாகப் பயன்படுத்துவதையும் (unintentional and half-intentional quotes) 'leit-motif' எனும் சொல்லால் குறிப்பிடுகிறார் இவர். இவை அவ்விலக்கியப்படைப்பின் வடிவமைப்பில் துணைபுரியக் கூடிய இணைப்புகளாகச் செயல்புரிகின்றன. இது மேற்கோளாகப் பயன்படுத்துபவரது கல்வி, அனுபவம், இலக்கிய மரபில் அவரது இடம் ஆகியவற்றைச் சுட்டுமேயன்றி இது செல்வாக்கு ஆகாது. இதனையும் மேலோட்டமான ஏற்பின் வகைகளுள் ஒன்றாகவே சேர்க்கிறார் வெயிஸ்ட்டீன்.

இவ்வாறான தொடர் குறிப்புகள் மீண்டும் மீண்டும் ஒரே ஆசிரியரின் படைப்புகளில் பயன்படுத்தப்படும் போதும் இவரைப் பின்பற்றி வேறு பலரும் இவற்றைப் பயன்படுத்தும் போதும் அவை மரபு சார்ந்த இலக்கிய உத்தியாகின்றது; பின்னர் அவையே தலைமைப் புனைவுக் கூறுகளாகின்றன. இந்த நிலையில் எவ்வித நோக்கமும் இன்றிப் பயன்படுத்தும் நிலைமாறி குறிப்பிட்ட ஒரு கருத்தமைவை ஒரே விதமான சொற்கூட்டமைப்பால், சொல்லாட்சியால் விளக்கும் மரபாக மாறுகிறது.

சங்க இலக்கியங்களில் மலர்கள், இலைகள், காய்கள் போன்றவற்றை விளக்கக் கவிஞர்கள் தரும் அடைமொழிகளை இவ்வகைத் தலைமைப் புனைவுக் கூறுகளாகச் சுட்டலாம்.

முதிர்ச்சி பெறாத நெல்லிக்காயைச் சுட்டும் சங்கக் கவிஞர்கள்

புன்காழ் நெல்லிப் பைங்காய் (அகம் 315)

நெல்லிப்புகரில் பசுங்காய் (நற் 271)

குவிகண் பசுங்காய் (அகம் 315)

வீழ்கடைத் திரள்காய் (நற் 271)

அம்புளித் திரள்காய் (அகம் 69)

என மீண்டும் மீண்டும் பல புலவர்கள் நெல்லிக்காயின் முற்றா இளமையை ஒரே மாதிரியான சொல்லமைப்பால் சுட்டுகின்றனர். இங்கு தொடர் குறிப்பாக அடை மொழிகள் வருவதைக் குறிப்பிடலாம்.

இவை மூன்றுமே ஏற்பு என்ற நிலையிலேயே வெயிஸ்ட்டினால் சுட்டப்படுகின்றன. அடுத்து காணத்தக்கது போன்மையாக்கம் (Imitation)

(iv) போன்மையாக்கம்

செவ்வியற்கால இலக்கியங்களில் போன்மையாக்கம் விரும்பி ஏற்கப்பட்ட ஒரு இலக்கியக்கூறு. செவ்வியற்காலத்திற்குப் பின்னர் வந்த புதிய செவ்வியற் காலத்திலும் செவ்வியற்கால இலக்கிய நிலைகளை மீட்டுக் கொணர வேண்டும் என்ற நிலையில் போன்மையாக்கம் மேற்கொள்ளப்பட்டது; ஆயின் செவ்வியற் காலத்தைத் தொடர்ந்து வந்த புனைவியற் காலத்திலும் நடப்பியல் காலத்திலும் இது பெரிதும் மறுக்கப்பட்டது.

தனக்கு முன் வழக்கில் இருக்கும் ஒரு செவ்வியற்கால நூலையோ, தன் மனத்திற்கு இசைந்த ஒரு ஆசிரியரின் நடைப்பாங்கையோ, பகுதியாகவோ, முழுமையாகவோ பின்பற்றிப் படைப்பதே போன்மையாக்கம் என்று இங்கு குறிப்பிடப்படுகிறது. ஒரு எழுத்தாளனின் வளர்ச்சிக்கு உதவுவது போன்மையாக்கம். எனவே தனக்கு முன்னுள்ளவற்றுள். தன்னைக் கவர்ந்த ஒரு நூலையே போன்மையாக்கம் செய்யத் தெரிந்தெடுப்பதால் இதுவும் ஒரு வகையில் செல்வாக்கின் பாற்படும் என வெயிஸ்ட்டீனும் ஜே.டி ஷாவும் கருதுகின்றனர். இதுவும் வெளிப்படையான செல்வாக்கின் ஒரு கூறாகக் கருதப்படுகிறது. வெயிஸ்ட்டீன் தன்னுணர்வற்ற போன்மையாக்கமே செல்வாக்கு என்றும் குறிப்பிட்ட நோக்கில் செய்யப்படும் செல்வாக்கே போன்மையாக்கம் என்றும் கூறும் கருத்து இங்கு நினைவு கூர்தற்குரியது.

(v) இலக்கியத் திருட்டு (Plagiarism)

ஒரு ஆசிரியரின் கருத்தையோ மொழி நடையையோ மேற்கோளாகக் காட்டும் பொழுது அது இன்னாருடைய நூலில் இருந்து எடுக்கப்பட்டது என்ற குறிப்புடன் தருவது தான் நேர்மையான ஆசிரியருக்கு அழகு. ஒரு சொல்லையோ சில வரிகளையோ எடுத்துக் கொள்வதாயினும் இவ்வாறு சுட்டுவதே முறை. இதன்றிப் பிற ஆசிரியர்களின் கருத்தையும் நடையழயையும் பின்பற்றி எழுதும் புதிய படைப்பாளி அதைத் தன்னுடையது போன்றே எழுதும் பொழுது அதனை இலக்கியத் திருட்டு என்கிறோம். ஆயின் இவ்வாறான இலக்கியத் திருட்டு எந்த இடத்தில் முடிவடைந்து எங்கு போன்மையாக்க முறையில் படைப்பாக்கம் நிகழ்கிறது என்பதனை நூல்பிடித்தது போல் வரையறை செய்வது கடினம்

ஜெர்மானிய மொழிபெயர்ப்புகள் மூலம் வில்லான், ரிம்பாட், கிப்ளிங் (Vellon, Rimbaud & Kibling) ஆகியோரின் படைப்புகளிலிருந்து சில வரிகளையும் சில போழ்து முழுக்

கவிதையையும் அப்படியே எடுத்துத் தனது நாடகங்களில் பயன்படுத்திய பிரெக்ட் அவற்றிற்கு எந்தவிதமான அடிக்குறிப்போ ஏற்றுக் கொண்டதற்கான நன்றியையோ தெரிவிக்கவில்லை-இதனை நேரடியான கடன் பெறல் என்றாலும் நேரடியான கடனுக்கும் இலக்கியத் திருட்டிற்கும் வேறுபாடு உண்டு.

பழைய புராணக் கதைகளில் இருந்து அடிக்கருத்துகளைப் பெறுவது, பழைய பழ மரபுக் கதைகளிலிருந்து சம்பவக் கோவைகளைப் பெறுவது, வேற்றுமொழியசிரியாரிடமிருந்து சில வரிகளை, சில மரபுத் தொடர்களை எடுத்தாள்வது, அதுவும் நன்கு பிரபலமான கவிதைகளை எடுத்தாள்வது, செவ்வியல் இலக்கியங்களில் இருந்து தலைமைப்புனைவுக் கூறுகள், அடிக்கருத்துக்கள், உருவம், மொழிநடை போன்றவற்றைப் பெறுவது ஆகியவற்றை இலக்கியக்கடன் எனலாம்.

சேக்ஷ்பியர் பிளாட்டஸ்ஸின் கதைப்பின்னலைக் கடன் பெறுகிறார். சாசர் பிரெஞ்சு இத்தாலிய இலத்தின் மொழிக் கவிதைகளில் இருந்து சில வரிகளை, மரபுத் தொடர்புகளைக் கடன் பெற்றுத் தம் கதைகளை எழுதுகிறார். இவர்கள் பெற்ற கடன்களைத் தம் படைப்பாக்கத் திறமையால் மாற்றிப் படைக்கின்றனர்.

ஆனால் இலக்கியத்திருட்டில் தாம் கடன் பெற்ற கருத்துக்கள் சொற்கள் தொடர்களைத் தம் சொந்த கருத்தாகவே வாசகர் உணருமாறு படைக்கின்றனர்.

(vi) அடுத்துக்கான வேண்டிய ஒரு கூறு **படைப்புத் துரோகம்:** (Creative treason), ஒவ்வொரு படைப்பாளியும் இதுபற்றி உணர்தல் வேண்டும் என்று பலரும் வலியுறுத்துகின்றனர். ராபர்ட் எஸ்கார்பிட் (Robert Escarpit) ("Creative Treason" as a key to Literture எனும் கட்டுரையில் (YCGLX 1961 P.20) படைப்புத் துரோகம் பற்றிய கட்டுரையில் இது பற்றி விரிவாகப் பேசுகிறார்.

ஸ்விஃப்ட் எழுதிய "கலிவரின் பயணங்கள்" எனும் நூல் முதியவர்களுக்காக எழுதப்பட்டது. சமுதாயம், அரசியல், கல்வி, மதம் ஆகியவற்றில் நிகழும் சமகாலச் சீர்கேடுகளை எள்ளல் குறிப்புடன் சுட்டுவதற்காக எழுதப்பட்ட இந்த நூல் இன்று குழந்தைகள் படிப்பதற்கான நூலாக மாற்றிக் கருதப்படுகிறது.

தவறான மொழி பெயர்ப்புகளையும், மொழிபெயர்ப்பாளன் மூல ஆசிரியருக்கு உண்மையானவனாக இல்லாத பொழுது வெளிவரும் மொழி பெயர்ப்புகளையும் படைப்புத் துரோகம் எனலாம், என்ற கருத்தைத் கூறுகிறார் அன்னா பாலகியான். சில போழ்து மொழி பெயர்ப்புகள் மூல மொழியில் சாதாரணமான கவிஞராக விளங்கும் ஒருவரை உயரிய நிலைக்கு ஏற்றி விடுவதும் உண்டு. பாரசீகக் கவிஞரான உமர் (கய்யாம்: கூடாரம் கட்டுபவர்) பாடல்கள் பிட்ஜெரால்டின் மொழிபெயர்ப்புகள் மூலம் ஆங்கில உலகை எட்டியபொழுது உலகக் கவிஞர்களுள் ஒருவராக அவரை உயர்த்தியது.

எஸ்ராபவுண்ட் சீனக் கவிதைகளின் சித்திர வார்த்தைகளை (வரிவடிவம் சார்ந்த எழுத்துக்களால் ஆன சொற்களாக இல்லாது சொற்கள் சுட்டும் கருத்துக்களைக் குறிக்கும் சித்திர எழுத்துகள்) தவறாகப் புரிந்து கொண்டமை அவருடைய இலக்கியப் படைப்புகளுக்கு ஆக்க பூர்வமான செயலூக்கிகளாகத் திகழ்ந்ததை எடுத்துக்காட்டுகிறார் எஸ்.எஸ். பிராவர் (ப.71)

இதனை ஒரு எதிர்நிலைச் செல்வாக்கின் வகையாகச் சுட்டுகிறார் வெயிஸ்ட்டீன். இலக்கியம் சார்ந்த சமூகவியலில் தலைசிறந்த அறிஞரான எஸ்கார்பிட்தான் Creative Treason என்ற இப்பெயரை வழங்கியவர். சில இலக்கியங்கள் அதன் சம காலத்தவராலேயே தவறான நோக்கில் அணுகப்படுகின்றன. இதுபற்றிக் கூறும் எஸ்கார்பிட் திரும்பப்பெறுதல், உயிர்த்தெழுதல் (Recoveries & resurrection) ஆகிய இருநிலைகளில் ஒரு இலக்கியம் சமூக, கால, இடவர்த்தமானங்களை மீறி உச்சிக்குச் செலுத்தப் படுகிறது; அதனால் அது யாரை எண்ணி எழுதப்பட்டதோ அவ்வகை

வாசகரால் மட்டுமின்றி வேறு வாசகர்களால் சிறந்த வெற்றியைப் பெறுகிறது. இதற்கு நல்ல எடுத்துக்காட்டு பெரியவர்களுக்காக எழுதப்பட்ட ஸ்விப்ஃப்ட்டின் "கலிவரின் பயணங்களும்" டெஃபோவின் ராபின்ஸன் குருஸோவும் (Swift's Gultiver's Travel & Defoe's Robinson Crusoe) இன்று குழந்தைகளுக்கான நூல்களாகப் படிக்கப்படுகின்றன. ஆனால் குழந்தைகளுக்காக எழுதப்பட்ட அதிசய உலகில் ஆலிஸ் (Lewis Carrol's Alice in wonder land) பெரியவர்களாலும் திறனாய்வாளர்களாலும் விரும்பிப் படிக்கப்படுகிறது. (வெயிஸ்ட்டீன் ப.37)

(vii) தழுவல் (Adopatation)

ஒரு கவிதையைக் கவிதையாகவே மொழி பெயர்க்காது உரை நடையாகவோ, வசன கவிதையாகவோ வேறு ஒரு வடிவத்தில் மாற்றி அமைப்பது ஒரு வகைத்தழுவல், இங்கு வடிவத்தை விட மூல ஆசிரியரின் கருத்துகளே பெயர்ப்பைப் படிக்கும் வாசகனுக்குப் போய்ச் சேர வேண்டும் என்பதே நோக்கம் ஆகிறது.

மூலமொழியில் உள்ள ஒருகதை, நாடகம், கவிதையின் அடிக்கருத்தை மட்டும் எடுத்துக்கொண்டு இலக்குமொழியின் மரபுகளுக்கு ஏற்ப மாற்றித்தருவது தழுவல் எனப்படுகிறது. சேக்ஷ்பியரின் நாடகங்கள், கிப்ஸனின் நாடகங்கள் தமிழில் மொழி பெயர்ப்பாக வரும்போது தழுவல்களாகவே அதிகமாக இடம் பெறுகின்றன.

போன்மையாக்கத்தின் ஒரு வடிவாகக் கருதப்பெறும் இது படைப்புத் துரோகத்திற்கு இட்டுச் செல்லவும் கூடும். கதே, பிரெக்ட், எஸ்ராபவுண்ட் ஆகியோர் சீன இலக்கியத்தை மறு படைப்பாகத் தரும்பொழுது அவற்றைத் தம் சொந்த படைப்புகளாகவே தருகின்றனர். கவிதை வடிவிலேயே தந்த கவிதைச்சுருக்கங்களே அவை என்கிறார் வெயிஸ்ட்டீன் (ப.33) இதுவும் ஒருவகைப் போன்மையாக்கமே.

(viii) இன்னொரு வகையான போன்மையாக்கத்தை 'நடைப் பாங்கு' Stylization என்று குறிப்பிடுகிறார் இவர். ஒரு குறிப்பிட்ட மாதிரியை மட்டுமே பார்த்துப் போன்மையாக்கம் செய்யாமல் ஒரு குறிப்பிட்ட ஆசிரியரின் நடை, அல்லது ஒரு இயக்கத்தின் நடைப்பாங்கு, அல்லது ஒரு காலப்பகுதியில் பின்பற்றப்பட்ட நடைப்பாங்கு போன்ற இவற்றையும் போன்மையாக்கம் செய்யலாம். இவ்வாறு ஒரு இயக்கத்தையோ, ஒரு காலப் பகுதியையோ பார்த்து அப்படியே பின்பற்றுவதையும் வெளிப்டையான செல்வாக்கின் ஒரு கூறாகச் சுட்டுகிறார் வெயிஸ்ட்டீன்.

இவையாவும் உடன்பாட்டுச் செல்வாக்கு எனும் தலைப்பிற்குள் காணக்கூடிய போன்மையாக்கம் பற்றிய செய்திக் கூறுகள் எனலாம். மேற்கோள், மறைகுறிப்பு, தொடர்குறிப்பு இலக்கியத்திருட்டு, போன்மையாக்கம், தழுவல், நடைபாங்கு ஆகியவற்றுடன் ஜே.டி.ஷா. குறிப்பிட்ட பிற கூறுகளான இலக்கியக்கடன், மொழிபெயர்ப்பு ஆகியனவும் வெளிப்படையான செல்வாக்கின் சில கூறுகள் எனலாம்.

(ix) மொழிபெயர்ப்பு (Translation)

ஒரு மொழிபெயர்ப்பாளர் மூலமொழி ஒன்றில் காணப்படும் தனக்கு முந்தைய காலகட்டத்து இலக்கிய மரபினைத் தன்னுடைய சமகால சமுதாயத்திற்கும் மரபிற்கும் கொண்டு வருகிறார். மொழி பெயர்க்கப்பட்ட மூலத்தைத் தன் இலக்கியம், மொழிமரபு, தன் சமகால மக்களின் இலக்கிய இரசனை, போன்றவற்றிற்கு ஏற்ப மாற்றித் தந்தாலும் மூலத்தின் வடிவமைப்பையும் பாடுபொருளையும் அப்படியே தர முயல்கிறார். ஆரம்பகால மொழிபெயர்ப்புகளில் மொழிபெயர்ப்பாளருக்கு ஒரு சிலவற்றை விட்டுவிடவும், சிலவற்றைச் சேர்க்கவும், சுருக்கிக்கூறவும் வடிவம், நடைப்பாங்கு இவற்றை மாற்றி அமைக்கவும் உரிமை தரப்பட்டிருந்தது எனவே மொழி பெயர்ப்பு ஒரு மொழியில் இருந்து பிறிதொரு மொழிக்கு ஒரு ஆசிரியரின் செல்வாக்கைக் கொணர வழிவகுத்தது.

போன்மையாக்கத்தில் மொழிபெயர்ப்பில் கடுமையான விதிகளைப் பின்பற்றாமல், ஆனால் மூலமொழியில் இருப்பதைப் போல அப்படியே இலக்குமொழியில் படைக்கப்படுகிறது. இது வளரும் கலைஞர்களுக்கு ஒரு படைப்புப்பயிற்சியாக அமைவது. புஷ்கின் போலச் செய்தலைப்பற்றிக் குறிப்பிடும் பொழுது போலச் செய்தல் அறிவு வறட்சியைக்குறிப்பதல்ல. தன்னுடைய திறமையில் முழுநம்பிக்கை, புதியன கண்டுபிடிக்கும் ஆர்வம், ஒரு சிறந்த படைப்பாளியின் அடியொற்றிச் செல்லும் பெருமை, அல்லது குறிப்பிட்ட ஒரு சிறந்த முறையினை அந்த ஆசிரியரிடம் இருந்து கடன்பெற்று அதில் நிபுணத்துவம் பெறுவது போன்ற பல சிறப்புக்கூறுகளை உடையது என்று கூறுவர். ஜே.டி.ஷா இக்கருத்தை ஏற்றுக் கொண்டு தன் கட்டுரையில் குறிப்பிடுகிறார் (ஜே.டி.ஷா. (Stallknecht N.P. & H. Frenz, Comparative Literature : Method & Perspective 1971 P.288)

(x) இலக்கியக் கடன் அல்லது **(Literary Indeptedness)** கடன்பெறல் **(Borrowings)**

பாடுபொருள், பாடும்முறை, படைப்பாக்க வழிமுறைகள், உருக்காட்சி, குறிப்பணி மிகப்பேசுதல், தலைமைப் புனைவுக் கூறுகள், கதைப்பின்னல் அல்லது பாட்டின் யாப்பு அமைப்பு, வடிவமைப்பு மூலக்கூறுகள் போன்றவற்றைப் பிறிதொரு மொழியில் இருந்து பெறுவதே இலக்கியக்கடன். இவ்வாறு பெற்றவற்றுள் எந்த மொழியில் இருந்து எது கடனாகப் பெறப்பட்டது என்பதைக் காட்டுவதும் சிறந்த செல்வாக்கு பற்றிய ஆய்வாகவே கருதப்பட்டது. ஆனால் அதுவே படைப்பாசிரியரைக் குறைவாக மதிப்பிட்டுவிடக் காரணமாக அமையக்கூடாது. இவ்வாறு கடன்பெறும் பொழுது அவற்றை மேலே குறிப்பிட்ட மேற்கோள், மறைகுறிப்பு என்ற நிலையிலும் கொணர்வது வெளிப்படையான செல்வாக்கினைச் சுட்டுகிறது. டி.எஸ். எலியட் ஒவ்வொரு பாட்டின் தலைப்பில், ஒரு பாத்திரத்திற்குப் பெயர் சூட்டுவதில், ஒரு பாத்திரத்தை அப்படியே எடுத்தாள்வது போன்ற பல நிலைகளில் மறைகுறிப்பாக தாந்தே, சேக்ஷ்பியர் போன்றவர்களிடம் இருந்து எடுத்துப் பயன்படுத்துகிறார்.

இன்றைய புதுக்கவிஞர்கள் பாரதி, பாரதிதாசன், வள்ளுவர், கார்ல்மார்க்ஸ், கம்பர், சங்கக் கவிஞர்கள் ஆகியோரின் வரிகளை எடுத்துப் புதிய நோக்கில் விளக்கம் தரும் பாடல்களைப் படைக்கின்றனர். பழைய தொன்மங்களிலிருந்து பாத்திரங்களை எடுத்துக் கொண்டு (புதிய கண்ணகி, அசோக வனத்துச் சீதை) மாற்றிப் படைப்பதையும் மறைகுறிப்பு எனக் கூறலாம்.

அடுத்து வெயிஸ்ட்டீன் குறிப்பிடும் சில கூறுகளான எள்ளல் (Satire) கிண்டல் இலக்கியம் (Burlesque) நையாண்டி (Parody) கேலிச் சித்திரம் ஆகியவை எதிர்மறைச் செல்வாக்கின் பாற்படும்.

எனவே எதிர்மறைச் செல்வாக்கு என்றால் என்ன எனக் கண்ட பிறகு இவற்றைப்பற்றிய விளக்கங்களைக் காணலாம்.

(V) உடன்பாட்டுச் செல்வாக்கு (Positive Influence)

செல்வாக்கை ஏற்படுத்தக் கூடிய ஒரு இலக்கியப் பனுவலோ ஆசிரியரோ இலக்கு மொழியாசிரியரிடம் இயற்கையாகவே உள்ள படைப்பாக்கத் திறன் வெளிப்படுவதற்குக் காரணமாக அமையும் பொழுது அதனை உடன் பாட்டுச் செல்வாக்கு என்கிறோம். இதற்கு நேர்மாறானதே எதிர்மறைச் செல்வாக்கு.

(VI) எதிர்மறைச் செல்வாக்கு

அன்னாபாலகியான், வெயிஸ்ட்டீன் இருவருமே இத்தகைய செல்வாக்கு பற்றிய கருத்துகளைக் கூறியுள்ளனர்.

ஒரு நாட்டின் இலக்கியப் போக்குகளில் குறிப்பிடத் தகுந்த அளவு மாற்றத்தை ஏற்படுத்திய வெளிநாட்டு இலக்கியம் ஒன்றின் செல்வாக்கு தன்னுடைய போக்கினூடே தவறான திசையில் அதை இட்டுச் செல்லும் பொழுது, தவறான திசையில் செல்லுவதை உணர்ந்த உள்நாட்டு எழுத்தாளர் ஒருவர், இதை மாற்ற எண்ணி அதற்கு எதிர்மறையான பாத்திரப் படைப்பு, நடை ஆகியவற்றைக் கொண்ட இலக்கிய வகையைப் படைக்கிறார். ஒரு குறிப்பிட்ட இலக்கியம் அதிகமாகப் பரவி ஜனரஞ்சகமாக மாறும்பொழுது

அதனால் உள்நாட்டு இலக்கிய மரபு தவறான திசையில் மாற்றப்படுவதைத் தவிர்க்க எண்ணுவதே இவ்வாறான மறுப்பு இலக்கியம் தோன்றக் காரணமாகிறது. இதற்கு எடுத்துக் காட்டாக லெஸ்ஸிங் முதல் ஏ.டபிள்யூ.செலகல் வரையிலான ஜெர்மானிய படைப்பாளிகள் பிரெஞ்சு நாடகங்களின் வரவை எதிர்த்தமையைச் சுட்டுகிறார் எஸ்.எஸ் பிராவர் (ப.69)

ஜெர்மனிய மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்க்கப்பட்ட துன்பியல் மிகுந்த புனைகதைகளையும் ஆரோக்கியமற்ற மடத்தனமான துன்பியல் நாடகங்களையும் குறித்து பேசும் வேர்ட்ஸ் வொர்த், அவை மொழிபெயர்பாளர்கள் தம்மக்களின் அருவருக்கத்தகக் கொடூரமான தூண்டல்களைத் தேடும் கீழ்மையான தாகத்தைத் தணிக்க முயலும் செயல் என்று வன்மையாகக் கண்டிக்கிறார். இந்த வகையான போக்கைத் தன்னால் இயன்றவரை தடுக்க முயலும் எதிர்ப்பு முயற்சியே தன்னுடைய தன்னுணர்வு ஆட்டப் பாடல்கள் என்று கூறுகிறார் அதன் முன்னுரையில் (Preface to Lyrical Ballads) (ப. 69 எஸ்.எஸ் பிராவர்)

இன்னொரு வகையிலும் எதிர்நிலைத் தூண்டலின் விளைவைச் சுட்டுகிறார் பிராவர். ஒரு படைப்பாளி தன்னுடைய படைப்பு நாடகமாகவோ திரைப்படமாகவோ மாற்றப்படும் பொழுது அடையும் வேறுபாடுகளில் திருப்தியுறாமை, வெறுப்படைதல் ஆகியனவும் கவனத்திற்குரியவை என்கிறார். ஷாவின் 'ஜோன் ஆஃப் ஆர்க்'கை சேக்ஷ்பியரும் ஸ்கில்லரும் நாடகமாக்கிய பொழுது இத்தகு நிலை ஏற்பட்டது என்கிறார். தமிழில் திரைப்படங்களில் இடம்பெறும் பரதநாட்டியங்களை இந்நிலையில் சுட்டலாம். அதன் மதிப்பும் கலைத்தன்மையும் கீழ்மையுறும் வண்ணம் அச்சிறந்த கலை பலரால் கையாளப் படுகிறது. மு.வ.வின் பெற்றமனம், அகல்விளக்கு, திரைப்படமாக்கபட்ட பொழுதும் சுஜாதாவின் விக்ரம் திரைப்படமாக்கப்பட்ட பொழுதும் அதில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து வெளிவந்த விமர்சனங்களின் கருத்துக்களை இங்கு சுட்டலாம்.

எதிர்மறைச் செல்வாக்கு ஒரே நாட்டு ஆசிரியர்களிடமும் ஏற்படலாம். ஒரு இலக்கியமரபில் தமக்குக் கலைத்தந்தையாக விளங்கிய தனக்கு முந்தைய படைப்பாளிகளை எதிர்த்து அவர்களுக்குப்பின் வழித்தோன்றல்காளக வந்த இளைய தலைமுறை எழுத்தாளர்கள் பொங்கி எழும்பொழுது எதிர் மறைச்செல்வாக்கு ஏற்படுகின்றது என்கிறார் அன்னாபாலகியான். (rebellious sons rise in protest against their literary fathers) தனித்திறன் என்ற பெயரில் முந்தையோர் பின்பற்றிய பழங்கால மரபுகளை மறுத்து அதற்கு எதிராக எழுத ஆரம்பிக்கின்றனர். இது இலக்கியத்தின் வரலாற்றில் காணக்கூடிய முக்கியமான பண்பாகும். தம் சமகாலக் கருத்துகளின் வெளிப்பாட்டிற்கு முந்தைய இலக்கிய வடிவங்களின் போதாமையை உணர்ந்த புதுக்கவிஞர்கள் தம்படைப்பாக்கத்திற்கு முந்தைய இலக்கணங்கள் தடையாக இருப்பதாகவும் கருதி எழுதிய பாடல்களை இங்கு நினைவு கூரலாம்.

எதிர்மறைச் செல்வாக்கின் பிறிதொரு உருவமே ‘எதிர் வடிவம்’ (counter design) என்பது. இச்சொல்லை உருவாக்கிப் பரப்பியவர் பிரெக்ட், இங்கு ஒரு இலக்கிய மாதிரிப்படிவம் அதன் நேரெதிரிடையான வடிவமாக மாற்றப்படுகிறது. இராமாயணத்துக்கு நேர் எதிரிடையாக புலவர் குழந்தை எழுதிய இராவண காவியத்தை இதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

தமிழில் மறுப்பிலக்கியத்தில் குறிப்பிட்டுச்சொல்லும் படியாக விளங்கும் இராவணகாவியத்தில், இராமகாதையில் காப்பியத்தின் எதிர்நிலைத் தலைவனாக இருந்த இராவணனைத் தமிழின வீரனாக, தலைசிறந்த நற்பண்புகளையுடைய மன்னனாக மாற்றிப் படைத்துள்ளார், புலவர் குழந்தை. தன் இன்னுயிரையும் தமிழுக்காக, தமிழருக்காக தரத் தயங்காத தமிழின உணர்வு கொண்டவனாகப் படைக்கும் புலவர் குழந்தை, ‘தான் நினைத்ததை முடிக்கும் நம் தமிழ் இராவணன்’ தன் தங்கையின் வாழ்வைக் குடித்த ஆரியர்களது ஆணவத்தை அடக்குவதற்காக சீதையைச் சிறையெடுத்து வந்தாலும், அந்த ஆரியப்பெண் தன்னிடம் இறைஞ்சி அழும்பொழுது தமிழ்ப்பண்பை அவன் விட்டு விடவில்லை. சீதையைத் தன் தங்கையாகக் கருதும் உயர்வுடன் அவனது

பாத்திரத்தை மாற்றிப் படைக்கிறார் ஆசிரியர். இவ்வாறான மாற்றத்திற்குப் புலவர் குழந்தை சார்ந்த இயக்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகளே காரணம். மேலும் தமிழ் நாடும் மக்களும் ஆரியரால் அடைந்த சீர்கேடுகள் துடைக்கப்பட வேண்டுமெனில் ஒவ்வொரு தமிழனின் மனதிலும் இனமான உணர்வு வீறு கொண்டு எழவேண்டும் என்ற நோக்கத்தை நிறைவேற்றும் துணைக் கருவியாகவே இக்காப்பியத்தைப் படைத்தளிக்கிறார் புலவர் குழந்தை.

(VII) நையாண்டி அல்லது கிண்டல் இலக்கியம் (Parody)

குறிப்பிட்ட இலக்கியத்தின் மாதிரிப் படிமத்தை முன்னோடியாகக் கொண்டு அதனைக் கிண்டல் செய்து எழுதுவதையே நையாண்டி இலக்கியம் என்பர். இது ஒரு நூலின் கருத்து, நடை, பாத்திரப்படைப்பு போன்ற எதையேனும் தன்னுடைய நோக்கிற்கு ஏற்ப, மனநிலைக்கு ஏற்ப மாற்றி முந்து நூலாசிரியரைக் கேலி செய்வது. மற்றொரு நிலையிலும் இந்தக் கிண்டல் இலக்கியம் படைக்கப்படுகிறது: ஒரு பெயர் பெற்ற படைப்பாசிரியரின் நடைப்பாங்கைக் கிண்டல் செய்து அதைப் போலவே எழுதுதல்.

தமிழில் இராமாயணக் கதையைக் கேலி செய்யும் நோக்கத்துடன் கீமாயணம் என்று எம்.ஆர். இராதா குழுவினர் நடித்த நாடகத்தை இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகச் சுட்டலாம். இங்கு இராமன் பாத்திரப்படைப்பே கேலிக்கு உரியதாகிறது.

செம்புலப்பெயல் நீராரின் சங்கக்கவிதையைத் தற்கால இலக்கியத் திறனாய்வு நோக்குடன் புதுக்கவிதையாக படைக்கிறார் மீரா (ஊசிகள் ப. 49).

"உன்றன் தந்தையும்
என்றன் தந்தையும்
சொந்தக் காரர்கள்
மைத்துனன் மார்கள்

எனவே
செம்புலப்பெயல்நீர்போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"

என ஒரு சொற்றொடரால் பழங்கவிதைச் சூழலைக் கொண்டு வந்து அதற்கு மறுதலையாக இன்றைய இளைஞர்களின் காதலும்கூட ஆதாயத்தை அடிப்படையாகக் கொண்டமைவதை எள்ளல் குறிப்புடன் சுட்டுகிறார். இதே போல சி.மணியின் கவிதையிலும் தேய்புரிப்பழங்கயிறு (சி.மணி வரும் போகும்) குறியீடாகப் பயன்படுத்தப்படும் பொழுது கிண்டலோடு இணைத்துத்தருகிறார். "அமுத சுரபியைத்தான் தந்து சென்றாய் இப்போது எங்கள் கைகளில் இருப்பதோ பிச்சைப்பாத்திரம்" எனப் பாடும் மேத்தா (கண்ணீர்ப்பூக்கள்) காந்தியடிகள் வழங்கிச் சென்ற சுதந்திரமாகிய அமுதசுரபி இன்று பிச்சைப் பாத்திரமாக மாறியுள்ளதை எடுத்துக் காட்டுகிறார்.

இங்கெல்லாம் நிகழ்வுகளும் பாடற்பொருளும் சில தொடர்களால், குறிப்புகளால் தொனியே மாறி கிண்டல் இலக்கியமாக மாற்றப்படுகிறது.

'அன்புள்ள உடன்பிறப்பே' எனக் குறிப்பிடத் தகுந்த தலைவர் ஒருவரின் திறந்த கடித நடையை அப்படியே பின்பற்றிக் கிண்டல் குறிப்போடு தன் திங்களிதழில் படைக்கிறார் சோ. இராசாமி.

இவையாவும் மறுப்பிலக்கியம், எதிர்ப்பிலக்கியம் என்ற நோக்குகளில் காணத்தக்கவை.

அங்கதம் (Satire)

சமுதாயத்தில், அரசியலில், கல்வி நிலைகளில் என மனித சமூகத்தின் பல வாழ்வியல் கூறுகளில் காணப்படும் ஊழல்களை, பிறழ்வான போக்குகளை எள்ளல் தொனியுடன் சுட்டிக் காட்டுவதை அங்கதம் என்கிறோம், இதே எள்ளல் தொனி ஒரு இலக்கியத்தை, ஒரு ஆசிரியரை, ஒரு கருத்தமைவை மையம் கொண்டு கிளம்பும் பொழுது அது கிண்டல் இலக்கியம் ஆகிறது. இந்த

வேறுபாட்டிற்காக மட்டுமே இங்கு அங்கதம் என்ற கருத்தமைவு சுட்டப்படுகிறது. அங்கதமும் கிண்டல் இலக்கியமும் அருகருகே வந்து ஒன்றை ஒன்று அரண்செய்பவை, தன்னுணர்வோடு கிண்டல் செய்யும் பொழுது அதனைக் கிண்டல் இலக்கியம் எனவும், தன்னுணர்வற்று மாற்றிப் படைக்கும் பொழுது (Unconcious Parody) அதை ***Stilbuiten*** என்று சுட்டலாம் என்றும் கூறுகிறார். வெயிஸ்ட்டீன் (ப.34) இதனுடன் தொடர்புடைய ***Clitsdh*** என்ற மற்றொரு ஜெர்மானிய சொல்லையும் குறிப்பிடுகிறார். அழகியல் உணர்வே இல்லாது ஒரு இலக்கியத்தைப் பார்த்து அதைக் கிண்டல் செய்து வியாபார நோக்கத்தில் எழுதுவதை இது சுட்டுகிறது.

மற்றொரு தொடர் ***Literay Clitches*** இதனை வழக்கத்தில் பழகி வந்த வேற்று மொழிச் சொல் என்று பொருள் கொள்ளலாம். இதனை "வழக்கடிபட்ட சொற்றொடர்" எனத் தமிழ்ப்படுத்தித் தருகிறார் சச்சிதானந்தன் (மேலையிலக்கியச் சொல்லகராதி (ப.35), வேற்றுமொழியிலிருந்து வந்த சில சொற்களைத் தாம் கூறும் கருத்தை, தான் எண்ணியது போலவே வலியுறுத்திக் கூறுவதற்காகப் பயன் படுத்துவது வழக்கம்.

கவிதையின் ஜீவனே இந்தச் சொல்லில் தான் உள்ளது எனக் கூறும் பொழுது மையக் கருத்தை உடைய சொல் என்ற பொருளையும் விட மேன்மையான ஒன்றைச் சுட்டுவதற்காக உயிர்ப்புத்தன்மையை, இயங்கும் தன்மையை அந்த ஒரே சொல்லில் 'ஜீவன்' சுட்டுவதாகக் கொள்ளலாம். அரசியல் அராஜகம், ஏகாதிபத்தியம், தார்மீக எல்லை எனப்பல வடமொழிச் சொற்கள் இவ்வாறு பயன் படுத்தப்படுவதைச் சுட்டலாம். கைலாசபதி, சோ, கிருஷ்ணராஜு, கா.சிவத்தம்பி போன்று மார்க்ஸீய கண்ணோட்டத்துடன் இலக்கியத் திறனாய்வை மேற்கொண்ட பலருடைய எழுத்துகளில் இவ்வாறே 'பிரக்ஞை', 'வர்கம்', 'அம்சம்', 'அவசியம்' போன்ற பல சொற்கள் தனி ஆழத்துடன் பொருள் தருவனவாகக் கையாளப்படுகின்றன. 'கிரிடிசிசம்' என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழ் வடிவமாக வழங்கப்படும் திறனாய்வு, விமர்சனம் ஆகிய இரு சொற்களும் தனித்தனிப் பொருண்மைகளை உடையவை என்ற நோக்கில் பயன்படுத்தப் படுகின்றன.

கேலி இலக்கியம் (Burlesque)

ஒரு குறிப்பிட்ட ஆசிரியரின் நடையைத்திரித்து, கிண்டலும் கேலியுமாகக் கூறுவது, பம்மல் சம்பந்த முதலியாரின் சபாபதி நாடகங்களில் தமிழாசிரியர் தம் விளக்கங்கள் பற்றிய செய்திகள் கேலி செய்யப்படுகின்றன. இவரது மற்றொரு நாடகம் சந்திரஹரி. இது அரிச்சந்திரா என்ற நாடகத்தைப் பின்பற்றிப் போலியாகக் கிண்டல் செய்து எழுதப்பட்டது. அரிச்சந்திரன் -சந்திரஹரி: காலகண்டி - கண்டி காலி; சந்திரமதி - மதிசந்திரா எனப் பாத்திரங்களின் பெயர்களையே நேரெதிராக மாற்றுவதன் மூலம் தன் படைப்பின் நோக்கமே இப்புராணக் கதையை அப்படியே நேரெதிரிடையாக மாற்றிக் கிண்டல் பண்ணுவது தான் என்பதை உணர்த்தி விடுகிறார் பம்மலார்.

வாழ்க்கையில் நேரில் காணக்கூடிய பாத்திரங்களைத் தாம் கண்டவாறே படைத்துத் காட்டுவது நடைச்சித்திரம். நடைமுறை வாழ்வில் எதிர்ப்படும் மனிதர்களை, அவர்களது ஆளுமைத் தன்மைகள், குணநலன்கள் அப்படியே வெளிப்படுமாறு படைத்துத் தருவன வ.ராவின் நடைச்சித்திரங்கள். தமிழில் மிகப் பரவலான வாசகர் அறிந்தவை. இவ்வாறு படைக்கப்படும் பொழுது இதற்கும் இத்துடன் தொடர்புடைய அங்கதம், கேலிச் சித்திரம் ஆகியவற்றிற்கும் இடையே நூலிடை அளவே வேறுபாடுகள் இருக்கும்.

இவற்றுடன் 'கடன் வாங்கல்' என்ற கருத்துடன் தொடர்புடைய சொற்களாக ஜே.டி.ஷா கூறிய ஏழு கலைச் சொற்களும் காணத் தக்கவை. அவை; 1. மொழி பெயர்ப்பு 2. போன்மையாக்கம் 3. நடைப்பாங்கு 4. இலக்கியக்கடன் 5. மூலங்கள் 6. இணைநிலைகள் 7. செல்வாக்கு. இவைபற்றிய செய்திகள் இவ்வியலின் போக்கினூடே ஆங்காங்கே பேசப்பட்டுள்ளன.

குறிப்புகள்

இயல் – 1

"ஒப்பிலக்கியம் - வரைவிலக்கணமும் விளக்கமும்"

1. Renewellek "Name and Nature of Comparative Literature" Discriminations, 1969, P.13

2. S.S. Prawer, Comparative Literary Studies - An Introduction 1973. P.1

3. தமிழண்ணல், ஒப்பிலக்கிய அறிமுகம் ப.57-58

4. பிராவர், மு.நூ. ப.2

5. தமிழண்ணல், மு.நூ. ப.59

6. கா. செல்லப்பன், ஒப்பியல் தமிழ் ப.95

7. மேலது - முன்னுரை VIII

8. Renewellek "Name and Nature of Comparative Litereature" Discriminations P.5

9. Ibid Pp. 15-19

10-13. Ibid

14. Ibid P.17

15. வை.சச்சிதானந்தன், ஒப்பிலக்கியம் (ஓர் அறிமுகம்), 1985, பக்.8-9

16. Henry H.H. Remak, "Comparative Literature. Its Definition and Function" - Comparative Literature : Method and Perspective, Stallknecht and Frenz (Eds), 1973, P3.

17. வை.சச்சிதானந்தன், மு.நூ. பக்.11-12

18&19. Ulrich weisstein, Comparative Literature and Literary Theory (Survey and Introduction) 1973, PP.9-10

20. Renewellek. Ibid. P.20

21. S.S. Prawer. Ibid. P.8

22. A. Owen Aldridge, Comparative Literature, matter and Method, Urbana 1969 P.3. quoted by S.S. Prawer. P.52

23. Year Book of comparative and General Literature XV 1966 P.63

24. S.S. Prawer, Ibid. P.3

25. Ibid P.7

26. Ibid

27. Ibid P.8

28. Ibid P.10-Foot notes

29. Ibid P.11-12

30. Ibid

31. Ibid

இயல் – 2

இந்தியாவும் ஒப்பிலக்கியமும்

1. Devinder Mohan "Indian Comparative literature. Pedagoic Complications" - in Comparative Literature - Theory & Practice. Pp. 87-93.

2. க.செல்லப்பன், ஒப்பியல் தமிழ் ப.84

3. Swapan Majumdar, Comparative Literature, Indian Dimentions, P.16

4. Amiyadev : The Idea of Comparative Literature in India P. 1.

5. மேலது

6. மரையா, ரில்கே போன்றவர்கள் ஜெர்மானியம், பிரெஞ்சு ஆகிய இரு மொழிகளிலும் அந்த அந்த மொழி இலக்கிய மரபுகளுடன் இணைந்து எழுதுபவர்கள். காண்க வை.சச்சிதானந்தன், ஒப்பிலக்கியம் - ஓர் அறிமுகம் ப.30. இடைக்காலத்தில் (பக்தி இலக்கியக் காலகட்டம்) பரீத், இந்தி, உருது ஆகிய இரு மொழிகளிலும் எழுதினார். நவீன காலத்தில் பாரதி தமிழ் - ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் எழுதியவர். வங்கக் கவிஞர் தாகூர் வங்கத்திலும் ஆங்கிலத்திலும் எழுதினார்; காகா குலோகர் இந்தி, குஜராத்தி இரண்டிலும் எழுதியவர்; பிரேம் சந்த் இந்தி, உருது இரண்டிலும் எழுதியவர்.

7. பெல்ஜியத்தைச் சேர்ந்த மேட்டர்லிங்க் பிரெஞ்சு மொழியில் படைப்புகளைத் தந்தவர். ஆப்பிரிக்கா, கனடா, பெல்ஜியம், சுவிட்ஜர்லாந்து ஆகிய நாடுகளில் பிரெஞ்சு மொழியில்

எழுதப்பட்ட இலக்கியங்களை பிரெஞ்சு தேசிய இலக்கியமாகக் கொள்ள இயலாது என்கிறார் வை.சச்சிதானந்தன் - (மேலது). அதே போல இந்திய ஆங்கிலப் படைப்புகள் பற்றியும் கருதவேண்டும். மலையாளத்தைத் தாய்மொழியாகக் கொண்ட கமலாதாஸ் ஆங்கிலத்திலும் கவிதைகளும் புனைக்கதைகளும் படைத்தவர். ஜயந்த மஹாபத்ரா ஒரிய மொழியில் முதலில் படைப்புகளைத் தந்தவர்; பின்பு ஆங்கிலத்தில் கவிதைகளை அளித்தார்; முல்க்ராஜ் ஆனந்த், மைக்கேல் மதுசூதனதத், ஆர்.கே. நாராயணன் போன்றவர்களது ஆங்கிலப் படைப்புகள் வெற்றிகரமான இந்திய-ஆங்கிலப் படைப்புகள் ஆயினும் அவற்றை ஆங்கில இலக்கியமாக ஏற்பதில்லை.

மற்றொரு நிலையில் இவ்விரு மொழியியல்பைக் காணலாம். இராஜபுதனத்து மீராபாயை இந்தி, குஜராத்தி மொழியினர் இருவரும் தங்களுடையவர் என்கின்றனர், கபீரின் தாய் மொழி போஜ்புரி ஆயின் அவரது கவிதைகளில் பெர்சிய, அராபிய சொற்கள் அதிகம் காணப்படுவதால் இவர்கள் கபீரைத் தங்களவர் என உரிமை கொண்டாடுகின்றனர். மைதிலி மொழியில் எழுதிய வித்யாபதியை வங்காளிகள் தங்களவர் எனவும் இந்தி மொழி பேசுபவர் தங்களவர் எனவும் கூறுவர். இந்த நிலையையும் கருத்தில் கொள்ளவேண்டும் என்பார் கிருஷ்ண கிருபாளினி.

Literature of Modern India Pp. 9-10.

8. Weisstein Ulrich Comparative Literature and Literary Theory - Survey and Introduction P. 13-14

9. மேலது ப.12

10. S.S. Prawer, Comparative Literary studies - An introduction Pp. 13-23

11. ஃபிரான்ஸூவா ஜோஸ்ட்டின் கருத்தை எடுத்துரைக்கிறார் வி.சச்சிதானந்தன். முந்து நூல். ப. 28.

12. S. Shanmugam Pillai - Fairy Tales and Indian Literature Journal of the Institute of Asian Studies Vol.V. No.2. March 1988. P. 151.

13. இவ்வியலின் முந்தைய பக்கங்களைக் காண்க

14. எஸ். சண்முகம் பிள்ளை, மு.நூல் .ப. 153

15&16 மேலது

17. Krishna Krupalini-Literature of Modern India P.2

18. Ibid - PP. 5-10

19. Umashankar Joshi, The Idea of Indian Literature, Sahitya Academi Samvatsar Lectures-3. 1990, p.9.

20. சண்முக.செல்வகணபதி, "இந்திய இலக்கியம் - ஒரு வரையறை" - தமிழ்ப் பொழில் - துணர்.71 மலர் 7- நவம்பர் - 1997. ப.310.

21. மேலது ப.312.

22. ம.மதியழகன், இந்திய இலக்கியம்-சில வரையறைகள் பொதுமை வடிவும் கருவும், புதுவைப் பல்கலைக்கழகம், 1990 பக். 76-84.

23. பா. ஆனந்த குமார், இந்திய இலக்கியம், ப.1-16

24. மேலது, ப.5

25. மேலது

26. Niranjan Roy

27. UmaShankar Joshi-Ibid. P9

28. Counter Points-Essays in Comparative Literature, Culcutta, Prajna, 1984-P.7 Quoted by Nirmala Jain "Comparative Literature - Indian Context "- in Comparative Literature- Theory & Practice - Amiya Dev & Sisir Kumar Das.

29. S.S. Prawer. Ibid- P.13

30. J.V. Stalin, Marxism & National Question, Quoted by Swapan Majumdar, "National Literature In a Multilingual Nation" - Comparative Literature-Indian Dimensions P.23.

31. AmiyaDev, The Idea of Comparative Literature In India, Pp-12-14.

32. Ibid.

33. Sisis Kumar Das, Comparative Literature In India-A Historical Perspective - Aspects of Comparative Literature-Current Approaches - Chandra Mohan. P.14.

34. Amiya Dev. Ibid. P.12.

35. - P.P 1- 12

36. - P.22

37. Renewellek, Discriminations, P.15

38. Guyard.M.F. La Literature Comparee, 1951.P.7

39. Renewellek, Op.Cit.P.16

40. Ibid. P.16 "a real encounter that has created a dependence" - La Literature Comparee P.7

41. Ibid- P.17

42. வை.சச்சிதானந்தன். மு.நூ.ப.78

43. அமியாதேவ், மு.நூ.ப.22

44. மேலது. பக். 12-34.

45. சிசிர்குமார் தாஸ் - மு. நூ.

46. வை.சச்சிதானந்தன். மு.நூ.ப.26

47. மேலது.

48. அமியாதேவ். மு.நூ.

49. V. Sachidahanthan, Western Impact on Bharathi

50. அமியா தேவ். மு.நூ.

51. சிசிர் குமார் தாஸ். மு. நூ.

இயல் – 3

ஒப்பிலக்கியமும் தமிழும்

1. க.கைலாசபதி, ஒப்பியல் இலக்கியம், சென்னை, 1969. பக்.1-34

2. தமிழண்ணல், ஒப்பிலக்கிய அறிமுகம்,

3. க.கைலாசபதி, மு.நூர்.ப.13

4. மேலது

5. க.கைலாசபதி, தமிழ் வீரயுகப்பாடல்கள்

6. Thaninayaga Adikal, "Indain Thought and Roman Stoicism" - Tamil Culture, Vol.No. 3, 1963 P.

7. வை.சச்சிதானந்தன், ஒப்பிலக்கியம் ஓர் அறிமுகம்

8. ஒப்பிலக்கியம் - ஓர் அறிமுகம் 1975 முன்னுரை

9. கா.செல்லப்பன் - ஒப்பியல் தமிழ்

10. பி.சி.கணேசன், க.நா.சுவும் கைலாசபதியும், காவ்யா பெங்களூர் 1988 பக் 76-78

11. S.V. Subramaniyan, Studies in Tamilology PP 256-263

12. Ibid. P 260

13. Ayyappa Paniker, Studies in Comparative Literature

14(a) வை.சச்சிதானந்தன் 'ஒப்பிலக்கியம் என்றால் என்ன?' செந்தமிழ், பாண்டித்துரைத்தேவர் சிறப்பு மலர், தொகுதி 74, பகுதி 4, டிசம்பர் 1980. பக் 186-195

14(b) ——- "Comparative Literature Scope and Method", Studies in Comparative Literature, V.M. Gnanapragasam and K.P. Aravanan, Madras, The Academy of Tamil Culture, 1974, P.P. 1–12.

14(c) —— "Comparative Literature Definition, Scope and Method" - Journal of Asian Studies, Vol. 1, Sep. 1983, Pp 44–59.

14 (d) —— "Influence and Analogy Studies in Comparative Literature, Studies in Comparative Literature, Bernard Fenn and Ayyappa Paniker. K. (Eds) Pp. 23–34.

15. ஜோ. விக்டர், 'தமிழில் ஒப்பீட்டு ஆய்வு வரலாறு' 14 ஆவது கருத்தரங்க ஆய்வுக்கோவை அண்ணாமலை நகர், 1982.

16. S. Ramakrishnan, "The Name and Nature of Comparative Literature", Comparative Literature - Vol.1, G. John Samuel Madras, 1980.PP

17. த.ஜெயகாந்தன் - "படைப்பாளரின் பார்வையில் ஒப்பிலக்கியம்" மேலது

18. செ.சாரதாம்பாள், 'ஒப்பிலக்கியம் என்றால் என்ன - புலமை; & தினமணிச் சுடர்.

19. இரா. ரமேஷ், 'தமிழில் ஒப்பிலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்' எம்ஃபில் பட்ட ஆய்வேடு, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

20. வை.சச்சிதானந்தன் & ஜீவரத்தினம். எஸ்., ஆங்கில-தமிழ் இலக்கியத் தொடர்புகள் எமரால்டு பதிப்பகம், சென்னை - 1986.

21&22. —— 'இந்தியாவில் ஒப்பிலக்கியம்' நடைமுறைச் சிக்கல்களும் ஆய்வு வாய்ப்புகளும் தமிழைப் பொருத்தவரை

23. V. Sachithananthan "Wittman and Bharathi as Vedanthists" Symposium XIX-3 Syracuse University Press, Newyork, Fall 1965 PP 259-268.

24. S.Ravindhranathan, "Cho's Adoptation of Shaw's Pigmalian A Study of Manam Oru Kurangu'' Journal of the Institute of Asian studies.

25. வை.சச்சிதானந்தன், மேலது ப.94

26. மேலது ப.95

27. Bharathidasan - Critical perspectives V. Sachithanandan, T. Vaithamanithy, T. Murugarathinam & R. Kanehana (Eds) M.K. University, 1991. P.95.

துணைநூல் பட்டியல்

ஆங்கிலம்

Abrams, M.H. — ***The Mirror and The Lamp,***
Romantic Theory and the Critical Tradition
Oxford University Press, London, 1953.

Aiyar, V.V.S. — ***Kamba Ramayana - A Study,***
Delhi Tamil Sangam, 1950.

Amiya Dev & Sisir Kumar Das (Eds) — ***Comparative Literature Theory and Practice,***
Indian Institute of Advanced Study,
Simla, 1989.

Amiya Dev — ***The Idea of Comparative Literature in India,***
Papyrus, Calcutta, Reprint, 1986.

Ayappa Panikar, K. & Bernard Fenn-(Eds) — ***Studies in Comparative Literature,***
Blackie & Son (P) Ltd., Bombay, 1985.

Bowra, C.M. — ***Heroic Poetry,*** Macmillan, London, 1966.

Catford, J.C. — ***A Linguistic Theory of Translation,***
An essay in applied Linguistics,
Oxford University Press, London, 1965.

Chandra Mohan — ***Aspects of Comparative Literature, (Current Approches)***
India Publishers & Distributors,
New Delhi, 1989.

Chatterji Suniti Kumar *Languages and Literature of Modern India,*
Prakash Bhavan, Calcutta, 1963.

Chellapan, K. *Shakespeare and Ilango as Tragedians,*
A comparative Study,
Tamil University, Tanjore, 1987.

Dhawan, R.K. *Comparative Literature,*
Bahri Publications, New Delhi, 1987.

Dwivedi, R.C. *Principles of Literary Criticism in Sanskrit,*
Motilal Banarsidas, Delhi 1969,

Elizabeth Freud *The Return of the Reader,*
Reader-Response Criticism,
Metheun, London. 1987.

Fokkema, D.W & Elrud Ibsch *Theories of Literature in theTwentieth Century, London.*
C. Hurst & Co., 1977.

Frazer, Sir James *The Golden Bough, Vol. I & II*
Macmillon Co., London 1957.

James Thorpe- (Ed) *The Aims and Methods of Scholarship in Modern Languages and Literatures,*
American Studies Research Centre,
Hyderabad. 1970.

Jeevarathinam, S. *English- Tamil Literary Relations,*
A critical Bibliography,
Emerald Publishers, Chennai, 1986.

John Ralston Mar *The Eight Anthologies,* A Study in Early Tamil Literature, Institute of Asian Studies, Chennai, 1985.

John Samual, G. *Collected Papers on Tamil Literature,* Mani Pathippakam, Chennai 1979.

John Samuel, G. *Studies in Tamil Poetry,* Mani Pathippakam, Chennai 1978.

John Samuel, G. *Studies in Comparative Literature,* (Tamil, Malayalam & English) Mani Pathippakam, Chennai, 1977.

Kailasapathy, K. *Tamil Heroic Poetry,* Oxford University Press, London, 1968.

Kamil V. Zvelebil *Literary Conventions in Akam Poetry,* Institute of Asian Studies, Chennai, 1986.

Keith, Berriedale A. *A History of Sanskrit Literature ,* Oxford University Press, Delhi, Reprint 1973.

Krishna Chaitanyan *Ancient Greek Literature,* National Book Trust, India, 1985.

Levin, Harry *Grounds for Comparison,* Harvard University Press, Cambridge, 1972.

Manavalan, A.A. *Mutual Flames,* Tamil Puthakalayam, Chennai, 1977.

Mahadevan Kathir, *Literary Genetics with Comparative Perspective,* Association of Comparative Literature and Culture, Madurai, 1991.

Meenakshisundaram,T.P. *A History of Tamil Literature,* Annamalai University, Tamilnadu, 1965.

Meenakshisundaram,T.P. *Tamil and Other Cultures,* The third international Conference of Tamil Studies, Paris, 1970.

Meenakshisundaram,T.P. *The Contribution of European Scholars to Tamil,* University of Madras, Chennai. 1974.

Mohan, G.B. *The Response to Poetry,* A Study in Comparative Aesthetics Peoples Publishing House, New Delhi, 1968.

Naidu, Shankar Raju.S. *A Comparative Study of Kamba Ramayanam and Thulasi Ramanayanam,* University of Madras, Chennai, 1971.

Newton P. Stallknecht & Horst Frenz *Comparative Literature, Method & Perspective,* Southern llinois University Press, Carbondale, London, 1971.

Perumal, A.N., Ranganayagi, Mahapatra & Subbiah Pillai. (Eds)	***Tamilnadu-Bengal Cultural Relations,*** International Institute of Tamil Studies Taramani, Chennai, 1987.
Prawer S.S.	***Comparative Literary Studies - An introduction,*** Duckworth, London, 1973.
Preminger, Alex etal	***Princeton Encyclopedia of Poetry & Poetics Enlarged edition,*** The Macmilon Press, London. 1974.
Raghavan & Nagendra (Eds)	***An Introduction to Indian Poetics,*** National Publishing House, Delhi, 1969.
Rajagopalan, R. (Author & Publisher)	***Voices from Tamil Heroic Poetry,*** Purananuru, Arivagam, Thiruppathur.
Ravidranathan, S & Balachandran, R. (Eds)	***Comparative Literature- Some Perspectives,*** Manonmaniam Sundaranar University, Thirunelveli, 1995.
Rene Wellek	***Discriminations-Further Concepts of Criticism (Vol.I & II),*** Vikas Publications, 1970.
Robert C. Holub	***Reception Theory - A Critical introduction,*** Methuen, London 1984.
Sachithanandam, V.	***Tagore and Bharahi,*** Annamalai University, Chithambaram,1991.

Sachithanandan,V. ***The Impact of Western Thoughts on Bharath,*** Annamalai University, Chithambaram, 1970.

Sachithanandan, V. ***Bharathi and Whitman,*** Symposium, XIX, 3 (1965).

Sachithanandan, V. ***Comparative Literature Scope and Method,*** Studies in Comparative Literature, Ed. V.M. Gnanapragasam and K.P.Aravanan The Academy of Tamil Culture, Chennai, 1974.

Sachithanandan, V. ***"Dr. Mu. Varatharajan & Somerset Maugham as Novelists : A Sample Study",*** Dr.Mu.Va. Memorial Number, S.V.Subramanian and A.A.Manavalan (Eds), ***International Institute of Tamil Studies, Chennai 1975.***

Sachithanandan, V. ***"Some Thoughts on Comparative Literature".*** Madurai University News Letter, (July, 1977)

Sachithanandan, V. ***"H.G. Wells's 'The Invisible Man' and Mu. Varatharajan's 'Mankudisai' :*** A Thematic Comparison". JTS 12 (1978)

Sachithanandan, V. ***"Shakesperare in Tamil Translation",*** M. Shanmugam Pillai, (Ed.), Madurai University, Madurai 1972

Sarma, C.R. — ***The Ramayana in Tamil and Telugu : A Comparative Study,***
Lakshminarayana Granthimala,
Chennai. 1973.

Sen Guptha, S.P. & Mundra, S.C. — ***Aristotle - The Poetics, Prakash Book Depot / Bareilly, 1984,***

Somaylay (Sm. Lakshmanan) — ***European Impact on Modern Tamil Writing and Literature,***
University of Kerala, Trivandrum, 1976.

Subramaniam,N. Padma Srinivasan & Balakrishnan,G.R (Eds) — ***Introduction to the study of Comparative Literature: Theory & Practive,***
Teesi Publications, Madurai, 1997.

Swapan Majumdar — ***Comparative Literature-Indian Dimensions,***
Papyrus, Calcutta, 1987.

Thaninayagam, Xavier.S. — ***Nature in Ancient Tamil Poetry,***
Tamil Literature Society,
Tuticorin, 1952.

Trouson, Raymond — ***The Prometheus Theme in European Literature (trans.),***
Geneva 1964.

Ulrich Weisstein — ***Comparative Literature and Literary Theory,***
Survey and Introduction,
Indiana University Press, London. 1973.

Umashankar Joshi — ***The Idea of Indian Literature,*** Sahithya Akademi, New Delhi. 1990.

Watson, George — ***The Study of Literature,*** Longmans, London. 1969.

Wellek, Rene & Austin Warren — ***Theory of Literature ,*** Jonathan Cape. 1966.

தமிழ்

1. *அகத்தியலிங்கம். ச.,*
சங்க இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்களே,
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை 1997.

2. *அமிர்தலிங்கன். பூ.,*
வள்ளுவர் கண்ட உயிரினங்கள்,
காரைக்குடி, மூன்றாம் பதிப்பு. 1963

3. *அருணாசலம். சபா.,*
தமிழ் நாவல்களில் காந்தியத் தாக்கம்,
காளத்தி நூலகம்,
தேவகோட்டை 1981.

4. *அறவாணன். க.ப.,*
கவிதை - கிழக்கும் மேற்கும்,
பாரி நிலையம்,
சென்னை, 1975.

5. *ஆரார்,*
ஆங்கில இலக்கியக் கலைச் சொல் அகராதி,
ஆர். அறிவரங்கம், திருப்பத்தூர்-1996.

6. *ஆரார்,*
சோ நாடக அங்கதம்,
அறிவரங்கம்,
திருப்பத்தூர். 1966.

7. *ஆனந்த குமார். பா.,*
இந்திய ஒப்பிலக்கியம்,
கியூரி பப்ளிகேஷன்ஸ்,
மதுரை, 1997.

8. *ஆனந்தகுமார். பா. (et al) (ப.ஆ),*
பரல்கள் 4,
தமிழ் ஆய்வாளர் மன்றம் வெளியீடு, ம.கா.ப.,
மதுரை, 1990.

9. *இராசா. இ.,*
ஒப்பிலக்கிய நோக்கு,
பார்த்திபன் பதிப்பகம்,
மதுரை, 1986.

10. *இராசா. கி.,*
அறிவியல் நோக்கில் இலக்கிய வளர்ச்சி,
பார்த்திபன் பதிப்பகம்,
மதுரை, டிசம்பர், 1987.

11. *இராசா. கி.,*
தொல்காப்பியமும் இலக்கியவகை வளர்ச்சியும்,
பார்த்திபன் பதிப்பகம்,
திருச்சி, டிசம்பர் 1991.

12. *இராசா. கி.,*
இலக்கிய வகைமை ஒப்பாய்வு,
சைவசித்தாந்த நூற்பதிப்புகழகம்,
சென்னை-1984.

13. *இராசா. கி.,*
இலக்கிய வகைத் திறனாய்வு,
பார்த்திபன் பதிப்பகம்,
திருச்சி, மறுபதிப்பு, 1996.

14. *இராமகிருஷ்ணன். எஸ்.,*
கம்பனும் மில்டனும்,
மீனாட்சி புத்தக நிலையம்,
மதுரை, நான்காம் பதிப்பு 1969.

15. *கடிகாசலம். ந.,*
தமிழும் பிறதுறைகளும்,
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை.

16. காவ்யா,
தமிழ் ஆய்வுக்களங்கள்,
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை, 1994.

17. *கமலா. பொ.நா.,*
நவீனக் கோட்பாட்டு ஆய்வுகள்,
பெங்களூர், 1999.

18. *கனகராஜ். எஸ்.,*
தொன்மத் திறனாய்வாளர் ஐவர்,
பிரேம் பதிப்பகம்,
மதுரை, 1991.

19. *கணபதி கண்ணண். மு.,*
மொழி பெயர்ப்பும் சொல்லாக்கமும்,
அருள் நிலையம்,
சென்னை, 1967.

20. *கண்ணப்பன் முத்து,*
சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம்,
அவ்வை அகம்,
சென்னை, 1978.

21. *கந்தசாமிப்பிள்ளை. ந., (மொ.ஆ),*
தாமஸ் கிரேயின் இரங்கற்பா,
சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,
திருநெல்வேலி, 1961.

22. *காஞ்சனா. இரா.,*
இலக்கியமும் உளவியலும்,
விஷ்ணுப்பிரியா பதிப்பகம், மதுரை,
இரண்டாம் பதிப்பு, 2000.

23. *காஞ்சனா. இரா.,*
சங்க இலக்கியத்தில் நிலையியல் உயிர்கள்,
பதிப்புத் துறை, ம.கா.ப.கழகம்,
மதுரை, 1998.

24. *காசிராஜன். இரா.,*
உலகக்காப்பியங்கள்,
தமிழ்ப்பதிப்பகம், சென்னை.

25. *கலாப்ரதீப் சுப்பிரமணியன் (தொ.ஆ),*
தமிழின் நவீனத்துவம்,
லயம் வெளியூடு, அந்தியூர்,1986.

26. *கிருஷ்ணமூர்த்தி. சா. ஆகியோர் (ப.ஆ),*
தமிழியல் ஆய்வுகள்,
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை, 1999.

27. *குளோரியா சுந்தரமதி (மொ.ஆ),*
இலக்கியக் கொள்கை,
பாரிநிலையம், சென்னை, 1986.

28. *கைலாசநாதக் குருக்கள்,*
இந்துப்பண்பாடு சிலசிந்தனைகள்,
தமிழியல்,
சென்னை,1986.

29. *கைலாசபதி. க.,*
ஒப்பியல் இலக்கியம்,
சென்ன ன புக்ஹவுஸ் (பி.லிட், சென்னை, 1969)

30. *கைலாசபதி. க,*
அடியும் முடியும்,
பாரிநிலையம்,
சென்னை.

31. *கைலாசபதி. க,*
நவீன இலக்கியத்தின் அடிப்படைகள்,
மக்கள் வெளியீடு,
சென்னை, 1980.

32. *கைலாசபதி. க.,*
இரு மகாகவிகள்,
பாரி நிலையம்,
சென்னை, 1962.

33. *கிருஷ்ணன் பாலா,*
சிந்தனையாளர் அரிஸ்டாடில்,
பிரேமா பிரசுரம்,
சென்னை,
ஆறாம் பதிப்பு, 1998.

34. *தேசவன். கோ.,*
இந்திய தேசியத்தின் தோற்றம்,
சிந்தனையகம்,
சென்னை, 1985.

35. *சம்பத். இரா,*
புதுக்கவிதையில் இலக்கிய இயக்கம்,
உமா பதிப்பகம்,
பாண்டிச்சேரி. 4, 1992.

36. *சச்சிதானந்தன். வை.,*
ஒப்பிலக்கியம் ஓர் அறிமுகம்,
ஆக்ஸ்போர்டு யுனிவர்சிடி பிரஸ்,
சென்னை, 1985.

37. *சச்சிதானந்தன். வை.,*
மேலையிலக்கியச் சொல்லகராதி,
மேக்மில்லன் இந்தியா லிட்,
சென்னை, 1982.

38. *சாந்தா M.S.,*
காரைக்கால் அம்மையாரும் அக்கமா தேவியும்-ஓர் ஒப்பாய்வு,
வித்தியா பதிப்பகம்,
சென்னை.

39. *சாந்தா ஆப்தே,*
தமிழ்ச் சிறு கதைகளில் காந்தியத் தாக்கம்,
செந்தில் முருகன் வெளியீடு,
மதுரை, 1988.

40. *சாமிநாத சர்மா. வெ.,*
சமுதாயச் சிற்பிகள்,
மாணிக்க வாசகர் பதிப்பகம்,
சென்னை,
மூன்றாம் பதிப்பு, 1989.

41. *சாமிநாத சர்மா. வெ.,*
கிரீஸ் வாழ்ந்த வரலாறு,
பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்,
புதுக்கோட்டை,
இரண்டாம் பதிப்பு - 1963.

42. *சாரதாம்பாள். செ.,*
அடிக்கருத்தியல்,
சந்தன ஹரிஹரன் பதிப்பகம்,
நத்தம், 1997.

43. *சாரதாம்பாள். செ.,*
செவ்வியல்,
ஐந்திணைப் பதிப்பகம்,
நத்தம், 1987.

44. *சாரதாம்பாள். செ.,*
சங்கச் செவ்வியல்,
மீனாட்சி புத்தக நிலையம்,
நத்தம், 1992.

45. *சிவசண்முகம் & தயாளன். வே.,*
மொழி பெயர்ப்பியல்,
அகரம், சிவகங்கை,
இரண்டாம் பதிப்பு, 1994.

46. *சிவத்தம்பி. க.,*
தமிழில் இலக்கியவரலாறு - வரலாற்று முறையியல் ஆய்வு,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,
சென்னை, 1988.

47. *சிவத்தம்பி. க.,*
இலக்கியமும் கருத்து நிலையும்,
தமிழ்ப்புத்தகாலயம்,
சென்னை.

48. *சிற்பி. பாலசுப்பிரமணியன் & மோகன். இரா. (ப.ஆ),*
தமிழ் உலா தொகுதி I & II,
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை, 1994.

49. *சின்னப்பன். தி.இரா,*
ஒப்பு நோக்கு,
பாரதிபுத்தகாலயம்,
சென்னை, 1997.

50. *சுப்புரெட்டியார். ந.,*
அகத்திணைக் கொள்கைகள்,
பாரிநிலையம்,
சென்னை, 1964.

51. *சுந்தரமூர்த்தி. கோ.,*
பண்டைத்தமிழ் இலக்கியக் கொள்கைகள்,
சர்வோதய இலக்கியப்பண்ணை,
மதுரை, 1977.

52. *சுப்பிரமணியன். நா.,*
இந்தியச் சிந்தனை மரபு,
சவுத்ஏசியன் புக்ஸ்,
சென்னை, 1996.

53. *சுப்பிரமணியன். ச.வே.,*
இலக்கிய வகையும் வடிவமும்,
தமிழ்ப்பதிப்பகம்,
சென்னை.

54. *சுப்பிரமணியன். ச.வே.,*
திராவிட மொழி இலக்கியங்கள்,
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை, 1983.

55. *சுப்பிரமணியன். ச.வே., சிவகாமி. ச.,(ப.ஆ),*
தமிழ் இலக்கியக்கொள்கை-9,
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை, 1984.

56. *சுப்பிரமணிய சாஸ்த்திரி. **P.S.**,*
தொனி விளக்கு,
திருப்பனந்தாள் மடம்,
திருச்சி,1944.

57. *ஜெயராமன். ந.வீ,*
பாட்டியலும் இலக்கிய வகைகளும்,
மணிவாசகர் பதிப்பகம்,
சிதம்பரம், 1981.

58. *செண்பகம் இராமசாமி,*
கிரேக்க லிரிக் கவிதைகளும் சங்க இலக்கியக் கவிதைகளும் ஒப்பீடு,
பரணி அச்சகம்,
மதுரை,1987.

59. *செல்லப்பன். கா.,*
இலக்கியத்தில் பழம் புதுமையும் புதுப்பழமையும்,
மீரா பப்ளிகேஷன்,
புதுக்கோட்டை, 1986.

60. *செல்லப்பன். கா.,*
ஒப்பியல் தமிழ்,
எமரால்ட்,
சென்னை, 1987.

61. *செல்லப்பன். கா.,*
ஒப்பிலக்கியம் - கொள்கைகளும் செயல்முறைகளும்,
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், 1995.

62. *செல்லப்பன். கா.,*
எங்கொங்கு காணினும் சக்தி,
அகரம் பப்ளிஷர்ஸ்,
சிவகங்கை, 1981.

63. *சோதி நாயகம்,*
விலங்கியலும் தமிழியலும்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

64. *சௌரிராஜன். பொன்,*
விடுதலை இயக்கத்தமிழ்ப்பாடல்கள்,
சாகித்திய அக்காதெமி,
புதுதில்லி, 1996.

65. *ஞானப்பிரகாசம். வி.மி,*
அறவாணன்.கப. (ப்.ஆ),
இலக்கிய ஒப்பாய்வு,
பாரிநிலையம்,
சென்னை,1974.

66. *தமிழண்ணல் (இராம. பெரியகருப்பன்),*
ஒப்பிலக்கிய அறிமுகம்,
சோலை நூலக வெளியீடு,
மதுரை, 1973.

67. *தமிழண்ணல்,*
சங்க இலக்கிய ஒப்பீடு - இலக்கிய வகைகள்,
சோலை நூலக வெளியீடு, மதுரை,
இரண்டாம் பதிப்பு 1979.

68. *தமிழண்ணல்,*
சங்க இலக்கிய ஒப்பீடு இலக்கியக் கொள்கைகள்,
சோலை நூலக வெளியீடு, மதுரை,
மூன்றாம் பதிப்பு 1985.

69. *தமிழண்ணல்,*
தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள் - நோக்கு,
மீனாட்சி புத்தக நிலையம்,
மதுரை, 1985.

70. *தமிழண்ணல்,*
தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள் - உள்ளுறை,
மீனாட்சி புத்தகநிலையம்,
மதுரை, 1986.

71. *தமிழண்ணல்,*
தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள் - இறைச்சி,
மீனாட்சி புத்தகநிலையம்,
மதுரை, 1987.

72. *திருநாவுக்கரசு. க.த.,*
சான்றோர்கண்ட திருவள்ளுவர்,
மணியகம்,
சென்னை, 1979.

73. *திருமலை. ம.,*
தமிழ் மலையாள நாவல்கள் ஒப்பாய்வு,
பதிப்புத்துறை, ம.கா.ப. கழகம்,
மதுரை, 1987.

74. *திருமலை. ம.,*
ஒப்பிலக்கிய ஆய்வுகள்,
கமலாலயம்,
மதுரை, 1997.

75. *திருமலை. ம., & சீனிவாசன். ச.,*
ஒப்பிலக்கியக் கொள்கைகள்,
கமலாலயம், நாகமலைப்புதுக்கோட்டை,
மதுரை, 1991.

76. *தேசிகன். ராஜூ*
கவிதைக்கலை (இரண்டாம் பாகம்),
பாரதி தமிழ்ச்சங்கம்,
கல்கத்தா-26, 1967.

77. *நடராச பிள்ளை. ராம,*
(இரா.இராச கோபாலன்),
டி.எஸ்.எலியட். ஓர் அறிமுகம்,
அறிவரங்கம் வெளியீடு,
திருப்பத்தூர்.

78. *பஞ்சாங்கம். க. (பஞ்சு) (மொ.ஆ),*
இலக்கியத்தில் தொல்படிமங்கள் நார்த்ரோப்ஃபிரை,
கனகம்(பி)லிட், சிவகங்கை, 1988.

79. *பானுமதி. சி,*
தேசியம்,
பார்த்திபன் பதிப்பகம்,
திருச்சி - 1993.

80. *மகாதேவன். கதிர்.,*
பழந்தமிழர் வீரப்பண்பாடு ஒப்பிலக்கியக்கணிப்பு
ஏரக வெளியீடு,
மதுரை,1969.

81. *மகாதேவன். கதிர்.,*
சங்க இலக்கிய ஒப்பீடு,
ஏரக வெளியீடு,
மதுரை, 1970.

82. *மகாதேவன். கதிர்., (தொ.ஆ),*
ஐக்கூ நூறு,
எட்டாவது உலகத்தமிழ் மாநாட்டுச் சிறப்பு வெளியீடு,
ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்பள்ளி,
ம.கா.ப. மதுரை-21, 1994.

83. *மணவாளன், அ.அ., (மொ.பெ.ஆ),*
அரிஸ்ட்டாடிலின் கவிதை இயல்,
தமிழ்ப்புத்தகாலயம்,
சென்னை, 1976.

84. *மணவாளன். அ.அ.,*
இருபதாம் நூற்றாண்டின் இலக்கியக் கோட்பாடுகள்
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை,1998.

85. *மணி. பெ.சு.,*
சங்க கால ஔவையாரும் உலகப் பெண்பாற்புலவர்களும்,
நியூ செஞ்சுரி புக்ஹவுஸ்,
சென்னை,
இரண்டாம் பதிப்பு 1986,

86. *மதிவாணன். இரா.,*
குறள்வழி பிராகிருத இலக்கிய இன்பம்,
தாய்நாடு பதிப்பகம்,
சென்னை,1978.

87. *மாணிக்கம். வ.சு.ப.,*
தமிழ்க்காதல்,
பாரிநிலையம்,
சென்னை, 1980.

88. *மருத நாயகம். ப.,*
கிழக்கும் மேற்கும்,
ஐந்திணைப்பதிப்பகம்,
சென்னை,1991.

89. *மீனாட்சி சுந்தரனார். தெ.பொ.,*
தமிழும் பிறபண்பாடும்,
நியூ செஞ்சுரி புக்ஹவுஸ்,
சென்னை, மறுமதிப்பு 1973.

90. *மீனாட்சி சுந்தரனார். தெ.பொ.*
உலகநாகரிகத்தில் தமிழரின் பங்கு,
சண்முகம். இராகு.,
செயப்பிரகாசம். ச., (ப.ஆ),
சர்வோதய இலக்கியப்பண்ணை,
மதுரை,
மூன்றாம் பதிப்பு 1992.

91. *மீனாட்சி முருகரத்தினம்,*
மேலை இலக்கியத்தில் திறனாய்வு ஓர் அறிமுகம்,
N.S. Publications (வி.உ),1987.

92. *முத்து சு. நெல்லை,*
தமிழில் ஹைகூ,
அன்னம்(பி) லிட்,
சிவகங்கை, 1994.

93. *முருகு சுந்தரம்,*
புகழ்பெற்ற புதுக்கவிதைகள்,
அன்னம் (பி) லிட்,
சிவகங்கை, 1993.

94. *மோகன். இரா.,*
இலக்கியச் சால்பு, அறிவகம்,
மதுரை, 1997.

95. *மோகன். இரா.,*
இலக்கியச் சுடர், அறிவகம்,
மதுரை, 1996.

96. *மோகன். இரா.,*
பண்டித மணியின் நடைநயம்,
மேலைச்சிவபுரி சன்மார்க்கசபை,
(பண்டிதமணி நூற்றாண்டுவிழா வெளியீடு),
1982.

97. *ரகுநாதன் தொ.மு.சி,*
பாரதியும் ஷெல்லியும்,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்,
சென்னை-1979.

98. *லீலாவதி. தி.,*
இது தான் ஹைகூ
பூங்கொடிப் பதிப்பகம்,
சென்னை, 1980,

99. *வரதராசன். மு.,*
இலக்கிய மரபு,
தாயகம் வெளியீடு,
சென்னை, 1968.

100. *வரதராசன். மு.,*
இலக்கியத்திறன்,
பாரிநிலையம்,
சென்னை,
இரண்டாம்பதிப்பு, 1965.

101. *வரதராசன். மு.,*
பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை,
பாரிநிலையம்,
சென்னை,1966.

102. *வளர்மதி. மு.,*
காண்டேகரும் கா.ஸ்ரீஸ்ரீயும்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை,1994.

103. *வேலுப்பிள்ளை. ஆ,*
தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்,
ல. ராமகிருஷ்ணன்,
சென்னை-1969.

104. *வையாபுரிப்பிள்ளை. எஸ்,*
இலக்கிய உதயம் (I & II),
தமிழ்ப் புத்தகாலயம்,
சென்னை, 1963.

105. *ஜகந்நாதராஜா. மு.கு.,*
இந்திய மொழிகளில் ஒப்பிலக்கியம்,
நர்மதா பதிப்பகம்,
சென்னை, 1994.

106. *ஜான் சாமுவேல். ஜி.,*
இலக்கியத் திறனாய்வு-முதல் பகுதி,
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை, 1976.

107. *ஜான் சாமுவேல். ஜி.,*
இலக்கிய ஒப்பாய்வுக் களங்கள்,
மணி பதிப்பகம், சென்னை, 1978,

108. *ஜான் சாமுவேல். ஜி.,*
கலையும் கலைக் கோட்பாடுகளும்,
விஜய் பிரிண்ட் சர்வீஸ்,
சென்னை, 1984.

109. *ஜான் சாமுவேல். ஜி.,*
திராவிட மொழிகளின் ஒப்பாய்வு,
மாதவி பப்ளிகேஷன்ஸ்,
சென்னை,
மூன்றாம்பதிப்பு, 1982.

110. *ஸ்ரீ அரவிந்தர்*
இந்தியாவைப் பற்றி
அரவிந்தர் செயல் இயக்கம்,
பாண்டிச் சேரி, 1974.

111. *ஸ்ரீ.ஸ்ரீ. "நீண்ட பயணம்"*
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்,
சென்னை-1992.

112. *பிரம்மராஜன்,*
பதினைந்து ஐரோப்பிய நவீனவாதிகள்,
ஸ்நேகா, சென்னை, 14.1998.

இதழ்கள்

1. காஞ்சனா. இரா. "ஒப்பிலக்கியக் கொள்கைகளும் இலக்கிய வகைகளின் தோற்றமும்" - தமிழ் மாருதம்.

2. செல்வ கணபதி.சண்முக "இந்திய இலக்கியம் - ஒரு வரையறை" - தமிழ்ப் பொழில் துணர் 71. நவம்பர், 1997.

3. பிச்சை. அ. (சி.ஆ) இந்திய ஒப்பிலக்கியம் - காலாண்டுச் செய்தி இதழ்கள் (மொழி 1-5, 1996-2000) இந்தியவியல் ஆய்வுக் கழகம், காந்திகிராமம், திண்டுக்கல்.

4. மதிவாணன். பா., இந்திய இலக்கியம், வரையறை பற்றிய விவாதத்தொடக்கம், தமிழ்ப் பொழில், துணர் 71.மலர் 8. டிசம்பர் 1997.

Journals

1. Shanmugam Pillai.S., "Fairy Tales and Indian Literature" - Journal of The Institute of Asian Studies. Vol.V. No:2, March 1988.

2. Thaninayaga Adigal. "Indian Thought of Roman Stoicism"- Tamil Culture-Vol. 1 No:3, 1963.

3. Uma Shankar Joshi, "The Idea of Indian Literature" Sahithya Academi Samvathsar Lectures-3, 1990.

4. Year Book of Comparative and General Literature, H. Frenz, H.H.Remak and Ulrich Weisstein, (Eds), Indiana University, Vol. XV.

5. Y.C.G.L., W.P. Friederich (Ed), University of North Carolina Vol. X - XI.

'உலகளாவிய நோக்கில், இலக்கியப் படைப்புகளின் பொதுமையையும் ஒருமையையும் காண முயல்வது ஒப்பிலக்கியம். இது ஓர் அணுகுமுறை–நெறிமுறை–வழிமுறை; அறிவியல் அடிப்படையிலான, திறனாய்வு முறையில் வளர்ச்சியுற்ற ஒரு நிலை' என்பது முனைவர் இரா. காஞ்சனா 'ஒப்பிலக்கியம்' என்பதற்குத் தரும் இரத்தினச் சுருக்கமான வரைவிலக்கணம்; எளிய பொருள் விளக்கம். 'ஒப்பிலக்கியம்' என்பதற்கான பல்வேறு வரையறைகளையும் விளக்கங்களையும் நூலின் முதல் இயலில் திறம்படத் தொகுத்தும் வகுத்தும் தந்துள்ளார் ஆசிரியர்.

'இந்திய ஒப்பிலக்கியம்', 'ஒப்பியல் இந்திய இலக்கியம்' என்னும் இரு தொடர்களையும் பற்றிய ஒரு விரிவான அலசலே நூலின் இரண்டாம் இயல். 'எந்த நாட்டில் இருந்து, எந்த மொழியில் எழுதப்பட்டாலும் இந்தியத் தன்மைகள் பொருத்தமுற அமைந்திருப்பின் அதை இந்திய இலக்கியம் எனக் கருதலாம்' என ஆசிரியர் தரும் விளக்கம் ஏற்கத்தக்கதே ஆகும். இவ்வியலின் முடிவில் ஒப்பியல் இந்திய இலக்கியத்தின் ஆய்வுக்களங்களையும் ஆசிரியர் அழகுற எடுத்துக்காட்டியுள்ளார்.

'தமிழும் ஒப்பிலக்கியமும்' என்னும் மூன்றாம் இயல் மேலை அறிஞர்கள், இந்திய அறிஞர்கள், தமிழறிஞர்கள் ஆகியோரின் ஒப்பிலக்கியப் பணிகளை நிரந்து இனிது உரைத்துள்ளது.

ஏற்பு–செல்வாக்கு–தாக்கம்–இடைத்தொடர்பு–பற்றிய விரிவான விளக்கங்கள் நான்காம் இயலில் இடம்பெற்றுள்ளன. ஐந்தாம் இயலில் 'செல்வாக்கு' என்பதைக் 'கருத்தமைவு' என்றும் சுட்டியுள்ளார் அவர். நுண்ணிதின் நோக்கினால் இவற்றிற்கு இடையே உயிர்ப்பான வேறுபாடுகளை உய்த்துணரலாம் போல் தோன்றுகின்றது.

முனைவர் இரா. காஞ்சனாவின் 'ஒப்பிலக்கிய மரபும் திறனும்' என்னும் இந்நூல் அண்மையில் ஒப்பிலக்கியத் துறைக்குக் கிடைத்துள்ள புதுவரவு, 'இத்துறையில் உழைப்பவர்க்குச் செயற்பரப்பு அகன்றது; வாய்ப்புக்கள் அனந்தம்' என்னும் முனைவர் க. கைலாசபதியின் கூற்றை மெய்ப்பிக்கும் நல்லதோர் உதாரணம்.

முனைவர் **இரா. மோகன்**
பேராசிரியர் & தலைவர், ஒப்பிலக்கியத் துறை, தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை - 625 021.

முனைவர் இரா. காஞ்சனா அவர்கள் எழுதியுள்ள 'ஒப்பிலக்கிய மரபும் திறனும்' என்ற நூல் ஒப்பிலக்கியக் கோட்பாடுகளை மிக நுண்ணிய முறையில் விளக்குகிறது; ஒப்பிலக்கியத்தின் வரைவிலக்கணம், இந்தியாவும் ஒப்பிலக்கியமும், தமிழும் ஒப்பிலக்கியமும், ஏற்புக்கோட்பாடு, இலக்கியச் செல்வாக்கும் இலக்கியத் தாக்கமும் ஆகிய இயல்களைக் கொண்டுள்ளது. இவற்றில் இந்தியாவும் ஒப்பிலக்கியமும் என்ற கட்டுரை மிக விரிவாகவும் பயனுள்ள வகையிலும் உள்ளது. இந்திய இலக்கியம் என்ற கருத்தாக்கம் பற்றி எதிரும் புதிருமாகக் கருத்துரைத்துள்ள, பல ஆய்வாளர்களின் கட்டுரைகள் இவ்வியலில் விவாதிக்கப்பட்டுள்ளன. ஒப்பிலக்கியமும் தமிழகமும் என்ற இயலில் தமிழகத்துப் பல்கலைக்கழகங்களில் பல ஆய்வாளர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளின் சுருக்கங்கள் தரப்பட்டுள்ளன; இதனை ஒரு முன்மாதிரியான அணுகுமுறை என்று குறிப்பிட விரும்புகிறேன். இத்துறையில் வருங்காலத்தில் ஈடுபடும் ஆய்வாளர்கட்கு இப்பகுதி மிகவும் உதவக்கூடும். இரா. காஞ்சனா அவர்கள் இந்நூலை எழுத மிகுந்த முயற்சி மேற்கொண்டிருப்பதும் அதற்காக நூற்றுக்கணக்கான நூல்கள், கட்டுரைகளைப் படித்திருப்பதும் இந்நூல் வழி நமக்குப் புலனாகிறது. பாராட்டுகள்!

முனைவர் **ம. திருமலை**
தலைவர், இலக்கியத் திறனாய்வுத் துறை, தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை - 625 021.